சிலம்பொலியார்

அணிந்துரைகள்

(தொகுதி – 5)

அணிந்துரையாளர்

முனைவர் **சிலம்பொலி சு. செல்லப்பன்**

தொகுப்பாசிரியர்

முனைவர் **மணிமேகலை புஷ்பராஜ்**

பழனியப்பா பிரதர்ஸ்

'கோனார் மாளிகை'

25, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி – 620 002 சேலம் – 636 001
கோயமுத்தூர் – 641 001 மதுரை – 625 001
ஈரோடு – 638 001.

ISBN : 81-8379-367-3

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	சிலம்பொலியார் அணிந்துரைகள் (தொகுதி – 5)
அணிந்துரையாளர்	முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்
தொகுப்பாசிரியர்	முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்
பொருள்	இலக்கியத் திறனாய்வு
பதிப்பாளர்	பழனியப்பா பிரதர்ஸ் சென்னை – 600 014.
அச்சகம்	ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.
அச்சுப்புள்ளி	10 pt
தாள்	70 ஜி. எஸ். எம். மேப்லித்தோ
நூலின் அளவு	21 x 13.5 செ.மீ. (டெம்மி 1 x 8)
	XLII + 278 (320 பக்கங்கள்)
முதற்பதிப்பு	ஜூன், 2006
விலை	ரூ. 120–00
© பதிப்புரிமை	ஆசிரியர்க்கு

‘அணிந்துரைப்பரணி’ பாடிய அறிஞர்

– பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி

நூலாசிரியரின் நூல் படைப்பினை மதிப்பீடு செய்து அந்நூலின் சிறப்பைத் திட்பமாகவும் நுட்பமாகவும் தருவது அணிந்துரையாகும். பழந்தமிழ்ச் சான்றோர் அணிந்துரையின் சிறப்பை உணர்ந்து அதனை இலக்கண வரையறையாகவே ஆக்கித் தந்துள்ளனர். முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை, பாயிரம் எனப் பல்வேறு பெயரிட்டு மகிழ்ந்தனர்.

‘அணிந்துரை இலக்கியம்’ என்பது ஒருவகைமை இலக்கியமாகவே வளர்ந்துள்ளது எனலாம். புகழ்பூத்த அறிஞர்களின் அணிந்துரைகள் எல்லாம் இன்று தொகுக்கப்பெற்று நூல்களாகவே வெளிவந்துள்ளன. திரு.வி.க. அவர்களின் அணிந்துரைகள் அனைத்தும் நூற்பொருளின் செறிவைக் காட்டுவதோடு அந்நூற்களுக்கு அணிசேர்க்கும் மகுடங்களாகவே விளங்குகின்றன. தமிழறிஞர் மு.வ. அவர்களின் ‘திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்’ என்னும் நூலிற்குத் திரு.வி.க. அவர்கள் வழங்கிய அணிந்துரை இலக்கியப் பதிவுகளுள் குறிப்பிடத் தகுந்ததாகும். பல்வேறு வகைகளில் நூல் சிறந்து விளங்கினும் பாயிரம் இல்லையேல் அது பனுவலில்லை என்று கூறும் அளவிற்கு முன்னையோர் பாயிரத்திற்கு முதன்மை அளித்தனர். ‘கொழுச் சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறு போல’ என்னும் அழகிய பொருள் செறிந்த உவமையால் அணிந்துரையாகிய புறவுரையைப் போற்றினர்.

தொல்காப்பியத்திற்கு வழங்கிய பாயிரம் தொல்காப்பியத்தின் பெருமையை எடுத்துரைக்கும் வகையில் வரலாற்றுப் புகழ் பெற்று விளங்குகின்றது. பனம்பாரனார் எழுதிய இச்சிறப்புப் பாயிரத்தால்தான் நூலின்தன்மை, காலம், களன் முதலாய பல்வேறு குறிப்புகள் தெரிய வருகின்றன. நூல் அரங்கேற்றம் தொடர்பான அரிய வரலாற்றுச் செய்தியும் இப்பாயிரத்தால் புலனாவது

குறிப்பிடத்தக்கது. பதிற்றுப்பத்தில் ஒவ்வொரு பத்திற்கும் பின்தரப்பெற்றுள்ள பதிகங்கள் சில வரலாற்றுக் குறிப்புகளை நமக்குத் தருகின்றன. அகநானூற்றிற்குத் தரப்பெற்றுள்ள பாயிரம் அந்நூலின் பெருமையை நன்கு விளக்குகின்றது.

நின்ற நீதி வென்ற நேமிப்
பழுதில் கொள்கை வழுதியர் அவைக்கண்
அறிவு வீற்றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அருந்தமிழ் மூன்றும் தெரிந்த காலை
ஆய்ந்த கொள்கை தீந்தமிழ்ப் பாட்டு
நெடியவாகி அடிநிமிர்ந்து ஒழுகிய
இன்பப் பகுதியின் பொருட்பாடல்
நானூறு எடுத்து நூல்நவில் புலவர்

என்னும் பாயிரப் பாடல் அகநானூற்றின் கவிதைச் சிறப்பை எடுத்துரைக்கும்.

அணிந்துரை ஒருநூலின் பல்வேறு கூறுகளையும் தொகுத்துத் தந்து அந்நூற் பாடுபொருளை நமக்கு எளிதில் உணர்த்தும் வண்ணம் அமைவதாகும். நூலாசிரியரின் முன்னுரைகளைப் போலவே நூலுக்குப் பிறர்தரும் அணிந்துரைகளும் நூலிற்குப் புகழ்சேர்ப்பன. சங்க இலக்கியத்திற்கு டாக்டர் உ.வே.சாமிநாதையர் தரும் விரிவான முன்னுரைகள் இவ்வகையில் குறிப்பிடத்தகுந்தன. கலித்தொகையை முதன்முதல் பதிப்பித்துத்தந்த தமிழறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளையின் முன்னுரைகள் எல்லாம் தொகுக்கப்பெற்று 'தாமோதரம்' என்னும் தலைப்பில் தனிநூலாகவே வெளிவந்துள்ளது. இன்று அறிஞர் பலரின் அணிந்துரைகள் எல்லாம் தனிநூலாகத் தொகுக்கப்பெற்று வருவது பெரிதும் பயன்படக்கூடியது.

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் பல்வேறு நூல்களுக்கு வழங்கிய அணிந்துரைகள் அனைத்தும் தொகுக்கப்பெற்றுப் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. சிலம்பொலியாரின் அணிந்துரைத் தொகுதிகள் வரிசையில் இந்நூல் ஐந்தாம் தொகுதியாகும். நூற்றுக்கணக்கான நூல்களுக்கு அணிந்துரை வழங்கிய சிலம்பொலியார் ஒவ்வொரு நூலுக்கும் பேருழைப்பை நல்கி அணிந்துரை களை உருவாக்கியுள்ளார். ஒவ்வொரு அணிந்துரையும் சிறந்த ஆய்வுக் கட்டுரையாக விளங்கி அவருடைய

பரந்துபட்ட தமிழ்ப் புலமையையும் ஆய்வு நெறியையும் காட்டும்.

'இருபதாம் நூற்றாண்டின் நூறு தமிழ்க்கவிஞர்கள்' என்னும் கவிதைத் தொகுப்பு நூலுக்கு வழங்கிய அணிந்துரை இன்றைய கவிதை வரலாற்றை எடுத்துரைப்பது. பல்வேறு பாடுபொருள்களைக் கொண்ட கவிதைகளைத் திறனாய்ந்து கவிஞர்தம் சமூகப் பின்புலத்தையும் அவர்தம் கவிதை யாற்றலையும் தொகுத்தும் பகுத்தும் தருவது இவ்வணிந்துரை யின் தனிச் சிறப்பாகும். இந்நூலின் தொகுப்பாசிரியர் மேற் கொண்ட அரிய முயற்சியைப் பாராட்டிப் போற்றி இத்தொகுப்புகள் போல் இன்னும் பல வெளிவரவேண்டும் என்னும் தன்விழைவையும் சிலம்பொலியார் புலப் படுத்துவார். நூறு கவிஞர்களின் படைப்புகளையும் பல்வேறு பாடுபொருள்களின் அடிப்படையில் மீண்டும் ஒரு பாகுபாடு செய்து அணிந்துரையில் வழங்கியிருப்பது அவருடைய 'திறனாய்வு அணுகு முறை'யைக் காட்டும். ஒரு நூலுக்கு அணிந்துரை வழங்குவதற்கு எத்துணை அளவு சிலம்பொலியார் உழைத்துள்ளார் என்பதற்கு இந்நூலுக்கு அவர் வழங்கிய ஐம்பது பக்க அணிந்துரையே சான்றாகும். நூறு கவிதைகளின் நயமிக்க தொடர்களைத் தொகுத்துத் தந்திருப்பது நூலினுள் நுழைவோர்க்கு வசதியாக அமையும் வாயிலாகும்.

இத்தகைய அணிந்துரை அணுகுமுறை இளம்பூரணர் கூறுவதுபோல் 'கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள்போல இன்றியமையாச் சிறப்பிற்று' அன்றோ? 'திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயில் மாடம்போல்' அலங்காரமாகச் சிலம்பொலியாரின் அணிந்துரை விளங்குகின்றது. இத்தகைய அணிந்துரையைப் படித்து நூலினுள் புக முற்பட்டால் 'குறிச்சிபுக்க மான்போல் மாணாக்கன்' இடர்ப்பட வேண்டியிராது அன்றோ?

அணிந்துரை வழியாக நூலாசிரியரை மட்டுமா சிலம்பொலியார் பாராட்டுகின்றார்? பதிப்பித்த பதிப்பாளர்களுக்கும் இதோ பாராட்டுரை வழங்குகின்றார்.

> "பதிப்புத்துறையில் மணிமகுடமாய்த் திகழும் பழனியப்பா பிரதர்ஸ் மேலும் மேலும் இத்தகைய மணிகளைப் பதித்து ஒளிவீசித் திகழ வேண்டுமென்பது என் நெஞ்சார்ந்த விழைவு"

'தாயினும் சாலப்பரிந்து' பாராட்டும் சிலம்பொலியாரின் அணிந்துரைகள் நூல் ஆசிரியர்க்கும், பதிப்பாளர்களுக்கும் தரும் ஊக்க மருந்தாகும்.

'நானோர் பாவேந்தன்' என்னும் நம்பிக்கைக் குரலுக்குரியவர், பாவேந்தர் பாரதிதாசனார். 'பாரதிதாசன் பாடல்களில் காணலாகும் பழந்தமிழ் இலக்கியச் செல்வாக்கு' என்னும் நூலிற்கு அளித்த அணிந்துரை பாவேந்தரின் பழந்தமிழ்ப் புலமையை ஆய்வு நெறியில் விவரித்துக் காட்டுவதாகும். பாரதிதாசனின் காதற் பாடல்களில் பழந்தமிழ் அகநெறிகள் எங்ஙனம் இணைந்தும் இழைந்தும் காணப்படுகின்றன என்பதனை நூலாசிரியர் வழிநின்று ஆராய்ந்து தமக்குரிய சங்க நூற் பயிற்சியால் அதற்கு மேலும் பல அரிய விளக்கங்களைச் செறிவாகவும் நுட்பமாகவும் கூறுவது பெரிதும் குறிப்பிடத்தக்கது.

சங்க மரபுக்கேற்ற காதலைப் பாடுகின்ற பாரதிதாசன், இக்கால நிலைமைக்கேற்பச் சில புதுமைகளையும் இணைக்கிறார். கைம்மைத் துயர், கைம்பெண் திருமணம், பொருந்தாத் திருமணம், குழந்தை மணம், குடும்பக் கட்டுப்பாடு போன்ற புதிய துறைகளையும் படைத்துக் காட்டுகிறார்' என்னும் குறிப்பின்வழிச் சங்க இலக்கிய விளக்கத்திற்குப் பாரதிதாசனின் புதிய சிந்தனை எத்துணை அளவு உறுதுணையாக உள்ளது என்பதையும் நுட்பமாகச் சுட்டுவார்.

> "பாரதிதாசன் பாடல்களில் பழந்தமிழ் இலக்கியங்களின் செல்வாக்கு, பிற கவிஞர்களிடம் இருப்பதைவிடக் கூடுதலாய் இருந்தாலும், பண்புமாறாத, சமுதாய ஒழுக்கத்திற்கு மாறுபடாதவற்றில் மட்டுமே அவற்றை இழையோடவிட்டார். புதுமை வேண்டுமிடங்களில் இப்பழந்தமிழ்க் கருத்துகளைத் தம் கொள்கைக்கேற்ப அவர் மாற்றியமைக்கத் தயங்கியதே இல்லை"[1]

என்று தம் அணிந்துரையின் முடிபுரையாக வைப்பார்.

---

1. சிலம்பொலியார் அணிந்துரைகள் - 5, பக். 50

இறுதியில் நூலாசிரியர் கன்னலை வாழ்த்திக்காட்டும் கவிஞரின் மேற்கோள் அடிகள் நூலாசிரியரை மட்டுமல்ல படிப்போரையும் மகிழ்விக்கும்.

.....கன்னல்
பொருள்தரும் ஆய்வே நீஓர்
பூக்காடு; யாமோ தும்பி.

'பாவேந்தர் ஆய்வடங்கல்' என்னும் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பிற்கு அணிந்துரை எழுதிய சிலம்பொலியார் இந்த நூல் 'ஆய்வுவானில் ஒரு வானவில்'லாய்ப் பொலிவு பெற்றுத் திகழ்கிறது என்பார். பாவேந்தரின் சொற்களிலேயே 'விண் எழுது கவிதை' என்பதைச் சற்றுமாற்றி 'ஆய்வு தோற்றுவித்த வானவில்' என நயம்படக் கூறுவார். பாவேந்தர் முதிர்சிந்தனையில் முகிழ்த்த படைப்புகள் பற்றி அறிஞர் எழுவர் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரைகளின் அடங்கல் என்பார்.

உள்நிலவும் நீரோடை, கண்ணையும் மனத்தையும்
உயிரினொடும் அள்ளியே செல்கின்ற தல்லாமல்
எண்ணற்ற அழகினால் இயற்கைவிளை யாடலின்
எல்லைகா ணேன்அதைச் சொல்லுமா றில்லையே

என வானவில் பற்றிப் பாவேந்தர் பாடியுள்ளார். "அவர் கூறுமாறே இந்நூலாகிய வானவில்லும் நம் மனத்தை உயிரினொடு அள்ளிச் செல்கின்றதெனலாம்! தனித்தமிழ்க் கழகமெனும் மழைத்துளியில் கதிரவ அறிவுக் கதிர்கள் நுழைந்ததால் தோன்றியுள்ள வானவில்லாம் இந்நூலின் 'எல்லை காணேன்; நான் அதைச் சொல்லுமாறிலையே" என்று பாவேந்தரின் சொற்களையே - பொருத்தமான இடத்தில் பொருத்தி மகிழ்கிறார் சிலம்பொலியார்.[1]

பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்களில் மனந்தோய்ந்தவர் சிலம்பொலியார். பாவேந்தர் பற்றிய 'பாரதிதாசன் ஆய்வுக்கோவை' நூலுக்கு அணிந்துரை வழங்கும்போது நூலாசிரியரின் கருத்துகளுக்கு இடையே பாவேந்தர் பற்றிய அரிய கருத்துகளை நுட்பமாக வழங்கி நூலுக்கு மேலும் பொலிவும் வலிவும் சேர்க்கின்றார். சிறந்த நூல்களை வெளியிடும் நூலாசிரியருக்கும், பதிப்பாளருக்கும் மனந்திறந்து பாராட்டுகளை வழங்கி ஊக்கப்படுத்துகின்றார்.

1. சிலம்பொலியார் அணிந்துரைகள் -5, பக். 71

"கங்கை புத்தக நிலைய உரிமயாளர் பெரும் பொருட்செலவையும் கருதாது அரிதின் முயன்று, நூலென்றால் இப்படியன்றோ இருக்க வேண்டும் என எவரும் போற்றத்தக்க வகையில் இந்நூலை வெளிக்கொணர்ந்திருப்பது தமிழ் நெஞ்சங்களிலெல்லாம் தேனைப் பாய்ச்சும் என்பதில் ஐயமில்லை. தமிழை மருந்தாய்ச் சொல்லி, அந்த மருந்தின் தன்மையைக் கூறவரும் பாவேந்தர், 'உள்ளே தொட்டால் உசிரில் இனிக்கும்; தெள்ளுதமிழ் தம்பி இதன்பேர் தெள்ளுதமிழ்' என்பார். அதுபோலவே எடுத்துப் பிரித்தாலே இதயத்தை இனிக்கச் செய்யும் இன்பத்தமிழ் நூல் இஃது என்று துணிந்து கூறலாம்." [1]

சிலம்பொலியாரின் அணிந்துரை பதிப்பாசிரியரையும், பதிப்பாளரையும் ஒருங்குசேரக் குளிர்வித்து மகிழ்விக்கு மன்றோ?

திருக்குறள் பற்றிய இருநூல்கள் இத்தொகுதியுள் உள. 'குறள்வழிச் சிந்தனைகள் - ஒருபுதுப்பார்வை' என்னும் நூல் சமூகப் பின்னணியில் இன்றைய காலநிகழ்வுகளோடு பொருத்திப் பார்க்கின்ற ஆய்வு நூலாகும். பழைய உரைகளில் காணலாகும் சில கருத்துகளை மறுத்துப் புதியநோக்கில் உரிய சான்றுகளோடு நிறுவியுள்ள நூலாசிரியரின் ஆய்வுத்திறத்தை அணிந்துரையில் நன்கு மதிப்பீடு செய்துள்ளார், சிலம்பொலியார்.

காலந்தோறும் திருக்குறளுக்குப் பல்வேறு உரைகளும், ஆய்வு நூல்களும் தோன்றிக் கொண்டேயுள்ளன. ஏறத்தாழ ஈராயிரம் நூல்களுக்குமேல் திருக்குறளுக்குப் பதிப்பு களாகவும், உரைகளாகவும், ஆய்வு நூல்களாகவும் வெளிவந்துள்ளன. திருக்குறளில் புதுப்பார்வை செலுத்தி, கருத்தாழமிக்க சிந்தனைகளை நூலாசிரியர் எவ்வாறு தந்துள்ளார் என்பதை அணிந்துரையில் வகைப்படுத்தி எட்டு இன்றியமையாத கூறுகளைச் சிலம்பொலியார் தொகுத்துத் தருவது குறிப்பிடத்தக்கது. காலம்கடந்து நிற்கும் பொதுத்தன்மையையும் திருவள்ளுவரின் அறிவியல்

1. சிலம்பொலியார் அணிந்துரைகள் - 5, பக். 93

அணுகுமுறையையும் நூலாசிரியர் நுட்பமாகச் சுட்டுவது கருதுதற்குரியது.

ஒரு கருத்தைச் சொல்பவர் எவ்வளவு உயர்ந்தவராயினும் சிறப்புப் பெற்றவராயினும், தாமே மதித்துப் போற்றிடும் தகைமையாளராயினும் அக்கருத்து மறுக்கப்பட வேண்டியதாயின் தம் கருத்தை நறுக்கெனச் சொல்லும் நூலாசிரியரின் நடுவுநிலை நெஞ்சத்தைத் திறனாய்ந்து பாராட்டுகின்றார், சிலம்பொலியார்.[1]

திருக்குறள் ஆய்வாளர்கள் இனியாவது ஒருங்கிணைந்து கலந்து விவாதித்து, சிக்கலான தொடர்களுக்கு உண்மையுரை இவையே என உணர்த்த முன்வரவேண்டும் என்னும் நூலாசிரியரின் விழைவைப் போற்றுகின்றார்.[2]

'திருக்குறள் தரும் பொருளியல் கோட்பாடுகள்' என்னும் நூலின் அணிந்துரையில் நூலாசிரியர் இன்றைய பொருளியல் கூறுகளைத் திருக்குறள் கருத்துகளோடு பொருத்திப்பார்த்துக் கூறும் அரிய செய்திகளைப் போற்றி இத்தகைய நூல்கள் இன்னும் வெளிவரவேண்டும் என விரும்புவார். ஏனைய துறைகளுக்கும் வள்ளுவம் எவ்வாறு வழிகாட்டுகின்றது என்பதை ஆராய்ந்து எழுதித் தமிழுக்கு ஆக்கம் தரவேண்டும் என முடிபுரைப்பார்.[3]

'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம்' என்னும் நூல் கவிதை ஆய்வு அணுகுமுறையில் புதிய பார்வையாக விளங்குகின்றது. 'கருத்துத்தாக்கங்கள் ஒருவரையறைக்குட்பட்ட எல்லையில் மட்டுமே நிகழ்வதில்லை. எங்கோ ஒரு பகுதியில் ஏற்பட்ட போராட்டங்களும் மாற்றங்களும் வேறு ஒரு பகுதியிலும் தாக்கத்தை உண்டுபண்ணுகின்றன. அதனால் உலகின் ஒரு மூலையில் ஏற்பட்ட மாற்றம் பல இடங்களிலும் பரவுவதற்கு இலக்கியம் கருவியாய் அமைகிறது எனலாம்.

இம்மென்றால் சிறைவாசம்
ஏனென்றால் வனவாசம்

என்று உருசியாவில் கொடுங்கோலாட்சி நடத்திய ஜார் மன்னனின் வீழ்ச்சி இந்திய நாட்டுப் பாரதியாரின்

1. சிலம்., அணிந்., - 5, பக். 99
2. மேலது, பக். 101
3. மேலது, பக். 106

பாடலில் தாக்கம் பெறுவதைக் காண்கிறோம் என்று பாரதி கவிதைகள் முதல் இன்றைய கவிதைகள் வரை ஏதாவது ஒருவகையில் கருத்துத் தாக்கங்கள் ஏற்படுவதை வரலாற்று நோக்கில் பார்ப்பார்.[1]

காலந்தோறும் தமிழ்க்கவிதை பல்வேறு நிலைகளில் பல்வேறு பாடுபொருள்களில் கருத்தியல் தாக்கங்களை வெளிப்படுத்தி வருகின்றது. நூலாசிரியர் மார்க்சியக் கொள்கையை வெறும் தத்துவமாய் மட்டும் விளக்கிச் சொல்லவில்லை. நடைமுறையில் அக்கொள்கை எந்த அளவு மக்களிடையே தாக்கம் பெற்றுள்ளது என்பதை ஒரு தொழிலாளியிடம் நேர்காணல் மூலம் விளக்கியுள்ளார். ஆசிரியரின் முறையான இந்த ஆய்வு அணுகுமுறையைப் பாராட்டுகின்றார்.[2]

"மார்க்சியக் கோட்பாடு தமிழிலக்கியத்தில் இடம் பெற்றிருக்கும் திறத்தை மதிப்பிடவும், ஏற்றத் தாழ்வற்ற சமதர்மப் பொதுவுடைமைச் சமுதாயம் பூத்துக் குலுங்கவும் வழிகாட்டும் வகையில் அமைந்து இந்நூல் தமிழுக்கே பெருமை சேர்ப்பதாய் அமைகிறது என்பது மிகையன்று. ஆசிரியரின் அரிய முயற்சி, கடின உழைப்பு, ஆராய்ச்சித் திறன் ஆகிய மூன்றுக்கும் ஒரு முத்தாய்ப்பாய் இந்நூல் திகழ்கிறது"[3] எனப் பாராட்டிப் போற்றுவது வளர்ந்துவரும் ஆய்வாளர்களுக்கும் புத்துணர்ச்சி தருவதாகும். புதிய துறைகளில் ஆராய்ச்சி செய்வாருக்கு இவ்வுரை மேன்மேலும் ஊக்கம்தரும் என்பது உண்மை.

இருபத்தொரு அணிந்துரைகள் கொண்ட இத் தொகுதியில் ஏறத்தாழ பதினான்கு நூல்கள் கவிதை பற்றியனவாகும். கவிதைப் படைப்பும், அப்படைப்புகள் பற்றிய ஆய்வுமாக இந்நூல்கள் அமைந்துள்ளன. கவிதை நூல்களுக்குச் சிலம்பொலியார் தரும் அணிந்துரைகள் அவர்தம் கவிதை நுகர்வையும், அழகியல் சிந்தனையையும் காட்டுவன. 'செஞ்சொற் கவியின்பத்தில்' திளைப்பவர், சிலம்பொலியார். தொன்மை இலக்கியம் முதல் அண்மை இலக்கியம் வரை உள்ள கவிதைகளைச் சுவைத்துச் சுவைத்து நெகிழ்ந்து நெகிழ்ந்து கூறுபவர், சிலம்பொலியார்.

1. சிலம்., அணிந்., - 5, பக். 107
2. மேலது, பக். 110
3. மேலது, பக். 111-12

படைப்பாளியின் இலக்கியக் கருத்தினை நன்கு சுவைபட விளக்கும் ஆற்றலாளர், சிலம்பொலியார்.

> கற்றும் செவியுறக் கேட்டும் பருகிக் களித்தும் உள்ளே
> முற்றும் உகப்பெய்து மூழ்கிக் குடைதும்; முகந்துகொடு
> நிற்றும் நிலைபெற நீந்துதும் யாம்நிதம் மாறன்எம்மை
> விற்றும் விலைகொள்ளவும் உரியான் கவிவெள்ளத்தையே

என்னும் சடகோபர் அந்தாதிப்பாடல் இலக்கியச் சுவைப்புத் திறனை விளக்குவதுபோல, படைப்பாளியின் கவிதைவெள்ளத்தில் மூழ்கியும், குடைந்தும், நீந்தியும், கற்றும், கேட்டும், பருகிக்களித்தும் பேரின்பம் பெறுபவர், சிலம்பொலியார்.

கவிஞர்தம் கவிதைத் திறனைச் சுவைத்து மகிழ்ந்த பாங்கினை, அவருடைய அணிந்துரைகளில் நன்கு காணலாம். புலவர் இளஞ்சேரலின் 'எதுகவிதை' என்பதைச் சுவைத்துவிட்டுச் சிலம்பொலியார் இதோ இவ்வாறு எழுதுவார் :

> "சீரும் தளையும் சரியாய் அடுக்கினால்
> நேரிய பாட்டாய் நிலைக்குமோ? – பாரில்
> கருத்துச் செறிவும் கவியின் சுவையும்
> பொருந்தப் புனைவதே பா.

ஓசைநயம் மட்டும் இருந்தால் போதாது. கவிதை, உணர்ச்சிப் பிழம்பாய்த் திகழ வேண்டும்; நம்பிக்கை ஊட்டாத பாட்டு நாட்டுக்குத் தேவையில்லை; உணர்வூட்டாத பாக்கள் பாக்களாகுமா? அவை வெற்றுச் சொற்குப்பையே ஆம்.'' இவை எதுகவிதை? எனும் வினாவிற்கு இளஞ்சேரல் அளிக்கும் மறுமொழிகள்.[1]

'எண்ணத்தின் வண்ணம்' நூலிற்குச் சிலம்பொலியார் தந்த அணிந்துரைக் குறிப்பு, கவிதைகள் பற்றியும் கவிதைப் பயன்பற்றியும் இளஞ்சேரல் தம் பாடல்களில் என்ன கூறியிருக்கிறாரோ அவ்வாறே அவர் பாடல்கள் முழுவதும் அமைந்துள்ளன எனச் சுருங்கக் கூறிமகிழ்வார்.[2]

"இன்று இலக்கியத் துறையில் கொத்தனார் பலர் இருக்கின்றனர். ஆனால், கட்டடக் கலைஞர்கள் மிகச் சிலரே உள்ளனர் என்றார், அறிஞர் ஒருவர். (In literature to-day there are plenty of good masons but few good architects).

---

1. சிலம்., அணிந்., – 5, பக். 129
2. மேலது. பக். 130

இக்கூற்றுக்கு ஏற்பவே இன்று ஏராளமானோர் கவிதை எழுதுகின்றனர். ஆனால், உயிர்த்துடிப்புள்ள கவிதை எழுதுவோர் மிகச் சிலராகவே உள்ளனர். கவிக்கொண்டல் செங்குட்டுவன் அவர்கள் கவிதைக் கொத்தனாராய் இல்லாமல் சிறந்த கவிச் சிற்பியாய் விளங்கி வருகின்றார்"[1] என்று கவிஞர் 'கவிக்கொண்டல் கவிதை'களுக்குப் பாராட்டுரை நல்கி அவர்தம் கவிதையில் காணலாகும் பல்வேறு சிறப்புகளையும் எடுத்துக்காட்டி அவர் கவிதைச் சிற்பியாய் எவ்வாறு விளங்குகின்றார் என்பதை நயம்பட எடுத்துக்காட்டுவார்.

'புயலும் பூபாளமும்' என்னும் கவிதை நூலில் இரண்டு வகையான பாடல்கள் இருக்கின்றன; சில பாடல்கள் புயலாய்ச் சீறும்; சில பூபாளமாய் இனிக்கும். இதனைச் சிலம்பொலியார் தம் அணிந்துரையில் சிறப்பாகக் குறிப்பிட்டுக் கவிஞரின் சீற்றத்தை அவர்தம் பாடல்கள் வழிநின்று விளக்குவார்.

"சாதிக் கொடுமைகள் அற்ற ஏற்றத் தாழ்வுகள் நீங்கிய பகுத்தறிவு வழிநிற்கிற சமுதாயத்தை உருவாக்க இவர் கவிதைகள் எழுச்சியூட்டுவன. ஒவ்வொரு கவிதையும் ஒரு கொள்கை முரசாய் முழக்கமிடுகிறது. யாப்புச் சிறப்பும் ஓசை நயமும் கருத்துச் செறிவும் கொண்டவையாய்க் கவிதைகள் இனிக்கின்றன. புயற்கவிதைகள் நம்மைச் சீற்றமுறச் செய்கின்றன. பூபாளக் கவிதைகள் காதில் தேனெனப் பாய்கின்றன. புயல் எழுவதற்கான சூழ்நிலையைத் தவிர்ப்போம். பூபாளத்தை வரவேற்போம்" -இது சிலம்பொலியாரின் பாராட்டுரை.[2]

முயன்று முயன்று மேலே மேலே
மூச்சிளைப் பாற நேரமு மின்றி
உயரே பறக்கிறோம் வெற்றிகள் தேடி
ஒவ்வொரு பொழுதிலும் நம்பிக்கை யோடே

என நம்பிக்கையோடு உயரமுயலும் கவிஞர்க்குச் சிலம்பொலியாரின் அணிந்துரையும் நல்ல நம்பிக்கையுரை தானே.

கவிஞர் ஆற்றலரசுவின் 'ஆற்றல்கவிதை'களை வானவில்லின் வண்ணக்கலவை என்பார். எழில்காட்டும்

1. சிலம்., அணிந்., - 5, பக். 139-40
2. மேலது, பக். 148

வானவில்லைப்போல அறிவூட்டும் கவிதை வில் எனப் பாராட்டுவார். குழந்தைகட்குக் கவிதை எழுதுவது எளிய செயலன்று. எளிமை நடையுடன் கருத்துச் செறிவுள்ள கவிதையாக இருக்கவேண்டும். காசு இல்லாமல் ஊசிபோடுகின்ற ஓசி டாக்டர் 'கொசு' என்பதை நயமுடன் சுட்டுவது எண்ணி மகிழத்தக்கது.

கவிஞர் மலர்மகனின் 'காதல்மரம்' ஒரு கவினுறு குறுங்காப்பியம். நன்னன் பற்றிச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. அவனை மையமாக வைத்து எழுதிய இக் குறுங்காப்பியத்தைக் கற்பனை மீதூரப் படைத்துள்ள கவிஞரின் படைப்பாற்றலைச் சிலம்பொலியார் நன்கு சுவைத்துத் திறனாய்வு செய்துள்ளார்.

''காப்பியமாகிய உடலின் எலும்புக் கூடாய் விளங்குவது கதைக்கரு. கதை நிகழ்ச்சிகள் எலும்புக் கூட்டைச் சூழ்ந்துள்ள தசை போன்றவை. கற்பனை என்பதோ தசைகள் உயிர்ப்புடன் விளங்கக் குருதி யோட்டத்தைக் கொண்டு செலுத்தும் நரம்புத் தொகுதி. போதிய அளவு குருதியோட்டம் இல்லாவிட்டால் உடல் வலிமையோடு இருக்கமுடியாது. அதுபோன்றே கற்பனை இல்லாத காப்பியமும் சிறப்படைய முடியாது'' என்பது சிலம்பொலியார் கற்பனைக்குத் தரும் அரிய விளக்கம்.[1] 'காதல் மரத்தில் உள்ள கற்பனைகள் அனைத்தும் பண்டைய பெரும்புலவர்கள் வழியில் அமைந்து சிறப்புற்றுள்ளன' எனப் பாராட்டிக் காப்பியத்தில் அமைந்துள்ள கற்பனைச் சிறப்பைச் சான்றுகளுடன் புலப்படுத்துவார். சிலம்பில் மாதவி எழுதிய மடல் புகழ்பெற்றது. இக்காப்பியத்தில் காதலன் காதலிக்கு எழுதிய கடிதம் புதுமையானது.

"காதலியின் உள்ளம் எழுதும் கடிதம் காற்றில் தூதாய் ஓதிவிடப்படுகிறது.

என்னைக் காண வரும்படி – நான்
எழுத வில்லை இம்மடல்.

காதலன் தன்னைக் காணவரும்படி எழுதவில்லையாம். பின் கடிதம் எதற்கு? என் அன்புத் தோழியர் ஐவரும் உமை எதிர்பார்த்துக் கிடக்கின்றனர். அவர்கட்காய் வாருங்கள்.

---

1. சிலம்பொலி சு.செல்லப்பன், பெருங்கதை ஆராய்ச்சி, பக். 108

என் கண், காது, மூக்கு, வாய், மெய் எனும் ஐந்து தோழிகளும் மயக்கத்தில் தவிக்கின்றனர்.

நீ....
ஐவருக்கும் நாயகன், அவர்
ஆசைகளை அறிந்தவன் – அந்த
ஐவர்க்கும் அருளுக, இனி
அவர்சுகமே என்சுகம்

எனக்காக அன்று; அந்த ஐவர் அன்புக்காக வாருங்கள் என்றெழுதும் திறம் காதலனை மயக்குகிறதோ இல்லையோ, நம்மை மயக்குகிறது"[1] என நயம்படப் பாராட்டும்திறம் எண்ணி இன்புறத்தக்கது.

குறுங்காப்பியங்களின் கதையமைப்பிலும் நிகழ்ச்சிப் படைப்பிலும், கவிதைப் புனைவிலும் நூலாசிரியர்கள் பெருவெற்றியைப் பெற்றிருப்பதைத் தக்க சான்றுகளுடன் புலப்படுத்திக் காட்டுகின்றார். கவிதை நூல்களில் அமைந்துள்ள உவமைச் சிறப்புகளையும், முன்னோர் மொழிந்த பொருட்சிறப்பைப் பின்பற்றி யாத்த அருந்தொடர்களையும், புதியபுதிய சொல்லாக்கங்களையும் (வதுதட்சணை) நூல்களில் தேடித்தேடிப் பதிவு செய்து அணிந்துரைக்கு அழகு சேர்க்கும் சிலம்பொலியாரின் உழைப்பும் முயற்சியும் இளைய தலைமுறையினருக்கு எடுத்துக்காட்டாய் விளங்குவன.[2]

ஒருபடைப்பாளியைப் பாராட்டுவதற்கு அப் படைப்பாளியுடைய சொற்களையே பயன்படுத்தும் சிலம்பொலியாரின் அணிந்துரை நமக்கெல்லாம் அழகிய உரையாகத் தென்படும் அல்லவா?

பொதுநலத்தைப் போற்றுதற்கும் புதுக்க ருத்தைப்
புகுத்துதற்கும் கவிதைகளைப் புனைகின் றேன்நான்

எனக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பாடலடி பொன்னரச னுக்கு முற்றிலும் பொருந்துவதாய் உள்ளது என்பார்.

மனஉணர்வை விளக்குதற்கே பொருத்த மான
வார்த்தைகளைத் தேடுகின்றேன் கிடைக்க வில்லை

என்பது பொன்னரசன் எழுதியுள்ள பாடலடிகள். "இவர் மொழியிலேயே சொல்வதானால், உண்மையிலேயே இக்காப்பியத்தைப் பாராட்டப் பொருத்தமான

1. சிலம்., அணிந்., – 5, பக். 168
2. மேலது, பக். 172-178

சொற்களைத் தேடுகின்றேன்; கிடைக்கவில்லை. எவ்வளவு உயர்வாகச் சொல்லலாம் என நினைத்தாலும் அதனினும் உயர்ந்து நிற்கிறது இவர்கவிதை'' என மனந்திறந்து பாராட்டும் அணிந்துரை படிப்போர் அனைவரையும் மகிழ்விக்கும்.

> "விதைதான் முளைத்து வளர்ந்து பெருமரமாய் வளர்கிறது. மரத்தைப் பார்த்து வியப்பவர்கள் முளையை எண்ணிப்பார்க்காதது போல புகழ்பெற்றுள்ள கவிஞர்களையே போற்றிக் கொண்டிருப்பவர்கள் இன்று புதிதாய்த் தோன்றும் இளைய தலைமுறைக் கவிஞர்களை உரியவாறு நோக்கவில்லையே என்பது வித்தகனின் ஏக்கமாய் இருக்கிறது! வித்தகன் இன்று தரையில் கிடக்கும் விதையாய் இருக்கலாம். ஆயினும் எதிர்காலத்தில் விரிந்து படர்ந்த ஆலாய் விளங்குவார் என்பதற்கு இந்நூல் சாட்சியாய் உள்ளது. வித்தகன், உண்மையில் கவிவித்தகனே." [2]

என்னும் அணிந்துரை கவிஞர் வித்தகனுக்கு மட்டுமல்ல, இளைய கவிஞர்கட்கும் எழுச்சியூட்டுபவை அல்லவா?

எந்தக் கவிதையாக இருந்தாலும் மக்கள் மனத்தில் நிலைத்து நிற்க வேண்டியது மிக இன்றியமையாதது என்பார். 'பச்சைநிறப் பூக்கள்' நூலுக்குத் தந்த அணிந்துரையில் பின்வருமாறு குறிப்பிடுவார்.

> "புதுக்கவிதை மரபுக்கவிதை ஆகிய இரண்டும் கலந்த கலப்பாய் இந்த நூல் விளங்குகிறது. மரபேயானாலும், இன்றைய புதிய வடிவமே யானாலும் மக்கள் மனத்தில் நிலைத்து நிற்க வேண்டும். அவ்வகையில் இந்த நூல் வெற்றி பெற்றுள்ளது. இந்நூலில் உள்ள கவிதைகள் அத்தனையும் மணக்கின்றன." [3]

என்பார். ஆம், 'பச்சைநிறப் பூக்கள்' மணக்கின்றன.

---

1. சிலம்பொலியார் அணிந்துரைகள் - 5, பக்.
2. மேலது, பக். 194
3. மேலது, பக். 200

'மலரினும் மெல்லிது' - திருக்குறள் காமத்துப்பாலுக்குப் பெரியார்தாசன் எழுதிய கவிதை உரைநடை; இது பொழிப்புரையோ, விளக்கவுரையோ, ஆய்வுரையோ அன்று; குறள் கருத்தினைச் சரியாயும் தெளிவாயும் அறியத் துணை செய்யும் பொருளுரை என்பார். அவர்தம் உரைஉத்திகளைத் தக்க சான்றுகளோடு பாராட்டிப் போற்றுவார். சில சொற்களுக்குப் பொருத்தமான, எண்ணி எண்ணி மகிழத்தக்க பொருள்களைத் தந்திருக்கிறார் என்று அப் பொருள்களின் சிறப்பையும் குறிப்பிடுவார்.

நடுவுநிலைத் திறனாய்வோடு அணிந்துரையில் சிலம்பொலியார் தம் கருத்தையும் பதிவு செய்யத் தயங்குவதில்லை.

> "ஒண்டொடி, அணியிழை, ஆயிழை, தோட்டார் கதுப்பினாள் எனக் காதலியைக் குறிக்கத் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ள பல்வேறு சொற்களைப் பெரியார்தாசன் 'என்னவள்' என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளார். அழகுக் குறிப்புக்கான அடைமொழிகளைச் சேர்த்திருக்கலாம். அழகைவிட 'என்னவள்' என்று கூறும்போது உரிமை சிறந்திருப்பதாய் அவர் எண்ணியிருக்கக்கூடும்.
>
> பெரியார்தாசன் பகுத்தறிவாளர். ஆயினும், பேச்சுவழக்கில் நடைமுறையில் உள்ள - பகுத்தறிவுக்கொவ்வாத சில செய்திகள் அவரையுமறியாமல் உரையில் இடம் பெற்றுள்ளன. காதலன் பிரிந்திருக்கிறான்; அதனால் தலைவி தனக்கு இரவும் பகலும் எப்போதும் உறக்கமில்லை என்று கூறுகிறாள். இதனைப் பெரியார்தாசன் 'என் கண்களுக்கு எப்போதும் ஏகாதசிதான்' என்று எழுதுகிறார். ஏகாதசி பெரியர்தாசனை ஏய்த்துவிட்டு உள்ளே நுழைந்துவிட்டது."[1]

என்பார். தன் கருத்தை எடுத்துரைத்தாலும் முத்தாய்ப்பாக நூலைப் பின்வருமாறு குறிப்பிட்டுப் பாராட்டுகிறார்.

---

1. சிலம்., அணிந்., - 5, பக். 206

எளிமையா? இனிமையா? வளமையா? – பெரியார்தாசனின்
உரை இம்மூன்றும் உடைத்து

என்று கூறிவிட்டுத் திருக்குறளில் அமைந்துள்ள சொற்களைக் கொண்டே பாராட்டி மகிழ்வார். இவர் உரை பாலொடு தேன்கலந்த பாங்கினதாய் இனிக்கிறது. உள்ளுதொறும் தீராப் பெருமகிழ்வு செய்கிறது. நயமோ ஊற்றுநீர் போலக் கொப்புளித்தெழுகிறது.

மலரினும் தூய திந்நூலே; பலர்இதன்
செவ்வி தலைப்படு வார்

எனக் குறள் யாத்து முடிபுரைப்பார்.[1]

சிலம்பொலியாரின் அணிந்துரையில் பாராட்டுரையுமுண்டு; தன்கருத்தினைப் பதிவுசெய்யும் திறனாய்வுரையுமுண்டு.

எழுத்தாளர் டாக்டர் வாசவனின் 'வண்ணத் தமிழ் வாசல்களை'த் திறந்து வைத்து அவ்வாசல்களின் வழியே நம்மையும் அழைத்துச் சென்று நூலாசிரியரின் வாழ்வியல் செம்மையையும், எழுத்தியல் வன்மையையும் அறிமுகப்படுத்துகின்றார். சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம், பயண நூல்கள் எனப் பல்வேறு நூல்களுக்கும் வாசவன் வழங்கியுள்ள அணிந்துரைகளின் சிறப்புக் கூறுகளை எடுத்துக் கூறி விளக்குகின்றார். "'புதுக்கவிதை' எனனும் பெயரில் வான்கோழிகள் எல்லாம் வண்ண மயில்களாய்த் தம்மை நினைத்துக் கொண்டு பொல்லாச் சிறகை விரித்தாடுவதைக் கண்டு வாசவனுக்குக் கோபம் வருகிறது. ஆனால், அவர் கோபம் போலிகள்மீது தானேயன்றிப் புதுக்கவிதைமீது அன்று என்பதும் புரிகின்றது" எனக் குறிப்பிடுவார்.[2]

தமிழில் ஆட்சிச் சொற்கள் என்னும் ஆய்வேட்டிற்கு அளித்த அணிந்துரையில் "தமிழ் ஆட்சி மொழியாய்ச் செயற்பட வேண்டும் எனச் சட்டம் இயற்றப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் முழு வெற்றி கண்டுள்ளோம் என்று சொல்வதற்கில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், முக்கியக் காரணம் நிருவாகத்திலிருப்போர் தமிழ் ஆட்சிச் சொற்களைப் போதிய அளவில் அறிந்து

1. சிலம்., அணிந்., – 5, பக். 207
2. மேலது, பக். 212

பயன்படுத்த முன்வராமையேயாகும். பன்னெடுங்காலம் ஆங்கிலத்திலேயே எழுதியும் பேசியும் வந்ததால் அவர்களுக்கு ஆங்கிலமே முன்நிற்கிறது. தமிழில் உரிய சொற்களை அறிந்து பயன்படுத்த வேண்டுமெனும் ஆர்வம் இன்னும் பலரிடத்தில் தோன்றவில்லை"[1] என்று தம் கருத்தையும் தெளிவுபடச் சொல்லுவதோடு நூலாசிரியரின் ஆய்வு முயற்சிகளையும் பலவாறு பாராட்டி மகிழ்கின்றார். 'ஆய்வு நெறியோடு ஆட்சிச் சொற்களைப் பற்றிச் சொல்லுகின்ற அருமையான நூல் இது' என ஆய்வுரையாளருக்கு எழுச்சியுரை தருவார். 'உள்ளதன் நுணுக்கம்' தானே ஆய்வு என்பது. அந்த நுணுக்கத்தை அறிந்த நூலாசிரியர் இன்னும் செந்தமிழைச் செழுந் தமிழாக்க வேண்டும் என்பார்.[2]

ஈழத்தமிழறிஞர் ந. சி. கந்தையாபிள்ளை அவர்களின் சங்க இலக்கிய வசனங்கள் என்னும் நூலுக்கு மிக விரிவான அணிந்துரை அளித்துள்ள சிலம்பொலியார் ஈழத்தமிழறிஞர்களான ஆறுமுக நாவலர், கு. கதிரைவேற்பிள்ளை, சி.வை. தாமோதரம்பிள்ளை, விபுலானந்த அடிகள் ஆகியோர் ஆற்றிய அருந்தமிழ்ப் பணியைப் போற்றியுள்ளமை பெரிதும் கருதத்தக்கது.[3]

நூலாசிரியர் கந்தையா பிள்ளையின் தமிழ்த் தொண்டை விரிவாக எடுத்துக் கூறிப் பாவேந்தர் அவருக்குச் சூட்டிய புகழ்ப் பா மாலையை நினைவுகூர்வார்;

> குமரி நாட்டின் தமிழினப் பெருமை
> நிமிரச் செய்தான்; நேற்று வரையிலும்
> கரடி விட்டவர் கண்முன் காண்கிலோம்;
> வளைகிற மரமெலாம் முறிவ துண்டோ?
> நோய்வாய்ப் படுவோரெலாம் சாவது முண்டோ?
> முகில்மறைப் பதனால் மலைமுக டழியுமோ?
> உண்மை ஒளியின்முன் பொய்யிருள் வாழுமோ?

என்று குமரிநாட்டின் பெருமையை எடுத்துரைத்துக் கந்தையாவின் ஆய்வுத்திறத்தைப் புலப்படுத்தியவர், பாவேந்தர்.

---

1. சிலம்., அணிந்., - 5, பக். 220
2. மேலது, பக். 225
3. மேலது, 226-29

கந்தை யாவின் சிந்தையும் செயலும்
செந்தமிழ்க்குச் சேர்த்தநூல் ஒன்றா இரண்டா?
ஈட்டிய அறிவெலாம் ஊட்டினான்
காட்டுவோம் அவர்க்கு நன்றிக் கடனையே

என்று பொருத்தமாகப் பாவேந்தரின் புகழுரையை எடுத்துக்காட்டி அறிஞர் கந்தையா பிள்ளையின் அருந்தமிழ்ப் பணிகளை நமக்கு அணிந்துரை வழி எடுத்துரைப்பார், சிலம்பொலியார்.[1]

அறிஞர் கந்தையா அவர்கள் அளித்த நூல்களைத் தொகுத்துத்தரும் பதிப்பாளர் பணியையும் பலபடப் பாராட்டி மகிழ்வார், சிலம்பொலியார்.

"தமிழ் அமிழ்தம் பதிப்பகம், தமிழ்க்காப்புப் பதிப்பகமாகும். தமிழ், தமிழர், தமிழர் நாகரிகம், பண்பாடு ஆகியன குறித்த நூல்களை வெளியிடுவதை இப்பதிப்பகம் தன்குறிக்கோளாய்க் கொண்டிருக்கிறது.

நூலை அறிஞர்கள் எழுதுவது எவ்வளவு பெரிய தொண்டோ அதற்குச் சற்றும் குறையாதது வெளியிடுவோர் தொண்டு"[2]

எனப் பதிப்பகத்தையும் பாராட்டி நூல் வெளியிடுவதில் மேலும் ஊக்கம் கொள்ளுமாறு செய்வது குறிப்பிடத்தக்கது.

'வீரம் செறிந்த இஸ்லாம்' என்னும் நூலில் ஆசிரியர் ஏம்பல் தஜம்முல் முஹம்மது அவர்கள் இசுலாமியப் பெருமக்கள் வல்லமை தோன்றப் புரிந்த அருஞ் செயல்களை எளிய இனிய நடையில் அழகுறத் தொகுத்துத் தந்துள்ளதை அணிந்துரையில் சிலம்பொலியார் விரிவாகக் கூறியுள்ளார். இசுலாமிய இலக்கியங்களை நன்கு ஊன்றிப் படித்த பெரும்புலமை உடையவர், சிலம்பொலியார். சிந்தை அள்ளும் சீறா முதலாய இலக்கியங்களில் தோய்ந்தவர். விரிவான அணிந்துரை, நூலின் அனைத்துச் செய்திகளையும் செறிவுடன் காட்டுகிறது. நூலாசிரியர் அரிதின் முயன்று தேடிய செய்திகளைப் பாராட்டி மகிழ்கின்றார்.

"பெருமானார் மறைவுக்குப் பின்னர், இசுலாம் உலகம் முழுவதும் பரவியதான இசுலாமிய

---

1. சிலம்., அணிந்., - 5, பக். 231
2. மேலது, பக். 251-252

இடைக்கால வரலாற்று நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாய் இந்நூல் திகழ்கிறது. உண்மை வரலாற்று நிகழ்ச்சிகள் இலக்கியச் சுவையோடு எழுதப்பட்டுள்ளன.

தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று

என்னும் திருக்குறளுக்கு இலக்கணமாய்த் திகழும் பெருமக்களின் வீரச்செயல்களை இந்நூல் எழுத்து வடிவில் ஏந்தி நிற்கிறது.

கருத்துச் செறிந்த
எழுத்துநடை செறிந்த
பதிப்புத்தரம் செறிந்த
கொள்கைநலம் செறிந்த

இந்நூல் ஊனுருக உளமுருகப் படித்துப் பயன்கொள்ள வேண்டிய இசுலாமியக் களஞ்சியமாய்த் திகழ்கிறது என்பது மெய்யுரை"[1]

என அணிந்துரையில் முடிபுரையாகக் கூறி நூலின் சிறப்பை நன்கு புலப்படுத்துவார்.

கவிதை, கட்டுரை, குறளாய்வு, ஆய்வேடு, இசுலாமிய ஆய்வு எனப் பலதிறப்பட்ட வகைகளில் அமைந்துள்ள 21 நூல்களின் அணிந்துரை ஆய்வுகள் தமிழியல் ஆய்வுகளின் நோக்கையும் போக்கையும் காட்டுவன. சிலம்பொலியார் முந்தையோர் மரபு வழிநின்று நூல் நுவல் பொருட் சிறப்பினைச் சுட்டி நூலாசிரியரின் பண்புநலனைப் போற்றி அந்நூல் இலக்கிய வரலாற்றில் பெறுமிடத்தைப் பதிவுசெய்து அணிந்துரைக்குப் பொலிவு சேர்த்துள்ளார்.

அணிந்துரையில் நூலாசிரியர் அறிவுநலம், புலமைநலம், வாழ்வுநலம் ஆகியவற்றைச் சுட்டுவது மரபு. சிலம்பொலியார் தம் அணிந்துரைகளில் இம்மரபினைப் போற்றி எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. முன்னையோர் பாயிரம், புறவுரை, வாழ்த்துரை, பாராட்டுரை, ஆசியுரை என இதனை அமைத்து மகிழ்ந்தனர்.

திருவருட்பாவின் முதல் பதிப்பில் (1867) மதுரை திருஞான சம்பந்தசுவாமிகள் ஆதீனம் சிதம்பரசுவாமிகள் எழுதிய பாயிரம் வரலாற்றுப் புகழ்பெற்றது. நேரிசை

1. சிலம்., அணிந்., - 5, பக். 276

வெண்பாவில் அமைந்த அப் பாயிரப் பாடல் நூலாசிரியரின் இயல்பையும் நூலின் சிறப்பையும் போற்றுவது.

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஒங்குவிக்கும் – கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்
துங்கமுற மாணா தொழு.

அருட்பாவின் முதல் பதிப்பு வெளியீட்டில் அடிகளாரின் மாணவர்கள் தொழுவூர் வேலாயுத முதலியார், பொன்னேரி சுந்தரம்பிள்ளை ஆகியோர் வரைந்த பாடல்களும் பாயிரவரலாற்றில் குறிப்பிடத் தகுந்தன. புலவரேறு வரதநஞ்சையபிள்ளை அவர்கள் பாடிய 'வாயுறை வாழ்த்து' அருட்பாவின் பல்வேறு சிறப்புகளையும் வள்ளலாரின் பெருமையையும் எடுத்துரைக்கும். இவை முன்னையோர், அணிந்துரை எனப்படும் பாயிரமரபு உணர்ந்து பாடிய வரலாற்றைக் காட்டும்.

சங்கம் வைத்துத் தமிழ்வளர்த்த பாண்டித்துரை பல்வேறு நூல்களை வெளியிடத் துணைநின்றவர். 'பன்னூற்றிரட்டு' என்னும் நூலினைப் பதிப்பித்தபோது அந்நூலுக்கு டாக்டர் உ.வே. சாமிநாதையர் பாயிரம் வழங்கினார். அப்பாயிரம் பல்வேறு சிறப்புகளைப் பெற்று விளங்குவது. பாண்டித்துரைத் தேவரின் பண்புகளைப் போற்றுவது.

அருமறை நாவின் அந்தணர் தமக்கும்
ஆறறி காட்சிப் பேறுடை யார்க்கும்
திசைபோம் பெரும்புக ழிசைவல் லவர்க்கும்
செயிரிலாத் தேர்ச்சி வயிரியர் தமக்கும்
மற்றவை மரபிற் கற்றவர் திரட்கும்
மாதுய ரொடுவரும் ஆதுலர் தமக்கும்
அடையா வாயில் அகன்கடை யுடையான்

என்று அவருடைய கனிந்த உள்ளத்தையும் வள்ளல் தன்மையையும் பாராட்டியுரைப்பர். பண்புநலனைப் பாராட்டிய பின்னர் பாயிரம், தேவரின் புலமை நலத்தைப் போற்றும். 'ஆய்ந்த நுண்ணூல் பல ஆய்ந்து மகிழ்ந்தவர்; நாவலர் பல்லோர் பாவலர் பல்லோர் சூழும்படி தழீஇ வாழும் பெருமையினர்' என்பார்.

அன்னமும் ஆவும் அன்ன மாணவர்பலர்க்(கு)
அனமும் தனமும் ஆடையும் மேடையும்

கொடுத்தே மிடியைக் கெடுத்தே மகிழ்வித்(து)
அருந்தமிழ் பயிற்றிப் புரந்திடு மேன்மையன்

என்று கூறி, பழந்தமிழ்ப் புலவர்களின் பெயரைப் பாண்டித்துரைத் தேவரோடு சேர்ந்து உளம் குளிர வாழ்த்திப் போற்றுவார். 'குறையறவரும் உக்கிரபாண்டியன், வருத்தமகற்றும் திருத்தகுதேவன், களங்கமில்லாது விளங்கும் பொய்யாமொழி, மெச்சியடைந்த நச்சினார்க்கினியன், தெரிமேலவர்சொல் பரிமேலழகன், பொடியார்க்குமேனி அடியார்க்குநல்லான்' என்றெல்லாம் தேவரைப் பாராட்டிப் போற்றிய பாயிரமரபு எண்ணி இன்புறத்தக்கது. 'தமிழ்த் தொன்னூல்கள் பழுதாகவணம் பரிசோதிப்பித்து எழுதா எழுத்தில் இயைவித்திடுவோன்' என்று சுவடித் தமிழை அச்சுத்தமிழுக்கு மாற்றிய பாண்டித்துரைத்தேவரின் பதிப்புப் பணியைப் பாயிரத்தால் பாராட்டும் மரபு எண்ணி இன்புறத்தக்கது.

சிலம்பொலியார் முன்னையோரின் பாயிரமரபைப் பின்பற்றி நூலாசிரியரின் பன்முகத் திறன்களையும் பண்பு நலன்களையும் அணிந்துரையில் அகமகிழ்ந்து பாராட்டு கின்றார். பல்வேறு வகையான இலக்கியங்களுக்கும் ஆய்வு நூல்களுக்கும் எழுதிய அணிந்துரையால் அவர்தம் பன்னூற் பயிற்சியும் பரந்துபட்ட புலமையும் நன்கு புலனாகின்றன. 'அணிந்துரைப்பரணி' பாடிய அறிஞராகச் சிலம்பொலியார் திகழ்கின்றார்.

தமிழகத்தின் தலைசிறந்த கவிஞர்களும் எழுத்தாளர்களும் அறிஞர்களும் இவர்தம் அணிந்துரையைப் பெற்றுப் பெருமை பூண்டுள்ளனர்.

அணிந்துரை ஆயிரம் நல்கிய அறிஞர் சிலம்பொலி செல்லப்பனாரின் தமிழ்ப்பணி மேன்மேலும் சிறக்குமாக.

தொகுப்பாளரின் உரை

— மணிமேகலை புஷ்பராஜ்

இதுவரை தமிழில் பல்வேறு துறைகளிலும் வெளிவந்துள்ள ஏறத்தாழ அறுநூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கு என் தந்தையார் திரு. சிலம்பொலி சு. செல்லப்பனார் ஆராய்ச்சி முன்னுரைகள், மதிப்புரைகள், அணிந்துரைகள் அளித்துள்ளார் .என்கின்ற செய்தி தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள பலரைப் போன்றே எனக்கும் மலைப்பையும் வியப்பையும் ஏற்படுத்திய ஒன்றாகும்.

என் தந்தையாரைக் காணவரும் தமிழறிஞர்களிடம் உரையாடுகின்ற வாய்ப்பு எனக்கு அடிக்கடி கிடைத்தது; கிடைத்தும் வருகிறது. சென்னையில் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அவருடன் செல்லும்போது அவருக்கு நெருங்கிய நண்பர்களாயுள்ள தமிழ்ச்சான்றோர் பலரையும் சந்தித்துப் பேசுகின்ற வாய்ப்புக் கிட்டியது; கிட்டிக்கொண்டுமிருக்கிறது. அவர்களுடன் உரையாடும் வேளைகளில், என் தந்தையார் அளித்துள்ள அணிந்துரைகள்பற்றிப் பேச்சு எழுவதுண்டு; அணிந்துரைகள் மிகவும் சிறப்பாய் உள்ளன என்றும், அவற்றையெல்லாம் யாராவது தொகுத்து வெளியிட்டால் தமிழிலக்கிய உலகிற்கும், வரும் தமிழ்த் தலைமுறையினர்க்கும் பயனுள்ளதாய் அமையுமென்றும் அவர்கள் சொல்லக் கேட்டபோது, நாமே அவற்றைத் தொகுக்கலாமே என்ற எண்ணமும் ஆவலும் என்னுள் எழுந்தன.

என் எண்ணத்தை என் தந்தையாரிடம் வெளிப் படுத்தியபோது இசைவளித்தார். முதற்கட்டமாய்த் தந்தையார் அணிந்துரைகள் அளித்துள்ள நூல்களைத் தேடி,

அணிந்துரைகளின் படியினை எடுக்கும் பணியைத் தொடங்கினேன். என் தந்தையாரின் நூலகத்திலேயே சில நூல்கள் கிடைத்தன. என் தந்தையாரின் நூலகம்பற்றி இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்குமென்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் நூலகங்களுள் மிகச்சிறப்பானவையாயும் பெரியனவாயும் உள்ள மிகச்சில நூலகங்களுள் என் தந்தையார் தம் வீட்டில் வைத்திருக்கும் நூலகமும் ஒன்றாகும் எனில் அது மிகையன்று. அவர் நூலகத்தில் இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், நிகண்டுகள், கலைக்களஞ்சியங்கள் என வகைவகையான அரிய நூல்கள் பத்தாயிரத்திற்கும்மேல் உள்ளன. தந்தையாரின் நூலகத்தில் மாக்கவி பாரதிக்குப்பின் தமிழில் வெளிவந்த மரபுக் கவிதை நூல்கள் மட்டும் ஈராயிரத்துக்கும் மேல் உள்ளன. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி எழுந்துள்ள புதுக்கவிதை நூல்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டு உள்ளன. இன்னும் கூடுதலாகவே இருந்தன. எல்லா நூல்களையும் சேர்த்து வைக்க வீட்டில் போதிய இடமில்லையாதலின் ஆயிரக் கணக்கான நூல்களை நன்கொடையாய் அளித்துவிட்டார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், நண்பர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து வரும் தமிழார்வலர்களுக்கும் ஏராளமான நூல்களைத் தந்துவிட்டார். அதனால் அவர் அணிந்துரை எழுதிய நூல்கள் பல அவரிடம் இல்லாமல் போயின. எனவே, வெளி நூலகங்களில் தேடி எடுக்க வேண்டியதாயிற்று.

என் கணவர் திரு. புஷ்பராஜ் அவர்கள் சென்னையில் கன்னிமாரா நூலகம், தேவநேயப் பாவாணர் நூலகம், மறைமலையடிகள் நூலகம் போன்ற பெரிய நூலகங்களிலும் இன்னும் பல்வேறு சிறிய நூலகங்களிலும் நூல்களைப் பெற்று, என் தந்தையாரின் அணிந்துரைகளைப் படியெடுத்து வந்தார். சென்னையில் அவர் சென்று தேடாத நூலகமே இல்லை எனலாம். நூலகங்களிலும் இருபது முப்பது ஆண்டுகட்கு முற்பட்டு வெளிவந்த நூல்கள் கிடைக்க வில்லை; கிடைத்தவரை படியெடுத்துக் கொணர்ந்தார்.

ஓரளவுக்கு அணிந்துரைகள் சேகரிக்கப்பட்டதும், அவற்றைப் பதிப்பித்து வெளியிடுவதுபற்றி எண்ணிக் கொண்டிருந்த வேளையில், பழனியப்பா பிரதர்ஸ் திரு. சுப்பு அவர்கள், என் தந்தையாரின் அணிந்துரைகளைச் 'சிலம்பொலியார் அணிந்துரைகள்' என வெளிக் கொணரலாம் எனச் சொன்னபோது அளவிடற்கரிய மகிழ்ச்சி அடைந்தேன்.

என் தந்தையார்போல் நூல்களுக்கு அரிய விரிவான ஆராய்ச்சி அணிந்துரைகள் வழங்கியவர் எவருமிலர் என்று சொன்னால் அது மிகையன்று. இத்தகைய அணிந்துரை களைத் தொகுக்கும் பணியை மேற்கொண்டது வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பேறுகளுள் ஒன்று என்று கருதுகிறேன்.

இந்நூல், சில தொகுதிகளாய் வெளிவருகின்றது. ஒவ்வொரு தொகுதிக்கும் சிறந்த தமிழறிஞர் ஒருவர் அணிந்துரை வழங்கியுள்ளார். அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியப் பெருமக்கட்கு என் பணிவான வணக்கத்தை உரித்தாக்குகின்றேன். அணிந்துரைகள் அடங்கியுள்ள நூல்களுக்கு அணிந்துரை எழுதியுள்ள அறிஞர்கள் அவற்றை மிகச்சிறந்த திறனாய்வுரைகளாகவே விரிவாய், வளமாய், இலக்கிய முத்துகளாய் வழங்கியிருக்கின்றனர். இவ் அணிந்துரைகள் அப்பெருமக்களின் அயரா உழைப்பையும், அரிய தமிழ்ப்புலமையையும், திறனாய்வுத் திறனையும் மற்றும் என் தந்தையார்மீது அவர்கள் கொண்டுள்ள அன்பினையும் வெளிப்படுத்துகின்றன. குறுகிய காலத்தில் மிகச்சிறப்பான அணிந்துரைகளை வழங்கியுள்ள இப் பெருமக்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிப்புலகில் பழனியப்பா பிரதர்ஸ் பெருமைக்குரிய மூத்த நிறுவனம்; தரமான நூல்களைமட்டுமே வெளியிடுவதைக் குறிக்கோளாய்க் கொண்டது. இந்நூலை மிக அழகாயும் அருமையாயும் வெளியிட்டிருக்கும்

இப்பதிப்பகத்தார்க்கு குறிப்பாய் அமரர் பழனியப்பச் செட்டியார், அவர் இளவல் திரு. மெ. செல்லப்பன், மகன் திரு. ப. செல்லப்பன், மருகர் திரு. இராம. சுப்பு ஆகியோர்க்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலை உருவாக்குவதில் துணைநின்ற ஏசியன் அச்சக மேலாளர் வெற்றியூர் திரு. சுப. திருஞானம், செம்மையாய் மெய்ப்புத் திருத்தம் செய்து நூற்பதிப்பில் பெருந்துணைநின்ற திரு. பெ. நடராசன் (தேனி திருமாவளவன்) அவர்களுக்கும், கணினி ஒளிஅச்சு அமைத்துத்தந்த திருமதி லோகாம்பிகை ஜெய்கிருஷ்ணன் அவர்களுக்கும் என் நன்றி.

என் முயற்சிகளுக்கு ஊக்கம் தந்து, என்றும் துணைநிற்கும் என் அன்புத் தந்தையார்க்கும், கணவர் திரு. நா. புஷ்பராஜ் அவர்களுக்கும், மகன் பு. கிருபாவுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி.

அணிந்துரையாளரின் முன்னுரை

– சிலம்பொலி சு. செல்லப்பன்

அணிந்துரை பண்டு பாயிரம் என வழங்கப்பட்டது. நூலின் தொடக்கத்தில் நூலாசிரியரோ மற்றவரோ அந்நூல்பற்றி எழுதிய பாயிரம் இருக்கவேண்டும். எத்துணைச் சிறப்புடையதாயினும் பாயிரம் இல்லாத நூல் ஒன்றனை நூல் என்றே கருத இயலாது என்கிறது, நன்னூல் இலக்கண நூற்பா[1]. எந்நூல் உரைப்பினும் அந்நூலுக்குப் 'பாயிரம் உரைத்து உரைக்க' என்பது மரபு என்கிறார், உரையாசிரியர் இளம்பூரணர்.

பாயிரம் என்பது நூலைப்பற்றிய சிறுகுறிப்பு. அதற்கு வரலாறு என்றும் பொருள் கூறுவர். ஒரு நூலைப் பயில விரும்புவோர் அதுபற்றிய வரலாற்றினை அறிய அவாவுதல் முறைமை (கடமை)யாதலின் பாயிரம் நூலுக்கு இன்றியமை யாததோர் உறுப்பாகிறது[2].

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்னும் பெயர்களாலும் பாயிரம் வழங்கப்பெறும்[3].

நூலுக்கு முகமாய் (முகப்பாய்) இருப்பதால் முகவுரை;

நூலிலுள்ள பல்வகைப் பொருள்களையும் பதித்திருப்பதால் பதிகம்;

நூலுக்கு அழகு 'சேர்ப்பதால் அணிந்துரை;

நூலின் தொடக்கமாய் இருப்பதால் நூன்முகம்;

நூலுக்குப் புறத்தேயிருந்தும் செய்திகளைச் சொல்வதால் புறவுரை;

நூலில் சொல்லப்படாத பொருளைத் தந்துரைப்பதால் தந்துரை;

---

1. நன்னூல், 54
2. கோ. வில்வபதி, நன்னூல் உரை
3. நன்னூல், 1

நூலின் பெருமையைப் புனைந்து கூறுதலால், புனைந்துரை
என்னும் பொருளில் பாயிரத்திற்கு வேறு பெயர்கள் வழங்கப்படலாயின. நூற்பொருள், நூலாசிரியர் பெயர் முதலாயவற்றை முன்னின்று காட்டுவதால் பாயிரம் அப்பெயர் பெற்றது.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் வழங்கியுள்ள பாயிரந்தான் இன்று கிடைப்பவற்றுள் மிகவும் தொன்மை வாய்ந்தது. அவர் பாயிரத்தின் பொருள் :

"வடவேங்கடம் தென்குமரி இவற்றிற்கிடைப்பட்டது தமிழ் பேசும் மக்கள் வாழும் தமிழகம். இந்நாட்டினகத்தே வழங்கும் பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்குகளையும் அடிப்படையாய்க்கொண்டு இந் நூலின்கண் எழுத்திலக்கணமும் செய்யுளிலக்கணமும் பொருளிலக்கணமும் ஆராய்ந்து உரைக்கப்பட்டுள்ளன.

"செந்தமிழ் நாட்டின் இயல்பொடு பொருந்த இந்நூல் செய்யப்பட்டுள்ளது. இந்நாட்டில் பழங்காலந்தொட்டு வழங்கிவரும் முந்தைய நூல்கள் அனைத்தையும் கற்றும் தெளிந்தும் ஆய்ந்தும், அங்ஙனம் ஆய்ந்தறிந்தவற்றை யெல்லாம் தொகுத்தும் இந்நூல் செம்மையாய் எழுதப் பெற்றுள்ளது.

"இது நிலந்தருதிருவிற்பாண்டியன் எனும் வேந்தன் அவையில் அரங்கேற்றப்பட்டது. இவ்வரங்கேற்றம், அறம் உரைக்கும் நாவினையுடையவரும் நான்மறை வல்லுநரு மாகிய அதங்கோட்டாசான் தலைமையில் ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் குழுமியிருந்த அவைமுன் நிகழ்ந்தது.

"தொல்காப்பியர் எனும் தம் இயற்பெயரே நூற்பெயராய் விளங்குமாறு, 'தொல்காப்பியம்' என்னும் இந்நூலை இவர் இயற்றியுள்ளார். தொல்காப்பியர் ஐந்திரம் கற்ற அறிவாற்றலுடையவர்; இவர் பல்துறை சார்ந்த நுண்ணறிவும் மிகுபுகழும் கொண்டு தூய துறவியாய் விளங்கிய பெரியவர்."

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே![1]

தொல்காப்பியத்திற்குத்தான் முதன்முதலில் பாயிரம் எழுதப்பட்டது போலும்! அதனாற்றான் தொல்காப்பியர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுக்கவில்லை எனக் கருதலாம். பாவலரேறு பாலசுந்தரனார், "பாயிரம் என்பது செய்யுள் வகையோ நூல்வகையோ ஆகாமையின் தொல்காப்பியர் அதுபற்றி விளக்கவில்லை எனக் கருதலாம்" என்கிறார்.[2]

பனம்பாரனார் பாயிரத்தில் தொல்காப்பிய நூல் வழங்கும் எல்லை, முன்னோர் நூலின் வழி, நூல் நுவலும் பொருள், நூல் எழுந்த காலம், நூலைக் கேட்போர், நூலை ஆக்கியோன் பெயர், நூற்பெயர் என்பன அடங்கியுள்ளன. இதனையொட்டியே தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த இலக்கண நூலாகிய நன்னூலில் அதன் ஆசிரியர் பவணந்தி முனிவர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார். பாயிரத்தைப் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரு பிரிவாய்ப் பிரித்துள்ள அவர், சிறப்புப் பாயிரத்திற்கு வகுத்துள்ள இலக்கணம் தொல்காப்பியப் பாயிரத்தை அடிப்படையாய்க் கொண்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது.

ஆக்கியோன் பெயரே, வழியே, எல்லை,
நூற்பெயர், யாப்பே, நுதலிய பொருளே,
கேட்போர், பயனோ(டு) ஆயஎண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்(து) இயல்பே.[3]

1. பனம்பாரனார், தொல்காப்பியப் பாயிரம்
2. ச. பாலசுந்தரம், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், காண்டிகையுரை
3. நன்னூல், 47

தொல்காப்பியத்திற்குப் பிறகு சங்ககால இலக்கியங்களில் பாயிரமோ, பதிகமோ, இவற்றையொத்த பகுதியோ இல்லை. சங்க இலக்கியங்கள் தனிப்பாடல்களின் தொகுப்பு. ஆதலின், பாயிரம் இடம் பெறவில்லை. ஆயினும், தொகுத்தோர், தொகுப்பித்தோர்பற்றிய விவரங்கள் கிடைத்துள்ளன. அதுவுங்கூட முழுமையாய்க் கிடைக்கவில்லை. பதிற்றுப்பத்தில் மட்டும் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் அமைந்துள்ளது. பாடலைப் பாடியோன், அவன் பெற்ற பரிசில், அப்பரிசிலின் பெருமை ஆகிய செய்திகளும், பாடப்பட்டுள்ள மன்னன் பெருமையும் அவன் ஆட்சியாண்டுகளும் கூறப்பட்டுள்ளன.

தமிழின் முதற்காப்பியமாய சிலப்பதிகாரத்தில்தான் விரிவான பதிகத்தைக் காணமுடிகிறது. அப்பதிகம் சிலப்பதிகாரக் காப்பியம் எழுந்த வரலாற்றையும், நூலின் அமைப்பையும், நூல் எழுதப்பட்டதற்கான நோக்கத்தையும், சிலப்பதிகாரத்தில் அடங்கியுள்ள பொருள்பற்றியும் தெளிவாய்ச் சுட்டுகிறது.

மணிமேகலைக் காப்பியப்பதிகம், காப்பியத்திலுள்ள ஒவ்வொரு காதையின் சுருக்கத்தை ஓரிரு அடிகளில் கூறுகிறது. இளங்கோவடிகள் கேட்பச் சாத்தனார் இதனைப் பாடியருளியதாயும் கூறப்பட்டுள்ளது.

சீவகசிந்தாமணிப்பதிகம் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. கடவுள் வாழ்த்தோடு தொடங்கும் பதிகத்தை முதன்முதலில் சீவகசிந்தாமணியில்தான் காண முடிகிறது. கதைத்தலைவன் வரலாற்றினைப் பதின்மூன்று இலம்பகங்களில் இக்காப்பியம் எடுத்துரைக்கிறது. ஒவ்வொரு கலம்பகத்தின் கதைச்சுருக்கம் ஒவ்வொரு விருத்தப்பாவில் கூறப்பட்டுள்ளது.

கம்பராமாயணத் தற்சிறப்புப்பாயிரம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நூல் வந்த வழி ஆகியவற்றைக் கூறுவதோடு, நூலின் பெயர், நூற்பயன், நூல் அரங்கேறிய இடம் ஆகிய செய்திகளையும் கூறுகிறது.

இதையடுத்துத் தோன்றிய காப்பியங்களும் இதே போக்கில் பாயிரத்தைக் கொண்டுள்ளன.

ஒரு நூலின் சிறப்புப்பாயிரத்தை அந்நூலாசிரியருக்கு ஆசிரியர், நூலாசிரியருடன் ஒருங்கு கற்ற ஒருசாலை

மாணாக்கர், நூலாசிரியரிடம் பயின்ற மாணவர், அந்நூலுக்கு உரை வகுப்பவர் ஆகிய இந்நால்வருள் ஒருவர் இயற்றுதல் முறைமை.

தன்னா சிரியன்; தன்னொடு கற்றோன்;
தன்மா ணாக்கன்; தகும்உரை காரனென்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே![1]

ஆயின், இக்காலத்தே இந்நால்வர் என்பது மாறி, பெரும்பான்மை நூலாசிரியர் தாம் விரும்பும் தக்கார் ஒருவரிடம் அணிந்துரை பெறுவது நடைமுறையாயுள்ளது. இன்னார் எழுதினால், அவர் பெருமையால் அல்லது செல்வாக்கால், பதவியால் அந்நூலுக்குப் பெருமை கிட்டும் என்ற எண்ணம் கொண்டும் அணிந்துரைகள் பெறப்படு கின்றன.

பாயிரம் பண்டை நாளில் பா வடிவில் அமைந்தது. அதுவும் ஆசிரியப்பாவானும் வெண்பாவானும் இயற்றுதல் மரபாயிருந்தது.

பாயிரத்(து) இலக்கணம் பகருங் காலை,
நூல்நுதல் பொருளைத் தன்னகத் தடக்கி,
ஆசிரிய மானும் வெண்பா வானும்
மருவிய வகையால் நுவறல் வேண்டும்.[2]

அந்நாளில் அனைத்துமே பா வடிவில் எழுதப் பட்டதால் இவ்விதி பொருந்துவதாயிருந்தது. இன்றோ கட்டுரை, சிறுகதை, புதினம், நாடகம் எனப் பல திறத்தன உரைநடை வடிவில் உள்ளன. அதனால் அணிந்துரைகளும் உரைநடையிலேயே உள்ளன.

செய்யுள் நூல்களுக்காவது அணிந்துரை செய்யுளி லேயே இருப்பின் மரபு காக்கப்பட்டதாகும். அணிந்துரை தருவோர் செய்யுளியற்றக்கூடியவராய் இருந்தால்தான் இஃது இயலும்; அத்தகையவரை அணுகி அணிந்துரை பெறுவது பொன்மலர் நாற்றமுடைத்தாம்! எந்நூல் எவ்வகையில் அமைந்திருக்கிறதோ அவ்வகையிலேயே அணிந்துரை அமைய முயற்சி செய்யலாம். அப்படிச் செய்யின் அணிந்துரை வரலாற்றில் அஃது ஒரு புதுமைப் படைப்பாய்த் திகழும். நாடக நூலின் முன்னுரை அல்லது

1. நன்னூல், 51
2. நச்சினார்க்கினியர், தொல்காப்பியப் பாயிர உரை.

அணிந்துரை நாடக வடிவில் இருக்கலாமே! இந்நிலையிருந் திருப்பின் நூற்றுக்கணக்கான என் அணிந்துரைகள் எழுந் திருக்கவே வாய்ப்பில்லை! இவ்வணிந்துரை நூற்றொகுதிகள் வெளிவரும் நிலையும் உருவாகியிராது. ஆயினும், அப்படிப் பட்டதொரு முயற்சி தோன்றவேண்டும் என்பது என் அவா.

அணிந்துரை இன்று நுழைவாயில், அழகுரை, மதிப்புரை, ஆய்வுரை, சுவையுரை, சிறப்புரை, பொருளுரை முதலாய பெயர்களாலும் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்போது வெளிவரும் நூல்களுள்ளும் சிலவற்றில் அணிந்துரைகளைப் பா வடிவில் காணமுடிகிறது. அணிந்துரை 'சாற்றுக்கவி'யாயும் உள்ளது. நூலின் பெருமையை அக்கவி சொல்வதால் அது சாற்றுக்கவி என வழங்கப்படுகிறது. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய திருவெங்கைக் கோவை எனும் நூலுக்கு,

கற்றோர்க்(கு) இனியதொரு தமிழமுதாய் அகப்பொருளின்
கருத்தாய்க் காண
முற்றாரும் மணற்கேணி தொட்டென்ன அணிகள்பல
முனைந்து தோன்றி
சொற்றோறும் நயம்பெருகத் திருவெங்கை நாயகன்நற்
துணைய டிக்கே
வற்றாத பேரன்பிற் கோவையாம் ஒருநூலை
வகுத்திட் டானால்

எனப் பெரும்புலவர் கா. நமசிவாய முதலியார் சாற்றுக்கவி அளித்துள்ளார். இக்காலப் பெரும்புலவர்கள் தாம் படைத்துள்ள நூல்களுக்குப் பலரிடம் சாற்றுக்கவிகள் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஓலைச்சுவடிகளைத் தேடிக் கண்டெடுத்துப் பண்டைய நூல்களைப் பதிப்பித்த சி.வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ.வே.சாமிநாதையர் போன்றவர்கள் தாங்கள் பதிப்பித்த நூல்களில் நீண்ட முகவுரைகள் எழுதியுள்ளனர். அவற்றில் அவர்கள் நூல்களைப் பதிப்பிப்பதற்கு ஓலைகளைத் தேடியலைந்த தொல்லைகள், பார்வையிட்ட ஓலைகள் முதலியவற்றை விரிவாய்க் குறிப்பிடுவதோடு, அந்நூல்களிலிருந்து அறியக் கிடக்கும் முக்கியச் செய்திகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்துள்ள நூல்களில் மிக நீண்ட முகவுரையைக் காணமுடிகிறது;

முகவுரைபற்றிய அவர் கருத்தும் புலனாகிறது. "அக்காலத்தில் அச்சிடப்பெற்ற தமிழ்ப்புத்தகங்கள் பலவற்றில் முகவுரை முதலியன காணப்படவில்லை. அவை இருந்தால் படிப்பவர்க்கு மிக்க உபயோகமாயிருக்கும் என்பதை உணர்ந்த நான் (சிந்தாமணிக் காப்பியத்தைப் பதிப்பித்த போது) அதற்கு அங்கமாக அவற்றை எழுதிச் சேர்த்துப் பதிப்பிக்கலாமென எண்ணினேன். என்ன என்ன விஷயங்களை முகவுரையில் எழுதவேண்டுமென்பதைப் பற்றி ஆலோசித்தேன். நூலைப் படிப்பதற்குமுன் அதிலுள்ள முக்கியமான செய்திகளையும், நூலின் பெருமையையும், உரையின் தன்மை முதலியவற்றையும் படிப்போர்கள் தெரிந்துகொள்ளுவது நலமென்பது என் கருத்து" என உ.வே.சா. தம் சிந்தாமணிப்பதிப்பின் முகவுரையில் குறிப்பிடுகிறார்.[1]

அவரது இக்கருத்துக்கேற்பவே அவர் பதிப்பித்துள்ள நூல்களின் முகவுரைகள் அமைந்திருப்பதைக் காண்கிறோம். அவரது சிலப்பதிகாரப் பதிப்பின் முகவுரையில் ஒரு பகுதி : "இக்காலத்தில் வேறொரு வகையாலும் அறிதற்கியலாத இசையிலக்கண வகை, நாடக இலக்கணம், பரத இலக்கணம், அவிநய வகைகள், நகர் அமைப்பு, கோயிலமைப்பு முதலியன; ஐவகைத் திணைகளின் அமைதிகள், இன்னின்ன சாதியார் இன்னின்ன தொழில்கள் செய்தார் என்பது, பலவகை நீதிகள், சமயக் கோட்பாடுகள், இராசபக்தி, ஆச்சிரம அமைதி, ஆசிரிய பக்தி, மாணாக்கரியல்பு, ஆபரண வகை, தானிய வகை, ஊர்தி வகை, கருவி வகை, மந்திர வகை, பூ வகை, செடி வகை, கொடி வகை, மர வகை ஆகிய இவையும் இவைபோல்வன பிறவும் இந்நூலால் (சிலப்பதிகாரத்தால்) அறியலாகும்" என எழுதியுள்ளார். நூலுள் அடங்கியுள்ள செய்திகளை, பழக்கவழக்கங்களைத் தொகுத்து முகவுரையில் தரவேண்டும் என்பது அவரது எண்ணமாய் இருந்திருக்கிறது.

அவர் எவ்வெந் நூல்களுக்கு முகவுரை எழுதுகிறாரோ, அவற்றுக்கு இலக்கண விளக்கம் அளிக்கவேண்டியிருப்பின் அவற்றையும் தருகிறார். தூது நூல்களுக்கு முகவுரை எழுதும்போது தூது இலக்கணங்களையும், பிற தூதுகளைப் பற்றிய பொதுச் செய்திகளையுங்கூட வெளிப்படுத்தி

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், பக். 608

யுள்ளார்; சில இடங்களில் நூலாசிரியர் கருத்து இன்னவாயிருக்கும் என்பதையும் புலப்படுத்துகிறார்: புகையிலைவிடு தூது பதிப்பின் முகவுரையில், "இந்நூல் 59 கண்ணிகளையுடையது. இத்தூதில் புகையிலையின் பெருமைகள் 53 கண்ணிகளில் சொல்லப்படுகின்றன. தூது விடும் செய்தி ஏனைய ஆறு கண்ணிகளில் சுருக்கமாய் அமைந்துள்ளது. இதனால் இதைப் பாடிய புலவர் புகை யிலையைச் சிறப்பிப்பதற்காகவே இதனைப் பாடியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது" என எழுதுகிறார்.[1]

இவர் காலத்தில் நூல்களைப் பதிப்பித்த பிற ஆசிரியர்கள் இவரைப் போன்று நீண்ட முகவுரைகள் எழுதவில்லையாயினும் சற்றொப்ப இதே போக்கில் எழுதியிருக்கக் காண்கிறோம்; சிலர் மிகுவிரிவான முகவுரை எழுதியுள்ளதையும் காணமுடிகிறது. ரா. இராகவய்யங்கார் தாமியற்றியுள்ள 'பாரிகாதை'யின் முகவுரையில் பாரி, கபிலர் ஆகியோர்பற்றிச் சங்க இலக்கியங்களில் கிடைக்கும் குறிப்புகளை விரிவாய்த் தந்துள்ளதோடு முகவுரையிலேயே காப்பியக்கதை முழுவதையும் சுருக்கமாய்த் தந்துள்ளார்.

மனிதன் ஒருவனுக்கு முகம்போல நூலுக்கு முகவுரை அமைகிறது. முகத்தை நோக்கி ஒருவரது அகநிலைமையைத் தெரிந்துகொள்கிறோம். அவ்வாறே முகவுரையைக்கொண்டு நூலின் உள்ளடக்கத்தைச் செவ்வையாய் அறிந்துகொள் கிறோம்.

மாளிகை, கட்டட வேலைப்பாடமைந்ததாயினும் அதற்குப் பொலிவூட்ட அழகிய ஓவியம் இன்றியமையாதது. ஒரு நகரம் மிகவும் பெரியதாய் அமைந்திருந்தாலும் அதற்கு மேலும் பெருமை சேர்க்கக் கோபுரத்தோடு கூடிய தலைவாயில் இன்றியமையாதது. பெண்கள் இயற்கையிலேயே அழகுடையவர்களாயினும் அவ்வழகுக்கு அழகூட்ட அணிகலன் இன்றியமையாது இருப்பதுபோல் ஒரு நூல் சிறப்புடையதாயினும் அதற்கோர் அணிந்துரை இன்றியமையாததாம்!

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், புகையிலை விடுதூது பதிப்பு, பக். 3

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க் கணியும்போல் – நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.[1]

முகவுரைகள் குறித்துப் பிற நாட்டறிஞர்களும் இவற்றையொத்த கருத்துகளையே கூறியிருக்கக் காண்கிறோம்.

"முகவுரைகள் முன்வாயில்களைவிட முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை நூலின் நோக்கத்தைத் திறந்து காட்டும் சாவிகளாயும், ஆசிரியரின் இலக்கியப் பயணத்தைக் காட்டும் அருங்கருவிகளாயும் அமைந்துள்ளன.[2]

அணிந்துரை என்பது நூலின் நுழைவாயில் என்பதால் அஃது அந்நூலைப் படிப்போரை நூலினுள் நுழையத் தன் கவர்ச்சியால் ஈர்க்கக்கூடியதாய் இருக்கவேண்டும். காண்பதற்கினிய தோரணவாயில் உள்மாளிகையின் நேர்த்தியினை உணர்த்தி நிற்கும்.[3]

ஒரு நாடகத்தின் விறுவிறுப்பூட்டக்கூடிய தொடக்கம் போலவும், ஓர் இசைக்கூத்திற்கு வாய்த்த நேர்த்தியான இசைக்கருவிகள் போலவும் படிப்பவரை மனமகிழச் செய்வதற்கு சிறந்த அணிந்துரை இன்றியமையாத ஒன்றாம்.[4]

இத்தாலியர்கள் முன்னுரையை நூலின் தாளிதக்கூட்டு என வழங்குகிறார்கள்; பக்குவமாய்த் தாளிக்கப்பட்டால் அது படிப்பவர்க்குப் பெரும் பசியை உருவாக்கி, நூல் முழுவதையும் விழுங்கச் செய்துவிடும்.[5]

அணிந்துரைபற்றிய இக்கருத்துகள், என் அணிந்துரைகளின் தன்மையை எண்ணிப் பார்க்கப் படிப்போர்க்குத்

---

1. நன்னூல், 55

2. George Arthur Buttrick (Editor),. Interpreters' Bible, P. XVII

3. A Preface being the entrance of a book should invite by its beauty. An elegant porch announces the splendour of the interior - Disraeli.

4. A good preface is an essential to the reader into good humour, as a good proloque is to a play; or a fine sympony to an opera. - Disraeli.

5. The Itallians call the preface 'the sauce of the book' and if well seasoned, it creates an appetite to the reader to devour the book itself. - Disraeli

துணைசெய்யும் என்று நம்புகிறேன். பண்டைய இலக்கண நூலார் கூறியுள்ள அணிந்துரை இலக்கணங்களை முற்றிலும் பின்பற்றி அணிந்துரைகளை நான் எழுதியுள்ளேன் எனச் சொல்லுதற்கியலாது; ஆயினும், அணிந்துரையைப் படிப்போர்க்கு அந்நூலை முற்றாய்ப் படிக்க வேண்டும் எனும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அதை எழுதியிருப்பதாகவே கருதுகிறேன்.

தமிழ்த்தாய்க்கு அணி சேர்க்கும் 'நன்னோக்கில் நூல்கள் எழுதும் அன்பர் பலர் தம் படைப்புகட்கு 'அணிந்துரை' அளிக்குமாறு எனக்கு அன்புக் கட்டளையிட்டனர். அதனையேற்று நூற்றுக்கணக்கானவர்களின் நூல்களுக்கு அணிந்துரை எழுதும் நல்வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

"நான்கு பக்கங்கள் மட்டுமே அணிந்துரைக்கு ஒதுக்கியுள்ளோம்; அதற்குள் அடங்குமாறு எழுதித் தரவேண்டும்" என்று கூறியவரும் உண்டு; "எவ்வளவு விரிவாய் வேண்டுமானாலும் எழுதுங்கள்" என்று கூறியவர்களும் உண்டு. ஆதலின், என் அணிந்துரைகள் 4 பக்கங்களிலிருந்து 40 பக்கங்கள் வரையினவாய் அமைந்திருக்கக் காணலாம். நான் எழுதித் தந்ததை முழுமையாய்ச் சேர்க்க முடியாமல் சிலர் அளவைக் குறைத்து, சில பகுதிகளை நீக்கி அச்சிட்டதும் உண்டு. அவ்வாறு விடுபட்டவை இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. எந்த அளவினதாய் இருந்தாலும் அணிந்துரையை அந்நூலுக்கு ஓர் அணியாய் இருக்கும் முறையிலேயே எழுதியுள்ளேன் என நம்புகின்றேன்.

நான் எழுதிய அணிந்துரைகளைத் தொகுத்து நூலாக்க வேண்டுமென என் மகள் திருமதி மணிமேகலை கூறியபோது, அணிந்துரை நூலாக வேண்டுமா எனச் சற்றுத் தயங்கினேனாயினும், பேராசிரியப் பெருமக்கள் பலர், 'உங்கள் அணிந்துரையைப் படித்தால் நூலை முழுமையாய்ப் படித்ததுபோன்ற நிறைவைத் தருகிறது; ஆதலின், அவற்றைத் தொகுத்து வெளியிடுவது பயனுடையதாகவே இருக்கும்' என்றனர்; ஆதலின், இந்நூல் வெளிவருகிறது.

நான் எழுதித்தந்த அணிந்துரைகளின் படிகளை வைத்துக்கொள்ளும் பழக்கம் எனக்கில்லாது போயிற்று. இஃது ஒரு பெருங்குறையே! என் மகளும், மருமகன் திரு. புஷ்பராஜ் அவர்களும் நூலகங்கட்குச் சென்று, நூல்களைத்

தேடியெடுத்து, ஐந்நூறுக்கு மேற்பட்ட அணிந்துரைகளைப் படியெடுத்துச் சேர்த்தனர். இன்னும் தேடுதல் பணி நடந்து கொண்டுள்ளது. கிடைத்தவற்றை முதலில் அச்சிட்டு நூலாக்க முனைந்துள்ளனர்.

அணிந்துரை எழுதுதற்கென நான் ஒரு தனித்த முறையை மேற்கொண்டுள்ளேன். கொடுக்கப்பட்ட நூலை முழுமையாய்ப் படித்து, முதலில் அதன் உட்பொருளை மனத்தில் உள்வாங்கிக்கொள்வேன். இரண்டாம் முறை படித்து, அணிந்துரைக்குத் தேவைப்படும் முக்கியப் பகுதிகளைக் குறித்துக்கொள்வேன். பின்னர், அக்குறிப்பு களை நோக்கி, அவற்றை விரிக்கவோ சுருக்கவோ இடமுண்டா என ஆய்வேன். அடுத்து, எம்முறையில் எழுதுவது எனச் சிந்திப்பேன்; பிற இலக்கியங்களுடன் ஒத்திட்டுப் பார்க்க இடமுளதா என்பதையும் அறிவேன். அதன் பின்னரே எழுதத் தொடங்குவேன்.

ஆசிரியர் கருத்துகள், அவர் படைப்புகளில் வெளிப்படுவது தவிர்க்க இயலாததாகும். படிப்போர் அவற்றோடு உடன்படலாம் அல்லது முரண்படலாம். நான் வழங்கும் அணிந்துரைகளில், நூலில் உள்ள கருத்து முரண்பாடுகளையோ கொள்கை வேறுபாடுகளையோ சுட்டிக்காட்டி முன்நிறுத்துவதில்லை. அவற்றை எண்ணிப் பார்க்கும் பொறுப்பைப் படிப்போர்க்கு விட்டு, நூலின்கண் காணும் சிறப்புக்கூறுகளை மட்டும் சுட்டிச் செல்வேன். என் அணிந்துரைகள் பெரும்பாலும் பாராட்டுரைகளாகவே இருக்கும். ‘அணிந்துரை திறனாய்வுரையினின்றும் வேறுபட்டது. திறனாய்வுரை குறைநிறைகளைச் சுட்டிக் காட்டுவது. அணிந்துரை நூற்பொருளின் அழகைக் கூறுவது’ என்னும் கருத்துடையேன் நான். இப்பாராட்டு முறையால் ஏற்படும் பெரும் நன்மை ஒன்றுண்டு. படிப்போர், நூலுள் ஆர்வத்துடன் நுழைவதற்கு விருப்பமூட்டும் தூண்டு கோலாய் இஃது அமைவதே அந்நன்மையாம்.

“கன்னல் பொருள்தரும் தமிழே, நீ ஓர் பூக்காடு; நான் அங்கோர் தும்பி” என்பார், பாவேந்தர் பாரதிதாசன். பூக்காட்டில் உள்ள பிறவற்றைப் பொருட்படுத்தாமல், பூக்களில் உள்ள தேன்துளிகளை மட்டுமே வண்டு சுவைத்துண்ணுகிறது; தான் சுவைத்துண்டதோடு மட்டும் அமையாமல் தேனடையாய்ச் சேர்த்தும் வைக்கிறது.

அதுபோன்றே நானும் அன்பர்களின் நூல்கள் என்னும் பூக்காட்டில் நுழைந்து, சிறப்புக் கூறுகளாகிய தேன் துளிகளைச் சுவைத்துண்டு மகிழ்கிறேன்; அவற்றைத் தொகுத்து அணிந்துரை எனும் தேனடையாயும் தருகிறேன். தேனடையின் தேனுண்டு மகிழ்வோர், அத்தேன் எடுக்கப்பட்ட பூக்காடுகளுக்குள் நுழைந்து நிறையவே தேனுண்ண வேண்டும் என்பது என் அவா!

அணிந்துரைகளை எழுதச் சொல்வதன் வாயிலாய், நான் ஏராளமான நூல்களைப் படிப்பதற்கும் இன்பம் துய்ப்பதற்கும் வழியேற்படுத்தித் தருகின்ற நூலாசிரியர்கட்கு என் உளமார்ந்த நன்றி.

அணிந்துரைகளை முயன்று தேடித் தொகுத்துள்ள என் அருமை மகள் மணிமேகலைக்கும், மருகர் புஷ்பராஜுக்கும், இவர்களை இப்பணியில் ஈடுபடத் தூண்டுகோலாயிருந்த இவர்கள் மகனும் என் பெயரனுமாகிய செல்வன் கிருபாவுக்கும் நான் பெரிதும் கடப்பாடுடையேன்.

அணிந்துரை நூற்றொகுதியை வெளியிடத் தமிழகத்தின் புகழ்மிக்க பதிப்பகமாகிய பழனியப்பா பிரதர்ஸ் ஏற்றுக்கொண்டதை நான் எனக்குக் கிடைத்த பெருமையாகவே கருதுகிறேன். இதற்கு ஒரு காரணம் உண்டு. எனக்குச் 'சிலம்பொலி' எனும் பட்டத்தைத் தந்தவர் சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை ஆவார். அவர் எழுதிய அனைத்து நூல்களையும் வெளியிட்டுப் பெருமை சேர்த்துள்ளவர்கள், பழனியப்பா பிரதர்ஸார் ஆவர். என்னைப் பாராட்டிய சொல்லின் செல்வரால் பாராட்டப் பெற்றுள்ள பழனியப்பா பிரதர்ஸ் என் எழுத்துகளை நூலாக்கி வெளியிடுகிறது என்பதைவிடப் பெரிய மகிழ்ச்சி எனக்கு வேறு என்ன இருக்கமுடியும்? இந்நிறுவனத்தைச் சார்ந்த அனைவர்க்கும் என் நெஞ்சுநிறை நன்றி.

இந்நூலைப் படிப்பதன் வாயிலாய் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள அனைத்து நூல்களையும் படித்த நிறைவு, படிப்போர்க்கு ஏற்படும் என்று நம்புகிறேன்.

பதிப்புரை

கொங்குதமிழ் நாட்டினிலே
தோன்றியநல் தமிழாறு!
இசையோடு பாய்ந்தோடும்
இன்னிசைத் தேனருவி!
வைகைநதித் தமிழ்ச்சேயை
வளர்க்கின்ற தாய்ச்செவிலி!
மேடைதொறும் நற்றமிழின்
புகழ்பாடும் பூங்காற்று!
சங்கமெனும் கடல்கடைந்து
தமிழமுதம் தரும்நெடியோன்!
புலமையெனும் பூந்தடத்தில்
பூத்தசெந் தாமரை!
பாத்தோறும் தேனெடுத்துக்
கூடுகட்டும் கோத்தும்பி!
தமிழோடு தனைக்கரைத்த
செம்புலப் பெயல்நீரான்!
இத்தகைய
சிறப்புகள் அத்தனையும்
சேர்ந்தொன்றாய் உருவானான்
சிலம்பொலியாம் செல்லப்பன்
எனுந்திருப் பெயர்கொண்டான்!

கவிதையொடு கட்டுரைகள்
காப்பியம்நல் திரைஇசையும்
தகவுடைய சிறுகதைகள்
தன்வரலா றாய்வுநூல்
என்றுபல துறைநூல்கள்
இவன்தோய்ந்தே ஆராய்ந்து
சொல்லழகும் பொருளழகும்
துள்ளிவரும் கருத்தழகும்
பல்சுவையும் நடமிடவே
அணிந்துரைகள் வனைந்துள்ளான்!
பரந்துள்ள கடல்நீரைப்
பருகிட்ட குறுமுனிபோல்
விரிந்துள்ள நூற்சிறப்பை
வித்தகமாய்த் தான்தொகுத்துச்
சிறுதுளியாம் பனித்துளியில்
பெரும்பனையும் தோன்றுதல்போல்

அணிந்துரையில் முழுநூலை
அடக்கிஇவன் காட்டிவிட்டான்!

இந்நூல்
கல்லூரி மாணவர்க்குக்
கரைகாட்டும் ஒளிவிளக்கு!
கற்பிக்கும் ஆசானுக்(கு)
உற்றதொரு ஊன்றுகோல்!
ஆய்வுநூல் மாணவர்க்கு
அரியதொரு புதையலாகும்!
கல்லாரைக் கற்றாராய்க்
கரைசேர்க்கும் பெருந்தோணி!
கருத்துபல கசிந்தூறும்
கன்மலையின் சுனையாகும்!
அணிந்துரைகள் அணிவகுக்க
அழகியதோர் நூலாக
எம்மொழியாம் தமிழ்மொழியில்
இதுபோல வந்ததில்லை!

எனவே இவன்
தன்திறத்தால் தமிழ்மொழியைத்
தானுயர்த்தி வைத்தானா?
தானுரைத்த தமிழாலே
தானுயர்ந்து நின்றானா?
எம்மாலே பதிலுரைக்க
இயலாது பெரியோரே!
உம்மாலே விடைகூற
ஒல்லுமோ இயம்பிடுக!

நன்னூல்கள் தருவதுவே
நமதுகடன் என்றிருக்கும்
பன்னூலின் தாயகமாம்
பழனியப்பா பிரதர்ஸார்
இந்நூலைத் தமிழன்னைக்(கு)
ஏற்புடைய ஆரமெனச்
சூட்டுதற்கு முன்வந்தோம்
தொடர்ந்தெம்மை ஆதரிப்பீர்!
பாத்திரத்தை எடுத்துவைத்துப்
பருகிடவே முன்வைத்தோம்!
பாத்திறமும் பல்திறமும்
பயன்துய்த்து மகிழ்ந்திடுக!

— பதிப்பகத்தார்

"ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே!"

- நன்னூல்

அணிந்துரை அடங்கல்

வ.எண்	நூற்பெயர்	பக்கம்
	சிறப்புரை	III
	தொகுப்பாளரின் உரை	XXIII
	அணிந்துரையாளரின் முன்னுரை	XXVII
	பதிப்புரை	XXXIX
1.	இருபதாம் நூற்றாண்டின் 100 தமிழ்க்கவிஞர்கள் ... *ப. முத்துக்குமாரசாமி (தொகுப்பாசிரியர்)*	1
2.	பாரதிதாசன் பாடல்களில் பழந்தமிழ் இலக்கியச் செல்வாக்கு *முனைவர் கருவூர்க் கன்னல்*	51
3.	பாவேந்தர் ஆய்வடங்கல் *முத்து சேரன் (தொகுப்பாசிரியர்)*	65
4.	பாரதிதாசன் ஆய்வுக் கோவை *மு. சாயுபு மரைக்காயர் (தொகுப்பாசிரியர்)*	72
5.	குறள்வழிச் சிந்தனைகள்—ஒரு புதுப்பார்வை *புலவர் பா. வீரமணி*	94
6.	திருக்குறள் தரும் பொருளியல் கோட்பாடுகள் *திருக்குறட்செம்மல் கு. ச. ஆனந்தன்*	102
7.	இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம் *டாக்டர் கோ. தான்யா*	107
8.	எண்ணத்தின் வண்ணம் *புலவர் இளஞ்சேரல்*	113
9.	கவிக்கொண்டல் கவிதைகள் *– கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன்*	131
10.	புயலும் பூபாளமும் *கவிஞர் ப. ஜோதிவளவன்*	141

வ.எண்	நூற்பெயர்	பக்கம்
11.	ஆற்றல் கவிதைகள் - *கவிஞர் ஆற்றலரசு*	149
12.	காதல் மரம் *கவிஞர் மலர்மகன்*	155
13.	உயிர்ச்சுடர் *கவிஞர் கலைப்பொழிலன்*	170
14.	வேர்ப்பலா *புலவர் பொன்னரசன்*	179
15.	ஒரு விடியலுக்கு முன்னால் *கவிஞர் வித்தகன்*	191
16.	பச்சை நிறப் பூக்கள் *கவிஞர் பா. அமிழ்தன்*	195
17.	மலரினும் மெல்லிது... *பேராசிரியர் பெரியார்தாசன்*	201
18.	வண்ணத்தமிழ் வாசல்கள் *கலைமாமணி டாக்டர் வாசவன்*	208
19.	தமிழில் ஆட்சிச் சொற்கள் *டாக்டர் சி. செல்வராஜ்*	220
20.	ந. சி. கந்தையா பிள்ளை சங்க இலக்கிய வசனங்கள் *அறிஞர் ந. சி. கந்தையா பிள்ளை*	226
21.	வீரம் செறிந்த இஸ்லாம் *ஏம்பல் தஜம்முல் முஹம்மது*	253

1

இருபதாம் நூற்றாண்டின் 100 தமிழ்க்கவிஞர்கள்

காலந்தோறும் தமிழ்

அமிழ்தினும் இனிய தமிழ்மொழி தொன்மைச் சிறப்பும் நெடிய மரபும் கொண்டது. தமிழ்க்கவிதை வளர்ச்சி இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலான வரலாறு உடையது. சங்ககாலம் தொடங்கிப் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை சங்க இலக்கியங்கள், காவியங்கள், நீதி நூல்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப் பாடல்கள் எனப் பல்வேறு வகை இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவ்வக்கால கட்டத்தில் முன்னர்த் தோன்றிய நூல்களே பின்னர் வந்த நூல்களுக்கு வழிகாட்டியாகவும் மரபாகவும் அமைந்தன.

இருபதாம் நூற்றாண்டில் மரபுவழி வந்த கவிதைகளோடு சில புதிய வரவுகளும் தமிழுக்குக் கிடைத்துள்ளன. குழந்தைக் கவிதைகள், கவிதை நாடகங்கள், புதுக் கவிதைகள் ஆகியவை முற்றிலும் இருபதாம் நூற்றாண்டுக்கே உரியவை எனலாம்.

இருபதாம் நூற்றாண்டில் பாரதியின் காலத்தில் இலக்கிய உலகில் மரபோடு புதுமையும் கலந்தது. மக்களிடையே விடுதலை வேட்கையை உண்டாக்கவும் அவர்களை நெறிப்படுத்தவும் பாரதி பழமையோடு புதுமை கலந்தும் பழமையைப் புதுக்கியும் எழுதினார். கவிதைகள் மக்கள் இலக்கியமாய் மலர்ந்தன. தமிழ்க்கவிதை இலக்கிய உலகில் பாரதியின் தோற்றம் புதிய மாற்றத்திற்கும் இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்கும் வித்திட்டது எனலாம்.

பாரதியைச் சார்ந்து பாரதிதாசனும் மற்றும் பலரும் கவிதை வடிவிலும், பாடுபொருளிலும், உணர்த்தும் முறையிலும் பல்வேறு புதுமைகளைப் படைத்துக் கவிதைத்துறையை வளம்பெறச் செய்தனர்.

பாரதியாரின் தொடர்பினால், எளிய நடையில் மக்களுக்குப் புரியும் வகையில் மக்களுக்காக எழுதப்படும் கவிதைகளே மக்கள் மனத்தைக் கவ்வ முடியும் என்பதை உணர்ந்த பாரதிதாசன் அம்முறையைப் பின்பற்றிப் பாடத் தொடங்கினார்.

கலம்பகம் பார்த்தொரு கலம்ப கத்தையும்
அந்தாதி பார்த்தொரு அந்தாதி தனையும்
மாலை பார்த்தொரு மாலை தன்னையும்
காவியம் பார்த்தொரு காவியம் தன்னையும்

புலவர்கள் எழுதிக்கொண்டிருந்த வேளையில் அவ்வாறே இருந்த தாமும்,

பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுதும் கண்டபின் கடைசியாய்ச்
சுப்பிர மணிய பாரதி தோன்றிஎன்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்

எனத் தாம் புதிய நடையில் எழுத வேண்டுமெனும் எண்ணத்தைப் பாரதியிடமிருந்து பெற்றதைப் பாரதிதாசனே குறிப்பிட்டுள்ளார்.

"புலவர்கள் அந்தந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகக் கூடிய பதங்களையே புழங்க வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவதே நல்ல கவிதை. ஆனால், சென்ற சில நூற்றாண்டுகளாகப் புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரண விசயங்களை அலௌகீக அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கவித்திறன் என்று தீர்மானம் செய்துகொண்டார்கள்" எனப் பழைய பண்டிதத் தனத்தைப் பாரதி சாடினார்; புதிய நடையில், எளிய சொற்களில், உணர்ச்சி ஊட்டக்கூடிய பாடல்களைப் பாடினார்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சந்தம், பொதுமக்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோர் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோராகின்றார். ஓராண்டு படித்து நூற்பழக்கமுள்ள தமிழ்மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்" எனத் தம் 'பாஞ்சாலி சபதத்தின்' முன்னுரையில் கவிதை எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதே கருத்தினைப் பாரதிதாசனும், "தொடக்கப் படிப்பினரும் புரிந்துகொண்டார்கள் இச்செய்யுளின் பொருளை எனின் அதுதான் எனக்கு மகிழ்ச்சியூட்டுவது; எளிய நடை

ஒன்றாலேயே தமிழின் மேன்மையை - தமிழின் பயனை - தமிழர்க்கு ஆக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை" எனத் தம்முடைய 'பாண்டியன் பரிசு' நூல் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

இவற்றை மனத்தில் கொண்டு, பாட்டுக்குப் புதுமுறை கண்ட பாரதி, பாரதிதாசன் தொடங்கி (வ.உ.சி., செய்குதம்பிப் பாவலர் ஆகிய இருவர் தவிர) இன்றுவரை தோன்றிய நூறு கவிஞர்களைத் தேர்ந்தெடுத்து, கவிஞர் ஒருவர்க்கு ஒரு பாடலென நூறு பாடல்களைத் திரு.முத்துக்குமாரசாமி தொகுத்து நூலாய்த் தந்துள்ளார். இவ்வாறு ஒரு நூற்றாண்டுக் கவிதைகளின் போக்கையும் நோக்கையும் அறியும் வகையில் கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ள முதன் முயற்சி இதுவே எனலாம்.

இருபதாம் நூற்றாண்டுவரை, தமிழ் இலக்கண இலக்கியங்களில் நன்கு பயிற்சி பெற்றவரே கவிதை எழுத முடியும் என்னும் நிலை இருந்து வந்தது.

புவியினுக்கு அணியாய் ஆன்ற
    பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி,
    ஐந்திணை நெறிய ளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென்று
    ஒழுக்கமும் தழுவி

நடப்பதே சிறந்த கவிதை என்றார், கம்பர்.

எழுத்துஅசைகள் சீர்தளைகள் அடிதொடைகள் சிதையா
        திருக்க வேண்டும்; அப்பால்
    ஈரைம்பொ ருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்
        பினியசொற்க ளமைதல் வேண்டும்;
அழுத்தமிகு குறளினுக்கு ஒப்பாக வேபொருள்
        அடக்கமும் இருக்க வேண்டும்;
    அன்பான பாஇனம் இசைந்துவரல் வேண்டும்;முன்
        அலங்காரம் உற்ற துறையில்
பழுத்துஉளம் உவந்துஓசை உற்றுவரல் வேண்டும்;
        படிக்கும்இசை கூடல் வேண்டும்.

பாங்காய் இங்ஙனம் பாடுவதே பாடல் என்கிறது, குமரேச சதகம்.

தஞ்சைப் பெரிய கோவிலில் முன்னாளில் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் நடிக்கப்பெற்று வந்தது. அதில் ஒரு காட்சி.

சிங்கனும் சிங்கியும் பறவை வேட்டையாடுகின்றனர். வலையில் சிக்கிக்கொண்ட பறவைகள் விழிக்கின்றன. எப்படி?

இலக்கணம் தெரியாத ஒருவன் கவிதை எழுதிக் காட்ட, இலக்கணம் தெரிந்த ஒருவன், "இஃது எவ்விலக்கணப்படி எழுதப்பட்டது" எனக் கேட்க, அப்போது, இலக்கணம் தெரியாதவன் திருதிருவென விழிப்பது போல அப்பறவைகள் விழித்தனவாம்.

செந்தமிழ் இலக்கணம் தெரியான் கவிசொலத்
தேரும்அதன் குற்றம் தெரிந்தான் வினவுங்கால்
சிந்தை மயங்கி விழித்தல்போல் கண்ணியில்
சிக்கிக்கொண் டங்கிரு பக்கி விழிக்குது!

எனப் பாடுகிறார், அக்குறவஞ்சி ஆசிரியர்.

இப்போது இலக்கணம் ஒன்றுமட்டுமே கவிதை என்னும் நிலை மாறி, இலக்கணத்தோடு கவிதை வீச்சும் இருக்க வேண்டும் என்னும் நிலையில், கவிதைகள் பாடப்பட்டு வருகின்றன.

உள்ளத்து உள்ளது கவிதை – இன்ப
  உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
  தெரிந்து ரைப்பது கவிதை

எனத் தேசிகவிநாயகம் பிள்ளை கூறுவது போல உணர்ச்சியின் வெளிப்பாட்டை எளிய, தெளிந்த முறையில் கூறுவதே கவிதை என்னும் நிலை மலர்ந்துள்ளது.

ஆதலின், இருபதாம் நூற்றாண்டில் புலவர்கள் மட்டுமன்றி, தமிழறிந்து உணர்ச்சிகளைத் தக்கபடி வெளிப்படுத்தக் கூடியவர்கள் பெருங்கவிஞர்களாய் விளங்கியுள்ளனர்.

இன்றைய கவிதை நிலை

இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிஞர் அனைவருமே புலவர் வகுப்புப் படித்தவரல்லர். தொடக்கப்பள்ளிக் கல்வியிலிருந்து கல்லூரிக் கல்விவரை பல்வேறு பாடங்களைப் படித்துள்ளனர். பள்ளியே செல்லாது தனியே தமிழறிந்து பாடியவரும் உண்டு. இடைநிலைக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வியோடு நின்று, தம் சொந்த முயற்சியால் தமிழ் எம்.ஏ. பட்டம் பெற்றவர்களும் உண்டு. உணர்ச்சியும் உணர்த்தும் முறையுமே இன்றைய கவிதைகளின் அடிப்படை இலக்கணமாய் உள்ளன எனக் கூறின் அது மிகையன்று. இத்தொகுப்பில் உள்ள கவிஞர்களுள் கல்லூரிக்கல்வி பயின்றவர் 32 பேர். இவர்களுள் தமிழன்றி வணிகவியல், பொறியியல், தாவரவியல், வரலாறு எனப் பிறதுறைப் பாடங்கள் பயின்றவரும் அடங்குவர்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வியோடு நின்றவர் 12 பேர்

தொடக்கக்கல்வி மட்டுமே பெற்றவர் 8 பேர்

தனியே தமிழ் பயின்றவர் : 35 பேர்

இவர்கள் முற்றாய் இலக்கணத் தேர்ச்சி பெற்றவர்கள் எனக் கூறுதற்கியலாது. ஆயினும், முன்பு போல இலக்கண இறுக்கம் இல்லாததால் இவர்கள் கவிஞர்களாய் விளங்கி வருகின்றார்கள்.

தொழில்சார்ந்த கவிஞர்கள்

பண்டை நாள்களில் பல்வேறு தொழில் புரிந்தோரும் பெரும்புலவர்களாய், காப்பிய ஆசிரியர்களாய் இருந்துள்ளனர். மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், கணியன் பூங்குன்றனார் எனும் பெயர்கள் இதற்குச் சான்றாம். இன்றும் பல்வேறு தொழிலில் இருப்போர் கவிஞர்களாய் இருந்து வருவதை இந்நூல்வழி அறிகிறோம். நூலுள் உள்ள கவிஞர்களுள்,

பொறியியல் வல்லுநர்	1
வங்கிப் பணியாளர்	2
ஓவியர்	1
வழக்கறிஞர்	3
உயர்நிலைப் பள்ளி, கல்லூரி ஆசிரியர்	35
தமிழ் இலக்கியப் பணியில் ஈடுபட்டுள்ளோர்	12
திரைப்பட, நாடகக் கலைஞர்கள்	14
பல்வேறு அரசுப்பணியிலிருப்போர்	12
செய்தி மக்கள் தொடர்புப் பணியிலிருப்போர் -	3
பதிப்புத்துறையினர்	
விளம்பர நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனப் பணி புரிவோர்	
இதழாசிரியர் மற்றும் பிற துறையினர்	

(ஒரு துறையினைச் சார்ந்தவரே பிற துறையிலும் இருப்பதால் எண்ணிக்கை தோராயமானதேயாகும்.)

பல்வேறு அரசியல் கட்சிகளின் பெருந்தலைவர்களும் தொண்டர்களும் கவிஞர்களாய் விளங்கிடக் காண்கிறோம்.

காங்கிரஸ் கட்சி, திராவிடர் இயக்கம், பொதுவுடைமை இயக்கம், தமிழரசுக் கழகம் எனப் பல கட்சியினர் பாடல்கள்

இத்தொகுப்பில் உள்ளன; ஆயினும், பெரும்பாலானோர் திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்களாய் உள்ளனர்.

கவிஞர்கள் பெற்றுள்ள சிறப்புகள்

கவிஞர் நூற்றுவருள் மிகப்பலர் மைய அரசுப் பரிசுகள், தமிழ்நாடு அரசு வழங்கும் கலைமாமணி, பாவேந்தர் விருது, திரு.வி.க. விருது, திருவள்ளுவர் விருது, தில்லி சாகித்திய அகாதமி வழங்கும் படைப்பிலக்கியப் பரிசு போன்ற பெருமைமிகு விருதுகளையும் பரிசுகளையும் பெற்றவராய்த் திகழ்கின்றனர்.

மற்றவரும் பிற தமிழ்ச் சங்கங்கள், இலக்கிய அமைப்புகள், சமய நிறுவனங்கள் முதலியன அளிக்கும் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

பாரதத்தின் உயர்ந்த விருதுகளான பத்மஸ்ரீ, பத்மபூஷண் எனும் இரு பட்டங்களை டாக்டர் வா.செ. குழந்தைசாமியும், பத்மஸ்ரீ என்னும் பட்டத்தை வைரமுத்துவும் பெற்றுள்ளனர். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, கொத்தமங்கலம் சுப்பு, ம.ப.பெரியசாமித்தூரன் ஆகிய மூவரும் பத்மபூஷண் பட்டம் பெற்றுள்ளனர்.

சாகித்திய அகாதெமி பரிசினை 6 பேரும், தமிழ்நாட்டு அரசின் கலைமாமணி விருதினை 16 பேரும், தமிழ்நாட்டு அரசின் பாவேந்தர் விருது போன்றவற்றை 20க்கு மேற்பட்டவரும் பெற்றுள்ளனர்.

எந்த ஒரு பரிசோ, விருதோ பெறாத கவிஞர் இத்தொகுப்பில் இடம் பெறவில்லை. அரசவைக்கவிஞராய் இருந்த மூவர் பாடல்கள் உள்ளன.

இத்தொகுப்பில் தகுதியுடையவர்கள் பாடல்களே சேர்க்கப் பட்டுள்ளன என்பதற்கு இப்பரிசுகளும் விருதுகளும் சான்றாம்.

சிறப்புச் செய்திகள்

இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு கவிஞரும் பல சிறப்புகட்கு உரியவர். அவர்தம் பெருமை அளவிடற்கரியது. ஆயினும், ஒருவரை நினைத்தவுடனே முன்னர்த் தோன்றும் சிறப்புச் செய்தியை இங்கே நினைவுகூர்கிறோம்.

வ. உ. சிதம்பரம்

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஒரே சமயத்தில் இரு ஆயுள் தண்டனை பெற்றவர்.

செய்குதம்பிப் பாவலர்

சமயம் கடந்த சதாவதானி. வள்ளலாரின் பாடல்கள் திருஅருட்பா அன்று, மருட்பாவே என எதிர்ப்பு எழுந்த போது அஃதை எதிர்த்து வாதாடி அவை அருட்பாவே என வெற்றி கண்டவர்.

தேசிகவிநாயகம் பிள்ளை

கவிமணி என்று வழங்கப்படும் இவர் குழந்தைகட்கெனத் தமிழில் முதன் முதலில் பாடல்கள் எழுதியவர்.

சுப்பிரமணிய பாரதியார்

இருபதாம் நூற்றாண்டுக் கவிதையுலகில் பாடுபொருளிலும் பாடும் முறையிலும் ஒரு புதிய திருப்புமுனையைத் தந்தவர்.

இராமலிங்கம் பிள்ளை

அரசவைக்கவிஞராய் விளங்கியவர்.

பாரதிதாசன்

'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' எனக் குரல் கொடுத்தவர்; பகுத்தறிவுச் சிந்தனையாளர்.

பாஸ்கரதாஸ்

சுதந்தரப் பாடல்களைத் தாமே இயற்றித் தாமே மேடைதோறும் முழங்கியவர்.

மயிலை சிவமுத்து

'தமிழ் மாணவர் மன்றம்' உருவாகிட வித்திட்டவர்களுள் ஒருவர்.

சுத்தானந்த பாரதியார்

பல்கலை வல்லுநர்; 22 ஆண்டுகள் பேசா நோன்பிருந்தவர்.

இராய. சொக்கலிங்கம்

தமிழ்க்கடல் எனச் சிறப்பிக்கப்பட்டவர்; இராமாயணத்தில் மிகச்சிறந்த புலமை பெற்றவர்; சிறந்த பட்டிமன்ற நடுவராய் விளங்கியவர்.

உடுமலை நாராயணகவி

திரைப்பட இசை வல்லுநர்; பகுத்தறிவு சார்ந்த பாடல்கள் பலவற்றைப் புனைந்தவர்.

ந. பிச்சமூர்த்தி

புதுக்கவிதைத் தோற்றத்திற்கு முன்னோடிகளாய் இருந்தவர்களுள் முதலாமவர். இவருடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

ச. து. சுப்பிரமணிய யோகியார்

கூத்த நூலைப் பதிப்பித்தவர்; அகல்யாவைப் புதிய நோக்கில் படைத்தவர்; உமர்கயாம் பாடல்களைத் தமிழில் தந்துள்ளவர்.

அ. சீனிவாசராகவன்

ஆங்கிலப் புலமைக்காக இவர் போப்பாண்டவரிடம் தங்கப் பதக்கம் பெற்றவர்.

ப. ஜீவானந்தம்

பொதுவுடைமை இயக்கப் பெருந்தூண். இராமாயணம், பாரதி பாடல்கள் ஆகியவற்றைப் புதிய முறையில் நாடெங்கும் பரப்பியவர்.

ம. ப. பெரியசாமித்தூரன்

தமிழ்க்கலைக்களஞ்சியத்தின் பதிப்பாசிரியராய் இருந்து அரும்பணியாற்றியவர்.

புலவர் குழந்தை

இராமாயணத்திற்கு எதிர்க்காவியமாய் இராவண காவியம் எழுதியவர்.

கொத்தமங்கலம் சுப்பு

காந்தி மகான் கதையைக் கதாகாலட்சேபமாய் 2000க்கும் மேற்பட்ட மேடைகளில் பாடியிருப்பவர்.

கு. சா. கிருஷ்ணமூர்த்தி

சிறந்த நாடக, திரைப்படப் பாடலாசிரியர். தமிழ்நாடு எல்லைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்.

கா. மு. ஷெரீப்

பள்ளிப் படிப்பே இல்லாது, தம் முயற்சியால் கற்று, மிகச்சிறந்த கவிஞராய் உயர்ந்தவர். தேசியம், தமிழ், எல்லை மீட்பு ஆகியவற்றுக்கான பல போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்.

வாணிதாசன்

பாரதிதாசனை அடியொற்றிப் பாடல் புனைந்தவர். இயற்கையைப் பாடுவதில் திறமை பெற்றவர்.

கம்பதாசன்

சிறந்த திரைப்படப் பாடலாசிரியர்; பெரும் புலவர்களால் பாராட்டப்பெற்றவர். வறுமை காரணமாய் வெளியுலகம் அறிய வேண்டிய அளவுக்கு அறிந்துகொள்ள முடியாத நிலையில் வாழ்ந்து மறைந்தவர்.

தே. ப. பெருமாள்

கவிதை, நாவல், இலக்கியம், வரலாறு என எழுபத்தைந்து படைப்புகள் தந்து பெருமை பெற்ற முதுபெருங்கவிஞர். நாட்டு விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்றவர்.

கலைவாணன்

1942 இல் காந்தியார் வேண்டுகோளுக்கிணங்கத் தாம் அணிந்திருந்த அந்நிய ஆடையைத் தீயிட்டுப் பொசுக்கிவிட்டு, அன்றிலிருந்து சட்டை அணியாது கதர் வேட்டியினையும் துண்டினையும் மட்டுமே அணிந்து வந்தவர்.

மருதகாசி

அரிய திரைப்படப் பாடல்கள் பலவற்றை எழுதியிருப்பவர். ஐம்பதுகளில் திரைப்படத் துறையில் கோலோச்சிய பெயர், மருதகாசி.

அரங்க. சீனிவாசன்

இரண்டாம் உலகப்போரின்போது உயிரைப் பணயம் வைத்து பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு நடந்தே வந்தவர். வறுமை வாட்டினும் தம் முயற்சியால் கற்று, காப்பியக் கவிஞர் எனப் பாராட்டுமளவுக்கு உயர்ந்தவர்.

மீ. ப. சோமசுந்தரம்

இராசாசியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். பல சாகித்தியங்கள் புனைந்தவர். இசை வல்லுநர். வானொலியில் பல்லாண்டு காலம் பணியாற்றியவர்.

கு. மா. பாலசுப்பிரமணியம்

திரைப்படப் பாடலாசிரியர். உரையாடலும் எழுதியுள்ளார். தமிழ்நாட்டின் வடக்கு, தெற்கு எல்லைப் போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

முடியரசன்

தன்மான இயக்கத் தலைசிறந்த கவிஞர்களுள் முதன்மையானவர். கலப்புத் திருமணம் செய்துகொண்டு தம் துணைவியாருடன் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்.

கே. சி. எஸ். அருணாசலம்

பொதுவுடைமைக் கவிஞர்களுள் புகழ் பெற்று விளங்கு பவர்களுள் ஒருவர். மக்கள் மனத்தைக் கவர்ந்த பல திரைப்படப் பாடல்களை எழுதியவர்.

கவிதை எனது கைவாள் – மார்பில்
கவசம் எனக்கு வாய்மை
புவியில் தீமைகள் வீழ – நான்
போர்செயும் ஓர்படை வீரன்

எனத் தம்மைக் கவிதை மறவராய்க் காட்டியதோடு மெய்ப்பித்தும் இருப்பவர்.

சுரதா

பாரதிதாசன் பரம்பரையினர். பாரதிதாசனிடம் கொண்ட பற்றால் தம் பெயரைச் சுப்புரத்தினதாசன் என மாற்றிக் கொண்டவர். அதன் சுருக்கமே சுரதா என்பது. உவமை சொல்வதில் இவருக்கு இணை இவரே. ஆதலின், இவர், 'உவமைக் கவிஞர்' என்றே வழங்கப்பெற்று வருகிறார்.

எஸ். டி. சுந்தரம்

தேசிய விடுதலைப் போராட்ட வீரர். திரைப்படப் பாடலாசிரியர். விடுதலை வேட்கையை ஊட்டும் இவருடைய 'கவியின் கனவு' என்ற நாடகம் மிகவும் பெயர் பெற்றது. தமிழ்நாட்டில் 12000க்கு மேற்பட்ட மேடைகளில் நடிக்கப்பட்ட அந்நாடகத்தைக் காணத் தனி இரயில் வண்டிகளே விடப்பட்டன.

ஹா. கி. வாலம்

வட மாநிலத் தமிழ்ச் சங்கங்களில் இடம் பெற்று அங்கெல்லாம் அருந்தமிழ்ப்பணி ஆற்றியுள்ளார். வட மொழியி லுள்ள பல துதி நூல்களைத் தமிழில் தந்துள்ளார்.

புத்தனேரி சுப்பிரமணியம்

நாட்டிய நாடக ஆசிரியர். டி.கே.எஸ். சகோதரர்கள், நவாப் ராஜமாணிக்கம், என்.எஸ். கிருஷ்ணன் ஆகியோர் நாடகங் களுக்குப் பாடல்கள் பல இயற்றித் தந்தவர்.

அழ. வள்ளியப்பா

தமிழ்நாட்டில் குழந்தைக்கவிதை, குழந்தை இலக்கியம் உருவாகி வளர்வதற்கு முதற்காரணமாயிருந்தவர். முற்றிலும் குழந்தைகட்கெனவே எழுதிய முதல் எழுத்தாளர்.

தொ. மு. சி. ரகுநாதன்

பொதுவுடைமையாளர். பல, உருசிய நூல்களைத் தமிழாக்கம் செய்துள்ளார். பல ஒப்பாய்வு நூல்களை எழுதியிருப்பவர்.

தமிழ்ஒளி

பாட்டாளிகள் உயர்வுக்குக் கவிதை எழுதியவர். மாதவியைப் புதிய நோக்கில் கண்டு, மாதவி காவியம் பாடியுள்ளார். கம்பனை ஒத்துச் சந்தக் கவிகள் பாடுவதில் சமர்த்தர்.

சாமி. பழநியப்பன்

பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர். தவத்திரு குன்றக்குடி அடிகளாரிடத்தில் நேர்முக உதவியாளராய்ப் பணியாற்றியவர்.

சௌந்தரா கைலாசம்

கொங்கு நாட்டில் புகழ் பூத்த மரபில் தோன்றியவர். இனிய குரல் வளத்தாலும், கருத்துச் செறிவாலும், தம் பேச்சாலும், கவிதைகளாலும் அவையைக் கட்டிப்போடும் ஆற்றல் மிக்கவர். சிறந்த இறை பற்றாளர்.

கண்ணதாசன்

திரைப்படப்பாடல் துறையில் இமயத்தின் உச்சியில் நிற்பவர். அரசவைக்கவிஞராய்த் திகழ்ந்தவர். உள்ளத்தில் பட்டதை ஒளிக்காமல் கூறும் திறந்த மனத்தினர்.

நா. ரா. நாச்சியப்பன்

பகுத்தறிவு இயக்கக் கவிஞர். சிறுவர் கவிதை நூல்கள் பல எழுதியவர். பர்மாவிற்குத் தந்தை பெரியாரை அழைத்துப் பேசச் செய்தவர்.

மா. செங்குட்டுவன்

கவிக்கொண்டல் எனும் சிறப்புப் பட்டம் பெற்றவர். கொண்டல் போலவே கவிதைமழை கொட்ட வல்லவர். வெளிநாடுகள் பல சென்று இலக்கிய விழாக்களில் பங்கு கொண்டவர். திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி ஏடான 'நம் நாட்டில்' பணியாற்றியவர்.

சுப்பு ஆறுமுகம்

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுடன் நெருங்கிப் பழகியவர். அவர் வழி நின்று, இன்று தமிழ்நாடு முழுதும் வில்லிசைப்பாடல் இசைத்து வருபவர். வில்லுப்பாட்டு என்று சொன்னாலே சுப்பு ஆறுமுகம் பெயரே முன்நிற்கும்.

வா. செ. குழந்தைசாமி

தலைசிறந்த அறிவியல் அறிஞர். குலோத்துங்கன் எனும் புனைபெயரில் அறிவியல் சிந்தனையை அருந்தமிழ்க் கவிதைகளில் சொல்லி வருகிறார். அறிவியல் கவிஞர் இவர் ஒருவரே எனச் சொல்லத்தக்க நிலையில் இவர் கவிதைகள் உயர்ந்து நிற்கின்றன. தமிழ் எழுத்துச் சீரமைப்புப்பற்றியும் இடையறாது வலியுறுத்தி வருகிறார்.

பெரி. சிவனடியான்

எண்ணற்ற கவியரங்குகளில் பங்கு கொண்டவர். கவிஞர் கண்ணதாசனின் நெருங்கிய அன்புக்கு உரியவர்.

> சிவனடியான் சிவனடியான் என்கின் றாரே
> சிவனுக்கோ இவனடியான்? இல்லை, இல்லை;
> இவன்பாடும் பாடல்களைச் சிவனும் கேட்பான்
> என்பதனால் இவனுக்கே சிவன்அடியான்

எனக் கண்ணதாசன் இவரைப் பாராட்டியுள்ளார்.

தி. முருகுசுந்தரம்

மரபுக் கவிதையையும் புதுக் கவிதையையும் எல்லோரும் ஒருசேர மதிக்கும் வகையில் எழுதும் ஆற்றல் பெற்றவர். பாவேந்தருடன் நெருங்கிப் பழகியவர். 'பாவேந்தர் நினைவுகள்' எனும் நூலில் பாவேந்தர்பற்றிய பல அரிய செய்திகளைத் தந்துள்ளார்.

தெசிணி

நாற்பது ஆண்டுகட்கு மேலாய், தமிழில் தனிக் கவிதை இதழை நடத்தி வருபவர். மொழியாக்கத்தில் வல்லவர். சட்ட நூல்கள் பலவற்றைத் தமிழில் பெயர்த்துள்ள சிறப்புக்குரியவர்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பட்டுக்கோட்டை, பாட்டாளிகளின் கவிஞர். திரைப்படப் பாடல்களில் பட்டுக்கோட்டையார் பாடல்களுக்கு ஒரு தனித்த சிறப்புண்டு. எதை எழுதினாலும் சிலர் பிள்ளையார் சுழி போடுவது

போல, 'பாரதிதாசன் துணை' என மேலே எழுதிய பிறகே எழுதத் தொடங்குவார்.

புவியரசு

வானம்பாடி கவிதை இயக்கத்தை வளர்த்தவர்களுள் புவியரசுக்கு முக்கியப் பங்குண்டு. பல நாடக நூல்களைப் படைத்துள்ளவர். இவருடைய 'மனிதன்' நாடகம் 19 மொழிகளில் தயாரிக்கப்பட்டு வானொலி நிலையங்களில் ஒலிபரப்புச் செய்யப்பட்டுள்ளது.

த. கோவேந்தன்

'கோவேந்தன் பாடிக் குவிக்கின்றான். நாளடைவில் பாவேந்தன் ஆய்விடுவான் பார்' எனப் பாவேந்தரால் பாராட்டப் பெற்றவர். நூற்றுக்கணக்கான உருசியக் கவிதைகளைத் தமிழாக்கம் செய்துள்ளார்.

பூவண்ணன்

குழந்தை இலக்கிய வளர்ச்சியில் இவர் பங்கு குறிப்பிடத்தக்கது. தலைசிறந்த குழந்தை எழுத்தாளர் எனும் பாராட்டைப் பெற்றவர்.

சிறுவர் இலக்கியக் களஞ்சியம், குழந்தை இலக்கிய வரலாறு எனும் நூல்கள் குறிப்பிடத்தக்க இவர் சாதனைகளாகும்.

பூவை. அமுதன்

இசைப்பாடலாசிரியர். சிறுகதை, கட்டுரை, நாவல் எனப் பல்துறை எழுத்தாளர். 600க்கு மேற்பட்ட இவருடைய பாடல்கள் ஒலி நாடாக்களாய் வெளிவந்துள்ளன.

மீனவன்

இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு தந்த பொற்பதக்கம், தமிழ் வளர்ச்சி இயக்ககப் பரிசு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பரிசு போன்ற பல பரிசுகளைப் பெற்றுப் பெருமையுற்றவர்.

பெருஞ்சித்திரனார்

தனித்தமிழ் இயக்கத்தின் தலைசிறந்த தலைவர்களுள் ஒருவர். பாவாணர் வழிநின்று தனித் தமிழிலேயே எழுதியும் பேசியும் வந்தவர்.

'உலகத் தமிழ்க் கழகம்' எனும் ஓர் அமைப்பை உருவாக்கியவர். எவருக்கும் எதற்கும் அஞ்சாமல் தம் கருத்தை உரைப்பவர். அதனால் பலமுறை சிறையும் சென்றவர்.

தமிழன்பன்

புதுக்கவிஞர்களுள் முன்னணியில் நிற்பவருள் முதல் வரிசையிலும் நிற்பவர், ஈரோடு தமிழன்பன். மரபுவழி நின்று கவிதை எழுதத் தொடங்கிய இவர் இன்று புதுக்கவிதை உலகில் முடிசூடா மன்னராய்த் திகழ்ந்து வருகிறார். இவருடைய நூல்கள் ஒவ்வொன்றும் ஒரு புதிய உத்தியைக்கொண்டு சிறந்திருக்கும்.

புதுக்கவிதையின் வளர்ச்சியாய் விளங்கும் ஹைக்கூ, சென்ரியு ஆகிய கவிதைகளுக்கும் வளம் சேர்த்திருக்கிறார். தமிழில் முதன்முதலில் சென்ரியு கவிதைகள் எழுதியிருப்பவர் இவரே ஆவார்.

சக்திக்கனல்

கொங்கு நாட்டு நாட்டுப்புற இலக்கியமாய் விளங்கிவரும் அண்ணன்மார் சுவாமி கதையை அச்சில் பதிப்பித்த சாதனையாளர்.

திருச்சி பாரதன்

நல்ல இசைக்கலைஞர். சிறந்த குழந்தை எழுத்தாளரும் ஆவார். நாட்டிய நாடகங்கள் பல எழுதியுள்ளார்.

நெல்லை ஆ. கணபதி

கவிதை, கதை, கட்டுரை, நாடகம் எனப் பன்முக எழுத்தாற்றல் மிக்கவர். பரிசுகள் பல பெற்றவர். நகைச்சுவை மிகுந்த படைப்புகள் அளிப்பதில் வல்லவர். இவர்தம் குடும்பம் ஓர் இனிய கவிதைக் குடும்பம்.

வா. மு. சேதுராமன்

இவர் நம் நாட்டில் இருப்பதைவிடத் தமிழ்ப்பணிக்காக அயல்நாடுகளில் இருக்கும் நாள்களே அதிகம்; உலகக் கவிஞர் மாநாடுகள் அனைத்திலும் தவறாது கலந்துகொண்டு கவிதை பாடும் தமிழர் இவர் ஒருவரே எனலாம்.

பூவை. செங்குட்டுவன்

இறைநிலைக் கவிதைகள் எண்ணற்றவை பாடியுள்ளார். இவற்றுள் 3000க்கு மேற்பட்ட பாடல்கள் இசையமைக்கப்பெற்றுச் சிறந்த பாடகர்களால் பாடப்பெற்றுக் குறுந்தகடாகவும் ஒலி நாடாவாகவும் வெளிவந்துள்ளன.

கா. வேழவேந்தன்

சட்டப்பேரவை உறுப்பினராயும் அமைச்சராயும் பணியாற்றிய இவர் சிறந்த கவிஞராயும் விளங்குகிறார். மு.வ., அண்ணா, கலைஞர் போன்ற அறிஞர்கள் இவர்தம் கவித்திறனைப் பாராட்டிப் போற்றியுள்ளனர்.

அரு. சோமசுந்தரன்

சேக்ஸ்பியர் நாடகங்கள் பன்னிரண்டைத் தமிழில் பெயர்த்துள்ளார். நூற்றுக்கணக்கான கவியரங்குகளில் பங்கு பெற்றவர்; தலைமையேற்றும் சிறப்பித்தவர்.

சிற்பி

வானம்பாடி இயக்கத்தின் தோற்றத்திற்குக் காரணமாய் அமைந்தவர்களுள் முக்கியமானவர். மலையாளம் நன்கு அறிந்தவர். மலையாளக் கவிதைகள் மற்றும் பிற படைப்புகள் பலவற்றைத் தமிழுக்குக் கொண்டுவந்தவர். கவிதைக்கென ஒரு முறையும், மொழிபெயர்ப்புக்கென ஒரு முறையும் ஆக இருமுறை சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற சிறப்புக்குரியவர்.

சவகர்லால்

சிறந்த கவியரங்கக் கவிஞர், பட்டிமன்றப் பேச்சாளர்; பொற்கிழிக் கவிஞர் எனப் போற்றப்பெறுபவர்.

தமிழன்பன் ப. முத்துசாமி

தலைமையாசிரியராய்ப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் சிறந்த தமிழ்க்கவிஞராய் விளங்கி வருகிறார். ஏறத்தாழ வெளிநாட்டுப் பெருங்கவிஞர் அனைவரின் பாடல்களையும் தமிழில் பெயர்த்துள்ளார். இவர் கை எப்போதும் கவிதை எழுதிக் கொண்டே இருக்கும் எனச் சொல்லுமளவுக்கு இடையீடின்றிக் கவிதை எழுதி வருபவர்.

வரத. கோவிந்தராசன்

பாவலர் வட்டம் எனும் இலக்கிய அமைப்பை உருவாக்கித் தமிழ்ப்பணியாற்றி வருகிறார். கவியரங்குகளில் பாடிப் புகழ் பெற்றவர்.

அர. சிங்காரவடிவேலன்

சிறந்த திறனாய்வாளர். முன்னாள் தமிழக ஆளுநர் கே. கே. ஷாவிற்கு மேடை மொழிபெயர்ப்பாளராய்த் தமிழக அரசால் நியமிக்கப்பெற்றவர்.

அப்துல் ரகுமான்

புதுக்கவிதை உலகின் ஈடு இணையற்ற கவிஞர். இவருடைய பாட்டரங்கப் பாடல்களில் மயங்காதார் எவருமிலர். பாடற் பொருள், படிக்கும் முறை ஆகிய இரண்டாலும் தம் கவிதைகளை மேம்படுத்துபவர். உலகெங்கும் அறிந்த உயர் தமிழ்க் கவிஞர்.

வெற்றிபல கண்டு நான்
விருதுபெற வரும்போது
வெகுமானம் என்ன
வேண்டும் எனக் கேட்டால்
அப்துல் ரகுமானைத் தருக என்பேன்

என டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

மனசை ப. கீரன்

கவியரங்கக் கவிஞர். வானொலியில் நூற்றுக்கணக்கான கவிதைகளைப் படித்தவர். வெளிநாடுகள் பல சென்று பொழிவுகள் நிகழ்த்தியவர்.

மீரா

மரபிலே நின்று, பின் புதுக்கவிதையுலகின் பிதாமகனாய்த் திகழ்ந்தவர். பொதுவுடைமைக் கொள்கைப் பிடிப்பும், பாவேந்தர் பாட்டின் வீச்சும் கொண்ட பாடல்களை இயற்றியவர்.

'அகரம் வெளியீடு' எனப் பதிப்பகம் தொடங்கி, நூல் அமைப்பின் நேர்த்தியை உயர்த்தியவர்.

பதிப்பகப் பணியில் தம்மை முற்றிலும் ஈடுபடுத்திக் கொண்டதால் பின்னாளில் அதிகம் இவர் எழுதவில்லை. அது கவிதை உலகிற்குப் பேரிழப்பு.

ஞானக்கூத்தன்

கருத்தரங்குகள் பலவற்றில் பங்கேற்றவர்; கவிதைக்கலை தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் நல்கியவர். கவிஞர் கட்டுரையாசிரியர்.

ஆற்றலரசு

திரைப்படப் பாடலாசிரியர். கவியரங்கம் பல கண்டவர். 'நிலா நானூறு' எனும் அழகிய நூலைத் தொகுத்தவர்; அதனால் 'ஒன்பதாம் தொகையார்' எனப் பாராட்டப்பெற்றவர்.

அமுதபாரதி (அமுதோன்)

கண்கவர் ஓவியங்கள் வரையும் இவர் சிறந்த கவிஞராயும் திகழ்கிறார். தமிழில் முதல் ஹைக்கூ நூலைத் தந்த பெருமையாளர்.

நூலின் முகப்போவியத்தைப் பார்க்கும் போதே இதை அமுதோன் வரைந்துள்ளார் எனச் சொல்லுமளவுக்கு இவரின் படமும் எழுத்தும் தனிச் சிறப்புக் கொண்டவை.

இரண்டாம், ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்களில் இவருடைய ஓவியங்களைக் கண்டு வியக்காதார் இலர்.

ஞானச்செல்வன்

பட்டிமன்றம், வழக்காடு மன்றம் ஆகியவற்றில், தம் சொற்றிறமையை நிலை நாட்டியவர். இலக்கியப் பேருரை, தொடர் விரிவுரை எனப் பல்லாயிரம் மேடைகளில் தமிழ் முழக்கம் செய்தவர்.

பொன்னடியான்

'முல்லைச்சரம்' எனும் கவிதை இதழை 35 ஆண்டுகள் தொடர்ந்து தொய்விலாது நடத்தி வருபவர். பாவேந்தரின் பாராட்டுக்குரியவராயும், அவரது நெஞ்சிற்கினியரராயும் நெடுநாள் பழகி வந்தவர். கடற்கரைக் கவியரங்கத்தைத் திங்கள்தோறும் நடத்தி ஆயிரக்கணக்கான புதிய கவிஞர்கள் உருவாக வழிவகுத்தவர்.

செல்ல கணபதி

குழந்தைக்கவிதை இயக்கத் தளபதிகளுள் ஒருவர். இவருடைய சிறுவர் பாடல்கள் ஒலிப்பேழைகளாகவும் குறுவட்டு களாகவும் வெளிவந்துள்ளன.

குழந்தை இலக்கிய வளர்ச்சியில் இவருக்குத் தனித்த ஒரு பங்குண்டு.

பல்லவன்

சிறந்த மரபுக்கவிஞர். கனல் தெறிக்கும் சொற்களைக் கையாண்டு நெஞ்சில் எரிமலையை ஏற்றும் சக்தி வாய்ந்தவர்.

திருக்கழுக்குன்றத்தில் முத்தமிழ் இலக்கிய மன்றத்தின் வாயிலாய்த் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அறிஞர்களையும் அழைத்துப் பேசச் செய்த பெருமைக்குரியவர்.

தமிழ்நாடன்

தொல்பொருள் ஆய்வில் ஆர்வம் கொண்டவர். வானம்பாடி இயக்கத்தின் முக்கியக் கவிஞராய் விளங்கியவர். மானுடம் பாடுதல் இவரது முக்கியக் குறிக்கோள்.

முத்துலிங்கம்

அரசவைக் கவிஞராய் விளங்கியவர். சிறந்த மரபுக் கவிஞர். திரைப்படப்பாடல் துறையில் வெற்றிக்கொடி நாட்டியவர்.

உதயை மு. வீரையன்

தமிழ் இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் பங்குகொண்டு நூல்கள் பல படைத்தவர்.

ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

மாணவர்க்கான நாடகங்களையும் கவிதைகளையும் சிறு கதைகளையும் பெருமளவில் படைத்துள்ளார். தமிழில் வெளிவந்துள்ள முதல் சிறுவர் கவிதை நாடகம் இவரால் எழுதப்பெற்றது.

குருவிக்கரம்பை சண்முகம்

தமிழ்ப்பேராசிரியரான இவர் சிறந்த திரைப்படப் பாடலாசிரியராகவும் விளங்கி வருகிறார். இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது நடைபெற்ற 'புகாரில் ஒருநாள்' கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றுத் தங்கப்பதக்கம் பெற்றார்.

ம. வே. பசுபதி

பண்டைய இலக்கிய மரபில் கவிதை நூல்கள் பல படைத்துள்ளார். பட்டிமண்டபம், வழக்காடு மன்றம் ஆகியவற்றில் பாங்கறிந்து வாதிட வல்லவர்.

நா. காமராசன்

'கறுப்பு மலர்கள்' எனும் நூலின் வாயிலாய் புதுக் கவிதையுலகில் பெரும்புரட்சியை ஏற்படுத்தியவர்.

நாங்கள் நிர்வாணத்தை விற்கிறோம்
ஆடைகள் வாங்குவதற்காக

என்பதை விலைமகளிர் கூற்றாக்கி அவர்களைக் கேவலமாய் நினைப்பதற்குப் பதிலாய்க் கண்ணீரை வரவழைத்தார்.

சொ. சொ. மீ. சுந்தரம்

சிறந்த நகைச்சுவை வாயிலாய்க் கவியரங்குகளில் கைதட்டலை மிகுதியாய்ப் பெறக்கூடிய ஆற்றலாளர். 'சொல்லுக்குச் சொல் மீறும் சுந்தரம்' எனக் கண்ணதாசனால் பாராட்டப்பெற்றவர். ஆன்மிகப் பேருரை ஆற்றுவதில் ஆர்வம் கொண்டவர்.

பொன். செல்வகணபதி

வெற்றுச்சொல் ஏதுமின்றிச் சொல்லுக்குச் சொல் சுவையும் உயர்வும் கொட்டும் பாடல்கள் எழுதுவதில் வல்லவர். இவருடைய கவியரங்கப் பாடல்களைக் கேட்பதே ஒரு தனி மகிழ்ச்சி. சமூக அவலங்களைச் சுட்டுவது இவருடைய கவிதைகளின் பொது அமிசமாகும்.

இன்குலாப்

இன்றைய இளம் தலைமுறையினரால் பெரிதும் ஏத்திப் போற்றப்பெறும் நம்பிக்கை நட்சத்திரம். மார்க்சியச் சிந்தனையில் பெரிதும் ஈடுபாடுடையவர்.

மு. மேத்தா

புதுக்கவிதை முன்னோடிகளுள் ஒருவர். இவருடைய 'கண்ணீர்ப் பூக்களைப்' படிக்காதவர் இலர் என்றே கூறலாம். திரைப்படப் பாடல்களை எழுதுவதிலும் வெற்றிக்கனி பறித்தவர்.

அரசு மணிமேகலை

பெண்கள் முன்னேற்றம்பற்றிய சிந்தனையோடு நூல்களை எழுதியவர். கவியரங்குகளிலும் பட்டிமன்றங்களிலும் தம் முத்திரையைப் பதித்தவர்.

இளந்தேவன்

பல மொழிகளில் புலமை உள்ளவர். மடைதிறந்த வெள்ளமெனப் பீறிட்டோடும் கவிதைகள் பாட வல்லவர். முதன் முதலில் கவிதைப் பட்டிமண்டபம் நடத்தியவர்.

தாராபாரதி

"வெறுங்கை என்பது மூடத்தனம்; விரல்கள் பத்தும் மூலதனம்" எனும் இரு பாடலடிகள் வாயிலாய், இரண்டடிகளால் புகழ் பெற்ற திருக்குறள் போல உலகப்புகழ் பெற்ற இக்கவிஞர், பாரதி, பாரதிதாசன் வழி நின்று எழுதியவர். 'எட்டயபுரத்துக் கவிஞன் தன் எழுதுகோலில் விட்டு வைத்த மையின் மிச்சத்தை

என் எழுதுகோலில் நிரப்பிக்கொண்டு எழுதுகிறேன்' எனத் தம் எழுத்துப்பற்றிய தன்னம்பிக்கையோடு எழுதியவர். அவர் விட்டுச் சென்ற மை கொண்டு எழுத இளைய தலைமுறையினர் முன்வர வேண்டும்.

ஏர்வாடி இராதாகிருஷ்ணன்

'கவிதை உறவு' எனும் இலக்கிய இதழ் நடத்துவதன் வாயிலாய் எண்ணற்ற எழுத்தாளர்களை உருவாக்கியுள்ளார். கவியரங்கு, பட்டிமன்றம், இலக்கிய மேடை ஆகியன இவர் எழுத்தாலும் பேச்சாலும் பொலிவு பெறுகின்றன.

குழ. கதிரேசன்

குழந்தை இலக்கிய எழுத்தாளர். மழலைகட்கெனவே பல பாடல் நூல்களை எழுதியிருப்பவர். குழந்தையாகவே மாறிக் குழந்தை நடையில் பாடல்கள் எழுதும் ஆற்றல் பெற்றவர்.

ஜீவபாரதி

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்கள் முழுவதையும் தொகுத்துத் தந்திருப்பவர். பட்டுக்கோட்டையில் கவிஞரின் முழு உருவச்சிலை அமைய முன்நின்று பாடுபட்டவர். தேசியப் போராட்டங்களிலும், பிற நிலைகளிலும் முக்கியப் பங்கேற்றவர்கள் வரலாறுகளை முயன்று தேடி, மக்கள் இதுவரை அறியாதிருந்த பல அரிய செய்திகளை எழுதி, நூல்களாக்கி வருகிறார்.

கருமலைத் தமிழாழன்

கவியரங்கம், பட்டிமன்றம் ஆகியவற்றுக்குத் தம் அழகு தமிழில் அணிசேர்த்து வருபவர். பல்வேறு இலக்கிய அமைப்புகளில் பங்கு கொண்டு அவற்றின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்று வருபவர்.

தேனிரா. பாண்டியன்

'தும்பை' எனும் கவிதை இதழை நடத்தி வருகிறார். தாய்மொழி தெலுங்கு, தந்தை மொழி கன்னடம் என்றாலும் தமிழின்மீது கொண்ட பற்றால் சிறந்த கவிஞராய் விளங்கி வருகிறார்.

வைரமுத்து

பாரதத்தின் உயர்ந்த விருதான பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர். இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை ஐந்து

முறை பெற்றுள்ளவர். 'கவிராஜன் கதை' எனப் புதுக்கவிதையில் பாரதிபற்றிக் காப்பியம் எழுதியுள்ளவர். உலகெங்கும் கணந்தோறும் செய்தி ஊடகங்கள்மூலம் இவர் பாட்டுகள் ஒலித்துக் கொண்டே இருக்கும் சிறப்பினைப் பெற்றவர்.

மோசசு மைக்கேல் பாரடே

இறைபணி, தமிழ்ப்பணி, கல்விப்பணி ஆகியவற்றில் தம்மை முற்றிலுமாய் ஈடுபடுத்திக்கொண்டிருப்பவர். பல கிறித்தவ இலக்கியங்களைப் படைத்தும் பதிப்பித்தும் தமிழுக்குத் தந்திருப்பவர். சமய வேறுபாடு கருதாது சமரச நோக்குடன் தொண்டாற்றி வருபவர்.

மரபின் மைந்தன்

தன்னம்பிக்கை ஊட்டும் எழுத்துகளை நாட்டுக்குத் தந்து வரும் நற்றமிழ்க்கவிஞர். 1995இல் இவரது கருத்துருவாக்கத்தில் உருவாக்கப்பட்ட எய்ட்ஸ் ஒழிப்பு விளம்பரம் தேசிய அளவில் வெள்ளிப் பதக்கம் பெற்றது.

அ. வெண்ணிலா

பெண்ணியச் சிந்தனையாளர். பெண்களுக்கு இழைக்கப் படும் கொடுமைகளை, அநீதிகளை, அவலங்களை எங்கும் எவர்க்கும் எந்நிலையிலும் அஞ்சாமல் எடுத்துரைப்பவர். இன்றைய பெண்ணியச் சிந்தனையாளர்களுள் தனித்துக் குறிப்பிடத்தக்க தன்மையாளர்.

வடிவம் – பாடுபொருள் – உத்தி

கவிதை காலந்தோறும் அதன் வடிவம், உள்ளடக்கம், பாடுபொருள் ஆகியவற்றில் மாற்றம் பெற்று வருகிறது. இலக்கியம் மேலும் மேலும் வளர விழைகிறது. அதனால் திருந்திய வடிவம் பெறமுயல்கிறது, முந்துகிறது, புதுமைப்படுத்திக்கொள்ள முனைகிறது. எனவே, காலந்தோறும் அதன் வடிவில் புதுமையும் மாற்றமும் ஏற்படுகின்றன. குறிப்பிட்ட எந்தக் கவிதை வடிவமும் எல்லாக் காலத்திலும் செல்வாக்குப் பெற்று ஆட்சி செலுத்த முடியாது. ஏனெனில், கவிதைப்பொருள் அந்தந்தக் காலத்தை யொட்டி வடிவத்தை அமைத்துக்கொள்கிறது.

வடிவு என்பது கருத்தைச் சுமந்து செல்லும் ஊர்தியே யாதலின் கருத்து மாற்றத்திற்கேற்ப வடிவமும் மாறுகிறது. பொருளும் வடிவமும், உயிரும் உடலும் போன்றவை. ஒன்றை விட்டு ஒன்று தனித்து இயங்காதவையாய் அமைகின்றன.

கவிஞனின் அனுபவம் அனைத்தையும் ஒருங்கிணைத்து முழுமை யாக்கிக் காட்டுவதே அவனுடைய கவிதை வடிவம் ஆகும்.

தமிழ்க்கவிதை உலகைப் பொறுத்தவரையில் சங்க இலக்கியங்கள் பெரிதும் ஆசிரியப்பாக்களால் அமைக்கப்பெற்றன. அகமும் புறமும் பாடுபொருளாயிருந்தன. அப்பாடல்கள் பெரும் பாலும் தன்னுணர்ச்சியை வெளிப்படுத்துவனவாய் மட்டுமே அமைந்தன. ஒவ்வொரு சிறுசிறு நிகழ்வும் கவிஞனிடம் பாட்டாய் வெளிப்பட்டன. அவற்றை நறுக்குத் தெறித்தாற்போல் சொல்ல அகவற்பா துணைநின்றது.

கீழ்க்கணக்கு நூல்கள் சில நீதியைப் புகட்டுவதற்கென்றே பாடப்பட்டுள்ளன. அகவற்பாவேயன்றி வெண்பாவும் குறள் வெண்பாவும் நீதி சொல்வதற்கேற்ற யாப்பாகக் கையாளப் பட்டதைக் காணமுடிகிறது.

சங்கம் மருவிய காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான பெருங்காப்பியங்கள் பெரிதும் ஆசிரியப்பாவிலேயே அமைந்துள்ளன. தொடர்நிலைச் செய்யுளால் இக்காவியங்கள் இயலுகின்றன. தனித்தனி ஆசிரியப்பா ஒரு பெருங்காப் பியத்தையே நடத்திச் செல்லக்கூடிய தொடர்நிலைச் செய்யுளாய் வளர்ச்சி பெற்றது.

உணர்ச்சி அல்லது சூழ்நிலை வேறுபாட்டை உணர்த்த இவ்வாசிரியப்பாவின் தளைகளை மாற்றி மாற்றி உணர்ச்சிக்குத் தக அமைக்கின்றனர். இசை தழுவிய எண்ணங்கள் திசை திரும்பும் போது முன்னதை விடுத்துத் தேவையான ஒலிநயப் பாடல்களைக் கையாளும் உத்தியை இளங்கோ அமைத்துள்ளார். வரிப்பாடல்கள், குரவைப் பாடல்கள் முதலியன சான்றாம்.

பின்னர்த் தோன்றிய கதைக்காப்பியமாம் சீவக சிந்தாமணி முழுவதையும் விருத்த யாப்பில் பாடி ஒரு புதுமையை ஏற்படுத்தினார், திருத்தக்கதேவர். இக்காப்பியம் பண்டிருந்து பயின்று வந்த யாப்போசையினின்று வேறுபட்டு ஒலித்ததாலும், அதன் ஒலி நயமும் சந்த இசையும் மக்களிடையே ஒரு பிடிப்பை ஏற்படுத்தின. இதனால் காப்பியப் புலவர்கள் இவ்விருத்தப் பாக்களாலேயே தங்கள் படைப்புகளைப் படைக்கலாயினர். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலார் காலம்வரை தமிழ்க்கவிதைப் படைப்புகள் பெரும்பாலும் விருத்தப் பாக்களிலேயே அமைந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குச் சற்று முற்பட்ட கால கட்டத்தில் வண்ணம், நொண்டி, சிந்து, கும்மி முதலிய சிற்றிலக்கிய வகை யாப்புகள் அதிகமாய்க் கையாளப்பட்டன. மக்கள்

வாய்மொழி இலக்கியங்களிலிருந்து, தெலுங்கு மராட்டிய ஆட்சியால் நொண்டி நாடகம், குளுவ நாடகம், குறவஞ்சி முதலியன இவ்வகை யாப்பில் அமையப்பெற்றன; கீர்த்தனைகளும் தோன்றின.

பின், இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மாக்கவிஞன் பாரதி தமிழ்க்கவிதை மரபில் ஒரு புதிய போக்கையே ஏற்படுத்திவிட்டான். பழைய விருத்தத்தையும் அகவலையும் வெண்பாவையும் கையாண்டாலும் விடுதலை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமதர்மச் சமுதாயம், சிந்தனைச் சீர்திருத்தம் முதலிய புரட்சிப் பொருள்களைப் பாடுபொருள்களாய்க் கையாண்டதன் வாயிலாய் அப்பழைய முறை யாப்புகளுக்கே ஒரு புதுமெருகு கொடுத்துப் பெருமை கூட்டினான். அத்துடன் கும்மி, பள்ளு, குடுகுடுப்பைக்காரன் பாட்டு முதலிய யாப்புகளைக் கையாண்டும், தானே சில இசை யாப்புகளைப் புத்தம் புதிதாய் அமைத்தும் கவிதைப்பொருளுக்கு ஒரு புதுமையை ஏற்றி விட்டான்.

பாவேந்தர் பாரதிதாசனும் இவ்வழியிலேயே ஏறு நடையிட்டுச் சென்றார். "இந்த மண்ணை உய்விக்கப் பாடிய மக்கள் கவிதைதான் பாரதியின் சத்தியக் கனவில் உதித்த அக்கினிப் பிரவேசங்கள்; பாவேந்தரின் சமுதாயம் சார்ந்த அழகின் சிரிப்பு. இருவரிலும் தமிழ்க்கவிதையின் யுக சந்தியைத் தரிசிக்கலாம். சொல் புதிது, பொருள் புதிதான நவ கவிதைகளைப் படைத்த பாரதியும் பாரதிதாசனும் மரபை வளப்படுத்திய புதுக்கவிஞர்கள். அவர்களிடம் தமிழ்க்கவிதை அக, புறக் கரைகளைக் கடந்து சமுதாய வீதிகளில் பாய்ந்தோடத் தொடங்கியது" என்கிறார், திறனாய்வாளர் கா. செல்லப்பன். இந்த வழியிலேயே பின்னர் வந்த கவிஞர்கள் கவிதைகள் புனையத் தொடங்கினர் என்பது மிகையாகாது.

இருபதாம் நூற்றாண்டு, தமிழுக்குத் தந்த பரிசுகளுள் புதுக்கவிதை ஒன்று. மரபுக்கவிதையிலிருந்து மாறுபட்ட தொனியும் நடையும் பூண்டிருந்தமையால் புதுக்கவிதை என்று பெயர் சூட்டிக்கொண்ட போதிலும் கவிதைத்துறையில் ஒரு வளர்ச்சிக் கட்டத்தைக் குறிக்கவே இப்பெயர் வழங்கப்படுகிறது.

கவிதைக் கட்டமைப்பு என்பதில் உள்ளீட்டையும் வடிவத்தையும் அமைக்கலாம். கடவுள், மதம், விதி, இயற்கை வருணனை, நீதி கூறுதல் முதலிய பழைய செய்திகளையே திரும்பத் திரும்பக் கூறாமல் சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளை, வாழ்க்கை

அவலங்களையெல்லாம் பல்வேறு கோணங்களில் எடுத்துக் காட்டுவதையே புதுக்கவிதைகள் உள்ளீடாய்க் கொண்டு விளங்குகின்றன.

புதுக்கவிதைக்கென்று எந்தக் குறிப்பிட்ட வடிவமும் யாப்பு வரையறையும் இல்லை. அவை கவிஞர்கள் கையாளும் திறத்தைப் பொறுத்தே அமையும். புதுக்கவிதை, யாப்பை மீறி எழுத வேண்டும் என்பதற்காக மட்டும் எழுதப்படுவது அன்று. அதன் உள்ளடக்கப்பொருளுக்கும் வெளிவடிவத்திற்கும் இருக்கும் கருத்துநிலை வளர்ச்சியினையே புதுக்கவிதைத் தோற்றம் எனலாம். உள்ளடக்க உணர்வு நிலைகளே கவிதையின் வெளிவடிவை நிர்ணயம் செய்கின்றன. அக்கவிதைகள் வெளிப்படுத்தும் அவலங்களையும் நிலைகளையும் ஒவ்வொருவரும் நேரில் கண்டும் உணர்ந்தும் உள்ளதால் அவை நெஞ்சைத் தொடுகின்றன.

உணர்ச்சி வேகத்தை உள்ளவாறே எவ்விதத் தடையுமின்றி வெளிப்படுத்த மரபு கற்றுத் தந்துள்ள யாப்பு, வார்த்தைச் சந்தம், எதுகை, மோனை முதலிய வடிவ அலங்காரங்கள் சிதைத்து விடுகின்றன. வடிவ அலங்காரங்களுக்கு முதன்மை கொடுத்தாலோ சொல்ல வந்த உணர்ச்சி வேகம் மழுங்கிவிடும்.

பொதுவாய், மரபுக் கவிதைகள் போலில்லாமல் மிகவும் சுருக்கமாகவே சிறிய அளவிலேயே புதுக்கவிதை அடிகள் அமைக்கப்படுகின்றன. இவை விரைவில் படிக்கத்தக்கனவாய் அமைந்து, அடுத்தடுத்த பாடலுக்குச் செல்லும் ஆவலையும் தூண்டுகின்றன. இந்த வகையிலும் புதுக்கவிதை வரவேற்கப் படுகிறது. புதுக்கவிதைகளில் கையாளப்படும் உத்திகள் செய்திகளை நறுக்கெனப் படிய வைப்பதற்குத் துணை செய்வனவாய் உள்ளன. இவ்வாறு விளக்கம் சொல்லிப் புதுக்கவிதைகளை ஏற்க வேண்டும் என்று சொல்லும் நிலை இன்று மாறிவிட்டது. சொல்லப்போனால், புதுக்கவிதையே இன்று மேலோங்கி நிற்கின்ற ஒரு நிலை வளர்ந்துவிட்டது.

புதுக்கவிதையோடு கவிதை வளர்ச்சி நின்றுவிடாமல் இன்று ஹைகூ, சென்ரியூ வடிவங்களிலும் கவிதைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. நம் அடிப்படைப் பண்புகளைக் குறைக்காத வகையில், கால வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களையும் புதுமைகளையும் குறை கூறாமல் கருத்துப் பரவலுக்கு வழி செய்ய வேண்டியது நம் கடமையே.

மேலே கூறப்பட்டுள்ள கருத்துகளுக்கேற்பவே இத் தொகுப்பில் உள்ள பாடல்களின் வடிவம், பாடுபொருள், உத்திகள்

ஆகியன அமைந்துள்ளன. தனித்தனிப் பாடல்களாய் இருப்பதனால் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இவற்றைக் கூற இயலாதென்பதால் ஒட்டுமொத்தமான கருத்தே பின்னர்த் தரப்பட்டுள்ளது.

பாடுபொருள்

தமிழ்

இருபதாம் நூற்றாண்டில் தமிழைப்பற்றிப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். கவிஞர் தங்கள் நூல்களைப் பெரும்பாலும் தமிழ், இயற்கை, காதல், வீரம், பல்சுவை என்ற தலைப்புகளின்கீழ்ப் பதிப்பித்து வெளியிட்டிருப்பதைக் காணலாம். தமிழுக்குத் தீமை நேர்ந்தபோதெல்லாம் தமிழின் சிறப்பையும் மேன்மையையும் தனித்தன்மையையும் புலவர்கள் பாட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார்கள்.

இனியன எல்லாவற்றினும் தமிழ் இனியது. உறவுகள் எல்லாவற்றையும்விடச் சிறந்த உறவு தமிழே. இயற்கை எழிலைப் பாடி முடிக்கலாம். ஆனால், தமிழின் உயர்வை என்றுமே பாடி முடிக்க முடியாது. "உணவு உடலை வளர்ப்பது. தமிழோ உயிரை வளர்ப்பது" என்கிறார், பாவேந்தர் பாரதிதாசன்.

கிளியே சொல் எனக் கேட்பது போல, தமிழின் பெருமையை உடுமலை நாராயணகவி, 'அவள் (தமிழ்) காலத்தினால் பழையாள்; கோலத்தினால் இளையாள்' எனக் கொண்டாடிப் போற்றுகிறார். மேலும் தமிழ், 'காவலர் மூவர்' கண்போல் வளர்த்தது. கற்கண்டு, கனிரசம், மலர்த்தேன் ஆகியவற்றினும் இனியது. ஔவை, கம்பன், உலகுக்குப் பொது நீதி வகுத்த வள்ளுவன் ஆகியோரை ஈன்றெடுத்த பெருமைக்குரியது எனவும் புகழ்ந்து பாடுகிறார்.

தமிழர் புலி, வில், கயல் கொடியை இமயத்தில் பொறித்தவர்; ஆரியர் அலறியோட அடித்துத் துரத்தியவர்; தமிழைப் பழித்த வடவர் தலையில் கல்லேற்றிக் கொண்டுவந்தவர்; பாரதப் பெரும்போரில் பெருஞ்சோறு படைத்த பெருமைக்குரியவர். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என உலக ஒற்றுமை போற்றியவர் எனத் தமிழரின் பெருமையைச் சிந்து பாடிக் களிக்கிறார், புலவர் குழந்தை.

அப்பினும் தண்மை, அமுதினும் இனிமை, அவனியைப் போல் மிகவும் பழமை கொண்டது, தமிழ்; கடவுளை அப்பனாகவும் அம்மையாகவும் கண்டவர், தமிழர்; உயிர்ப்பது,

உண்பது, பயில்வது, படிப்பது, பண்ணுடன் இசைப்பது என அனைத்தும் தமிழே என்பது தமிழரின் உணர்வு எனத் தமிழையும் தமிழகத்தையும் நினைத்துத் தலைநிமிர்கிறார், கலைவாணன்.

தொல்காப்பியத்தை முடியாகவும், குண்டலகேசியைக் காதணியாகவும், சங்கத் தமிழை மாலையாகவும், மணிமேகலையை இடையணியாகவும், சிலப்பதிகாரத்தைக் காற்சிலம்பாகவும், திருக்குறளைச் செங்கோலாகவும் கொண்டு உலகை ஆண்டு வரும் தமிழரசியாய்த் தமிழைக் காண்கின்றார், புத்தனேரி சுப்பிரமணியம்.

எத்துணை அழிவுகள் நேர்ந்தாலும் அவற்றை வென்று என்றும் நிற்பது, தமிழ். வடமொழியை நுழைய வைத்து வேதமொழியெனப் போற்றித் தமிழை அழிக்க முயன்றபோதும் அது புடம் போட்ட தங்கமாய் ஒளி வீசி நின்றது. அறிவியலுக்கு ஏற்ற அழகுமொழியாயும் சிறந்து நிற்கிறது எனத் தலைநிமிர்ந்து கூறுகிறார், கருமலைத் தமிழாழன்.

இயற்கை

தமிழைப் போலவே இயற்கையைப் பாடாதவர்களும் இலர் எனலாம். இயற்கை எழிலில் ஈடுபடாதவர் எவரும் இருக்க முடியாது. இயற்கையைப் பாடும் புலவர்கள் என்றே சிலர் குறிப்பிட்டுப் பாராட்டப்பெறுகின்றனர். இந்நூலில் இயற்கை பற்றிய சில சுவையான பாடல்கள் இன்பம் ஊட்டுகின்றன.

நிலவையும் விண்மீன்களையும் பல்வேறு வகைகளில் பாடியுள்ளனர், புலவர் பெருமக்கள். சுத்தானந்த பாரதியார், 'நிலவே! உன் அன்னநடை கண்டு கடல் ஆர்ப்பரிக்கின்றதோ! குழந்தைக்குச் சோறூட்டத் தாயர் முன்பு உன்னை இங்கு அழைத்தனர். இப்போதோ நாங்கள் அங்கு வந்துவிட்டோம். உன்னிடம் வந்தவர்க்கு நீ கல்லையும் மண்ணையுந்தாமே தந்தாய்! நீ தமிழ்நாட்டுக்கு வந்தால் நாங்கள் உனக்கு விருந்தளிப்போம்; அப்போது எங்கள் நாகரிகம் கண்டு நீ நாணுவாய்' எனச் சந்திரனை மாந்தரினம் அடைந்துவிட்டது எனும் அறிவியல் கருத்தைத் தமிழ்நாட்டின் விருந்தோம்பல் பண்போடு குழைத்துத் தருகிறார்.

பசுந்தளிர், புதுமலர், வானவில், மின்னல், அருவி, கிளிமூக்கின் செம்மை என ஒரு நீண்ட பட்டியலிட்டு, இவற்றில்

மருவிவரும் எழிலையெல்லாம் எழுது தற்கே
　　மனந்துளும்பும் வார்த்தைஅந்தோ கிடைப்ப தில்லை

எனத் தயங்குகிறார், கவி கா. மு. ஷெரீப்.

குற்றால அருவியைக் காணும் ஹா.கி. வாலம் அந்தப் பால் நிறத்து அருவியை எவ்வாறெல்லாம் பாடலாம் என எண்ணிப் பார்க்கிறார்.

ஞானசம்பந்தன் தமிழ், கண்ணன் குழல், திலோத்தமை நடனம், பெற்றோர் அன்பு ஆகியன போல உள்ளக் கிளர்ச்சியையும் இன்பத்தையும் அருவி அவருக்கு ஊட்டுகிறது. எண்ணிடும் போதே இன்பத்தைச் சுரக்க வைக்கும் அருவியை வாழ்க என வாயார வாழ்த்தவும் செய்கிறார்.

ஒரு கிராமத்து நதியை எப்படி எப்படியெல்லாம் பாராட்டலாம், எண்ணிப் பார்க்கலாம் என்பதைச் சிற்பியின் பாடல் நமக்குக் காட்டுகிறது.

அவர் பிறந்த ஊரில் பாயும் இந்நதிக் கரையில் சிறுவர்கள் இன்றும், ஓடும் பாம்பை மிதித்துக்கொண்டும், புல்லாங் குழல்களைக் ஊதிக்கொண்டும் ஓடுவதால், 'இது என் யமுனை' என்கிறார். இதே போன்று, இந்நதியைக் கங்கை எனவும், பாலாறு எனவும் தாம் கருதிக்கொள்ளக் காரணமும் கூறுகிறார்.

தானும் உணவாகி மீனும் உணவாகும்
இந்த நதிக்கு நானும் உணவாவேன்

என அந்நதியோடு தம்மைக் கரைத்துக்கொள்கிறார்.

அருவியைக் குருவிக்கரம்பை சண்முகம் பல்வேறு வகைகளில் படைத்துக் காட்டுகிறார். "தலையில்லை; ஆனால், மலர் சூடி வருகிறாய்! மலையிலிருந்து இறங்கி வரும் எண்ணற்ற பொருள்கள் மண்மகளுக்கு மலைத்தாய் தரும் சீதனமா? மலையிலிருந்து விழுபவர் மடிகிறார்; ஆனால், நீயோ மலையி லிருந்து விழுந்தபின் துள்ளிக்குதித்து ஓடுகிறாய்" என, பல கற்பனை ஊற்றுகளாய் அருவியைக் கொட்டவிட்டிருக்கிறார், இக்கவிஞர்.

காதல்

"காதலடைதல் உயிரியற்கை" என்பார், பாவேந்தர் பாரதிதாசன். "நீரூற்றி நகத்தை வளர்ப்பதில்லை; இன்ப நினைவுகள் பிறர்சொல்லி வளர்வதில்லை" என்பார், சுரதா. ஒருகாலத்திய அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் மற்றொரு காலத்தில் மாறக்கூடும்; மறக்கப்படவும் கூடும். ஆனால், உற்ற பருவமடைந்ததும் உயிரினத்தில் தோன்றும் காதலோ உலகு தோன்றிய காலம்தொட்டு - அன்றும் இன்றும் - இனி என்றும் மறையாததாம்! காதல்பற்றிக் கவிஞர்கள் கசிந்துருகி எழுதுவது இயல்பு.

காதலியின் கூந்தலை மேகமாகவும், கைகளைக் காந்தளாகவும், மருட்சியை மான்களின் கண்களாகவும், பேச்சினை முல்லை நில ஆயன் குழலாகவும், விழியைக் கயலாகவும், இன்ன பிறவாகவும் பாராட்டி, காதலன் தன் பிரிவால் வருந்திடும் காதலிக்கு, 'கலங்காதே! இன்னலிடை வாழ்ந்தாலும் நாம் இணைந்தே வாழ்வோம்' எனக் கூறும் தேறுதல் மொழிகளைப் பாடியுள்ளார், வாணிதாசன்.

கவிஞர் கண்ணதாசன், "பெண்களின் அழகு, அவர்களின் பேரெழில் உடல் கட்டே! அங்கங்களெல்லாம் அழகின் முடிச்சுகளாய் நம்மை மயக்குகின்றன. ஆனால், குழந்தை பிறந்ததும், அவர்கள் கட்டுக்குலைகின்றனர். பிள்ளை என்பது அழகின் இறக்கம்; பெறுவது என்பது இளமையின் கழித்தல்; எனவே, பெண்மையின் பேரெழில் கண்கள், கால்கள், கைகள் ஆகியவற்றில் இல்லை. கர்ப்பப் பையினுள் உள்ளது" என்கிறார். பெண்ணழகு என்ன என்பதைத் தம் நிலையில் நின்று பாடுகிறார், கவிஞர் கண்ணதாசன்.

தான் காதலிக்கும் கன்னியிடம் சென்று தன் காதலை எடுத்துக் கூறுவதோடு அவளைக் காணாததால் தான் படும் பாட்டையும் துயரையும் எடுத்துரைத்து வருமாறு தென்றலைத் தூதாய் அனுப்புகிறார், பெரி. சிவனடியான்.

தன் வரலாறு

தமிழில் கவிதை நடையில் உள்ள தன் வரலாறு மிகக் குறைவு. பாரதியார், 'ஸ்வசரிதை' எனும் தலைப்பில் ஒரு பாடலைப் பாடியுள்ளார். அதில் அவரது பிள்ளைப் பருவக் காதல், அவரை ஆங்கிலக் கல்வி கற்க அவர் தந்தையார் திருநெல்வேலிக்கு அனுப்பியது, திருமணம், தந்தை வறுமையெய்திடல் எனும் செய்திகளை 432 அடிகளில் எழுதியுள்ளார்.

வ.உ.சி. தன் வரலாற்றைக் கவிதையில் இயற்றியுள்ளார். பிறப்புமுதல் சிறையேறிச் சிறை மீண்டவரை உள்ள வரலாறு இதில் அடங்கியுள்ளது.

> ஆயிரத் துத்தொள் ளாயிரத் துப்பன்
> னிரண்டாம் வருஷம் டிசம்பர் மாதம்
> ஒருநன் மாலையென் உடம்பில் எண்ணெய்
> சிறிது தடவி முழுகி நிற்கையில்
> ஒருவன் வந்தெனை ஜெயிலர் விளிப்பதாய்
> அழைத்தான். சிறையுடை அணிந்துடன் சென்றேன்.

'விடுதலை ஆர்டர் அடுத்தது, நீவிர்
வீடுற லா'மென விளம்பினன் ஜெயிலர்.
மைத்துனன் அனுப்பிய பட்டுடை உடுத்தியான்
வீடடைந் தேன்மாண் வீடடைந் தேனே!

என நூலை முடித்துள்ளார்.

அவரைக் கோவைச் சிறையில் முதலில் சணல் கிழிக்கும் இயந்திரத்தைச் சுற்றும்படி செய்தனர். அதனால் அவர் கைத் தோலுரிந்தது; குருதி கசிந்தது.

திங்கட் கிழமை ஜெயிலர்என் கைத்தோல்
உரிந்ததைப் பார்த்தான். உடன்அவன் எண்ணெய்
ஆட்டும் செக்கினை மாட்டிற்குப் பதிலாய்
பகலெலாம் வெயிலில் நடந்து தள்ளிட
அனுப்பினன்; அவனுடை அன்புதான் என்னே!

நெஞ்சையுருக்கும் இவ்வாறான செய்திகளடங்கிய நூலிலிருந்து அவரது குடும்ப வரலாறு இத்தொகுப்பில் எடுத்துத் தரப்பட்டுள்ளது.

பெண்மை

மங்கைய ராகப் பிறப்பதற் கேநல்ல
மாதவஞ் செய்திடல் வேண்டுமம்மா!
பங்கயக் கைந்நலம் பார்த்தல வோஇந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா!

எனப் பெண்மையின் பெருமையை மிக உயர்வாய்த் தேசிக விநாயகம் பிள்ளை பாடுகிறார்.

இம்மை மாறி மறுமை யாகினும்
நீயா கியர்என் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே

எனப் பாடுகின்ற குறுந்தொகைத் தலைவியின் நிலையில் நின்று, இன்றும்,

இன்னுமோர் பிறவி இருந்திடில்
என்னுடை நாதனோ டினிதுறப் புரிகவே

என இறைவனிடம் 'பிரார்த்தனை' செய்யும் மங்கை ஒருத்தியைக் காட்டுகிறார், ம. ப. பெரியசாமித்தூரன்.

இப்படி உயர்வுபடுத்திப் பேசப்படும் பெண்ணினம் பல சிறுமைகளுக்கு ஆட்பட்டுச் சீரழிந்து வருகிறது. கண்ணீர்க்கடலில் அவர்கள் காலமெல்லாம் அலைபட வேண்டியிருக்கிறது. பெண் குழந்தைகள் என்றாலே பெற்றோர் சலித்துக்கொள்ளும் நிலை; வரதட்சணை எனும் பெயரால் இழைக்கப்படும் பெருங்கொடுமை

சொல்லி மாளாதது. இதைக் காணும் வா. மு. சேதுராமன் அத்தகைய இளைஞர்களை,

கட்டாயம் இதுகளைமின்! காலம்
கழுத்தறுத்துக் கொலுமுன்னர்
திருந்திக் கொள்வீர்

என எச்சரிக்கிறார்.

பெண்களுக்கு ஆதிநாள்தொட்டே ஆண்களால் அநீதி இழைக்கப்பட்டு வருகிறது. விழித்தெழுந்த பெண்கள் விவாதிக்கத் தொடங்கிவிட்டனர். "பெண்ணே! உன் பெண்மை என்ற தெய்விக நெருப்பில் எங்களைப் பரிசுத்தப்படுத்து" என ஆண்கள் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதை அப்துல் ரகுமான் எழுதிக் காட்டுகிறார்.

பெண்கள் ஈரப் பிசுபிசுப்போடும் இரத்தப் பெருக்கோடும் உறங்க வேண்டிய நிலை ஏற்படும் போது தாங்க மடி தர வேண்டிய தாயும் "தொடாதே, தள்ளி நில்" என்கிறாள். இந்தத் துன்பம் அஃறிணை உயிர்களுக்குக்கூட இல்லை. பெண்ணின் நிலையை வெகுளியோடு வெளிப்படுத்துகிறார், வெண்ணிலா.

சமய நல்லிணக்கம்

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் தமிழ்ப்பெரும்புலவர். இசுலாமியர் என்றாலும் சமயம் கடந்த பெருமகனார்.

அவர் கலைமகளை, "அயன் நாவில் உறைமகள், திருமகளின் மருமகள் எனக்கருள வருமகள்" எனப் பாராட்டியிருப்பது அவரது மதச்சார்பற்ற பேருள்ளத்தைக் காட்டுகிறது. கலைமகளைப் பாடியுள்ள அதே பாடலில்

ஒன்றுதெய்வம் ஒன்றுமதம் ஒன்றுமக்கள் சாதியென
துன்றுமுயர் மாபெருமை சொல்லற் கெளிதேயோ?
சோதிநபி நாயகமே சொல்லற் கெளிதேயோ?

என நபிகள் புகழும் பாடியுள்ளார்.

எம்மதம் என்பது அழியட்டும்
எம்மதமும் நம்மதம் ஆகட்டும்
மும்மதமும் முனைந்திங்கு – திருமண
சம்பந்தம் பேசட்டும் – இங்கு
எம்மதமும் சம்மதம் என்றாகட்டும்
மொத்தத்தில் – இங்கு
மதமெல்லாம் ஒன்றாகட்டும் – அதற்குமுன்
மனமெலாம் ஒன்றாகட்டும்

என மத நல்லிணக்கத்திற்கு வழிகாட்டுகிறார், தேனிரா. பாண்டியன்.

குழந்தைக் கவிதைகள்

இருபதாம் நூற்றாண்டில் இலக்கிய வளர்ச்சியில் குழந்தை இலக்கியம் ஒரு புதிய வரவு. அவ்வாறானால் அதற்கு முன்னர் குழந்தை இலக்கியமே இல்லையா என வினா எழலாம். சங்க காலத்திற்கு முன்பே சிறுவர்க்கான இலக்கியங்கள் தமிழ்நாட்டில் இருந்தன. இதனைப் பிசி என்னும் இலக்கிய வகையாய்த் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தொல்காப்பிய உரைகாரரான பேராசிரியர்,

1. பிறைகவ்வி மலை நடக்கும்.
2. நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யான்; நீராடில்
   ஊராடு நீரிற் காக்கை.

என்பவற்றைப் பிசிக்கு எடுத்துக்காட்டுகளாய்த் தருகிறார். இவற்றுள் முந்தையது யானையையும் பின்னது நெருப்பையும் குறிக்கின்றன. இவை விடுகதை வகையின. விடுகதை சிறுவர்கட்குரியது. ஆதலின், சங்ககாலத்திற்கு முன்பே குழந்தைப் பாடல்கள் இருந்தன என்பார், அறிஞர் பூவண்ணன்.

நிலாநிலா ஓடிவா
நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா
மல்லிகைப்பூ கொண்டுவா

என்று நிலவைக் காட்டித் தாய் குழந்தைக்குச் சோறூட்டும் போது பாடும் குழந்தைப்பாடல் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பன்னெடுங்காலமாய் ஒலித்து வருகிறது. அதனை என்று தோன்றியது எனச் சொல்ல இயலவில்லை. இவ்வாறான குழந்தைப் பாடல்கள் வாய்மொழி இலக்கியங்களாய் வளர்ந்து வந்துள்ளன.

ஆங்கிலக் கல்விமுறை நம் நாட்டில் நுழைக்கப்பட்ட போது அவர்களுடைய பாடநூல்களில் இடம் பெற்றிருந்தது போல, தமிழ்ப் பாடநூல்களிலும் குழந்தைப் பாடல்கள் சேர்க்கப்பட்டன. " 'அ' இதோர் அத்திப்பழம்; 'ஆ' என்பவன் ஆசைப்பட்டான்" என்பன போன்ற பாடல்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத் தமிழ்ப்பாட நூல்களில் இருப்பதை நாமறிவோம். இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்துதான் குழந்தைகட்கென்றே தனியாய் நூல்கள் வெளிவரத் தொடங்கின.

இன்று தமிழ்நாட்டில் குழந்தைகட்கு மட்டுமே எழுதும் எழுத்தாளர் பலர் உள்ளனர். அவர்களுள் சிலருடைய பாடல்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. குழந்தைகளைப்பற்றிப் பாடுவது, குழந்தைகட்காகப் பாடுவது என இருவகைப்பட்ட குழந்தைப் பாடல்களுள் குழந்தைகட்காகப் பாடப்பெற்ற பாடல்களே இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

குழந்தைகட்குக் கதைப்பாடல் ஒன்றன் வாயிலாய்க் கரிகாற்பெருவளத்தானை அறிமுகம் செய்து வைக்கிறார், மயிலை சிவமுத்து. கரிகாலன், இளஞ்சேட்சென்னி மகன்; ஏழாம் வயதில் அரியணை ஏறியவன்; அவன்மீது பகை கொண்ட சேரனும் பாண்டியனும் அவன் கோட்டையைத் தீயிட்டுக் கொளுத்தினர். கரிகாலன் மதில்மேல் ஏறிப் போர் புரிந்தான்; தீயினால் அவன் கால்கள் கருகின; அதனால் கரிகாலன் எனப் பெயர் பெற்றான். கால்கள் கருகினாலும் இருபெரும் மன்னர்களையும் எதிர்த்து வெற்றி கண்டான் என வீரத்தின் சிறப்பினைப் பிஞ்சு உள்ளங்களிலே ஊட்டியுள்ளார், பாடலாசிரியர்.

முயற்சி இருந்தால் முடியாதது எதுவும் இல்லை; இன்றைய சிறுவர்கள் நாளைய மிகப்பெரிய மனிதர்கள் (ஆலின் விதையைப் போல). சோம்பிக் கிடந்தால் செயல் எதுவும் நடவாது எனக் குழந்தைகளை ஊக்குவிக்கிறார், கவிஞர் செல்ல கணபதி.

தம்பிக்கு அண்ணன் எழுதும் கடிதமாய், "தம்பி! தோட்டம் நலமா? அங்கு வருமே மஞ்சள் கருநீலம் படிந்த பறவை, அது இப்போது வருகிறதா? நம் குரலுக்கு எதிர்க்குரல் கொடுத்துப் பாடுமே குயில், அஃது இப்போதும் பாடுகிறதா? கிளிக்கூட்டம் பறக்கிறதா? மரத்தில் அணில்கள் விறுவிறுப்பாய் ஏறி விளையாடுகின்றனவா? பலா மரத்தில் பழங்கள் பழுக்கின்றனவா?" என வினாக்கள் தொடுப்பதன் வாயிலாய் அருமையான இல்லச் சூழலைப் படைத்துக் காட்டியுள்ளார், கவிஞர் பல்லவன்.

குழந்தைகளைப்பற்றிப் பாடுவது குழந்தைப்பாடல் ஆகாது; குழந்தை அறிந்த சொற்களையே கூற வேண்டும்; எதுகை, மோனை துள்ள வேண்டும்; இயைபுத் தொடை பெருமளவில் ஆளப்பட வேண்டும்; குழந்தை விரும்பும் பொருள்களைப்பற்றியே பாட வேண்டும்; ஒழுக்கப் பண்புகளைக் குழந்தை உணர்ந்திடச் செய்ய வேண்டும்; கவிஞர் குழந்தையாகவே மாறிப் பாடலைப் படைக்க வேண்டும்" எனக் குழந்தைப் பாடலுக்கு இலக்கணம் வகுக்கிறார், குழ. கதிரேசன்.

குழந்தை உள்ளத்தில் பதியும் கருத்துகள் வாழ்க்கை முழுதும் நின்று நிலைத்துவிடும். எனவே, கவிஞர்கள் குழந்தைகட்குச் சிறந்த அறிவுரைகளை - உயர்ந்த நீதிகளை - உணர்த்தப் பெரிதும் முற்பட்டுள்ளனர்.

குழந்தை கூன், குருடு, செவிடு என உடற்குறையின்றி இருந்த போதும் நல்ல குணம் இல்லையென்றால் என்ன பயன்? பத்து மாதம் சுமந்து பெற்ற தாயின் உள்ளம் அப்போது என்ன பாடுபடும்? ஆதலின், நல்ல குணங்களோடு குழந்தைகள் வாழ வேண்டும் என அறிவுரை பகர்கிறார், குழந்தை இலக்கிய முன்னோடி அழ. வள்ளியப்பா.

எத்தனையோ இன்பம் இருந்தாலும் மழலை மொழி வழங்கும் குழந்தைச்செல்வம் மார்மீது உதைப்பதிலே கிடைப்பது தான் மட்டற்ற இன்பமாய்க் காண்கிறார், மருதகாசி.

நாட்டுக்கும் மொழிக்கும் உழைத்த நல்லவர்கள்

நாட்டுக்குழைத்த நல்லவர்களையும், மொழிக்குக் கேடு நேரும்போது அதனை எதிர்த்து நின்று புரட்சி செய்து வென்ற அறிஞர்களையும் நினைந்து போற்ற வேண்டுவது நம் கடமை. உலக உத்தமர் காந்தி, பகுத்தறிவுத் தந்தை பெரியார், தமிழ்க்கடல் மறைமலையடிகளார், பாட்டுக்கொரு புலவன் பாரதி போன்றோர் என்றென்றும் நம் நெஞ்சில் நிற்க வேண்டியவர்.

காந்தி திருத்தசாங்கம் பாடியுள்ளார், கவிஞர் இராய. சொக்கலிங்கம். 'காந்தியின் நாடு பாரதம்; யாதும் அவருக்கு ஊர்; கங்கைமுதல் பொருநைவரை அவர் ஆறு; இமயம்முதல் பொதிகை ஈறாய் உள்ளவை அவர் மலை; மாண்புடையார் மனம் அவர் ஊர்தி; உண்மையே படை; அறமே முரசு; புகழே மாலை; மும்மை நிறக் கொடியே கொடி' எனச் சிறந்த பத்து அங்கங்களையும் சீருடன் பாடியுள்ளார்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" என்றார், திருவள்ளுவர். அந்நெறியில் வாழ்ந்துகாட்டினார், காந்தியடிகள். அவரது தூய வாழ்க்கை காரணமாகவே இந்திய நாடு பாராட்டப்படுகிறது. மனத்தூய்மையே மங்காப்புகழ் தரும் என மொழிகிறார், முடியரசன்.

"தந்தை பெரியார் கருப்புச்சட்டை அணியாதிருந்திருந்தால் இன்று நாம் வெள்ளைச்சட்டை அணிந்திருக்க முடியாது" என்றார், கவிஞர் ஒருவர். பெரியார், உறங்கிக் கிடந்த தமிழரை எழுப்பியவர்; பாமர மக்களைப் பகுத்தறிவு கொண்டு சிந்திக்க வைத்தவர்.

பெரியார் கொள்கையைப் பரப்ப உழைப்பவர்கள் நாளும் வாழ்க" என வாழ்த்துகிறார், வரத. கோவிந்தராசன்.

"செந்தமிழுக்கு நூலணிகள் பல செய்து தந்தவர்; தனித் தமிழ் இயக்கம் கண்டவர்; பன்மொழி அறிஞர்; கன்றை நெருங்கினால் பசு பாய்தல் போலத் தமிழ்மீது இந்தி திணிக்கப் பட்டபோது சீறி எழுந்தவர்; உடலால் மறைந்தாலும் உயர் புகழால் மறையாத மாமலையாய் விளங்குபவர், மறைமலையடிகள்" என மனமுருகப் பாடியுள்ளார், மனசை. ப. கீரன்.

பாரதியார் தேமதுரத் தமிழோசை உலகெலாம் செழிக்க வேண்டுமெனும் உணர்வை ஊட்டியவர்; எங்கும் எதிலும் தமிழ் வேண்டுமென விழைந்தவர்; குயில் பாட்டில் தத்துவமாயும், கண்ணன் பாட்டில் அவன் அன்பனாயும், பாஞ்சாலி சபதத்தில் துயில்வோரை எழுப்புபவராயும் விளங்கியவர் எனப் பாரதியார் கவித்தொண்டினை நினைவிற்குக் கொண்டுவருகிறார், ஞானச் செல்வன்.

விடுதலையே உயிர்மூச்சு; 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' எனப் பாரதியின் குரல் புதுச்சேரியில் முழங்கிய வண்ணம் இருந்தது. இம்முழக்கத்தைக் கேட்கத்தான் கடலலை உருண்டுருண்டு ஓடி வருகிறதோ என வியக்கிறார், ம.வே. பசுபதி.

சமுதாய நிலை

தமிழ்நாட்டு மக்கள் அஞ்சியஞ்சிச் சாகின்றனர். பேய் சூனியங்களை நம்பி நெஞ்சு குமுறுகின்றனர். பிரிவினைப்பட்டு, பிரிவினைப்பட்டு நொந்து போகின்றனர். கஞ்சி குடிக்க முடியாமைக்குக் காரணத்தையும் அறியாதவராய்ப் பஞ்சமெனத் துடிக்கின்றனர். இவர்கள் துயர்களைத் தீர்க்க வழியில்லையோ என வாடுகிறார், பாரதியார்.

காலுக்குச் செருப்பில்லை, கால்வயிற்றுக் கஞ்சியில்லை, ஒண்டக் குடிசையில்லை, செய்யும் தொழில் கிட்டவில்லை, கையில் காசில்லை, கடன் கொடுப்பார் யாருமில்லை என ஏழையரின் நிலையை மனமுருகப் பாடி, இவர்களை ஏய்க்கும் கொடியவரை கோடி கோடியாய்க் குவித்திருப்பவரை செங்கொடியை உயர்த்திப் போராடி வெற்றி காண்போம் என்கிறார், ஜீவா.

வீடு கட்டித் தருபவனுக்கு வாழக் குடிசையில்லை. ஆடை நெய்து தருபவனுக்கு உடுத்த ஆடையில்லை. உழுது நெல் விளைப்பவன் உலர்ந்த உயிரோடு வாழ்கிறான்.

இக்கொடுமைகளைத் தீர்க்கும் வழியைப் புவி என்று காணும் என வினவுகிறார், சாமி. பழநியப்பன்.

மக்களோடு மக்களாய் வாழ்ந்து பழகி, குப்பத்தின் சேரியில் கூட்டுறவு வைத்து, தொல்லை கண்டு துவளாது, சிறுமை கண்டு பொங்கி எழக் கற்றுக்கொள். அப்போதுதான் நீ இந்நாட்டுத் தலைவனாய் விளங்க முடியும் என உண்மைத் தலைவனுக்கு இலக்கணம் வகுக்கிறார், பொன்னடியான்.

எங்கும் மனிதனைக் காணோம். பிறரைத் துன்புறுத்து வதையே இன்பமாய்க் கொண்டிருப்பவர்கள் மனிதர்களாய் உலா வருகிறார்கள்.

சோறு போட்டவர்க்கே துரோகம் செய்கிறார்கள். இந்த நாட்டில் உண்மை மனிதரைக் காண முடியவில்லை. எந்த நாட்டில் இவர்களைக் காணலாம் எனக் கேட்கிறார், முத்துலிங்கம்.

உழைக்கும் மக்கள் ஆவி சோர்ந்து களைத்துக் கிடக்கின்றனர். இந்நிலையை மாற்ற மக்களை ஒன்றுசேர்ந்து ஆர்த்தெழ அழைக்கிறார், கே.சி.எஸ். அருணாசலம். கொடுமை தீர்க்கப் புறப்படும் இப்பயணம் வெற்றியில் முடியும் என நம்பிக்கையும் அளிக்கிறார்.

துன்பம் ஏழைகளின் தொடர்கதையா? முதலிரவு; கூவத்தின் கரையில் குடிசை; மனைவியைத் தொடச் செல்லுகிறான்; கடுங்காற்று வீசுகிறது; கூரை கூவத்தில் மிதக்கிறது; சுவர்கள் இடிந்து விழுந்தன; இருவரும் மழையில். இந்நிலை மாறுவது எந்நாள் எனக் கேட்கிறார், ஜீவபாரதி.

எத்துணையோ அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. தாழ்த்தப்பட்டோர் குமுறல் மாறியதா? செயற்கை மாறி விஞ்ஞானத்தின் செய்தியும் மாறியது. ஆயினும், செத்துப் பிழைக்கும் மக்கள் வாழ்க்கை சிறிதும் மாறியதா? வார்த்தை மாறியது. ஆனால், வருணாசிரம தர்மம் மாறியதா? என வினாக்களை அடுக்கிச் செல்கிறார், உதயை மு. வீரையன்.

பொய்யிலே பிறந்து புரட்டிலே வளர்பவர் பிழைக்கின்றனர். நல்லவர்களோ நாளும் தேய்கிறார்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர் உலகை வலம் வருகிறார். கள்ளமறியாத வரோ கஞ்சிக்கு அலைகிறார். வஞ்சகர் வாழ, தூய உள்ளத்தினர் தேய்கிறார்களே! இதைக் காணும் இறைவா நீ இன்னும் இருக்கிறாயா, எங்கள் வெகுளிச்சிரிப்பில் புவியே நீ இறந்து போக மாட்டாயா எனச் சினந்து கூறுகிறார், அரசு மணிமேகலை.

வலுத்தவன் ஒன்றைச் செய்தால் உலகம் அவனைப் புகழ்கிறது. அதையே இளைத்தவன் செய்தாலோ இன்னல் படுத்துகிறது. இதுதான் உலகமா? ஒன்றும் புரியவில்லையே எனப் பாடுகிறார், கொத்தமங்கலம் சுப்பு.

புலவர்கள் போற்றிப் பாட, நீர் பெருகி ஓடிய காவிரி இன்று வறண்டு கிடக்கிறது. கருநாடகம் நீர் தர மறுக்கிறது. சிறையை உடைத்துத் தடை நீக்கி வருக காவிரியே என உரிமையுடன் அழைக்கிறார், நெல்லை. ஆ. கணபதி.

இறைமை – ஆன்மிகம்

மீன் விளையாடக் கடவுள் கடலைப் படைத்தான். செம்படவனோ வலை பின்னி அம்மீனைப் பிடித்துவிட்டான். கிளி உண்ணக் கடவுள் மாம்பழம் படைத்தார். தச்சன் அம்மரத்தை வெட்டிக் கூண்டு செய்து அக்கிளியையே கூண்டினுள் அடைத்துவிட்டான். தேரை வாழப் பாறையைப் படைத்தார், கடவுள். சிற்பியோ பாறையைச் செதுக்கிக் கடவுள் சிலையே செய்து விட்டான். கடவுள், மனிதன் - இவருள் யார் பெரியவர் என வியக்கிறார், கம்பதாசன்.

தமக்கு நித்தம் அருளும் அபிராமவல்லியை, முற்படு தீவினை யாவும் முதலில் முடிப்பவளாயும், இருளில் உழலும் தம்மைத் தெருளினால் ஆற்றும் தெய்வமாயும், அற்புதம் கோடி அவனியில் நாளும் அமைப்பவளாயும் அகங்குளிரப் பாடி மகிழ்கிறார், சௌந்தரா கைலாசம்.

"ஞாயிற்றில் கதிராயும், திங்களில் ஒளியாயும், கடலலையில் முழக்கமாயும், வானவெளியில் நீலமாயும் நித்தியத் தாண்டவமாடும் அன்னையே, உலகைத் தன் கருப்பையிலே தாங்கிச் சுமப்பவளே, உன்னையே தாய் என்று போற்றுகின்றோம்" என அன்னை வழிபாடு செய்கிறார், இளந்தேவன்.

பண்டரிபுரத்துறையும் பரம விட்டலனுக்கு, அவன் அண்டர்கள் துயர் தீர்த்த அருட்கடல், தொண்டர்கள் இதயக் கோயில் துலக்கமுறும் கடவுள், வணங்கியார்க்குச் செல்வம் தரும் கருணையாளன் எனப் பா அஞ்சலி படைத்துள்ளார், அரங்க. சீனிவாசன்.

ஈசனைப்பற்றிப் பேசி வேடம்போடும் ஞான வியாபாரி களுக்கு மக்கள் அள்ளிக் கொடுக்கின்றனர். பசித்து மரண நிலையில் இருக்கும் ஒருவன் சாப்பிட உணவுக்குப் பணம் கேட்டான்; ஒன்றும் கொடுக்காமல் ஒதுங்கினார், மேதை.

ஏழையோ செத்துவிட்டான். ஞானத்தைக் கடையாய் விரித்து விலை பேசி விற்று அத்தனை பேரையும் ஏய்த்து வாழுகின்றவரும் இருக்கிறாரே என ஏங்குகிறார், எஸ். டி. சுந்தரம்.

ஞாயிறு, திங்கள், கோளங்கள் என்பன காலம் என்னும் பெயரில் அடங்குவன என்பதாய் நினைப்பது சரியன்று. ஒவ்வோர் உயிரிலும் ஓங்கும் நாதக் குழலிலே நின்று பார்த்தால் காலம் என்பது கனவென்று உணரலாம் என்பது, அ. சீனிவாசராகவன் கூற்று.

கடவுள் மலைகள்மீதும், காவடியின் ஆட்டத்திலும், பெரிய கோவில்களிலும், உடுக்கையடிப் பாடல்களிலும் இல்லை. அவன் ‘வாடியுலர்ந்தே உயிரை உடலில் தேக்கும் வறியவரின் நெஞ்சத்து வாழ்கின்றானே’ என ஏழையின் சிரிப்பில்தான் இறைவனைக் காண முடியும் என்கிறார், சக்திக்கனல்.

வாழ்க்கை அழியக்கூடியது என்பதை உணர்ந்து, அது நிலைத்திருக்கும் போதே என்றும் அழியாது நிற்கும் புகழுக்குரிய செயல்களைச் செய்ய வேண்டும் என்கிறார், தெசிணி.

நாடு

இந்நூலில் நாட்டைப்பற்றிப் பாடியுள்ளவர்கள் தமிழ் நாட்டையும் இந்திய நாட்டையும் பாடியுள்ளனர்.

வேங்கடம், குமரியை வடக்கும் தெற்குமாகவும், கடல்களை மேற்கும் கிழக்குமாகவும் எல்லைகளாய்க் கொண்டது, தமிழ்நாடு. இது வள்ளுவன் இளங்கோ தோன்றிய பெருமைக்குரிய நாடு. கலைகள் சிறந்த நாடு. வள்ளல்கள் வாழ்ந்த நாடு. செல்விருந்தோம்பி வருவிருந்துக்காகக் காத்திருக்கும் நாடு. வீரமும் காதலும் செறிந்த நாடு. தமிழ் மக்களோ அன்புக்காக உயிரையும் ஈயும் பண்பினர் என நாட்டுப்புகழ் பாடுகின்றார், கு.சா. கிருஷ்ணமூர்த்தி.

உரிமை பெற்றும் நாடு இன்னும் உரிய முன்னேற்றம் பெறவில்லை. தீய சக்திகள் மறைந்தபாடில்லை. உழைப்போர் உருகி அழிகின்றனர். இனியேனும் புது வாழ்வும் ஒற்றுமையும் பெற்று மகிழ்ச்சி கொள்ள வேண்டும் என விடுதலை நாள் செய்தியாகப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பகர்ந்துள்ளார்.

அகிம்சையை முதல் பாடமாகவும், அமைதியைத் துணைப் பாடமாகவும் கொண்டு வாழ்பவர், இந்திய மக்கள். இவர்கள் எழுதுகோல், ஏர் முனை; எழுதும் புத்தகம், நெல்வயல். இந்தியா என்னும் பள்ளிக்கு மக்களின் மனக்காவலே என்றும் எல்லைக் காவல்.

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் உலகம் பாடம் படிக்கப் பாரதப் பள்ளியை நாடிவரும் எனப் பாரதத்தை ஒரு பள்ளியாய்க் காண்கிறார், சுப்பு ஆறுமுகம்.

பண்டைத் தமிழ்நாட்டின் பெருமையை, மொழியின் உயர்வை உலகம் உணரும் காலம் விரைவில் வரும். வந்தேறிப் புகுந்த ஆரியர்களின் சூழ்ச்சி அழியும். சொந்த நாடும் மொழியும் வெற்றி காணும் எனத் தோள் தட்டி ஆடுகிறார், பெருஞ் சித்திரனார்.

பாரதத்தில் அறம் நிலைத்தது. போராடும் தீமை அழிந்தது. வாயில் வந்தவாறு பேசும் மக்களில்லை. கண்டதை எழுதும் இதழ்கள் இல்லை. பெண்களுக்கு அனைத்திலும் சம உரிமை உண்டு. சாதி அரக்கனுக்கு இடமில்லை. இங்கு அன்புக்கே வெற்றி எனும் நிலை உருவாகிவிட்டதாய்க் கவிதைக் கனவு காண்கிறார், சொ.சொ.மீ. சுந்தரம்.

நாட்டு விடுதலை

ஆங்கிலேயரால் அடிமைப்பட்டு உரிமையின்றி வாழும் மக்கள், விடுதலை பெற உரிமைப்போர் ஒன்று நடக்கிறது. அதில் சேர அனைவரும் வாரீர் எனக் காந்தியார் காட்டும் வழியில் நடைபோட மக்களை அழைக்கிறார், இராமலிங்கம் பிள்ளை.

வெள்ளை நிறம் கொண்ட கொள்ளையர் செய்யும் கொடுமைக்கு எல்லையில்லை. அந்தப் பழிபாவம் பாராத வெள்ளையனை (வெள்ளைக் கொக்கை) உடனே அடித்து விரட்ட வேண்டுமெனத் தம் பாட்டையே படைக்கலனாய்த் தருகிறார், பாஸ்கரதாஸ்.

புதுவை மக்கள் தமிழ்த்தாயகம் விடுதலை பெறக் கொண்ட எழுச்சியினை, 'உளமார்ந்து படைதிரண்ட புதுவைமக்கள் உரிமைப் போர், திருமுழக்கம் வெல்க வெல்க' எனக் குரல் கொடுக்கும் புதுவை மக்களின் உரிமை வேட்கை வெற்றி பெற வாழ்த்துக் கூறுகிறார், திருச்சிற்றம்பலக் கவிராயர்.

அடிமை வாழ்வை நீக்க வீழ்ந்துபட்ட மறவர்களை என்றும் நினைவுகூர்வோம். தாயக விடுதலைக்காக உயிர் நீத்தோரே நாம் வணங்கும் தெய்வம். அவர்களை மதித்துக் கொண்டாடும் நாளே நமக்குக் குளிர்ச்சி தரும் நன்னாளாகும் என உரிமை வேட்கையோடு பாடுபட்டவர்களை மதித்துப் போற்றுகிறார், மீனவன்.

விடுதலை பெற்ற இந்தியா அதற்குரிய மகிழ்ச்சியில் திளைக்கவில்லை. மக்களிடம் ஒற்றுமை இல்லை; மன விசால மில்லை; கொலை கொள்ளை நாட்செயல்களாய் மாறிவிட்டன. இனியேனும் புது வாழ்வும் ஒற்றுமையும் பொலியட்டும் என விடுதலை நாளில் தம் வேட்கையையும் விழைவையும் வெளிப் படுத்துகிறார், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை, உலகையே நம் கைவசப்படுத்தும்; மானிடனே உனக்குத் தோல்வி என்பது இல்லை. உன் கால்நகம் கீறிய கோடுகள் வழியே கங்கையும் சிந்துவும் ஓடி வரும் என உற்சாகப்படுத்துகிறார், தாராபாரதி.

குவலயத்தின் குன்றுகளையெல்லாம் போக்கி, அதை நீ விரும்பும் வடிவில் அமைக்க நான் ஒருவனே போதும்! கூட்டமெதற்கு? செயல் செய்யச் சிலர் போதும். செய்து முடிப்போம். கூடிச் சுவைக்கக் குவலயத்தை நாம் அழைப்போம் என நம்பிக்கையோடு பணியாற்றினால் எதுவும் முடியும் என்கிறார், வா.செ. குழந்தைசாமி.

மொழி – கவிதை

சொல்லாட்சி, சொல்லும் திட்பம், உவமைத்திறன் எனப் பல்வகையாலும் அழகு கொண்டது, திருக்குறள். திருக்குறள் உலகப் பொதுமறை; அதன் வழி நின்றால் தீப்பகை, வெறிகள் யாவும் ஒழிந்து உலகம் இன்பச் சோலையாய்த் திகழும் என்கிறார், கா. வேழவேந்தன்.

திருக்குறளில் சொல்லப்பட்டுள்ள கருத்துகளுக்கு முரணாய் இன்று வாழ்க்கை நடைபெற்று வருகிறது. இந்த நிலையைக் காண மீண்டும் நீங்கள் தமிழ்நாட்டுக்கு வந்துவிடாதீர்கள் என வள்ளுவரை வேண்டிக்கொள்கிறார், அர. சிங்காரவடிவேலன்.

உயிர் உள்ளவரை தமிழ்ப்பாவினைப் பாடிக்கொண்டே இருப்பேன் என உறுதி பூணுகிறார், ஆற்றலரசு.

பண்டுதொட்டு இன்றுவரை தோன்றியுள்ள பன்னூறு மேன்மைக் கவிஞர்களுடன் சேர்ந்து அவர்களுள் தாம் ஒருவராய் வாழ வேண்டுமென ஆசைப்படுகிறார், பூவண்ணன்.

ஏடு, எழுத்தாணி, இலக்கணம் ஆகியன மட்டுமே கவிதையாகிவிடா; உள்ளத்தில் உயர்ந்த உணர்ச்சிகள் இருந்தால் மட்டுமே கவிதைகள் தோன்றமுடியும் என்பதை விளக்குகிறார், அரு. சோமசுந்தரம்.

பாடும் பண் செவியில் பாய்வது, புவியின்பம்; அப் பாட்டினைப் பாடும் போது உணர்வினை ஏதோ ஒன்று சுண்டியிழுக்கிறதே அது கவியின்பம் எனப் புவியின்பத்துக்கும் கவியின்பத்துக்கும் உள்ள வேறுபாட்டினைக் காட்டுகிறார், சவகர்லால்.

எத்துணையோ உயர்ந்த இலக்கியங்களைப் படித்தும் நாம் அவற்றின்வழி நடந்தோமில்லை. நல்ல இலக்கியம் எது எனக் கேட்டால் நாம் நல்லவராய் வாழ்வதுதான். படிப்பது முக்கியமன்று, வாழ்ந்து காட்டுவதே சிறப்பு என்கிறார், அமுதபாரதி.

மனிதன் கதையை எழுது. மனித குலத்திற்கு எதிராய் எழும் கரங்களை முறிக்கும் சக்தி கொண்டனவாயும், காலம் தூரம் கடந்து செல்வனவாயும் கவிதைகள் எழுதப்பட வேண்டும் என, எத்தகைய கவிதைகள் எழுதப்பட வேண்டும் என்பதை விளக்கிச் சொல்கிறார், தமிழ்நாடன்.

புலவர்கள் பழைய புராணங்களையே பாடிக்கொண் டிருப்பதில் பயனில்லை. சிந்தனைக்கு விருந்தளிக்கும் மறுமலர்ச்சி இலக்கியங்களைப் பாட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறார், நாரா. நாச்சியப்பன்.

ஏழைக்கு எழுதும் இலக்கியம் ஒன்றே வளர்ச்சி பெற்று வனப்பு எய்தும்; அதுவே இலக்கியப் படைப்பை நிலைக்கச் செய்யும் என்பது, தே.ப. பெருமாள் துணிபு.

ஆங்கிலேயரிடமிருந்து நாடு விடுதலை பெற்றது. ஆயினும், ஆங்கிலத்தினால்தான் முடியும் எனும் மாயை மக்களிடமிருந்து அகலவில்லை. தாய்மொழிக் கல்வியே - தமிழ்வழிக்கல்வியே - உகந்தது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனும் நிலை உடனடியாய் மலர வேண்டும் எனத் தம் ஆவலை வெளிப்படுத்தியுள்ளார், ஆலந்தூர் மோகனரங்கன்.

புதுக்கவிதை எழுதினார், ந. பிச்சமூர்த்தி. பெரியோர் சிலர் இலக்கணம் தெரியாப் பித்தன் என இகழ்ந்தனர்; இளைஞர்களோ சொற்களில் எழிலைக் கொட்டியிருக்கிறாய் எனப் போற்றினர். அவரோ, சிறியோர் வார்த்தையைப் போற்றினேன்; பெரியோர் இரங்கலைத் தவிர்த்தேன் என்கிறார்.

மூளைக்குள் இருக்கும் குப்பை கூளங்களை உதறிக் கொட்டுவதன்று, எழுத்து. தூய்மையான கருத்துகளே எழுதப்பட வேண்டும்; இன்றேல் எழுதுவதைவிட எழுதாதிருப்பது மேல் என்கிறார், புவியரசு.

பயணம்

பயணம் செல்ல எண்ணியதை, பயணம் சென்று வந்ததைச் சிலர் கவிதைகளாக்கியுள்ளனர். தமிழ்ஒளி கொல்லிமலை செல்ல நினைக்கிறார். நீண்ட தொலைவு என்றனர். உழைக்காமல் ஏது பயன்? ஓய்ந்தார்க்கு வெற்றியுண்டா? இதோ கொல்லிமலை செல்கிறேன் எனத் தனி உறுதியுடன் புறப்படுகிறார்.

மா. செங்குட்டுவன், நண்பர்களுடன் இரிசிகேசம் சென்றார். அங்குக் கங்கைக் கரையில் சிறு உருண்டைக் கல்லை எடுத்து வந்து வீட்டு மாடத்தில் வைத்தார். அதைப் பார்க்கும் போதெல்லாம், ஒரு காலத்தில் தமிழர்கள் கங்கைக் கரையில் வடவாரிய அரசர் தலையில் கல்லேற்றிக் கொண்டுவந்தனர்; இன்றைக்கோ எதற்கெடுத்தாலும் வடக்கு நோக்கி நிற்க வேண்டியிருக்கிறது எனும் வேதனை அவர் மனத்தை வருத்துகிறது.

மேட்டூர் அணையின் எழிலைக் காண மனைவியோடு திருச்சி பாரதன் செல்கிறார். அணை தடுப்பதால் நீர் தேங்கிப் பயிர் விளைகிறது. அதைக் கண்டு மனைவி கேட்க, ஊடலைத் தடுத்து ஆசைக்கொரு அணையிட்டால்தான் அன்புப்பயிர் செழிக்கும் என அவரிடம் கவிதை உருவாகிறது.

வாழ்க்கை ஒரு கடல்; இதில் பயணம் செய்ய வேண்டும்; தோணியோ ஓட்டை; தோணித் துடுப்போ பழுது; தோணிக்காரன் தூங்குகிறான். கடலில் பயணம் செல்ல எந்தத் துடுப்பு இங்கு வரும் என்பது பொன். செல்வகணபதியின் ஏக்கமாயிருக்கிறது.

பல்வகை

கையறு நிலை

தம் செல்லக்குழந்தை சின்னஞ்சிறுமி ராஜம் இறந்தபோது, ச.து.சு. யோகியார் பாடியிருப்பது நெஞ்சை உருக்குவதாயுள்ளது.

அக்குழந்தையின் வனப்பையும் பிள்ளைமைத் தன்மையினையும் விரிவாய் உரைத்து,

> **காட்டா தனவெல்லாம்**
> **காட்டிஎம்மைப் பிரிந்தாய்**
> **மீட்டும்எங்கள் வீட்டினிலே**
> **விளையாட வாராயோ?**

எனக் கூறுவதில் சோகம் பின்னிப் பிணைந்து கிடக்கிறது.

அழகு

அழகு என்பது எதுவுமில்லை; எழில் அல்லன என்னும் பேதமில்லை; காணும் உள்ளத்தின் கண்களின் தன்மையில்தான்

யாவும் உள்ளன. காணும் நோக்கே அழகு என வரையறை காண்கிறார், கு.மா. பாலசுப்பிரமணியம்.

அன்பு

நாள்பொழுதெல்லாம் கொண்டிடும் அன்புறவுதான் நலமும் வலுவும் தந்திடும்; அன்பு ஒன்றே கணந்தொறும் வாழ உதவும் என 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பதை விளக்குகிறார், த. கோவேந்தன்.

இன்பம்

இயற்கை எழிலில், வறுமையிலும் செம்மையுடன் வாழும் வாழ்வில், உழைப்பாளர்களின் உழைப்பில், கொடுமை தீர்த்திடும் பணியில் என அத்தனையிலும் இன்பம் இன்பம் எனக் களிக்கிறார், பூவை. செங்குட்டுவன்.

மனக்கன்னி

தம் உள்ளச்சிறையில் ஊழிக்காலம் தவமிருக்கும் மனக்கன்னியை எண்ணிப் பார்க்கிறார், மீ.ப. சோமு.

புதிய தீர்ப்பு

திருடன் ஒருவன், தான் திருடியது உண்மைதான் என்றாலும் தான் திருடன் அல்லன் என அவன் வாதாடிய திறம் கண்டு வள்ளல் சீதக்காதி அவனை மன்னித்து, 'இனி நீ திருந்தித் தமிழுக்குத் தொண்டு செய்க' எனச் சொன்ன புதிய தீர்ப்பினைச் சுவைபடச் சொல்கிறார், சுரதா.

மொழிபெயர்ப்பு

பல்வேறு மொழிக்கருத்துகளைத் தமிழ்க்கவிதைகளில் உருவாக்கம் செய்துள்ளனர், நம் கவிஞர்கள். சவகர்லால் நேரு அவர்கள், தாம் இறந்த பிறகு தம் சாம்பலின் ஒரு பகுதியைக் கங்கை நதியிலும் மீதியை இந்நாட்டின் வயல்பரப்பின்மீதும் தூவ வேண்டும் என எழுதி வைத்த இறுதி முறியை அழகிய கவியோவியம் ஆக்கியுள்ளார், முருகுசுந்தரம்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

சுற்றுச்சூழல் மாசுபடுவதால் நிகழும் கேடுகள் பல. இயற்கை எழில் அழிக்கப்படுகிறது. காற்று, நீர் ஆகியன மாசுபடுகின்றன. உயிர்கள் நலமுடன் வாழ, பல்கி மேம்பட, சுற்றுச்சூழல் காக்கப்பட வேண்டியது இன்றியமையாதது என வலியுறுத்துகிறார், ப. முத்துசாமி.

பண்பு

நல்ல சிந்தனையை வளர்ப்பதுவே செம்மைப்பண்பு. அவ்வாறான நல்ல சிந்தனைகள் எவை என்பதைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார், பூவை. அமுதன்.

நானாக நான்

நானாக நான் இருக்க விரும்புகிறேன். என் மனமே என்னை நாளும் தன் நீதிமன்றத்தில் நிறுத்தி என் தவறுகளைத் தண்டிக்கும். என்னுணர்வே என்னுள்ளே என்றும் இருப்பது என, உன்னையே நீயறிவாய் என்கிறார், ஏர்வாடி இராதாகிருஷ்ணன்.

ஆபத்தான நாள்கள்

ஆபத்தான நாள்கள் அச்சப்படுத்துகின்றன. எதற்கெடுத்தாலும் ஆபத்து நேருமோ எனும் ஐயம் ஏற்படுகிறது. ஒருவேளை 'நாள்' என்று சொன்னால் மரியாதை குறைந்ததாய் எண்ணிவிடுமோ என்று நாள்கள் என மரியாதைப் பன்மையில் சொல்ல வேண்டியிருக்கிறது என ஆபத்தைக் கண்டு அஞ்சி அஞ்சிப் பேசுகிறார், ஞானக்கூத்தன்.

இரவுப் பாடகன்

'ஆடையில்லாத இரவில்' வருகிறான், இரவுப் பாடகன். 'ஒளியின் தியானமே இருள்' எனத் தொடங்கி அவன் பாடுகிற பாடலில் நினைவுகளையும் ஆயுளையும் மரணத்தையும் பாடுபொருள்களாக்கி நம் உள்ளத்தைத் தொடுமாறு கவிதை படைக்கிறார், தமிழன்பன்.

நிழலாடும் எண்ணம்

'பெருங்கவிஞராய் உலா வர வேண்டிய என் குரல் இடையில் ஒரு பலவீனத்தின் காயம்பட்டு (பதிப்பகம் நடத்துதல்) கிணற்றுக்குள் கேட்கும் குரல்போல அடங்கிவிட்டதே' என்று தம்மைத்தாம் உணர்ந்த நிலையில் பாடுவது போலத் தோன்றுகிறது, மீராவின் பாடல்.

கறுப்பு மலர்

நீக்ரோக்கள் அடிமைகளாய் விற்கப்படும் கொடுமையைச் சாடி அவர்களைக் கறுப்பு மலர்களாய் உருவகித்துக் கவிஞர் காமராசன் பாடியுள்ளார்.

வெள்ளைச் சொல்

சொல்லும் எந்தச் சொல்லும் வெள்ளையாய் (உண்மையாய்) இல்லாததால் எனது சொல்லும் வெள்ளையாய் இல்லை எனச் சொல்லுகின்ற இன்குலாப் உண்மையே எழுதப்பட வேண்டும் என வலியுறுத்துகிறார்.

புதிய மாநாடு

நாய்களைப்பற்றிப் பேச மாநாடு கூட்டுகின்றனர், மக்கள். எதிர்காலத்தில் நாய்கள் சுதந்தரமாய் நடமாடிக்கொண்டிருக்கும். மனிதர்கள் பயந்து பதுங்கிக் கிடப்பார்கள் எனப் பேசிக் கொண்டிருக்கும் போதே எங்கோ ஒரு நாய் குரைக்கும் சத்தம் கேட்கிறது. நாய்களைப்பற்றிப் பேசக்கூடாதாம்; கூட்டத்தைக் கலைத்துவிடுவோம் என நாய்கள் குரைக்கின்றனவாம். இவ்வாறு நாயினும் கீழாய் மக்கள் நலிந்து கிடப்பதைக் காட்டுகிறார், மேத்தா.

மரம் என்ன கீழா?

மக்கட்பண்பில்லாதவனை மரம் என்கின்றனர். மரம் என்ன அவ்வளவு கீழானதா? மரம், இருக்கும் போதும், வெட்டப்பட்ட பிறகும் என்னென்ன வகையில் பயன்படுகிறது என்பதை ஒரு நீண்ட பட்டியலிட்டு, அப்படியிருக்க மரத்தைப் பழித்துப் பேசலாமா, நன்றி மறப்பது நன்றா என வைரமுத்து கேள்வி எழுப்புகிறார்.

பனைமரக் கனவு

பனைமரங்கள் கனவு காண்பதாய் ஒரு கற்பனைக் கவிதையை மரபின் மைந்தன் புனைந்துள்ளார். ஓலைகளில் கவிதைகள் எழுதப்படுவதால் அவை சிறப்புறுகின்றன. என்று கம்பன் கவிதைகள் அவற்றில் எழுதப்பட்டனவோ அன்றிலிருந்து தாம் புனிதப்பட்டனவாய் அவை கருதின; கம்பநாடனிடத்தில் பக்தி கொண்டன; உயர்ந்து வளர்ந்து, விண்ணிலிருக்கும் கம்பநாடனுக்கு விசிறியாயின. ஏன் வளர்ந்தாய் பனைமரமே என்பதற்குக் கற்பனை நிறைந்த மறுமொழியைத் தந்துள்ளார், மரபின் மைந்தன்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள் பாடுபொருள், வடிவம், உத்தி ஆகியவற்றில் புதிய உருவெடுத்தாலும், இடைக்காலம்வரை நாடு, மொழி, இயற்கை, காதல் ஆகியனபற்றிய பாடல்களே பெரிதும் பாடப்பட்டு வந்துள்ளன. சமுதாயச் சீர்திருத்தம், வாழ்க்கை அவலங்கள், அன்றன்றைய பிரச்சினைகள்

முதலியன இந்நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே பாடற் பொருள்களாய் இடம் பெறுகின்றன.

சிறப்பான பாடலடிகள்

இந்நூலுள் உள்ள பல அடிகள் அடிக்கடி நாம் கேட்டுக் கேட்டு மனத்தில் பதிந்துள்ளன. சிறப்புக்குரிய அவ்வடிகளை எண்ணிப் பார்க்கக் கீழே தரப்பட்டுள்ளன.

கஞ்சி குடிப்பதற்கிலார் – அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்ச மென்றே – நிதம்
பரிதவித் தேஉயிர் துடிதுடித்தே
துஞ்சி மடிகின்றாரே (பாரதியார்)

பாலின்றிப் பிள்ளைஅழும்
பட்டினியால் தாயழுவாள்
வேலையின்றி நாமழுவோம் – என்தோழனே
வீடுமுச் சூடும்அழும். (ஜீவானந்தம்)

நாய்க்குமிங்கு சோற்றுப்பஞ்சம்
இல்லையிந்த நாட்டிலே
நமக்குமட்டும் ஏன்எனுமோர்
ஞாயங்கேட்க நாதியார்? (கே. சி. எஸ். அருணாசலம்)

இன்பமிங்கே ஒருசிலர்க்கே
என்றும் சொந்தமா? – அந்த
இயற்கைகூட எங்களுக்கு
என்றும் குந்தமா? (ஜீவபாரதி)

நல்லவர்கள் என்பதனால்
நாங்கள் தேய்வதுவோ?
நானிலத்தில் நீதியோ? – அட
வல்லவர்கள் என்பதனால்
வாழ்க்கையில் கொடியோர்கள்
வசந்தங்கள் காணல்சரியோ? (அரசு மணிமேகலை)

பெரிய மனுசன் புளுகி னாக்க
பேப்பரிலே போடுறான்
சின்ன மனுசன் புளுகி னாக்க
செயிலுக்குள்ளே போடுறான் (கொத்தமங்கலம் சுப்பு)

கத்தி இன்றி ரத்தம் இன்றி
யுத்தம் ஒன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்! (வெ. இராமலிங்கம் பிள்ளை)

வெள்ளையரைக் கொக்காக உருவகித்து,

பஞ்சாபில் படுகொலைசெய்த கொக்கு – அது
பழிபாவம் பார்க்காத கொக்கு
அஞ்சாமல் பாஸ்கரன் தமிழ்பாடி – அதை
அடித்து விரட்ட வேண்டும் பாப்பா (பாஸ்கரதாஸ்)

அறுசுவை உணவு,

உன்னை வளர்ப்பன தமிழா – உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே (பாரதிதாசன்)

ஆயாது கொன்றது தப்பென் றறிந்ததும்
ஆருயிர் விட்டவனார்? – ஒருபுறம்
சாயாத செங்கோ லுடையளங் கள்தமிழ்த்
தாயின் பெரியமகன் (புலவர் குழந்தை)

தந்தனதோம் தந்தனதோம்
யாமெழுந்தோம் தோம்தோம்
தமிழரெலாம் ஒன்றிணைந்தோம்
ஒன்றிணைந்தோம் தோம்தோம் (பெருஞ்சித்திரனார்)

திருக்குறள் நெஞ்சில் ஏறின்
சிறைச்சாலை மறையும் தூய
திருக்குறள் பரவு மானால்
தீப்பகை வெறிகள் மாயும். (கா. வேழவேந்தன்)

அலைபடு நிழலில் பிம்பம் தெரியுமா?
மணல் கூண்டில்
கிளிவந்து நுழையுமா? (ந. பிச்சமூர்த்தி)

விலைகொடுத்து வேறெதையும் வாங்க லாகும்
வானத்தை விலைபேசி முடித்தோ ருண்டோ?
(ஏர்வாடி இராதாகிருஷ்ணன்)

ஆசை கடலளவு ஆற்றல் சிறுகுடமே
ஆனாலும் யான்குனிந்து பேனா பிடித்திட்டேன் (பூவண்ணன்)

முத்தமிட்டு வெளுத்திட்ட உதடுபோலும்
முன்வெளுத்த கீழ்வானில் (மீனவன்)

முறையாக முயன்றிட்டால் மெதுவா னாலும்
முன்னேற்றம் நிச்சயமாய்ச் சான்றாய் நிற்கும்
விரைவாக வளருமென உரக்கி டங்கில்
விதையிட்டால் மண்ணின்றி விளைவ துண்டோ?
(பூவை. அமுதன்)

பெரும்வெயிலால் வண்டல்நிலம் வெடிப்ப தைப்போல்
பிளவுபட்டுச் சுயந லத்தால்

வருமான வேட்கையிலே புகுவ தன்றி
மனதிலெதும் விசாலமுண்டா? பொதுநோக் குண்டா?
(பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்)

.....இங்கு
மதமெல்லாம் ஒன்றாகட்டும் – அதற்குமுன்
மனமெலாம் ஒன்றாகட்டும். (தேனிரா. பாண்டியன்)

என்றென்றும் கெடுவதிலை தூய்மை யுள்ளோன்
இறந்தாலும் புகழொன்று நிலைத்து நிற்கும் (முடியரசன்)

நல்லோரே நான்நொண்டி யாகிவிட்டேன்
நாற்சீரில் கடைசிச்சீர் குறைந்தாற் போல (சுரதா)

கத்தைப் பணநோட்டைக் கையிலே நீட்டினால்
கடையிலே ஞானத்தை வாங்கிடலாம் (எஸ். டி. சுந்தரம்)

நட்போடு கேட்கின்றேன்
இளஞ்சிங் கங்காள்
நம்கண்ணாம் பெண்மணக்கப்
பொன்கேட் காதீர்
எட்டிக்காய் அவர்கொடுக்கும்
பணந்தான் அன்னார்
எழிலுள்ளே அடைஇன்பம்
ஈடில் சொர்க்கம் (வா. மு. சேதுராமன்)

மலரில்
முகம் புதைக்கும்
மலரால் முடியுமோ
எந்த நெருக்கத்திலும்
தனது
நிறத்தைப் பூசுவது? (இன்குலாப்)

வெறுங்கை என்பது மூடத்தனம் – உன்
விரல்கள் பத்தும் மூலதனம்
கருங்கல் பாறையும் நொறுங்கிவிடும் – உன்
கைகளில் பூமி சுழன்றுவரும் (தாராபாரதி)

தோணிக ளெல்லாம் ஓட்டையடா
தோழா எதுநம் பாட்டையடா?
தோணித் துறையும் பழுதாச்சு
தோழா நமக்கோ பொழுதாச்சு
இந்தக் கடலில் நம்பயணம்
எந்தத் தோணி இங்குவரும்? (பொன். செல்வகணபதி)

போகும்வழி தூரமென்று
பூமிதனில் அஞ்சிடிலோ
சாகும்வரை நீந்துமிந்தச்
சமுத்திரமும் தூரமன்றோ? (தமிழ்ஒளி)

ஒளியின் தியானமே இருள்
ஒடுக்கத்தின் விரிவே இருள்
விடுதலையின் நிறமே இருள் (ஈரோடு தமிழன்பன்)

இறைவனே நின்படைப்பில்
இருக்கின்ற எண்ணிறந்த
குறையெலாம் நீக்கிக்
குவலயத்தை யான்விழையும்
வடிவி லமைக்கின்ற
வாய்ப்பெனக்குத் தாராய் (வா. செ. குழந்தைசாமி)

எங்கிருந்து வருகிறது
இந்த நதி?
மலைகளின்
மௌனம் உடைந்தா?
முகில்களின்
ஆடை கிழிந்தா?
வனங்கள் பேசிய
இரகசியங்கள் கசிந்தா? (சிற்பி)

ஓர் ஆன்மாவின் யாத்திரை
அடங்கப் போகிறது
ஒரு தேவகானம் அடங்கப் போகிறது...
ஒரு தூய கலைத்திரையில்
ஓடிக் கொண்டிருந்த
ஊமைப்படம்
முடியப் போகிறது... (மீரா)

மனிதா
மனிதனாக வேண்டுமா,
மரத்திடம் வா
ஒவ்வொரு மரமும்
போதி மரம் (வைரமுத்து)

இன்னும் எத்தனையோ அடிகள் எழில் வாய்ந்தவை எனினும், சுருங்கிய அளவில் கருத்து முடிந்துள்ள அடிகள் மட்டுமே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

நூற்பதிப்பு

திரு. முத்துக்குமாரசாமி தொகுக்க, ஓவியர் அமுதோன் இதுவரை எந்த நூலுக்கும் இல்லாத வகையில் வடிவமைப்புச் செய்ய, பதிப்புலகின் மூத்த பெருமைக்குரிய பழனியப்பா பிரதர்ஸ் என்னும் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது. தரமான நூல்களை மட்டும் பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டு வருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராய் விளங்கிய சொல்லின் செல்வர் இரா.பி. சேதுப்பிள்ளை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, கொத்தமங்கலம் சுப்பு, திருக்குறள் வேள் ஜி. வரதராஜன் போன்ற பெருமக்களின் நூல்களை வெளியிட்ட பெருமை இப்பதிப்பகத்துக்குண்டு.

நூல்களின் எண்ணிக்கையைவிட அவற்றின் பயன்படும் தன்மையையே பெரிதும் மதிப்பவர்கள் இப்பதிப்பகத்தார். மிகச்சிறந்த முறையில் இப்பணியை ஆற்றிய, மறைந்த திரு. பழனியப்பச் செட்டியார், பதிப்புப்பணியைத் தொடர்ந்து செய்துவரும் அவர்தம் இளவல் திரு. செல்லப்பச் செட்டியார், மகன் திரு. செல்லப்பன், மருகர் செயல்வீரர் திரு. சுப்பு ஆகியோரை இந்நற்பணிக்காகத் தமிழுலகம் போற்றக் கடமைப்பட்டிருக்கிறது.

தொகுப்பு

இருபதாம் நூற்றாண்டில் ஆயிரக்கணக்கில் கவிஞர்கள் உள்ளனர். எனினும், நூறு கவிஞர்களின் கவிதைகள் மட்டுமே இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. பெருங்கவிஞர்கள் பலரின் பெயர்களும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், நூறு கவிஞர்கள் என்று வரையறை வைத்துக்கொண்டதால் அவர்கள் இடம் பெறவில்லை.

மேலும், தற்போது வாழ்கின்ற கவிஞர்களிடம் அவர்கள் இசைவையும், அவர்தம் பாடலுள் உயிர்ப்பான ஒரு பாடலையும் அனுப்புமாறு தொகுப்பாளர் கேட்டிருக்கின்றார். அவர்கள் அனுப்பாததால் அவர்களின் பெயர்கள் விடுபட நேரிட்டிருக்கலாம்.

இத்தொகுப்பு நிறைவுபெற வேண்டுமாயின் இன்னும் இரண்டு மூன்று தொகுப்புகள் வெளிவந்து, இருபதாம் நூற்றாண்டின் கவிஞர்கள் அனைவரின் கவிதைகளையும் ஒருசேரக் காணச்செய்ய வேண்டும் என்பது என் விழைவு.

இத்தொகுப்பில் இன்று வாழும் கவிஞர்கள் 56 பேர் உள்ளனர்; மற்றையோர் இயற்கை எய்தினர். மறைந்த கவிஞர்களின் பாடல்களைப் பாராட்டி அவர்கட்குப் புகழ் சேர்ப்போம். வாழும் கவிஞர்கள் மேலும் மேலும் நாட்டுக்கும் மொழிக்கும் சமுதாயத்திற்கும் வளமும் நலமும் சேர்க்கும் கவிதைகள் பல ஆக்கித் தர வேண்டும் என வேண்டிக் கொள்வோம்.

வாழ்த்துரை

திரு. முத்துக்குமாரசாமி அவர்கள் இத்தொகுப்பினைத் தொகுத்துள்ளார். இதற்கென அவர் அரிதின் முயன்ற முயற்சியும் உழைப்பும் போற்றத்தக்கன. அவர்க்கு மனம் நிறைந்த பாராட்டுகள்.

ஓவியமே இமை மூடாது தம் ஓவியங்களைக் காண ஆசைப்படும்வண்ணம் வரையக்கூடிய திறன் கொண்ட ஓவியர் அமுதோன், இந்நூலிலுள்ள ஓவியங்களை உயிர்ப்புடன் வரைந்து இந்நூலினை வடிவமைத்துள்ளார். ஓவியக் கவிஞருக்கு உளம் நிறைந்த வாழ்த்துகள்.

பதிப்புத்துறையில் மணிமகுடமாய்த் திகழும் பழனியப்பா பிரதர்ஸ் மேலும் மேலும் இத்தகைய மணிகளைப் பதித்து ஒளிவீசித் திகழ வேண்டுமென்பது என் நெஞ்சார்ந்த விழைவு.

நூல் ஆக்கம்	ப. முத்துக்குமாரசாமி (தொகுப்பாசிரியர்)
வகைமை	கவிதைத் தொகுப்பு
வெளியீடு	பழனியப்பா பிரதர்ஸ், சென்னை—14. (2004)

2

பாரதிதாசன் பாடல்களில் பழந்தமிழ் இலக்கியச் செல்வாக்கு

இருபதாம் நூற்றாண்டுக் கவிதையுலகில் பாரதிதாசன் தனித்த முதன்மையிடம் பெற்றுத் திகழ்பவர். பாவேந்தர் என அனைவராலும் போற்றப்படும் பெருமைக்குரியவர்.

நானோர் பாவேந்தன் என்பதை
நானிலத் தமிழர் நன்றே அறிகுவர்

என அவரே கூறியிருக்கக் காண்கிறோம். எழுச்சி மிகுந்த, புரட்சிகரமான பாடல்களைப் பாடியிருப்பதால் புரட்சிக்கவிஞர் என்றும் போற்றப்படுகிறார். அறிஞர் மு.வ. அவர்கள், புரட்சிக் கவிஞர் என்றாலே இந்த நூற்றாண்டிலும் இதற்கு முந்தைய நூற்றாண்டிலும் வேறு யாரையும் குறிக்காமல் பாரதிதாசன் ஒருவரையே குறிக்குமாறு தமிழிலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுவிட்டார் எனச் சிறப்பித்துக் கூறுகிறார். பாரதிதாசனைப் பின்பற்றிப் பாரதிதாசன் பரம்பரை எனப் பெரிய கவிஞர் பேரணியே உருவாகியுள்ளது. ஒருவரின் பரம்பரைக் கவிஞர் என்று சொல்லிப் பெருமை கொள்கின்ற கவிஞர் கூட்டம் பாரதிதாசனுக்குப் போல வேறு எவருக்கும் அமையவில்லை.

என்நடை தம்நடை; என்யாப்புத் தம்யாப்பென்று
இந்நாள் எழுந்துள பாவலர் தம்மை
எண்ணினால், இருப்பவர் தம்மில் நூற்றுக்குத்
தொண்ணூற் றொன்பது பேர்எனச் சொல்லுவர்

எனப் பாரதிதாசனே கூறியிருக்கிறார்.

பாவேந்தர், தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாய்ப் பெரும் தமிழாசிரியர்களிடம் கற்றவர்.

தமிழி லக்கணம் தமிழி லக்கியம்
எனக்குச் சொல்லிக் கொடுத்தவர் புதுவைத்
திருப்புளி சாமி ஐயா, செந்தமிழ்
இருப்பே என்னும் பங்காரு பத்தர்,
புலவர்க்கும் புலமை ஈந்து நிலவும்

பெரும்புகழ்ப் பெரிய சாமிப் பிள்ளை
என்பவர் ஆவர்

எனப் பாரதிதாசனாரே தம் ஆசிரியர்களைப்பற்றிச் சொல்கிறார். ஆசிரியர்கட்கு அவர் தந்துள்ள அடைமொழிகளே அவ்வாசிரியர்களின் புலமை நலத்தை வெளிப்படுத்துகின்றன. ஆசிரியரை 'ஐயா' என அன்பொழுகச் சொல்லுகிறார்; 'செந்தமிழ் குடியிருக்கும் நிலையம்' எனப் பெருமைப்படுத்துகிறார்; 'புலவர்க்கும் புலமை நல்க வல்ல பெரும்புலவர்' எனப் போற்றுகிறார்.

பெரும் பேராசிரியர்களிடம் பழந்தமிழை ஆழமாயும் அழுத்தமாயும் பயின்றதால் பாரதிதாசனாரிடம் நுண்ணிய தமிழறிவும் புலமையும் படியலாயின. ஆதலின், அவர் பண்டைத் தமிழ்நலம் பொலிய எழுதும் வாய்ப்பினைப் பெற்றார்.

கவிஞர் கருவூர்க் கன்னல், 'பாரதிதாசன் பாடல்களில் பழந்தமிழ் இலக்கியச் செல்வாக்கு' எந்த அளவுக்கு இடம் பெற்றுள்ளது என்பதை விரிவாய் ஆய்ந்து, கன்னல் சாற்றினும் இனிமையாய் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார்.

மலரின் மணம், அம்மலர் உள்ளவரை தொடர்ந்து பரவிக் கொண்டே இருப்பதுபோல, உயர்ந்த இலக்கியக் கருத்துகளும் அவற்றின் பின்னர்த் தோன்றும் இலக்கியங்களில் படிந்து அவ்விலக்கியங்களைச் செழுமைப்படுத்திக்கொண்டே இருக்கும்.

நம் உள்ளத்தின் ஆழத்தே பதிந்திருக்கும் செய்தி, நாம் சொல்வதிலும் எழுதுவதிலும் ஏதாவதொரு வகையில் வெளிப்பட்டே தீரும். பாரதிதாசன் உள்ளத்தே பழந்தமிழ் இலக்கியக் கருத்துகள் நிரம்பித் ததும்புவதால் அவருடைய பாடல்களில் அக்கருத்துகள் தக்க இடங்களில் பதிந்து பொன்னில் பதிக்கப்பட்ட மணிகள்போல ஒளி வீசிச் சிறக்கின்றன.

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க இலக்கியங்கள்; தமிழரின் தொன்மை இலக்கியங்கள். சங்க காலத்தையொட்டித் தோன்றிய திருக்குறள் உலகில் தமிழர்க்குப் புகழ் சேர்க்கும் ஒப்பற்ற நூல். எட்டுத்தொகையுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய அக இலக்கியங்களும், புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய புற இலக்கியங்களும், பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படையும் பட்டினப்பாலையும், தமிழ்மறையாம் திருக்குறளும் பாரதிதாசன் பாடல்களில் எவ்வாறு தம் செல்வாக்கைச் செலுத்தியுள்ளன என்பதையே கன்னல் தம் ஆய்வுக் களமாய்க் கொண்டுள்ளார்.

சங்கப் பாடல்களும் திருக்குறளுமே நாம் தவறாது கற்க வேண்டியவை; நமக்கு உயர்வையும் பெருமையையும் புகழையும் தருவன அந்நூல்களே என்பதைப் பாரதிதாசனே தம் பாடலில் கூறுகிறார்.

நூலைப்படி – சங்கத்தமிழ்
நூலைப்படி – முறைப்படி
நூலைப்படி (நூலை)

காலையில்படி கடும்பகல்படி
மாலைஇரவு பொருள்படும்படி (நூலை)

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வ தெப்படி? (நூலை)

அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம்படி
இறந்த தமிழ்நான்மறை
பிறந்ததென்று சொல்லும்படி (நூலை)

அகப்பொருள்படி அதன்படி
புறப்பொருள்படி நல்லபடி
புகப்புகப் படிப்படியாய்ப்
புலமைவரும் என்சொற்படி (நூலை)

பாட்டுப் படிக்க வேண்டும். வள்ளுவர் சொன்னபடி படிக்கவேண்டும். எவற்றைப் படிக்க வேண்டும்? அறம், பொருள், இன்பத்தைக் கூறும் திருக்குறளைப் படிக்க வேண்டும். மேலும், அகப்பொருள், புறப்பொருள்பற்றிக் கூறும் சங்க இலக்கியங் களைப் படிக்க வேண்டும் என்கிறார், பாரதிதாசன். தமிழர்கள் படிக்க வேண்டியவை திருக்குறளும் சங்க இலக்கியங்களுமே எனப் பாரதிதாசனின் இப்பாடல் பகர்கிறது. அவர் சொல்லும் இவ்விலக்கியங்கள் அவர் பாடல்களில் பெற்றுள்ள செல்வாக்கை ஆய்வுப் பொருளாய்க் கன்னல் எடுத்துக்கொண்டது மிகவும் பொருத்தமானதாகும்.

பண்டைய இலக்கியங்களில் ஊறிப்போயிருப்பது, புத்திலக்கியம் படைப்பவர்க்கு ஒரு வகையில் இடர்ப்பாடாகி விடுவதுமுண்டு. எதைச் சொல்ல நினைத்தாலும் முன்னர் அறிந்துள்ள கருத்துகள் முன்வந்து நின்று, படைப்பில் இடம் பெற்று, படைப்பாளியின் தனித்தன்மையை இல்லாததாக்கி விடக்கூடும். பாரதிதாசன் இவ்விடர்ப்பாட்டுக்கு ஆளாகாமல், பழந்தமிழர் இலக்கியக் கருத்துகளைப் புதிய நோக்கிலும்

போக்கிலும் கையாண்டு வெற்றி பெற்றிருப்பதைக் கன்னலின் ஆய்வு நிறுவிக் காட்டுகிறது.

இலக்கிய நீர்ப்பரப்பில் நீந்திடும் பாரதிதாசனுக்குக் காலில் கட்டிய கல்லாய்க் கீழே இழுத்து அழுத்திடுவனவாய் இல்லாமல், மிதவையாய் அமைந்து வேண்டிய திசையில் வேண்டிய முறையில் நீந்தி மகிழச்செய்வனவாய்ப் பழந்தமிழ் இலக்கியக் கருத்துகள் துணை நின்றிருப்பதைக் கன்னலின் ஆய்வு தெளிவுபடுத்தியுள்ளது.

அன்புடையவர்கள் செய்யும் எதுவும் இன்பமாகவே இருக்கும்; அழகற்ற ஒன்றைத் தந்தாலும் அது அழகின் முடிப்பாய்த் தோன்றும். அவ்வன்பு மாறினாலோ, எதைச் சொன்னாலும் செய்தாலும் கசப்பாகவே இருக்கும். தலைவன் பரத்தை வீடு சென்றமையால் தலைவி ஊடியிருந்தாள். தலைவியின் பிணக்கைத் தீர்த்துத் தன்னுடன் கூடி மகிழச்செய்யுமாறு தலைவன் தோழியை வேண்டினான். தோழியோ, "தலைவ! என் தலைவி உனக்கு வேண்டியவளாய் இருந்தபோது அவள் வேப்பங்காயைத் தந்தபோதும் அதனை இனிக்கின்ற கட்டியென இருப்பதாய்ச் சொன்னீர்! இப்போதோ, அவள் பாரி வள்ளலின் பறம்பு மலையிலுள்ள சுனைநீரைக் குளிர்ச்சி மிக்க தை மாதத்தில் தந்தாலும், அது சுடுகிறது; துவர்க்கிறது என்று சொல்லும் நிலையில் உள்ளீர். உங்கள் அன்பின் தன்மை இதுதானோ" என்று கூறுகிறாள்.

வேம்பின் பைங்காய்என் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர்; இனியே
பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்;
ஐய! அற்றால் அன்பின் பாலே!

என்பது குறுந்தொகைப் பாடல் (196).

தலைவன் தலைவியரிடையே உள்ள அன்பு, என்றும் எந் நிலையிலும் மாறாததாய் இருக்க வேண்டும். தலைவனிடம் தலைவியை ஒப்படைக்கும் தோழி, "தலைவ! இன்று இவள் அண்ணாந்து உயர்ந்த அழகிய கொங்கைகளையும் கருமணி போன்ற கூந்தலையும் கொண்டிருக்கிறாள். இவ்விளமை மாறி முதுமை எய்தி, கொங்கைகள் தளர்ந்தாலும், கூந்தல் நரைத்தாலும் முயக்கத்திற்குப் பயன்படாது முதுமையடைந்துவிட்டாள் என்று கைவிட்டுவிடாது, பாதுகாப்பாயாக" என்று கூறுகிறாள். இக்கருத்தைக் கொண்டதாய்,

அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர!

என்னும் நற்றிணைப் பாடல் (10) விளக்குகிறது. இளமையில் உடலால் பெறும் இன்பம் முதுமையிலும் கிடைக்காதென்பதால் இவளைக் கைவிட்டுவிடுதல் கூடாது எனத் தோழி கூறுகிறாள்.

இக்கருத்து வழிவழியாய்ச் சொல்லப்பட்டு வந்துள்ளது. திருமணங்களில் வாழ்த்தும்போது 'இன்றுபோல் என்றும் இரும்' என்று வாழ்த்துவதைக் கேட்டிருப்போம். இஃது அரசிளங்குமரன் ஒருவனுக்குத் திருமணம் நடந்தபோது ஔவை வாழ்த்திப் பாடியுள்ள வெண்பாவின் ஈற்றடி ஆகும்.

ஆயன் பதியில் அரன்பதிவந் துற்(று),அளகம்
மாயன் ஊதுங்கருவி ஆனாலும் – தூயமணிக்
குன்றுபோல் வீறு குவிமுலையார் தம்முடன்நீர்
இன்றுபோல் என்றும் இரும்

என்பது அவ்வெண்பா. இஃது ஒரு தனிப்பாடல். ஆயன் பதி-திருமாலின் இருப்பிடம். திருமால் ஆலிலைமேல் இருப்பதாய்க் கூறுவதுண்டு. பெண்களின் உறுப்புகளுள் வயிற்றை ஆலிலை போன்றதென்பர். அரன் சிவபெருமான். அவன் இருப்பிடம் மலை. பெண்களின் கொங்கைகளை மலை என்பர். மாயன் திருமால். ஊதும் கருவி - சங்கு. இது வெண்மையானது.

மலையைப் போன்றுள்ள இவள் கொங்கைகள் வற்றித் தளர்ந்து வயிற்றிலே படியவும், கூந்தல் சங்கைப்போல் வெளுத்து நரைத்துவிடவும் செய்கின்ற அந்த முதுமைக்காலத்திலேயும் இப் பெண்ணுடன் இன்று கொள்ளும் இன்பத்தைப்போலவே அன்றும் கொண்டிருக்க வேண்டும். இளமையில் உள்ள இந்த அன்பு, உடல் வற்றித் தளர்ந்த முதுமையிலேயும் இருக்க வேண்டும் என்பது பாடலின் பொருள்.

நற்றிணைப்பாடல், ஔவையின் பாடல் ஆகிய இரண்டையும் நெஞ்சகத்தில் ஏந்தியுள்ள பாரதிதாசனார்,

இன்றுபோல் என்றும்நீர்
அன்பினில் தென்பினில்
நன்று குறள்போல வாழ்க!
நற்றிணைப் பாடல்போல் வாழ்க!!

ஓங்கிய மார்பெழில்
ஒளியுமிழ் திருமேனி

பாங்கு தளரினும் கைவிடாய்
பசையற்றுப் போகுமோ மெய்விடாய்!

கூந்தல் நரைத்தாலும்
கொண்டநின் காதற்சொல்
ஏந்திய பெண்ணினைத் தள்ளவையோ?
இன்றுபோல் என்றும்நீ கொள்வையே!

எனத் தேனருவியாய்ப் பாடியிருக்கிறார். இதில், முந்தைய பாடல்களின் கருத்து இருந்தாலும், சொல்லும் முறையிலே தமக்கென ஒரு தனிப் பாங்கினைக் கொண்டு சுவை கூட்டுகிறார்.

முன்னோர் மொழிந்த மொழியைப் பொன்னேபோல் போற்றி ஏற்பினும், அஃதை அப்படியே கூறுவது பெரும் புலமைக்குப் பொருந்துவதாகாது. இக்கருத்தினில் தம் தனித்துவத்தைக் காட்டப் பாரதிதாசன், 'முதியோர் காதல்' என ஒரு நெடும்பாடலையே குடும்ப விளக்கின் ஒரு பகுதியாய்ப் பாடியிருக்கிறார். பழைய மரத்தின் விதையினின்று தோன்றியுள்ள புதுமரம்.

"தள்ளாக் கிழப்பருவம்! ஐம்புலன்களும் ஓய்ந்துவிட்டன. தோலும் இல்லை என்பது போன்று எலும்பு தெரியும் உடம்பு. செய்வதொரு செயலில்லை. இன்பமுறல் ஏது?" என்று முதியவரைக் கேட்க அவர் சொல்கிறார் :

வாய்,மூக்குக் கண்,காது மெய்வா டினாலும்
மனைவிக்கும் என்றனுக்கும் மனமுண்டு கண்டீர்!
தூய்மையுறும் அவ்விரண்டு மனம்கொள்ளும் இன்பம்
துடுக்குடைய இளையோரும் படைத்திடுதல் இல்லை;
ஓய்வதில்லை மணிச்சிறகு! விண்ணேறி நிலாவாம்
ஒழுகமிழ்து முழுதுண்டு பழகுதமிழ் பாடிச்
சாய்வின்றிச் சறுக்கின்றி ஒன்றையொன்று பற்றிச்
சலிக்காதின் பங்கொள்ளும் இரண்டுமனப் பறவை!

என முதியோர் காதலில் பாரதிதாசன் பாடியிருக்கிறார். நற்றிணைப் பாடலின் செல்வாக்கு, இதுவரை தமிழில் யாரும் பாடாத முதியோர் காதலைப் பாடிடத் தூண்டியிருக்கிறது. இப்புத்திலக் கியத்தில் முதுமை இளமைத் தோற்றங்களையும், உடலால் முதுமை பெற்றாலும் உள்ளத்தால் முன்பிருந்ததைவிட மேலும் அன்பு செறிந்தவர்களாய் இருப்பதையும் சொல்லிக் காட்டுகிறார். இளமையில் உடலால் இன்பம் பெற்றவர்களை முதுமையில் உள்ளத்தால் அன்பு கௌவச் செய்கிறார்.

இதைப் போலவே ஒவ்வோர் இலக்கியமாய் எடுத்துக் கொண்டு அதன் செல்வாக்கு, பாரதிதாசன் பாடலில் எவ்வாறு

இடம் பெற்றிருக்கிறது என்பதைக் கன்னல் விரிவாய் ஆய்ந்து செல்கிறார். பழைய இலக்கியங்களின் கருத்தை, கற்பனையை, உவமையை, சொற்றொடரை, உள்ளுணர்வை எவ்வெவ்வா றெல்லாம் கையாண்டு மெருகூட்டியிருக்கிறார் என்பதைக் கன்னல் வெகு தெளிவாய் எடுத்துக் காட்டுகிறார். கன்னலின் ஆய்வினைப் பார்க்கும்போது, சங்க இலக்கியக் கருத்துகளை இவ்வளவு பெருமளவில் ஏற்றுக் கையாண்டு புதுமையோடு பொலிவு சேர்த்தவர் பாரதிதாசனைப்போல எவருமிலர் என்று துணிந்து கூறலாம்.

அகத்திணையில் உள்ள துறைகளைப்பற்றிப் பாடுகின்ற போது இன்றைய நிலைக்கேற்பப் பாரதிதாசன் அதற்குச் சுவை கூட்டத் தவறுவதில்லை. பரத்தையிற்பிரிவில் தலைவன்மீது வருத்தம் கொள்ளும் தலைவியைச் சங்கப்பாக்களில் காண்பதற்கும், பாரதிதாசனுடைய பாடலில் காண்பதற்கும் வேறுபாடு உண்டு. பாரதிதாசன் படைத்துள்ள தலைவி பாடுகிறாள் :

போனால் போகட்டுமே – பசும்
பொன்னா யிருந்தவன் பித்தளை யாய்அங்கே
– போனால் போகட்டுமே!

ஆனாலும் என்றன் அன்பை மறந்தான் – அந்த
ஆந்தை கூட்டிற் புறாவாய்ப் பறந்தான்
ஊனாய் வற்றிய பசுவைக் கறந்தான் – அவன்
உள்ளன்பி லாதவ ளால்சீர் குறைந்தான் – போனால் போகட்டுமே!

வாழ்க்கையி லேபங்கு கொண்டவள் நானா – அன்றி
வரவுக்கோர் இரவெனும் அம்மங்கை தானா?
தாழ்வுற்ற நேரத்துத் தளர்ச்சியுற் றேனா? – அவன்
தழைத்திருந்த போதும் தலைநிமிர்ந் தேனா?
– போனால் போகட்டுமே!

இங்குப் புதுமைப்பெண்ணின் சாடலைக் காண்கிறோம். பொன்னாயிருந்தவன் பித்தளையாயினான். ஆந்தைக் கூட்டிலே சென்று தங்கும் புறாவாகிவிட்டான் என்ற இக்கடுமையை தாக்குதலை - பழைய இலக்கியங்களில் காண முடியாது. ஏக்கமும் எதிர்ப்பும் மட்டுமே இருக்கும். இது போன்ற சீற்றத்தைக் காண முடியாது.

திருக்குறளைப் பாவேந்தர் உயிரென மதித்தார். உலகில் அறம் எது என்பதை விளக்கி நல்வழி காட்டிடத் திருக்குறள் போன்ற ஒரு நூல் இல்லை என்பதிலே அவர் உறுதியாய் இருக்கிறார்.

பெற்றோர், குழந்தையிடம் கேட்பதாய் இசையமுதில் ஒரு பாடல். துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து மீட்டினால் இன்பம் சேரும். தமிழில் பாடினால் அல்லல் நீங்கி அன்பு பொங்கும்.

அறமி தென்றும் யாம்,மறமி தென்றுமே
அறிகி லாத போது – யாம்
அறிகி லாத போது – தமிழ்
இறைவ னாரின் திருக்குறளிலே ஒருசொல்
இயம்பிக் காட்ட மாட்டாயா? – நீ
இயம்பிக் காட்ட மாட்டாயா?

திருவள்ளுவரைத் தமிழ் இறைவன் என்கிறார்.

ஒருவன் பாட்டைப் படித்துச் சுவையாதவன்; ஆனாலும் பத்திலக்கம் சொத்துடையவன். பெண் கேட்க வந்தான். பெண்ணோ, வீட்டுப் படியேற வேண்டா என்று அவனை விரட்டி விட்டாள். அவன் பின்பு வந்து, "திருவள்ளுவர் செய்த திருக்குறளைப் படித்துத் தேர்ந்து வந்துளேன்" என்றான். உடனே அப்பெண், "அப்படியானால் நீ வா! நீ இன்பத்தை வழங்கிடு. நான் அதை ஒருபடித் தேன் என உண்டு இன்பம் கொள்வேன்" என்கிறாள். திருக்குறள் படித்தவனிடம் அவன் சுவைக்கத் தன்னைத் தேனாய் ஒப்படைக்கத் தலைவி ஒப்புகிறாள் எனச் சொல்கிறது, பாவேந்தரின் ஒரு பாடல் :

பாட்டுப் படியானாம்; பத்திலக்கம் உள்ளவனாம்
வீட்டுப் படியேற வேண்டாம்என் றோட்டினாள்;
வள்ளுவன் படித்தேன்என் றான்;நீ வழங்கிடு,நான்
கொள்ளுவன் படித்தேன் என்றாள்.

மணமாக இருப்பவனிடம் முதலில் அமைந்திருக்க வேண்டிய தகுதி அவன் திருக்குறள் கற்றிருக்க வேண்டும் என்பதேயாகும்.

இவ்வாறு திருவள்ளுவர்மேல் அளவற்ற காதல் கொண்ட பாவேந்தர், தம் பாடல்களில் திருவள்ளுவரை எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதை விளக்க, கன்னல் தம் ஆய்வின் பெரும்பகுதியை ஒதுக்கியிருக்கிறார். அவர் ஒதுக்கியிருக்கிறார் என்று கூறுவதைவிடப் பாவேந்தர், வேறெவ்விலக்கியத்தையும் விடத் திருக்குறளை மிகுதியும் கையாண்டிருப்பதால், அதற்கேற்பக் கன்னலின் ஆய்வும் இங்கே விரிவுபட்டிருக்கிறது என்று கூறலாம்.

முழுமையாய்த் திருக்குறளைத் தம் பாடலில் பாரதிதாசன் பயன்படுத்தியுள்ள இடங்கள் உண்டு.

குழந்தை சேற்றுக்கையோடு தந்தை உண்ணும் தயிரின் சோற்றைப் பிசைந்து, அதனை அள்ளித் தந்தைக்கு ஊட்டுகிறாள்.

அப்பனும் வாய் திறந்து அதை வாங்கி உண்கிறான். இக்காட்சியைப் பாடும் பாவேந்தர் பாரதிதாசன்,

> சேறும் சோறும் தந்தைக்குத் தேனே
> நீலத் தயிரும் நிலாநிறத் தயிரே
> 'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
> சிறுகை அளாவிய கூழ்'எனச் செப்பிய
> வள்ளுவர் வாய்ச்சொல் பொய்யென
> விள்ளுவர் உளரோ விரிநீர் உலகிலே!

என எழுதுகிறார். இங்கு, 'அமிழ்தினும் ஆற்ற.... கூழ்' எனும் முழுத் திருக்குறளை அப்படியே எடுத்தாண்டிருக்கிறார். இவ்வாறு முழுமையாய்ப் பதினெட்டுத் திருக்குறள்களைப் பாரதிதாசன் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளார் எனக் கன்னல் கணக்கிட்டுச் சொல்கிறார்.

திருக்குறள் கருத்துகளைத் தம்முடையனவாய் ஏற்றுத் தம் நடையில் எழுதும் இடங்களும் உண்டு.

> செல்லாமை உண்டேல் எனக்குரை; மற்றுநின்
> வல்வரவு வாழ்வார்க்கு உரை

என்பது திருக்குறள். இதே கருத்தைப் பாரதிதாசன்,

> இருப்பதாய் இருந்தால் என்னிடம் சொல்க–நீ
> போவதாய் இருந்தால் என்கட்டைக்குச் சொல்என்றாள்

எனப் பாடுகிறார்.

தம் பகுத்தறிவுக் கருத்துக்கும் திருக்குறளைப் பாரதிதாசன் பயன்படுத்திக்கொள்கிறார். நாடிமுத்து என்பவன் வேடப்பன் என்பவனிடம் இன்றியமையாச் செலவுக்குப் பத்து ரூபாய் கடன் கேட்டான். வேடப்பன் கொடுப்பதாய்ச் சொன்னான். அதற்குள் வேடப்பன் மகள், திருக்குறள் நூல் ஒன்றைக் கொண்டுவந்து போட்டுத் 'திருக்குறளில் கோயில் காட்டுப்பா' என்றாள். வேடப்பன், 'திருக்குறளில் கோயில் இல்லையம்மா' என்றான். இதனைக் கேட்ட நாடிமுத்து, 'தில்லைக் கோயிலுக்குச் செல்லவே பணம் கேட்டேன். திருக்குறளில் கோயில் இல்லையா? அப்படியானால் நான் ஏன் அக் கோயிலுக்குச் செலவிட வேண்டும்? நல்லவேளை, பத்து ரூபாய்க் கடனிலிருந்து தப்பினேன்' எனக் கூறுகிறான்.

> தில்லைக் கோயிலுக்குச் செல்ல எண்ணியே
> பத்து ரூபாய், பணம்உனைக் கேட்டேன்
> கோயில் இல்லையா குறளில்?
> ஆயில்,என் பணத்துக் கில்லை அழிவே

எனத் தாம் கொண்டுள்ள நாத்திகக் கருத்துக்கும் பாரதிதாசன் திருக்குறளை இழுத்துக்கொள்கிறார்.

எல்லாப் பொருளும் இதன்பால் உள;இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் – சொல்லால்
பரந்தபா வால்என் பயன்?வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை

என்பது திருவள்ளுவமாலைப் பாடல். இக்கருத்தைப் பாவேந்தர் பாரதிதாசன் அப்படியே ஏற்கிறார்.

வெல்லாத தில்லை
திருவள்ளு வன்வாய் விளைத்தவற்றுள்
பொல்லாத தில்லை
புரைதீர்ந்த வாழ்வினி லேஅழைத்துச்
செல்லாத தில்லை
பொதுமறை யான திருக்குறளில்
இல்லாத தில்லை
இணையில்லை முப்பாலுக் கிந்நிலத்தே!

எனத் திருவள்ளுவமாலைப் பாடலுக்கு ஒரு விளக்கமாய் எழுதுகிறார்.

பாரதிதாசனின் காதற்பாடல்களில் காட்சி, குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், நலம்புனைந்துரைத்தல், காதற்சிறப்புரைத்தல், நாணுத் துறவுரைத்தல், அலர் அறிவுறுத்தல், பிரிவாற்றாமை, படர் மெலிந்திரங்கல், கண்விதுப்பழிதல், பசப்புறு பருவரல், தனிப்படர் மிகுதி, நினைந்தவர் புலம்பல், கனவுநிலை உரைத்தல், பொழுது கண்டிரங்கல், உறுப்பு நலன் அழிதல், நெஞ்சொடு கிளத்தல், நிறையழிதல், அவர்வயின் விதும்பல், குறிப்பறிவுறுத்தல், புணர்ச்சி விதும்பல், நெஞ்சொடு புலத்தல், புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை ஆகிய திருக்குறளிலுள்ள அகத்துறைகள் அத்துணையும் ஆளப்பட்டுள்ளன. ஒவ்வொன்றுக்கும் சான்று தருவது நீளுமாதலின் சிலவற்றிற்கு மட்டுமே இங்குத் தரப்படுகிறது.

நேருக்கு நேரிரண்டு
கெண்டை கண்டேன் நெற்றி
நீராழி மண்டபத்தில் – அதற்
கப்புறம் ஓர்புறத்தில் – கடும்
போருக்குப் பாரை வளைத்தஇரு
புருவங் கண்டேன்

'காட்சியை' இப்பாடல் இனிய எளிய முறையில் விளக்குகிறது. நெற்றி, நீராழி மண்டபம்; அதிலே இரு கெண்டைகள், வளைந்த புருவங்கள். இவள் கண்கள் கோணாமல் நேராய் இருந்து மறைக்குமானால் யான் நடுங்கும்படியான துன்பத்தைச் செய்ய மாட்டா என்கிறது, திருக்குறள்.

கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண்.

வளைந்த இவள் புருவங்களே நடுங்க வைக்கின்றன என்னும் இக்கருத்தை, 'கடும் போருக்குப் பாரை அழைக்க வளைத்த இரு புருவம்' என்கிறார், பாரதிதாசன்.

யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்

என்னும் திருக்குறளில், காதலன் பார்க்காதபோது காதலி அவனை நோக்கி மெல்லத் தனக்குள் நகைத்து மகிழ்வாள் எனக் குறிப்பறிவது கூறப்படுகிறது.

விழலாக வில்லைஎன்
காதல் விண்ணப்பம்
அழகிய மயிலுக்கென் நன்றி
விழியினால் எழுதினால் ஒப்பந்தம்
வெண்ணகையால் இட்டாள் கையெழுத்தும்

என்பது பாரதிதாசன் பாடல். ஒப்பந்தம் எழுதினால் மட்டும் போதாது; கையெழுத்துப் போட்டால்தான் செல்லுபடியாகும். அவள் பார்க்கிறாளே, அது விண்ணப்பம். மெல்ல நகைப்பது, விண்ணப்பத்தில் இடப்படும் கையெழுத்தாம்.

இதே கருத்தை மற்றோரிடத்திலும் கவிஞர் கூறியிருக்கக் காண்கிறோம்.

கன்னி யனுப்பும் புதுப்பார்வை – அவள்
கட்டுடல் மீதிலும் தோளினிலும் – சென்று
மின்னலின் மீண்டது! கட்டழகன் – தந்த
விண்ணப்பம் ஒப்பினள் – புன்னகையால்

கன்னியின் புன்னகை, கட்டழகனின் காதல் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டதற்கான அடையாளமாகிறது.

காட்சியிலே மற்றோர் இயல்பான ஆனால், சங்க இலக்கியங்களிலும் குறளிலும் இல்லாத புதுமையானதொரு - நிகழ்ச்சியைப் பாரதிதாசன் படைத்துக் காட்டுகிறார்.

சுந்தரன் தன் வீட்டில் தனியே பாடம் படித்துக்கொண்டிருக்கிறான். பக்கத்து வீட்டுச் சொர்ணம் அங்கே வந்தாள்.

கூடத்திலே மனப் பாடத்திலே – விழி
கூடிக் கிடந்திடும் ஆணழகை

தன் குளிர்ந்த பார்வையாலே நோக்கினாள். காலடியோசை கேட்டுப் பாடம் படித்திருந்த சுந்தரன் தலை நிமிர்ந்தான்.

பாடம் படித்து நிமிர்ந்த விழி – தனிற்
பட்டுத் தெறித்தது மானின் விழி

அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் உள்ளத்தாலே விரும்பியவர்கள். அதுவரை சொல்லிக்கொள்ள வாய்ப்பில்லை. அப்போதோ தனித்திருந்தனர். ஆயினும், நாணமும் கூச்சமும் பேச்சைத் தடுத்தன.

ஆடை திருத்தி நின்றாள் அவள்தான் – இவன்
ஆயிரம் ஏடு திருப்பு கின்றான்.

எதிர்பாராது தனியே கண்டதும் வேட்கை மீதூர, அவளோ பேச முடியாது தன் ஆடையைத் திருத்துவதுபோல அவனைப் பார்த்தும் பாராதவளாய் நிற்கிறாள். அவன் உள்ளமோ பாடத்தில் படியவில்லை. ஆனால், விரல்களோ ஏடுகளைப் பக்கம் பக்கமாய்ப் புரட்டுகின்றன. மெய்ப்பாடுகள் வாயிலாகவே உள்ளக் கிடக்கையை உணர்த்தும் அருமையான காட்சி இது. "நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்" என்பதில் உள்ளதைவிடச் சிறப்பான ஒரு சூழ்நிலையை உருவாக்கி, காதலர் ஒருவரையொருவர் காணுகின்ற காட்சியைப் படைக்கிறார், பாரதிதாசன்.

புணர்ச்சி மகிழ்தலைக் கூறும்போது திருவள்ளுவர்,

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்

என்கிறார். 'இவளை நீங்கினால் சுடுகிறது; நெருங்கினால் குளிர்கிறது. இவள் என்ன ஒரு புதுமையான தீயாய் இருக்கிறாளே!' என்று திருக்குறளில் வரும் காதலன் கூறுகிறான்.

பாரதிதாசன் படைக்கும் காதலன் காதலியைப் புதுமையான தேன் என்கிறான்.

உண்டாலே தேன் மலரின் தேன்– இவள்
கண்டாலே தித்திக்கும் தேன்

தேன், உண்டாலே இனிக்கும். இவள், கண்டாளே தித்திக்கிறாளே!

இது,

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு

எனும் திருக்குறள் கருத்தையும் உள்ளடக்கியிருக்கிறது.

சங்க மரபுக்கேற்ற காதலைப் பாடுகின்ற பாரதிதாசன், இக்கால நிலைமைக்கேற்பச் சில புதுமைகளையும் இணைக்கிறார். கைம்மைத்துயர், கைம்பெண் திருமணம், பொருந்தாத் திருமணம், குழந்தை மணம், குடும்பக் கட்டுப்பாடு போன்ற புதிய துறைகளையும் படைத்துக் காட்டுகிறார்.

சங்க இலக்கியக் காதலில் தமிழ்மொழி பற்றிக் கூறப்பட வில்லை. பாரதிதாசனின் காதல் பாடல்களில் மொழி முக்கிய இடம் பெறுகிறது. காதல், சாதி உயர்வு தாழ்வு என்னும் வேறுபாடுகளைப் பார்ப்பதில்லை. பாரதிதாசனும் காதலில் சாதிமத வேறுபாடுகளைக் காண்ப தில்லை. காதலுக்குக் கண்ணில்லை என்பர். ஆயினும், தமிழை நோக்கும்போது பாரதிதாசனில் காதற்பார்வை குருடாவதில்லை. சாதிமத வேறுபாடுகள் காதலில் குறுக்கிடக் கூடாது என்னும் அவரே, காதலுக்காய்த் தமிழை இழக்க இசையவில்லை. காதலுக்காய் எதையும் துறக்கலாம் என்னும் அவரே தமிழைத் துறக்கக் கூடாது என்கிறார். தன்மீது அவளே ஆசை கொண்டாலும் தமிழறியா ஒருத்தியைத் தமிழன் மணக்கக் கூடாது என்று தடுக்கிறார்.

உன்மேல் நான் ஆசை வைக்கவில்லை – நீதான்
உண்மையிலே தமிழ்மகள் இல்லை – ஆதலால்
என்மீதில் ஆசை வைக்காதே

என்கிறான், தமிழ்மகன்.

மாதொருத்தி வேண்டும் எனக்கும் – தமிழ்
மகளா யிருந்தால்தான் இனிக்கும்

என்பது தமிழ்க்காதலனின் சூளுரையாகும்.

தமிழ் மகளின் காதல்மொழி தமிழேயாதல் வேண்டும்.

தேமதுரத் தமிழின்றிக் காதல் இன்பம்
செல்லுமோ?

எனக் கேட்கிறார், பாரதிதாசனார்.

பாரதிதாசன் பாடல்களில் பழந்தமிழ் இலக்கியங்களின் செல்வாக்கு, பிற கவிஞர்களிடம் இருப்பதைவிடக் கூடுதலாய் இருந்தாலும், பண்பு மாறாத, சமுதாய ஒழுக்கத்திற்கு மாறுபடாதவற்றில் மட்டுமே அவற்றை இழையோட விட்டார். புதுமை வேண்டுமிடங்களில் இப்பழந்தமிழ்க் கருத்துகளைத் தம் கொள்கைக்கேற்ப அவர் மாற்றியமைக்கத் தயங்கியதே இல்லை.

சங்க இலக்கியங்களையும் பாரதிதாசன் பாடல்களையும் முழுமையாய்ப் படித்து, உணர்ந்து, இணைத்து விரிவானதோர் ஆய்வினை மேற்கொண்டு கன்னல் வெற்றி கண்டுள்ளார். மனம் நிறைந்த பாராட்டுகள். சங்க இலக்கியங்களோடு பாரதிதாசனை இணைத்துப் பார்ப்பதற்கு இந்த ஒரு நூலே போதும் என உறுதியாய்ச் சொல்லலாம்.

பழந்தமிழ்ப்பாடல்கள் பாரதிதாசன் பாடல்களில் பெற்றுள்ள செல்வாக்கைக் காட்டியுள்ள திரு. கன்னல்,

பாரதிதாசன் பாடல்கள் அவருக்குப் பின் வந்துள்ள கவிஞர்களின் பாடல்களில் பெற்றுள்ள செல்வாக்கை ஆய்ந்து வெளிப்படுத்த வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கன்னல், வளமும் நலமும் பெருகி வாழவும், அவரது ஆய்வுப்பணி சிறக்கவும் உளமார விழைந்து வாழ்த்துகிறேன்.

........கன்னல்
பொருள்தரும் ஆய்வே நீஓர்
பூக்காடு; யாமோ .தும்பி!

நூல் ஆக்கம்	முனைவர் கருவூர்க் கன்னல்
வகைமை	ஆய்வேடு
வெளியீடு	தமிழ்ப்பாசறை, கருவூர். (1997)

3

பாவேந்தர் ஆய்வடங்கல்

பாவேந்தர்

தமிழகத்தைப் பிணித்திருந்த சாதி இருட்டு, நால்வருண நஞ்சு, மடமை மயக்கம், வலியோரின் வல்லாண்மை, பெண்ணடிமைக் கொடுமை முதலிய பொல்லாங்குகளை அகற்றப் பாடியவர், பாவேந்தர் பாரதிதாசன்; தமிழையும் தமிழர்களையும் தளையிட்டிருந்த அடிமை விலங்கைத் தம் தூவல் (பேனா) முனையினால் தகர்த்தெறிந்தவர். வாளின் வீச்சுக்கு விரைவுத் தன்மை எவ்வளவு இன்றியமையாததோ அதே போன்று தூவலின் (பேனாவின்) (எழுத்து) வீச்சுக்கு முதிர்சிந்தனை இன்றியமையாதது என்றார், அறிஞர் ஒருவர். பாவேந்தரின் முதிர்சிந்தனையில் முகிழ்த்த படைப்புகள்பற்றி அறிஞர் எழுவர் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரைகளின் அடங்கலாய் இந்நூல் இலங்குகிறது.

இன்னலி லேதமிழ் நாட்டினி லேயுள்ள
என்தமிழ் மக்கள் துயின்றி ருந்தார்
அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே

என்று கலங்கிய பாவேந்தர், அவ்வின்னலை மாய்க்க ஏடெடுத்துக் கவிதை எழுதியவர்; அவர்,

நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
  நலிவதை நான் கண்டும்
ஒயுதல் இன்றி அவர்நலம் எண்ணி
  உழைத்திட நான் தவறேன்

எனச் சூளுரைத்துத் தமிழர் உயர்வுக்கு உழைத்திட உறுதி பூண்டவர்.

புதியதோர் உலகம் செய்வோம் – கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்

எனப் புத்துலகம் காணத் துடித்த புதுமைக் கவிஞர்;

பிரிவிலை எங்கும் பேத மில்லை
உலகம் உண்ணஉண்; உடுத்த உடுப்பாய்;
புகல்வேன், உடைமை மக்களுக் குப்பொது;
புவியை நடத்து, பொதுவில் நடத்து

எனப் புத்துலகை நடத்திச் செல்ல வழிமுறை கூறிய எழுச்சிப் பாவலர்.

இத்தகைய புரட்சிப் பாவலர் ஒவ்வொரு துறையிலும் கொண்டிருந்த சிந்தனை ஓட்டத்தை ஆய்வு செய்து அறிஞர்கள் நமக்கு எடுத்து வழங்கியுள்ளதை இந்நூல் ஏந்தியுள்ளது.

தமிழச்சியின் கத்தி

தேசிங்கு கதைப்பாடலின் பொய்பரப்பு முயற்சியைத் தகர்த்து, மெய்யறிவூட்டி, தமிழர் மானக் காப்பிலக்கியமாய்த் 'தமிழச்சியின் கத்தி'யைப் பாவேந்தர் படைத்துள்ளதைப் புலவர் தி.நா. அறிவுஒளி விரிவாய் ஆராய்கிறார். நாட்டுப்புறப் பாடல் இலக்கியம் மக்களைப் பெரிதும் ஈர்க்கும் திறனுடையது. வடவராட்சியின் அடிவருடியான யாரோ ஒருவர் பாடிய தேசிங்கு கதைப்பாடலின் பாச்சுவையில் ஈடுபட்டு, அக்கதைப்பாடல் தமிழர் மான உணர்வுக்கு ஊறு சேர்ப்பது என்பதை உணராது மயங்கிக் கிடந்த தமிழ் மக்களுக்கு,

> தேசிங்கு வடக்கிருந்து தென்னாடு போந்தவன்
> தமிழரை இகழும் தன்மை வாய்ந்தவன்

எனும் உண்மையை உணர்த்த, 'தமிழச்சியின் கத்தி' படைக்கப் பட்டிருப்பதைப் புலவர் அறிவுஒளி தெளிவாக்கிக் காட்டுகிறார். இக்கருத்து எளிய மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதாலேயே பாவேந்தர் இக்காப்பியத்தில் நாட்டுப்புறப் பாடல் வடிவாகிய தென்பாங்குக் கண்ணிகளைப் பெருமளவில் சேர்த்துப் பாடியிருக்கிறார் போலும்!

"வடநாட்டுத் தலைவர்கள், தென்னாட்டினரைத் தமிழகத்தினரை மதிப்பதில்லை; போற்றுவதில்லை. தமிழரை அடக்கி ஆள, அடிமைப்படுத்த, சுரண்ட, கீழ்ப்படுத்தவே முனைகின்றனர். சிலப்பதிகாரக்காலம் முதல் இதே நிலை இருந்து வருகிறது" என்று அறிவு ஒளி வேதனையோடு குறிப்பிட்டுள்ளதை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

> சாகின்ற நிலைவரினும் நினைப்பாய் முன்னைத்
> தமிழர் மறம்! தமிழர் நெறி...
>
> முத்தமிழ் நாட்டுக்கு மானம் பெரிதன்றி
> மூச்சுப் பெரிதில்லை காண்...

எனும் பாவேந்தரின் சிந்தனைகளை நம் உள்ளங்களில் கிளறி விட இக்கட்டுரை பெருந்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

குறிஞ்சித்திட்டு

பாவேந்தரின் 'குறிஞ்சித்திட்டு'பற்றி ஆய்ந்துள்ளார், முனைவர் பா. வளனரசு. தாய்மொழிப்பற்றும் தமிழின உணர்வும் வீறுடன் விளங்க இந்நூல் எழுதப்பட்டுள்ளதைத் திரு. வளனரசு வளம் பொருந்திய நடையில் விவரிக்கிறார்.

மதமில்லை குறிஞ்சித் திட்டில்
மதம்பெற்ற சாதி இல்லை...
ஏற்பவர் இல்லை; யாரும்
இருப்பவர் ஆத லாலே....
பிறமொழி தமிழிற் சேர்க்கும்
பேடிகள் நுழைந்த தில்லை...

எனும் பெருமை பெற்ற குறிஞ்சித்திட்டு, வந்தேறிகளால் அழிவுக்குள்ளாவதைச் சொல்வதன் வாயிலாய் வந்தேறிகளால் தமிழகம் தாழ்ச்சியுற்ற நிலையைப் பாவேந்தர் குறிப்பாய்ச் சுட்டிக் காட்டுகிறார். "தமிழர் நாகரிகத்தில் வேற்று நாகரிகம் புகுத்தப்பட்ட கதையை 'அகத்தியன் விட்ட புதுக்கரடி'யில் குறிப்பிட்டுள்ள பாவேந்தர், அதே கருத்தைத்தான் வேறொரு வகையில் நீண்ட கதையின் உட்கருவாய் அமைத்துக் குறிஞ்சித்திட்டில் விளக்கி யுள்ளார் என்பார், சாலை இளந்திரையன்.

வேண்டுவது கல்விஒன்றே! நம்மேல் வந்து
விழாதிருக்க வேண்டுவது மதமே ஆகும்;
அயலவன் உறவினன் ஆகான்; உறவினன்
அயலவன் உறவுபெற் றானெனில் அவனை
உறவின னாக உரைத்தலும் தீதே

எனும் பாவேந்தரின் கொள்கைகட்கு விளக்கமாய்க் 'குறிஞ்சித் திட்டு' அமைந்திருப்பதைத் திரு. வளனரசு பொருத்தமுற எடுத்துக் காட்டியுள்ளார்.

பொதுவுடைமை

பாவேந்தர்தம் பொதுவுடைமைக் கோட்பாடுபற்றி அ.பசுபதி விளக்குகிறார். கொள்கை, கோட்பாடு என்று இருசொற்களுக்கு முள்ள வேறுபாட்டினை ஆராய்ச்சியாளர் முதலில் தெளிவாக்கு கிறார்.

எல்லார்க்கும் எல்லாம்என் றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்

என்பது பாவேந்தரின் பொதுவுடைமைக் கோட்பாடு. "பாவேந்தரின் இருவேறான - ஆரிய திராவிடத் தமிழ்ப்போராட்டம், தமிழுணர்வு எனும் இரண்டையும் தமிழர் இயக்கங்கள் பின்பற்றிப் பெருமளவில் செயற்பட்டு வருவதால் பாவேந்தர்தம்

பொதுவுடைமை கோட்பாட்டுக்கு அழுத்தம் கொடுத்துப் பார்க்கும்' போக்கு இன்னும் வலுப்பெறவில்லை" என ஆராய்ச்சியாளர் முடிவுக்கு வருகிறார். இக்காலத்துப் புதிய போக்குகளோடு வைத்துப் பாவேந்தரை நாம் கண்டால், பாவேந்தரின் பொதுவுடைமைக் கோட்பாடமைந்த பாடல்கள் இன்னும் புதுப்பொலிவுடன் விளங்குகின்றமையை உணர முடியும் எனும் ஆய்வாளரின் கூற்று உண்மையேயாம்! இக்கட்டுரை பாவேந்தரின் பொதுவுடைமைக் கோட்பாட்டுக்கு அழுத்தம் கொடுத்துப் பார்க்கும் போக்கிற்கு வலிவூட்டும் என்பது திண்ணம்.

அறிவியல் நோக்கு

பாவேந்தரின் அறிவியல் நோக்கை ஆராய்கிறார், ஞா. செயசீலன். அறிவியல் என்பதற்கான வரையறையைக் கூறி, அறிவியல் நோக்கு என்பது யாது என்பதை விளக்கும் திறம் சிறப்பாய் உள்ளது. ஞாலமும் கோள்களும் வேறொன்றிலிருந்து உருவானவை; அவை ஞாயிற்றைச் சுற்றி வருகின்றன; உயிர்கள் தோன்றி வளர்ந்த வகைபற்றிய அறிவியற்கருத்துகளைப் பாவேந்தர் ஐயமற உணர்ந்திருந்தார் என்பதை அவர் பாடல்களைக் கொண்டு தெளிவாக்குகிறார். தாய்மொழிக்கல்வியே சிறந்தது, வேற்று மொழியில் கற்றால் எண்ணும் திறன் வளர வாய்ப்பில்லாமல் போய்விடும் எனும் அறிவியல் கருத்தைக் குழந்தைகட்கும் புரியும்வண்ணம் கூறியுள்ள பாங்கினை வியக்கிறார். 'காலம் எனும் பெயர் கற்பனை பாப்பா' என்னும் பாவேந்தர் பாடலடியில் எவ்வளவு பெரிய அறிவியல் கருத்து பொதிந்து கிடக்கிறது என்பதை ஆசிரியர் விளக்கியிருப்பது போற்றுதற்குரியது. சுற்றுச்சூழல், மாசு கட்டுப்பாடு ஆகியனபற்றி இன்று பெருமளவில் பேசப்படுகிறது. அரசில் இதற்கெனத் தனித்துறையே அமைத்து, வேண்டாத விளைவுகள் தவிர்க்கப் படுகின்றன. பாவேந்தரோ அன்றே சுற்றுப்புறத்தைத் தூய்மைப் படுத்துதற்குரிய வழிமுறைகளைச் சொல்லியிருப்பதைப் பொருத்தமாய் எடுத்துக்காட்டுகிறார், ஆய்வாளர். சஞ்சீவி பருவதத்தில் குறிப்பிடப்படும் இரு மூலிகைகள் அறிவியல் எதிர்நோக்கோடு கூறப்பட்டது என்பது ஏற்குமாறில்லை. பகுத்தறிவை வலியுறுத்தும் அப்பாடலில் பாவேந்தர் பகுத்தறிவுக் கொவ்வாததாய் மூலிகைகளைப் பயன்படுத்தியுள்ளார் என்று குற்றம் சாட்டுவாருமுண்டு. அறிவியல் வளர்ச்சி, பாவேந்தரின் கற்பனையை ஒருவேளை எதிர்காலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடும்!

மொழிக்காப்பு

முனைவர் இரா. திருமுருகன் பாவேந்தரின் மொழிக்காப்பு முயற்சியைச் சுட்டிக்காட்டி, பிழையை எடுத்துக்காட்டித் திருத்தும் இயல்பு பெரிதும் வரவேற்கத் தக்கதொன்று என்பதை வலியுறுத்து கிறார். பாவேந்தர் வாழ்க்கையில் நடைபெற்ற பல சுவையான நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டி, மொழி காத்த புலவர் வரிசையில் பாவேந்தர் சிறப்பிடம் பெறுவதை உறுதிப்படுத்துகிறார். மொழிப் பாதுகாப்புக் குறித்துத் தமிழில் முதன் முதலாய் எழுதப்பட்ட உருப்படி (கீர்த்தனை) பாவேந்தருடையதுதான் என்னும் புதிய செய்தியைத் தருகிறார். 'சாலை நெறிமுறைகளை மீறுவோரைத் தடுப்பதற்குக் காவல் துறை உள்ளது; ஒறுப்பதற்குச் சட்டம் இருக்கிறது. ஆனால், மொழியின் ஒழுங்கைக் குலைப்போரைத் தடுக்க யாரும் இல்லை; ஒறுப்பதற்குச் சட்டம் இல்லை; யார் வேண்டுமானாலும் எப்படியும் பேசலாம், எழுதலாம். இன்றைய நிலை இது" (பக். 114) என்று திருமுருகன் அடையும் வருத்தம் நாட்டின் பொது வருத்தம். இக்கொடுமை தீரும் நாள் எந்நாளோ?

இரணியன் அல்லது இணையற்ற வீரன்

பாவேந்தரின் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நாடகத்தையும், பைரனின் 'கேய்ன்' என்னும் நாடகத்தையும் ஒப்பு நோக்கி, இருவரும் அந்நாடகங்களை எழுத வேண்டிய நிலை ஏன் எழுந்தது என்பதை நன்கு தெளிவாக்குகிறார், முனைவர் மா.தே. செயபாலன். தொன்ம மாந்தரைத் தோலுரித்து, அவர்களிடையே விரவி நிற்கும் மாந்த, மன்பதைச் சிக்கல்களை வெளிப்படுத்தி ஆராய்வதற்காக இந்நாடகங்களை அவ்வாசிரியர்கள் எடுத்துக் கொண்டுள்ளதை ஆராய்ச்சியாளர் நன்கு புலப்படுத்துகிறார். இவ்விரு நாடகங்களிலும் ஊடும் பாவுமாய் உள்ள சில போராட்டங்களை ஆராய்ச்சியாளர் சுட்டுகிறார். அவற்றுள் ஒன்று பகுத்தறிவுக்கும் மூட நம்பிக்கைக்கும் இடையில் நடக்கும் போராட்டம். இவை யாவும் ஏற்புடையவை என்றாலும் பாவேந்தரின் 'இரணியன்' நாடகம் திராவிடர்கள் ஆரியர்களால் வஞ்சகமாய் வீழ்த்தப்பட்டனர் என்பதை வெளிப்படுத்தி, ஆரியர்களின் நயவஞ்சகத் தன்மையை வெளிப்படுத்துவதையே தலையாய நோக்கமாய்க் கொண்டுள்ளது என்று துணிதல் வேண்டும்.

பாவேந்தர் பாடற்கோட்பாடு

பாவேந்தரின் பாடல் கோட்பாடுகளை ஆய்கின்ற திரு.ப.மருதநாயகம், பாவேந்தர், தாம் முழுமையாய் நம்பிய

கோட்பாடுகளையே தம் பாடல்களில் தர முயன்றார் என்பதில் ஐயமில்லை என்கிறார். படிப்பவர்கள் தாம் ஏற்றுக்கொள்ளாத கருத்துகளால் பாட்டின்பத்தை இழப்பதில்லை. அவ்வாறு அமைவதே சிறந்த பாடல் எனக் கொண்டு பார்க்கும்போது பாவேந்தரின் குறிஞ்சித் திட்டில் அவர், தம் கருத்ந்தை எரிச்சலுடன் சொல்லுகிறாரே தவிர பாட்டாக்கவில்லை என்ற குறை தென்படுகிறது என்கிறார், ஆய்வாளர். இதனால் முருகியல் இன்பம் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுவிடுகிறது. புதிய உத்திகளைக் கையாண்டு நம் உள்ளங்களைச் கண்டியிழுப்பதில் வெற்றி கண்ட பாவேந்தர் இக்குறைக்கு இடந்தந்திருக்க வேண்டியதில்லை என்பது ஆய்வாளர் கருத்து. இஃது ஓரளவு உண்மையே என்றாலும், எவ்வளவு சொன்னாலும் ஏறாத சிலருக்கு இப்படி எரிச்சலுடனும் சொல்ல வேண்டியிருக்கிறதே! நால்வருணம் நயவஞ்சகமானது என்பதைப் போதுமான அளவுக்கு எடுத்து விளக்கிய பிறகும், இன்னும் அவை இவ்விவ்வாறு தோன்றின அறிவைக்கொண்டு பிழைப்பவன், வீரத்தால் முதன்மை பெறுபவன், இருந்த இடத்திலிருந்து பொருளீட்டி வாழ்பவன், தாள் உழைப்பால் பிழைப்பவன் என்ற நான்கு வேறு வகையான தொழில் முறையைச் சுட்டத்தான் தலை (அறிவு), தோள் (வீரம்), இடுப்பு (இருந்து செய்யும் வணிகம்), தாள் (கடின உழைப்பு) என்று கூறப்படுகிறதே தவிர உயர்வு - தாழ்வு குறித்து அன்று - என விளக்கம் செய்ய முற்படுவோரிடம்,

முகத்தில் பிறப்பதும் உண்டோ முட்டாளே?
தோளிற் பிறப்பார் உண்டோ தொழும்பனே?
இடையிற் பிறப்பார் உண்டோ எருமையே?
காலிற் பிறப்பார் உண்டோ கழுதையே?

என்று கடுமையாய்ச் சொல்லத்தானே நேரிடுகிறது. இங்குப் பாடல் இல்லாமல் இருக்கலாம்; ஆனால், குமுகாயக் கொடுமையைச் சாடும் சீற்றம் இருக்கத்தான் செய்கிறது. இப்படி ஓரிரு இடங்களில் பாடல் இல்லை என்று ஆய்வாளர் குறைபட்டுக் கொண்டாலும் (மற்றவரும் சொல்வதே - ஒரு நோக்கில் சரியே) பொதுவில் ஆய்வாளர் கூறுவதுபோல, "குள்ளச்சமூகத்தின் கட்டுகள், பேடி வழக்கங்கள், பாழ்படுத்தும் பழமை, முடைநாற்றம் வீசும் மூடத்தனம் ஆகியவற்றையெல்லாம் சாடும்போது பாவேந்தரது கோட்பாடுகள் பாடல்களாகி, அவற்றில் நம்பிக்கை யில்லாதவர்களுக்கும் பனிமலர் ஏறிய தேனாய் இருப்பது உண்மை! (பக். 160) உண்மை!

புதுச்சேரி – தனித்தமிழ்க் கழகம்

அருமையான ஏழு கட்டுரைகளைக்கொண்டு ஆய்வு வானில் ஒரு வானவில்லாய் இந்நூல் பொலிவு பெற்றுத் திகழ்கிறது. பாவேந்தர் வானவில்லை, 'விண் எழுது கவிதை' என்பார்; நாம் இந்த நூலை, 'ஆய்வு தோற்றுவித்த வானவில்' எனலாம்.

மண்ணுலகு கடல்,மலை அனைத்தும் உள்ளாக்கியே
வளைந்தது வானவில்! என்னென்ன வண்ணங்கள்!
விண்முழுது கருமணல், அதன்மீது மாணிக்கம்
வீறிடு நிறப்பச்சை, வயிரத் தடுக்குகள்

உள்நிலவும் நீரோடை, கண்ணையும் மனத்தையும்
உயிரினொடும் அள்ளியே செல்கின்ற தல்லாமல்,
எண்ணற்ற அழகினால் இயற்கைவிளை யாடலின்
எல்லைகா ணேன்,அதைச் சொல்லுமா றில்லையே!

என வானவில்பற்றிப் பாவேந்தர் பாடியுள்ளார். அவர் கூறுமாறே இந்நூலாகிய வானவில்லும் நம் மனத்தை உயிரினொடு அள்ளிச் செல்கின்றதெனலாம்! தனித்தமிழ்க் கழகமெனும் மழைத்துளியில் கதிரவ அறிவுக் கதிர்கள் நுழைந்ததால் தோன்றி யுள்ள வானவில்லாம் இந்நூலின் "எல்லை காணேன்; நான் அதைச் சொல்லுமா றிலையே!"

செந்தமி ழே! உயி ரே! நறுந் தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!
நைந்தா யெனில்நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே!

எனும் பாவேந்தர் உள்ளத்தைக்கொண்டு இயங்கிவருவது, புதுச்சேரி தனித்தமிழ்க் கழகம். தமிழ் 'நன்னிலை' எய்தத் தனித் தமிழ்க்கழகம் ஆற்றிவரும் தொண்டுகளுள் ஒன்றாய் இந்நூல் வெளிவந்துள்ளது. 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழே' என்ற கொள்கைப்பிடிப்போடு தளர்வின்றி இடையறாது பாடுபட்டு வரும் தனித்தமிழ்க் கழகம் வாழ்க! வாழ்க!

இந்நூல் கருத்துகளை மக்கள் உணர்க! தெளிக!

நூல் ஆக்கம்	முத்து சேரன் (தொகுப்பாசிரியர்)
வகைமை	ஆய்வுக் கட்டுரைகள்
வெளியீடு	தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி. (1992)

4

பாரதிதாசன் ஆய்வுக் கோவை

கவின்மிகு கருத்தூற்று

இருபதாம் நூற்றாண்டுக் கவிதை வானில் ஒப்பற்ற முழு மதியாய்த் திகழ்ந்தவர், பாவேந்தர் பாரதிதாசன். கவிதைப் போக்கின் 'இருண்ட வீட்டில்' 'குடும்ப விளக்கேற்றி' ஒளியூட்டியவர், அவர். புதியதோர் உலகு காணப் புறப்பட்ட எழுச்சிப் படையின் தளபதியாய் அவர் விளங்கினார். புதுமைக் கருத்துகளைப் பொலிவோடும் வலிவோடும் எடுத்துரைக்க வேண்டு மென்பதும், மக்கள் மனத்தே மாற்றத்தையும் ஏற்றத்தையும் தோற்றுவிக்க வேண்டுமென்பதும் அவர் நோக்கமாயிருந்தன. மக்களுக்காக மக்கள் மொழியில் மக்களைப் பாடிய மாக்கவிஞன் அவன். தமிழகத்தைப் பிணித்திருந்த சாதி இருட்டு, தீண்டாமைக் கொடுமை, நால் வருண நஞ்சு, மூடத்தனத்தின் முடைநாற்றம், மதத்தைக் கட்டியழும் வைதிகம், பெண்ணடிமை, கைம்மை வேதனை, உழைப்பாளர் துயர், சிந்தனை முடக்கம், மொழிப் பற்றின்மை, விதியின் பேரால் மதிமழுக்கம், எல்லாம் கடவுள் செயல் என்று தொடை நடுங்கும் பொல்லாங்கு ஆகிய வலிமை மிக்க சங்கிலிகளை உடைத்தெறியக் காலம் தோற்றுவித்த மீட்சிக் கவிஞனே பாரதிதாசன். அவரது நூற்றாண்டு நிறைவு விழாவை உலகெங்குமுள்ள தமிழர்களும் தமிழார்வலர்களும் கொண்டாடி வரும் இவ்வேளையில் கங்கை' புத்தக நிலையமும் அதில் பங்குபெறும் வகையில் தன் கடமையை அனைவரும் போற்றும் வகையில் செய்திருக்கிறது; அறிஞர் நூற்றுவரைக்கொண்டு, பாவேந்தர் படைப்புகள்பற்றி நூறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதச் செய்து, அவற்றைத் தொகுத்துத் தமிழுலகமே பெருமைப்படும் வண்ணம் இவ்வரிய நூலை வெளியிடுகிறது.

> கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள்
> ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்

என்பார், பாவேந்தர். இக்கூற்றுக்கு ஏற்ப இவ்வாய்வுக் கோவையில் பாவேந்தரின் கருத்துகள் ஊற்றெடுத்துக் குளிர்விக்கின்றன. கங்கை

புத்தக நிலையம் கங்கையாறு போன்று வற்றாத வளங்கொண்ட இந்நூலை உருவாக்கித் தமிழைச் செழிக்கச் செய்துள்ளது. அறிஞர் நூற்றுவரும் கூறியுள்ள கருத்துகளின் சுருங்கிய தொகுப்பே இங்கு அணிந்துரையாய் இடம் பெற்றுள்ளது.

புரட்சிப் பாவேந்தர்

இரு செய்திகளில் பாரதிதாசனைப்பற்றிக் கருத்து வேறுபாடு இருப்பதற்கு இடமில்லை. ஒன்று, அவர் பாரதியாரை அடுத்துத் தோன்றிய தலைசிறந்த தமிழ்க்கவிஞர் என்பது; மற்றொன்று, எங்கெல்லாம் தாம் அநீதி என்று கருதிய ஒன்று தோன்றியதோ இடம் பெற்றிருந்ததோ அங்கெல்லாம் துணிச்சலோடும் தீரத்தோடும் அதனை ஒழிப்பதற்கும் நீதிக்குத் துணை போவதற்கும் முன்னின்றார் என்பதாகும் எனப் பாவேந்தரைச் சிறப்பிக்கிறார், நீதிபதி மு.மு. இஸ்மாயீல் (பக்கம் 100).

பெரியார் இராமசாமியிடம் ஈடுபாடு கொண்ட பாரதிதாசன் அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டார். அதனால் அவரின் பகுத்தறிவுக் கோட்பாடும் புரட்சிக் கொள்கைகளும் வலுப் பெற்றன. பாவேந்தரின் புரட்சிப்பாக்கள் எண்ணரிய புரட்சிப் பூக்களை வாரி வழங்கியுள்ளன. பாவேந்தரின் வாழ்வு அவரைப் புரட்சிப் பாவேந்தராய்ப் புவியுள்ளோர் அனைவரும் போற்றிப் புகழச் செய்திருக்கிறது என்கிறார், முனைவர் பா. வளன்அரசு (பக். 627).

தமிழும் தமிழரும் வாழ்வு பெற, திராவிடம் தழைக்கத் தீந்தமிழ் நெஞ்சினிக்கப் பாடி மகிழ்ந்த பாமேதை பாரதி தாசனாரைத் திராவிடத்தின் திருவிளக்காய்க் காணுகிறார், டாக்டர் துரை. பட்டாபிராமன் (பக். 436).

பெண்கல்வி, விதவைத் திருமணம், குடும்பநலத்திட்டம், உலக ஒற்றுமை, சமத்துவ சமுதாயம் எனப் பல்சுவைப் பாடல்களில் பாவேந்தர் அரும்பெருங்கருத்துகள் வழங்கியுள்ளதைத் திரு. பொன். பரமகுரு எடுத்தியம்புகிறார் (பக். 501).

பாவேந்தர் பாடல்களில் உணர்ச்சி இயல்பாய்ப் பொங்கி வழிகிறது. உணர்ச்சியை அமைப்பதற்குக் கற்பனையை அவர் தலையாய உத்தியாய்க் கொள்கிறார். குறிப்பு மொழி, ஒலிநயம் என்பன போன்ற சிறந்த இலக்கியக் கூறுகள் சிறப்புற அமைந்து உயர்நெறிக் கருத்துகளை நலமுற உணர்த்து கின்றன. இதனால் அவை நிலைபேறுடைய இலக்கியங்களாய் அமைந்து மன்பதைக்குப் பெரும்பயன் அளிக்கும் திறத்தவையாய்

மிளிர்கின்றன என்பதை நன்கு புலப்படுத்தியுள்ளார், டாக்டர் தா.ஏ. ஞானமூர்த்தி (பக். 328).

பாவேந்தரின் சிந்தனை மாட்சிகளுள் அவரது சொல்லாட்சித் திறம் மயக்கத்தக்கதாய் இருப்பதை 'ஒளி நட்சத்திரக் குப்பை', 'வட்டக் குளிர்மதி' போன்ற தொடர்களைக் காட்டி டாக்டர் கே. இராமமூர்த்தி விளக்குகிறார் (பக். 80).

புதுவைச் சூழலும் அங்குப் பெற்ற வாழ்க்கை அனுபவங் களும் கவிஞரைப் பாதித்ததன் காரணமாய் அவர் படைப்புகளில் அவை வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தக்க சான்றுகளுடன் தெளிவுபடுத்தியுள்ளார், திரு. சு. தில்லைவனம் (பக். 364).

பாவேந்தர் திருமகளார் வசந்தா தண்டபாணி அவர்கள், தம் தந்தையார் உண்ணும் போதும் உறங்கும் போதுங்கூட சமதர்மச் சிந்தனையோடு வாழ்ந்தவர் என்பதற்கான நிகழ்ச்சி களைக் கூறியுள்ளதோடு, அவர் பெருமைக்குக் காரணமாய் அமைந்துள்ள வேறு சில செய்திகளையும் நினைவுகூர்ந்துள்ளார் (பக். 614).

உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே

தமிழ் - இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் எனத் தமிழை உயிரெனக் கருதிப் போற்றியவர், பாவேந்தர் பாரதிதாசன். "தமிழுண்டு தமிழ் மக்களுண்டு, இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" எனத் தமிழ்த்தொண்டையே தம் வாழ்நாள் தொண்டாய்க்கொண்டு வாழ்ந்தவர் அவர்.

தமிழுக்கும் தமக்கும் நெருக்கம் மிகுதி என்பதைப் புலப்படுத்தப் பாவேந்தர் வெண்ணிலாவும் வானும், வீரனும் கூர்வாளும், வண்ணப் பூவும் மணமும், மகரயாழும் இசையும், கண்ணும் ஒளியும் என உவமைகளை அடுக்கிக் கூறியுள்ளார் என டாக்டர் சுந்தரசண்முகனார், பாவேந்தரின் இசையமுதுப் பாடல் ஒன்றுக்கு மட்டும் விளக்கம் தந்து விவரித்துள்ளார் (பக். 274).

"எங்கெங்குங் காணினும் சக்தியடா" எனச் சக்தியைப் பாடத் தொடங்கிய பாவேந்தர், பின்னர்த் தமிழே அனைத்துச் சக்தி - உயிர் என்பதுணர்ந்து, 'எங்கெங்குங் காணினும் தமிழேயடா' என்னும் நிலை மலர வேண்டுமென்பதைத் தம் வாழ்வின் குறிக்கோளாய்க் கொண்டு பாடுபட்டதைத் திரு. எல்.கே. சுபாஸ் சந்திரபோஸின் கட்டுரை தெளிவாக்குகிறது (பக். 291).

தமிழ்நாடே தன்நாடு, தமிழே தாய்மொழி, தமிழர் ஒழுக்கமே தன் ஒழுக்கம் எனக் கொண்டவனையே பாவேந்தர் தமிழனாய்க் காணுகிறார். தமிழினத்துக்கு முதன்மை கொடுக்கும் பாவேந்தர் மொழிக்காப்பு வேண்டுமென்கிறார். மக்களை மையப்படுத்திய தமிழுணர்ச்சிதான் தமிழனை வாழ வைக்கு மெனக் கருதும் தமிழின மீட்சிக் கவிஞராய்ப் பாவேந்தர் விளங்குவதைப் பாரதிதாசன் செல்வராசு சிறப்பாய் விளக்குகிறார் (பக். 468).

தமிழுணர்ச்சியைத் தூண்டுவதற்கு அவர் எண்ணற்ற கவிதைகளை வகைவகையாய் வடித்துக் கொடுத்தார். ஒவ்வோர் அடியிலும் ஏதாவது ஒரு பின்னணி, ஒரு வீச்சு, ஒரு புரட்சி, ஒரு நடைமுறைச் செயல்திட்டம் இருக்கும் என்பதைச் சில நிகழ்ச்சிகளைச் சுட்டித் தெளிவுபடுத்துகிறார், முனைவர் கு.விவேகானந்தன் (பக். 638).

தமிழியக்கம் தழைக்கத் 'தமிழியக்கம்' என்ற தனிநூலைத் தந்தவர், பாவேந்தர் பாரதிதாசன். தாழ்மைப்படுத்தப்பட்ட தமிழ் துறைதோறும் உரிமையுடன் ஒளிர வேண்டும் என்பதே அந்நூல் எழக் காரணம் என்பதை அழகாய் விளக்குகிறார், காரை. இறையடியான் (பக். 162).

பாவேந்தரின் கவிதைக் கொள்கை

கலை கலைக்காகவா, கலை வாழ்க்கைக்காகவா என்னும் வினாவுக்கு ஒரு முடிவான மறுமொழி இதுவரை காண முடியவில்லை. எனினும், 'கலை வாழ்க்கைக்காகவே' எனும் கொள்கையடிப்படையிலேயே பாரதிதாசன் கவிதைகள் அமைந்துள்ளன என்பதை அவரது 'அழகின் சிரிப்பு' கொண்டு விளக்குகிறார், முனைவர் தி.செல்வம் (பக். 304).

எல்லாவற்றிலும் அழகை மேன்மையை உணரும் உள்ளத்தின் உறவே உண்மை வாழ்க்கை. இந்த உறவைப் பாவேந்தர் பாடல்கள் உருவாக்குவதை எடுத்துரைக்கிறார், பேராசிரியர் ம.இலெ. தங்கப்பா (பக். 537).

நகைச்சுவை மிளிர எழுதுவது தனிக்கலை. அக்கலையில் கை தேர்ந்தவராய்ப் பாவேந்தர் இருப்பதைத் திரு. கு. மதிவாணன் தம் கட்டுரையில் மிக அருமையாய் எடுத்துரைக்கிறார் (பக். 538).

தாமே நம்பாத கருத்தைக் கவிஞர்கள் கூறமாட்டார்கள் என்றே கருதிக் கொண்டிருக்கிறோம். ஆனால், கவிஞர் சிலர் சில கவிதைகளிலேனும் தாம் நம்பாத கருத்துகளைக் கூற

முற்பட்டுள்ளதை ஆய்வு நமக்குக் காட்டுகிறது. படிப்போனின் கோணத்திலிருந்து பார்த்து அவனுக்காக இவ்வாறு எழுதுவதுண்டு. ஆனால், பாரதிதாசனைப் பொறுத்தமட்டில் தாம் முழுமையாய் நம்பிய கோட்பாடுகளையே தமது கவிதைகளில் தந்துள்ளார் என்பதை டாக்டர் ப. மருதநாயகத்தின் கட்டுரை புலப்படுத்துகிறது (பக். 543).

பாடல் உத்திகள் எண்ணிறந்தவை; ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு வகையான உத்திகள் உருவாகின்றன; வளர்கின்றன; மாறுகின்றன. இந்நிலையில் பாவேந்தரின் காதல் பாடல்களை மட்டும் எடுத்துக்கொண்டு, அவற்றில் அவர் கையாண்டுள்ள உத்திகளை வகைப்படுத்திக் காட்டுகிறார், பேராசிரியர் ப. தண்டபாணி (பக். 341).

சமூகப் பார்வை எழுத்துகளுள் முதன்மை பெறுவது, புனைவியல் (Romanticism); பழைய இலக்கியப் பதிப்புகளை நம் சமகாலச் சமூக வாழ்விற்குப் பொருத்திப் பார்க்க முயல்வது, புதிய செவ்வியல் போக்கு (Neo-classism). இயற்கை வழுவாச் சித்திரிப்பு, நடப்பியல் (Realism) எனப்படும். பாரதிதாசன் படைப்புகளில் இம்மூன்று நெறிகளுமே கலந்திருந்த போதிலும் தாம் சார்ந்த இயக்கச் சார்பாய் நடப்பியல் நெறியையே பெரிதும் பின்பற்றினார் என மதிப்பிடுகிறார், டாக்டர் சு.வேங்கடராமன் (பக். 660).

1958-59இல் வெளிவந்த குயில் இதழ்களைக்கொண்டு பாவேந்தரின் இதழ் வெளியீட்டுக் கொள்கையை ஆய்ந்து முடிவுக்கு வருகிறார், திரு. எ. செனார்த்தனன். தொடர்பான செய்திகட்குப் படம் வரைதல், தம் பெயர் குறிக்காமல் எழுதுதல், முன்னிலைப்படுத்திக் காட்டுதல், வருவதுரைத்தல், உவமைகளைக் கையாளுதல், கதைவழிச் செய்தியை விளக்குதல், தொகுத் துரைத்தல் ஆகிய உத்திகளைப் பாவேந்தர் கையாண்டுள்ளதைக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டுக் காட்டுகிறார் (பக். 310).

புதியதோர் உலகு செய்வோம்!

பாவேந்தர் சமுதாயப் புரட்சியாளர்; 'சமூகமே, யாம் சொன்ன வழியில் ஏறுநீ! ஏறுநீ! ஏறுநீ' எனச் சமூக முன்னேற்றம் காண முழங்கியவர். அவரது சமுதாயப் பார்வையைப் புலப்படுத்தும் அரிய கட்டுரைகள் இக்கோவையில் நித்திலங்களாய் மிளிர்கின்றன.

சாதிகள் ஒழிக்கப்படவேண்டும். சாதிகள் ஒழிய வேண்டுமெனில் அச்சாதிகள் தோன்றுவதற்குக் காரணமாயுள்ள சமயங்கள் தகர்க்கப்படவேண்டும் என்பதைப் பாவேந்தர் தம் பாடல்களில்

வலியுறுத்தியிருப்பதைத் திரு. சுந்தர. கலிவரதன் எடுத்துக் காட்டுகிறார் (பக். 144).

'இருட்டறையில் உள்ளதடா உலகம்' என்னும் பாவேந்தரின் பாடல்வழி நாட்டிற்குப் பெருந்தீங்கு விளைப்பன சாதிவேறுபாடு, சமயப்பூசல், தனியுடைமைப் பற்று என்பதை எடுத்துக் காட்டி, இம்மூன்றையும் நீக்குவதே நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி எனப் பாவேந்தரை வழிமொழிகிறார், முனைவர் இரா. சாரங்கபாணி (பக். 239).

சாதிமத மூடத் தளைகளிலிருந்து விடுபட்டுப் பெண்ணுக்குச் சமவுரிமை தருகின்ற, பொருளாதாரச் சமப்பகிர்வு நிகழ்கின்ற சமுதாயமே பாவேந்தர் காண விரும்பிய சமுதாயம் என அழகுபட எழுதுகிறார், முனைவர் ஒ. நசிமா அகமது (பக். 371).

தீண்டாமை ஒழிப்பு, விதவைத் திருமணம், சாதியை ஒழித்தல், எல்லார்க்கும் எல்லாம் என்னும் நிலையை உருவாக்குதல், மானுடப்பரப்பை ஒன்றாய்க் காணும் பரந்த உள்ளம் கொள்ளுதல் போன்ற பாவேந்தரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தினால்தான் நாம் நல்லதொரு சமுதாயம் காணமுடியும் என்கிறார், டாக்டர் மே.அ. பாலமுருகன் (பக். 475).

தீண்டாமை என்பது ஆரியத்தின் சூழ்ச்சி. "பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை; இந்தப் பிழை நீங்குவதே உயிருள்ளாரின் கடமை" என வலியுறுத்தும் பாவேந்தர், இப்பிழையை நீக்கிக்கொள்ளாதவர்களை, 'தேசத்தினர்கள் ஓர் தாய் தந்திடு சேய்கள்; இதனைத் தெளியா மக்கள் பிறரை நத்தும் நாய்கள்' எனச் சாடவும் தயங்கவில்லை. திட்டமிட்டு ஒரு பகுதியினரை ஒதுக்கி, அவர்தம் உழைப்பையும் உறிஞ்சித் தீண்டாதவர்கள் என ஒதுக்கும் அறமற்ற செயலை நையப் புடைக்கும் பாட்டாய் அவரது சமத்துவப் பாட்டு அமைந்திருப்பதை விளக்குகிறார், திரு. வே. முத்தன் (பக். 583).

தொழிலாளியிடம் பரிவு காட்டியவர், பாரதிதாசன். தொழிலாளிக்கும் முதலாளிக்கும் உள்ள வர்க்கபேதத்தை இவ்வளவு வன்மையாயும் உண்மையாயும் பாரதிதாசனுக்கு முன் வேறெந்தக் கவிஞரும் வகுத்துக் காட்டவில்லை என்கிறார், பேராசிரியர் த. அகரமுதல்வன் (பக். 8).

பெண்கள் நாட்டின் கண்கள்

> பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
> மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே!

என்பார், பாரதிதாசன்.

பாவேந்தர் பெண்மையின் எழுச்சிக்காய்ப் போர்க்கொடி உயர்த்தியதோடு, வீழ்ந்து கிடந்த பெண்மை உயர்ந்து நிற்கப் பாடினார் என்பதைப் 'பெண்ணியம்' என்ற தலைப்பில் விளக்குகிறார், திருமிகு. சரோஜினி செல்லக் கிருஷ்ணன் (பக். 213).

பெண் அறிவாற்றல் மிக்கவளாய், கல்வி கற்று, மனத்திண்மை கொண்டு, தன்னைத்தான் காத்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றவளாய், வீரமும் விவேகமும் ஆற்றலும் கொண்டு செயற்பட வேண்டும். அவள் எந்த நிலைக்கு உயர்ந்தாலும் தான் ஒரு குடும்ப விளக்காய் ஒளி வீச வேண்டுமெனக் கூறிப் பழமைக்கும் புதுமைக்கும் ஓர் இணைப்புப் பாலமமைக்கும் பாவேந்தரின் திறனைப் பாராட்டுகிறார், டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி (பக். 260).

குடும்ப விளக்காய்ப் பெண்களைக் கண்டவர், பாவேந்தர்; என்றாலும், மேலும் ஒரு படி போய் இதுவரை மனை விளக்காய் - குடும்ப விளக்காய் - குடத்து விளக்காய் இருந்துவந்த பெண்ணுலகு இனி மலை விளக்கும் ஆக வேண்டும் என்று அவர் எடுத்துரைப் பதைச் சுட்டிக் காட்டுகிறார், டாக்டர் நிர்மலா மோகன் (பக். 420).

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்

குடும்ப விளக்கு, இருண்ட வீடு என்பன பாவேந்தரின் சிறப்பான படைப்புகள். தமிழ்ப் பண்பாட்டின் சிகரமாய் விளங்கும் உயர் இல்லறப் பண்பாட்டைத் தம் குடும்ப விளக்கு நூலின்மூலம் காட்டுகின்ற பாவேந்தர், எப்படி வாழ்வது இல்லறமாகாது என்பதற்குக் காட்டாய் இருண்ட வீட்டைப் படைத்திருக்கிறார் என்பதை நயம்படக் காட்டுகிறார், முனைவர் க. இளமதி சானகிராமன் (பக். 92).

பாவேந்தரது குடும்ப விளக்கில் அறிவு எவ்வாறு ஆட்சி செய்கிறது; இருண்ட வீட்டில் அறியாமை எவ்வாறு கொடுமைகளை விளைவிக்கிறது என்பதை விவரித்துள்ளார், பேராசிரியர் ஹ.மு. நத்தர்சா (பக். 385).

ஒரே நோக்கமான கல்வியின் சிறப்பை வலியுறுத்துகின்ற குடும்ப விளக்கும் இருண்ட வீடும் வெவ்வேறு உத்தியினாலும் மரபினாலும் அமைந்த இரட்டைக் காப்பியங்கள் எனலாம் என்கிறார், டாக்டர் அ. பிச்சை (பக். 488).

இல்லவளின் மாண்புகளை உடன்பாட்டு முறையிலும் எதிர்மறை முறையிலும் வலியுறுத்த இவ்விரு குறுங்காவியங்

களையும் பாவேந்தர் படைத்துள்ளதை டாக்டர் கரு. முத்தையா சிறப்பாய் விவரித்திருக்கிறார் (பக். 577).

அறிவுக்குப் பொருத்தமான முறையில் திருமணங்கள் நடைபெற வேண்டும். இதற்காகப் பாவேந்தர் திராவிடர் புரட்சித் திருமணத் திட்டம் என்ற ஒன்றைத் தந்துள்ளார். குடும்ப விளக்கிலும் புரட்சித் திருமணம் நடைபெற வேண்டிய முறையை விளக்குகிறார்; ஆரிய மணத்தை எதிர்க்கிறார்; திராவிட மணத்திற்கு வலிவும் பொலிவும் ஏற்றுகிறார் என முனைவர் சரளா இராசகோபாலன் எடுத்தியம்புகிறார் (பக். 207).

மக்கள் தொகை உயரின் நாட்டின் நிலை தேயும் என்று எடுத்துச் சொன்னதோடு நின்றுவிடாமல், 'காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம், இதிலென்ன குற்றம்?' என நடைமுறைச் செயலாக்கத்திற்கு வழியையும் காட்டியவர் பாவேந்தர் என்பதைத் திருமதி அ. சவ்தா உம்மாள் சிறப்பாய்க் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார் (பக். 218).

விருந்தோம்பல் தமிழர் பண்பாடு. இப்பண்பாட்டுச் சிறப்பே நம் அழிவுக்குக் காரணமாகிவிடக்கூடாது. விருந்து பேணும் அதே வேளையில், வந்தவர் யார் எனவும் பார்க்க வேண்டும். இவ்வாறு பாராததாலேயே தமிழினம் அழிவுக்கு ஆளாகிவிட்டது. வந்தவன் போனவனெல்லாம் விருந்தாளியாகிவிட முடியாது. எனவே, பண்பாட்டைப் பேணுவதிலும் பக்குவம் வேண்டுமென்பதைப் பக்குவமாய் எடுத்துரைக்கிறார், முனைவர் சாலை இளந்திரையன் (பக். 246).

இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்!

> இன்று குழந்தைகள் நீங்கள் – எனினும்
> இனிஇந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்!

என்றார், பாவேந்தர். இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள். ஆகவே, இளம்பருவத்தினர்க்கும் தமிழுணர்வு ஊட்டவும், அறிவுநெறி காட்டவும், செயல் புரியத் தூண்டவும், பொருளாதார மேம்பாட்டை உணர்த்தவும் பாவேந்தர் 'இளைஞர் இலக்கியம்' படைத்திருப்பதைச் சிந்தை குளிரக் கூறுகிறார், டாக்டர் சொ. சிங்காரவேலன் (பக். 254).

பாவேந்தர் படைப்புகளில் குழந்தைகள்பற்றிய செய்திகளும் அவர்களுக்கான அறிவுரைகளும் ஏராளமாய் உள்ளன. குழந்தையின் அழகு, குழந்தைக்குத் தாலாட்டு, குழந்தை வளர்ப்பு ஆகியனபற்றித்' திறம்பட மொழிந்துள்ள கவிஞர், குழந்தைகள்

பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை எளிமையாயும் தெளிவாயும் குறிப்பிட்டுள்ளதைப் பேராசிரியர் சா. நசீமாபானு அழகான கட்டுரையாக்கியிருக்கிறார் (பக். 377).

குழந்தைப் பாடல்களில் ஈற்றுச் சொற்களில் எதுகை முறையை முதலில் புகுத்தியவர் பாவேந்தரே! மேலும், சிறுவர்கட்குக் கீர்த்தனை போன்ற இசைப்பாடல்களை முதலில் அமைத்துத் தந்தவரும் பாவேந்தரே! பாவேந்தர் பாரதிதாசன் குழந்தை உள்ளத்தோடு குழந்தைகளுக்காகப் பாடிய பாடல்கள் குழந்தைகள் உள்ளங்களில் என்றும் வாழும் என்கிறார், குழந்தைக்கவிஞர் டாக்டர் பூவண்ணன் (பக். 494).

மானிடத் தன்மையை நம்பு

பாவேந்தருக்கு மனித உள்ளங்கள் குறித்து மகத்தான நம்பிக்கை இருந்தது. மனிதர்கள் தம் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றனையும் மனித மேம்பாட்டுக்குப் பயன்படுத்தினால் சமூக வாழ்வின் அவலங்களை நீக்க முடியும் எனும் நம்பிக்கையைப் பாவேந்தர் கொண்டிருந்தார் என்பதை 'மெஹர்' ப.யூ. அய்யூப் எடுத்து மொழிகிறார் (பக். 22).

மானிட மேம்பாட்டுக்கு அழுத்தமாய்ப் பாடிய தமிழ்க் கவிஞர்களுள் பாரதிதாசன் மேம்பட்டு நிற்கிறார். மனித ஆற்றலை மேம்படுத்துதற்காகத் தம் எழுத்தாற்றலைப் பயன்படுத்தினார் பாவேந்தர் என்பதைத் தம் எழுத்துகளால் மெய்ப்பிக்கிறார், டாக்டர் முத்துதங்க ஐயப்பன் (பக். 118).

உலகெங்குமுள்ள மானுடச் சாதியை ஒன்றெனக் கருதி, ஒப்ப அன்பு செலுத்தி, மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் இயைபு கொண்டு வாழ்ந்தால் மானுடம் சிறக்கும் என்பதே பாவேந்தர் படைப்புகள் யாவிலும் இழையோடும் வாழ்வியல் தத்துவம் என்கிறார், பேராசிரியர் க. நாராயணன் (பக். 410).

பாவேந்தரின் பாட்டுப் பார்வையில் சுடர்விட்டு ஒளி வீசுவது மனித நேய உணர்வுதான். பிரிவினை வாதங்களையெல்லாம் கடந்த உயர்ந்த மானிட உணர்வுதான் கவிஞனின் உண்மையான உணர்வு என்கிறார், திரு. ந. முருகேசன் (பக். 598).

இல்லை என்பேன் நாணடா!

பாரதிதாசன் தம் வாழ்நாளின் தொடக்கப்பகுதியில் கடவுளர்களைப் பாடிப் பரவியுள்ளார்.

> **முப்ப தாண்டு முடியும் வரைக்கும்நான்**
> **எழுதிய அனைத்தும் என்ன சொல்லும்?**

கடவுள் இதோஎன்று மக்கட்குக் காட்டிச்
சுடச்சுட அவனருள் துய்ப்பீர் என்னும்!
ஆயினும், கடவு ளுருவம் அனைத்தையும்
தடவிக் கொண்டுதான் இருந்ததென் நெஞ்சம்!

என்கிறார், பாவேந்தர். கடவுட்பாடல்களைப் பாடினாலும் அவற்றிலே தோய்ந்து நிற்கவில்லை என அவரே கூறிடக் காண்கிறோம்!

பாரதிதாசனாவதற்கு முன்னர், கனக சுப்புரத்தினமாய் இருந்த இளமைக் காலத்தில் மயிலம் சுப்பிரமணியர் துதியமுது பாடிய பக்திக் கவிஞனாய்ப் பாவேந்தர் இருந்த நிலையை டாக்டர் பழ. முத்தப்பன் எடுத்துக்காட்டுகிறார் (பக். 570).

பாவேந்தர்க்கு கடவுள் ஒருவர் உண்டு; அக்கடவுள் தன்மை மக்கட்குச் செய்யும் பொதுத் தொண்டேயாகும். எனவே, பாவேந்தரின் கடவுள் கொள்கை, கடவுளை மையப்படுத்தாமல் மாந்தனை மையப்படுத்தியதாய் உள்ளது என்கிறார், பேராசிரியர் வே.ச. திருமாவளவன் (பக். 348).

கடவுள் நம்பிக்கை மனிதனை நல்லவனாய் மாற்றுவதற்கு மாறாய் அவனைத் தீயவனாய், பிறர் நலம் கெடுப்பவனாய் மாற்றிவிட்டது கண்ட பாவேந்தர் கடவுள் வெறுப்பாளர் ஆயினர். தன்னலம் படைத்தோரின் இழிசெயல்களே அவரது கடவுள் மறுப்புக்குக் காரணமாய் அமைந்தன என்கிறார், திரு. சு. சுப்பிரமணியம் (பக். 280).

தொடக்கத்தில் கடவுட்பாடல்கள் பாடியிருந்த போதிலும், பாவேந்தர் நாத்திகராய் மாறியவர்; வாழ்வின் இறுதிவரை நாத்திகராகவே வாழ்ந்து மறைந்தவர்.

ஆத்திகவாதிகளிடம் இருக்கும் குற்றம் குறைகளைப் பாவேந்தர் சாடியவர் என்றாலும், அதே வேளை அவர்களிடம் நல்லியல்புகள் தென்பட்டால் அவற்றைப் புகழ அவர் தயங்கியதில்லை என்பதை

முத்தியோ சிலரின் சொத்தென இருக்கையில்
இத்தமிழ் நாடுதன் இருந்தவப் பயனாய்
இராமா னுசனை ஈன்ற தன்றோ?

என இராமானுசரை அவர் போற்றியுள்ளதைச் சான்று காட்டிக் கூறுகிறார், பேராசிரியர் இரா. இராசகோபாலாச்சாரியார் (பக். 74).

விடுதலைப் போராட்ட வீரர்

பாவேந்தர் தமிழ்த் தேசியக் கவிஞராய் மட்டுமே கருதப்பட்டு வருகிறார். இந்திய விடுதலைப் போராட்டத்திலும் அவருக்குப்

பெரும் பங்கு உண்டு என்பது போதிய அளவு எடுத்துச் சொல்லப் பெறவில்லை.

பாரதிதாசன் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டுப் பல பாடல்களைப் பாடியுள்ளார். பாரதி, அரவிந்தர், மாடசாமி போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உதவி புரிந்துள்ளார். கதர் இயக்கத்தில் நாட்டங்கொண்டு கதர் - இராட்டினப் பாடல்கள் பாடியுள்ளார். சிறுவர் சிறுமியர்க்கான தேசியகீதம் பாடித் தந்துள்ளார். இவ்வாறாய்ப் பாவேந்தர் இந்திய விடுதலைப் போரில் தம்மை முழுமையாய் ஈடுபடுத்திக்கொண்டிருந்தவர் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார், டாக்டர் கி.வேங்கடசுப்பிரமணியம் (பக். 653).

விடுதலை இயக்கத்தின் ஒவ்வொரு தத்துவத்தையும் உணர்த்தும் வகையில் சிறுசிறு நூல்கள் எழுதியுள்ளார், பாவேந்தர். என்றாலும், அத்தேசிய நூல்களுள் அறியப்படுவன, 'சிறுவர் சிறுமியர் தேசியகீதம்', 'தொண்டர் படைப்பாட்டு', 'கதர் இராட்டினப் பாட்டு' என்ற மூன்றுமே என்பதை எடுத்துரைக்கும் டாக்டர் கு.ப. கணேசன், பாவேந்தர் முதலில் இந்திய தேசியக் கவிஞராய்த்தான் மலர்ந்தார் என்கிறார் (பக். 124).

இந்திய தேசியத்துக்குக் கவிஞர் குலத்தின் ஒரே பிரதிநிதியாய் விளங்கிய பாரதி தமிழையும், தமிழினத்தின் எழுச்சியையும் பாடியதுபோலவே திராவிட தேசியத்துக்கு ஒரே பிரதிநிதியாய் விளங்கிய பாவேந்தர் இந்தியாவையும் இந்திய விடுதலையையும் சிறப்பாய்ப் பாடியுள்ளார் என்பதை டாக்டர் கு.மங்கையர்க்கரசி யின் கட்டுரை காட்டுகிறது (பக். 511).

'பாரதிதாசன் ஒரு போராளி' எனும் கட்டுரையில் திரு. நா. முகமது செரீபு அவர்கள், பாரதிதாசன் சுயமரியாதை இயக்கத்தில் தம்மை இணைத்துக்கொள்வதற்கு முன்னர் வாளிப்பான வாலிப வயதில் கதர் வேட்டி, முரட்டுக் கதர்ச்சட்டை, பூப்போட்ட கதர் மேலாடை ஆகியவற்றால் தம்மை அழகுபடுத்திக்கொண்ட விடுதலை இயக்கப் போராளியாய் விளங்கினார் என்பதைச் சுட்டுகிறார் (பக். 567).

பொதுமக்கள் நலம் நாடிப் புதுக்கருத்தைச் சொல்க திரைப்படம்

சீரியநற் கொள்கையினை எடுத்துக் காட்டச்
சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்!
கோரிக்கை பணம்ஒன்றே என்று சொன்னால்
கொடுமையிதை விட,வேறே என்ன வேண்டும்?

மக்கட்செல்வாக்குப் பெற்ற திரைப்படங்களும் நாடகங்களும் கொள்கைகளை விளக்கும் சாதனங்களாய் அமைய வேண்டுமே தவிரப் பணம் பறிக்கும் நோக்கங்கொண்டவையாய் இருத்தல் கூடாது என்பது பாவேந்தர் கூற்று.

தரமான திரைப்படங்கள் இல்லாதது கண்டு பாவேந்தர் மனம் பதறுகிறார். தாமே தரமான திரைப்படம் ஒன்றை எடுக்க விரும்பித் தம் 'பாண்டியன் பரிசு' காப்பியத்தைப் படமாக்க முயன்றார். அது நிறைவேறாத ஆசையாகிவிட்டது என்பதைப் பேராசிரியர் சாயபு மரைக்காயர் தம் கட்டுரையில் மனம் வெதும்பிச் சொல்லியுள்ளார் (பக். 224).

பாரதிதாசனாரின் 'எதிர்பாராத முத்தம்' என்னும் குறுங்காப்பியம் 'பொன்முடி' என்ற பெயரில் திரைப்படமாக்கப் பட்டது.காப்பியத்தின் முடிவு தலைவனும் தலைவியும் இறப்பதாய் உள்ளது. ஆனால், திரைப்படமோ அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து மணந்துகொள்வதாய் முடிவடைகிறது. இந்த முடிவை ஏன் புகுத்தினார் என்பது சிந்தித்தற்குரியது. மேலும், காப்பியத்தைப் படிக்கும் போது ஏற்படும் ஒரு மென்மையான உணர்வைத் திரைப்படத்தில் உணர முடியவில்லை என்கிறார், திரு. வே. கருணாநிதி (பக். 138).

நாடகங்கள்

பாரதிதாசன், கவிதையிலும் உரைநடையிலுமாய் நாடகங்கள் பல எழுதியுள்ளார். அவைபற்றிய கருத்துகளைக் கட்டுரைகள் சில தெரிவிக்கின்றன.

'படித்த பெண்கள்' என்ற நாடகமும், 'குடும்ப விளக்கும் குண்டுக் கல்லும்' என்ற நாடகமும் பிற நாடகங்களைவிடத் தலைமை நிலையில் நின்று, பெண்விடுதலை, பெண்கல்வி ஆகியவற்றைப் போற்றுவதை எடுத்துரைக்கிறார், டாக்டர் மைதிலி வளவன் (பக். 603).

எளியோன், எளியோர் நலத்திற்காகப் பாடுபட முடியும்; பாடுபடுவான் என்பதை அழுத்தம் திருத்தமாய்க் கூறும் வகையில் பாவேந்தர் தம் நாடகங்களைப் படைத்துள்ளதைப் பேராசிரியர் சா. வளவன் சில நாடகங்களைச் சான்று காட்டி நிறுவுகிறார் (பக். 621).

பாரதிதாசன் நாடகங்களின் கரு பெரும்பாலும் பண்டைக் காலத்தைச் சார்ந்ததாகவே அமைகிறது. அதற்கேற்பவே 'பிசிராந்தையார்' தோன்றியுள்ளது. நாடகம் என்ற துறையில்

பாரதிதாசன் பெற்ற வெற்றியில் 'பிசிராந்தையார்' குறிப்பிட்ட ஓர் எல்லையை அடைந்துள்ளது என்பதில் ஐயமில்லை என்பதை விளக்கியுள்ளார், டாக்டர் தா. வே. வீராசாமி (பக். 643).

இரணியன்பற்றிய புராணத்தை உள்ளடக்கத்திலும் வடிவிலும் மாற்றிய பாரதிதாசன், காலத்திற்கேற்பவும், தம் ஆரிய எதிர்ப்புக் கொள்கையை வலியுறுத்துகின்ற வகையிலும், தம் வாசகனுக்கேற்பவும் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்னும் பெயரில் உரைநடை நாடகமாய் யாத்துள்ளார் எனக் குறிப்பிடும் டாக்டர் க. பஞ்சாங்கம், இந்நாடகம் முழுவதிலும் பாவேந்தர் திராவிட இயக்கக் கருத்துகளுக்கு வடிவம் கொடுக்க முயன்றுள்ளதையும் விளக்குகிறார் (பக். 31).

உரையாடலே இல்லாத முதல் தமிழ் நாடகம் பாரதிதாசனின் 'அமைதி' என்பதாகும். நிகழ்ச்சிகளாலேயே கருத்தைப் புலப்படுத்தும் உத்தி, நாடகம் முழுவதும் கையாளப்பட்டுள்ளது. சமுதாயத்தில் வாழும் மனிதன் ஒருவனின் கடமை இதுவென உணர்த்துவதே இந்நாடகத்தின் நோக்கம். உலகப் பொதுவான இக்கருத்து புதிய முயற்சியாய் ஊமை நாடக வடிவில் தரப்பட்டுள்ளது. தமிழ்நாடக வரலாற்றில் 'அமைதி' ஒரு புது முயற்சி! பாவேந்தரைத் தொடர்ந்து இவ்வூமை நாடகக் கலை வளராமல் போனது நம் குறை என வருந்துகிறார், பேராசிரியர் வெ.மு. ஷாஜஹான்கனி (பக். 681).

தம் நாடகங்கள் எல்லாவற்றிலுமே சமூக மேம்பாட்டையே பாரதிதாசன் முதன்மைப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. பகுத்தறிவுவாதக் கொள்கையோடும், கடவுள் எதிர்ப்புச் சிந்தனைக ளோடும், பொதுவுடைமைக் கருத்துகளோடும் சாதிசமய ஒழிப்பு எண்ணங்களோடும், பெண்ணுரிமைச் சிந்தனைகளோடும், உலக ஒருமைப்பாட்டில் உறுதியான நம்பிக்கையோடும் அவர் நாடகங்கள் அமைந்துள்ளன என்பதை விளக்கியுள்ளார், டாக்டர் எஸ்.ஸ்ரீ. குமார் (பக். 689).

பண்டைய இலக்கியங்கள்

பண்டைய காப்பியங்களான சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் பாவேந்தர் இன்றைய நிகழ்ச்சிக்கேற்ப மாற்றங்களைப் புகுத்திக் 'கண்ணகி புரட்சிக் காப்பியம்' என்றும், 'மணிமேகலை வெண்பா' என்றும் எழுதியுள்ளார். கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் பாண்டியனுக்குத் தீர்ப்பு வழங்கவே உரிமையில்லை என்ற சட்ட நுணுக்கத்தைக் கூறியுள்ளார்.

திருமுழுக்கு இல்லாமலேயே கண்ணகி கோவில் அமைக்கப்பட்டது என்னும் புதுமையைப் பாவேந்தர் நுழைத்துள்ளமையை டாக்டர் நா. ஆறுமுகம் சுட்டியுள்ளார் (பக். 51).

ஆரியச் சார்புக் கருத்துகள் மட்டுமே நீக்கப்பட்டுச் சிலப்பதிகாரக்கதையின் அடிப்படைப் பண்புகளில் வேறு நோக்கும் சிந்தனையும் ஏற்றப்படாமல் படைக்கப்பட்டுள்ள கண்ணகி புரட்சிக் காப்பியம் நிறைவூட்டும் ஓர் இலக்கியப் பங்களிப்பாகுமா என்ற வினாவை எழுப்பியுள்ளார், திரு. சா.பாலுசாமி (பக். 482).

மணிமேகலை வெண்பாபற்றிய கட்டுரை எதுவும் தனியே இக்கோவையில் இடம் பெறவில்லை. இடம் பெற்றிருக்க வேண்டிய கட்டுரை எவ்வாறோ விடுபட்டுள்ளது.

வடமொழியில் பில்ஹணர் இயற்றிய கவிதையின் கருவை எடுத்துக்கொண்டு 'புரட்சிக்கவி' என்னும் புதுமையானதொரு படைப்பைப் பாவேந்தர் உருவாக்கியிருக்கிறார். இது தமிழுக்கு உயிர்தரும் கவிதை. வடமொழி மூலமாயினும் தமது கவியாற்றலால் அதைத் தமிழ் மூலக்கதைபோலவே ஆக்கிவிட்ட பெருமை பாவேந்தருக்கு உண்டு என்பதை டாக்டர் கதிர். மகாதேவன் அருமையாய் விளக்கியுள்ளார் (பக். 130).

உரைநடை

பாரதிதாசன் தம் உரைநடையில் கையாளும் சில தனித்த உத்திகளை டாக்டர் பி.மு. அஹ்மல்கான் தொகுத்துத் தருகிறார். உரைநடைகளின் இடையில் பாரதிதாசன் தாம் நுழைந்து விடுவதைச் சுட்டி, அதற்கான காரணங்களையும் அவர் எடுத்தியம்புகிறார் (பக். 40).

பாரதியைப் போலவே பாரதிதாசனும் கவிதைக்கென்று ஒரு நடையையும், உரைநடைக்கென்று வேறொரு நடையையும் பின்பற்றுகிறார் என்பதை முனைவர் எஸ். ஆரோக்கியநாதன் அழகுபட எடுத்துக்காட்டுகிறார் (பக். 45).

உரைநடை இக்காலத்தில் பேரிடம் பெற்று விளங்குகிறது. உரைநடை வரலாற்றில் சிறப்பிடம் பெறுமளவுக்குப் பாவேந்தர் தனித்திறன் பெற்றவர் என்பதைத் திரு. கு. மதியழகன் விளக்குகிறார். அவரது தொடக்க கால உரைநடையில் வடசொற்கள் மிகுந்திருந்தாலும், தனித்தமிழ் இயக்கத்தின் தாக்குறவால் பிற்காலப் படைப்புகளில் தூய தமிழ்நடையைக் கையாண்டுள்ளார் என்பதையும் கட்டுரையாசிரியர் குறிப்பிட்டுக் காட்டுகிறார் (பக். 530).

சிறுகதை

பாரதிதாசன் தாம் எழுதிய சிறுகதைகளில் வடிவம், உத்தி ஆகியவற்றை அமைப்பதில் அதிகம் ஈடுபாடு காட்டியதாய்த் தெரியவில்லை என்றாலும், அவரையும் அறியாமல் அவை, அவற்றுள் சிலவற்றில் மிகச்சிறப்பாய் அமைந்திருப்பதை, அவர் 'புதுவை முரசு' இதழில் எழுதிய பத்துக் கதைகளை ஆராய்ந்து முடிவுக்கு வருகிறார், நா. இளங்கோ (பக். 84).

செய்தித்தாள்

செய்தித்தாள்கள் குறுகிய செயல்கள் தீர்த்துக் குவலயம் ஓங்கச்செய்ய வேண்டும். கண்ணுக்கு மட்டும் விருந்தாய் அமையாமல் கருத்துக்கும் ஆக்கம் தரும் வகையில் அவை திகழ வேண்டும். வேண்டுங்காலத்து, கிளர்ச்சியைத் தூண்டித் தீமையை மாய்க்கக்கூடியவையாயும் இருக்க வேண்டும். பத்திரிகைபற்றிப் பாரதிதாசன் கொண்டிருந்த இக்கருத்தை முனைவர் இரா.கோதண்டபாணியின் கட்டுரை விளக்குகிறது (பக். 175).

நாட்டுப்புற இயல்

நாட்டுப்புற இயலில் நாட்டங்கொண்டவர், பாவேந்தர். அதனை வாழ்வியலோடு ஒப்பிட்டுப் பார்த்து, வேண்டாத கருத்துகளை ஒதுக்கிவிட்டு, புரட்சிகரமான கருத்துகளைச் சொல்லி அந்த இலக்கிய வகையைக் கையாண்டு அவ்விலக்கியத்தையே பெருமைப்படுத்தியுள்ளார் என்பதைச் சான்றுகளுடன் விளக்குகிறார், டாக்டர் சு. சண்முகசுந்தரம் (பக். 182).

நாட்டுப்புறப் பாடல் வகையைச் சார்ந்த ஏற்றப் பாடலைப் பாவேந்தர் பாடியுள்ளார் என்றாலும், அதைக் கருத்துகளைப் புதுமையாய்த் தரவேண்டும் என்னும் நோக்கில் அமைத்துள்ளாரே தவிர நாட்டுப்புறப்பாடல் முறைப்படி அமைக்கவில்லை என விளக்கம் தருகிறார், டாக்டர் சி. சத்தியசீலன் (பக். 193).

புரட்சிக் கருத்துகளையும் சமுதாயச் சீர்திருத்தக் கருத்து களையும் மண்ணின் மைந்தனுக்கு அவன் விருப்பத்திற்கேற்ப அவன் விரும்பும் இலக்கிய வடிவிலேயே படைத்துத் தர விரும்பினார், பாரதிதாசன். அதனால்தான் அவர் பாடலில் நாட்டுப்புறப்பாடலின் தாக்கம் பெரிதும் இடம் பெறலாயிற்று என்கிறார், டாக்டர் மீ.அமு. நாசீர்அலி (பக். 392).

தன்னில் எழுந்த தமிழ்ப்பாட்டு

பாவேந்தர் இலக்கணத்திற்கு முதன்மை தந்து, யாப்பு வழுவாது, மரபுவழி நின்று கவிதை பாடியவர். அவரது

பாடலமைப்புப்பற்றிய கருத்துகளைத் தாங்கிய கட்டுரைகள் பல நூலுள் இடம் பெற்றுக் கருத்துக்கு விருந்தாய் அமைந்துள்ளன.

முதலையின் மேல்தோல் பல வெடிப்புகளை உடையது. வழியில் செல்லுங்கால் மண் வெடிப்புகளைக் காணும் கவிஞர், அவற்றிற்கு முதலையின் மேல்தோலை உவமையாய்க் கூறியிருப்பது போன்ற பல எடுத்துக்காட்டுகளைக் காட்டுவதன் வாயிலாய்ப் பாவேந்தர், பொருளுக்குப் பொருத்தமான உவமைகளைக் கையாளுவதில் வல்லவர் என்பதைப் பேராசிரியர் மு.இ. அகமது மரைக்காயர் புலப்படுத்துகிறார் (பக். 1).

உவமை என்பது வெறும் தெளிவிற்கும் நயத்திற்கும் மட்டுமே என்றில்லாமல் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை அல்லது சமுதாயப் பிரச்சினைகளை ஆராயவும் பயன்படுத்தப் படவேண்டும் என்னும் புதியதோர் உவமைக் கோட்பாட்டைப் பாவேந்தர் உருவாக்கி, அவ்வகையில் பயன்படுத்தியிருப்பதைக் காட்டுகிறார், பேராசிரியர் பத்மநாபன் (பக். 442).

தன்னுணர்வு, தமிழுணர்வு, அழகுணர்வு, சமூக உணர்வு, நுண்ணுணர்வு எனப் பல்வகை உணர்வுகளும் வெளிப்படும் வகையில் பாவேந்தர் உவமைகளைக் கையாண்டுள்ளார் என்பதைத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் தருகிறார், டாக்டர் இரா.மோகன் (பக். 608).

உண்ண உணவு, வாழ்க்கைக்குப் பொருள், ஏற்றத்திற்கு உழைப்பு, தன் மதிப்புக்குச் சமத்துவம், மன நிறைவுக்குக் கலை ஆகிய தேவைகள்பற்றிய கோட்பாடுகள் பொதுவானவையே யாயினும் பாரதிதாசனிடம் அவை படிம ஆக்கத்திற்கும் அடிப்படையாகி அமைவதாய்த் தெரிகிறது என்பதைத் தெளிவு படுத்துகிறார், டாக்டர் அன்னி தாமசு (பக். 33).

குறிப்புப் பொருளுக்கு இடமளித்தலும், தன்னுணர்ச்சிப் புலப்பாட்டிற்குப் பயன் கொள்வதுமாய்ப் பாவேந்தரின் வருணனைகள் அமைகின்றன என்பதை அவரின் 'அழகின் சிரிப்பு', 'இளைஞர் இலக்கியம்' எனும் இரு நூல்களைக்கொண்டு விளக்கியுள்ளார், டாக்டர் ச. சிவகாமி (பக். 267).

உருக்காட்சி என்பதை ஆங்கிலத்தில் Imagery என்பர். உருக்காட்சி என்பது ஐம்புல அனுபவம். கண்ணால் காணுதல், காதால் கேட்டல் என்றிவ்வாறு ஐம்புல உணர்வுகளுக்கும் ஏற்றவாறு 'சொற்சித்திரங்களைத் தீட்டினால் ஒரு காட்சி உருவாகும். பாவேந்தர் இத்தகு உருக்காட்சிகளை உண்டாக்க வல்ல

சொற்சித்திரங்களைத் தீட்டுவதில் வல்லவராயிருக்கிறார் என்பதை விளக்குகிறார், டாக்டர் நெல்லை ந. சொக்கலிங்கம் (பக். 321).

தாம் கொண்ட உயர் கருத்துகளை இயற்கையின் வாயிலாய்ப் புலனறி கடந்த நிலையில் பாடி இருத்தலும், இயற்கையைப் புலனறி கடந்த இயலில் வியத்தலும் என இரு நிலைகளில் பாவேந்தர் பாடல்கள் அமைந்திருக்கின்றன என்னும் ஆய்வுக் கருத்தைத் தருகிறார், டாக்டர் வீ. உண்ணாமலை (பக். 112).

இருண்ட வீடு காப்பியத்தில் இல்லத் தலைவி, 'விழி திறந்து மீண்டும் துயின்றாள்' என்னும் அடியைக்கொண்டு மங்கையின் விழிப்பு அறிவையும், மீண்டும் தூங்குதல் அறியாமையையும் காட்டும் தொடர் உருவகங்களாய் வளர்க்கப்பட்டிருக்கும் புதுமையை டாக்டர் சி.கனகசபாபதி விளக்குகிறார் (பக். 152).

பாவேந்தர் மற்றவர் பின்பற்றத்தக்க புதிய முயற்சிகளையும் படைப்புகளையும் செய்துள்ளார். 'திங்களோடு' என்று தொடங்கும் பாடல் மூன்றடி அமைப்புடையது. எண்சீர் விருத்தத்தில் சந்தத்தைப் புகுத்தினார். இது புது முயற்சி. முதியோர் வண்ணனை, முதலாளி வண்ணனை, மண்குடிசை வண்ணனை முதலிய உருவ, உள்ளடக்கப் புதுமைகளைப் பாவேந்தர் உண்டாக்கியுள்ளார் என்கிறார், முனைவர் கி. செம்பியன் (பக். 297).

'இசையமுது' என்னும் தலைப்பில் இரு தொகுதிகளை இயற்றியதன்வழி பாவேந்தர் இசைத்தமிழுக்கும் தொண்டு செய்துள்ளார். காதலின் சிறப்பு, பெண்ணின் பெருமை, தமிழின் மேன்மை, சிறுவர்க்கான ஒழுக்க நெறிகள், திராவிடர் இயல்பு முதலியவைபற்றிய தம் கருத்துக்ளைப் பண்ணிசைப் பாடல்களில் தந்துள்ளார். தமிழனுக்கு வீரம் பொங்க, பழம் பெருமையின் மேன்மை விளங்க இசையமுதைவிட வேறு எதுவும் நமக்குத் தேவையில்லை என்கிறார், டாக்டர் ஆனைவாரி ஆனந்தன் (பக். 60).

தமிழிசையில் புதுப்புதுக் கருத்துகள் மிளிர வேண்டும் என்று 'இசையமுது' படைத்தார், பாவேந்தர். தெய்வங்களைப்பற்றி மட்டுமே இசைப்பாடல்கள் இருந்த நிலையை மாற்றி ஏழைத் தொழிலாளர்களை இசைப்பாடல்களுக்குப் பொருளாக்கினார், பாவேந்தர். பாட்டுலகில் அவர் செய்த புரட்சி இது என்கிறார், டாக்டர் சரசுவதி இராமநாதன் (பக். 201).

மயிலம் சுப்பிரமணியர் துதியமுது போன்றவற்றைப் பாவேந்தர் பாடுவதற்குத் தூண்டுகோலாய் இருந்தவர் அவர்

ஆசிரியர் சாரம் பு.அ. பெரியசாமிப்பிள்ளை என்பதை உணர முடிகிறது என்கிறார், முனைவர் அ. அறிவுநம்பி (பக். 28).

ஆய்வுச் சிந்தனைகள்

இந்நூலிலுள்ள கட்டுரைகளில் பல அரிய ஆய்வுக் குறிப்புகள் கிடைக்கின்றன. அவை நம் நெஞ்சை அள்ளிச் சிந்தனையைத் தூண்டுகின்றன.

பாவேந்தர் மறுபிறப்புக் கொள்கையை மறுப்பவர். அதனால் 'ஊழ்' என்பதற்குத் 'தமிழ்ச்சான்றோர்களால் அருளிச் செய்யப்பட்ட சட்டம்' என்று பொருள் கொண்டு திருக்குறளுக்கு விளக்கம் தருவதை டாக்டர் மா. அண்ணாதுரை எடுத்துக் காட்டியுள்ளார் (பக். 14).

சஞ்சீவி பருவதத்தில் இருந்தனவாகப் பாவேந்தர் தம் கற்பனையில் காட்டுகின்ற இரு மூலிகைகள் வானொலியும் தொலைக்காட்சியும் செய்யும் வேலைகளைச் செம்மையாய்ச் செய்வதை அருமையாய் விளக்குகிறார், டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் (பக். 287).

ஒரே மையத்தைக்கொண்டு, ஆரத்தை அகற்றி அகற்றி, வட்டங்கள் பல வரைந்து செல்வது போல, பாவேந்தரின் 'சோம்பிக் கிடப்பது தீமை' எனும் ஒரு பாடலடியை மையமாக்கிப் பல அரிய கருத்து வட்டங்களை வரைந்து காட்டுகிறார், டாக்டர் சையத் இபுராகிம் (பக். 315).

பாவேந்தரின் பாடல்களில் பேசப்படும் பொதுவுடைமைக் கொள்கை மார்க்சியக் கொள்கைக்கு எவ்வாறு உறவும் முரணும் கொள்ளுகின்றன என்று கணித்துப் பார்க்கின்ற பேராசிரியர் அ. பசுபதி அவர்கள், பாவேந்தரின் பொதுவுடைமை அறிவிப்புகள் தொடக்கப்பள்ளிப் பிள்ளைக்குப் பாடம் புகட்டும் அந்த அளவினதே தவிர, மார்க்சியத்தின் எந்த வகை ஆய்வுக்கும் தம்மை உட்படுத்திக்கொள்ளும் ஆற்றல் பெற்றவை ஆகமாட்டா என்கிறார் (பக். 426).

பாவேந்தரின் பாடல்களில் 'வாள்' ஒரு குறியீடாகவே விளங்குகிறது. மன்னராட்சியோ மக்களாட்சியோ எங்கெல்லாம் அதிகாரம் (வாள்) மக்களுக்கு எதிராய் எழுகின்றதோ, அங்கெல்லாம் எதிர் அதிகாரம் (வாள்) எழுந்தே தீரும் என்பதையே பாவேந்தரின் 'வாள்', குறியீட்டு வகையில் உணர்த்துகிறது என்கிறார், புலவர் ஆ. பழநி (பக். 453).

'முடிந்த அளவு உச்சநிலை மகிழ்ச்சியைப் பெறுவதே வாழ்க்கையின் நோக்கம்' என்பது சார்வாகம். பாவேந்தர் சார்வாகம் என்னும் இப்பண்டைய கோட்பாட்டைக் கற்றுணர்ந்து, அதற் கிசையத் தம் கவிதைகளை ஆக்கினார் என்று சொல்ல முடியாது. ஆயினும், அவர் பாடல்களில் இந்த இயற்கை நெறியின் வீச்சு இயல்பாய் அமைந்துள்ளது என்பதைத் தக்க எடுத்துக்காட்டு களுடன் புலப்படுத்துகிறார், டாக்டர் சௌ. மதார் மைதீன் (பக். 517).

பாரதிதாசன் படைப்புகளில் தற்கொலை என்பது நிகழ்வுகளாயும் அச்சுறுத்தல்களாயும், முயற்சிகள் என்ற அளவிலும் முப்பத்தெட்டு இடங்களில் சுட்டப்பெறுகின்றன. வாழ்வியலைப் பாடிய பாரதிதாசன் தற்கொலையைப் பாட முற்பட்டது எவ்வாறு என ஆய முற்பட்டு, கவிஞர் தற்கொலையைப் பாடியிருப்பினும் அது அவரிடம் முக்கியத்துவம் பெற்றதாய் இருந்ததில்லை. தற்கொலை நிகழ்ச்சிகளை அதனதனிடத்தில் வைத்துப் பார்க்கும்போது கண்களை உறுத்துவனவாய் இல்லை என்று சமாதானம் கொள்கிறார், டாக்டர் மா.தே.ஜெயபாலன் (பக். 670).

ஒப்பீடு

பாவேந்தரை ஆய்வாளர்கள் சில வெளிநாட்டுக் கவிஞர்களுடனும் இந்நாட்டுக் கவிஞர்களுடனும் ஒப்பிட்டுக் கருத்துகளை வழங்கியுள்ளனர்.

பாரதிதாசனையும் அமெரிக்கக் கவிஞரான பிராஸ்டையும் டாக்டர் இராம. குருநாதன் ஒப்பிட்டு, இருவரும் இயற்கையைப் பாடியுள்ள முறையில் மனித நலத்தை விழையும் நாட்டம் கொண்டவர்களாயிருந்திருக்கின்றனர் என்பதை உணரவைக்கிறார் (பக். 169).

பாரதிதாசனும் அமெரிக்கப் புரட்சிக்கவிஞர் வால்ட் விட்மனும் மக்களிடம், 'கடவுளை எண்ணிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் மனித நேயம் கொண்டிருங்கள்' என்று வலியுறுத்தி வந்ததைப் பேராசிரியர் பா. பரமேஸ்வரன் ஒப்பிட்டுக் காட்டுகிறார் (பக். 448). வால்ட்விட்மனைப் பேரறிஞர் அண்ணா, 'அமெரிக்க நாட்டுப் பாரதிதாசன்' என்று கூறியிருப்பதை இங்கு நினைவில் கொள்ளலாம்.

ஔவையார் முதன் முதலில் ஆத்திசூடி எழுதினார். பாரதியார் 'புதிய ஆத்திசூடி' எழுதினார். பாரதிதாசனும்

ஆத்திசூடி' எழுதியிருக்கிறார். மூன்று ஆத்திசூடிகளையும் ஒப்பிடுகின்ற கவிஞர் நாரா. நாச்சியப்பன், புதிய சமுதாயம் காண வேண்டுமெனும் பாவேந்தரின் உள்ளத் துடிப்பை அவரது ஆத்திசூடியில் காணமுடிகிறது என்கிறார் (பக். 400).

பாரதிதாசனே, 'பாரதிதாசன் ஆத்திசூடி', 'இளையர் ஆத்திசூடி' என இரு ஆத்திசூடிகள் எழுதியுள்ளார். ஔவையார், பாரதியார் ஆத்திசூடிகளுடன் பாவேந்தரின் ஆத்திசூடிக்கு உள்ள ஒப்புமை, வேறுபாடு ஆகியன குறித்து ஆய்வு செய்து டாக்டர் மு.அ. முகம்மது உசேன், "ஏனைய பாடல்களில் தம் கருத்துக்கு மாறுபடுவோர்மீது சீறிப் பாய்வது போலல்லாமல் ஆத்திசூடியில் பாவேந்தர் தாம் நீதி புகட்டும் ஆசிரியர் என்பதை உணர்ந்து, நடுவு நின்று நீதி கூறுவது போற்றத்தக்கது" என்கிறார் (பக். 560).

பாரதி, பாரதிதாசன் ஆகிய இருவரையும் ஒப்பிட்டு இரு கட்டுரைகள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. பாரதியால் சமூகத்தைப் பாடுமாறு தூண்டப்பட்டு, பாரதியின் மறைவுக்குப்பின் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் தம்மைப் பிணைத்துக் கொண்ட பாரதிதாசன், கடைசிவரை கடவுள் மறுப்பாளராகவே வாழ்ந்து மறைந்தார். பாரதிக்குப்பின் தமிழகத்தில் ஏற்பட்ட சமூக, அரசியல் மாறுதல்களே பாரதிதாசனை அந்நிலைக்குத் தள்ளியது என்பதை விளக்குகிறார், டாக்டர் மதியழகன் (பக். 524).

பாரதியிலிருந்து பாரதிதாசன் மாறுபட்டது தெய்வ வழிபாட்டுக் கொள்கையில்தான். இதனால் பாரதிதாசன் 'தேசியகவி' என்ற நிலைக்கு ஏற்றவர் அல்லர் என்று யார் சொன்னாலும் அவர்கட்குப் புதிய தீர்ப்பு ஒன்று கிடைக்காமற் போகாது. பாரதியாரின் வழியில் நடந்துகொண்டே வந்து, புதுப்புது உணர்வுகளை ஊட்டி, மிக நீண்ட பயணத்தை நடத்திப் பாரதிதாசன் வெற்றி கண்டிருக்கிறார் எனக் கூறுகிறார், பாவேந்தரின் திருமகனார் கலைமாமணி மன்னர் மன்னன் (பக். 552).

பாவேந்தர் சமுதாயச் சீர்திருத்தத்தில் காலூன்றிக்கொண்டு பொருளாதார சீர்திருத்தத்தை நோக்கிக் கைதூக்கியவர். ஆனால், பட்டுக்கோட்டையோ பொருளாதாரச் சீர்திருத்தத்தில் காலூன்றிக் கொண்டு சமுதாய சீர்திருத்தத்தை நோக்கிக் கை தூக்கியவர் என்பதைப் புலப்படுத்துகிறார், டாக்டர் தி. இராசகோபாலன். இருவருமே பொருளாதார, சமுதாய முன்னேற்ற நோக்கமுடையவர்கள் என்றாலும், யாருக்கு எதில் நாட்டம் மிகுதி என்பதைக் கட்டுரை நன்கு விளக்குகிறது (பக். 69).

பாரதிதாசனை நினைக்குந்தோறும், 'பாப்புனையும் நற்றொழிலை அவரிடத்தில் கற்றேன்' என அவரை ஆசிரியராய் ஏற்றுப் போற்றிக் கவியுலகில் தமக்கென ஓர் இடத்தை அமைத்துக் கொண்டிருக்கும் வாணிதாசனாரையும் நினைக்க வேண்டு மென்னும் விழைவை வெளிப்படுத்துகிறார், பாவலர் சு. வேல் முருகன் (பக். 665).

செய்ய வேண்டியவை

பாவேந்தர் பாடல்களைப் பதிப்பித்திருப்பதில் பல சீர்கேடுகள் நுழைந்துள்ளன. பாடல்களில் பலவகைப் பிழைகளும் குறைகளும் மிகைகளும் மாறுபாடுகளும் நேர்ந்துள்ளன. எனவே, முறையான பிழைகளற்ற ஆராய்ச்சிப் பதிப்பொன்று வெளிவர வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார், முனைவர் இரா. திருமுருகன் (பக். 356).

பாவேந்தருடன் தாம் பழகிய நினைவுகளை அலைகளாக்கித் தந்துள்ளார், முல்லை பி.எல். முத்தையா. அக்கட்டுரையில், பாவேந்தர் கவிதைகளை அவர் காலத்துக்கு முன்னும் சமகாலத் திலும் வாழ்ந்த பிற மொழிக் கவிஞர்களின் கவிதைகளோடு ஒப்பாய்வு செய்து எழுதலாம் எனத் திரு.முத்தையா அவர்கள் கூறியுள்ள கருத்து உடனடியாய் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று (பக். 591).

இன்று ஊர்தோறும், தெருத்தோறும் ஆங்கிலம் பயிற்சி மொழியாய் உள்ள பள்ளிகள் புற்றீசல் போலத் தோன்றி வருகின்றன. பாரதி - பாரதிதாசன் வழியினர் என்பது மேடைப் பேச்சுக்காகவும், பட்டம் பதவிக்காகவும் என்றாகிவிடுமா? இவ்வினாக்கள் பாவேந்தர் பாரதிதாசனுக்கு நூற்றாண்டு விழா எடுக்கும் இக்காலத்தில் இன்றைய தமிழகத்தின்முன் எழுந்துள்ளன என்கிறார், திரு.ஆர். பார்த்தசாரதி (பக். 459).

இவர் வினாக்களுக்குத் தமிழகம் என்ன மறுமொழி தரப்போகிறதோ? பாரதிதாசன் கனவுகளையெல்லாம் நனவாக்கு வோம் என மறுமொழியுரைக்கும் நிலை மலர உழைப்பதே நாம் அவர் நூற்றாண்டு நிறைவு விழாவிற்குச் செலுத்தும் காணிக்கை யாகும்.

வாழ்த்து

இவ்வளவு சிறந்த நூலை வெளியிட்டுள்ள கங்கை புத்தக நிலைய உரிமையாளர் திரு. டி.ஆர். இராமநாதன் அவர்கள் தமிழ்கூறு நல்லுலகம் போற்றும் பேறு பெற்றவராகிறார். பெரும்

பொருட்செலவையும் கருதாது, அரிதின் முயன்று, நூலென்றால் இப்படியன்றோ இருக்க வேண்டும் என எவரும் போற்றத்தக்க வகையில் இந்நூலை வெளிக்கொணர்ந்திருப்பது தமிழ் நெஞ்சங்களிலெல்லாம் தேனைப் பாய்ச்சும் என்பதில் ஐயமில்லை. தமிழை மருந்தாய்ச் சொல்லி, அந்த மருந்தின் தன்மையைக் கூற வரும் பாவேந்தர் "உள்ளே தொட்டால் உசிரில் இனிக்கும்; தெள்ளு தமிழ் தம்பி இதன் பேர் தெள்ளு தமிழ்" என்பார். உள்ளே விரலை விட்டால் இனிப்பு உயிரிலே ஊற்றெடுக்குமாம்! அதுபோலவே எடுத்துப்பிரித்தாலே இதயத்தை இனிக்கச் செய்யும் இன்பத்தமிழ் நூல் இது என்று துணிந்து கூறலாம். கட்டுரைத் தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து, தக்க பேராசிரியர்களைக்கொண்டு எழுத வைத்து, அவற்றைச் செவ்வனே தொகுத்தமைத்துள்ள பதிப்பாசிரியர் பேராசிரியர் சாயுபு மரைக்காயர் அவர்களும், நேர்த்தியாய் அச்சிட்டுள்ள குருகுல அச்சகத்தாரும் பாராட்டுக்குரியவர்கள்.

கங்கை புத்தக நிலையத்தார்க்குக் கனிவான வாழ்த்துகள்.

நூல் ஆக்கம்	மு. சாயுபு மரைக்காயர் (தொகுப்பாசிரியர்)
வகைமை	ஆய்வுக் கட்டுரைகள்
வெளியீடு	கங்கை புத்தக நிலையம், சென்னை. (1990)

5

குறள்வழிச் சிந்தனைகள் – ஒரு புதுப்பார்வை

புலவர் வீரமணி சிறந்த ஆய்வறிஞர்; முற்போக்குச் சிந்தனையாளர்; நேரிய கூரிய திறனாய்வாளர்; ஆய்ந்து தெளிந்த உண்மைகளை, எங்கும் எப்போதும் எவர்க்கும் வளைந்து கொடுக்காமல் துணிச்சலோடு கூறுகின்ற ஆற்றலாளர். செல்வாக்கு மிக்க ஒருவர் ஒன்றைச் சொல்லிவிட்டால், ஆய்வாளர் பலர் அதனை மறுத்துரைக்க அஞ்சுகின்றனர். "ஆய்வுக்கு உண்மையும் அஞ்சாமையும் இரு கண்கள் போன்றனவாகும். நம் நாட்டில் உள்ள ஆய்வாளர்கட்கு அஞ்சாமை மிகக்குறைவு. ஆராய்ச்சியில் புதிய வழி காண்பதற்கும் புதுக் கருத்துகள் மலர்வதற்கும் அச்சமே பெருந்தடையாய் உள்ளது" என வீரமணி சுட்டுகிறார்.

அவர் கூறும் இக்குறைபாட்டினைக் களையும் முறையிலும், புதிய கருத்துகள் மலரும் வகையிலும் அவர் எழுதியுள்ள கட்டுரைகளை இந்நூல் கொண்டிருக்கிறது; ஒன்பான் மணிகளைப் பதித்துச் செய்யப்பெற்ற சிறந்த அணிகலனைப்போல, ஒன்பது மணியான கட்டுரைகள் ஒளி வீசிச் சிறந்துள்ளன.

''திருக்குறள்பற்றி ஆயிரமாயிரம் ஆய்வும் நூற்றுக் கணக்கான உரைகளும் வெளிவந்துள்ளன. எனினும், இன்னும் பல குறட்பாக்கள் ஐயத்திற்கிடமாகவே உள்ளன. நம் பேராசிரியர்கள் ஆழ்ந்த கவனம் செலுத்தாத காரணத்தால் பல குறட்பாக்களுக்குப் பொருந்தா உரைகள் தோன்றிவிட்டன. பழைய உரைகாரர்களின் ஆழ்ந்தகன்ற புலமையில் மயங்கி நின்றதால், பல குழப்பங்கள் இன்னும் நீடித்து வருகின்றன'' எனச் சொல்லும் வீரமணி, திருக்குறளில் புதுப்பார்வை செலுத்தி, கருத்தாழமிக்க சிந்தனை களை நமக்குத் தந்துள்ளார்.

பொருள் காணும் முறையில் வீரமணி கையாண்டுள்ள எட்டு முக்கியக் கூறுகளைக் கட்டுரைகளில் காணமுடிகிறது.

(1) மணக்குடவர், பரிமேலழகர் தொடங்கி இன்றுவரை, அறிஞர்கள் சொன்ன உரைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட உரைகளை வீரமணி வழங்குகிறார்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு (குறள் 731)

என்னும் குறளில் 'தக்கார்' என்ற சொல்லுக்கு அறவோர், சான்றோர் என உரையாசிரியர்கள் கூறியிருப்பது பொருந்துவதா யில்லை என்பதை நன்கு புலப்படுத்துகிறார். 'தள்ளா விளையுள்', 'தாழ்விலாச் செல்வர்' என்பவற்றிற்குள்ள பல்வேறு உரைகளைச் சுட்டி, 'தள்ளா விளையுள்' என்பது இயற்கை வளத்தை, உழைப்பாளரைக் குறிக்கிறது என்றும், 'தாழ்விலாச் செல்வர்' என்பது பெருநிலக்கிழார்களைக் குறிக்கிறது என்றும் விளக்கி, அவற்றோடு சேர்த்து நோக்கி, 'தக்கார்' என்ப்தற்கு வாணிகர் என்னும் பொருளே பொருத்தமானது என நிறுவியிருக்கும் ஆய்வுத்திறம் பாராட்டிற்குரியது.

இலர்பல ராகிய. காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர் (குறள் 270)

எனும் குறளில், 'இலர்' என்பதற்கு உரையாசிரியர்களெல்லாம் பொருள் இல்லாதவர், ஞானம் இல்லாதவர் எனப் பொருள் கண்டிருக்க, வீரமணி, 'தவவொழுக்கத்தை இன்னல் பல வரினும் நெறியோடு கடைப்பிடிக்காதவர்கள்' எனப் புதிய பொருள் கண்டிருக்கிறார்.

(2) ஒருவர் சொன்ன விளக்கத்தை ஏற்று, அதனை மேலும் விரிவுபடுத்தியும் தெளிவுபடுத்தியும் ஒரு முடிவுக்கு வருகின்ற உத்தியையும் வீரமணி கையாண்டிருக்கிறார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். (குறள் 1062)

இக்குறளில், 'உலகியற்றியான்' என்பதற்கு இவ்வுலகைப் படைத்த இறைவன் என்றே பெரும்பாலானோர் உரை கூறியுள்ளனர். பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், 'உலக சமுதாய நெறியை அமைத்தவன்' எனப் பொருள் கொள்வார் உண்டு என்று சொன்ன அளவில் நிறுத்திவிட்டார். சான்றுகள் கொண்டு இக்கருத்தினை அவர் நிறுவவில்லை. வீரமணி, தெ.பொ.மீ.யின் கருத்தையொட்டித் திருக்குறளில் பல அகச்சான்றுகளை எடுத்துக் காட்டி, மேலும் விளக்கம் தந்து, உலகியற்றியான் என்பதற்கு மன்னன் எனப் பொருள் கொள்கிறார்.

இயற்றுதல், படைத்தல் என்னும் சொற்களைத் திருவள்ளுவர் ஆண்டுள்ள இடங்களையெல்லாம் ஆய்ந்து,

இயற்றியான் என்பதற்கு மன்னன் என்னும் பொருளே பொருத்தமானது என்ற முடிவுக்கு வருகிறார்.

(3) பல உரைகள் இருப்பின், அவற்றுள் பொருத்தமானதை ஆய்ந்தறிந்து அதையே கொள்ளலாம் என்று கூறும் முறையும் உண்டு.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை (குறள் 41)

இக்குறளில், 'இயல்புடைய மூவர்' என்பதற்குப் பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி எனப் பரிமேலழகரும் பிறரும் பொருள் கொண்டனர். தமிழ்த்தென்றல் திரு.வி.க., 'மூவர்' என்பதற்கு மூவேந்தர் எனப் பொருளுரைத்தார். பார்ப்பார், அரசர், வாணிகர் என்போரை இயல்புடைய மூவர் என்கிறார், தேவநேயப் பாவாணர். மூவர் என்பார் இளையர், முதியோர், பெண்டிர் என்று கூறுவாரும் உண்டு. உறவினர், நண்பர்கள், ஏழைகள் என்பார், நாமக்கல் கவிஞர். வ.உ.சி., தாய், தந்தை, தாரம் என்ற மூவர் என்றார். 'வ.உ.சி.யின் உரை, மேலே சொன்ன உரைகளைக் காட்டிலும் சற்று வேறுபட்டதாயும் சிறப்புடையதாயும் நேரியதாயும் இருக்கிறது'. நாவலர் நெடுஞ்செழியன், இயல்புடைய மூவர் என்பார் பெற்றோர், மனைவி, மக்கள் என்கிறார். தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பெற்றோர், வாழ்க்கைத்துணை, குழந்தைகள் என இயற்கையாய் அமைந்திடும் மூவர் என்கிறார். பதினாறு கவனகர் இரா.கனகசுப்புரத்தினமும் பெற்றோர், மனைவி, மக்கள் என்றே கூறுகிறார். திரு. வீரமணி பெற்றோர், மனைவி, மக்கள் என்று கூறும் உரையே 'மூவர்' என்பதற்குப் பொருத்தமான உரை என்பதற்கான விளக்கங்களைக் கூறி ஏற்கிறார்.

(4) திருக்குறளில் சிற்சில பாட வேறுபாடுகள் பொருளின் சிறப்பை உயர்த்துவனவாய் உள்ளன. அத்தகைய பாட வேறுபாடுகள்பற்றி அறிஞர்கள் சிந்தித்து முடிவு காணவேண்டு மென விழைகிறார், வீரமணி.

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. (குறள் 42)

இறந்தார் என்பதற்கு, ஒருவருமின்றித் தன்பால் வந்து இறந்தார் எனப் பரிமேலழகரும், பாதுகாப்பற்றவர் எனப் புலவர் குழந்தையும், நிலை திரிந்தவர் என வ.சுப.வும் ஆக மூவகையாய்ப் பொருள் கொண்டுள்ளனர். திரு. வீரமணி, 'இரந்தார்க்கும்' என்பது பாடவேறுபாடாய் 'இறந்தார்க்கும்' என அமைந்திருக்கலாம் எனக் கருதுகிறார். கம்பராமாயணத்தில் பாட வேறுபாடுகள் பன்னூறு

காணக்கிடக்கின்றன. சங்க இலக்கியங்களிலும் பாட வேறுபாடுகள் உண்டு. ஏடெடுத்தெழுதுவோரால் பாடவேறுபாடு தோன்றுவதும் இயல்பே. திருக்குறளிலும் பாட வேறுபாடுகளுக்கு இடமுண்டு. பழைய உரையாசிரியர்கள் பல பாட வேறுபாடுகளைக் கொண்டுமுள்ளனர். இரந்தார் என்று பாடம் கொண்டால் இக்குறளுக்கு நேரிய பொருள் கிடைக்கிறது. துரந்தார், துவ்வாதவர், இரந்தார் மூவருமே வாழ்கின்றவராகின்றனர். மேலும், 'இரவு' என்னும் ஓர் அதிகாரத்தையே திருவள்ளுவர் வகுத்திருக்கிறார். இரப்பவரிடம் வள்ளுவர் பரிவு கொண்டவர். எனவே, குறளில் இரந்தார்க்கும் என்றுதான் இருந்திருக்கவேண்டும் என வீரமணி கருதுகிறார். தமிழறிஞர்கள் இதுபற்றிச் சிந்திக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறார்.

(5) இலக்கியத்தில் ஒரு சொல்லுக்குப் பொருள் காணும் போது, அவ்விலக்கியத்திற்கு முன்னர்த் தோன்றிய இலக்கியங்களில் அச்சொல் ஆளப்பட்டிருந்தால் அதன் பொருளை நோக்கி, அதனடிப்படையில் இதற்கும் பொருள் கொள்ள முடியுமா என எண்ணிப் பார்க்க வேண்டும்.

> தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
> ஐம்புலத்தா றோம்பல் தலை. (குறள் 43)

மறைமலையடிகள், தென்புலத்தில் மிக்க நாகரிகமுடையவரா யிருந்து காலம் சென்று மறைந்த மூதாதையர் எனத் தென்புலத்தாரைக் கொள்கிறார். இச்சொல்லுக்கு இறக்கும் தறுவாயில் உள்ள முதியோர், மெய்யறிவுடையோர் என்றெல்லாம் உரையாளர் பல்வேறு பொருள் கொண்டுள்ளனர். தென் புலத்தாரைப் பிதிரர் எனப் பரிமேலழகரும் மணக்குடவரும் கூறினர். திருக்குறளுக்கு முந்தைய இலக்கியமான சங்க இலக்கியங்களுள் ஒன்றான புறநானூற்றில், 'தென்புலம் வாழ்நர்' எனும் தொடர் இடம் பெற்றுள்ளது. 'தென் திசைக்கண் வாழ்வோராகிய நுங்குடியில் இறந்தோர்' என இதற்குப் பழைய உரை பொருள் கூறுகிறது. இவ்வுரை எழுந்த காலத்தில், தம் குடியில் பிறந்து இறந்த முன்னோர் வானுலகில் தென்திசையில் வாழ்கின்றனர் எனும் நம்பிக்கை தமிழர்க்கு இருந்தது என்பதையும், அவர்களுக்கு நிலவுலகில் வாழும் உறவினர் வழிபாடு இயற்றினர் என்பதையும் அறியமுடிகிறது. இது கொண்டு, தென்புலத்தார் என்பது இறந்த முன்னோரைக் குறிக்கும் என்பதே குறள் நெறிக்கு ஏற்றது எனும் வீரமணியின் விளக்கம் சரியெனவே தோன்றுகிறது.

(6) வள்ளுவர் காலச் சமுதாய நிலையை நன்குணர்ந்தே குறளுக்கு உரை காணவேண்டும். அதுவே முறை என்கிறார், வீரமணி.

பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். (குறள் 1034)

இக்குறள் உழவு என்னும் அதிகாரத்தின்கீழ் வருகிறது. உழுபவரை உலகத்தார்க்கு ஆணி என்றும், 'உழவே தலை', 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்றும் திருவள்ளுவர் உழவைச் சிறப்பித்துள்ளார். பரிமேலழகர்முதல் இன்றைய அறிஞர்வரை, 'தங்குடைக் கீழ்' என்பதற்கு, 'தம் மன்னனின் குடைக்கீழ்' எனப் பொருள் கொண்டுள்ளனர். சங்ககாலத்திலேயேகூட மன்னனின் வெற்றிக்கு முழுமுதல் காரணமாய் இருந்தவர் உழவரே என்பதை அறிய முடிகிறது. எனவே, குறளில் 'தங்குடை' என்பது உழவரின் பயன்மிகு தொழிலின் பெருமையைக் குறித்து வந்ததேயாக வேண்டும். டாக்டர் மு.வ. அவர்களும், டாக்டர் சி. இலக்குவனாரும், 'தங்குடைக்கீழ்க் காண்பர்' என்பதற்கு உழவரின் (உழைப்பு என்னும்) குடைக்கீழ் எனப் பொருள் கூறுகின்றனர். கலைஞர் அவர்களும், 'தங்குடை' என்பதற்கு 'உழவரின் குடைநிழல்' என்ற பொருளையே கூறுகிறார். "பல அரசர்களின் நிழல்களைத் தமது குடைநிழலின்கீழ்க் கொண்டுவரும் வலிமை பெற்றவர்கள் உழவர்கள்" என்பது அவர் உரை. அன்றைய சமுதாயத்தில் வாழ்ந்த உழவர்களின் உற்பத்தியை வேறு பல நாடுகளும் எதிர் நோக்கியிருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. எனவே, இக்குறளுக்கு உழவர், மன்னர் பலரின் குடைநிழலையும் உழவெனும் தம் குடைக்கீழ்க் காண்பர் (அஃதாவது, மன்னர் பலரையும் தம் உழவுத்தொழில் எனும் குடையை எதிர் நோக்கியிருக்கச் செய்வர்) என்பதே நேரிய உரையாகும் என்கிறார், வீரமணி.

(7) காலம் கடந்து நிற்கும் பொதுமைத் தன்மையைத் திருக்குறள் கொண்டிருக்கிறது. 'அறிவியல் அணுகுமுறை' திருவள்ளுவரிடம் இருந்திருக்கிறது என வீரமணி பல சான்றுகள் காட்டுகிறார். பொதுமை நெறியை அறிவியல் அணுகுமுறை எனலாம். 'மாற்றம் ஏற்படுகின்ற மனித சமூகத்தில் எதனையும் பெயரிட்டுக் கூறாமல் பொதுமையாய்க் கூறினால்தான் எதுவும் காலம் கடந்து நிற்கும் என்று வள்ளுவர் எண்ணியிருக்கலாம். அதனாலன்றோ கடவுள், கல்வி, நாடு, மன்னன், நீர், படை ஆகியவற்றைப் பெயரிட்டுக் கூறாமல் காலம் கடந்து நிற்கும் வண்ணம் பொதுமையாய்க் கூறினார். இவ்வாறு பொதுமையாய்க்

கூறிய கருத்து இன்றும் பயனுள்ளதாய் இருப்பதாலும் வள்ளுவரின் அணுகுமுறை அறிவியல் அணுகுமுறை எனலாம்' எனக் கூறி திருவள்ளுவர் அறிவியல் அணுகுமுறையாளர் என்பதை மிகவும் சிறப்பாய் எடுத்துரைக்கிறார்

(8) ஒரு கருத்தைச் சொல்பவர் எவ்வளவு உயர்ந்தவராயினும், சிறப்புப் பெற்றவராயினும், தாமே மதித்துப் போற்றிடும் தகைமையாளராயினும் அக்கருத்து மறுக்கப்பட வேண்டியதாயின் தம் கருத்தை நறுக்கெனச் சொல்லும் இயல்பினராய் வீரமணி விளங்குகிறார். "தமிழ் உலகில் ஆய்வை நேரிய உண்மையை நோக்கிச் செலுத்தியவர். தமிழ் இலக்கியத்தை வெறும் இலக்கிய இலக்கண அளவுகோல்களால் மட்டும் காணாமல் தத்துவம், உளவியல், சமூகவியல், பொருளியல் ஆகிய கருதுகோள்கள் மூலமாய் ஆய்ந்தவர். குறிப்பாய் அவர் ஆய்வு மார்க்சிய நெறிமுறைகளைச் சார்ந்தது. இதனால் அவர் ஆய்வு உண்மை நிறைந்ததாயும் உறுதி வாய்ந்ததாயும் இருக்கிறது" என்று வீரமணி, கைலாசபதியின் திறனாய்வின் நேர்மையையும் திறமையையும் மதிப்பிடுகிறார். கைலாசபதிபற்றி வீரமணி கூறியுள்ள கருத்து முற்றிலும் வீரமணிக்கும் பொருந்தும். தாம் இவ்வளவு உயர்வாய் மதிக்கும் கைலாசபதி 'திருவள்ளுவர் ஆளும் வர்க்கத்தை ஆதரித்த புலவர்' என்று சொல்வதை வீரமணி வன்மையாய் மறுக்கிறார். தாம் போற்றும் தகுதியாளரேயாயினும், கருத்து பொருத்த மில்லையாயின் கண்டிப்பாய் மறுக்கின்ற நேரிய ஆய்வுத் தன்மையை வீரமணியிடம் காண முடிகிறது. 'மக்கள் நலத்தைப் பேணாத மன்னனையும், மக்கள் கருத்தை மதிக்கத் தெரியாத மன்னனையும் இடித்துரைத்து 'அக்கொடுங்கோலன் அழிந்து போவானாக எனக் கடிந்துரைக்கும்' வள்ளுவனை ஆளும் வர்க்கத்தை ஆதரித்த புலவன் எனக் கூறுவது சிறிதாவது பொருந்துவதாய் இல்லை எனக் கைலாசபதியின் கூற்றினை வன்மையாய் மறுத்துரைக்கிறார். "கொடுமைகளுக்காக ஆளும் வர்க்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்ய வேண்டும் எனும் கொள்கை பத்தொன்பதாம் நூற்றாண்டில் மார்க்சால் தோற்றி வைக்கப்பட்ட கொள்கையாகும். அக்கொள்கை மார்க்சுக்கு முன்னால் உலகில் வேறு எவராலும் விளக்கப்பட்டதில்லை. அதனை வள்ளுவரிடத்தில் காண முயல்வது வரலாற்றுக் குருட்டுத் தனமாகும்" எனக் கைலாசபதியின் கூற்றுக்கு மறுப்புச் சொல்வதில் வீரமணியின் நேரிய ஆய்வு நெஞ்சம் புலப்படுகிறது.

கைலாசபதியிடம் மாறுபடுவது போலவே வீரமணி தாம் மதித்துப் போற்றும் மறைந்த தவத்திரு குன்றக்குடி அடிகளாரிடமும், உரைகளுள் எளிய இனிய உரை என்று தாம்

பாராட்டுகின்ற உரையை எழுதியுள்ள நாமக்கல் கவிஞரிடமும், கருத்தில் மாறுபடும்போது மிகவும் கடுமையான சொற்களைக் கூடப் பயன்படுத்தியிருக்கிறார்.

தாழ்விலாச் செல்வர் என்பதற்கு, 'பிறரைத் தாழ்த்தாத செல்வரே தாழ்விலாச் செல்வர்' எனத் தவத்திரு குன்றக்குடி யடிகளாரும், 'பிறரைத் தாழ்த்திப் பெறாத செல்வர்; பிறரது உழைப்பைச் சுரண்டிப் பெறாத செல்வர்' என்று கு.ச.ஆனந்தனும் பொருள் கொள்கின்றனர். அவற்றை உறுதியாய் மறுக்கும் வீரமணி, "மனிதகுலம் தோன்றியதிலிருந்து இன்றுவரை செல்வம் என்பது பெரிதும் சுரண்டலினால் தோன்றியது, வளர்ந்தது என்பதே சமூக விஞ்ஞானிகளின், பொருளியல் மேதைகளின் கொள்கையாகும். அதுவே உண்மையுமாகும். அடிகளாரும் ஆனந்தனும் நடை முறையை உண்மையை அறியத் தவறி, இன்னும் கற்பனையில் உலா வருவது நடைமுறைக்கு ஏற்றதன்று" என்பது வீரமணி கூற்று.

நாமக்கல் கவிஞரிடமிருந்து வேறுபடும் ஓரிடத்தில், "நாமக்கல் கவிஞரின் விளக்கத்தை உற்று நோக்கினால் அவர் எத்துணைப் பிற்போக்குச் சிந்தனையில் மூழ்கியுள்ளவர் என்பதை உணரலாம்" என்கிறார்.

மாறுபடுமிடங்களிலெல்லாம் மறுப்பை மிக வன்மை யாகவே வெளிப்படுத்தும் இயல்பினராய் வீரமணி விளங்கு கிறார்.

பழைய உரையாசிரியர்கள் மனுதர்மத்தைப் படித்ததால் தமிழ் நெறிக்கு மாறாய் உரை எழுதினர். உழவுத்தொழிலை உயிர்த்தொழில் என்கிறார், வள்ளுவர். ஆனால் மனுவோ, "பயிர்த்தொழில் நல்ல தொழில் என்று நினைக்கிறார்கள். அந்தத் தொழில் பெரியோர்களால் மிகவும் இகழப்பட்டதாகும்" என்கிறார். மனுவின் கருத்தை ஏற்று, அதன்வழி திருக்குறளுக்குக் கண்டுள்ள உரைகள் மாற்றப்பட வேண்டும்.

மனுநீதி அறமான தொருநாள் – அதை
மாற்றும் நாளே தமிழர் திருநாள்.

வள்ளுவரை ஆய்வு செய்யும்போது மேற்கொள்ள வேண்டிய சில முக்கியக் குறிப்புகளை அறிஞர்கள் கூற்றாயும் தம் கூற்றாயும் வீரமணி கூறியிருக்கிறார்.

"திருக்குறள் ஓர் உயிர்நூல் என்பது மெய்ப்பட வேண்டுமாயின் வள்ளுவர் குறட்பாக்களைக் காலநடப்புகளோடு பொருத்தி எழுதவும் சொல்லவும் விளக்கவும் வேண்டும். இது செய்தற்கு நாம் அஞ்சுகிறோம். செய்யப்புகின் கருத்து வேறுபாடு

தோன்றிப் பூசல் பொங்கி, எங்கே திருக்குறளின் பெருமை போய்விடுமோ என்று பயப்படுகிறோம். இவ்வச்சம் தவறானது, பயனற்றது" எனக் கூறும் வ.சுப. மாணிக்கனாரின் கருத்தை உளம் கொண்டு ஆய வேண்டும் என்கிறார்.

"வள்ளுவரின் சிந்தனைகளுள் பல இன்றும் புதுமையாயும் புரட்சிகரமாயும் இருக்கலாம். ஆனால், அனைத்துச் சிந்தனைகளும் அவ்வாறு உடையன என்று கூறுவது உண்மைக்குப் பொருந்தாது; இஃது உண்மை ஆராய்ச்சியும் ஆகாது."

வீரமணி இக்கூற்றுகளின் அடிப்படையில் ஆய்வு செய்திருப்பதை அறிய முடிகிறது.

"திருக்குறள் ஆய்வாளர்கள் இனியாவது ஒருங்கிணைந்து கலந்து, விவாதித்து, சிக்கலான தொடர்களுக்கு உண்மையுரை இவையே என உணர்த்த முன்வர வேண்டும்" என வீரமணி கூறியிருப்பதை அறிஞருலகு உடனே செயற்படுத்த வேண்டும்.

ஆய்வு, வட்டம் போன்றது; மேலும் மேலும் விரிந்து செல்ல இடமுண்டேயன்றி முடிவுக்கு இடமில்லை. வீரமணியின் இவ்வாய்வைத் தொடர்ந்து பல புதிய ஆய்வுகள் தோன்ற வேண்டும்.

வீரமணியின் ஆய்வு வேட்கைக்கு இந்நூல் ஓர் அடையாளம். புதுமையும் உண்மையைக் கண்டறியும் துடிப்பும் அவர் உரையின் தனிச் சிறப்புகளாய் உள்ளன. புதியன காணுதல், பழையன வற்றிலுள்ள பொருத்தமின்மையை - வேண்டாமையை நீக்குதல், முன்னரே பொருந்தியனவாய் உள்ளவற்றிற்கு மெருகூட்டி மேலும் பொலிவுபெறச் செய்தல் எனும் முத்திறத்ததாய் வீரமணியின் ஆய்வு அணுகுமுறை அமைந்திருக்கிறது.

திருக்குறள் முழுவதற்கும் வீரமணியின் உரை வெளிவர வேண்டுமென்பது என் விழைவு.

நூல் ஆக்கம்	புலவர் பா. வீரமணி
வகைமை	ஆய்வுக் கட்டுரைகள்
வெளியீடு	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. (1996)

6

திருக்குறள் தரும் பொருளியல் கோட்பாடுகள்

திருக்குறள் உலகப் பொதுமறை என அனைவராலும் போற்றப்படுகிறது. அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாலாய் அது வகுத்துக் கூறப்பட்டிருப்பினும் அதனுள் மனித வாழ்க்கைக்கு - சமுதாயத்திற்கு - தேவையான அனைத்துக் கூறுகளும் அடங்கிக் கிடக்கின்றன. தாம் தோன்றிய காலத்திலிருந்த கருத்துகளை - கோட்பாடுகளை - மட்டும் உணர்த்தும் ஒரு விளக்க நூலாய்த் திருக்குறள் எழவில்லை. எல்லாக் காலத்திற்குமுரிய பல்வேறு துறைக் கருத்துகளையும் ஆழமாயும் தெளிவாயும் ஆராய்ந்து சொல்லுகிறது, திருக்குறள். பல்வேறு நாட்டினரும் சமயத்தினரும் மொழியினரும் சமுதாயத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுமைப் பூக்காடாய்த் திருக்குறள் விளங்குகிறது.

"திருக்குறள் ஒரு சுரங்கம்; அவ்வக்கால உலகைப் புரக்கும் பொருள்களை அவ்வப்போது வழங்கும் பெற்றியது. அதனின்றும் இதுகாறும் அறிஞரால் எடுக்கப்பட்ட பொருள் சிலவே; மிகச் சிலவே. இவ்வேளையில் திரண்டு வரும் புது உலகும், இனித் திரளப் போகும் பல்வகை உலகங்களும் ஏற்கத்தக்க அடிப்படைப் பொருள்கள் திருக்குறளில் மிடைந்து கிடக்கின்றன. திருக்குறள் சுரங்கம் வற்றாது'' என்கிறார், தமிழ்த்தென்றல் திரு.வி.க. இப்படிப்பட்ட திருக்குறட்சுரங்கத்தில் ஆழ்ந்து, அவ்வப்போது அறிஞர் பலர் அப்பொருட்குவியலைக் கொணர்ந்து நமக்குத் தருகின்றனர். அப்பொருட்குவியல் உரையாயும் இருக்கிறது; விளக்கமாயும் விளங்குகிறது; ஆய்வாயும் அமைகிறது. இதுகாறும் உரையாயும் விளக்கமாயும் ஆய்வாயும் வெளிவந்த நூல்கள் பற்பல. இப்போது அருமை நண்பர் சிந்தனைச் செம்மல் கு.ச.ஆனந்தன் இவ்வரிய ஆராய்ச்சி நூலை ஆக்கிப் படைத்துள்ளார். திருக்குறள் அறவியல், பொருளியல், இன்பவியல், சட்டவியல், அரசியல், உளவியல், சமுதாயவியல், அறிவியல், மெய்யியல் போன்ற பல்வேறு இயல்களின் கருத்துகளை எடுத்துச்

சொல்லக் காண்கிறோம். அவற்றுள் குறள் கூறும் பொருளியல் கோட்பாடுகளை மட்டும் தொகுத்து இந்நூலில் ஆய்கிறார், ஆசிரியர்.

'குறளியமா', 'பொருளாட்சியைப் போற்றிட', 'முதலாண்மை மாற்றிட', 'உடைமையும் உரிமையும்' முதலிய பல்வேறு தலைப்பு களில் பொருளியற்கோட்பாடுகள் இந்நூலுள் ஆராயப்படு கின்றன. திருக்குறள் பொருட்பாலை மையமாய் வைத்துப் பொருளியற்கோட்பாடுகளை ஆசிரியர் சுட்டிக்காட்டினாலும் இது தொடர்பாய் மற்றவிரு பால்களிலும் விரவியிருக்கின்ற கருத்துகளையும் அவர் கணக்கில் கொள்ளத் தவறவில்லை. எனவே, வள்ளுவர் வகுத்துக் காட்டியுள்ள பொருளியல் கொள்கைகள் முழுதும் இந்நூலுள் ஆராயப்பட்டுள்ளன. சிற்சில குறட்பாக்களுக்குப் பரிமேலழகர், மணக்குடவர், காளிங்கர், மு.வ., வ.வே.சு. (ஐயர்) போன்றோர் கொண்ட பொருள்களை முறையே எடுத்துக்காட்டி, அவற்றுள் வள்ளுவத்தின் பொருளியற் கொள்கைக்கு ஏற்ப ஒத்து வரக்கூடியது எது என்பதையும், எப்படி என்பதையும் ஆசிரியர் இன்றைய நடைமுறைக் கொள்கைகளை அடிப்படையாய் வைத்துத் தெளிவுபடச் சொல்லுகிறார். செல்வம், உடைமை, பொருள், திரு போன்ற பொருளியல் கலைச்சொற்களை வள்ளுவர் எங்கெங்கே எவ்வெப்பொருளில் பயன்படுத்தியுள்ளார் என்பதை ஆசிரியர் பொருத்தமுறச் சுட்டிக்காட்டிச் செல்கிறார்.

சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம்.....

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்...

என்பதால் பொருளும் இன்பமும் அறத்தின் வழிப்பட்டுத்தான் வரும் என்பது சங்க காலத்தில் நிலவிய பொதுக் கொள்கை என்றும், அரசு முறைமைகூட 'அறநெறி' மூலமாகவே இயங்கும் என்பது சங்கச் சான்றோர்களின் கருத்து என்றும் எடுத்துக்காட்டும் ஆசிரியர், வள்ளுவரின் பொருளியற்கருத்து இதற்கு மாறுபட்டது என்பதை நிலைநிறுத்திக் காட்டுகிறார் (பக். 16, 17).

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

என்னும் குறளின்மூலம் பொருளின்வழிதான் அறமும் இன்பமும் வரும் என்ற புரட்சிக் கொள்கையை வள்ளுவர் வெளியிட்டார் என்றும், பொருளை இயற்றி - ஈட்டி - காத்து, காத்ததை வகுத்துச் செயல்படும் அரசே அந்தணர் நூல், அறம் ஆகியவற்றுக்கு அடிப்படையானது என்பது,

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்

என்னும் குறள்கள்மூலம் உணர்த்தப்படுகிறது என்றும் ஆசிரியர் நிறுவிக் காட்டுவது சிறப்பாய் உள்ளது.

பொருளுக்குப் பொருள் சொல்லும் ஆசிரியர்

"பொருள் என்பது செல்வத்தின் தனித்ததொரு சிறப்புக் கூறு; பணம் மட்டுமே அன்று. சமுதாய மக்கள் உண்டும் தின்றும் நுகர்ந்தும் மகிழ்ந்தும் வாழ்வதற்குரிய அனைத்து ஆக்கப்படும் பொருளும், எல்லா நுகர்பொருளும் திருக்குறளில் 'பொருள்' என வரையறைப்படுத்தப்படுகிறது" (பக். 23-28) என்று விளக்கமளிப்பது அறிவார்ந்த ஆராய்ச்சி நிலையைக் காட்டி நிற்கிறது. இத்தகைய பொருளை ஆக்குவது பொருளாக்கம் (Economic Development) என்றும், அப்பொருளாக்கம் அன்போடும் அறத்தோடும் பெறப்படல் வேண்டும் என்பதும் வள்ளுவரின் பொருளாக்கக் கொள்கை என்றும் ஆசிரியர் அழகுபட நிறுவுகிறார்.

மேலும், குறளியம் வகுக்கும் சமன்மைப் பொருளியல் விதிகள் எட்டினைப் பக்கம் 44, 45இல் ஆசிரியர் தொகுத்துக் கூறுகிறார்.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃ(கு)அதனின் கூரியது இல்

என்ற குறளுக்கு,

"சப்பான் நாட்டின் பொருள் வளம் அமெரிக்காவின் செருக்கைத் தானாகவே அடக்கிவிட்டது. சீன நாட்டின் பொருளாக்கம் முதலாளித்துவ நாடுகளின் செருக்கை அழித்தது" என்று நடைமுறை மேற்கோள் காட்டி வள்ளுவம் வகுக்கும் பொருளியற்கொள்கை முற்றிலும் சரியானதே என்பதை நிறுவுகிறார், ஆசிரியர்.

பொருளை இயற்றுவது (உண்டாக்குவது), ஈட்டுவது (தொகுப்பது), காப்பது, காத்ததை வகுத்துச் செயற்படுத்துவது ஆகியவற்றோடு மட்டும் ஓர் அரசு அமைந்துவிடுதல் கூடாது; பொருள் ஒருவரிடத்துத் தேவைக்கதிகமாய்த் தனிச் சொத்தாய் முடக்கி வைக்கப்படுவதையும் தவிர்க்க வேண்டும். இவ்வாறு முடக்கி வைக்கப்படும் செல்வத்தால் அறமும் இன்பமும் ஏற்பட வாய்ப்பில்லை. இதனால் பொருட்பயன் - நுகர்பயன் இன்றி -

சமுதாயம் அல்லற்பட நேரிடுகிறது. அன்றியும், பொருளாதார வளர்ச்சியும், இம்முடக்கி வைக்கப்பட்ட தனியுடைமைச் செல்வமும் பாதிப்படைகின்றன. இந்த இக்காலப் பொருளியல் கொள்கைகளை அன்றே வள்ளுவர் 'நன்றியில் செல்வம்' என்ற அதிகாரத்தின் வாயிலாய்க் குறிப்பிட்டுள்ளார் என்று ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். தானும் நுகராமல், மற்றவர்க்கும் கொடுக்காமல் தேவைக்கதிகமாய்ச் சேர்த்து வைக்கப்பட்டுள்ள செல்வம் குற்றவியல் நடவடிக்கைக்கு (Penal action) ஆட்பட்டது என்பதை வள்ளுவர்,

ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்(று)
ஈதல் இயல்பிலா தான்

என்ற குறள் வாயிலாய்ச் சொல்லி எச்சரித்துள்ளதை ஆசிரியர் எடுத்துக்காட்டுவது சிறப்பாய் உள்ளது (பக். 52).

பொருளியல் வளர்ச்சிக்கு உழைப்பே அடிப்படை. "பரந்த சமுதாயத்திற்குப் பயன்படும் தன்மை வேறு யாங்ஙனும் இல்லை; ஒருவனது உழைப்புத் திறனின்கண்ணே அடங்கியுள்ளது" என்ற நடப்பியல் கொள்கைக்கேற்ப வள்ளுவர் உழைப்பை - முயற்சியை - தொழிலை உயர்வுபடுத்திப் பாடியிருப்பனவற்றையெல்லாம் அழகுபடத் தொகுத்து ஆசிரியர் வள்ளுவர் பொருளியற் கொள்கையை நிலைநாட்டுகிறார்.

பொருளாதார வளர்ச்சிக்குப் பதுக்கல் ஒரு முட்டுக் கட்டையாகும். உற்பத்திப்பொருள்களைப் பதுக்கி வைத்துச் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் கொடியோர் செயல் ஒரு நாளில் ஒரு முடிவுக்கு வந்தே ஆக வேண்டும். அம்முடிவு பாவேந்தர் பாரதிதாசன் கூறுவது போல,

கொலைவாளினை எடடாமிகு
கொடியோர்செயல் அறவே!

என்ற புரட்சிப் போராட்ட முடிவாய்த்தான் இருக்க முடியும். இங்ஙனம் புரட்சி வெடித்தால் பண முதலைகளின் உடைமைகள் அனைத்தும் ஏழை எளிய மக்களின் பொதுவுடைமையாய் மாறிவிடும். இந்த நிலைமைகளையெல்லாம் வள்ளுவரும் தம் இரண்டடிக் குறளில் எவ்வாறு நுணுக்கமாய்க் கூறியுள்ளார் என்பவற்றையெல்லாம் ஆசிரியர் எடுத்துக்காட்டும் போது நமக்குப் பெருமை ஏற்படுகிறது. இரத்தலும் ஈகையும் என்றென்றும் சமுதாயத்தில் நிலவி வந்தாலும் ஈகை என்பது இடைக்கால ஏற்பாடாய்த்தான் இருக்க வேண்டும் என்றும், இரத்தலே இல்லாத

நிலைதான் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதற்கு அறிகுறி என்றும் ஆசிரியர் வள்ளுவர் வழியில் நின்று நிறுவுவது மிகவும் பொருத்தமாய் உள்ளது.

வள்ளுவர் பெரிய பொருளாதார மேதை என்பதை ஆசிரியர் இந்நூலில் அழகுற நிலைநாட்டியுள்ளார். இதே போன்று ஏனைய பல துறைகளுக்கும் வள்ளுவம் எவ்வாறு வழிகாட்டுகிறது என்று ஆசிரியர் தொடர்ந்து ஆராய்ந்து எழுதுவது தமிழுக்கும் சமுதாயத்திற்கும் ஆக்கம் தரும் என்பது என் எண்ணம். இவ்வரிய நூலைப் படைத்துள்ள ஆசிரியரை மனமாரப் பாராட்டி மகிழ்கிறேன். தமிழ்ச்சமுதாயமும் பொருளியல் வல்லுநர்களும் இந்நூலைப் பயன்படுத்திச் சிறந்திட விரும்புகிறேன்.

நூல் ஆக்கம்	திருக்குறட்செம்மல் கு. ச. ஆனந்தன்
வகைமை	ஆய்வுக் கட்டுரைகள்
வெளியீடு	சிவலிங்க நூற்பதிப்புக் கழகம், ஈரோடு. (1985)

7

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம்

இலக்கியம் என்பது சமுதாய உற்பத்திப் பொருள்களுள் ஒன்று. சமுதாயம் காலத்திற்குக் காலம் சூழ்நிலைகளால் மாறும் வளரும் தன்மையுடையது. எனவே, இலக்கியமும் காலத்திற்கேற்பச் சமுதாய மாற்றத்தை உள்ளடக்கியதாய் விளங்குகிறது. மதம், இனம், மொழி வேறுபாடுகள்கூட இலக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் கருவிகளாய் விளங்குகின்றன.

வடிவமும் யாப்பும் இலக்கியத்திற்கு முக்கியமானவை அல்ல. கருத்தே தலையாயது. ஒரு காலத்திற்கு மட்டும் பொருந்துவதாயும், எக்காலத்திற்கும் பொருந்துவதாயும் இலக்கியங்களில் கருத்து அமைவது உண்டு. தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரை காலந் தோறும் நின்று நிலவக்கூடிய பொது உண்மைகளே பெரிதும் இடம் பெற்றுள்ளன எனலாம்.

கருத்துத் தாக்கங்கள் ஒரு வரையறைக்குட்பட்ட எல்லையில் மட்டுமே நிகழ்வதில்லை. எங்கோ ஒரு பகுதியில் ஏற்பட்ட போராட்டங்களும் மாற்றங்களும் வேறு ஒரு பகுதியிலும் தாக்கத்தை உண்டுபண்ணுகின்றன. அதனால் உலகின் ஒரு மூலையில் ஏற்பட்ட மாற்றம் பல இடங்களிலும் பரவுவதற்கு இலக்கியம் கருவியாய் அமைகிறது எனலாம்.

'இம்'மென்றால் சிறைவாசம்
ஏனென்றால் வனவாசம்

என்று உருசியாவில் கொடுங்கோலாட்சி நடத்திய ஜார் மன்னனின் வீழ்ச்சி இந்திய நாட்டுப் பாரதியாரின் பாடலில் தாக்கம் ஏற்படுத்துவதைக் காண்கிறோம். இலக்கியவாதிகள் இவற்றை வெறும் செய்திகளாய் மட்டும் சொல்வதில்லை. தம் படைப்பு ஒரு பயனை விளைவிக்க வேண்டும் என்னும் நோக்கிலேயே பாடுகிறார்கள். ஜார் மன்னனின் கொடுங்கோலாட்சி வீழ்ச்சி

யுற்றதைப்போல இந்திய நாட்டை அடிமைப்படுத்தியுள்ள ஆங்கிலேய ஆட்சி தகர்க்கப்படவேண்டும் என்னும் நோக்கமே இத்தாக்கத்திற்குக் காரணம்.

தமிழ்க்கவிதைகளில் பல்வேறு தாக்கங்கள் நிகழ்ந் துள்ளதை வரலாறு உணர்த்துகிறது. சமணம் வளர்த்த தமிழ், சைவம் வளர்த்த தமிழ், கிறித்துவம் வளர்த்த தமிழ், இசுலாம் வளர்த்த தமிழ் என்றெல்லாம் பாகுபடுத்திப் பார்க்கும் பார்வை, அடிப்படையில் தமிழ் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டது எனினும், அவற்றினூடே அந்தந்த மதத்தாக்கங்கள் செல்வாக்குப் பெற்றிருப்பதையும் மறுத்திட முடியாது. இந்த வகையில் தமிழ்க் கவிதைகளில் மார்க்சியத் தாக்கம் எந்த அளவு காணப்படுகிறது என்பதை இந்நூல் ஆய்ந்து கூறுகிறது.

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'

'எல்லோர்க்கும் எல்லாம் என்றி ருப்பதான
இடம்நோக்கி நடக்கின்றது இந்த வையம்'

என்பன போன்ற பொதுவுடைமைக் கருத்துகள் தமிழ்க் கவிதைகளில் பல்லாயிரம் ஆண்டுகளாகவே இடம் பெற்றிருப் பதைப் பலரும் அறிவர். எனினும், மார்க்சியம் என்றால் என்ன என்பதற்கு விரிவான விளக்கம் அளித்து, அக்கொள்கை தமிழ்க்கவிதைகளில் எந்த அளவு செல்வாக்குப் பெற்றிருக்கிறது என்பதை ஆய்வு முறையில் வரையறுத்துத் தெளிவாக்குகிறது, இந்நூல்.

காலத்தின் கட்டாயத்தால் அக்கொள்கை தமிழ்க் கவிதைகளில் இடம் பெற்றிருக்கும் சூழ்நிலையையும், இடம் பெற்றிருக்கக்கூடியவற்றுள்ளும் முழுமையான கொள்கை விளக்கமாய் அமைபவை எவை, போலிகள் எவை, பாதியில் நின்றவை எவை, பயணத்தை முழுவதும் தொடர்பவை எவை என்பதையும் அடையாளம் காட்டி, உண்மையான மார்க்சியம் பரவ ஆசிரியர் இந்நூலில் நெறிமுறைகளை வகுத்துக் காட்டி யுள்ளார். சொற்றொடர்களுக்கு - கோட்பாடுகளுக்கு - ஆசிரியர் தரும் விளக்கங்கள் அருமையானவை.

தத்துவம் என்பது புரியாத - புரிந்துகொள்ள முடியாத - புதிரன்று; அல்லது விளங்காத, விளக்க முடியாத ஒன்றன்று; கடவுள்பற்றிய உண்மைகளைப் பேசுவதும் எழுதுவதும் தத்துவம் என்று கூறும் தகுதியுடையது என்று காலப்போக்கில் பொருள் கற்பிக்கப்பட்டுவிட்டது. தத்துவம் என்பது புனிதமான

ஒன்றாக்கப்பட்டுவிட்டது. தத்துவம் என்பதற்குக் கொள்கை, கருத்து, நடைமுறை விளக்கம், அனுபவ உண்மைகள், வழி நடத்திச் செல்வது, துணை நிற்பது என்று பொருள் கொள்ளலாம்" என்று ஆசிரியர் தரும் விளக்கம், புரியாத புதிராய் விளங்கும் தத்துவத்தை அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய நடைமுறை விதியாக்கிக் காட்டுவதாய் அமைகிறது.

மாறா நிலைவாதம், ஆன்மிகவாதம், கருத்துமுதல் வாதம், பொருள்முதல் வாதம் ஆகிய பல்வேறு கொள்கை நிலைகளை விளக்கிக் காட்டும் ஆசிரியர், பொருள்முதல் வாதத்தின் பழைய வடிவமே லோகாயதம் என்றும், லோகாயத வாதத்தை அடிப் படையாய்க் கொண்டதே மார்க்சியம் என்றும், மார்க்சியம் ஒரு தனிப்பட்ட மனிதன் மூளையிலிருந்து உதிக்கவில்லை என்றும்; பண்டைக்கால லோகாயதவாதத்தின் தொடர்ச்சி அது; பரிபூரணமான மலர்ச்சி அது என்றும் மார்க்சியத்தின் கருத்து வளர்ச்சி நிலையை ஆசிரியர் ஆய்ந்து கூறுகிறார். மார்க்சியம் என்பதன் விளக்கத்தையும், அதன் பணியையும் ஆசிரியர் பின்வருமாறு வரையறுத்துக் காட்டுவது நமக்கு அக்கொள்கை பற்றிய கருத்துத் தெளிவினைத் தருகிறது.

"உழைப்பின் சுரண்டலும், அதனால் வரும் உபரியும், அந்த உபரியினால் வரும் மூலதனக் குவிப்பும் ஆகிய பொருளாதார ஆதிக்கத்தின் இரகசியங்களை வெளிப்படுத்துகிறது, மார்க்சியம். பொருளாதார ஆதிக்கத்திலிருந்து விடுபடும் விடுதலையே அரசியல் சமுதாய விடுதலைகளுக்கு வழிவகுக்கும் என்று சொல்வதோடு அதற்கான வழிமுறைகளையும் சொல்வது மார்க்சியம்". "மார்க்சியம் மனித சமுதாயத்தின் ஆய்வுப்பணியை மேற்கொண்டிருக்கிறது; கற்பிக்கின்ற பாடங்களிலிருந்து தத்துவங்களைத் தம் கொள்கையாய்ப் பறைசாற்றிக்கொள்கின்றது; வாழ்வதற்கான அடிப்படைத் தேவைப் பொருள்களுக்கு முக்கியத்துவம் தருகின்றது; கடவுள் மறுப்புக் கொள்கையுடையது; மனிதனுக்கப்பால் சுயமாய் இருப்பது இயற்கை; இயற்கைக்கு அப்பால் சுயமாய் எதுவும் இல்லை என்று உறுதியுடன் கூறி, சான்றுக்கு விஞ்ஞானத்தைத் துணைக்கு அழைப்பது; கூலி அடிமை முறையை ஒழிக்கப் போராட வேண்டுமென்று பறை சாற்றுவது; தனியுடைமை ஒழிப்பால் உற்பத்திச் சாதனங்களைச் சமுதாயப் பொதுவாக்கப் பாடுபட வேண்டுமென்றும், வர்க்கப் போரின்றி பொதுவுடைமைச் சமுதாயத்தைத் தோற்றுவிக்க முடியாது என்றும் அறைகூவுவது; பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்குத்

தேவையான முதல் விதிமுறை 'ஒன்றுபடுவது' என்பதை வலியுறுத்துவது" என்று மார்க்சியத்திற்கு ஆசிரியர் தரும் விளக்கம் மார்க்சியத்தை உள்ளங்கை நெல்லிக்கனியாக்குவதாய் அமைகிறது.

ஆசிரியர் மார்க்சியக் கொள்கையை வெறும் தத்துவமாய் மட்டும் விளக்கிச் சொல்லவில்லை. நடைமுறையில் அக்கொள்கை எந்த அளவு புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது என்பதை ஓர் அளவுகோல் வாயிலாயும் விளக்குகிறார். பொறியியல் தொழிலாளி திரு. டி. சண்முகம் அவர்களுடன் ஆசிரியர் நடத்தியுள்ள உரையாடல் பகுதியை இதற்குச் சான்றாய்க் கூறலாம். அதில் ஒரு பகுதியை இங்கே சுட்டிக் காட்டுவது பொருந்தும்.

தான்யா : முதலாளி என்பவன் யார்?

சண். மறைமுகமாய்த் தொழிலாளியை வஞ்சித்து அந்தப் பணத்தைச் சேர்த்து வைத்திருப்பவன்.

தான்யா மறைமுகமாய் எப்படி வஞ்சிப்பது?

சண். உழைப்பின்றித் தாம் முதலாளியாவர். கூலியின்றி வெறும் உணவைத் தந்து, உழைப்பின் பலன் முழுவதையும் தாமடைவர். மொத்தமாய்ப் பார்த்தால், யாரையும் ஏமாற்றாமல், யாரும் முதலாளியாகிவிட முடியாது.

தான்யா தொழிலாளி என்பவன் யார்?

சண். முதலாளியிடம் கூலி பெற்று உழைப்பவன்.

தான்யா முதலாளி இல்லாமல் தொழிலை நடத்த முடியுமா? தொழிலாளிகளை யார் கண்காணிக்க முடியும்?

சண். முதலாளி இல்லாத, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார ஆட்சியில் சொத்துரிமை இல்லை. இதனால் யாரும் யாரையும் ஏமாற்ற முடியாது. கண்காணிப்புத் தேவையில்லை.

இவ்வுரையாடல் பகுதி, மார்க்சியம் உண்மையான நிலையில் புரிந்துகொள்ளப்பட்டிருக்கும் தன்மையை எடுத்துக்காட்டுவ. தோடு, யாரும் முதலாளி இல்லை; எனவே, யாரும் தொழிலாளி இல்லை என்ற சமத்துவப் பாதையே மார்க்சியப் பாதை என்பதையும் வலியுறுத்தி நிற்கக் காண்கிறோம். அரசியலின் பாதிப்பு இலக்கியங்களிலும் நிகழ்வதை நிலைநிறுத்திக் காட்டும்

ஆசிரியர் உருசியப் புரட்சியின் பாதிப்பு தமிழிலக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கத்தையும் கணிக்கத் தவறவில்லை.

> தனியொருவனுக்கு உணவிலை யெனில்
> சகத்தினை அழித்திடுவோம்

என்றும், "வாழ்ந்தால் முப்பது கோடியும் வாழ்வோம்" என்றும் புரட்சி முழக்கம் செய்த பாரதியை நாம் அறிவோம். பாரதியின் பாடலில் புரட்சிக் கருத்துகள் இடம் பெற்றிருப்பினும் அக்கருத்துகள் உண்மையான மார்க்சியத்தைத் தழுவியவையா என்பதையும் இந்நூலில் ஆசிரியர் ஆராய்கிறார். தேசிய ஒருமைப் பாட்டுணர்வை ஊட்டிய வகையில் பாரதி புரட்சிக்கவிஞனா கின்றான் என்றாலும், பாரதியை நாம் புரட்சிகர முற்போக்குப் பாடகன் என்றுதான் பாராட்ட முடியுமே தவிர, அவனுக்கு 'மார்க்சியக் கவிஞன்' என்ற பட்டத்தைச் சூட்ட முடியாது என்னும் முடிவினை ஆசிரியர் சான்று காட்டி நிறுவும் திறம் சிறப்பானது.

மார்க்சியத்தின் பாதிப்பால் உருவான புதுக்கவிஞர்கள் பலரையும், அவர்தம் கவிதைகளையும் ஆசிரியர் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் பகுதி இந்நூலில் சிறப்பிடம் வாய்ந்த பகுதியாகும். மார்க்சியம் பாடும் புதுக் கவிஞர்களை, அவர்தம் கவிதைத் தன்மை அடிப்படையில் நடுவுநிலையில் நின்றாய்ந்து, மார்க்சியத்தை முழுதும் உணர்ந்து பாடியவர்கள், உணர்ந்தோர் போல உணராமலேயே மேலோட்டமாய்ப் பாடியவர்கள், மனிதாபிமானக் கொள்கைகளை மட்டுமே மார்க்சியம் என்று கருதிப் பாடியவர்கள், முன்பின்னாய் முரண்பட்டுப் பாடியவர்கள் என்றெல்லாம் இனங்கண்டு கூறுவது ஆசிரியரின் நுண்ணறிவுத் திறத்திற்குச் சான்று பகருவதாய் உள்ளது.

நூலின் இறுதியில் மார்க்சியத் தத்துவத்தின் தாக்கம் நிறைந்த பாடல்களை ஆசிரியர் தொகுத்துத் தந்துள்ளார். இத்தொகுப்பு தமிழ்க்கவிதைகளில் மார்க்சியம் இடம் பெற்றிருப்பதை நாம் கண்கூடாய்க் கண்டுணரும் வகையிலும், ஆசிரியர் ஆராய்ந்து காட்டியுள்ள முடிவுகளுக்குச் சான்று பகரும் வகையிலும் அமைந்து சிறப்பிடம் பெறுகின்றது.

மார்க்சியக் கோட்பாடு தமிழிலக்கியத்தில் இடம் பெற்றிருக்கும் திறத்தை மதிப்பிடவும், ஏற்றத்தாழ்வற்ற சமதர்ம பொதுவுடைமைச் சமுதாயம் பூத்துக் குலுங்கவும் வழிகாட்டும் வகையில் அமைந்து இந்நூல் தமிழுக்கே பெருமை சேர்ப்பதாய்

அமைகிறது என்பது மிகையன்று. ஆசிரியரின் அரிய முயற்சி, கடின உழைப்பு, ஆராய்ச்சித்திறன் ஆகிய மூன்றுக்கும் ஒரு முத்தாய்ப்பாய் இந்நூல் திகழ்கிறது. புதிய சிந்தனையில், புதிய நடையில், புதிய கோட்பாட்டை விளக்குவதன் வாயிலாய்ப் புதிய சமுதாயம் படைக்கப் புறப்பட்டிருக்கும் ஆசிரியர் அவர்களை மனமார வாழ்த்தி மகிழ்கிறேன்.

நூல் ஆக்கம்	டாக்டர் கோ. தான்யா
வகைமை	ஆய்வேடு
வெளியீடு	ஐந்திணைப் பதிப்பகம், சென்னை. (1988)

8

எண்ணத்தின் வண்ணம்

கவிதைப்பின்னல்

கவிதை, அழகின் மணிமுடி. அழகான எதையும் கவிதையாகவே கண்டனர், புலவர்கள். சீதையைக் காணுகின்ற இன்பத்தை, 'செஞ்சொற் கவியின்பம்' என்பார், கம்பர். சீதையின் வடிவு பொன்னின் சோதியாயும், பூவின் நறுமணமாயும், தேனின் தீஞ்சுவையாயும், செஞ்சொல் கவியின்பமாயும் திகழ்ந்தது என்பதை

> பொன்னின் சோதி, போதின்இன்
> நாற்றம், பொலிபூ, வேபோல்,
> தென்உண் தேனின் தீஞ்சுவை,
> செஞ்சொற் கவியின்பம்...

எனப் பகர்கிறது, கம்பராமாயணப் பாடல்.

....கவிதைக் கனிபிழிந்த சாற்றினிலே, பண், கூத்து எனும் இவற்றின் சாரமெலாம் ஏற்றி, அதனோடே இன்னமுதைத் தான் கலந்து, காதல் வெயிலிலே காய வைத்து, அக்கட்டியினால் அழகிய நங்கையின் மேனி படைக்கப்பட்டுள்ளது என்பார், பாரதியார். பாவேந்தர் பாரதிதாசனோ

> மங்கை ஒருத்தி தரும்சுகமும் – எங்கள்
> மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்

எனத் தமிழின்பம் இணை கூறமுடியாததெனப் பெருமிதத்தோடு பாடுகிறார்.

இத்தகைய அழகும் இனிமையும் ததும்பும் தமிழ்க் கவிதைகளைக் கவிஞர் இளஞ்சேரல் நம் உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் பாடியுள்ளார்.

எளிய நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் இனிய முறையில் பாடுபொருளாக்கி உளங்கவர் கவிதைகளை இயற்ற முடியும் என்பதை இளஞ்சேரலின், 'எண்ணத்தின் வண்ணம்' நிறுவுகிறது. தாம் சென்று வந்த பயணங்கள், தம்மோடு பழகிய நண்பர்கள், தாம் மதிக்கும் சான்றோர்கள், தாம் கண்டு களித்த இயற்கைக்

காட்சிகள் எனத் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளையே கவிதைப் பின்னலாக்கியுள்ளார், இளஞ்சேரல். இவர் பின்னியுள்ள வலையில் சிக்காத மனமீன் எதுவும் இருக்க முடியாது.

தமிழியக்கக் கவிஞர்

'பாவேந்தரின் தமிழியக்கத்தில்' கட்டுண்ட எந்தக் கவிஞரும் தமிழை உயிரெனப் போற்றத் தவறுவதில்லை.

சலுகை போனால் போகட்டும் – என்
அலுவல் போனால் போகட்டும்
தலைமுறை ஒருகோடி கண்ட – என்
தமிழ் விடுதலை ஆகட்டும்

என மொழிப்போர் மறவருக்கு வாள் வடித்துக் கொடுத்தார், பாவேந்தர். அவ்வாளை ஏந்தியுள்ள இளஞ்சேரல்,

பதவி துறந்து பயனும் இழந்து
  பழியைச் சுமந்தாலும் – பிறர்
உதவி குறைந்தோர் ஊறு விளைந்தும்
  உயிர்தமிழ் மறப்பேனா?

என வினவுகிறார். இவர் குருதியில் உறைவதும் தமிழே! நெஞ்சில் குடிகொண்டிருப்பதும் தமிழே! என்பதை இவர் பாடல்களில் காண்கிறோம்.

மைசூரிலிருந்து ஊட்டி வரும் வழியில், தமிழக எல்லை யோரம் தமிழ்ப்பெயர்ப் பலகையைக் காண்கிறார். மைசூரி லிருந்தவரை கன்னடப் பலகைகளையே பார்த்திருந்த இவர் இத்தமிழ்ப் பலகையைக் கண்டதும்,

கணக்கிலாச் செல்வம் பெற்றோன்
  களிப்பினைப் பெற்றேன்

என நெஞ்சினிக்கக் கூறுகிறார்.

உயரிய உவமைகள்

இளஞ்சேரலின் உவமைகள் உயரிய உவமைகளாய் மின்னுகின்றன.

முற்றிப் பழுத்த கனி உதிர்வதைப் பற்றற்ற தன்மைக்குப் பொருத்தமான உவமையாக்குகிறார்.

நிலவுக்கு உவமை சொல்லாத கவிஞர் எவருமே இலர் எனலாம். ஆயிரமாயிரம் உவமைகள் இலக்கியப் பரப்பெங்கும் சிதறிக் கிடக்கின்றன. இளஞ்சேரல் நிலவை 'உரித்த பனம்பழமோ' எனச் சொல்லி ஒரு புதிய உவமையைப் பதிய வைக்கிறார். முழுநிலா

உரித்த பனம்பழம்; நினைக்க நினைக்க இனிக்கிறது. மேலும் நிலவு அவரைக் கவர்கிறது.

பூசணிக் காய்வடிவும் – ஒளி
பூசணிப் பூநிறமும்...

கொண்டுள்ளதாய்க் கண்டு களிக்கிறார். தரையில் நாம் அங்கங்கே காணும் பூசணிக்காயையும் பூசணிப் பூவையும் கவிஞர் வானிலே ஒட்ட வைத்துவிடுகிறார்.

மாடிப்படியில் செருப்பணிந்துள்ள பலர் ஒரே நேரத்தில் 'மடமட' என இறங்குவது கவிஞருக்குப்

போர்க்களம் நோக்கிப் புறப்படும் புரவிக்
கூட்டம் எழுப்பும் குளம்படி

ஒலியாய்க் கேட்கிறது.

சரிவுப்பாறைமீது காலில் செருப்பணிந்து நடக்க முடியாது; சறுக்கிவிடும். ஆதலால், செருப்பைக் கையிலே ஏந்தியவண்ணம் கவிஞர் நடக்கிறார். எப்படி?

பானை வெண்ணெய் பதுங்கித் திருடும்
பூனை போல யானும் நடந்தேன்.

இதனோடு, தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் பயன்படுத்தியுள்ள உவமையை ஒத்திட்டுப் பார்த்து, இளஞ்சேரல் எண்ணமும் கலைஞர் எண்ணமும் ஒன்றேயாயிருக்கும் வண்ணத்தினை அறியலாம். இராவணன் மகன் மேகநாதன், சுலோச்சனையைக் காண்கிறான்; அவளை நோக்கிச் செல்கிறான். எப்படி? கலைஞர் கூறுகிறார் :

மணிமாடச் சோலையோரம் மங்கை நல்லாள் உலவுங்காலை
பணியாரம் பார்த்துவிட்ட பூனைபோல் மேகநாதன்

அங்குச் சென்றான்.

கடற்கரையோரம் உப்பங்கழிகளில் உப்புக் குவியல்களை வரிசை வரிசையாய் இளஞ்சேரல் காண்கிறார். அவற்றைத்

தும்பைப் பூப்போல் தொகைதொகை யாகக்
குவிந்து கிடக்கும் உப்புக் குவியல்கள்

எனப் பாடுகிறார்.

இலக்கிய நிகழ்ச்சிகளும் இளஞ்சேரலிடம் உவமையாகிச் சுவையூட்டுகின்றன. கவிஞரை அவர் நண்பர் ஒருவர் கண்டதும் கட்டித் தழுவி வரவேற்கிறார். அதற்கோர் உவமை

குசேலரைக் கண்ட குழலோன் போல.

கண்ணன் என்றே பொதுவாய்க் கூறுவர். கவிஞரோ குழலோன் எனக் கூறி ஓசைநயம் கூட்டுகிறார்.

மருத்துவக்கல்லூரி மாணவன் பொன். நாவரசுவை அக்கல்லூரியில் உடன் படித்த கொடியவன் ஒருவன் கத்தியால் அறுத்துக் கொன்றதை

கோழிக் குரல்வளையைக் கூர்வாளால் பிளந்ததுபோல்
வாழப் பிறந்தவனை வாளால் சிதைத்துவிட்டான்

என, அறுபட்ட கோழியினும் துடிக்கிறார்.

நாள்தோறும் நாம் இயல்பாய்க் காணும் காட்சிகள் கவிஞரிடம் அரிய உவமைகளாய் மாறிப் பெருமை பெறுகின்றன.

கோட்டைக்குச் சூழ்மதிலால் வலிமை; நல்ல
கொள்கைக்குத் தூய்மையினால் பெருமை; தீட்டும்
பாட்டுக்கோ அழகுதரும் உவமை

என உவமையின் சிறப்பை இளஞ்சேரல் தம் கவிதையில் உரைத்தது மட்டுமன்றி, பாட்டுக்கு அழகு உவமையே என்பதை மெய்ப்பித்தும் காட்டியுள்ளார்.

உளங்கவர்ந்த சான்றோர்

இந்நூலில் உள்ள கவிதைகளுள் ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கு இளஞ்சேரல் மதித்துப் போற்றும் சான்றோர்களைப்பற்றிப் பாடப்பட்டதாகும். சான்றோர்கள் குறித்துப் பெருமையுடன் நினைக்கும் கவிஞரின் பெரும்பண்பு இதனால் நன்கு புலப் படுகிறது. ஒவ்வொருவரைப்பற்றிப் பாடும் போதும் அவருக்கேயுரிய பண்பைக் குறிக்கும் தொடரைக் கவிஞர் ஆண்டிருப்பது வெகு சிறப்பாய் உள்ளது. தொடரைச் சொல்லும் போதே, இது இன்னாரைத்தான் குறிக்கிறது எனச் சொல்லும் வகையில் பொருத்தமான தொடர்களைக் காணமுடிகிறது.

அண்ணல் காந்தியை,
அறவழியில் உறுதியாகக் கடமை செய்தவர் என்றும்,
ஆசிய சோதி நேருவை,
மண்ணில் தோன்றிய மங்காச் சுடரொளி என்றும்,
தந்தை பெரியாரைப்
பகுத்தறிவுப் பயிர்விளைத்த உழவன் என்றும்,
பேரறிஞர் அண்ணாவைத்
தன்மான வீணையை மீட்டியவர் என்றும்,

கலைஞர் கருணாநிதியை,

உழைப்பிலோர் வேழம்; உணர்விலோர் வேங்கை என்றும்,

இனமானப் பேராசிரியரை,

கொட்டும் குடத்தேனாய்க் கொஞ்சு தமிழ்ச்சுவை
சொட்டெனப் பேசிடுவார் என்றும்,

கர்மவீரர் காமராசரை,

தன்னுழைப் பாலவர் தன்னை உயர்த்தியே
தக்க தலைவ ரானார் என்றும்,

பாவேந்தர் பாரதிதாசனைத்

தட்டிக் கொடுப்பினும் தாங்கிப் பிடிப்பினும்
தன்னிலை மாறாமல் – நெஞ்சில்
பட்டதை யெல்லாம் பாவடி வாக்கிய
பாவலன் என்றும்,

சிலம்பொலி செல்லப்பனைக்

கொள்ளைத் தமிழ்ச்சுவையைக் கொட்டுகின்ற பேச்சாளர் என்றும்,

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரை,

ஞால மொழிக்கெலாம் மூல மொழிநம்
கோலத் தமிழெனும் கொள்கைக் கோளரி என்றும்,

தவத்திரு குன்றக்குடி அடிகளாரை,

மாற்றுக் கருத்தெனினும் – மதிக்கும்
மாண்பு நிறைந்தவராம் என்றும்,

தமிழ்த்தென்றல் திரு.வி.க.வை,

பெண்ணையே தெய்வமாய்ப் போற்றியவர் என்றும்,

இலக்கணப் பெரும்புலவர் க. பழனிபாலசுந்தரனாரைப்

புதிய இலக்கணம் செய்தவன் – யார்க்கும்
புரியும் படியதை நெய்தவன் என்றும்,

தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை அவர்களை,

துள்ளும் தமிழுணர்வு துளியேனும் குறையாத பிள்ளை என்றும்,

தீந்தமிழ் ஆசான் தி. இராசகோபாலன் அவர்களை,

பிள்ளைக் குணமும் பெருங்கொடை உள்ளமும்
கொள்ளைத் தமிழுணர்வும் கொண்டவர் என்றும்,

தமிழ்மறவர் வள்ளல் அருணாசலம் அவர்களை,

உலகத் தமிழர் நலத்தில் அக்கறை
உண்மை யாகவே உளத்தில் கொண்டவர் என்றும்,

பெரியார் பெருந்தொண்டர் தி.வே. சுந்தரமூர்த்தி அவர்களை

ஞானியாரின் நன்மதிப்பும் பாராட்டும் பெற்றவீரர் என்றும்,

வள்ளல் கிருபாநிதியை,

பாவலர் வறுமையைப் போக்கிடுவான்
பாடல் எழுத ஊக்கிடுவான் என்றும்,

புரட்சிப் புலவர் கி.த. பச்சையப்பன் அவர்களை,

பொருளின்றி இலக்கணப் பொருள்கூறும் புலவன் என்றும்,

புலவர் கோ. தேவராசன் அவர்களை,

வண்ணத் தமிழ்ப்பண்ணை யாக்கியவர் – தமிழ்
வந்து பருகிட ஊக்கியவர் என்றும்,

தமிழ்ப்புரவலர் அரு. சங்கர் அவர்களை,

இன்னார் இனியரென எண்ணாமல் நற்புலவர்
இன்னல் அகற்றும் இயல்புடையார் என்றும்,

இலக்கியப் புரவலர் உ. பலராமன் அவர்களை,

கடையேழு வள்ளல்வழி வந்த வள்ளல் என்றும்,

பேராசிரியர் மீ. பொன் இராமநாதன் அவர்களை,

உண்ணுகின்ற பொழுதெனினும் தமிழுணர்வே
ஊறுகின்ற உள்ளத்தார் என்றும்,

அடலேறு ஆர்.வி. அவர்களைத்

தொழிற்சங்கத்தின் ஆணிவேரே என்றும்,

பெரியார் பெருந்தொண்டர் செயகுருநாதனை,

பழகுதற் கினிய பண்பின் ஊற்றே என்றும்,

அன்னை இந்திராவை,

ஓவியம் போன்ற தாயே
உயிரினைத் தியாகம் செய்து
காவியம் ஆகி விட்டாய் என்றும்,

பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்களை,

குற்றம் குற்றமே என்னும் கோளரி
நக்கீரப் புலவர் ந. சஞ்சீவி என்றும்,

தொழிற்சங்கத் தலைவர் அம்பலவாணரையா அவர்களை,

தொழிலாளர் போர்முரசே! துள்ளும் வேலே என்றும்,

இயற்கைக் கவிஞர் வாணிதாசனை,

வேலியாய்த் தமிழ்ப்பயிர்க்கு விளங்கியோன் என்றும்,

தமிழ்ப் போராளி பாவலரேறு பெருஞ்சித்திரனாரைப்

பாட்டுப் படைக்கலனால் பைந்தமிழைக் காத்தவன்நீ என்றும்,

பேராசிரியப் பெருந்தகை மு.வ. அவர்களை,

மூச்செலாம் தமிழே யான மு.வ.வே என்றும்,

புலவர் காவிரிச் செல்வனை,

தனித்தமிழைக் காத்துவந்த தன்மானப் போர்முரசே

என்றும் பாடியுள்ளார். இன்னின்னார்க்கு இன்ன தொடர் வரவேண்டும் என எண்ணி அமைத்திருப்பது, அச்சான்றோர்களின் குண இயல்புகளை நன்கறிந்து, அவற்றை உரிய சொற்களில் வெளிப்படுத்தும் திறமை வாய்ந்தவர் என்பதை உறுதி செய்கிறது.

நயவுரைகள்

கவிதையின் உயிர்ப்பே, சொல்லும் நயத்திலேதான் உள்ளது. இளஞ்சேரல் அதில் வல்லவராயிருக்கிறார். நாம் காணுவதையே அவர் கண்டு சொல்லும்போது 'அடடே! இப்படியும் சொல்ல முடியுமா?' என வியப்பில் ஆழ்கிறோம். மரம்,

கையில் விசிறியின்றி – நற்
காற்றினைத் தருகிறதாம்!

அனைவரும் அறிந்த, எல்லாரிடமும் புழக்கத்தில் உள்ள சொற்களைக்கொண்டு 'நினைந்து நினைந்து மகிழத் தக்க சொல்லோவியங்களை உருவாக்குகிறார்.

வாவிகளில் நீர்நிறைந்து வழிந்து செல்ல
வெள்ளிநிற மீன்களதில் துள்ளி யாடத்
தாவியதைப் பிடித்துண்ணப் பருந்து பாயத்
தப்பிவிடும் தண்ணீரின் அடியிற் சென்றே!

மொழி ஆளுமை முற்றிலும் உள்ளவர்களால் மட்டுமே இயல்பையும் இனிமையாக்கிக் காட்ட முடியும். தம் நண்பர் உழைப்பால் உயர்ந்து நிற்பவர் என்பதைச் சொற்களில் நயம் குழைத்து,

தொடக்க முதலே தொல்லையின் தோளை
மடக்கென முறித்து மண்ணில் உயர்ந்தோன்

எனப் புகழ்கிறார். 'மடக்' என்னும் சொல் நம் நெஞ்சில் 'வெடுக்'கெனப் புகுந்துகொள்கிறது.

கடல்நீர் உப்புக் கரிக்கிறது. ஏன்? தமிழர்கள் சிந்திய கண்ணீர் கலந்ததால். ஏன் கண்ணீர் சிந்தினர்? எண்ணற்ற தம் இலக்கியச் செல்வங்களைக் கடல் கொள்ளை கொண்டதால்!

பழம்பெரும் எங்கள் பைந்தமிழ்ச் சுவடிகள்
விழுங்கிய தேனோ?

என வினவுகிறார், கவிஞர்.

புலவர் குழந்தையோ,

யாழுங் குழலும் பலபறையும்
யாழோர் ஆடும் ஆடரங்கும்
போழும் பனையே டும்தோய்ந்த
பொதிபொதி யான தமிழ்நூலும்
வாழும் பொருளும் நிலபுலமும்
மனையோ டினவும் வாய்க்கொண்ட
பாழுங் கடலே நீயொருநாள்
பாழாய்ப் போகக் காணேமோ

எனக் கடலைப் பாழாய்ப் போகும்படி வெகுண்டுரைக்கிறார்.

அடர்ந்த காடு; இடையே சிறுவழி; பகலவன் இருந்தும் நிழலின் அடர்த்தியால் இருளாய்க் கிடக்கிறது.

அடவியை இருகூ றாக்கி
அதன்வழிச் செல்கின் றோமா?
இடந்தெரி யாம லெங்கோ
இருள்வழிப் போகின் றோமா?

என இளஞ்சேரல் உள்ளம் இதனைக் கவிதையாக்கிப் பயணம் செய்கிறது.

உண்மையான தொண்டன் உழைப்பான். ஆனால், அவன் இருக்குமிடந் தெரியாது; அவனால்தான் அப்பணி சிறக்கும். ஆயினும், அவன் தன்னை வெளிப்படுத்தி வீண் விளம்பரம் தேடிக்கொள்ள மாட்டான். அத்தொண்டனை உப்பாக்கி நம் நெஞ்சில் இனிப்பூட்டுகிறார்.

உண்ணுகின்ற உணவினிலே உருத்தெரியா மலெங்கோ
உண்மைமிகு தொண்டன்போல் உள்ளுறைந்து கிடப்பேன்யான்

என உப்பு பேசுகிறது.

தொழிலாளர்கள் உழைத்துழைத்து உருக்குலைகின்றனர். ஆலைக் கரும்பென அல்லல்படுகின்றனர். அவர்கள்,

தயிர்கடை மத்தின் வாயில்
தவித்திடும் தயிர்போ லாகி

அயர்விலாதுழைப்பதைக் காட்டுகிறார். உவமை, பொருளின் அழுத்தத்தை மிகுதியாக்கிக் காட்டுகிறது.

சமுதாயச் சிந்தனையாளர்

நாட்டு நிலைமையை, இன்றைய நாட்டு நடைமுறைகளைப் பாடாத கவிஞனைச் சமூகம் ஏற்காது. இளஞ்சேரல் சமூகக் கொடுமைகளைக் கவிக்கண் கொண்டு பார்க்கிறார்; எங்கும் ப ற்றிப்

படர்ந்து கிடக்கும் தீமைகளைச் சாடி, புதியதோர் உலகங் காண வழியும் காட்டுகிறார்.

சாதி எனும் நச்சுப்பாம்பு கொட்டும் நஞ்சு கொஞ்சமன்று. அப்பாம்பை அடித்துக் கொல்வதோடு அதன் தோற்றச் சுவடே அற்றுப் போகவேண்டும் என்பதை இளஞ்சேரல் அழுத்தந் திருத்தமாய்க் கூறுகிறார்.

இல்லாச் சாதியை இருப்பதாய் எண்ணிப்
பொல்லா நெறிக்குப் புகலிடம் தருவதோ?

மரத்தை வெட்டிச் சாய்ப்பது போல
மாந்தரை வெட்டிச் சாய்த்தல் முறையோ?

என மடமையில் ஊறிக் கிடக்கும் மக்களிடம் மண்டையில் அடிப்பது போல் கேட்கிறார்.

சாதி, மதங்கள் பெயரால் அழிவுகள் செய்பவர் எவரே யாயினும், எந்நிலையினராயினும் அவர் மாந்தரே அல்லர். அவரைக் கண்ணால் காண்பதும் தீது, அவர் பெயரைக் காதால் கேட்பதும் தீது, நாவால் உரைப்பதும் தீது எனும் எண்ணம் ஒவ்வொருவர் உள்ளத்தேயும் பாயுமானால் அத்தீயர் இல்லாமல் மாய்வர்.

சாதியில் உயர்வென்றும் தாழ்வென்றும் சாற்றியே
  சஞ்சலம் விளைத்து நாளும்
சாத்திரக் கோத்திரச் சண்டைக்கு வித்திடும்
  சழக்கரைப் பாட மாட்டேன்....

வீதிக் கொருசாதி விளங்கிடப் பெயர்சொல்லி
  வைத்துமே நமைப்பி ரிப்போர்
முத்தமிழில் பாடென்று முக்கோடி தந்தாலும்
  முரணாகப் பாட மாட்டேன்.

'முக்கோடி' என்ன? 'மூவுலகு' என்று சொல்லப்படுகிறதே அதைத் தந்தாலும் இளஞ்சேரல் சாத்திரக் கோத்திரங்களைப் பாட மாட்டார் என்பது உறுதியினும் உறுதி.

மதவெறியால் மக்கள் பிளவுபடுவதும், ஒருவருக்கொருவர் அல்லல் விளைப்பதும் ஏன்? நெறியான வாழ்வு வாழ வேண்டும் என்பதுதானே மதங்களின் நோக்கமாய் இருக்க வேண்டும்? அப்படி இருக்கச் சண்டை சச்சரவுகள் ஏன்? மக்கள் அன்பின் வயப்பட்டுச் சமய, மத நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்ற உணர்வு பெறவேண்டும்.

அன்பில் முகிழ்த்ததே அனைத்து மதங்களும்
பின்பேன் அவற்றில் பேதம் வளர்ப்பது?
நெறியின் நீங்கிய வழியில் செல்வது?
சரியா என்றே சற்றே உணர்வீர்!

என மக்களைச் சிந்திக்க வைக்கிறார்.

எடுக்கும் முயற்சிகளில் இடையிடையே தோல்வி நேருமாயின் மனம் தளரக்கூடாது; அடுத்தடுத்து முயன்றால் ஆகாததும் உண்டோ? எத்தனை இடர்ப்பாடுகள் நேர்ந்தாலும் தொடர்ந்து பணியாற்றி நன்மை காண்போம் என்னும் உறுதி வேண்டும்.

தோல்வி எல்லாம் வெற்றிக் கான
படிகள் தாமடா – தம்பி
படிகள் தாமடா!

என இளைய தம்பிக்கும் நம்பிக்கையூட்டுகிறார், இளஞ்சேரல்.

தன்வரலாற்றுக் கவிதைகள்

இக்கவிதைநூல் இளஞ்சேரலின் தன்வரலாற்றின் ஒரு பகுதியாய் அமைந்துள்ளது. கவிஞரின் வரலாற்றை ஓரளவு நாம் அறிய முடிகிறது. ஆனைக்குளம் இவர் பிறந்த ஊர். தந்தை, தாய், தான், தம்பி என நால்வரும் வெறுங்கையோடு வாழ்வைத் தேடி சென்னை வந்தனர். வாழ்க்கை, தூண்டில்வாய் மீனெனத் தத்தளித்தது. குடியிருந்த வீட்டுக்காரன் கொடுமை சொல்லி முடியாது. இவர் தம்பியான குழந்தை இராமு இரவில் அழுதால் ‘தூக்கங்கெடுகிறது; கொண்டுபோய்த் தெருவில் போடு’ என்று வீட்டுக்காரன் கத்துவான். இல்லாமைக்கிடையே கல்லாமையைப் போக்கக் கல்விக் கூடத்தில் சேர்ந்தார்; கற்றார்; அஞ்சல் துறையில் வேலையும் பெற்றார்.

பணியிடைப் பயிற்சிக்காக மைசூர் செல்ல நேர்ந்தது. அங்குத் தங்கியிருந்த விடுதி, பயிற்சி நடைபெற்ற தன்மை எலாம் பாட்டாய் வெளிப்பட்டுள்ளன. அங்கிருந்து உதகை சென்று திரும்புகிறார். மைசூர் - உதகை வழியிடைக் காட்சிகள் நம் முன்னே பா ஓவியமாய்ப் படைக்கப்பட்டுள்ளன. அஞ்சல் தொழிற்சங்க மாநாடு ஒன்றிற்காய்ப் பம்பாய் செல்கிறார். அந்நகரின் சிறப்பும் நாரிமன் முனை, இந்திய நுழைவாயில், யானைக் குகை போன்ற இடங்களும் இவரின் பாட்டுப் பிடிப்பில் அடங்கும் பேறு பெறுகின்றன. மாமல்லபுரம் காணச் சென்றதை மனங்கவர் கவிதையாக்கியுள்ளார். மாமல்லபுரச் சிற்பங்களின் அழகையெலாம் கண்டுகளித்த இவர், நெஞ்சை மட்டும் மல்லையில் நிறுத்தித் தாம்

மட்டும் சென்னைக்கு வந்து சேருகிறார். சென்னைக்கு அடுத்துள்ளது அனுப்பம்பட்டெனும் இயற்கை வளம் தோய்ந்த சிற்றூர். அவ்வூர் கோடையைத் தணிக்கும் கொடைக்கானல் போல் அமைந்துள்ளது. அங்குள்ள நண்பர் குறள்தாசனை ஐந்தேகால் ரூபாய் மின்வண்டிச் செலவிலேயே குடும்பத்தோடு சென்று பார்த்துவிட்டு மின் தொடர்வண்டியில் சென்னைக்கு மீள்கிறார்.

ஒருமுறை நடந்து சென்றபோது, அருகில் இருந்த கடையில் 'தென்மொழி' வாங்கப் பணப்பையை நோக்க, அது பறிபோயிருந்ததைக் கண்டார். பாவி எவனோ பணப்பையைத் திருடிவிட்டான். பணப்பையை இழந்ததும் ஒரு வகையில் நல்லதே! ஆம்!

தட்டினான் கதவை என்பதால் தன்கை
வெட்டிய மன்னனைப் பெற்றஇந் நாட்டில்
ஒட்டி நின்றே ஒருவர் பொருளை
வெட்டெனப் பறிக்கும் வேதனை என்னே!

எனும் அருமையான பாடல் அடிகள் நமக்குக் கிடைத்துள்ளன அல்லவா?

குடியிருந்த வீடு ஒருநாள் பற்றி எரிந்தது. பன்னெடுங் காலமாய் இவர் பாடுபட்டுச் சேர்த்திருந்த நூல்களுடன் வீட்டுப் பொருள்கள் அனைத்துமே எரிந்து கரியாயின. நெருப்புக்கு யார், எவர் என்ற வேறுபாடு எங்கே தெரியப்போகிறது? பொருள் இழப்பு இவர் மனத்தைச் சுட்டது; என்றாலும், அதையும் மிஞ்சுகிற சூடு ஒன்றை உணர்ந்தார். எல்லாமே எரிந்து போனதால் உணவும் உடையும் பிறர் கையிலிருந்து பெறவேண்டியதாயிற்று. அருகில் இருக்கும் குடும்பத்தார் உதவுவது இயற்கைதானே. அந்த வேளையில் பெற்றுக்கொள்வதும் சரியே என்றாலும், கவிஞர்,

கொடுக்கவே பிறந்தேன் என்றக்
  கொள்கையில் வாழ்ந்தேன்; பிறர்கை
கொடுக்கவே வாங்கு கின்ற
  கொடுமைக் குள்ளாக வைத்த

தீயினைப் பேயெனப் பழித்து அதன்மீது சுடுசொல் வீசுகிறார். அவரது இக்கவிதை தீயின் மேல் பட்ட தீ!

முற்றும் துறந்த பட்டினத்தடிகளார்கூட தாயின் இறப்புக்கு நெஞ்சு பதறினார்.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை யாதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

தாயின் இழப்பைத் தாங்கும் வல்லமை எவருக்குமே இருக்க முடியாது. தராசின் ஒரு தட்டில் தாயையும் மற்றொரு தட்டில் உலகம் முழுவதையும் வைத்தால், தாய் இருக்கும் தட்டு கீழிறங்கி நிற்கும் என்றார், அறிஞர் ஒருவர். உலகனைத்தும் சேர்ந்தாலும் தாய்க்கு ஈடாக முடியாது என்பது இதன் கருத்து. தாயின் மறைவு இளஞ்சேரலை வாட்டுகிறது.

அல்லும் பகலும் அயராது பாடுபட்டுத்
தொல்லையிலே எனைவளர்த்துத் தூக்கி நிறுத்திவிட்டு
எல்லையிலாத் துன்பத்தில் எனைவிடுத்தே என்தாயே
சொல்லேது மின்றிச் சுடர்விழிகள் மூடியதேன்?

என்று நெஞ்சு குமைகிறார்.

தாயின் இறப்புப் போலவே தம்பியின் இறப்பும் மாளாத் துயர் தருவது. இராவணன் மகன் மேகநாதன் போர்க்களத்தில் மாண்டு கிடக்கிறான். அப்போது இராவணன்,

எனக்குநீ செய்யத்தக்க கடனெலாம் ஏங்கிஏங்கி
உனக்குயான் செய்ய லானேன்

என அழுது புலம்புவதாய்க் கம்பர் எழுதுவார். காந்தியடிகள் தம் மகன் போன்றிருந்த செயலாளர் தேசாய் மாண்டுபோக, அவருக்கு இறுதிச் சடங்குகள் செய்தபோது, "Desai! I thought that you will do this for me; but now I am doing this for you" என்றுதான் கூறி வருந்தி இருக்கிறார். தம் தம்பியை இழந்த இளஞ்சேரலும் அதே நிலையில்,

உருகுதடா என்னெஞ்சம்! பெருகுதடா கண்ணீரும்!
என்னுடலை நீயடக்கம் செய்திருக்க வேண்டுமடா!
உன்னுடலை நானடக்கம் செய்வதற்கோ
நான்பிழைத்தேன்

எனப் படமுடியாத் துயரம் பட்டு நைகிறார்.

முன்னோர் மொழிபொருள்

கவிஞர் இளஞ்சேரல் தமிழ் இலக்கியங்களை முறையாய், முழுமையாய்க் கற்றவர். கற்ற அனைத்தும் மனத்திலே பதிந்திருப்பதால், முந்தையோர் கருத்துகள் தக்க இடங்களில் பொருந்திய முறையில் அமைந்து விளக்கமளிக்கின்றன. எங்களிடம் ஏதுமில்லை; வறியவரா யிருக்கிறோம் என்று சொல் பவரைக் கண்டால், 'பயிர் செய்து என்னிடம் பயன் பெறலாம். என்னை அகழ்ந்தாலோ அரிய பல மணிகள் பெறலாம். அவற்றைச் செய்யாமல் சோம்பியிருக்கிறார்களே!' என நிலம் தன்னுள் சிரிக்குமாம்.

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்

என்பது திருக்குறள். இதே கருத்து மண்மகளைப் பாடும் இளஞ்சேரலின் பாட்டில் இடம் பெறுகிறது.

மாந்தருள் ஏழை யென்று
 மதியிலார் சொல்வா ரானால்
கூர்ந்துமே நோக்கி; தாயே,
 குலுங்கவே சிரிப்பா யாமே!

என்கிறார். ‘சிரிப்பாயாமே’ என்று சொல்வதன் வாயிலாய் இது முந்தையோர் கருத்து என்பதையும் புலப்படுத்திவிடுகிறார்.

ஒரு பொருளாய் மதிக்கத் தகாதவரையும் மதிப்புடைய வராய்ப் பொருள் செய்துவிடும். எனவே, பொருளைப் போலச் சிறப்புடைய பொருள் வேறொன்றுமில்லை என்பார், திருவள்ளுவர்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்

என்பது பொருள் பொதிந்த குறள். இக்குறளின் சிறப்பில் எவருமே சிந்தையைப் பறிகொடுப்பர். பணம் படுத்தும் பாடு என்னும் தலைப்பில் பாடும்போது, இக்கருத்தை வெகு அருமையாய்க் கையாளுகிறார், இளஞ்சேரல்.

பொருளல்லார் தம்மை நீயும்
 பொருளாகச் செய்கின் றாயே
அருளில்லா மாந்தர் கையில்
 அகப்பட்டுத் தவிக்கின் றாயே.

எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் திருக்குறள் கருத்தைத் தக்கவாறு எடுத்துரைக்கிறார். கல்லாதவர், உயிரோடு இருக்கின்றனர் எனச் சொல்வதற்கு மட்டுமே பயன்படுவரேயன்றி, வேறு எதற்கும் பயன்படார்; ஒன்றும் விளையாத களர் நிலத்துக்கு ஒப்பாவார்.

உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர்

என்பது திருக்குறள். இளஞ்சேரல் கல்லாதவரை,

உளனென்று சொல்வதன்றி ஓர்பயனும் விளையாத
களர்நிலமே கல்வியிலான் கணப்பொழுதும் மறவாதீர்!
படிப்பில்லான் நரம்பின் துடிப்பில்லா நடைப்பிணமே
நொடிப்பொழுதும் மறவாதீர் நுவல்கின்றார் வள்ளுவனார்

எனப் பாடுகின்றார். திருவள்ளுவர் கருத்தைத் தாம் எடுத்தாண் டிருப்பதையும் குறிப்பிடுகின்றார்.

கல்வியில் லாத பெண்கள் களர்நிலம்! அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை

என்னும் பாவேந்தர் பாடலையும் இங்கு ஒப்பு நோக்கலாம்.

மாந்தர் தவறு செய்வது இயற்கை. இப்படிச் செய்து விட்டோமே என்று எண்ணத்தக்க தவறு ஒன்றனைச் செய்து விட்டால் மீண்டும் அதைச் செய்யாதிருக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் அறிவுரை.

எற்றென்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று.

இக்குறள் கருத்தை,

தப்பொன்று செய்து விட்டால்
தளர்ந்துமே விடக்கூ டாது;
எப்படித் திருத்தி; வாழ்வில்
ஏற்றமே பெறுவ தென்றே
முப்போதும் எண்ண வேண்டும்;
முயன்றுமே வெல்ல வேண்டும்

என இளஞ்சேரல், வாழ்க்கை முன்னேற்றத்திற்கு ஊக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறார்.

துன்பம் வருவதும் ஒருவகையில் நன்மையே! உண்மையான நண்பர் யார், உதட்டோடு உறவாடியவர் யார் என்பதை அறிந்து கொள்ள அத்துன்பம் வகைசெய்யும். இதனை,

துன்பத்தில் நண்பரைத் தேறெனும் தொன்மொழி
துதித்துமே போற்ற லாகும்

என விரித்துரைக்கின்றார், இளஞ்சேரல். அவர் குறிப்பிடும் தொன்மொழியாய்த் திருக்குறள் விளங்குகிறது. இக்கருத்தமைந்த திருக்குறள் இதோ

கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

காப்பியங்களில் நாட்டுவளம், நகர வளம் விரிவாய்க் கூறப்படும். பெரியபுராணத்தில் மருதநிலச் செழிப்பை ஒரு காட்சி வாயிலாய் வெளிப்படுத்துகிறார். வயல்களில் வெட்டப்பட்ட கரும்புகள் பொழிகின்ற சாறு, அக்கரும்புகளிடையே கட்டப் பட்டிருந்த தேன்கூடுகள் உடைந்ததால் வீழ்ந்து ஓடுகின்ற தேன் பெருக்கினோடு கலந்து ஓடி, புது வெள்ளம் போல் மடைகளை உடைக்கிறது. உழவர்கள் களத்துமேட்டில் வெல்லம் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர். உடைக்கப்பட்ட மடைகளைப் பார்க்கும் அவர்கள் 'அங்கு வந்து மண்ணைக் கூட்டி அடைக்காமல்

களத்துமேட்டிலிருந்தவாறே வெல்லக்கட்டிகளை எறிந்து அவ்வுடைப்புகளை அடைத்துவிடுகின்றனர். இதைச் சேக்கிழார்

கடைஞர்மிடை வயற்குறைத்த
    கரும்புகுறை பொழிகொழுஞ்சாறு
இடைதொடுத்த தேன்கிழிய
    இழிந்தொழுகு நீத்தமுடன்
புடைபரந்து ஞிமிறொலிப்பப்
    புதுப்புனல்போல் மடையுடைப்ப
உடைமடையைக் கரும்படுகட்
    டியினடைப்ப ஊர்கடொறும்

எனப் பாடுகிறார். இப்பாடலின் வளம் இளஞ்சேரலின் மனத்தில் வளமாய்ப் பதிந்துவிடுகிறது. மனத்தில் பதிந்த இக்கருத்து நாற்றினை இளஞ்சேரல் பிடுங்கி எடுத்துத் தம் பாட்டுவயலில் நட்டு வைக்கிறார்.

செழித்தடர்ந்த செங்கரும்பை இடையில் வெட்டச்
    சுவைகொழிக்கும் கருப்பஞ்சா றொழுகி வீழ
அடியில்உள்ள தேன்கூடும் உடைந்து சேர்ந்தே
    ஆர்த்தெழுந்தே ஊர்முழுதும் வழிந்தே ஓட
உடைமடையைத் தடைசெய்வார் போல மக்கள்
    ஊர்முழுதும் கொட்டிடுவார் வெல்லக் கட்டி!

'இன்னல் போக்கும் இயற்கை' என்னும் தலைப்புள்ள பாடலில் இவ்வடிகள் இடம் பெற்றுள்ளன. இதே பாடலில் கவிஞர், முத்தொள்ளாயிரம், மணிமேகலை ஆகியவற்றின் கருத்துகளையும் இணைத்து நயங்கூட்டி இருப்பதைப் படிப்போர் உணரலாம்.

கவிஞர் தமிழ்ஒளியின் பாடல்களில் 'பட்டமரம்' என்னும் பாடல், உள்ளம் கொள்ளை கொள்ளும் ஒன்றாகும்.

மொட்டைக் கிளையொடு நின்று தினம்பெரு
    மூச்சு விடும்மரமே
வெட்டப் படுமொரு நாள்வரு மென்று
    விசனம் அடைந்தனையோ

எனத் தொடங்கும் பாடலைப் படிப்போர் எவரேயாயினும் உள்ளம் பறி கொடுக்காமல் இருக்க முடியாது. கவிஞர் இளஞ்சேரல் உள்ளத்தை இப்பாடல் பெரிதும் தன்வயப்படுத்தியிருக்கிறது. 'பட்டமரம்' எனும் இந்தத் தலைப்பொடு இப்பாடற்போக்கிலேயே இளஞ்சேரல் பாடியுள்ள பாடலை 46 ஆம் பக்கத்தில் காணலாம். ஒன்றையொன்று விஞ்சுகின்ற முறையில் பாடல்கள் இரண்டும் இருப்பதைக் காண்கிறோம். பாடல்கள் இரண்டிலுமே

இழைந்தோடும் சோகத்தை உள்ளவாறே எடுத்துரைக்கச் சொற்கள் இல்லை என்பது மிகையன்று; முற்றிலும் உண்மை.

நளவெண்பாவில் ஒரு காட்சி. தன் மனைவியைக் காட்டில் பாழ்மண்டபத்தில் விட்டுவிட்டு வந்த நளன் கடற்கரையை அடைகிறான். பொங்கிவரும் கடல் அலைகளைப் பார்க்கிறான். தன் உள்ளம் கொதிப்பதைப் போல் கடலின் உள்ளம் கொதிப்பதாகவும் கருதுகிறான். "கடலே! நான் என் மனைவியை விட்டுப் பிரிந்ததனால் மனம் தடுமாறி அலைமோதிக் குமுறுகிறேன். என்னைப் போலவே நீயும் போகிறாய், வருகிறாய், புரண்டு விழுந்து, ஒலி எழுப்பி நடுங்குகிறாயே! நீயும் என்னைப் போல இரவில் மனைவியைத் தவிக்கவிட்டு வந்தனையோ? அதனால்தான் என் நிலையில் இருக்கின்றனையோ?" என்று கேட்கிறான்.

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய் – தீவாய்
அரவகற்றும் என்போல் ஆர்கடலே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று

என்பது நளவெண்பாப் பாடல். இப்பாடற்போக்கில் 'வா அலையே' எனும் தலைப்பில் இளஞ்சேரல் பாடுகிறார்.

ஓல மிட்(டு) 'ஓ'வென்று – நீ
    ஓடி வருவதும் ஏனலையே,
என்போல் உனக்குந் துயருண்டோ?
    எடுத்துக் கூறும் திறனுண்டோ?

பெரும் பெரும் புலவர்களின் கருத்தில் தோய்ந்த இக்கவிஞர் கவிப்பேரரசர் கம்பர் கவியில் மனம் பதிக்காதிருக்க முடியுமா? இந்திரா காந்தி அம்மையார் இறப்பின்போது, இளஞ்சேரல்

கானெலாம் அழுத தம்மா!
    கடல்மலை அழுத தம்மா!
வானெலாம் அழுத தம்மா!
    வையகம் அழுத தம்மா!
ஊனெலாம் விழிகள் பெற்றே
    ஓயாமல் அழுத தம்மா!

எனப் பாடுகிறார். இதைப் படிக்கும்போது இராமன் அயோத்தியை விட்டுப் பிரிந்தபோது நிகழ்ந்ததைப்பற்றிப் பாடும் கம்பரின் பாடல்களுள் ஒன்று நினைவுக்கு வராமல் இருக்க முடியுமா?

ஆவும் அழுத அதன்கன்று அழுத; அன்று அலர்ந்த
பூவும் அழுத; புனல்புள் அழுத; கள்ஒழுகும்
காவும் அழுத; களிறு அழுத;கால் வயப்போர்
மாவும் அழுத – அம்மன் னவனை மானவே.

எண்ணமும் வண்ணமும்

தமிழ்நாட்டில் எங்கும் 'எண்ணுக தமிழில், எழுதுக தமிழில்' என்னும் நிலை உருவாகப் பாடுபடுவதைத் தம் உயர்கொள்கையாய் - உயிர்க்கொள்கையாய் - கொண்டவர், கவிஞர் இளஞ்சேரல். இவர் தூய்தமிழ் யாண்டும் துலங்க வேண்டுமெனும் கோட்பாட்டினர்;

தமிழகத்தின் தமிழ்த்தெருவில் தமிழ்தான் இல்லை

எனப் பாவேந்தர் வருந்திக் கூறிய நிலை அகலவேண்டுமென அயராது பாடுபட்டு வருபவர்,

தூயதமிழ் பேசு – பிறமொழி
சேர்த்திடவே கூசு!
தூயதமிழ் சூட்டு – பெயர்
தூயதமிழ் சூட்டு

என ஓங்கிக் குரல் கொடுத்து வருபவர். அதற்காகவே கவிதைகளைப் பாடுபவர் - பயன்படுத்துபவர்.

சீரும் தளையும் செப்பமாய் அமைந்ததனாலேயே கவிதை, சிறப்புடையதாகிவிடாது; சீரான கருத்தைக் கொண்டிருக்க வேண்டும். எதுகை, மோனை அமைந்தால் மட்டும் போதாது; நாட்டின் ஏற்றமிகு வாழ்க்கைக்குக் கவிதை வழி காட்ட வேண்டும்.

சீரும் தளையும் சரியாய் அடுக்கினால்
நேரிய பாட்டாய் நிலைக்குமோ? – பாரில்
கருத்துச் செறிவும் கவியின் சுவையும்
பொருந்தப் புனைவதே பா!

ஓசை நயம் மட்டும் மிகுந்தால் போதாது; கவிதை, உணர்ச்சிப் பிழம்பாய்த் திகழவேண்டும். நம்பிக்கை ஊட்டாத பாட்டு நாட்டுக்குத் தேவையில்லை; உணர்வூட்டாத பாக்கள் பாக்களாகுமா? அவை வெற்றுச் சொற்குப்பையே ஆம்! இவை 'எது கவிதை?' எனும் வினாவிற்கு இளஞ்சேரல் அளிக்கும் மறுமொழிகள்.

பொழுதுபோக்குக்காய்க் கவிதை எழுதுபவர் அல்லர், இளஞ்சேரல். ஊற்றுக்கவி பாடி ஊரைத் திருத்திட நினைப்பவர்; மெச்சும் கவிகளெல்லாம் மக்கள் மேன்மைக்கேயாக வேண்டும் எனும் கருத்தினர்.

உச்சி மலையமர்ந்து – நெஞ்சில்
ஊறும் சுவைத்தமிழில்
மெச்சும் கவியாக்கி – மக்கள்
மேன்மைக்குப் பாடிடுவேன்

என்கிறார். வான் நிலவா? ஆற்றுப் புனலா? வெட்ட வெளியா? உச்சி மலையா? எங்கே சென்றாலும் பாடிக்கொண்டேயிருக்க வேண்டும். அப்பாடல்கள் மக்களை மேன்மைக்கு அழைத்துச் சென்றுகொண்டேயிருக்க வேண்டும் என்பதே இளஞ்சேரல் எண்ணம்.

கவிதைகள்பற்றியும், கவிதைப் பயன்பற்றியும் இளஞ்சேரல் தம் பாடல்களில் என்ன கூறியிருக்கிறாரோ, அவ்வாறே அவர் பாடல்கள் முழுவதும் அமைந்துள்ளன. அவருக்கு ஓர் ஆசையும் உண்டு.

வாழ்வுக்
கோடையாம் பிணியும் மூப்பும்
கொட்டியே மூடும் முன்னே
ஏடகந் தோறும் என்றன்
எழுத்துகள் மின்ன வேண்டும்

என்பதே அவ்வாசை. ஏடகந்தோறும் மட்டுமன்றி ஒவ்வொருவர் உள்ளந்தோறும் அவர் கருத்துகள் மின்னி, முழங்கி, மழையாய்ப் பொழிந்து, நலம் பயக்கும் என்பது உறுதி.

இவ்வுறுதியோடு கவிஞர் இளஞ்சேரலின் எண்ணத்தின் எழில்மிகு வண்ணத்தைப் பாராட்டி, இவர் தொண்டு மேன் மேலும் வளர வேண்டுமென உளமார வாழ்த்தி மகிழ்கிறேன்.

நூல் ஆக்கம்	புலவர் இளஞ்சேரல்
வகைமை	கவிதைகள்
வெளியீடு	அன்புமணி பதிப்பகம், சென்னை. (1999)

9

கவிக்கொண்டல் கவிதைகள்

"அறிந்ததனை அறிந்தோர்க்கு அறிவிக்கும் போதினிலே, அறிந்ததுதான் என்றாலும், எத்துணை அழகம்மா! என்று அறிந்தோரையே மகிழ வைக்கும் அருங்கலையே கவிதையாகும்" என்பார், பேரறிஞர் அண்ணா!

துன்பச் சுமைகுறையும்
தூயதமிழ்ப் பாட்டெழுதில்
இன்பம் பெருகும்
எண்ணம் ஒருங்கிணையும்

எனக் கவிதையின் பயனைக் குறிப்பிடுவார், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்!

"கருத்தினை வெளிப்படுத்தும் உள்ளத்தின் திறத்தால் எய்தும் அழகு வடிவே கவிதை. உள்ளத்துணர்வைத் தாமுணர்ந்தவாறு பிறரை உணரச்செய்யும் ஆற்றலே கவிதை ஆற்றல்" என்பார் இனமானப் பேராசிரியர் டாக்டர் அன்பழகனார் அவர்கள்.

இவர்களைத் தம் தலைவர்களாயும் வழிகாட்டிகளாயும் கொண்டு, பகுத்தறிவுக் கொள்கைகளில் வேரூன்றி, இனஉணர்வு பொங்கிடக் கவிதைகளை எழுதுபவர், கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன் அவர்கள். அவர் பல்வேறு சமயங்களில் எழுதிய பன்னூற்றுக் கணக்கான கவிதைகளுள் சில தெரிவு செய்யப் பெற்றுக் 'கவிக்கொண்டல் கவிதைகள்' என்னும் பெயரில் இச்சிறு நூல் வெளிவந்துள்ளது.

சிறந்த கவிஞர்

நூலிலுள்ள பாடல்கள் தமிழின் தொன்மை - இளமை - இனிமை, சமுதாய நிலைமை, சான்றோர் பெருமை ஆகியவற்றைக் கருத்துச் செறிவுடனும், பொருள் ஆழத்துடனும், சொல் வளத்துடனும் நமக்கு எடுத்துச் சொல்லுகின்றன.

தகுந்த சொற்களைத் தகுந்த இடத்தில் பெய்து எழுதுவதே சிறந்த நடை என்பார், சுவிப்ட் என்னும் மேனாட்டு அறிஞர் (Style may be defined proper words in proper places Swift). இந்த இலக்கணத்திற்கு முற்றிலும் பொருந்திய நடைச்சிறப்புடன் இக்கவிதை நூல் அமைந்திருக்கிறது.

படிப்பவர்க்கு நிறைந்த அறிவைக் குறைந்த நேரத்தில் தருபவன் எவனோ அவனே சிறந்த எழுத்தாளன் என்பார், சிட்னி சிமித் எனும் அறிஞர் (The writer does the most who gives his reader most knowledge and takes from him the least time: Sidney smith). குழப்பமின்றியும் தெளிவாயும் எழுதியுள்ளவற்றைப் புரிந்துகொள்ள மிகுதியான நேரம் வேண்டியதில்லை. அப்படிப்பட்ட எழுத்துகளே சிறந்த எழுத்துகள் என்பதையே இக்கூற்று விளக்குகிறது.

கவிஞர் செங்குட்டுவன் நிறைந்த கருத்துகளை எளிய, இனிய நடையில், படித்த அளவிலேயே மனத்தில் பதியும்வண்ணம் இந்நூலுள் பொதிந்து வைத்திருப்பதன் வாயிலாய் உயர்ந்த எழுத்தாளர் என்பதை உறுதிப்படுத்துகிறார். ஒவ்வொரு பாட்டும் தாம் சொல்லும் பொருளைத் தெளிவுறுத்துவதோடு நம் சிந்தனையைத் தூண்டுவனவாயும் அமைந்திருக்கின்றன.

கவிக்கொண்டல்

கொண்டல் என்னும் சொல்லுக்குக் கீழ்க்காற்று, மழை, மேகம் என்னும் பொருள்கள் உண்டு. 'கொண்டல் அசைவளி', 'கொண்டல் மாமழை', 'கொண்டல் நிரை' எனும் சங்கத் தொடர்களால் இதனை அறியலாம். தமிழ்நாட்டில் நான்கு திசைகளிலிருந்து வீசும் ஒவ்வொரு காற்றுக்கும் தனித்தனியே பெயர் உண்டு. தெற்கே இருந்து வீசுவது தென்றற்காற்று; வடக்கேயிருந்து வீசுவது வாடைக் காற்று; மேற்கேயிருந்து வீசுவது கோடைக் காற்று; கிழக்கேயிருந்து வீசுவது கொண்டல் காற்று. தென்றல், மென்காற்று; வாடை, நலி காற்று; கோடை, உலர் காற்று; கொண்டல், மழைக்காற்று. திரு. செங்குட்டுவனின் கவிதை ஒவ்வொன்றும் கருத்துச்சூல் கொண்ட கொண்டலாயும் (மேகமாயும்), உணர்ச்சி வேகத்துடன் வீசுகின்ற கொண்டலாயும் (காற்றாயும்), பகுத்தறிவைப் பொழிகின்ற கொண்டலாயும் (மழையாயும்) விளங்குகின்றன. எனவே, அவர் 'கவிக்கொண்டல்' என்ற சிறப்புப் பெயருக்கு முற்றிலும் பொருத்தமானவராகிறார். அவருடைய 'கவிக்கொண்டல்' ஏட்டில் முதல் இதழில்,

காா்கொண்டல் வானின்று பெய்தல் போலக்
'கவிக்கொண்டல்' சூல்கொண்டு திங்கள் தோறும்
பேர்கொண்ட பாவலர்தம் கருத்து மொண்டு
பெய்திடுமே பாமழையாய்!... (பக். 59)

என இக்கருத்தை அவர் வெளிப்படுத்தியிருப்பதையும் காணலாம். இயற்கையாகிய கொண்டல் சில வேளைகளில் பொழியாமற் போவதுண்டு - பொய்ப்பதுண்டு. பருவமழை பொய்த்துவிட்டது என்கின்றோமன்றோ? ஆனால், நம் செங்குட்டுவனாரோ எப்போதும் பொய்க்காத கவிக்கொண்டலாய் விளங்குகிறார். திசைக்காற்றுகளுள் கொண்டல் ஒன்றுக்கு மட்டுமே புயலாய் மாறுகின்ற தன்மை உண்டு. செங்குட்டுவனாம் கவிக்கொண்டலும் தீமைகளைச் சாடும்போது பொங்கியெழுகின்ற புயலாகிவிடுகிறார்.

தமிழ் உள்ளம்

தமிழின்பாலும் தமிழ் மக்களின்பாலும் செங்குட்டுவனார் கொண்டுள்ள பற்று அளவிடற்கரியது.

நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான்கண்டும்
ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட நான்தவறேன்;
தமிழரின் மேன்மையை இகழ்ந்தவ னைஎன்
தாய்தடுத் தாலும்விடேன்

எனத் தமிழருக்கு உழைக்கவும், தமிழ்ப்பகையை அழிக்கவும் உறுதி கொள்கிறார், பாவேந்தர் பாரதிதாசன். அவர்வழி நிற்கும் கவிக்கொண்டலோ,

தமிழை மதிப்பவன் தாளை வணங்குவேன்;
தமிழைப் பழிப்பவன் தலையை மிதிப்பேன்;
தமிழின் நலமே என்றன் நலமாம்;
தமிழினப் பகைவனே என்றன் பகைவன் (பக். 19)

என அழுத்தந்திருத்தமாய்க் கூறுகிறார்.

மொழிகளுக் கெல்லாம் மூத்தது தமிழே
முதன்முதல் மனிதன் மொழிந்ததும் தமிழே (பக். 27)

எனத் தமிழின் தொன்மையையும்,

உமிழ்நீரும் தேனாகும் உரைத்தாலே உன்பேரை (பக். 17)

எனத் தமிழின் இனிமையையும்,

எம்மொழி கற்பினும் எம்மொழி யாகுமா?
இம்மொழி இருக்க எம்மொழி தேவை? (பக். 21)

எனத் தமிழின் பெருமையையும் கவிஞர் நம் உள்ளம் கொள்ளை கொள்ளும்வண்ணம் பாடியிருக்கிறார்.

வழிகாட்டிகள்

திருவள்ளுவரும் இளங்கோவும் வள்ளலாரும் கவிக் கொண்டலின் உளங்கவர்ந்த புலவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள்வழி நிற்பதே உலகம் உய்ய வழி என அவர் திண்ணமாய் நம்புகிறார்.

வள்ளுவனை, இளங்கோவை, வள்ள லாரை
வழிவழியாய் வந்ததமிழ்ச் சான்றோர் தம்மைக்
கொள்ளும்வழி காட்டிகளாய்க் கொண்டே என்றன்
குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வேன் காணீர்! (பக். 20)

வள்ளுவத்தை உள்ளுவதும் வடலூர் வள்ளல்
வழிதன்னைக் கொள்ளுவதும் பெருமை சேர்க்கும்;
தெள்ளுதமிழ்க் காவியமாம் சிலம்பின் காதை
தென்னவர்க்கே சீர்த்திதரும் வரலா றாகும் (பக். 58)

எனக் கவிஞர் மொழிந்திடக் காணலாம்.

ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை. (குறள் 478)

பொருள் வரும் வழி (வருவாய்) சிறிதாய் இருந்தாலும் போகும் வழி (செலவு) விரிவுபடாவிட்டால் அதனால் தீங்கு இல்லை என்னும் திருக்குறள் கருத்தைச் செங்குட்டுவனார்,

வரவுக்கு ஏற்பச் செலவிட்டால் – நம்
வாழ்க்கையும் சுமையாய்த் தெரியாது (பக். 125)

என மிக எளிமையாய், எல்லோர் மனத்திலும் பதியும்வண்ணம் அழுத்தமாய்க் கூறியிருக்கக் காணலாம். இதுபோல, அவர் வழிகாட்டிகளாய்க் கூறியுள்ள புலவர்களின் கருத்துகளை நூல் முழுதும் பரக்கக் காணலாம்.

தலைவர்களும் தமிழ்ச்சான்றோர்களும்

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை மனோன்மணீயத்தில் பாடியுள்ள 'நீராருங் கடலுடுத்த' என்ற பாடல் தமிழ்நாட்டு அரசின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாய் உள்ளது. ஆதலின், பேராசிரியர் சுந்தரம் பிள்ளையைக் கவிஞர் செங்குட்டுவன்,

தமிழ்த்தாய் வாழ்த்தினைத் தந்த புலவன் (பக். 70)

எனப் பாராட்டுகிறார். இதேபோல,

வேரோடு வைதீகம் மாயச் செய்த
வெண்தாடி வேந்தர்... (பக். 71)

எனப் பெரியாரையும்,

பெரியாரால் தமிழினந்தான் விழித்த தென்றால்
பேரறிஞர் அண்ணாவால் எழுந்த தென்போம் (பக். 72)

எனப் பேரறிர் அண்ணாவையும்,

ஆட்சிக் கட்டில் அமர்ந்து தமிழர்
மாட்சிகள் எல்லாம் மீண்டிடச் செய்தனை (பக். 56)

என முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரையும்,

அண்ணா மலைநகரில் கல்வி கற்றும்
அய்யாவின் பாசறையில் பயிற்சி பெற்றும்
அண்ணாவின் அன்புக்கே அடிமை யாகி
அறிவியக்கத் தூதுவராய்.... (பக். 89)

ஆனவர் என இனமானப் பேராசிரியர் அன்பழகனாரையும்,

நாட்டுக்கே அரசியலை வகுத்துத் தந்தோன் (பக். 79)

என டாக்டர் அம்பேத்காரையும்,

சிரித்திட வைத்தே நம்மைச்
சிந்தனை செய்ய வைத்தான் (பக். 85)

எனக் கலைவாணரையும்,

அன்னைத் தமிழுக்குத் தொண்டு செய்தே – அவன்
ஆயிரங் காலத்துப் பயிரானான் (பச். 85)

எனப் பாரதியாரையும்,

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி காண
விசையேற்றும் பாடல்களை வடித்துத் தந்தோன் (பக். 76)

எனப் பாவேந்தர் பாரதிதாசனையும்,

மறைமலை யெனும்தமிழ் உறைமலையே (பக். 81)

என மறைமலையடிகளாரையும்,

ஏட்டில் கனலை மூட்டியவர் (பக். 82)

எனத் திரு.வி.க.வையும்,

நாமணக்கும் நற்றமிழ்க் களஞ்சியம் (பக். 83)

என நாவலர் சோமசுந்தர பாரதியாரையும்,

இலக்கணம் கல்லார் இவர்முன் நில்லார் (பக். 86)

என மகாவித்துவான் மே.வீ. வேணுகோபாலரையும்,

எழுத்துத் துறையில் பழுத்த பழமாம்... ஜீவா (பக். 91)

என நாரண. துரைக்கண்ணனாரையும்,

திரைப்படத் துறையில் தீந்தமிழ் வளர்த்து
நிறைகுட மாக நிலைத்து நிற்பவர் (பக். 93)

எனக் கவிஞர் கு.மா.பா.வையும்,

எந்நாளும் கொள்கையிலே வழுவாச் சிங்கம்
இமைப்போதும் தன்னலத்தைப் பாராத் தங்கம் (பக். 94)

எனச் சா. கணேசரையும்,

இசைத்தமிழைக் காப்பதற்கே இயக்கங் கண்டு (பக். 97)

தமிழைக் காத்தவர் என அண்ணாமலையரசரையும்,

தில்லை நாயகம் இல்லை யென்றால்,
இல்லை நூலகத் துறையில் வளர்ச்சி (பக். 92)

என நூலக வித்தகர் தில்லைநாயகம் அவர்களையும், அவரவருக்குக் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க தனிச் சிறப்புகளையும் பண்புகளையும் இணைத்துச் சொல்லிச் சான்றோர்களைப் பாடியிருப்பது பாராட்டத்தக்கது.

மரபு வழியினர்

'அம்மானை'ப் பாடல் வடிவத்தை முதன் முதலில் கையாண்டவர் இளங்கோவடிகள். அவர் சோழர்களை வாழ்த்திப் பூம்புகாரின் புகழைப் பாட முதன்முதலில் அம்மானை பாடினார்.

புறவுநிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்யார் அம்மானை?
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை

என்பது இளங்கோவடிகள் பாடிய அம்மானைப் பாடல். அவர் அன்றைய சோழனைப் பாடிய அதே வகையில் இன்றைய ஆரூர்ச்சோழனைக் கவிக்கொண்டல் செங்குட்டுவன் பாடிப் புகழ் சூட்டுகிறார்.

சின்னஞ் சிறுவயதில் தேரூரும் ஆரூரில்
கன்னல் தமிழ்காத்த காளை,யார் அம்மானை?
கன்னல் தமிழ்காத்த காளை அறிஞர்
அண்ணாவின் தம்பிகரு ணாநிதியாம் அம்மானை!
கருணா நிதிபுகழைப் பாடேலோர் அம்மானை!

கவிக்கொண்டல் அவர்கள் பண்டைய மரபைப் போற்றிப் பாடும் பாவலர் என்பதற்கு இப்பாடல் ஒரு சான்றாகும், இப்பாடல் சிலப்பதிகாரத்தில் உள்ளது போன்று செப்பலோசை குன்றாது நடைபோட்டுச் செல்கிறது.

புதுமைப் புனைவினர்

கவிதையிலேயே இலக்கணப்பாடம் சொல்லியிருப்பது சிறப்பாய் உள்ளது. (கற்க கசடற - பக்.31). ஞாயிறு, மின்னல், அருவி, தென்றல் ஆகிய இயற்கைப் பொருள்கள் கவிக்கொண்டல்

கவிதைகளில் இடம் பெற்று இனிமை சேர்க்கின்றன. சிறுவர்கட்கெனக் கவிஞர் எழுதியுள்ள பாடல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பொழிப்புரை, கருத்துரை, தெளிவுரை எழுதி விளக்கும் வகையில் குழந்தைகட்குக் கவிதை எழுதினால் பயன்படாது. படிக்கும்போதே கேட்கும்போதே குழந்தைகளின் உள்ளங்களைத் தொடுவனவாய் அவை இருக்கவேண்டும். இம்முறையில் ஓசையின்பமும் கலந்து குழைந்த குழந்தைப் பாடல்களைப் பாடுவதில் செங்குட்டுவனார் வல்லவராய் விளங்குகிறார். குழந்தைகள் எட்டுத் திசைகளையும் அறிந்து கொள்ளும் வழியை எழிலுடன் பாடியுள்ளார் (பக். 127).

பள்ளியில் பயின்றிடும் சிட்டுகளே!
  பழந்தமிழ்ச் சோலையின் மொட்டுகளே!
துள்ளித் திரிந்திடும் கன்றுகளே!
  சொல்லும் கவிச்சொல் கேளுங்களே! (பக். 117)

எனக் குழந்தைகளை அழைத்துக் கதை சொல்லுவது போலச் சென்னை நகரில் அவர்கள் காண வேண்டிய இடங்களையெல்லாம் கவிதைகளில் காட்சிப்படுத்திக் 'கவிதைச் சுற்றுலா' செய்ய வைக்கிறார். விலங்குகள், பறவைகளைக் காட்டி அவற்றின் நல்ல குணங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென அறிவுரை கூறுகிறார். நாயின் நன்றியறிதல், பசுவின் சாந்தம், எருதின் உழைப்பு, கழுதையின் பொறுமை, எறும்பின் சுறுசுறுப்பு, தேனீயின் சேமிப்பு ஆகிய நல்ல பண்புகளைக் கற்றுக் கொள்ளுமாறும், அதே வேளையில் பூனையின் திருட்டுத்தனம், குரங்கின் சேட்டை ஆகியவற்றை விட்டுத் தள்ளுமாறும் குழந்தைகளை நன்னெறிப்படுத்தும் நல்லாசிரியராயும் கவிஞர் காட்சியளிக்கிறார் (பக். 115).

'சைவப் புலவீர் சாற்றுவீரே' (பக். 25), 'சிவபுரத்தாண்டவனே செப்பு' (பக். 36-38), 'இறைவனுக்கு அறைகூவல்' (பக். 103), 'நரபலியா?' (பக். 55) போன்ற பாடல்கள் கவிஞரின் பகுத்தறிவுக் கொள்கையினையும், 'பணம்' (பக். 47), 'பணக்காரர் இயல்பு' (பக். 48), 'முதியோர் கல்வி' (பக். 121), 'வாழப் பிறந்திட்ட மாந்தர்களே' (பக். 124-26) போன்ற பாடல்கள் கவிஞரின் சமுதாய சீர்திருத்தச் சிந்தனைகளையும், 'மனிதனைக் காணவில்லை' (பக். 51-52), 'காட்டாங்குளத்தூரில் கண்ட காட்சி' (பக். 63) போன்ற பாடல்கள் கவிஞரின் மாந்த நேயத்தையும் உணர்த்துகின்ற சிறந்த பாடல்களாய் உள்ளன. இனித்திடும் தமிழில் இசைப்பாடல்களும் நூலுள் இடம் பெற்றுள்ளன.

"சங்க காலத்துச் சேரன் செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுத்துக் கனக விசயர் தலைமேலேற்றிக் கொண்டுவந்து வஞ்சி மூதூரில் கண்ணகிக்குச் சிலை சமைத்து வழிபட்டான். நானோ, இன்றைய செங்குட்டுவன். எழுத்தாளர் சங்கச் சுற்றுப் பயணத்தின்போது இமயம் சென்ற நானும் உருளைக்கிழங்கைப் போன்ற உருண்டைக் கல்லொன்றை எடுத்துவந்தேன். என் இல்ல மாடத்தில் அதனை ஏற்றி வைத்தேன். இரண்டுமே செங்குட்டுவப் பயணந்தான் - கல் எடுத்த செய்கைதான்; என்றாலும் என் பயணம் 'சிலம்பாய்' ஆமோ?" எனக் கவிஞர் கேட்டுள்ள வினாவில் உட்பொருள் ஆயிரமாயிரம் அடங்கிக் கிடக்கின்றன.

தமிழிசை

செந்தமிழில் இசைப்பாடல்
இல்லையெனச் செப்புகின்றீர்
மான மின்றிப்
பைந்தமிழில் இசையின்றேல்
பாழ்ங்கிணற்றில் வீழ்ந்துயிரை
மாய்த்த லன்றி
எந்தமிழில் இசையில்லை
எந்தாய்க்கே உடையில்லை
என்ப துண்டோ?
உந்தமிழை அறிவீரோ
தமிழறிவும் உள்ளதுவோ
உங்கட் கெல்லாம்?

என்று, தமிழில் இசைப்பாடல்கள் இல்லை என்பாரைச் சாடுகின்றார், பாவேந்தர் பாரதிதாசன். 'தமிழ்நாட்டுப் பாடகரே! தமிழ்பாடித் தமிழ்மானம் காப்பீர் நன்றே' என்று அவர்கட்கு எடுத்துச் சொல்லவும் செய்கிறார்.

"சேரன் கொலுமண்டபத்தில் கொண்டாட்டங்களின் போது இசைவாணர்கள் 'வாதாபி கணபதிம்' பாடவில்லை. சோழன் களிக்கச் 'சுனோசுனோ' பாடவில்லை. பாண்டியன் பரிபாலனத்தின் போது 'பலுகவோ ஏமீரா' என்று பாடவில்லை.

மூவரசர் வாழ்ந்த நாள்களிலும் அதற்கு முன்பும் தியாகய்யர், சாஸ்திரி, தீட்சிதர் கிருதிகள் பாடப்படவில்லை. இசையே இல்லையா? உண்டு; தமிழிசை பாடப்பட்டது. அந்த இசை இன்று எங்கே?" என்று கேட்பதன்வழி இசையரங்குகளில் தமிழிசை பாடப் படுவதில்லையென்பதை அண்ணா அவர்கள் வெதும்பிச் சுட்டியுள்ளார்கள்.

தமிழிசைக் கீர்த்தனைகள் தமிழிலிருந்தும் அவற்றையும் அவற்றை இயற்றியோரையும் மறைப்பதையும் காணுகின்ற கவிக்கொண்டலின் உள்ளம் கொதிக்கிறது! இந்நிலை மாற்றப்பட வேண்டும் என்றும் துடிக்கிறது.

தில்லை விடங்கன் மாரிமுத் தாபிள்ளை
தில்லை முத்துத் தாண்டவ ரோடு
சீர்காழி அருணா சலக்கவி ராயரும்
தீந்தமிழ் இசையில் மும்மணிகள் அல்லரோ?
தியாகையர், சியாமா சாஸ்திரி, முத்து
சாமி தீட்சிதர் மட்டுமே சங்கீத
மும்மூர்த்தி என்பது முறையோ? சொல்வீர்!
நம்மன்னை மொழியிலே நல்லிசை பாடியோர்
மறைக்கப் படுவதும் மறக்கப் படுவதும்
உரைக்கப் படுதல் வேண்டும் உலகுக்கே! (பக். 42)

எனத் தமிழ் இசை மணிகளை இனியேனும் உலகுக்குக் காட்ட இசைவாணர்கள் முன்வர வேண்டும் என்பதை உணர்த்தித் தமிழிசை மலர்ச்சிக்குக் குரல் கொடுக்கிறார், நம் கவிக்கொண்டல்.

தமிழர்கள் தம் மொழிப்பெருமை, பண்பாட்டுச் சிறப்பு, இனமேன்மை ஆகியவற்றை அறியாத அவல நிலையிலிருந்து வருகின்றனர். அவர்கட்கு முதலில் தாங்கள் யார் என்பதைப் புரியச் செய்ய வேண்டும். புரிந்து அதன்படி நடக்கச்செய்ய வேண்டும். அதற்குத் தம் கவிதையாற்றல் பயன்பட வேண்டுமென விழைகிறார், செங்குட்டுவனார்.

மீண்டுமொரு சங்ககாலம் மலர வேண்டும்
  மெத்தனமாய் இருக்கின்ற தமிழர் தம்மைத்
தூண்டுதற்கே என்கவிதை பயன்ப டட்டும் (பக். 40)

என்பது அவர் கூற்று. அவர் எண்ணத்தை - விழைவை - இந்நூல் நிறைவேற்றியுள்ளது என்று துணிந்து கூறலாம்.

கவிச்சிற்பி வாழ்க!

இன்று இலக்கியத்துறையில் கொத்தனார் பலர் இருக்கின்றனர். ஆனால், கட்டடக் கலைஞர்கள் மிகச்சிலரே உள்ளனர் என்றார், அறிஞர் ஒருவர். (In literature to-day there are plenty of good masons but few good architects). இக்கூற்றுக்கு ஏற்பவே இன்று ஏராளமானோர் கவிதை எழுதுகின்றனர். ஆனால், உயிர்த்துடிப்புள்ள கவிதை எழுதுவோர் மிகச்சிலராகவே

உள்ளனர். கவிக்கொண்டல் செங்குட்டுவன் அவர்கள் கவிதைக் கொத்தனாராய் இல்லாமல் சிறந்த கவிச்சிற்பியாய் விளங்கி வருகிறார். பாவேந்தர் விருது பெற்றுள்ள இப்பாவலர் இன்னும் பல விருதுகள் பெற்றுப் பெருமை கொள்ள வேண்டுமென விழைந்து வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன்
வகைமை	கவிதைகள்
வெளியீடு	பூவழகி பதிப்பகம், சென்னை. (1990)

10

புயலும் பூபாளமும்

கவிஞர் ப. ஜோதிவளவனின் இக்கவிதைத் தொகுப்பில் புயலெனச் சீறும் கவிதைகளும் உள்ளன; பூபாளமாய் இனிக்கும் பாடல்களும் இருக்கின்றன. எனவேதான், மிகப்பொருத்தமாய் 'புயலும் பூபாளமும்' என்னும் தலைப்பைத் தந்திருக்கிறார். 'வலியோர் எளியோரை வதைப்பதையும், கூழுக்குப் பற்பலர் வாடுவதையும் சிற்சிலர் கொள்ளையடிப்பதையும்' காணுகின்ற கவிஞர் புயலெனச் சீறிப் பொங்குகிறார். காதலின் சிறப்பையும், இயற்கையின் எழிலையும் பூபாளமாய் இசைக்கிறார்.

'தாழ்வுற்று வறுமை மிஞ்சி, வாழ்நிலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நிற்கின்ற' பஞ்சைகளும் பராரிகளும் பலம் கொண்டும் நலம் கொண்டும் மலரப் பாடுவதையே கவிஞர் தம் முதன்மை நோக்காய்க் கொண்டிருக்கிறார்.

> சோர்ந்த பயிராய் நின்று, தூர்ந்த பொருளாய்க் கிடந்து
> எலும்புக் கூடாய் நின்று, எரிந்த கரியாய்க் கிடக்கின்றவர்களை

எண்ணிப் பார்த்து அவர்களை மேலே உயர்த்தக் குரல் கொடுப்பவராய்த் திகழ்கிறார், கவிஞர் ஜோதிவளவன் (பக். 34)

> சின்னசாமி கிடக்கிறான் தெருவோரம் – அந்தச்
> சீவனுக்கு இல்லையே ஆகாரம்!
> புன்செயலின் தலைவர்க்கோ பூவாரம் – இங்கே
> பொய்புரட்டுப் பேர்வழிக்கே அதிகாரம்! (பக். 36)

இது என்ன கொடுமை! பல்வளமும் கொழிக்கும் எம் பழமைத் திருநாட்டில் பசித்த வயிறுகளா?

> ஏழை எளியவர் என்கூட்டம் – அவர்
> என்று அடைவது முன்னேற்றம்? (பக். 72)

இக்கொடுமைகளைக் கண்டிக்க ஒருவருமே இல்லையா? ஏன் இல்லை. இதோ நானிருக்கிறேன் என்கிறார், ஜோதிவளவன்.

> நீதிக்குப் புறம்பாய் வாழுகின்ற – கெட்ட
> நீசரின் ஆளுகை, ஆணவத்தின்
> ஆதிக்கம் தன்னை வீழ்த்துதற்கே – என்னை
> ஆயத்தப் படுத்திக் கொண்டுவிட்டேன். (பக். 72)

நான் மட்டும் கேட்டால், எழுதினால் போதுமா? கவிஞர்களே நீங்கள் அனைவருமே ஒருமித்த குரல் கொடுங்கள் எனவும் கேட்கிறார்.

விளக்கு போலே இருளினை விலக்க
விடியலை எழுதத் தயங்காதே! (பக். 87)

இருளை ஓட்டும் விடியல் எழுத்துப்படையின் தளபதியாய் கவிஞர் விளங்குகிறார் என்பதற்கு இந்நூல் ஒரு சான்றாய் உள்ளது.

கடலில் கலம் செலுத்திக் களம் வென்று நாடுபல வென்றவர் நம் தமிழர் எனப் பெருமை பேசிக்கொள்கிறோம்!

சிங்களம் புட்பகம் சாவகம் ஆகிய
தீவு பலவினும் சென்றேறி – அங்குத்
துங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு

எனப் பண்டைத் தமிழ்நாடுபற்றிப் பாரதி முறுக்கிய மீசையோடு பாடிக் களிக்கிறார். இத்தகைய பெருமைக்குரிய தமிழர்கள் பின்னர்க் கூலிகளாய்ப் பிற நாடுகளுக்குச் சென்று பிழைக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டதே என வேதனைக் கண்ணீர் வடிக்கிறார், கவிஞர் ஜோதிவளவன்.

குலைக்கொத்தாய் இருந்த எம்மோர்
குவலயத்தில் மூலைக் கொன்றாய்
அலைபட்டுக் கிடக்கின் றாரே
யாரிடம் இதனைச் சொல்வேன்? (பக். 17)

இது மட்டுமா? பாரதி பாட்டையும் நினைத்து, இன்றைய நிலையையும் எண்ணி ஏக்கத்தோடு பாடுகிறார்.

கடலின் விரிப்பில் மரக்கலத் தொகுதிகள்
கம்பீர மாய்அன்று வலம்வந்த தெல்லாம் – இன்று
கடலெங்கும் தேடினும் காணவே இல்லையே!
கடலுண்டு மீன்புலிக் கொடிகள் இல்லையே! (பக். 57)

'தமிழா இன்று...!' என்ற தலைப்பில் பழைய வரலாறு இன்று கதைபோல ஆகிவிட்டதே என்று கலங்கிப் பாடுகிறார், கவிஞர்.

நாட்டின் இன்றைய நிலை கவிஞரின் உள்ளத்தை நஞ்சென வருத்துகிறது. எந்தக் கொடுமையைச் சொல்வது, எதை விடுவது என்று கூறுமளவிற்குக் கொடுமையன்றோ மிகுந்துவிட்டது. இருப்பவர்க்கு ஒரு நீதி, இல்லாதவர்க்கு ஒரு நீதியா? ஒருதலை நீதி பெரிதும் உண்டாய்விட்டதே! 'சரிநிகர் நீதி எங்கே போச்சு?' எனக் கலங்குகிறார். பொருள் இருந்தால் பொல்லாதவர்கள்கூட மதிக்கப்படுகிறார்கள்!

பொல்லா மனிதன் பொருள்வளம் கண்டு
போற்றி உலகம் மதிக்குது – நல்ல
பொறுமை அருமை குணங்கள் தன்னை
கீழே போட்டு மிதிக்குது – தம்பி
கீழே போட்டு மிதிக்குது. (பக். 50)

நாம் இருந்து என்ன பயன்? 'நாயினும் கீழாய் நசிந்து கெடுவோர் நன்மை அடையவில்லையே! சட்டம் எல்லோரிடத்தும் ஒரே மாதிரியாய்ச் செயல்பட வேண்டாவா?' 'வெற்று மனிதனுக்கு விலங்கு போடுவதும் வேடத் திருடருக்கு நலங்கு பாடுவதுமா சட்டம்?' (பக். 32). நாடு சுதந்தரம் பெற்றும் மக்கள் அனைவரும் நல்வாழ்வு எய்தும் நிலை கிட்டவில்லையே!

தங்கச் சுதந்திரம் வாங்கிய பின்னும்
தரித்திர மேஇங்கு நிற்குதையா – எங்கள்
சரித்திரம் கேலிக்கே விற்குதையா! (பக். 58)

ஒருசாண் உயர்ந்தால் ஒருமுழம் சறுக்கிடு கிறதே! (பக். 61)

இன்றும் ஊரார் தெளியவில்லை. நன்மையைத் தீமை வெல்கிறது. கொள்கையாளர்களைக் கோணல்புத்திக்காரர்கள் மிரட்டுகிறார்கள்.

திரும்பிப் பார்க்கின்றேன் நாட்டை – நரி
திருடிப் போகுதே, ஆட்டை!
குருவி வாழ்கின்ற கூட்டை – எடுத்தே
குரங்கு செய்யுதே சேட்டை! (பக். 69)

உண்மையான முன்னேற்றம் என்றால் உழைப்பவர் முன்னுக்கு வரவேண்டும்! விண்முட்டும் மாளிகை ஒரு பக்கம்! ஓட்டைக் குடிசை ஒரு பக்கம்! எங்கே சமத்துவம்?

சிங்கார மாளிகை ஓர்பக்கம்
சிவிகை தூக்கிகள் ஓர்பக்கம்
சிங்கார வாழ்க்கை, சிரிக்கிற வாழ்க்கை
சேரிக்கு வரணும் முன்னேற்றம்? (பக். 15)

அவ்வாறான முன்னேற்றப் பாதையில் நடைபோட ஜோதி வளவனின் கவிதைகள் தூண்டுகோல்களாகின்றன.

தமிழ்நாட்டில் தமிழ் இல்லை என்பது வேதனையிலும் வேதனை! 'தமிழகத்தின் தமிழ்த்தெருவில் தமிழ் இல்லையே' என அங்கலாய்த்துப் பாடினார், பாவேந்தர்.

தானுயரத் தமிழ் என்பவன், உயர்ந்ததும் தமிழை மறக்கிறான். தமிழில் எல்லாம் முடியுமா என்னும் வினா எழுப்பும் வீணனாகிறான். சில தொடர்கள் பேசுவதற்குள்ளேயே பல பிறமொழிச் சொற்கள் கலந்து பேசுவதைப் பெருமையாய்க்

கருதுகிறான். தம் கையெழுத்தைத் தமிழில் போடாத தறுதலைகளும் இருக்கவே செய்கின்றன. அருந்தமிழைத் தன் நெஞ்சில் பதிக்காத தமிழனைக் கவிஞர் அற்பன் என இகழ்ந்து சாடுகிறார். தமிழனாயிருந்தும் தமிழோடு ஒட்டாதவனை,

விளாம்பழத்தின் ஓடுபோல் பிரிந்தே நின்றாய்,

என மிகச்சிறந்த உவமையால் சுட்டுகிறார்.

பொதுவாய், அவலச்சுவைப்பாடல் அனைவர் நெஞ்சையும் ஈர்க்கும். அவலத்திலேயே பேரவலம் தாயை இழந்து தவிப்பது, முற்றுந்துறந்த பட்டினத்தடிகளே அன்னைக்குத் தீ மூட்டியபோது 'அடிவயிறு பற்றி எரிகுதே' என அழுது புலம்புகிறார் எனில் மற்றவர் நிலைபற்றிக் கூறவும் வேண்டுமா? தம் தாயார் மறைவின்போது ஜோதிவளவன் பாடியுள்ள 'தாயே வருவாயோ!' என்ற பாடல் இத்தொகுப்பிலேயே மிக உயர்வான பாடல் என்றால் மிகையாகாது. தாயின் அன்பு அவர் நெஞ்சை உருகச்செய்து கவிதை ஊற்றெடுக்கச் செய்கிறது! அடடா! குழந்தையினும் குழந்தையாய் மாறித் தம் ஆற்றாமையை அவர் குமுறிக் குமுறி வெளிப்படுத்தும்போது நம் விழிகளும் குளங்களாகிவிடுகின்றன. முழுப் பாட்டுமே அவலச்சுவையின் மணிமுடி என்றாலும் இடம் கருதி இங்கே சில அடிகள் :

நெருஞ்சி முள்ளும் உன்நிழல் கண்டே
குறிஞ்சி மலராகும்!
நெருப்பும் உன்முன் நிலவாய் மாறி
நீரின் குளிராகும்!
செல்வ மே! உன் திருமுகம் கண்ட
நஞ்சும் தேனாகும்!...
இன்று இல்லை என்றன் உள்ளம்
ஏங்கித் தவிக்குதம்மா!
என்றன் தாயே உன்னைக் காண
இருவிழி பசிக்குதம்மா!

'இரு விழி பசிக்குதம்மா!' - அடடே! சோகம் ஊனை உயிரை உருக்கிவிடுகிறதே! பசி, என்றுமே தீராத பசியாய்விட்டதே!

காதலைப் பாடுவதில் கவிஞர் மிக வல்லவராய் இருக்கிறார். காதலியைக் கண்டதும் காதலன் நெஞ்சை இழந்துவிடுகிறான். இதனை,

நெய்க்கட்டி போன்றழகு பெண்ணைக் கண்டால்
நிர்வாணம் ஆகின்றாய்! நெஞ்சே நீதான்! (பக். 136)

எனத் தன் மனத்துக்குச் சொல்கிறான். 'நெஞ்சு நிர்வாணம் ஆகிறது' என்ற தொடராட்சியிடம் நமக்குக் காதல் தோன்றுகிறதன்றோ?

கவர்ச்சிக் கன்னி (பக். 163) என்னும் பாடலில் காதற்சுவை ததும்பி வழிகிறது.

அணிரதம் போலவள் நடையும் உடையும்
ஆவியைச் சுண்டி இழுக்கிறதே!

இந்த அடிகளும் நம் ஆவியைச் சுண்டி இழுக்கத்தான் செய்கின்றன.

அழகு மலர்ந்திருக்குதே! (பக் 160), அழகு நிழல்கள் (பக். 161) எனும் பாடல்கள் அழகிய காதல் சிந்துகளாய் ஒலிக்கின்றன. சிந்து பாடுவதில் கவிஞருக்குள்ள சீரிய திறமையை இப்பாடல்கள் நிறுவுகின்றன. ஒரு மரம் வளர வேண்டுமானால் விதையிட வேண்டுமன்றோ? காதலி பார்வை விதையை வீசினாளாம். அதனால் காதல் சோலையே வளர்ந்தெழுந்ததாம்!

வேர்விடவே விதைவேண்டும்; அதுபோல் பார்வை
விசினாள் ஆகிவிட்டோம் காதல் சோலை (பக். 175)

காதலனின் தோளைக் கிளையாகவும், அதில் படியும் காதலியைக் கிளியாகவும் கூறுவார், பாவேந்தர் பாரதிதாசன்.

தொத்துகின்ற கிளிக்கெதிரில், அன்னோன் இன்பத்
தோளான மணிக்கிளையும் நெருங்க

என்பது, ‘எதிர்பாராத முத்தத்தில்’ இடம் பெற்றுள்ள அடிகள். தோளில் தொத்தும் கிளி என்னும் இக்கருத்தை நம் கவிஞரும் என்னை,

வழக்கம்போல் தோள்கிளியாய் ஆக்கி வைத்தே
வாயளந்த முத்தங்கள் போதும் போதும் (பக். 150)

என்பார். பாரதிதாசனாரின் பாடல் தலைவி, தொழிலாளியின் தோளைச் சேர வேண்டுமெனத் துடிக்கிறாள்.

தொழிலாளியின் தோள்களைத்தான் அணைப்பேன் – அவன்
தொடத்தொடத்தான் இன்பம் திளைப்பேன்

என்கிறாள்; ஜோதிவளவனின் பாடல் பெண்ணோ,

கல்லையும் முள்ளையும் களைஎடுக்கிற
காளையைக் கட்டிக்குவேன் – வீரச்
சொல்லிலும் தொண்டிலும் துணிவிருக்கிற
தோழனைக் கட்டிக்குவேன் (பக். 155)

என்கிறாள்.

‘ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாய் வாழவேண்டும். பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்கள் வரவேண்டும்’ என்பதால் பெண்களே,

நிசப்த நித்திரை நீங்கவேண் டாமா?
நீங்கள் புலியென மாறவேண் டாமா? (பக். 39)

எனப் பெண்களைப் போர்க்குரல் கொடுக்க அழைக்கிறார். பெண்கள் படிக்க வேண்டும்; முன்னேற்ற நோக்குடன் வாழ வேண்டும்; பழமைக் கருத்துகளை அகற்ற வேண்டும்; பகுத்தறிவுப் பாதையில் நடக்கவேண்டும் என்றாலும், பெண்கள் குடும்பப் பாங்கு மாறி ஆடம்பரம் உள்ளவர்களாய்ப் போலி நாகரிகத்திற்குட் பட்டவர்களானால் குடும்பம் சீர்குலைந்துவிடும் என்பதையும் கவிஞர் எச்சரிக்கத் தவறவில்லை.

ஆடம்பரம் உள்ளவள் அவள்உனக் கானால்
அவள்நிலை குலைக்கும் சூறை யானால்
ஓடம்நீ கவிழ்வது உண்மை மகனே!
ஓடும் வாழ்க்கை நீந்துதல் கடினமே! (பக். 113)

இளம் கைம்பெண் ஏக்கத்தை - அவர்கள் படும் வேதனை களை - படிப்பவர் நெஞ்சம் அப்பெண்களைப் போலவே நெஞ்சுருகும்படியாய் உரைக்கிறார். இளம் கைம்பெண்களின் ஆதரவற்ற நிலை, அவர்கள் கற்பினைச் சூறையாட நினைக்கும் கயவர்களிடையே அவர்கள் கலங்கித் தவிக்கும் நிலை ஆகியவற்றை,

வெள்ளை மனமில்லாக் கள்ளக் கழுகுகள்
வேடிக்கை பார்க்குதம்மா – என்னை
விருந்திடக் கேட்குதம்மா – பணம்
உள்ளது நீவழி வந்திடு என்றே
ஓநாய் சிரிக்குதம்மா – கற்பின்
உண்மை தவிக்குதம்மா (பக். 59)

இப்பாடலடிகள் படம் பிடிக்கின்றன. நெஞ்சமோ, தீயிடை நெய்யாய் உருகியே நிம்மதியின்றி வேகின்ற அவர்களை நாம்,

– உன்னைப்
பற்றத் துடிக்கின்ற
மற்றொரு ஆடவன்
உற்ற வழியில் நட (பக். 171)

என மறுமணத்திற்கு ஊக்குவிக்க வேண்டும்.

இயற்கையில் உள்ளம் தோய்ந்து அதன் எழிலைப் பாடுவதிலும் கவிஞர் வல்லவராய் இருக்கிறார். வானவில்லில், பச்சைப் புல்லில், சிற்பக் கல்லில், முதிர்ந்த நெல்லில், எங்கெங்கும் அவருக்கு அழகு தென்படுகிறது.

துளிர்க்கொழுந்தாய்த் தொடர்ந்துவரும் அழகை யெல்லாம்
துயர்தீர வைத்திங்கே பாடுகின்றேன்

எனப் பாடிக் களிக்கிறார்.

கவிஞரிடம் அழகிய சொல்லாட்சிகள், உருவகங்கள், உவமைகள், படிமங்கள் ஆகியன கைகோத்து விளையாடுகின்றன.

அடிமைகளை,

வறுமை, அடைகாத்து வைத்த குஞ்சுகள் (பக். 45)

என்றும், 'துன்ப வேர்' (பக். 80) என்றும் கூறுகிறார். தம் கவிதைகளைப் புயல் என்றாரன்றோ? புயலின் செயலை ஒரு பாட்டில் பாடுகிறார்.

எளிய பசுவை
எகிறிப் பாய்ந்தே புலிஅ டித்ததுபோல் – ஏழை
எளியர் குடிசை பெயர்ந்து போகப்
புயலடித்தது பார். (பக். 52)

கற்றிருந்தாலும் கற்றதை மற்றவர் பயன்கொள்ள எடுத்துரைக்க நாவன்மை வேண்டும் என்பதை நயமுறக் கூறுகிறார் (பக். 65).

காடு விளைஞ்சென்ன மச்சான் – நம்ம
கையும் காலும் தானே மிச்சம்

என்னும் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரத்தின் பாடற்சாயல் ஜோதிவளவனின்,

இடுப்பை வளைத்தே எலும்பை முறித்தே
இத்தனை நாளாய் உழைத்தே – எங்கள்
இளமை முழுதும் களைத்தே
எடுத்த பொன்னும் எடுத்த மணியும்
என்ன ஆச்சுங்க – சாமி
எங்க போச்சுங்க

எனக் கூலிப் பட்டாளத்தின் குரல் என்ற பாட்டில் படிந்திருக்கிறது.

கவிஞர் ஜோதிவளவன் மக்களின் குரலாய்ப் பாடி வருபவர். சிங்கம் நிகர்த்த போக்குடையவர்; தீவிரச் சிந்தையும் தெளிந்த வாக்கும் உடையவர். எப்போதும் பிறர் வாழ்வை எண்ணிப் பார்க்கும் இதயங்களுடன் தம் இதயத்தை இணைத்துக் கொண்டவர். மக்கள் ஒன்றுபட்டு வாழ விழையும் உயர் மனத்தினர்.

கல்லை மண்ணை
கையில் பிசைந்தவர் கண்ணீர் போக்கிடடா – இங்கே
இல்லை இல்லை
என்போர் தம்மை இல்லா தாக்கிடடா! (பக். 62)

என இல்லாமையை இல்லாமல் ஆக்க வேண்டுமெனும் துடிப்பினர்.

முயன்று முயன்று மேலே மேலே
மூச்சினைப் பாற நேரமு மின்றி

உயரே பறக்கிறோம் வெற்றிகள் தேடி
ஒவ்வொரு பொழுதிலும் நம்பிக்கை யோடே (பக். 25)

என நம்பிக்கையோடு உயர முயலும் ஊக்கம் மிக்கவர். ஆதலால், அவர் கவிதைகள் இத்துணைச் சிறப்புகளையும் தம்முள் அடக்கிக்கொண்டுள்ளன என்பதில் ஐயமில்லை.

சாதிக் கொடுமைகள் அற்ற, ஏற்றத் தாழ்வுகள் நீங்கிய, பகுத்தறிவு வழி நிற்கிற சமுதாயத்தை உருவாக்க இவர் கவிதைகள் எழுச்சியூட்டுவன. ஒவ்வொரு கவிதையும் ஒரு கொள்கை முரசாய் முழக்கமிடுகிறது. யாப்புச் சிறப்பும், ஓசை நயமும், கருத்துச் செறிவும் கொண்டவையாய்க் கவிதைகள் இனிக்கின்றன. புயற்கவிதைகள் நம்மைச் சீற்றமுறச் செய்கின்றன; பூபாளக் கவிதைகள் காதில் தேனெனப் பாய்கின்றன. புயல் எழுவதற்கான சூழ்நிலையினைத் தவிர்ப்போம்; பூபாளத்தை வரவேற்போம்!

நண்பர் கவிஞர் ஜோதிவளவனுக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

நூல் ஆக்கம்	கவிஞர் ப. ஜோதிவளவன்
வகைமை	கவிதைகள்
வெளியீடு	குமார் பதிப்பகம், சென்னை. (1992)

11

ஆற்றல் கவிதைகள்

ஒன்பதாம் தொகையார்

கவிஞர் ஆற்றலரசு தம் பெயருக்கேற்பவே சிறந்த ஆற்றலராய் விளங்கி வருகிறார். சில ஆண்டுகளுக்கு முன், பல்வேறு புலவர்கள் நிலாபற்றிப் பாடிய நானூறு பாக்களைத் தொகுத்து 'நிலா நானூறு' என்னும் அருமையானதொரு நூலை வெளியிட்டார். அதனால் 'ஒன்பதாந் தொகையார்' எனப் பாராட்டப்பட்டார். இப்போது தாமே பாடியுள்ள எண்பத்தைந்து பாடல்களைச் சின்னஞ்சிறுசுகள், இயற்கை, ஒரு சொற்கவிதைகள், நாடும் மொழியும், காதல், தத்துவம், இசைப்பாடல்கள் எனும் தலைப்புகளில் அடக்கி இந்நூலை வெளியிடுகிறார். நூல்களை நேர்த்தியாய் வெளியிடுவதில் ஆற்றலரசு வல்லவர். ஏழு வண்ணங்கள் இணைந்து எழில் காட்டும் வானவில்லைப் போல, ஏழு பிரிவுகள் இணைந்து அறிவூட்டும் கவிதை வில்லாய் இந்நூல் பொலிவு பெறுகிறது. வானவில்லின் வண்ணக் கலவையொப்ப நூலெங்கும் பல்வேறு வண்ணப் படங்கள் பளிச்சிட்டு மகிழ்விக்கின்றன.

சின்னஞ்சிறுசுகளுக்கு

குழந்தைகட்குக் கவிதை எழுதுவது எளிய செயலன்று; அவர்கள் புரிந்துகொள்ளும்படியான நடை எளிமை வேண்டும். அதே வேளை, உள்ளத்தை ஈர்த்து, ஆடியும் பாடியும் களிக்கத் தக்க செய்திகளை உள்ளடக்கியும் இருக்க வேண்டும். கவிஞர் ஆற்றலரசு, கொசுவை டாக்டராக்கிக் குழந்தைகளைக் களிக்கச் செய்கிறார். கொசு எப்படிப்பட்ட டாக்டர் தெரியுமா? காசில்லாமல் ஊசி போடுகின்ற 'ஓசி' டாக்டர்!

ஊசி போடும் மருத்துவர்
ஊரைச் சுற்றி வருகிறார்!
காசில் லாமல் ஊசியைக்
கண்ட வர்க்குப் போடுவார் (பக். 24)

இதைப் படிக்கும் போது குழந்தைகள் மட்டுமா, எவருமே மகிழ்வர். கொசுக்கடி கசப்பான நிகழ்ச்சியே என்றாலும் இக்கொசுப்பாட்டு இனிக்கிறது.

சொல் விளையாட்டு

ஒருசொல் கவிதைகள் என்னும் தலைப்பில் ஒரே சொல், பாடலில் பன்முறையும் வருமாறு கவிஞர் சொற்சிலம்பம் ஆடியுள்ளார். 'வட்டம்' என்னும் சொல்லை ஒரு பாடலில் அடிக்கு அடி ஆண்டு நம்மை வயப்படுத்துகிறார்.

விண்மீதே ஒளிர்கின்ற பரிதி வட்டம்
வெள்ளிநிலா வானத்தின் மற்றோர் வட்டம்
கண்வட்டம் கட்பாவை ஒளியின் வட்டம்
கன்னியரின் நெற்றியிலே திலகம் வட்டம்
பலவட்டம் மாவட்டம் ஆகி நிற்கும் (பக். 50–51)

இப்படி முப்பதுக்கு மேற்பட்ட வட்டங்களைத் தம் பாட்டு நூலால் இணைத்து ஒரு வட்ட மாலையைக் கவிஞர் நமக்கு வழங்கியுள்ளார். பிள்ளை மனம், தாய் மனம், கள்ள மனம், வெள்ளை மனம் போன்ற இருபது வகையான மனங்களை ஒரு பாடலில் இணைய வைக்கிறார்.

அஞ்சிநடுங்கி ஒதுங்கும்மனம்
கோழைமனம் – எதையும்
அஞ்சாமலே எதிர்க்கும்மனம்
வீரமனம். (பக். 74)

கல்லால் கோட்டை சமைப்பது போல, 'கல்' என்னும் சொல்லைக்கொண்டு கவிஞர் ஒரு பாட்டுக் கோட்டையையே எழுப்பியுள்ளார். ஆற்றல் அரசு அன்றோ? அவரால் இதுவும் முடியும், எதுவும் முடியும்!

கல்லதனை இமயத்தே எடுக்கச் செய்து
கனித்தமிழைப் பழித்திட்ட வடவர் தம்மைக்
கல்லதனைத் தலைமேலே ஏற்றி வந்தே
கற்பரசி கண்ணகியின் வடிவே யாக்கிக்
கல்தோளைக் கொண்டுள்ள சேர மன்னன்
கண்ணகிக்கே கோயிலினை எடுத்தான் முன்னே. (பக். 67)

இங்கே 'கல்' ஒரு காவியச் செய்தியையே பாடல் ஓவியமாக்கி விடுகிறது. இவ்வாறே புள்ளி, பச்சை, தீ, நிர்வாணம், கை,.பொதுச் சொத்து, அடிமை, தோற்றம் எனும் சொற்கள் எழுத்துக் கோலங்களாய் நூலை அழகுபடுத்துகின்றன.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ்!

தமிழைப் பாடிக்கொண்டிருப்பதே தமது தலையாய பணி என்கிறார், கவிஞர்.

பாடிக்கொண் டேயிருப்பேன் – உயர்
பைந்தமிழ் காட்டிடும் இலக்கியப் பாவினைப்
பாடிக்கொண் டேயிருப்பேன் (பக். 90)

எனச் சொல்லும் கவிஞருக்குத் தமிழ்நினைவைத் தவிர வேறு நினைவே இல்லை. ஆம்!

நெஞ்சத்தின் நினைவெல்லாம் உன்னை யன்றி
நெகிழ்கின்ற நினைவேதும் இல்லை இல்லை (பக். 93)

என அவரே நெகிழ்ந்து கூறுகிறார்!

தனக்கென வாழ்வார் யாருக்கும் பயனாகார்
தமிழ்மறைக்கு வாழ்வாரே வாழ்வா ராவார்! (பக். 86)

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்னும் நிலை மலரப் பாடுபட வேண்டுவது தமிழ் மகன் ஒவ்வொருவனின் கடமையாகும் என்பதை ஆற்றலரசு அழுத்தந்திருத்தமாய் எடுத்தியம்புகிறார்.

நீதிமன்றம் அரசாங்கம் இன்னும் எங்கும்
நிலையாகத் தமிழாட்சி புரியச் செய்வோம்!
ஓதுகின்ற ஆசான்மார் பலரும் நாட்டில்
ஒண்டமிழின் உயர்வதனை ஊட்டச் செய்வோம்! (பக். 89)

தமிழ், உயர் மொழி; தனிமொழி; செம்மொழி; படிப்போரின் ஊன் கலந்து உயிர் கலந்து இனிக்கும் மொழி!

படித்தால் இனிக்கும் எப்போதும் – தமிழைப்
பயின்றிடப் பயின்றிடத் தெரியுமப்போது
கடல்போன்ற இம்மொழி யோடு
மடல்தீட்டி மடல்தீட்டி திருப்புகழ் பாடு! (பக். 84)

என்கிறார், கவிஞர். இப்பாடலைப் படிக்கும்போது பாவேந்தர் பாரதிதாசன் பெண்கல்விபற்றிப் பாடியுள்ள பாடல் நம் நினைவுக்கு வருகிறது!

கடிதாய் இருக்குமிப் போது – கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது!
கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு – பெண்
கல்வி பெண்கல்வி என்கின்ற தன்போடு

என்பன பாவேந்தரின் பாடலடிகள்!

இயற்கை எழில்

இயற்கையில் கவிஞர் தம் உள்ளத்தைப் பறி கொடுக்கிறார். இயற்கையே அவருக்கு எல்லாமாய் இருக்கிறது!

பாரெங்கும் சூழ்ந்துள்ள இயற்கை அன்னை
பைந்தமிழின் கவிதந்தாள்! எல்லாம் தந்தாள்!

கடலலையின் வெண்நுரை, கமழ்கின்ற தாமரை மொட்டு எனப் பார்க்குமிடமெங்கும் அழகு நீக்கமற நிறைந்திருப்பதைக் கண்டு,

முடிவில்லா அழகுக்கு முடிவே இல்லை (பக். 39)

என முடிவு கட்டுகிறார்.

கடவுள் உண்டென்பார்; எனினும், அவரைக் கண்டாரில்லை. காற்று உண்டு; ஆயினும், அதனைக் கண்ணால் காண முடிவதில்லை.

நீயெங்கும் இருக்கின்றாய்; ஆனால் உன்னை
நான்காண முயலுகிறேன் நீதா னெங்கே?
உனையிங்கு கண்டாரும் உலகில் இல்லை
உயர்புவியில் இறையோனைக் கண்டார் யாரோ? (பக். 41)

எனக் காற்றைக் கடவுளோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார், கவிஞர்.

இயற்கையைப் பாடும்போது கவிஞர் தமிழை மறந்தாரில்லை. அருவி ஓசை அவருக்குத் தமிழோசையாகவே கேட்கிறது. இயற்கை அன்னை,

அருவியின் அழகி லெல்லாம்
அருந்தமிழ் ஓசை தந்து
கரும்பென இனிக்கும் நல்ல
கானமே மீட்டுகின்றாள். (பக். 32)

இதுமட்டுமா? தென்றலும் இவரிடம் செந்தமிழே பேசுகிறது.

சில்லெனத் தென்றல் வீசும்
சிறப்புடைத் தமிழைப் பேசும்! (பக். 47)

சமூக நலம்

கவிஞர்கள் சமூக நலமே தம் நலமாய்க் கொள்பவர்கள்.

தனியொருவனுக் குணவிலை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்

என்றார், பாரதியார். பாவேந்தர் பாரதிதாசனோ,

இலையே உணவிலை யேகதி
இலையே எனும்எளிமை
இனிமே லிலைஎன வேமுர
சறைவாய் முரசறைவாய்

என முழங்கினார். இப்பெருங்கவிஞர்கள் வழிவந்த ஆற்றலரசு அமைதியாய் ஆனால், அழுத்தமாய்,

கூழுக்கே வாடுகின்ற மக்கட் கெல்லாம்
குன்றாத வளமீயும் நாளே பொன்னாள்! (பக். 111)

என்கிறார். சாதி ஒழியவேண்டும்; சாந்தி தழைக்க வேண்டும்; அடிமைத்தனம் அழிய வேண்டும்; அகிலம் உயர வேண்டும்.

வறுமையினை ஒழித்திடுவோம் – உயர்
வளமைதனைப் படைத்திடுவோம்!

என அனைவரையும் புத்துலகு காண அழைக்கிறார்!

உழைப்பவர் வறுமையில் உழல்கின்றனர். அவர்கள் உழைப்பின் பயனை உறிஞ்சுபவர்களோ செழிக்கின்றனர்!

மாடா உழைக்கிறவன்
மண்ணுமேலே சாயறான் – உலகில்
மத்தவனை ஏய்க்கிறவன்
மாடிகட்டி வாழுறான். (பக். 143)

இக்கொடுமையை எத்தனை காலம் விட்டு வைப்பது?

உழைப்பினாலே வளம் சேர்க்கவேண்டும்; அவ்வளம் அனைவர்க்கும் பொதுவாகி இன்பம் கொழிக்க வேண்டும். தனி நலம் அகன்று பொதுநலம் ஓங்க வேண்டும்.

பொட்டல் காட்டை விளைநிலமா
ஆக்கணும் – உலக
பொதுநலத்தில் சுயநலத்தை
நீக்கணும்!

எனும் பசுமையான எண்ணங்களை அனைவர் உள்ளத்திலும் பதியவைக்கிறார்.

நாட்டில் நலம் சேர்க்க, அனைவர்க்கும் நல்ல பல கருத்துகளைத் தொகுத்துச் சொல்கிறார்.

எறும்பைப்போல சேர்த்துவெச்சுப் பிழைக்கணும் – வாழ்வில்
என்றும்உயரப் பாடுபட்டே உழைக்கணும்! (பக். 175)

இணைந்துவாழக் கற்றுக்கொள்ள வேண்டும் – பிறர்
இன்னல்கண்டு உதவிசெய்ய வேண்டும்!
இதயமெல்லாம் உயர்வைஎண்ண வேண்டும் – நீ
இந்தநாட்டைப் புதுமையாக்க வேண்டும்! (பக். 176)

இவை போன்று இனிய கருத்துகள் நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன.

ஏனடி அந்தச் சிரிப்பு – உன்
வாயெலாம் மலரின் விரிப்பு (பக். 121)

என்னும் காதலனின் கூற்றில்தான் எவ்வளவு பெருமிதம்!

கானல்நீரை அள்ளிக்குடிக்க
முடியுமா? – இங்கே
கனவுகளைக் காட்சியாக்க
இயலுமா?

என்பதில் எவ்வளவு ஆழ்ந்த தத்துவம்?

உணர்வற்ற மனிதர்கள் வாழும் உலகினில்
உண்மைகள் ஊமையடா!
பயனற்ற நினைவுகள் தோன்றும் இதயத்தில்
பண்புகள் ஊமையடா! (பக். 174)

என்பதில்தான் எத்துணைப் பட்டறிவுத் தேக்கம்!

பிறருக் காக வாழும் மனிதர் ஏட்டில் வாழுவார் – என்றும்
பிறரை ஏய்த்து வாழ்ப வர்கள் மாட்டிக் கொள்ளுவார்! (பக். 152)

என்பதுதான் எவ்வளவு உண்மையான பேச்சு. இவ்வாறாய் நூலுள் நயம் மிளிரும் பாக்கள் இனித்திடக் காண்கிறோம்!

இத்தகைய நூல்கள் தொடர்ந்து வெளிவந்து ஆற்றலரசின் கவிதைத் தொண்டு சிறப்பதாகுக!

நூல் ஆக்கம்	கவிஞர் ஆற்றலரசு
வகைமை	கவிதைகள்
வெளியீடு	கவிதா பப்ளிகேசன், சென்னை. (1984)

12

காதல் மரம்

கவினுறு குறுங்காப்பியம்

பண்டைய தமிழக வரலாறு முறையாய் எழுதப்படாது போயிற்று. மன்னர்களைப்பற்றியோ, முக்கியச் செய்திகளைப் பற்றியோ காலநிரல்படி முற்றிலுமாய் அறிந்துகொள்ள இயலவில்லை. இலக்கியங்களில் கிடைக்கும் குறிப்புகளை ஒன்றுசேர்த்து ஓரளவே அறிந்துகொள்ள முடிகிறது. இலக்கியங்களில் கிடைக்கும் குறிப்புகளைக் கருப்பொருளாக்கி எழுத்தாளர் பலர் தம் படைப்பாற்றல் கொண்டு புதினங்கள், சிறுகதைகள், காவியங்கள் எனப் பலவற்றைப் படைத்துள்ளனர்.

கவிஞர் மலர்மகன் சங்க காலத்திய குறுநில மன்னர் நன்னன் பற்றிக் கிடைத்துள்ள ஒரு சிறிய செய்தி கொண்டு, 'காதல் மரம்' எனும் இக்கவினுறு குறுங்காவியத்தைப் படைத்துள்ளார்.

நன்னன் நாடு

நன்னன் சங்ககாலக் குறுநில மன்னன்; கொண்கானம் என்னும் நாட்டை ஆண்டுவந்தவன். பாழி இவன் தலைநகர். அது காவல் மிகுந்த நகரமாய் விளங்கியது.[1] அங்கு யானைகள் நிறைய இருந்தன.[2] கொண்கான நாட்டில் ஏழில் மலை எனும் நீண்ட மலை இருந்தது.[3] வானளாவிய நீண்ட மூங்கில்களைக் கொண்ட மலைப்பக்கத்தையும் பொன் பொருந்திய இடங்களையுமுடையதாய் ஏழில் மலை விளங்கியது.[4] கொண்கான நாடு பொன் விளையும் பொலிவு பெற்றது எனப் பாடுகிறார் பாலை பாடிய பெருங்கடுங்கோ.

பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்டு[5]

---

1. அகநானூறு, 15 11
2. மேலது, 142 9
3. மேலது, 152 13
4. மேலது, 173 16-18
5. நற்றிணை, 391 5

நன்னன் தான் ஈட்டிய பொருளினைப் 'பாழி' என்னுமிடத்தில் சேமித்துப் பல வேளிரை அதனைக் காக்குமாறு வைத்திருந்தான் எனப் பரணர் பாடியுள்ளார்.

நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்.[1]

இவன் நாட்டில் பாரம், பிரம்பு என்பன முக்கிய இடங்களாய் விளக்கமுற்றிருந்தன.

பாரத்துத் தலைவன் ஆர நன்னன்[2]

அருவி ஆம்பல் கவித்த முன்துறை
நன்னன் ஆய்பிரம் பன்ன[3]

எனும் பரணர் வாக்கு இதற்குச் சான்றாம்.

நன்னனுடைய பிரம்பு, அருவிநீர் பெருகும் இடத்தில் ஆம்பல் தழைத்துள்ள முன்துறைகளைக் கொண்டதாயிருந்தது.

கொண்கானநாடு என்பது இப்போதுள்ள கேரளத்தின் வடபகுதியும் கன்னடத்தின் தென்பகுதியும் சேர்ந்ததாகும். ஏழில் குன்றம் இப்போது எலிமலை என்றும், பாழி பிற்காலத்தே பாழிக்கல்லாகி, இப்போது பாட்கல் என்றும் வழங்கப்பட்டு வருகின்றன.

கொடையாளன்

நன்னன் சிறந்த கொடையாளனாயும் திகழ்ந்திருக்கிறான். பகைவரை வென்று கொணர்ந்த அணிகலன் முதலாய செல்வங்களை, வறுமையால் வருந்தி, தன்னை நாடி வந்த பாணர் முதலியோர்க்கு அவன் அள்ளிக் கொடுத்துள்ளான்.

உலைந்த ஒக்கல் பாடுநர் செலினே...
அருங்குறும்பு எறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன்[4]....

என மாமூலனார் அவனைப் பாராட்டுகிறார்.

பெருவீரன்

நன்னன் பெருவீரன். தன் ஆற்றலால் வலிமை மிக்க பிண்டன் என்பானை வென்றான்.

---

1. அகநானூறு, 258 1-3
2. மேலது, 152 12
3. மேலது, 256 18-19
4. மேலது, 349 5, 8, 9

-------- பிண்டன்
முனைமுரண் உடையக் கடந்த வெள்வேல்... நன்னன்[1]

என்பார் பரணர்.

ஏழு அரசர்களின் முடிப்பொன்னால் செய்த மாலையினை மார்பில் அணிந்திருந்த நன்னன் பொன்தேரினையும் கொண்டிருந்தான்.

எழுமுடி கெழீஇய திருமுடி அகலத்து
பொன்னார்கண்[2]

எனப் பதிற்றுப்பத்து அவனைச் சிறப்பிக்கிறது.

இவன் தன் பகைவேந்தரை வென்று அழித்துப் பெருமை இழக்கச் செய்ததோடன்றி அவர் உரிமை மகளிரைக் கவர்ந்து, அவர்கள் கூந்தலைக் களைந்து, அக்கூந்தலால் கயிறு திரித்துக்கொண்டான். இதனை,

வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சி[3]...

எனப் பரணர் குறிப்பிட்டுள்ளார். அக்கயிறுகளால் அப்பகைவரின் யானைகளைப் பிணித்தான் என்றும் கூறுவதுண்டு.

பகையரசன் ஒருவன் நன்னனின் அரணை முற்றுகையிட்டபோது அவனை நன்னன் தோற்கடித்தான். தோற்று ஓடிய அரசன் பின்னர்ப் பெரிய படையுடன் மீண்டும் வந்து தாக்கினான். அரணின் உள்ளிருந்தோர் அவனுடன் பொருதற்கு ஆற்றாதிருந்தனர். அப்போது காட்டிலிருந்த நன்னன், அச்செய்தியறிந்து மீள வந்து, பகைவனை வென்று, தன் புகழை நிலைநாட்டினான் எனும் செய்தியை மோசிகீரனார் அகநானூற்றுப்பாடல் ஒன்றில் அறிவிக்கிறார்.[4]

நன்னன் புன்னாட்டின்மீது போர் தொடுத்தபோது ஆய் எயினன் புன்னாட்டினரை 'அஞ்சாதீர்' எனக் கூறித் தன் படையோடு அவர்கட்குத் துணையாய் வந்தான். போர்க்களத்தில் நன்னனுக்குத் துணையாயிருந்த மிஞிலி என்பவனோடு போரிட்டு இறந்தான்.[5]

---

1. அகநானூறு, 9 10
2. பதிற்றுப்பத்து, 40 13-14
3. நற்றிணை, 270 9-10
4. அகநானூறு, 392
5. மேலது, 396 2-6

ஆய் எயினன் பறவைகளிடம் மிகுந்த பாசமுள்ளவன். ஆதலின், ஞாயிற்றின் கதிர்கள், இறந்து கிடந்த எயினனின் உடலைச் சுடாதிருப்பதற்காக, பறவைகள் பலவும் கூடி, தம் சிறகுகளைப் பந்தலிட்டு நிழலை உண்டாக்கிச் சுழன்றுகொண்டே இருந்தனவாம். இவ்வரிய செய்தியைப் பரணர் அகநானூற்றுப் பாடலொன்றில் மனம் நெகிழ்ந்து பாடியுள்ளார்.

................ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை....
ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்கு
அங்கண் விசும்பில் விளங்கு ஞாயிற்று
ஒண்கதிர் தெறாமை சிறகரில் கோலி
நிழல்செய்து [1].......

என்பன அப்பாடலடிகள்.

பெண்கொலை நன்னன்

இவ்வளவு பெருமைக்குரியவனாய்ப் பாடப்பட்டுள்ள நன்னன் பெண் ஒருத்தியைக் கொலைபுரிந்தான் என்னும் இலக்கியச் செய்தியும் உள்ளது. வெள்ளத்தில் அடித்து வந்த ஒரு பசுங்காயைத் தின்றதற்காக நன்னன் அப்பெண்ணைக் கொலைபுரிந்தான். அவள் உறவினர் எண்பத்தொரு யானைகளையும், அவள் நிறைக்குச் சமமான பொன்னாற்செய்த பாவையையும் கொடுத்து வேண்டியும், அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் அப்பெண்ணைக் கொன்றான் எனும் இச்செய்தியை,

புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு, அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் [2]....

எனும் குறுந்தொகைப் பாடலொன்றில் பரணர் குறிப்பிட்டுள்ளார்.

கோசர் என்பார் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் பேசப்பட்டுள்ளனர். அவர்கள் பெருவீரர்கள். அஞ்சாமையும் அறிவுத்திறமும் உடையவர். சொன்ன சொல் தவறாதவர். ஒழுக்கச் சிறப்புடையவர். ஆலமரத்தின் அடியே கூடி நேர்மை தவறாமல் நீதி மொழிகளைக் கூறுபவர்.

தொன்மூது ஆலத்துப் பொதியில் தோன்றிய
நால்ஊர்க் கோசர் வாய்மொழி போல
வாய்ஆ கின்றே[3]....

1. அகநானூறு, 208 : 5, 6, 9-12
2. குறுந்தொகை, 292 2-5
3. மேலது, 13 2-4

இக்கோசர்கள் பெண்கொலை புரிந்த நன்னனைப் பழிவாங்க நினைத்தனர். அதற்காக ஒரு சூழ்ச்சி செய்தனர்.

அகுதை என்பவன் ஆடல் பாடல் வல்ல மகளிர்க்கு மிகுதியாய் யானைகளைப் பரிசிலாய் வழங்கும் பண்பினன்.[1] கோசர்கள் அகவன் மகளிரை அகுதையிடம் அனுப்பினர். அகுதை அவர்கட்குப் பல யானைகளைப் பரிசாய்த் தந்தான். அவர்கள் பெற்று வந்த அந்த யானைகளைக் கோசர்கள் நன்னனுடைய மாமரத்தில் கட்டினர். யானைகள் அம்மாமரத்தை வேரோடு பிடுங்கி அழித்துவிட்டன. இவ்வாறாய்க் கோசர்கள் நன்னனின் மாமரத்தை அழித்தனர். (பெண் இறப்புக்குக் காரணமாய் இருந்த மாமரம் அழிக்கப்பட்டது.) இதனை,

> நன்னன்
> நறுமா கொன்று ஞாட்பில் போக்கிய
> ஒன்றுமொழிக் கோசர் போல
> வன்கண் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே[2]

எனப் பரணர் பாடியுள்ளார்.

நன்னன் பிறந்த நாளினை நாடெங்கும் மகிழ்ச்சிப் பெருக்கோடு கொண்டாடுவர். அப்போது மக்கள் எழுப்பும் ஒலி பேரொலியாய் வெளிப்படும் என மதுரைக்காஞ்சி கூறுகிறது.[3] மக்களால் இவ்வாறு பாராட்டப்பட்டு வந்த நன்னன் பெண் கொலை செய்த பிறகு, பெரிதும் பழிக்கப்பட்டான். புலவர்கள் பெரிதும் இகழ்ந்தனர். பிற்காலத்தில் இளங்கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ எனும் குறுநில மன்னர் இருவர் ஒன்றாய் இருந்தனர். அப்போது அங்குச் சென்ற பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர் இளங்கண்டீரக்கோவைத் தழுவி, இளவிச்சிக் கோவைத் தழுவவில்லை. 'என்னை ஏன் தழுவிக்கொள்ள வில்லை?' என இளவிச்சிக்கோ கேட்டபோது, புலவர், 'நீ பெண்கொலை புரிந்த நன்னன் மரபில் வந்தவன்; ஆதலின் தழுவிலேன்' என்றார்.[4] நன்னன் செய்த பெண்கொலை அனைவராலும் வெறுக்கப்பட்டது.

நன்னன் முடிவு

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்னும் சேர மன்னனுக்கும் நன்னனுக்கும் வாகைப் பெருந்துறை

1. குறுந்தொகை, 298 : 5-7
2. மேலது, 73 2-5
3. மதுரைக்காஞ்சி, 618
4. புறநானூறு, 151

என்னுமிடத்தில் நடந்த போரில் நன்னன் களத்திலேயே இறந்தான்.

இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத்து ஒழிய[1]

எனக் கல்லாடனார் பாடியுள்ளார்.

நன்னனின் காவல்மரம் வாகை; அதனை நார்முடிச் சேரல் வெட்டி வீழ்த்தினான் என்பதைப் பதிற்றுப்பத்து கூறுகிறது.

உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை அறுத்தவன்
பொன்படு வாகை முழுதும் தடிந்து[2]

என்பன அவ்வடிகள்.

இவ்விரு செய்திகளாலும் 'கடம்பின் பெருவாயில்' என்பதும், 'வாகைப்பெருந்துறை' என்பதும் ஓரிடத்தையே குறிக்கின்றன எனத் தெரிகிறது. கடம்பின் பெருவாயில் என்பது நன்னன் ஊர் என்பர், பதிற்றுப்பத்து உரையாசிரியர்.

நார்முடிச்சேரல் வாகை மரத்தை வெட்டினான் எனும் செய்தி மற்றொரு பதிற்றுப்பத்துப் பாட்டிலும் இடம் பெற்றுள்ளது.

சுடர்வீ வாகை அடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்[3]

என்பன அப்பதிற்றுப்பத்து அடிகள்

மலர்மகன் படைப்பு

நன்னன்பற்றிச் சங்க இலக்கியங்களில் கிடைக்கும் செய்திகள் இவை மட்டுமே. நீரில் மிதந்துவந்த மாங்காயைத் தின்றதற்காக நன்னன் ஒரு பெண்ணைக் கொன்றான்; கோசர்கள் அவனுடைய காவல் மரத்தை வெட்டி வீழ்த்தினர் என்பது மட்டுமே இலக்கியங்களில் கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது. இச்செய்தி விதையை நட்டு, படைப்பாற்றல் நீர் பாய்ச்சி, கற்பனை உரமிட்டு, காதல் மரத்தை வளர்த்து, இன்சுவைக் கவிதைக் கனிகளை நமக்குத் தந்துள்ளார், கவிஞர் மலர்மகன்.

நன்னன் கொன்ற பெண் யார் என்பது இலக்கியங்களில் தெளிவாய்க் கூறப்படவில்லை. கோசர்கள் காவல் மரத்தை அழித்தனர் என்பதால் அப்பெண்ணைக் கோசர் இனத்தலைவன் அகுதகோசன் மகள் எனக் கொள்கிறார், இக்காவியப்புலவர்.

1. அகநானூறு, 199 19-20
2. பதிற்றுப்பத்து, பதிகம், 4 7-9
3. பதிற்றுப்பத்து, 40 15-16

நன்னனின் காவல் மரம் வாகை என்றும், மா என்றும், இருவேறு கருத்துகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. கவிஞர் மலர்மகன் வாகை மரத்தைக் காவல் மரமாயும், அதனை ஒட்டியிருந்த மாமரத்தைக் காவல் மரத்துக்கு ஒப்பாகவே நன்னன் போற்றி வந்ததாயும் கொண்டுள்ளார்.

மாங்காயைத் தின்றாள் என்ற ஒன்றுக்காக நன்னன் பெண் கொலை செய்தான் என்றில்லாமல் வேறு கற்பனைக் காரணம் கற்பிக்க மலர்மகன் முனைகிறார். நன்னனுக்கு உதியன், அதியன் என மகன்கள் இருவர் இருந்தனர். அவருள் உதியன் இளவரசனா யிருந்தான். அவன் அகுதகோசன் மகள் கோசமதியைக் காதலித்தான் எனப் படைத்துக்கொள்கிறார். இலக்கியங்களில் நன்னன் மக்கள்பற்றிய குறிப்பெதுவுமில்லை. அரசன் மகன் அரசத் தகுதியில்லாத பெண்ணை மணப்பதா என மனம் புழுங்கிய நன்னன், காதலை முரிப்பதற்கு அப்பெண்ணைக் கொன்றுவிட வேண்டுமெனும் முடிவுக்கு வருகிறான். தானே நீரில் காயை மிதக்கவிட்டு அதனை அப்பெண் தின்றாள் என்று காரணங்காட்டிக் கொல்லச் செய்கிறான். இது மலர்மகன் படைத்துக்கொண்ட கதைப்பின்னல்.

காப்பியக் கதை

பண்டைய சேரநாட்டின் ஒரு பகுதி 'கொண்கானம்' என்கிற கொங்கணநாடு. 'பாழியூர்' அதன் தலைநகர். வேளிர்க் குலத்தில் வந்த 'நன்னன்' அதன் அரசன். அவனுக்கு 'உதியன்', 'அதியன்' என மகன்கள் இருவர்.

நன்னனின் காவல் மரம் 'வாகைமரம்'. அதன் அருகிலேயே தன் மரபினர்க்கு ஆகிவந்த ஒரு மாமரம். இரண்டையும் நன்னன் இரு கண்கள் எனப் போற்றிவருகிறான்.

கோசர்கள் என்று ஓர் இனத்தவர். நன்னனுக்கு உதவியாய் இருப்பவர்கள். அவர்கள் தலைவன் 'அகுதகோசன்'. அவன் மகள் 'கோசமதி'.

இளவரசன் உதியனுக்கும் கோசமதிக்கும் காதல் ஏற்படுகிறது. இதனை அறிந்த நன்னன் அவர்களது காதலை முரிக்கச் சூழ்ச்சியில் ஈடுபடுகிறான்.

வாய்ப்பாகப் போர் ஒன்று அமைகிறது. இளவரசன் உதியனை, நன்னன் போருக்கு அனுப்புகிறான். மன்னனின் சூழ்ச்சியால், கோசமதி நீராடும் ஆற்றுத்துறையில் மாங்காய்

மிதந்துவர, கோசமதி அதை எடுத்துத் தின்றுவிடுகிறாள். காவலர்கள் அவளை மன்னன் அவைக்கு அழைத்து வருகின்றனர்.

காவல் மரத்திற்கு இணையான சிறப்பு பெற்ற மாமரத்தின் காயைத் தின்ற குற்றத்திற்காக நன்னன், கோசமதிக்கு மரண தண்டனை விதிக்கிறான்.

அவைப்புலவர், அமைச்சர், பெண்ணுக்குத் தந்தை அகுதகோசன் ஆகியோர் கோசமதியை மன்னிக்கும்படி வேண்டுகின்றனர். நன்னன் மறுக்கிறான்; மரணதண்டனையை உறுதி செய்கிறான்.

அந்த அதிர்ச்சியில் பெண்ணுக்குத் தந்தை அகுதகோசன் இறக்கிறான். ஆனாலும், கோசமதி மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

போருக்குச் சென்ற இளவரசன் வெற்றி பெற்றாலும், பகைவரால் வஞ்சகமாய்க் கொல்லப்படுகிறான். அவனது உடல் அரண்மனைக்குக் கொண்டுவரப்படுகிறது.

நன்னன் கதறுகிறான். நீதி தன்னைப் பழிவாங்கிவிட்டது என்பதை அவன் உணர்கிறான்.

கோசர்கள், கோபத்தினால் அந்த மா மரத்தையும் காவல் மரமான வாகை மரத்தையும் வெட்டி வீழ்த்துகின்றனர். அந்த இரு மரங்களின் கட்டைகளைக்கொண்டே இளவரசன், கோசமதி ஆகிய இருவர் உடல்களுக்கும் சிதை அமைத்து எரியூட்டச் செய்கிறான், நன்னன்.

வேறுபாடு

பெண் கொலை செய்த நன்னனுக்கு முன்னர் நன்னர் எண்ணற்றவர் ஆண்டுள்ளனர். அவர்கள் புலவர்களால் போற்றப் படும் சிறப்புடையவராயிருந்தனர். இந்நன்னன் அவர்களினின்று வேறுபட்டுப் பண்பாடு குறைந்தவனாய் இருந்தான் என்கிறார், மலர்மகன். இவன் பெண்கொலை புரிதற்குரிய கொடுமனம் படைத்தவன் என்பதை ஆங்காங்கே குறிப்பிடுகிறார்.

நன்னனைப்பற்றிய பாடல்களுள் பெரும்பாலானவை பரணரால் பாடப்பெற்றவை. பெண்கொலைபற்றிப் பாடியுள்ள பரணரே, பிற பாடல்களில் அவனைப் பெருமைப்படவே பாடுகிறார். மக்கள் போற்றும் மன்னனாய்த்தான் இருந்திருக்கிறான்: என்ன காரணத்தாலோ பெண் கொலை செய்வித்திருக்கிறான். இச்செயல் ஒன்றைத் தவிரப் பிற வகைகளில் அவனைத் தீயவன் என ஒதுக்க முடியாத நிலையில் இலக்கியப் பாடல்கள் அமைந்துள்ளன. ஆயினும், பெண்ணைக் கொன்றவன்

என்பதாலே அவனைத் தீயவனாகவே காண்கிறார், படைப்பாசிரியர். போரில் கவர்ந்து வந்த பொருள்களைக் கொடையாய் ஈந்தான் எனப் புலவர்கள் பாடியுள்ளனர்; அதைக்கூட, ஏமாந்த மக்கள் போற்ற வேண்டுமென்பதற்காகச் செய்தான் என இக்காவிய ஆசிரியர் கூறுகிறார். போர்செய்து பொன்னைக் கொண்டுவந்து தருவது நல்லறம் அன்று எனப் புலவர்கள் அறிவுறுத்தியதாயும் சொல்கிறார். ஆனால், அதற்கான சான்றுகள் பண்டைய இலக்கியங்களில் காணப்பெறவில்லை. பெண்கொலை செய்வித்ததன் பின்னரே அவன் புலவர்களின் வெறுப்புக்கு ஆளானான்.

காப்பிய நலன்கள்

காப்பிய நலன்கள் அனைத்தும் பொருந்தும் வகையில் மலர்மகன் இக்குறுங்காவியத்தைப் படைத்திருக்கிறார்.

தமிழ் மணம்

காவியத்தை அறுசீர் விருத்தங்களால் தமிழ் மணம் கமழ இயற்றியுள்ளார். தமிழ்மீது கவிஞர் கொண்டுள்ள காதல் அளவிடற்கரியது. தமிழின் தொன்மையை இராவண காவியத்தில்,

உலகம் ஊமையா உள்ள,அக் காலையே
பலக லைப்பயன் பாங்குறத் தாங்கியே
இலகி இன்று'நாம்' என்னும் மொழிக்கெலாம்
தலைமையாம் தமிழ்த்தாய்[1]...

என்பார், புலவர் குழந்தை.

மலர்மகன் உலக முதல்மொழி தமிழே என்பதை வலியுறுத்தும் காப்பிய முதல் பாடலில்,

ஒருமொழி வைத்து இந்த
  உலகினை ஆண்ட காலம்;
பிறமொழி வளரா முன்பே
  பெற்றனம் சங்க காலம்[2]

என உளம் சிலிர்க்கப் பாடி மகிழ்கிறார்.

நயவுரைகள்

கவிஞர்கள் செய்திகளை நயமாய்ச் சொல்லுவதில் வல்லவர்கள். 'காதல் மரத்தில்' கவிஞர் நயவுரைகளாகிய எண்ணப் பூக்கள் பலவற்றைப் பூக்கச் செய்துள்ளார். மணம் செறிந்து மனம் மயக்கும் பூக்களாய் அவை மலர்ந்துள்ளன.

---

1. இராவண காவியம், தமிழ் வாழ்த்து, பாடல் 1
2. காதல் மரம், பக். 47

ஆண் பிள்ளை பிறப்பான் என்று ஆவலோடிருந்தபோது பெண்பிள்ளை பிறந்தது என்பதைச் சூரியன் எழுவான் என எதிர்பார்த்த வேளையில் நிலவு தோன்றிவிட்டது என நயம்படக் கூறுகிறார்.[1]

.... மோக
முடிச்சுகள் முழுதும் கொண்ட
முதிராத இளைய மேனி[2]

எனப் பெண்ணின் இளமையையும் அழகையும் எழுத்தோவிய மாக்குகிறார்.

மணிமேகலையின் அழகைக் கூறும்போது 'தேன் உண்டால்தான் இனிக்கும்; இம்மணிமேகலையோ கண்டாலே தித்திக்கும் தேன்' என்பார், பாவேந்தர் பாரதிதாசன்.[3] அவர் வழியினரான மலர்மகனோ கோசமதி,

அழகுக்கு அழகு! அவளின்
நிழலதும் அழகு[4]

என்கிறார். 'நிழலும் அழகு' என்பது நினைக்க நினைக்கச் சுவை கூட்டுகிறது.

கடலின் நிறம், நீலம்; அதிலுள்ள முத்து, வெள்ளை. ஆனால், பெண்ணின் கண்ணாகிய கடலோ வெள்ளை; அதில் உள்ள மணியோ (முத்தோ) நீலம். நீலத்தையும் வெள்ளையையும் மாற்றி மாற்றித் தூரிகையை ஓட்டியிருக்கிற நேர்த்தியே நேர்த்தி![5]

காதலி, காதலனைத் தன் நெஞ்சுள்ளே வைத்திருக்கிறாள். உள்ளிருக்கும் அவனுக்கு வியர்க்குமே என்பதால் இமைகளால் விசிறிக்கொண்டேயிருக்கிறாளாம்! கண் படபடப்பதற்குக் கவிஞர் காட்டும் அழகு இது.

மார்பினில் அணைத்த உம்மை
மனத்தினில் அணைத்தேன்; உள்ளே
வேர்த்திடும் என்றெப் போதும்
விழிகளால் விசிறுகின்றேன்[6]

கரும்பு இனிப்பு; அக்கரும்பால் அடிப்பதாலேயே பெருங்காயம் இனிப்புப் பெற்றுவிடுமா என்ன?

1. காதல் மரம், பக். 61
2. மேலது, பக். 69
3. பாரதிதாசன், மணிமேகலை வெண்பா, 41
4. காதல் மரம், பக். 62
5. மேலது, பக். 74
6. மேலது, பக் 80

கரும்பால் அடிப்ப தாலே
காயம் இனிப்ப துண்டோ?[1]

காதலன் காதலியின் வளைந்த புருவத்தைத் தொட்டான்; அதுவரை நிமிர்ந்து நின்ற அவள், அவன் தொட்டதும் நாணி வளைந்து நின்றாள். அதனைக் கவிஞர்,

மன்மதன் வில்லை வைத்து
மறந்துபோய் விட்டா னென்று,
கன்னியின் புருவம் தொட்டான்;
கரும்பே வில்லாய் ஆனாள்![2]

எனக் சுவைபடக் கூறுகிறார். மன்மதன் வில், கரும்பு. அவள் தொட்டதும் கரும்புமேனி வில்லாய் வளைந்தது.

கற்பனை

நிலம் ஒரு மகள். மலைகள் அவள் கொங்கைகள். கொங்கைகள் மூடப்படாதிருப்பது கூடாதே! அதனால் நிலமகள் மேகங்களை அள்ளி அவற்றை மூடிக்கொண்டாளாம். மேகங்கள் மலைகளில் படிந்து அவற்றை மூடியிருப்பதை மலர்மகன் இவ்வாறாய்க் கற்பனை செய்துள்ளார்.

'நிலமகள் மார்பு இந்த
நெருங்கிய மலைகள்' என்ற
புலவனின் புனைவுப் பாட்டு
பூங்காற் றுகூறக் கேட்ட
நிலையினை எண்ணி நாணி
நிர்வாண அழகை – வானில்
அலைகிற மேகக் கந்தை
அள்ளியே மூடும் மலைகள்.[3]

மலைகளை நிலமகள் மார்பு என்று கவிஞர் கூறுவது,

அலைநீர் ஆடை மலைமுலை ஆகத்து...
....மண்ணக மடந்தை[4]

எனும் சிலப்பதிகார அடிகளையும்,

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமிசைத் துயல்வரூஉம் ஆரம் போல[5]

எனும் சிறுபாணாற்றுப்படை அடிகளையும் நினைவுக்குக் கொண்டுவருகிறது.

1. காதல் மரம், பக். 81
2. மேலது, பக். 83
3. மேலது, பக். 48
4. சிலப்பதிகாரம், இந்திரவிழவூர்., 1-2
5. சிறுபாணா., 1-2

அந்தி வானத்தின் செம்மை நிறத்தைக் கண்டு, 'ஐயோ, வான் எரிகிறதே! தீ வைத்தவர் யாரோ' என்று மந்திகள் கூடிக் கடல்நீரை வாரி வாரி இறைக்கின்றன. அந்தி மறைந்து செந்நிறம் மாறியது; தீ அணைந்தது என மகிழ்கின்றன.

அந்தியின் வானச் செம்மை
    அக்கினிச் சிவப்பைக் கூட்ட
செந்தீ வைத்த வன்யார்
    சிவந்துவான் எரியு தென்று
மந்திகள் கூடிக் கடல்நீர்
    மட்டின்றி இறைக்கும்; அங்கே
அந்தியும் சாய்ந்த தால்,தீ
    அணைந்தது என்றே மகிழும்.[1]

உவமை

கவிஞர்கள் தாம் கூறப்புகுவன மக்கள் மனத்தில் நன்றாய்ப் பதிய வேண்டுமென்பதற்காக உவமைகளைக் கையாளுகின்றனர். உவமைகள் புலவர்பால் வெளிப்படும்போது உயரிய கருத்துகளை வெளிப்படுத்துவனவாகின்றன. மலர்மகன் இக் காப்பியத்தில் சிறப்பான உவமைகளைப் பொருத்தமாய்ப் பயன்படுத்தியிருக்கிறார்.

ஆற்றில் நீர் நிறைந்து ஓடுகிறது. எப்படி?

கற்றவர் மனத்தில் ஊறும்
    கருத்துகள் போலும்[2]

ஓடுகிறதாம். இவ்வுவமைக்கு உவமையாய் மலர்மகன் மனத்தில் ஊறும் கருத்துகளையே காட்டலாம்.

செருப்பிடை சிறுகல் போலச்
    சிக்கியே நாளும் தொல்லை
தருகிற துளுவன்[3]....

துன்பமுறும் போதெல்லாம் இவ்வுவமையை நம்மால் நினைக்காமல் இருக்கமுடியாது.

நன்னன் பெயர் கேட்ட அளவிலேயே பகைவர்கள் ஓடுவார்கள். அவனும் அவர்களை விடாது விரட்டியடிப்பான்.

காளையைப் போல அவனும்
கன்றுகள் விரட்ட லானான்.[4]

பகைவர்கள் நன்னன் எதிர்வர மாட்டார்கள் என்பதற்கு,

1. காதல் மரம், பக். 67
2. மேலது, பக். 50
3. மேலது, பக். 84
4. மேலது, பக். 55

பத்துக்கால் இருந்தும் – நண்டு
பக்கவாட் டில்தான் நடக்கும்
எத்தனை பேர்என் றாலும்
எதிர்வர மாட்டார் யாரும்[1]

என அவர் காட்டும் உவமையிலிருந்து, உயிரினங்களின் இயல்புகளை எவ்வளவு ஊன்றிக் கவனிப்பவர் என்பதை அறியமுடிகிறது.

மங்கையரின் வளர்ச்சிப் படிநிலைகளை ஆற்றோடு சேர்த்து உருவகித்துக் காட்டுகிறார். ஓடை, மலையின் மடியில் தவழும் குழவி; தலைகீழாய்க் குதிக்கும் அருவி, துள்ளுகின்ற குமரி; ஆற்றின் அமைதியான இயக்கம், அன்னை. குழந்தை தவழ்தலையும், குமரி துள்ளுவதையும், அன்னையின் அமைதியையும் ஆற்றின் படிநிலைகளாய் உருவகித்துப் பருவங்களின் தன்மை உள்ளது உள்ளவாறே காட்டப்பட்டுள்ளது.[2]

இலக்கணக்குறிப்பு

இலக்கணக்குறிப்புகளைக் கவிதையில் பெய்து எழுதுவது பெரும்புலவர்களாலேயே இயலும். இக்காவியத்தில் மலர்மகன் இலக்கணக் குறிப்புகள் பலவற்றைக் கவிதையில் நேர்த்தியாய்ப் புனைந்துள்ளார்.

வெண்பாவில் முதன் மூன்றடிகள் ஒவ்வொன்றும் நான்கு சீர் கொண்டவை; கடைசி அடி ஒரு சீர் குறைந்ததாயிருக்கும். முன்னிருந்தவர்களைவிட, இக்காவியத் தலைவன் நன்னன் பண்பாட்டில் ஒருபடி குறைந்திருந்தான் என்பதை,

பண்பா டென்ப தெல்லாம்
படும்பா டிவனி டத்தில்
வெண்பா ஈற்றடி போல
ஒருசீர்க் குறையி வனுக்கு[3]

என வெண்பா இலக்கணம் கொண்டு விளக்குகிறார்.

நன்னன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் பகைவர் மறைந்தோடுவர் என்பதை,

உயிர்வரின் மெய்விட் டோடும்
உக்குறள் போல[4]

என்றும், காதலின் நிலையை,

1. காதல் மரம், பக். 78
2. மேலது, பக். 50
3. மேலது, பக். 54
4. மேலது, பக். 55

வேற்றுமை உருபு போல,
வெளிப்படா திருந்த காதல்'[1]

என்றும், காதலர் இருவரும் பிரித்துப் பார்க்க முடியாத வராயிருந்தனர் என்பதை,

இருவரும் காத லாலே
இரட்டைக் கிளவி ஆனார்[2]

என்றும் அமைந்துள்ள இலக்கணக்குறிப்புகள் இலக்கியத்தில் இனிக்கின்றன.

கடிதம் எழுதுவதில் புதுமை

இலக்கியத்தில் முதன் முதலாய்ச் சிலப்பதிகாரத்தில் மாதவி எழுதிய காதல் கடிதத்தைக் காண்கிறோம். அதன் பின்னர்ப் பல எழுதப்பட்டுள்ளன. ஆனால், காதலி காதலனுக்கு எழுதும் கடிதத்தில் மலர்மகன் செய்துள்ள புதுமை வியக்கத்தக்கதா யுள்ளது. காதலியின் உள்ளம் எழுதும் கடிதம் காற்றில் தூதாய் ஓதிவிடப்படுகிறது.

என்னைக் காண வரும்படி – நான்
எழுதவில்லை இம்மடல்.

காதலன் தன்னைக் காண வரும்படி எழுதவில்லையாம்! பின் கடிதம் எதற்கு? 'என் அன்புத் தோழியர் ஐவரும் உமை எதிர்பார்த்துக் கிடக்கின்றனர். அவர்கட்காய் வாருங்கள். என் கண், காது, மூக்கு, வாய், மெய் எனும் ஐந்து தோழிகளும் மயக்கத்தில் தவிக்கின்றனர்.

நீ.....
ஐவருக்கும் நாயகன், அவர்
ஆசைகளை அறிந்தவன் – அந்த
ஐவர்க்கும் அருளுக, இனி,
அவர்சுகமே என்சுகம்[3]

எனக்காக அன்று; அந்த ஐவர் அன்புக்காக வாருங்கள் என்றெழுதும் திறம், காதலனை மயக்குகிறதோ இல்லையோ நம்மை மயக்குகிறது.

அவலப்பிழிவு

காவியத்தின் இறுதியை அவலப்பிழிவாய் ஆக்கியிருக்கிறார். நன்னன், பெண்ணைக் கொலை செய்தான்; கோசர், வாகை மாமரங்களை வெட்டினர்; வெற்றி பெற்றுத் திரும்பிய நன்னன் மகனைப் பகைவர் வஞ்சகமாய்க் கொன்றனர். யாருக்காக

1. காதல்மரம், பக். 75
2. மேலது, பக். 75
3. மேலது, பக். 87-88

பெண்கொலை செய்தானோ அந்த மகன் கொலையுண்டான். என் செய்வான்? துள்ளினான்; துடித்தான். எந்த இருமரங்கள் அவனுக்கு உயர்வானவையோ, அந்த மரங்களைச் சிதையாக்கி அதன்மீது இருவர் உடலங்களையும் வைத்துத் தீ மூட்டினர். சுழன்றெழுந்தது தீ. எவரைப் பிரிக்க எண்ணினானோ அவ்விரு வரையும் தீ ஒன்றாக்கி எரிக்கிறது! எரிந்து என்ன செய்ய? எரிந்த பண்பாடு திரும்பவா போகிறது?

வாழ்க! வளர்க!

மறைந்த கவிஞர் தாராபாரதியை மறப்பவர் எவருமிலர். மலர்மகன் அவர் தமையனார்; தம்பிக்காய்த் தாம் அரைபட்டு மணம் தந்த சந்தனம். அண்ணன் வழி தம்பி என்பர்; ஆனால், இந்த அண்ணனோ தம்பி வழியைத் தம் வழியாய்க் கொண்டவர். தம்பி நடந்த வழி முடிவடைந்துவிடக்கூடாது என்பதற்காகவே அந்த வழியில் நடைபோட முன்வந்துள்ளார். அதன் விளைவே இவர் கவிதை நூல்கள்! அடுத்த பிறவி உண்டு என்பதில் நம்பிக்கை இருக்குமானால், அந்தத் தம்பி இந்த அண்ணனுக்காய்த் தம்மைக் கரைத்துக்கொள்வார் என்பது உறுதி.

தாராபாரதி, மலர்மகன் போன்ற படைப்பாளர்கள் உருவாக அடித்தளம் அமைத்தது, இலக்கிய வீதி; அந்த வீதியின் சுற்றுச் சூழலைப் பேணிக் காத்துத் தூய்மைக்கோர் எடுத்துக்காட்டாய் அதனைக் காத்து வருகிறார், அருமை நண்பர் இனியவன். 'வீதிக் குடும்பம்' ஒரு வெற்றிக் குடும்பம். 'வீதிக் குடும்பம்' ஒரு திறந்த வெளிப் பல்கலைக் கழகம். இப்பல்கலைக் கழகம் தொடர்ந்து பட்டதாரிகளை, மேதைகளை உருவாக்கிக்கொண்டே இருக்கட்டும்!

வீதியின் இருமருங்கும் 'காதல் மரங்கள்' போல இன்னும் எண்ணற்ற மரங்கள் தோன்றி இன்னிழல் பரப்பட்டும்.

தாராபாரதியின் நினைவு என்றும் நிலைக்கட்டும்!

மலர்மகனின் புகழ் மேலும் மேலும் உயர்ந்தோங்கட்டும்!

இனியவன் தொண்டு எல்லையற்றதாய் விரியட்டும்!

நூல் ஆக்கம்	கவிஞர் மலர்மகன்
வகைமை	குறுங்காவியம்
வெளியீடு	இலக்கிய வீதி வெளியீடு, வேடந்தாங்கல். (2003)

(13)

உயிர்ச்சுடர்

கவிஞர் கலைப்பொழிலன் அவர்கள் 'உயிர்ச்சுடர்' என்னும் இக்குறுங்காவியத்தை அகப்பொருள் துறைவழி நின்று அருமையாய் யாத்திருக்கிறார். இந்நூல் காட்சியியல், களவியல், கற்பியல் என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

காணுங்காட்சி

நல் இளைஞன் ஒருவனும் நங்கை ஒருத்தியும் ஒருவரை யொருவர் எதிர்ப்படுதல் காட்சியாம். குளப்படியில் பாசி வழுக்கியதால் நீரில் விழுந்த சுடரொளியை, நம்பி கை கொடுத்துக் கரையேற்றுகிறான். ஒருவரையொருவர் காணுகின்ற இக் காட்சியுடன் காப்பியம் தொடங்குகிறது. அவர்களிடையே காதல் மலர்கிறது. ஒத்த அன்புடையராய். உள்ளங்கலந்து உறவு கொள்ளுகின்ற இயற்கைப்புணர்ச்சி நிகழ்கிறது.

களவுக்காட்சி

காதலர்கள் தம்முள்ளே காதல் கொண்டு ஊரறியாவண்ணம் உறவாடி வருவது, களவியல் ஆகும். நம்பி-சுடரொளி காதல் வளர்கிறது. மாமன் மகளை மணந்துகொள்ளுமாறு நம்பியை அவன் தாய் வற்புறுத்துகிறாள். சுடரொளியை அவள் அத்தை மகனை மணக்குமாறு அவள் தந்தை கட்டாயப்படுத்துகிறார். நம்பியின் தந்தையும் தங்கையும், சுடரொளியின் இல்லத்தில் இருந்துவந்த அவள் அத்தையும் அவ்விருவரின் காதலை ஊக்குவித்துத் துணை நிற்கின்றனர். அக இலக்கியங்களில் சொல்லப்படும் பாங்கன் கடமையை நம்பி தந்தையும் தங்கை யும், தோழியின் கடமையைச் சுடரொளி அத்தையும் ஆற்று பவர்களாய் விளங்குகின்றனர். காதலர்கள் தடைகளை மீறிப் பதிவுத் திருமணம் செய்துகொள்ள முடிவெடுக்கின்றனர்.

கற்புக்காட்சி

களவொழுக்கம் மேற்கொண்ட காதலர்கள் திருமணம் முடித்து இல்லறத்தை இனிதே மேற்கொள்ளுவதைக் கூறுதல்

கற்பியல் ஆம். இக்கதையில் காதலர்கள் மணம் முடிப்பவர்களாய் அமைக்கப்படவில்லை. கொடுமை செய்யும் தந்தையிடமிருந்து சுடரொளியை மீட்க நம்பி அவள் இல்லம் வருகிறான். அவனைக் கண்டு வெகுண்ட சுடரொளியின் தந்தை அவனை வெட்டி வீழ்த்த வேகமாய் முற்படுகிறார். அதனைத் தடுப்பதற்கு இடையிலே பாய்ந்த சுடரொளி அதிர்ச்சியின் தாக்குதலால் இறந்து வீழ்கிறாள். அவளது முடிவைக் கண்ட நம்பியும் அவள்மீது வீழ்ந்து இறந்து படுகிறான். காதலர் இருவரும் மணந்து வாழ இவ்வுலகில் தடை நேர்ந்தபோதிலும் இறப்புலகில் இருவரும் ஒன்றிணைந்து நிறைவு காண்கின்றனர்.

காதல் கரம்கோத்துக் ககனம் வருவோரை
நாங்கள் வரவேற்போம் நல்வாழ்த்துக் கூறுவோம்,
காற்றே வாகனமாய்க் காதலன்பே சீதனமாய்
மாற்றே குறையாமல் மகிழ்ந்துலா வருவோம்;
தோற்போர் யாமில்லை; பாசமிலாப் பெற்றோரே!
போம்போம் கதறாதீர், – யாம்போகின் றோமே! (பக். 145)

எனக் காதலர்கள் இறந்து விடைபெற்றுச் செல்லும் அவலச் சுவையுடையதாய்க் கற்பியலைப் புதிய வகையில் படைத்துக் கொண்டுள்ளார், இந்நூலாசிரியர்.

மரபும் மாண்பும்

ஆசிரியர் அகப்பொருள்துறைச் செய்திகளை நூலில் பொருத்தமுற ஆண்டு, பொலிவு சேர்த்துள்ளார். பகற்குறி, பகற்குறி இடையீடு, இரவுக்குறி, இரவுக்குறி இடையீடு, அல்லகுறிப்படுதல், இற்செறிப்பு ஆகிய செய்திகளை இன்றைய நிலைக்கேற்பச் சிறப்பாய்ப் படைத்துள்ளார். சான்றுக்கு ஒன்று இயற்கைப் புணர்ச்சியின் பின் நீங்குகின்ற தலைமகனைத் தோழி, "ஐய! உன் சொல்லை, வாய்மையாய்க் கொண்ட என் சொல்லைத் தெளிந்து தலைவி நினக்கு உற்ற துணை ஆயினாள். நீ பிரிந்து போகின்றமை யால் அவள் தன் புது நலனிழந்து இப்பொழுதே தனிமைத் துன்பத்தை உடையவள் ஆயினள். அவள் நிலையறிந்து அதோ தோன்றுகின்ற சிற்றூரின்கண் அடிக்கடி நீ வந்து அவளைக் காண்டல் வேண்டும்" என்று கூறுகிறாள்.

இவளே
நின்சொல் கொண்ட என்சொல் தேறிப்
புதுநலன் இழந்த புலம்புமார் உடையள்
உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்
நிலவும் இருளும் போலப் புலவுத்திரைக்

கடலும் கானலும் தோன்றும்
மடல்தாழ் பெண்ணைஎம் சிறுநல் ஊரே

என்பது குறுந்தொகைப்பாடல் (81). "இனி நீ எம்மூர்க்குத் தாராள மாய் வரலாம், அதோ பார்! நிலவையும் இருட்டையும் போல அலை வீசும் கடலும் அதன் கரையில் சோலையும் கொண்டுள்ள எம் சிற்றூர்க்கு அடிக்கடி வந்து தலைவியின் தனிமைத் துயரைப் போக்கவேண்டும்" எனத் தோழி குறியிடம் (தலைவன் தலைவி சந்திப்பதற்கான இடம்) கூறும் பாடல் இது. இம்மரபொற்றிக் கதைத்தலைவி சுடரொளி, தலைவனாம் நம்பியிடம்

அன்பரே! என்பெயர் அடியவள் சுடரொளி;
இந்தஓர் பிறவியும் நீரேஎன் உயிரொளி;
மேலைத் தெருவிலே மேல்பக்க வாடையில்
ஏழை என்வீடு; எதிரே பூவரசம்;
குறடு திண்ணையுண்டு; கொஞ்சம் பந்தலுண்டு;
உறவு என்றுசொல்ல அத்தை ஐயனுண்டு;
பக்கத்து வீடு பச்சைநிற மாயிருக்கும்" (பக். 28)

என்று தன்னைச் சந்திக்கக் குறியிடம் கூறுவதைப் பண்டைய அகப்பொருள் நூல்கள் வழிநின்று ஆசிரியர் அருமையாய்ச் செய்துள்ளார். இவ்வாறே பல்துறையும் பாங்குற அமைந்து காப்பியம் முழுமை பெற்றுள்ளது.

முன்னோர் மொழி

முன்னோர் மொழிபொருளையும் பொன்னேபோல் ஆசிரியர் எடுத்தாண்டு சிறப்பிக்கிறார். திருக்குறள் பெருமளவில் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை
குறள் அறிவை நீ (பக். 69)

என்பது போன்று, குறளை முற்றிலுமாய் எடுத்தாளுகின்ற இடங்களும்,

'தொட்டால் குளிரும் தொடாதீர்' என்றேன்
'விட்டால் சுடுமே விருப்பமோ' என்றாள்

என்பது போன்று, குறள் கருத்துகளை எடுத்தாளுகின்ற இடங் களும், ஆக முப்பதுக்கு மேற்பட்ட குறட்பாக்கள் பொருத்தமுற ஆளப்பட்டுப் பொலிகின்றன. தொல்காப்பியம்முதல் இந் நூற்றாண்டின் சிறந்த இலக்கியம்வரை பல நூல்களின் தொடர்களையும் கருத்துகளையும் தம் கவிதையில் பொன்னிடை மணியெனப் பதித்து அழகியதோர் அணிகலனாய்க் கவிஞர் இந்நூலை ஆக்கியுள்ளதைக் காண முடிகிறது.

அலையிடைப் பிறந்த அமிழ்தே! அழகே!
மலையிடைப் பிறந்த மணியே! அணியே! (பக். 54)

என்னும் அடிகளில் இளங்கோவடிகளையும்;

எண்ணரும் நலத்தினாள் எழிற்சுடர் உன்சுடர் (பக். 146)

என்னும் அடியில் கவிச்சக்கரவர்த்தி கம்பரையும்,

நாழி முகக்காது நானாழி, அதுபோல்
ஊழின் படியன்றி உயிர்க்குறுதி இல்லை (பக். 144)

என்னுமடிகளில் ஔவையாரையும்,

மாசில் வீணையே! மாலை மதியமே!
வீசும் தென்றலே! வீங்கிள வேனிலே! (பக். 54)

என்னும் அடிகளில் அப்பரடிகளையும்,

காதல் ஒருவனைக் கைப்பிடித் தாய்அவன்
காரியம் யாவினும் கரங்கொடுப் பாய் (பக். 146)

என்னும் அடிகளில் பாரதியாரையும்,

அன்றிலடி நாமிருவர் அழகும் கலையும்
அன்றன்றும் புதுமையடி அன்பே நீயும் (பக். 55)

என்னும் அடிகளில் பாவேந்தர் பாரதிதாசனையும்,

கத்தியு மின்றி இரத்தமு மின்றி
சத்தியாக் கிரகமாம் கத்தியைக் கொண்டு
சத்தாய்ச் சுதந்திரம் பெற்ற மகாத்மா (பக். 106)

என்னும் அடிகளில் நாமக்கல் கவிஞரையும்,

காலையும் பகலும் கருக்கிடும் மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்
பொழுதினை உணராப் பழுதுடை நிலையினள் (பக். 64)

என்னுமடிகளில் குறுந்தொகைப் பாடலையும்,

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி நின்ற மூத்தமொழி தமிழுடன் (பக். 104)

என்னுமடிகளில் புறப்பொருள் வெண்பாமாலையையும்,

ஐம்புலனை நல்லமைச்சாய் அற்புதமாய் ஆள்பவனை (பக். 126)

என்னுமடியில் நளவெண்பாப் பாடலையும் ஆசிரியர் நம் நினைவுக்குக் கொண்டுவரும் திறம் போற்றற்குரியதாய் உள்ளது. இங்ஙனமே தொல்காப்பியச் சூத்திரங்களும், நம்பியகப்பொருள் பாடல்கள் பலவும் நூலுள் இடம் பெற்றுள்ளன. சுருங்கக்கூறின், சங்கம்முதல் இன்றுவரையான அகப்பொருள் இலக்கியங்களில் நன்கு தோய்ந்து, அவற்றின் பிழிவாய் ஆசிரியர் இந்நூலைத் தந்துள்ளார் என்பது மிகையன்று.

உள்ளங்கவரும் உவமைகள்

அரிய பல உவமைகள் இந்நூலில் ஆங்காங்கே தென்படு கின்றன. சுடரொளி காதலனைப் பார்க்கிறாள்; அத்தையும் அங்கு இருப்பதால் அவனைப் பார்த்தும் பேச முடியாதவளாய்த் துடிக்கிறாள்.

அத்தை உடன்வந்தாள்; அதனாலே என்நிலை
கத்தை முள்பரப்பிக் கால்வைத்தால் போலாச்சு (பக். 16)

என்னும் உவமைமூலம் அவள் துடிதுடிப்பை அழகுறப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

காதலன் மார்பைக் காதலி அணைகிறாள். அதற்கோர் உவமை வேண்டுமா? இதோ கவிஞர் கூறுகிறார்;

பண்பமை யாழொன்று பாணன்கை பட்டவாறு
தேன்மிகத் திரண்டு தும்பிவாய் உற்றவாறு
வெண்ணிலா முகத்தாள்என் விரிமார்பில் பதிந்தாள். (பக். 65)

யாழை மீட்டி மகிழ்வது போல, தேனைச் சுவைத்து மகிழ்வது போல இவ்வுவமையை விரித்து அதன் அழகை நாம் சுவைக்கலாம்.

மாமலை அணைந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவி போலவும்
தேறுநீர் புணரியொடு யாறு தலைமணக்கும் (95–97)

என்பன பட்டினப்பாலை அடிகள். கடலைச் சாரும் காவிரியாற் றுக்குக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் மலையைத் தழுவிய மேகத்தையும், தாய்முலை தழுவிய குழந்தையையும் உவமை கூறினார். இவ்வுவமையில் உள்ளம் தோய்ந்த நம் கவிஞர் மலைமீது முருகன் கோயிலமைந்திருப்பதற்கு இதே உவமையை ஆண்டு மகிழ்கிறார்.

மாமலை அணைந்த கொண்மூப் போல
கோபுரம் பொலியும் கோயிலை அடைந்தோம்! (பக் 53)

நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சுவையான உவமைகள் சில இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

ஓடத் தெரியாத மூட மகன்போல (பக். 67)

பஞ்சுப் பொதியில் பாரைபா யாதுபோல் (பக். 71)

பெருவெளி யிட்ட சிறுசுடர் விளக்கென
இடரிணைப் பட்டுளாள் சுடரொளி (பக் 75)

நமைச்சல் பக்கம் நகரும் கைபோல் (பக். 92)

களவு முடிந்தபின் காவலன் வாரல்போல் (பக். 122)

கொள்ளுமள வின்பம் கொடுக்கும் கல்விபோல்
உள்ளுமளவு நெஞ்சு உவகையில் மிதக்குமே (பக். 143)

இப்படிச் சுவையான உவமைகள் பல, நூலுக்கு அணி சேர்க்கின்றன.

வினாக்கள்

வினாக்களை எழுப்புவதன்வாயிலாகவும் அரிய விளக்கங்களை உய்த்துணர வைக்கிறார், ஆசிரியர். சுடரொளியின் காதலை அவள் தந்தை மாற்ற நினைக்கிறார்; அடைக்க நினைக்கிறார். அதனால் காதல் வேகம் அடைபட்டுவிடுமா என்ன; வேகமாய்ப் பீறியடிக்கும் ஊற்றினைப் பிஞ்சுக்கைகளால் தடுக்க முடியுமா எனக் கவிஞர் வினாவெழுப்பி உண்மைக் காதல் அடக்க முடியாதது என்பதைப் புலப்படுத்துகிறார்.

பீறிடும் ஊற்றினைப் பிஞ்சுக்கை தடுக்குமோ? (பக். 94)

என்பது கவிஞரின் பொருள் பொதிந்த கேள்வி.

சூடி எலியினம் கொல்லுமோ பூனையை? (பக். 36)
கண்ணில் கறையானால் காண்பது இருள்தானே? (பக். 136)
பெண்தான் முனைந்தால் பெரியதும் உளதோ? (பக். 21)
திரட்டுப்பால் வேண்டாக் குருட்டுப்பயல் உண்டோ? (பக். 115)
முறைதவறிச் சென்றவர் மூன்றுல காண்டாளும்
நெறிவிட் டவரென்று நீக்கிடுவா ரன்றோ? (பக். 69)

என்பன போன்ற சுவையான வினாக்கள் இந்நூலில் பல உள்ளன.

பழமொழிகள்

நாட்டு வழக்கிலுள்ள நயமான பழமொழிகளையும் ஆங்காங்கே புகுத்திக் கதைக்குச் சுவை கூட்டுகிறார்.

பாம்பறியும் பாம்பின கால். (பக். 40)
மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை. (பக். 71)
கெட்டார்க்கு நட்டார் இல். (பக். 88)
திங்களை நாய்குரைத்தால் திணறுமோ? (பக். 102)
நாய் பெற்ற தெங்கம் பழம். (பக். 120)

என்பன இந்நூலுள் இடம் பெற்றுள்ள சிறந்த பழமொழிகள்.

நயங்கள்

வருணனைகள், கற்பனைகள், செய்தி விளக்கத் திறன் ஆகியவை நயம் நிறைந்தவையாய்த் திகழ்கின்றன.

பெண்ணை,

மின்னொன்று பெண்ணாகி மண்ணிலே பிறந்தவள் (பக். 24)

என்கிறார், அவள் உதடுகளின் செம்மை நிறத்தையும், இனிமைப் பயப்பினையும், மயக்கும் திறத்தினையும் ஒன்றிணைத்து,

ஆரஞ்சுச் சுளையிரண்டு அழகாய் வடிவமைந்து
ஓரஞ்சு புலன்களை உன்மத்த மாக்குமிதழ் (பக். 11)

எனக் கவிதை வடிக்கிறார். காதலனுக்குக் காதலியின் இதழ் தரும் சுவையைவிட, கவிஞரின் இக்கவிதை அடிகள் மிகுசுவை யளித்தாலும் வியப்பில்லை.

நம்பி தன் தாயிடம் அவள் கூறும் பெண்ணை மணக்க இயலாமையைச் சொல்லித் தான் காதலிக்கும் சுடரொளிபற்றிக் குறிப்பிடுகின்றான். தாய் உடனே கொதித்துக் குமுறி வெடித்துப் பேசுகிறாள். நம்பி தன் காதல்பற்றிச் சொன்னானாம்! அவ்வளவுதான்,

ஐப்பசி வானின் ஆர்ப்பாட்டம் உடனே (பக். 56)

என்கிறார், நயமாய்! ஐப்பசியில் வானம் பேரிடி முழங்கி, மின்னிப் பெருமழை கொட்டும். மகனின் பேச்சைக் கேட்டு வெகுண்டுரைத்த தாயின் பேச்சு 'ஐப்பசி வானின் ஆர்ப்பாட்டம்' எனப்படுகிறது.

சுடரொளியும் அவள் அத்தையும் இரவில் படுத்தனர். மனச் சுமையேதுமின்றி அத்தை உடனே துயின்றாள். காதலால் துடித்த சுடரொளிக்குத் தூக்கமில்லை. இதனைக் கவிஞர் நயமாய்,

படுத்தோம்; என்மேல் பரிவுறா உறக்கம்
அடுத்துள அத்தைமேல் ஆட்சி செய்தது (பக். 121)

என்கிறார். இவள்மீது பரிவு காட்டாத தூக்கம் அத்தைமீது ஆட்சி செய்ததாம்!

உலகில் பகுத்தறிவற்ற உயிரினங்கள் சிறந்த காதல் வாழ்வை நடத்துகின்றபோது ஆறறிவு படைத்த மனிதன் அதனை வெட்டிப் பிரிக்கிறானே, இஃதென்ன கொடுமை என உள்ளம் நெகிழ்கிறார், கவிஞர்,

சிட்டுக் குருவிபார் செய்யும் குறும்புபார்
பெட்டையும் ஆணுமாய்ப் பிணையும் பேறுபார்
புன்னை மரத்தாடும் அன்றிலைப் பார்,அவை
ஒன்றிச் சுகித்தாடும் ஒப்பிலா வாழ்வைப்பார்
அட்டி அதற்கில்லை; அய்யகோ! நமைத்தான்
வெட்டிப் பிரிக்கின்றார் வேல்நீட்டிப் பாய்ச்சுகிறார் (பக். 77)

என்னும் வேதனைக் குரல் நியாயமானதுதானே!

இந்த வேதனையைப் போக்குவதற்கான தீர்வையும் கவிஞர் தரத் தவறவில்லை :

சாதித் திமிங்கலத்தைச் சாடி யெதிர்த்தால்தான்
காதல் கடலிலே கைகோத்து நீந்தலாம்

என்பது கவிஞரின் கணிப்பும் உண்மை நிலையுமாம்.

சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு கவிஞர் மனம் புழுங்குகிறார். இறைவன் குடியிருக்கும் கோயிலில்கூடவா இந்த ஏற்றத்தாழ்வு! வசதி படைத்தோர், செல்வாக்குப் படைத்தோர் குறுக்கு வழியில் சென்று வழிபடவும், ஏழைகளோ வரிசையில் காத்துக் கிடக்குவுமான இழிநிலை இறைவனின் முன்னரே நடப்பதா?

தர்ம தரிசனத்தில் தகுதி தரிசனம்
ஆவது மறியீரோ? ஆலயங் களிலேநீர்
ஐந்தும் பத்துமாய் ஐம்பதும் நூறுமாய்
தெய்வத்தைக் காணவும் தேவை பணம்இப்போ(து) (பக். 135)

கவிஞரின் இந்தக் கூற்றிலுள்ள கொடுமை தீருவது எந்நாளோ?

சிறப்புகள் சில

காவியத்தின் தொடக்கத்திலுள்ள குளத்தின் வருணனை (பக். 9-10) இயல்பானதாயும் சிறந்த சொல்லாட்சியுடையதாயும் அமைந்துள்ளது. நம்பி, சுடரொளி இருவரின் கூற்றுகளாகவே கதையைச் சொல்லியிருப்பது பாராட்டத்தக்கதாயுள்ளது. மேனிலைப் பள்ளியில் 'பெண்ணுரிமை' என்னும் தலைப்பில் கவியரங்கம் நடந்ததாய்க் கூறிக் கவியரங்கப் பாடல்களைக் கதையிடையே புகுத்திப் புதுமை செய்துள்ளார். தொல்காப்பியர் முதல் பாரதிதாசன்வரை காலந்தோறும் தோன்றிய புலவர்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது, தென்றல்விடு தூது (பக். 105-106).

வரதட்சணை இப்போது எங்கும் ஒலிக்கின்ற ஒரு சொல். கவியரங்கப் பெண்ணொருத்தி பாடுவதாய்க் கவிஞர் படைத்து, அதில் வரதட்சணைக்கு எதிர்ச்சொல்லாய் 'வதுதட்சணை' என்ற சொல்லை உருவாக்கிப் புதுமை செய்துள்ளார். ஆண்கள் பெண்களை மணப்பதற்குத் தொகை கேட்கிறார்கள். வரனுக்குத் தட்சணை கொடுப்பது வரதட்சணை. புதுமைப்பெண் கேட்கிறாள் :

உரமிக்க நல்வாழ்வுக் கேங்கும் பெண்ணை
ஊசிவிட்ட பண்டம்போல் விலைக்குப் பேசும்
தரங்கெட்ட மாப்பிள்ளை பெற்றோ ரெல்லாம்
தன்மான மில்லாத மனித ரன்றோ?
கரம்பற்றி வாழ்வளிக்கத் தவறி விட்டுக்
கன்னியிடம் காணிக்கை கேட்கும் இந்த
வரனுக்கு வாழ்வெதற்கு? வதுவின் வீட்டில்
வசதிக்குக் கையேந்தல் ஆண்மை யாமோ?

இப்படிக் கேட்கும் அந்நங்கை, 'இனிப் பெண்கள் படிக்க வேண்டும்; தொழில் கற்க வேண்டும்; ஆண், குடும்பத்தைக் காக்கும் தகுதியுடையவனா அறிஞனா என்பனவற்றையெல்லாம் ஆராய வேண்டும்' என்றெல்லாம் கூறிவிட்டு, இனி,

வரனிடமே தட்சணையைக் கேட்க வேண்டும்!

என்றும், இந்தக் கொள்கையை 'வதுதட்சணை' என்று கொள்வோம் எனவும் முழங்குகிறாள். நமக்கு வரதட்சணையும் வேண்டாம், வதுதட்சணையும் வேண்டாம் என்றாலும், கவிஞர் காட்டியுள்ள சமுதாயச் சீர்கேடுகளை அனைவரும் சிந்தித்துப் பார்க்கும் எண்ணமாவது வேண்டும்.

கதையமைப்பிலும், நிகழ்ச்சிப் படைப்பிலும், கவிதைப் புனைவிலும் ஆசிரியர் பெருவெற்றி கண்டுள்ளார் என்று கூறுவது புனைந்துரையன்று. ஆசிரியரின் தெளிந்த புலமைக்கும் கொள்கைப் பிடிப்புக்கும் இந்நூல் சிறந்த சான்றாகும். இவர் இதுபோன்று இன்னும் பல நூல்களை வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்க்க வேண்டுமெனும் விழைவோடு இக்கவிஞரைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் கலைப்பொழிலன்
வகைமை	குறுங்காவியம்
வெளியீடு	கலைப்பொழிலன் வெளியீடு, குன்றத்தூர். (1988)

14

வேர்ப்பலா

புலவர் பொன்னரசன், 'வேர்ப்பலா' எனும் குறுங் காப்பியத்தைக் காப்பிய இலக்கணம் பொருந்தி அமைய விருத்தப்பாவில் சுவைபட எழுதியுள்ளார்.

காப்பிய நோக்கம்

காப்பியம் எழுதுவதற்கு ஒரு நோக்கம் வேண்டும். இக் காப்பியம் எழுதுவதற்கான நோக்கம் என்ன? கைம்பெண் மணம் பற்றி வலியுறுத்தவே இக்காப்பிய மலர் மலர்ந்துள்ளது.

கணவனை இழந்த பெண்களை - குறிப்பாய், இளம் வயதில் இக்கொடுமைக்கு ஆளானவர்களை சமூகம் அடைத்து வைத்துள்ள துன்பச் சிறையிலிருந்து அவர்களை விடுதலை செய்யக் குரல் கொடுக்கும் காப்பியம் இது.

ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்
    அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
    பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட் கின்றான்;
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
    மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
    பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?

எனப் புரட்சிக்குரல் கொடுத்தார், பாவேந்தர் பாரதிதாசன். அவர் வழியில் நடைபோடும் பொன்னரசன்,

பெண்களுக்குத் தம்கணவன் மாண்டு போனால்
    பின்னரிங்கே தம்மனத்துக் கிசைந்த நல்ல
பண்புடைய மற்றொருவ னோடு சேர்ந்து
    பாங்கான புதுவாழ்வைத் தொடங்கு தற்கும்
கண்டிப்பாய் உரிமைகளைத் தருதல் வேண்டும்;
    கண்மூடித் தனமாகப் பெண்க ளுக்கே
எண்ணற்ற இடர்விளைத்தல் இனிமேல் இந்த
    எழில்நாடே மண்மூடிப் போகு மென்பேன் (130)

அடைப்புக் குறிக்குள் உள்ள எண் நூலின் பக்க எண்ணைக் குறிக்கிறது.

என்று, குள்ள மனம் கொண்ட கூட்டத்தினரைக் கடுமையாய் எச்சரிக்கிறார். பெண் நலம் ஓங்க வேண்டும்; தமிழ் நலம் தழைக்க வேண்டும்; மடமை எண்ணங்கள் மாய வேண்டும் என்பதற்காகவே பொன்னரசன் இக்காப்பியத்தை நாட்டியுள்ளார்.

கணவனை இழந்தவளை விதவைப்பெண் என்கிறார்களே, மனைவியை இழந்த கணவனை ஆண்விதவை என்கின்றோமோ? விதவைப்பெண் தன் தலையில் பூ வைத்தால் பூவெல்லாம் கருகிவிடுமா; தன் திருமுகத்தில் திலகம் சேர்த்தால் திலகம் நில்லாமல் வீழ்ந்தாபோகும் எனப் பொன்னரசனின் வினாக்கள் நாடெங்கிலும் ஒலித்து, விதவை என்ற சொல் இல்லை எனும் நிலையை உண்டாக்குவதே இக்காப்பியத்தைப் படிப்பதன் பயனாம்.

தமிழ்ப்பற்று

கவிஞர் பொன்னரசன் தமிழின்மீது தணியாத பற்றுக் கொண்டவர். தமிழ்வழி தழைப்பின் வையகம் செழிக்கும் என்னும் உறுதியான கொள்கையினர். தமிழே ஞாலத்தின் முதன்மொழி என்பதை வாய்க்குமிடமெல்லாம் வகையுறக் கூறுகிறார். பூங்கோதை 'தமிழாசிரியப் பணிபுரிகிறேன்' என்பதைக் கூறவருமிடத்து, "தலைமொழியின் ஆசிரியை வேலை ஏற்றுத் தக்கபணி செய்கின்றேன்" எனச் சொல்லச் செய்து, கவிஞர் தமிழ்மொழியே தலைமொழி என்பதைச் சுட்டுகிறார்.

பூங்கோதையும் பொன்னப்பனும் சோலையில் அமர்ந்து தமிழை அலசி ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். சோலை மலர்களிலிருந்த தேன் அவர்கள் மேல் சொட்டுகிறது. கவிஞர் சொல்கிறார்

மருஒன்றும் புதுமலர்கள் தமிழைக் கேட்டு
  மகிழ்வனபோல் அவர்கள்மேல் மதுவைக் கொட்டும். (62)

தமிழ் கேட்ட மகிழ்ச்சியில் பூக்கள் பொங்கி வழிந்து தேனைச் சிந்துகின்றனவாம்.

தமிழ் நமக்கு வலிமை சேர்க்கும். கோழையையும் தமிழிலக்கியக் கல்வி வீரனாக்கும்.

ஆண்மையற்ற மகன்கூடத் தமிழைக் கற்றால்
  தவறாத பேராண்மை பெறுவான்; இன்பத்
தமிழாலே எல்லாமும் ஆகும். (32)

மொழி காக்கும் வாழ்வே மெய்யான வாழ்வு என உலகோர்க்கு உரைக்கிறார்.

இந்த மண்ணில்
ஆலாகத் தழைத்ததமிழ் மொழியைக் காத்தே
அதற்காக வாழுவதே மெய்வாழ்வு. (70)

இவ்வாறு தமிழைப் போற்றியும், தமிழே எல்லாமும் ஆம் என்றும் கூறுகின்ற பொன்னரசன், தமிழில் படிக்க வேண்டிய நூல்கள் எவையெவை என்பதையும் தொகுத்துத் தருகிறார். பொன்னப்பன் என்ன படித்தான் என்பதைக் கூறும் வகையில் சங்க இலக்கியம்முதல் இன்றைய கவிதை இலக்கியம்வரை அனைவரும் படிக்க வேண்டியவற்றைத் துல்லியமாய் எடுத்துரைக்கிறார்.

கதைமாந்தர்களின் கூற்றுகளிலிருந்து சில வேளை கவிஞர்களின் உள்மனத்தை அறிந்துகொள்ள இடமேற் படுவதுண்டு. கவிஞர் பொன்னரசன் தமிழ்ப்பற்றினைத் திராவிட இயக்கம் வளர்த்துள்ளது என்பதை நாம் உணர முடிகிறது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரிடம் பொன்னரசன் கொண்டுள்ள பற்றினை இந் நூல்வழி காணமுடிகிறது.

பொன்னப்பன் படிக்கிறான். எவற்றை?

அடலேறாம் ஈ.வே.ரா. பெரியார் நூல்கள்
அனைத்தையுமே படிக்கின்றேன்! கல்வி தன்னில்
கடலான பேரறிஞர் அண்ணா செய்த
கவின்நூல்கள் படிக்கின்றேன்! அஞ்சு கத்தாய்
பெற்றெடுத்த தமிழ்ச்சிங்கம் கலைஞர் செய்த
பெருமைமிகு நூலனைத்தும் படித்தே நானும்
குற்றமற்ற நல்லிதயம் தூய வீரம்
கொஞ்சுகின்ற உயர்உள்ளம் மெல்ல மெல்லப்
பெற்றுத்தான் வருகின்றேன்— (80)

கதையில் இது பொன்னப்பன் கூற்று; என்றாலும், இஃது உண்மையில் கவிஞர் பொன்னரசனின் தன் ஒப்புதலே ஆகும்.

கருத்தமைந்த கற்பனைகள்

காப்பியத்திற்கு அழகு சேர்ப்பதில் கற்பனை சிறப்பிடம் பெறுவது. பொன்னரசனின் வளமான கற்பனைகள் நூலுள் பல இருப்பினும் சான்றுக்கு ஒன்று காண்போம். ஆற்றுமீன்கள்பற்றிய அரிய கற்பனை ஒன்று. விண்மீன்கள் தோன்றியுள்ள நேரம். ஆற்றில் மீன்கள் தண்ணீருக்கு மேல் எவ்வித் துள்ளுகின்ற காட்சி, இம்மீன்கள் வானிலேயுள்ள மீன்களை நோக்கி, “எங்களுக்குப் போட்டியாய் நீங்கள் தோன்றியிருக்கிறீர்களா? உங்களை விட்டோமா பார்” என அவற்றிடம் துள்ளிக் குதித்துச் சண்டைக்குப் போவதுபோல இருக்கிறதாம்.

கண்களுக்கே ஒப்பென்று கவிஞர் கூறும்
கவின்மீன்கள் எங்களுக்கும் போட்டி யாக
விண்மேலே நீங்களெல்லாம் எழுந்தால் உம்மை
விடுவோமா? என்பனபோல் ஆற்று மீன்கள்
தண்ணீர்க்கும் மேலெழும்பி வானை நோக்கித்
தாவிப்பின் விழுகின்ற நிலையும் கண்டான். (12)

சண்டைக்குச் செல்பவன் எழுவதும் விழுவதும் போல இருக்கிறதாம், மீன்கள் மேலெழும்பித் தண்ணீரில் வீழ்வது. நயமான கற்பனை இது.

மாலை நேரம். சூரியன் பொன்னொளி வீசுகிறான். ஆற்றில் மீன்கள் தண்ணீரின் மேலே துள்ளும்போது மாலைச் சூரியனின் ஒளிபட்டு தோன்றுகின்ற அவற்றின் பொன்னிறம் அவை தண்ணீரில் வீழ்ந்ததும் பறிபோய்விடுகிறது. அது, பொன் நகையை இரவலாய்த் தந்த சூரியன், அந்த இரவலைத் திரும்ப எடுத்துக் கொண்டது போலிருக்கிறதாம்!

ஆற்றில்
எழும்புகின்ற மீன்களுக்குப் பொன்ந கைகள்
இரவலாய்க் கொடுப்பதுபோல் சூரி யன்தான்
பொன்னிறத்துக் கதிர்வாரித் தெளித்தான்! மீன்கள்
புனலுக்குள் விழுந்தவுடன் இரவல் தம்மை
என்னுடைய தென்றெடுத்துக் கொள்வ தேபோல்
எடுத்துக்கொண் டான்ஒளியை.... (40)

இவ்வாறான அரிய கற்பனைகள் பல, நூலை அணி செய்கின்றன.

சொக்கவைக்கும் சொல்லாட்சி

அரிய சொல்லோவியங்களைப் பொன்னரசன் தம் கவிதைத் தூரிகையால் நம் நெஞ்சத் திரையில் எழுதிவிடுகிறார். பெண்ணின் நிறத்தைக் காட்ட அவர் குழைத்துள்ள கவி வண்ணங்கள்தாம் எத்துணை எத்துணை!

தணல் நிறத்தாள் (915)
தைத்திங்கள் பரங்கிப்பூ நிறத்து மங்கை (36)
கொன்றைக்கு நிறந்தந்த மங்கை (35)
தாழை மடலுக்கும் பொன்னுக்கும் நிறத்தைத் தந்த மங்கை (75)
சந்தனமாய் உடல் ஒளிரும் கோதை (105)

தொடர்ந்து முத்தமிடுவதை,
இதழ்ச்சிலம்பம் நடத்திடவா? (75)

எனப் பாடுகிறார். இதழ்ச்சிலம்புகள் மோதிக்கொண்டே இருக்கும்; 'இச்' எனும் ஒலி கேட்டுக்கொண்டே இருக்கும்.

இயற்கை வருணனை

பொன்னரசனின் இயற்கை வருணனை நம்மைச் சொக்க வைக்கிறது. காப்பியத் தொடக்கத்தில் நம்பியூரின் இயற்கைச் சூழலைத் தன்மை நவிற்சியாய்த் தக்க உவமைகளுடன் விவரித்திருப்பதில் தனி அழகைக் காண்கிறோம் (9 - 11). காப்பியத்தின் தொடக்கமே அழகின் சிரிப்பாய் அமைந்திருக்கிறது.

மணிமேகலைக் காப்பியத்தில், சோலையில் இருள் மண்டியிருப்பதைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்,

> பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்கு
> இருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழில்

என்பார். கதிரவன் கதிர்கள் தோன்றி உலகில் இருளை விரட்ட, அந்த இருளெல்லாம் இந்தச் சோலைக்குள்ளே வந்து புகுந்துகொண்டது போன்று இருக்கிறதாம்! நிழல் திணிந்து இருளெனத் தோற்றியது என்பதைச் சாத்தனார் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

மேலும் அச்சோலையை

> வெயில்நுழைபு அறியாக் குயில்நுழை பொதும்பர்

என்பார்.

சோலை மரங்களிலுள்ள இலைகளின் அடர்த்தியால் வெயில் அச்சோலைக்குள் நுழைய முடியாதாம். ஆனால், குயில் நுழைகிறதாம்? அஃது எப்படி? இலைகள் மூடிக்கொண்டதால் வெயில் புக முடியவில்லை. குயிலோ முன்னரே சோலைக்குள் இருந்தது. அது கிளையினூடே உள்ள சந்துகளில் நுழைந்து செல்லுகின்றது என உரையாசிரியர் நயமுரைப்பர்.

சீத்தலைச் சாத்தனாரைப் போலவே பொன்னரசனும் நம்மை ஒரு சோலைக்கு அழைத்துச் செல்லுகிறார். அங்கு மயில்கள் ஆடுகின்றன; குயில்கள் பாடுகின்றன. நீண்டு வளர்ந்த மரங்களின் இலைகள் ஒன்றுசேர்ந்து வானத்தை மறைப்பதுபோல் குடையாய் விரிந்து நிற்கின்றன. சூரியனின் இளங்கதிர்கள், 'எம்மை ஏன் தடுக்கிறீர்' என இலைகளுடன் மோதி உள்ளே செல்ல முயல்கின்றனவாம்.

> வானத்தை மறைப்பதற்கே இலைகள் தம்மை
> மரங்களெல்லாம் பசுங்குடைபோல் விரித்து நிற்கும்!
> 'ஏனென்னைத் தடுக்கின்றாய்?' எனவெ குண்டே
> இளங்கதிரின் ஒளியங்கே துளைத்துப் பாயும் (83)

சாத்தனார் காட்டும் சோலையில், கதிர் உள்ளே நுழைய முடியாமல் தோற்கிறது; பொன்னரசன் சோலையிலோ, கதிர் முட்டி மோதி உள்ளே நுழைந்துவிடுகிறது. இச்சோலையின் செறிவை

கருவண்டு சுழல்வதன்றி வேறே மக்கள்
கண்வண்டு சுழலாத சோலை (92)

என்கிறார். மரங்களின் செறிவினாலும், இலைகளின் அடர்த்தியாலும் சோலைக்குள் உள்ளவை மக்கள் கண்களுக்குத் தெரியவில்லை. ஆனால், சோலையினுள்ளே இருக்கும் கருவண்டுகள் இங்குமங்குமாய்ப் பறந்து சுழல்கின்றன. மணிமேகலைக் காப்பியச்சோலையில் வெயில் நுழைய முடியாது; ஆனால், குயில் உள்ளே நுழைந்து சென்றுகொண்டிருக்கும். வேர்ப்பலாக் காப்பியச்சோலையிலோ வெளியிலிருந்து மக்களின் கண்வண்டு உள்ளே சென்று சுழல முடியாது தவிக்கிறது; ஆனால், சோலையின் உள்ளே கருவண்டோ சுழன்று சுழன்று பாடித் திரிகிறது.

நயவுரைகள்

கவிஞர்கள் எதையும் நயமாய்ச் சொல்ல வல்லவர்கள். 'வேர்ப்பலா'வில் நயவுரைகள் பெருமளவில் உள்ளன.

தீயவர்கள் முகத்தில் காறி உமிழ்கிறாள், பூங்கோதை. அஃது அவர்கள் முகத்தில் படாமல் தரையில் விழுகிறது. பொன்னரசன் இதனைச் சொல்லும் முறையில் ஒரு தனி நயத்தைத் தோற்றுவிக்கிறார். எச்சில் அத்தீயவர் முகத்தில் பட்டால் தன் தூய்மை குறைந்துவிடுமே என்பதால் அவர்கள் முகத்தில் படாமல் தரையில் விழுந்ததாம்.

எச்சிலினைத் தான்உமிழ்ந்தாள்! அந்த எச்சில்
எதிர்நிற்கும் ஈனர்கள் மேல்வி ழுந்தால்
நிச்சயமாய்த் தன்தூய்மை போகும் என்றே
நினைந்ததுபோல் அங்கிருந்தோர் மேல்வி ழாமல்
நச்சுமன மனிதர்களை நகைத்த வண்ணம்
நலிந்தபடி பூமியிலே விழுந்த தங்கே. (160)

அரிய மணிமொழிகள் பல நூலில் அமைந்துள்ளன. சான்றுக்குச் சில. புறம் பேசுதல் கூடாதென்பதை மிகவும் வலியுறுத்திக் கூறுகிறார்.

போர்ப்படையின் ஆற்றலினும் பொல்லாங் காகப்
புறம்பேசும் படையாற்றல் கொடிய தம்மா! (37)

சமுதாயப்பணியாற்றுவோர் தூய்மையுடன் விளங்கவேண்டும்.

சமுதா யத்தைப்
புதுவிதமாய் மாற்றுதற்கு முயல்வோர் சொந்தப்
போக்கினிலும் தூய்மையுடன் விளங்க வேண்டும். (39)

முன்னோர் ஈட்டிய பொருளால் வாழ்வது முழுமையான வாழ்வாகாது.

தாமே ஈட்டும்
உறுபொருளால் வாழ்வதுவே உயர்ந்த வாழ்வு. (143)

அழகாய் இருந்தால் மட்டும் போதாது; பயன்பாடு இல்லை என்றால் அந்த அழகுக்குச் சிறப்பில்லை.

அழகான வண்ணத் தோடு
மிடுக்கான கொண்டைப்பூ அமைந்த போதும்
கூவவில்லை எனில்சேவல் மேன்மை தன்னைக்
கொள்வதில்லை. (89)

உவமையிலா உவமைகள்

படிப்போர் மனத்தில் நன்கு பதியவைப்பதற்காகக் கவிஞர்கள் பல உத்திகளைக் கையாளுகின்றனர். அவற்றுள் ஒன்று, அணி. செய்யுளுக்கு அழகூட்டுவன அணிகள். உவமைகள் வாயிலாய்ப் புலவர்கள் உயரிய கருத்துகளை எடுத்துரைப்பதுண்டு. 'வேர்ப்பலா' என்னும் இக்காப்பியத்தில் புலவர் பொன்னரசன் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட அருமையான உவமைகளை அழகிய முறையில் ஆண்டிருக்கிறார். நாம் அன்றாடம் காணும் நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் பொன்னரசன் புதிய உவமைகளாக்கித் தந்துள்ளார்.

தேங்காய்க்குள் தேங்கியுள்ள நீரைப் போன்ற
தெளிவான இனிமை (29)

என ஓர் இனிப்பு உவமை,

தயிர்கலந்த
சோற்றின்மேல் ஊறுகாய்தான் விழுந்த தேபோல்
தூயவளே! நீவந்தாய் மகிழ்ச்சி கொண்டேன் (340)

என ஒரு மகிழ்ச்சி உவமை,

கற்றறிந்தார் முகம்போலச் சாந்தமான
கவினொளியை வீசுகின்ற நிலவு (86)

என ஒரு சாந்த உவமை,

நிழலடியில் வளர்ந்தசெடி அதனைப் போலே
நெஞ்சுறுதி அற்றவர் (31)

என ஓர் உறுதி உவமை,

கோல்கேட்ட குருடனுக்கு விழிகி டைத்துக்
குறைவற்ற செல்வமுந்தான் பெருகி வீட்டில்
பால்பொங்கும் நிலைவந்து சேர்ந்தாற் போன்ற
பரவசம் (27)

என ஒரு பரவச உவமை என உவமைகள் நூலுள் நிறைந்து, பெரும் இன்பமளிக்கின்றன. இன்னும்,

ஆற்றுவெள்ளம் சிறுமணலை உருட்டு தல்போல் (74)

நடைஒலியை எழுப்பாத பூனை யைப்போல் (77)

செம்பருத்திப் பூவிதழ்போல் கொண்டை கொண்ட சேவல் (81)

ஆமைக்கு நடைவேகம் கிடைத்தாற் போல (106)

கொலைக்கழுகு வருவதனை அறியாக் கோழிக் குஞ்சுகள்போல் (111)

என இவ்வாறு நடைபயிலும் உவமைகள் பற்பல.

அரிய வினாக்கள்

பொன்னரசன் கருத்தாழம் மிக்க சில வினாக்களை எழுப்புகிறார். அவற்றிற்கு எதிர்மறை முறையிலும் உடன்பாட்டு முறையிலும் விடை காணும்போது பொருள்புரிந்து பூரிக்கின்றோம்.

பூப்பற்றி இருக்கின்ற நாரால் பூபற்றி
எரிவதுண்டோ? (123)

பாடல் அடியின் முதலில் உள்ள 'பற்றி'யும் இறுதியில் உள்ள 'பற்றி'யும் பொருளில் மாறுபட்டு நம் உள்ளங்களைப் பற்றி யிழுக்கின்றன.

முள்ளெனினும் இரும்புதனைக் கிழிப்ப துண்டா? (36)

முரடனுக்கு முரடன் இருக்கத்தானே செய்வான்!

வேங்கைக்கே துணைதேவை என்றால், புள்ளி
மேவுமுடல் மானுக்குத் துணைவேண் டாமா? (133)

வலியவர்க்கே துணை வேண்டியிருக்கும்போது எளியவர் துணையின்றி எவ்வாறு இருக்க முடியும்?

மதுமலரில் மெதுவாக அமர்ந்து தேனை
  மாந்துகின்ற வண்ணத்துப் பூச்சி தன்னை
அதிர்ந்துவரும் புயற்காற்றின் முன்னே விட்டால்
  அப்பூச்சி சீரழிந்து போகு மன்றோ?

பொருத்தமில்லா இடத்தில் நுழைந்தால் துன்பம் விளையத்தானே செய்யும்!

நாட்டுப்புறப்பாடல் தாக்கம்

நாட்டுப்புறப்பாடல் தாக்கமும் பொன்னரசனிடத்தில் பதிந்திருக்கக் காண்கிறோம்!

கன்னான் சிறுசதங்கை – என்கண்ணே
காலில் அழுந்துமென்று
வெள்ளிச் சிறுசதங்கை – என்கண்ணே
விரலில் அழுந்துமென்று
தங்கம் உருக்கியல்லோ – என்கண்ணே
உன்மாமன் தனிச்சதங்கை செய்துவந்தான்...

விளையாடப் போகுமிடம் – என்கண்ணே
வெயில்படும் என்றுசொல்லி
நடையெல்லாம் பூப்பந்தல் – என்கண்ணே
நாட்டிவிட்டான் உன்மாமன்

என்பன போன்ற நாட்டுப்புறப்பாடல் கருத்துகள் பொன்னரசனிடம் பொருத்தமாய் வந்து சேர்கின்றன. மிகுமகிழ்ச்சியோ, துக்கமோ மனத்தைக் கவ்வும்போது இத்தகு எண்ண ஓட்டம் இயல்பாய் வந்து சேரும். பொன்னப்பன் மாண்டுவிட்டதாய்க் கருதிய கார்மேகம் கூற்றாய்க் கவிஞர் உரைக்கிறார்.

நூலாடை உடல்வருத்தும் என்று சொல்லி
நோவாது பட்டாடை போட்டுக் காத்த
பாலாடை போல்மென்மை உடலைக் கொண்ட
பாசமிகு தலைமகன்... (157)

பூமியிலே கால்பட்டால் வாடு மென்று
பூப்போட்டே அதன்மீது நடக்க வைத்தோம். (157)

கவிதை எழில்

மரபுவழி பிழையின்றி எழுதிவிட்டால் மட்டும் அது கவிதையாகிவிடாது; அழகுணர்ச்சி கொண்டதாயும், உள்ளத்தை ஈர்ப்பதாயும் கவிதைகள் படைக்கப்பட வேண்டும். ஒரு வெண்பாவை யாப்புத் தவறின்றி எழுதிக் காட்டுகிறார்; ஆனாலும் அதில் பொழிப்பு மோனை இல்லாதிருப்பதால் சுவையின்றி இருப்பதைச் சுட்டிக்காட்டி, அதிலேயே பொழிப்பு மோனையைப் பெய்து அழகுபடுத்தியும் காட்டியிருக்கிறார். (88, 89)

முத்தங்கள் காதலுக்குச் சுவைகூட் டல்போல்
மோனைகளே கவிதைக்குச் சுவையை நல்கும் (89)

எனக் கவிதை எழுதுவார்க்கு வழி கூறுகிறார்.

புதிது புதிதாய்க் கவிதை படைத்துத் தமிழைச் செழிக்கச் செய்ய வேண்டுமெனக் கவிஞர் மனம் விரும்புகிறது.

தமிழில் நாளும்
புதிதுபுதி தாய்க்கவிதை பாடு! ஞாலம்
பூரித்துக் கேட்கட்டும்; தமிழ்வா ழட்டும் (87)

பாவேந்தர் வழியினர்

கவிஞர் பொன்னரசன் பாவேந்தர்வழி வருபவர். இந்நூல் முழுவதிலும் பாவேந்தரின் பாடற்சாயலை நாம் உணர முடிகிறது.

திங்களைப்பற்றிய பொன்னரசன் பாடல்கள், பாவேந்தரின் 'புரட்சிக்கவி'யில் கவிஞன் உதாரன், 'நீலவான் ஆடைக்குள்ளே' எனத் தொடங்கிப் பாடியுள்ளதை நம் நெஞ்சில் நிழலாடச் செய்கின்றன.

கார்மேகத்திடம் பொன்னப்பன் எதைச் சொல்லக்கூடாதோ அதைச் சொல்வதும், கிழவர் தங்கமுத்து அவனைத் தடுப்பதுவு மான பாடற்பகுதி, பாவேந்தர் பாரதிதாசனின் எதிர்பாராத முத்தத்தில் பண்டாரம், பொன்முடியின் தந்தையிடம் பேசுவதை நினைவூட்டுகிறது.

திருடனைப் பிடிக்க வந்த ஊரார், திருடன் தப்பியபோது பேசிக்கொள்ளும் பேச்சு, பாவேந்தரின் 'பாண்டியன் பரிசில்' ஊர்மக்கள் பூதத்தைப்பற்றிப் பேசும் பேச்சினை ஒத்ததாய் இருக்கிறது.

பாவேந்தர் படைப்புகளில் விதை எடுத்து, பொன்னரசன் 'வேர்ப்பலா'வை முளைக்கச்செய்து வளர்த்திருக்கிறார். பலாச் சுளையின் சுவையை உணர்கிறோம். மரம் முளைக்கக் காரணமா யிருந்த விதையையும் நினைக்கிறோம்.

கதைமாந்தர் படைப்பு

காப்பியத்தில் கதைக்கரு, கதைப்பின்னல், கருத்து, சுவைகள் ஆகியன போன்றே கதைமாந்தர் படைப்பும் மிக முக்கியமான தாகும். 'காப்பியத்தின் நோக்கம் மகிழ்ச்சி ஊட்டுதலோ, அதில் ஆழ்ந்துவிடச்செய்தலோ, அதில் அக்கறை கொள்ளச் செய்தலோ மட்டுமன்று; அவற்றின் வாயிலாய் ஒரு கோட்பாட்டினை அல்லது குறிக்கோளினை வெற்றிகரமாய் வெளிப்படுத்த அதற்கேற்ற மாந்தர்களைப் படைத்துக்கொள்ளுதலும் வேண்டும்'' எனத் திறனாய்வாளர் கூறுவர். கதைமாந்தர் படைப்புபற்றி அரிஸ்டாட்டிலின் வெளிப்பாடாய் நான்கு கருத்துகள் கூறப் படுகின்றன. அம்மாந்தர்கள்

1. நல்ல முறையில் படைக்கப்பட வேண்டும்.

2. பொருத்தமாய்ப் படைக்கப்பட வேண்டும்.

3. வாழ்க்கை நடப்பில் காணக்கூடியவர்களாய் இருக்க வேண்டும்.

4. முரண்பாடற்ற முறையில் படைக்கப்பட வேண்டும்.

கதைமாந்தர்பற்றிய இத்துணை இலக்கணங்களும் இயைந்துவர, பொன்னரசன் வேர்ப்பலாவின் காப்பிய மாந்தர்களை வெற்றிகரமாய்ப் படைத்திருக்கிறார்.

பூங்கோதையும் பொன்னப்பனும் கதையின் தலை மாந்தர்கள். தேனப்பர், குமரப்பர் ஆகியோர் முக்கிய துணை மாந்தர்கள். கார்மேகம், முரணன் (Villain).

பூங்கோதை, எழில் கொஞ்சும் மங்கை; மணவாழ்வை முழுதுமாய்த் துய்த்து அறியா முன்னரே மிக இளைய வயதில் கைம்பெண் ஆனவள். மனத்தை நிலைப்படுத்தி மறுமணச் சிந்தனையின்றி வாழ்கிறாள். என்றாலும், அவள் தவறிழைத்தவள் என இட்டுக்கட்டி ஊரார் பழி தூற்றியபோது, புரட்சிப் புயலாய் மாறிப் பொன்னப்பனை மணந்து புதுவாழ்வு படைக்கிறாள்; 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பதற்கோர் எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறாள்.

பொன்னப்பன் ஏதுமறியாத ஏமாளியாய் வளர்க்கப் பட்டவன். சுழற்சியில் இரும்பில் காந்தமேறுவது போலப் பூங்கோதை பயிற்றுவித்ததால் புலமை பெற்றதோடு ஊரை எதிர்த்து, பழம் பஞ்சாங்கக் கோட்பாடுகளைக் கிழித்தெறியத் துணிந்தவனாயும் மாறுகிறான்.

தேனப்பர், பூங்கோதைக்குத் தந்தை. மகள் கைம் பெண்ணானபோது சீர்திருத்தவாதியான அவர் அவளைப் படிக்கச் செய்து ஆசிரியராக்குகிறார். ஊர்க்கட்டுப்பாடு என வரும்போது பழமைக்கு அடிபணிபவராகிவிடுகிறார்.

குமரப்பர் கண்டிப்பானவர்; ஊருக்கு நீதி வழங்குபவர்; நேர்மையானவர்; என்றாலும், சமுதாயச் சீர்திருத்த எண்ணமே இல்லாதவராய் விளங்குவதால் பொன்னப்பன் பூங்கோதை பழகுவதையே பெரும் குற்றமாய்க் கருதித் தண்டிக்கிறார். பகுத்தறிவுப் பண்பில்லாத கண்டிப்பும் நேர்மையும் நன்மையைத் தாரா என்பதற்கு ஓர் அடையாளச் சின்னமாகிறார்.

கார்மேகம் வஞ்சகமே உருப்பெற்றவன்; ஆயினும், எவரும் ஐயுறாவண்ணம் பொன்னப்பனுக்கு நன்மை செய்வது போலக் காட்டி அவனை ஒன்றுக்கும் உதவாதவனாக்கத் திட்டமிடுகிறான். கெடுவான் கேடு நினைப்பான் என்னும் பழமொழியை உண்மை யாக்கும் வகையில் பொன்னப்பனுக்கு இழைக்க நினைத்த கேடு அவன் மகன் உயிரையே வாங்கிவிடுகிறது.

கண்ணன் கார்மேகத்திற்கு மகன்; கற்றறிந்தவன்; பாம்புமிழும் மாணிக்கக் கல்லைப்போலக் கார்மேகத்தின் சுயமைக்கு மாறான பண்பினனாய் விளங்குகிறான். பூங்கோதையைக் காதலிக்கிறான். ஆனால், அவள் தன்னைக் காதலிக்கவில்லை என்பதறிந்து அக்கணமே அவளைத் தங்கையாய் ஏற்கும் தங்கமனம் படைத்தவனாய் மாறுகிறான்.

வாழ்க்கையில் நாள்தோறும் நாம் காண்பவர்களே கதைமாந்தர்களாய் விளங்குகின்றனர். இவர்களைக்கொண்டு பொன்னரசன் கதையைச் சுவையாய்ப் பின்னியிருக்கிறார்.

நல்ல கதைக்கருவும், பொருத்தமான கதைமாந்தர் படைப்பும், உயிரூட்டமுள்ள கதைப்பின்னலும் கொண்டதாய் 'வேர்ப்பலா' இனிக்கிறது.

உளம்நிறை பாராட்டு

> பொதுநலத்தைப் போற்றுதற்கும் புதுக்கருத்தைப்
> புகுத்துதற்கும் கவிதைகளைப் புனைகின் றேன்நான் (68)

எனக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள பாடலடி பொன்னரசனுக்கு முற்றிலும் பொருந்துவதாய் உள்ளது.

> மனஉணர்வை விளக்குதற்கே பொருத்த மான
> வார்த்தைகளைத் தேடுகின்றேன் கிடைக்க வில்லை (12)

என்பது பொன்னரசன் எழுதியுள்ள பாடலடிகள். இவர் மொழியிலேயே சொல்வதானால், உண்மையிலேயே இக் காப்பியத்தைப் பாராட்டப் பொருத்தமான சொற்களைத் தேடு கின்றேன்; கிடைக்கவில்லை. எவ்வளவு உயர்வாய்ச் சொல்லலாம் என நினைத்தாலும் அதனினும் உயர்ந்து நிற்கிறது இவர் கவிதை.

புலவர் பொன்னரசனுக்கு என் மனம் நிறைந்த பாராட்டுகள்! வாழ்த்துகள்!

நூல் ஆக்கம்	புலவர் பொன்னரசன்
வகைமை	குறுங்காவியம்
வெளியீடு	ஸ்ரீசாய் சக்தி கல்வி, பண்பாடு, சேவை அறக்கட்டளை, சென்னை. (1998)

(15)

ஒரு விடியலுக்கு முன்னால்

இன்று இலக்கிய உலகில் ஆழம், அழுத்தம், சுருக்கம், எளிமை, இனிமை போன்ற கவிதை நுணுக்கத்தால் தமக்கென்று தனியிடம் பெற்று உலா வருவன, புதுக்கவிதைகள். இக்கவிதை வரிசையுள் தம் கவிதைகளையும் உலவ விட்டுள்ளார், கவிஞர் வித்தகன். கவிதை எழுதும் வித்தையைக் கற்றவர் என்பதற்குச் சான்றாகின்றன, இவர் கவிதைகள். இத்தொகுப்பில் கவிதைப் பூக்கள் பல மலர்ந்துள்ளன; எனினும், ஒவ்வொரு மலரும் வேறு வேறு மணம் கொண்டவை. இவை மனத்தைத் துள்ளவும் துவளவும்' செய்துவிடுகின்றன. சில, சாதனைக் கவிதைகள்; சில சோதனைக் கவிதைகளாகும்.

இவர் கவிதைகளை வகைப்படுத்திப் பார்க்கையில், இவரே முன்னுரையில் சுட்டுவது போன்று, இவை பல்லுணர்வுகளின் வெளிப்பாடுகளாய்த் திகழக் காணலாம். இன்றைய இளைஞர்கள் பல்வேறு சிக்கல்களுக்கிடையே வாழ்பவர்கள். வாழ்க்கைப் பயணத்தில் எதிர் நீச்சல் போட்டாலும் சிலரின் வாழ்வில் வெற்றி என்பது எட்டாக் கனியே. இவர்கட்கு, தம் மனக்குமுறல்களைச் சொல்லி ஆறுதல் பெறுகிறோம் என்று எண்ணமளிக்கப் புதுக் கவிதைகள் ஒரு வடிகாலாய் இருக்கின்றன. இதனால் இத்தகைய புதுக்கவிதைகளை ஒரு வகை புதிய தன் வரலாறு எனலாமா என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. இக்கவிஞரே சுட்டுவது போன்று, 'நெஞ்சுரம்தன்னை மிஞ்சுவது ஒன்றில்லை' என்ற நம்பிக்கை இவர்களிடம் இருக்கிறது. எனவேதான், கவிஞர் வித்தகன் இன்னமும் விடியாத உணர்வுகளைப் பாடினாலும் அவை விடிய வேண்டும், விடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் 'விடியலுக்கு முன்னால்' என இந்நூலுக்குத் தலைப்பிட்டுத் தந்துள்ளார் போலும்.

கவிதைத்தொகுப்பின் முதல் கவிதை 'தமிழ் மறைக்குத் தலைவணக்கம்'. பின்னர் வருவன பல்வேறு உணர்வுக் கவிதைகள்.

பாச உணர்வு (அம்மா, குழந்தை)

இழப்பு உணர்வு (வெண்மேகமும் அழுதிடுமே, பூபாளம் பாடிய பூமானே, அறிவின் இலக்கணம்)

மறவுணர்வு (ஒரு விடியலுக்கு முன்னால், இனமானத்தின் இருப்பு, ஓங்குக நின்புகழ், சத்தியப்போர்)

காதலுணர்வு (உன்னை ஒன்று கேட்பேன், காதல் வாழ்க)

அழகுணர்வு (கண்களுக்குக் கிடைக்கும் கவுரவம்)

கற்பனையுணர்வு (ஆதவனிடம் ஒரு ஆதங்கம், கடற்காதலன், கமலம்விடு தூது)

சுதந்திர உணர்வு (பொன்விலங்குகள், வீரியம் பயிலுங்கள் வீணைகளே)

இவ்வுணர்வுப்பாக்களின் சில அடிகள் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் பாங்கினவாயுள்ளன.

தினங்களைத் தொலைத்து
மனங்களை இழந்து
நிஜங்களை நினைந்து
நிழலுடன் உறவாடும்
மனிதம்.

மனிதம்பற்றிய பாடலடிகள் இவை.

எங்களின்
உரிமை உணவை
எச்சில் படுத்தியதோடு
எங்கள் தலைமீதே
எச்சமிட்டுக் கொண்டிருந்த
காக்கைக் கூட்டத்தை
உனது
கைத்தடியல்லவோ விரட்டியடித்தது.

பெரியாரின் சிறப்பு, சிந்தனையுடன் வெளிப்படும் இடம் இது.

எங்களது
வசந்தங்களுக்கு
வரவேற்புரை எழுதிய
உன் திருக்கரங்களை
முத்தமிட்டு முத்தமிட்டு
காற்றும்
தூய்மை மிகுந்தது.

அண்ணாவின் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டிற்கு'க் கட்டியங்கூறும் கவிதை அடிகள் இவை!

இன்றைக்கும் நளாயினிகள்...
நளாயினியின் பொறுமையே

நலமென்று அவர்கள் நம்புவதால்
சுமப்பதற்குக் கூடைகளும்
முடையப்படுகின்றன –

பெண்கள் விடுதலை, பெண்கள் முன்னேற்றம் ஆகியவற்றிற்காகப் பாடுபடுவோர் எண்ணிப் பார்க்க வேண்டிய எழுச்சிக் கருத்து இது.

அக வெளிச்சம் உன்றனிடம்
சோதியாய்த் திகழுமானால்
புற இருட்டைக் கண்டுனக்குப்
புலையச்சம் தேவையில்லை–

சமுதாயம் அலசிப்பார்க்க வேண்டிய கருத்து இது.

அனுபவ அதிர்ச்சி, அறிவின் முதிர்ச்சிக்குத் தேவை என்று புத்தனைக் காட்டி, சான்று காட்டும் இவரது எண்ணமும் எண்ணுதற்குரியது.

புறத்தையும் அகத்தையும்பற்றிய பாக்களும் இவரது கவியுள்ளத்தையே இயம்புகின்றன. காதல் தோல்வி இவரது பாக்களில் தொனிக்கிறது. வீரத்தின் வேகமும் விளையாடுகிறது.

அரிய சிந்தனைகள் நூல் முழுதும் பரந்து கிடக்கின்றன.

வாழ்க்கை, பந்தயம் அல்ல – பயணம் : கவிஞர், சமுதாயத்திற்குச் சொல்லுகின்ற பாடம் இது.

சத்தியக் காதல் பத்தியக் காதலாய் இருக்க வேண்டும் –

இத்தொடர், கவிஞர், ஒழுக்கத்தின் விருப்பத்தில் ஊறிய நெஞ்சினர் என்பதைப் புலப்படுத்துகிறது.

மரபுவழி வருகின்ற கருத்துகளுக்குப் புதுவடிவம் தருவதில் கவிஞர் வல்லவராயுள்ளார். "நீல வான் ஆடைக்குள்ளே உடல் மறைத்து நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை" எனும் பாவேந்தர் பாடல், கவிஞர் வித்தகனிடம் 'கண்களுக்குக் கிடைக்கும் கவுரவமாகப்' புது வடிவம் பெற்றிருக்கிறது. 'தூது பார்த்து எழுதுகின்ற ஒரு தூதாய்' இல்லாமல் 'கமலம்விடு தூது' வித்தகனின் கற்பனைக்குச் சான்றாய் விளங்குகின்றது.

குழந்தைகளை 'மயக்குறு மக்கள்' என்றான், பாண்டியன் அறிவுடைநம்பி. 'குழந்தை'பற்றி வித்தகன் பாடியுள்ள பாடல் குழந்தையினும் நம்மை மயக்குவதாய் உள்ளது.

தத்திவரக் காத்திருக்கும்
துங்கப் பாதங்களை
முத்தமிட்டுக் கொண்டிருக்கும்
வெள்ளிக் கொலுசுகள்தாம்....
சின்னதாய் என் மனம்

சிலிர்த்திடவே
சிணுங்கிவர மாட்டாவோ?

குழந்தையின் நடைக்கு ஏங்கும் இப்பாடற்சுவை உண்மையாகவே நம் ஆவியைத் தழுவிச் சிலிர்க்கச் செய்கிறது!

பொதுவாய், புதுக்கவிதைகளில் நீண்ட நெடும் பாடல்களை விடக் குறும் பாடல்களே சிறப்புறுகின்றன. நெடும் பாடல்கள் பொருளில் நெகிழ்ச்சியை ஏற்படுத்திவிடுகின்றன. ஆயின், குறும்பாடல்கள் அழுத்தம் காரணமாய், பொருளின் சிறப்புக்குக் காரணமாகி நிற்கின்றன என்னும் கருத்து, இவர் கவிதைகள் வாயிலாய் மீண்டும் ஒருமுறை உறுதிப்பட்டிருக்கிறது. சான்றாய் ஒரு பாடல். 'சிந்தனை' என்னும் தலைப்பில் அமையும் பாடல்.

மன சாம்ராஜ்ஜியத்தின்
மன்னனாக
சிந்தனை
சிம்மாசனம் ஏறிவிட்டால்
மூட நம்பிக்கைகளுக்குத்
தூக்கு நிச்சயம்.

சந்தனத் தருக்களுடன் விறகுகளும் உண்டு என்னும் கவிஞரின் ஒப்புதலுக்குப் பாராட்டு. ஆயின், விறகுகளை எடுத்து விட்டு, சந்தன மரங்களை மட்டும் இத்தொகுப்பில் அமைத்தால் முழுமையுடன் நாளும் மணம் வீசுமே!

விதைதான் முளைத்து வளர்ந்து பெருமரமாய் வளர்கிறது. மரத்தைப் பார்த்து வியப்பவர்கள் முளையை எண்ணிப் பார்க்காதது போல, புகழ் பெற்றுள்ள கவிஞர்களையே போற்றிக் கொண்டிருப்பவர்கள் இன்று புதிதாய்த் தோன்றும் இளைய தலைமுறைக் கவிஞர்களை உரியவாறு நோக்குவதில்லையே என்பது வித்தகனின் ஏக்கமாய் இருக்கிறது! வித்தகன் இன்று தரையில் கிடக்கும் விதையாய் இருக்கலாம். ஆயினும், எதிர்காலத்தில் விரிந்து படர்ந்த ஆலாய் விளங்குவார் என்பதற்கு இந்நூல் சாட்சியாய் உள்ளது.

வித்தகன், உண்மையில் கவி வித்தகனே!

நூல் ஆக்கம்	கவிஞர் வித்தகன்
வகைமை	புதுக்கவிதைகள்
வெளியீடு	திருமகள் நிலையம், சென்னை–5. (1989)

16

பச்சை நிறப் பூக்கள்

தமிழுக்கும் அமுதென்று பேர்! – அந்தத்
தமிழ்இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

என்று பாடினார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார். தமிழ் என்பதற்கு இனிமை, அமிழ்தம் என்பது பொருளாம். 'அமிழ்து அமிழ்து' எனத் தொடர்ந்து சொன்னால் கிடைப்பது 'தமிழ், தமிழ்' என்பர். அமிழ்தே தமிழாய் ஆவதாதலின் கவிஞர் அமிழ்தனின் கவிதைகள் தமிழாய்ச் சுவையாய் நமக்கு இனிமையூட்டுகின்றன. விண்ணிலிருந்து மண்ணில் அமிழ்ந்து மக்களைக் காப்பதால் மழையே அமிழ்து என்பார், பாரதிதாசனார். தம் மனவிரிவில் சூல் கொண்டுள்ள எண்ணச் செறிவைக் கருத்துமழையாய்ப் பொழிந்து வளமை ஊட்டுபவராய் இக்கவிஞர் திகழ்வதால் இவருக்கு 'அமிழ்தன்' என்னும் பெயர் மிகவும் பொருத்தமாகிறது.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் அமிழ்தம் என்பது சாவா மருந்தாகிய இருவகையுணவைக் குறிக்கும் என்பார். உயிர் வாழ்க்கைக்கு இன்றிமையாத சோறும் நீரும் பசி, தகை (தாகம்)யால் நேரும் சாவைத் தவிர்த்தலால் அவ்விருவகை யுணவை இருமருந்து என விளக்கித் தம் கருத்துக்கு அரணாய் 'இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருந' எனும் புறநானூற்று அடியை மேற்கோள் காட்டுகிறார். வெந்து மலர்ந்த சோற்றுப்பருக்கை 'அவிழ்' எனப்படும். இந்த 'அவிழ்' என்ற சொல்லே அவிழ் - அவிழ்து - அவிழ்தம் - அமிழ்தம் என்றாகிறது எனப் பாவாணர் விளக்கம் தருகிறார். சோறும் நீருமாகிய இருவகையுணவாம் அமிழ்தம் உடம்பை மட்டுமே வளர்க்கும். ஆனால், கவிஞர் அமிழ்தன் தந்துள்ள 'பச்சை நிறப் பூக்கள்' என்னும் இத்தமிழ் அமிழ்தமோ நம் உயிரை, உணர்வை வளர்ப்பதுவாயுள்ளது. அதனாற்றான் பாரதிதாசனார் சுவையான உணவு வகைகளெல்லாம்

உன்னை வளர்ப்பன தமிழா! – உயிரை,
உணர்வை வளர்ப்பது தமிழே!

என்றார்.

கவிஞர் பா. அமிழ்தன் அவர்கள், வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கி, சமுதாயத்தில் நிலவும் அவலங்களை அஞ்சாமல் சுட்டிக் காட்டி, அவற்றைக் களைவதற்கான வழிமுறைகளை எடுத்துக் கூறவும் வல்லவராய் இருக்கிறார் என்பதை அவரது இந்நூல் நமக்கு நன்கு உணர்த்துகிறது.

கவிஞர் பா. அமிழ்தன் சொல்லாட்சித் திறனில் வல்லவராய் விளங்குகிறார்.

> மாமனார் வீட்டில்
> மதர்ப்புடன் உலவுகிற
> மாப்பிள்ளை மாதிரி.....

என்ற தொடரில் 'மதர்ப்பு' எத்துணை மதர்ப்புடன் நின்று கொண்டிருக்கிறது! மாப்பிள்ளைக்கு 'மதர்ப்பு' மாமனார் வீட்டில் தான்! தம் வீட்டில் எப்படியோ?

கவிஞர் பா. அமிழ்தனின் கற்பனை இயற்கைத் தன்மைத் தாய், புதுமைப் பொலிவுடன், உள்ளக் கிளர்ச்சியை ஊட்டும் வகையில் சிறக்கிறது. பள்ளத்தாக்கின் இரு சரிவுகளிலும் மரங்கள் வரிசையாய் நிற்பதை அவர்,

> இரண்டு பக்கமும்
> இத்தனை மரவிசிறிகள்
> இழைந்து வீச
> உனக்கு
> அத்தனை புழுக்கமா?

எனக் கேட்பதில்தான் எவ்வளவு நயம்! 'பள்ளத்தாக்கு' என்னும் இக்கவிதை, கவிஞர் அமிழ்தனின் கற்பனைச் செறிவுக்கும் கவிதை வளத்திற்கும் தக்கதோர் எடுத்துக்காட்டு எனத் துணிந்து கூறலாம்.

பழைய இலக்கியச் செய்திகளைத் தம் கவிதைகளில் தக்க இடங்களில் புகுத்திப் புதுமை சேர்ப்பதில் பா. அமிழ்தன் வல்லவராய் உள்ளார். அமராவதி அம்பிகாபதி காதலில் ஒரு நிகழ்ச்சியை நினைவுக்குக் கொண்டுவரும் வகையில் காதலன் ஒருவன்,

> எண்ணத் தெரியாததால்
> அம்பிகாபதியை
> இழந்தாள் அமராவதி!
> எண்ணத் தெரிந்தவள் நீ!
> எனவே,
> என்னை இழந்துவிட மாட்டாய்!

எனத் தன் காதலிக்கு எழுதுவதாய்க் கவிஞர் பாடியுள்ளார். எண்ணத் தெரியாததால், எண்ணத் தெரிந்தவள் என்னும் இரு

தொடர்களில் இழைந்தோடியுள்ள கருத்துச்செறிவும், ஒரு சொல்லை இருபொருளில் ஆண்டுள்ள திறமும் நுண்மையானவை யாகும்.

'தாகம்!' என்று
உன் வீட்டுத்
தலைவாசலில் வந்துநின்றேன்;
தண்ணீர் தந்தாய்!
தாகம் அதிகரித்தது!

காதலன், காதலியிடம் தன் காதல் துடிப்பைச் சொல்ல இவற்றைவிடச் சொற்கள் ஏது?

காதலனாய் வளைந்து வந்த ஒருவன் அவளைக் கைவிட்டு அகன்றான். நல்ல வேளை! அவள், நிலை தவறவில்லை; மானத்தை இழக்கவில்லை. 'முள்ளுப் பாதை அவன்' என்பதை முதலிலேயே கண்டுகொண்டாள்! காயப்படவில்லை என்றாலும் காதலித்ததில் ஏமாற்றந்தானே! காதலில் இழப்புத்தான் என்றாலும் உண்மையல்லாததை உடனே களையவேண்டுமன்றோ? அவனை விட்டு நீங்கி ஒதுங்குவதுதானே உடனடிச் செயலாய் இருக்க வேண்டும். இதனை அவள் வாய்ச்சொல்லாய்க் கவிஞர் கூறியிருப்பது அருமையாய் உள்ளது.

சொத்தைப் பல்லாய் நினைப்பேன்; – பெரும்
சுகமே இழந்த தாலே!

பல், சொத்தையாகிவிட்டது. அந்தப் பல் இல்லாமல் இருப்பதே நல்லது. தீமையை மேலும் பரப்பாமலிருக்க அதனை உடனே பிடுங்கி எறிய வேண்டுவதுதானே நியாயம்! அச்செயலைத்தான் அவளும் செய்கிறாள் என்பதைப் பாடல்வழி உய்த்துணர வைக்கும் கவிஞரின் சொல்லுந்திறன், வல்லமை கொண்டிலங்குகிறது.

நாடு விடுதலை பெற்றும் இன்னும் உரிய பயனை எய்தவில்லை என்பதைப் பல பாடல்களில் கவிஞர் சுட்டிக் காட்டுகிறார். அடிமைத்தனம், கூழ் குடிக்கும் ஏழைமைத் தனத்தை ஒத்தது; விடுதலை பெறும் நிலையோ, பாயசம் குடிப்பது போன்று இனிமையானது. அடிமைத்தனத்தை அகற்றி இன்பச் சுதந்தரத்தைப் பெற்றுத் தருவதாய்ச் சொன்னார்கள். கூழ் நீங்கிப் பாயசம் கிடைத்தது. ஆனாலும் என்ன? பாயசத்தில் பல்லி செத்துக் கிடக்கிறதே! பாயசம் கிடைத்தும் பயனில்லையே என வேதனைப்படுகிறார், கவிஞர்.

குடித்துக் கொண்டிருந்த
கூழையும் பிடுங்கிக்கொண்டு
பாயசம் தந்தார்கள்;

அதில்
பல்லி
செத்துக் கிடக்கிறது!

'சுதந்தர பாரதத்தில் நாங்கள் சுதந்தரமாய் இருக்கிறோம்; ஆனால், சுதந்தரந்தான் எங்களிடம் அடிமைப்பட்டுக்கிடக்கிறது!' எனும் இக்கவி வாக்கு, இன்று உண்மையான நிலையாகத்தானே இருக்கிறது! இதைப் பொய்யாக்குவது எப்போது? இதைப் பொய்யாக்கினால்தான் கவிஞனின் மனமும் மகிழும்; நம் மனமும் மலரும்!

மாநில மொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சிமொழியாய் இருந்தால்தான் உண்மையான குடியரசு நடப்பதாய்ச் சொல்ல முடியும்! அது இல்லாதவரை, வலுத்தவன் இளைத்தவனை வதைப்பதாகவே முடியும் என்னும் கருத்தைக் கவிஞர் தெளிவாக்குகிறார்.

இங்கு
இந்தியை விடுத்து மற்ற
எல்லா மொழிகளும்
உதடுகளை மட்டும் அசைக்கும்
ஊமைப் படம்;
இந்தி மட்டுமே
பேசும் படம்!

வாயிருந்தும் ஊமையராய் உள்ள நம் நிலை மாறுவது எப்போது?

காலம் காலமாய் மயக்குறு மக்கட்செல்வமாய்க் குழந்தையைக் கவிஞர்கள் பாடிவந்துள்ளனர். அவர்களுள் ஒருவராய்த் தம்மையும் இணைத்துக்கொண்டு கவிஞர் பா.அமிழ்தன், குழந்தையை மணம் வீசும் மருக்கொழுந்து மலராக்கி, நம்மை அதன் மணத்தை நுகரச்செய்கிறார். குழந்தையின் புன்னகை, தேம்பல், நெரிப்பு, நித்திரை ஆகியன அழகோவியமாய்ச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

சிரிப்பதும் தண்புளகம் செய்யும் – இதன்
  தேம்பலும் ஓர்அழகுச் செய்யுள்!
நெரிப்பதும் ஓர்புதுவிஞ் ஞானம்; – இதன்
  நித்திரை யோ,சுவர்க்கத் தொய்யில்!

எழுத்தாளர்களைத் திரு.பா. அமிழ்தன், உள்ளம் குளிர்ந்து நாவினிக்கப் பாராட்டியுள்ளார். வ.ரா.வையும், கல்கியையும் இவர் எழுத்து மலர்களைத் தூவி வழிபடுகிறார். 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்!' என்பர். ஆனால், வ.ரா.வோ வறுமையில் செம்மை பூண்ட வாழ்வினர். வறுமை அவர் கொள்கைக்கு உரமூட்டியதே

தவிரக் குலைத்ததில்லை. இதனை அரிய படப்பிடிப்பாய்க் கவிஞர் தருகிறார்!

வறுமை அவரது
வாழ்க்கைக் குதிரையின்
வயிற்றடியில் கட்டிய
கனத்த பழுவாய் ஒட்டியிருந்தாலும்,
வெற்றி இலக்கினை
முந்தித் தொட்டுவிட்டவர்!

வ.ரா.வின் வறுமையையும் அறிவுச் செழுமையையும் ஒருசேரக் கூறுகின்ற இந்தப் பாடலடிகள் அந்த 'ஆரவார அலைகள் இல்லாத அறிவுக் கடலின்' பரப்பையும் ஆழத்தையும் நமக்குத் தெளிவாய்க் காட்டுகின்றன.

தமிழைத் . தாயாய்ப் பெற்றது தம் தனிப்பேறு என்று மகிழ்கிறார், கவிஞர்.

அமிழ்தேநிகர் உயிரைவிட
அதிகச்சுவை உடையாய்!
தமிழே!உனைத் தாயாய்ப்பெறத்
தவந்தான்என்ப் புரிந்தேன்!

வெள்ளத்தால், கனலால் எண்ணிறந்த நூல்களை இழந்தோம். உலகில் அறிவியல் துறையில் இன்று பல நூல்கள் வளர்ந்துள்ளன. ஆனால், இன்றைய அறிவியல் ஆக்கத்திற்குத் தமிழில் போதிய அளவிற்கு நூல்களைப் படைத்தோமில்லை என்று கவிஞர் குறைப்படுகிறார். இக்குறை களையக் கவிஞர் முனைந்து முயன்று வருகிறார். இந்த முயற்சியில் கவிஞர் வெற்றி காண்பார் என்பது உறுதி.

முன்னாள்தனிப் புகழைநீ
முழுதாய்ப் பெறத்,தாயே
என்னால்ஒலும் வகையில்,கவி
எடுத்தே பணிபுரிவேன்!

என்னும் கவிஞரின் இந்த உறுதியை மனத்தில் கொண்டு அவரோடு சேர்ந்து உழைப்போமாக!

இரயிலில் பிச்சை எடுக்கும் விழிஇழந்த குருடன், வேலைக்குச் செல்லும் பெண்களின் வேதனை நிலை, சிவகாசியில் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சிறுவர்கள், நாட்டைப் பிணித்திருக்கும் கையூட்டுக் கயமை என வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பாடுபொருள்களாய்க்கொண்டு நறுந்தமிழில் அமிழ்தன் பல அரிய கவிதைகளை யாத்திருக்கிறார்.

புதுக்கவிதை, மரபுக்கவிதை ஆகிய இரண்டும் கலந்த கலப்பாய் இந்த நூல் விளங்குகிறது. மரபேயானாலும், இன்றைய புதிய வடிவமேயானாலும், மக்கள் மனத்தில் நிலைத்து நிற்க வேண்டும். அவ்வகையில் இந்த நூல் வெற்றிபெற்றுள்ளது. இந்நூலில் உள்ள கவிதைகள் அத்தனையும் மணக்கின்றன.

கவிஞர் பா. அமிழ்தன் இதுபோல் இன்னும் பல நூல் களைத் தமிழுக்குத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவரது கவிதைப்பணி மேன்மேலும் சிறக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் பா. அமிழ்தன்
வகைமை	மரபு – புதுக்கவிதைகள்
வெளியீடு	மதி வெளியீடு, கள்ளிக்குலம், பொள்ளாச்சி வட்டம். (1990)

17

மலரினும் மெல்லிது...

காதலுணர்வை மாற்றுக் குறையாமல் ஒளியுமிழும் மணிமுடியாய் விளக்குவது, திருக்குறள் காமத்துப்பால். இது பாலியல் கருத்துகளைச் செப்பமாயும் நுணுக்கமாயும் நெறிபிறழாமலும் கூறுகிறது. காமத்துப்பாலில் உள்ள 250 குறள்வழி வாழ்வு அமைந்தால் அது பேரின்ப வீடாம்!

திருக்குறள் காமத்துப்பாலுக்குப் பேராசிரியர் பெரியார்தாசன் கவிதை நடையில் உரை எழுதியுள்ளார். இது பொழிப்புரையோ விளக்கவுரையோ ஆய்வுரையோ அன்று; குறள் கருத்தினைச் சரியாயும் தெளிவாயும் அறியத் துணை செய்யும் பொருளுரை.

உரை எழுதுவதில் பெரியார்தாசன் பல சிறந்த உத்திகளைக் கையாண்டு வெற்றி கண்டுள்ளார்.

(அ) வினாக்களை எழுப்பி விடைகள் வாயிலாய் விளக்கம் செய்தல்

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

இக்குறள் இயல்புத் தொடர்களால் அமைந்துள்ளது. பெரியார் தாசன் இரு வினாக்களை எழுப்பி மறுமொழிகளில் இன்பத் திற்கு இன்பம் சேர்க்கிறார். அவர் உரை

காமத்திற்கு எது இன்பம்? ஊடுவதுதான்!
ஊடுவதற்கு எது இன்பம்? கூடுவதுதான்!
கூடித் தழுவுவதுதான்!

'தான்' எனும் அசையில்தான் எத்துணை இன்பம்! வினாக்குறிகளும் வியப்புக் குறிகளும் இணைந்து நம்மை மகிழ்விக்கின்றன.

(ஆ) தொடர்களைச் சேர்ப்பதன் வாயிலாய்ச் சூழ்நிலையை நன்கு புரியவைத்தல் :

யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

இது குறள்.

நான் பார்க்கும் போது
இவள்
நிலம் பார்க்கிறாள்;
பார்க்காத போது
என்னைப் பார்த்து
மெல்லப்
புன்னகைக்கிறாள்;
காதலுக்கும் நாணத்திற்கும்
கடும்போட்டி

- இது பெரியார்தாசன் உரை. 'காதலுக்கும் நாணத்துக்கும் கடும்போட்டி' எனச் சேர்க்கப்பட்டுள்ள தொடர், உணர்ந்து நெகிழ்ந்து நினைக்கத் தூண்டுகிறது.

(இ) மறைந்துள்ள உட்பொருளை நுணுக்கமாய் வெளிப்படுத்துதல்:

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்

எனும் குறளுக்கு,

தந்தமுள்ள
யானைமுகம்
மூடியுள்ள துணியும்,
இந்தப் பெண்
அணிந்துள்ள தாவணியும்,
ஒன்றுதான்.
இரண்டுக்குள்ளும்
ஒளிந்திருப்பவை
கூர்மை மிக்கவை

என்பது பெரியார்தாசன் உரை.

மதங்கொண்ட யானையின் மத்தகத்தைப் படாமிட்டு மறையாவிட்டால் அது பாய்ந்து கொல்லுமாறுபோல, முலைக்கண் மேல் படாமிட்டு மறைக்காவிட்டால் அம்முலைகள் என்னைக் கொல்லும் என்பதுபோலத் தலைமகன் கூறுவதை, உரை நன்கு வெளிப்படுத்தியுள்ளது. 'கூர்மை'யில் பெரியார்தாசனின் குறும்புத்தனம் பளிச்சிடுகிறது.

(ஈ) பேச்சுவழக்குத் தொடர்களைப் புகுத்தி நயம் கூட்டுதல்:

குறள் தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன்?

உரை எதையும் ஆராயாமல்
அவரைப் பார்த்ததும்
காதல் கொண்டது

இந்தக் கண்கள்தான்,
இந்தப் பிரிவுக்காக
வருந்தி அழுகின்றன.
இந்தப் புத்தி
அப்போதே
இருந்திருக்க வேண்டும்!

'இந்தப் புத்தி அப்போதே இருந்திருக்க வேண்டும்' எனப் பேச்சுப் போக்கில் கண்களுக்குப் 'புத்தி' சொல்கிறார்.

'நெய்யால் எரி நுதுப்பேம் என்றற்றால்'... என்பதற்கு 'எவனோ ஒரு புத்திசாலி நெய்யை ஊற்றித் திரியை அணைக்கப் புறப்பட்டானாம்! அப்படியிருக்கிறது'... என உரை தருகிறார். 'புத்திசாலி' எனக் கூறினும் அவன் புத்தியில்லாதவன் என்பதையும் உரை உணர்த்திவிடுகிறது!

(உ) சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்லிச் சுவைகூட்டுதல்:

'தொடிற்சுடின்' என்பதற்குத் "தீ இருக்கிறதே தீ! அது தொட்டால்தானே சுடுகிறது" என ஆசிரியர் உரை தருகிறார். 'தீ' என்று கூற வேண்டியதை, 'தீ இருக்கிறதே தீ' எனச் சொல்லும்போது சுவை கூடுகிறது.

(ஊ) உரையாடுவது போல உரை எழுதுதல்

ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத்(து) ஏங்கு பவர்க்கு.

"ஒரு நாள் என்பது உங்களுக்கெல்லாம் ஒருநாள்தான்; பிரிந்து சென்ற கணவர்க்காக ஏங்கிக் காத்திருக்கும் என் போன்ற பெண்களுக்கோ ஒரு நாளே ஏழுநாள்." கணவனைப் பிரிந்துள்ள பெண் தன் முன்னால் நிற்கும் மற்றவர்களிடம் பேசுவது போன்ற முறையில் இவ்வுரை எழுதப்பட்டுள்ளது.

(எ) பழக்கவழக்கங்களைப் பெய்து எழுதுதல்

'வழுத்தினாள் தும்மினேனாக' தும்மினேன்; அவள் வாழ்த்தினாள் என்பதுவே இதன் பொருள். பெரியார்தாசனோ, "தும்மினேன்; வழக்கப்படி தலையில் தட்டி வாழ்த்தினாள்" என எழுதியுள்ளார். தும்மும்போது தலையில் தட்டும் வழக்கத்தை உரையில் சுட்டுகிறார்.

(ஏ) ஒருசொல் கொண்டு பொருள் தன்மையில் வேறுபாடு காட்டுதல்

'பசிய மூங்கிலே பாவையிவள் தோள்; தளிரே உடல்; முத்துகளே பற்கள்; இனிய வாசம் இவளது சுவாசம்; எல்லாம்

சரிதான்! மையிட்ட கண் மட்டும் வேல்'' என்பது ஒரு குறளின் உரை. 'மட்டும்' என்பதில் மட்டும் ஓர் அழுத்தம்! ஆம்! மற்ற உறுப்புகள் துன்பம் செய்வதில்லை. கண் மட்டுமே துன்பம் செய்கிறது என்பதை 'மட்டும்' என்ற ஒரு சொல் வேறுபடுத்திக் காட்டுகிறது.

(ஐ) ஓர் எழுத்துமாற்றத்தால் பொருள்விளக்கம் செய்தல் :

'அலர்' என்பதை 'அலர்' என்றே சொல்கின்றனர், மு.வ.வும் பிறரும்; 'கிசு கிசு' என்கிறார், கனகசுப்புரத்தினம்; பழிதூற்றல் என்கிறார், டாக்டர் கலைஞர்; பெரியார்தாசன் இதனை 'வதந்தி' என்கிறார்.

'அலரறிவுறுத்தல்' என்பது, காதலனும் காதலியும் ஒருவரையொருவர் நினைத்துக்கொண்டு நாணத்தைத் துறந்தவர்களாய் இருப்பதைக் கண்டு ஊர் பரிகசித்து ஏளனம் செய்வது என்கிறார், நாமக்கல் கவிஞர். 'அலர் எழ' என்பதைப் பெரியார்தாசன், "எங்கள் காதல்பற்றிய வதந்தி, வதந்'தீ'யாய்ப் பரவிவிட்டது" என்கிறார். 'தி' ஐ 'தீ' யாக்கிப் பரவிய விரைவைச் சுட்டுகிறார். குறிலை நெடிலாக்கி, எங்கும் நெடிதாய்ப் பேசப்படுவதை அழகாய்ச் சுட்டுகிறார். வதந்தி ஊரெங்கும் விரைவில் பரவியதைத் 'தி', 'தீ'யாகிச் சுட்டுகிறது.

(ஒ) அறிவியல் வளர்ச்சியை ஏற்றுப் பொருள் கூறுதல்

'மதியின் மறு' என்பதற்குத் திங்களில் உள்ள களங்கம் அல்லது கறை என்றே பலரும் உரை கண்டுள்ளனர். திங்களில் இன்று காலடி பதித்து, அங்கு மேடு பள்ளங்கள் இருப்பதையும், அவையே நம் கண்களுக்கு மறுவாய்த் தோன்றுவதையும் அறிவியல் கண்டுபிடித்துக் கூறியுள்ளது. திங்களில் உள்ளது போலக் காதலியின் முகத்தில் மறு இல்லை என்று பிறர் எழுதியிருப்பதைப் பெரியார்தாசன், ''காதலியின் முகத்தை நிலவுக்கா ஒப்பிடுவது? கூடவே கூடாது;

நிலவில்
மேடு பள்ளம்;
என்னவளின்
முகம்
பளிங்கு!

என எழுதுகிறார். 'மறு' நிலவில் உள்ள மேடு பள்ளங்கள்; மறுவற்ற முகமோ பளிங்கு.

(ஓ) கற்பனை நயம் தோன்ற விளக்குதல்

> **கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்**
> **எழுதேம் கரப்பாக்கு அறிந்து.**

மை தீட்டினால் எங்கே மறைந்துவிடப்போகிறாரோ என்று பயந்து கண்ணுக்கு மை தீட்டாமல் இருக்கிறேன் என்கிறாள், காதலி.

> **நான்**
> **என் கண்களுக்கு**
> **மை தீட்டுவதே இல்லை.**
> **கண்ணுக்குள் இருப்பவர்**
> **என் காதலர் அல்லவா?**
> **அவரைக்**
> **கரி பூசி**
> **மறைக்கலாமா?**

'மை' எழுதுவது காதலன்மேல் கரி பூசுவதாகும் என்னும் அரிய கற்பனையை இங்கே காண்கிறோம்.

இவருக்கு முன்னோடியாய், கவிஞர் அப்துல் ரகுமானும் இவ்வாறே கூறியுள்ளார்.

> **கண்ணுக்குள் என் காதலர்**
> **அவர் முகத்தில் கரி பூசலாமா?**

என்பது இரகுமானின் கேள்வி.

(ஔ) அணிநலம் சிறக்க உரைவிளக்கம் செய்தல்

> **வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
> **வீழ்வார் அளிக்கும் அளி.**

காதலியர்க்குக் காதலர் காட்டும் அன்பு, உழவர் எதிர்பார்த்தபடி மழை பெய்தது போன்றதாகும் என்பது இக்குறளின் பொருள்.

> **உழவர்க்கு**
> **வானம் தரும்**
> **மழை,**
> **காதலிக்குக்**
> **காதலரின்**
> **அன்பு.**

இது பெரியார்தாசன் உரை.

குறளில் 'அற்று' எனும் உவம உருபு உள்ளது. உரையில் அன்பு, மழை போன்றது என்றிருக்க வேண்டும். உவமைக்கும் பொருளுக்குமிடையே உவம உருபு இல்லாமல் எடுத்துக்காட்டு உவமையணியாய் உரையைத் தந்திருக்கிறார். குறள் உவமையணி; உரை எடுத்துக்காட்டுவமையணி.

இவ்வாறு இன்னும் பல சிறந்த உத்திகளைப் பயன்படுத்தி மிகவும் சிறப்பாய் இவ்வுரையைப் பெரியார்தாசன் தந்திருக்கிறார்.

உரை, சுமையாய் இல்லாமல் நறுஞ்சுவையாய் இனிக்கிறது.

சில சொற்களுக்குப் பொருத்தமான, எண்ணியெண்ணி மகிழத்தக்க பொருள்களைத் தந்திருக்கிறார்.

அறைபறை - தமுக்கடித்தல்.

ஊடல் - செல்லச் சண்டை.

மடல் பனங்கருக்கினால் குதிரை வடிவில் செய்யப் பெற்றதாகும். உரையாசிரியர் அனைவருமே 'மடல்' என்றே எழுதியுள்ளனர். பெரியார்தாசன் இதை 'முள் குதிரை' என்று பொருள் தெளிவுபட எழுதுகிறார்.

ஆஹா, சத்தியம், பரிசீலனை, இரசித்தல், ஜென்மம் போன்ற பிற மொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச்சொற்களை ஆண்டிருக்கலாம்.

மென்தோள் என்பதைச் சந்தனத்தோள் எனச் சொல்வதில் மென்மை, தண்மை, மணம் வீசும் தன்மை ஆகிய அனைத்தையும் சேர்த்துவிடுகிறார்.

ஒண்டொடி, அணியிழை, ஆயிழை, தோட்டார் கதுப்பினாள் எனக் காதலியைக் குறிக்கத் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ள பல்வேறு சொற்களைப் பெரியார்தாசன் 'என்னவள்' என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளார். அழகுக் குறிப்புக்கான அடைமொழிகளைச் சேர்த்திருக்கலாம். அழகைவிட, 'என்னவள்' என்று கூறும்போது உரிமை சிறந்திருப்பதாய் அவர் எண்ணியிருக்கக் கூடும்.

பெரியார்தாசன் பகுத்தறிவாளர். ஆயினும், பேச்சு வழக்கில் - நடைமுறையில் - உள்ள பகுத்தறிவுக்கொவ்வாத சில செய்திகள் அவரையுமறியாமல் உரையில் இடம் பெற்றுள்ளன. காதலன் பிரிந்திருக்கிறான்; அதனால் தலைவி தனக்கு இரவும் பகலும் எப்போதும் உறக்கமில்லை என்று கூறுகிறாள். இதனைப் பெரியார்தாசன், 'என் கண்களுக்கு எப்போதும் ஏகாதசிதான்' என்று எழுதுகிறார். ஏகாதசி பெரியார்தாசனை ஏய்த்துவிட்டு உள்ளே நுழைந்துவிட்டது.

எளிமையா இனிமையா வளமையா? - பெரியார்தாசனின் உரை இம்மூன்றும் உடைத்து. இவர் உரை பாலொடு தேன் கலந்த பாங்கினதாய் இனிக்கிறது; உள்ளுதொறும் தீராப்

பெருமகிழ்வு செய்கிறது; நயமோ ஊற்றுநீர் போலக் கொப்புளித் தெழுகிறது.

இவ்வுரை, பெரியார்தாசனின் உள்ளத்தில் அரும்பி, சிந்தனையில் போதாகி, எழுத்தில் மலர்ந்து மணம் பரப்புகிறது. முகை மொக்குள் உள்ள நாற்றம்போல இவ்வுரை மொக்குள் அறிவு நுட்பம் ஒன்றிக் கிடக்கிறது.

இவ்வுரை,

விதையில்லாப் பழம் – விழுங்கிக்கொண்டே இருக்கலாம்.
நீரருகே படர்ந்துள்ள நிழல் – குளிர்ச்சியில் சிலிர்த்துக்
கொண்டே மகிழலாம்.

பெரியார்தாசனின் உரை படிப்பதற்கின்பம்; அதற்கின்பம் அதனை நெஞ்சில் பதிய வைத்துக்கொள்ளுதலாம்.

மலரினும் தூயதிந் நூலே; பலர்இதன்
செவ்வி தலைப்படு வார்.

நூல் ஆக்கம்	பேராசிரியர் பெரியார்தாசன்
வகைமை	புதுக்கவிதை உரை
வெளியீடு	மாணவர் புத்தகப் பண்ணை, சென்னை. (1996)

(18)

வண்ணத்தமிழ் வாசல்கள்

டாக்டர் வாசவன் அவர்களின் எழுத்து மாளிகை, ஓங்கி, உயர்ந்து பொலிவோடு நிற்கிறது. இம்மாளிகையின் நான்கு திசைகளிலும் அகவுரை வாசல்கள், அணிந்துரை வாசல்கள், நட்புரை வாசல்கள், நன்றியுரை வாசல்கள் என அருமையானவையும், அழகானவையுமான எண்ண வாசல்கள் நீண்டிருக்கின்றன. அவற்றில் நடை பயின்று, எல்லையில்லாத கருத்து வளங்களைக் காணத் திரு. வாசவன் நம்மை அன்போடு அழைக்கிறார். வாசல்களின் வளம் காண்போமாக!

அகவுரை வாசல்களில் அவர் வாழ்க்கை வரலாற்றையும், அணிந்துரை வாசல்களில் அவர் பல்வேறு நூல்களுக்குத் தந்துள்ள அணிந்துரைகளையும், நட்புரை வாசல்களில் அவர் வாழ்வில், உற்ற துணையாய் நின்று ஊக்குவித்து வரும் அவர் நண்பர்களையும், நன்றியுரை வாசல்களில் அவரது எழுத்து வளர்ச்சிக்குத் துணை நின்றவர்கட்கு அவர் செலுத்தும் நன்றி உணர்வையும் நாம் காண்கிறோம்.

டாக்டர் வாசவன்

டாக்டர் வாசவன் இராமநாதபுர மாவட்டம் தேவகோட்டையிலிருந்து 13 கி.மீ. தொலைவிலுள்ள இலுப்பைக்குடி என்ற சிற்றூரில் பிறந்தவர். செல்வக் குடும்பத்திலே பிறந்த செல்லக் குழந்தை. நாற்பத்தெட்டு ஊர்களிலிருந்த நிலபுலங்களுக்கெல்லாம் ஒரே வாரிசு. பதினேழு வயதிலேயே திருமணம். சுற்றியுள்ள எட்டுப்பட்டி ஊர்களும் இவர் குடும்பத்துக்குக் கட்டுப்பட்டவை. அழகிய சிற்றம்பலக்கவிராயர் மரபினராகிய இவர், எழுத்தாளனாக வேண்டுமென்ற உந்துதலால் சென்னை வந்தவர். சினிமா ரசிகன், பேசும் குரல், மோகினி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராய்ப் பணியாற்றினார். 1951இல் 'சம்சாரம்' எனும் இரு மொழி மாத இதழினைத் தொடங்கினார். பெருத்த பண இழப்பு. பணக்காரராய் இருந்த இவரைப் பரம ஏழையாக்கிவிட்ட, 'சம்சாரம்' இதழ் கண்ணை மூடிக்கொண்டது. வறுமையின் கொடுமைப்பிடியில்

சிக்குண்டார். என்றாலும், உயர்ந்த உள்ளத்தாலும் அயரா உழைப்பாலும், தாம் விரும்பிய எழுத்துத் துறையில் படிப்படியாய் முன்னேறி, இன்று, பொருளால் இல்லையென்றாலும், எழுத்தால், எண்ணத்தால் இமயமாய் விளங்கி வருகிறார். 293 நூல்களை எழுதியுள்ளார்; ஆயிரக்கணக்கான சிறுகதைகளைப் படைத்துள்ளார்; அரிய பல கட்டுரைகளையும் வரைந்திருக்கிறார். ஒரு துளி மை பல இலட்சம் மக்களைச் சிந்திக்கச் செய்யும். (A drop of ink may make a million think) என்றார், பைரன். பல இலட்சப் பணத்தை இழந்தாலும், டாக்டர் வாசவன் இன்று சில துளி மையினால் கோடிக்கணக்கானவர் உள்ளங்களை ஆண்டு வருகிறார். அவர் இலக்கு வானைப் போல் பரந்து விரிந்தது. என்றாலும், தம் சிறிய மைக்கோலைக்கொண்டு சுற்றி, வலம் வந்து, வெற்றி கண்டிருக்கிறார் என்பது பெருமைக்குரிய செய்தி.

எழுத்து வேந்தர்

"எனக்குப் புகழ் வேண்டும். பத்தோடு பதினொன்றாய்ப் பிறந்து, அத்தோடு 'இதுவும்' ஒன்று என்னும் வகையில் சாக விரும்பவில்லை நான். நான் இறந்ததற்குப் பிறகு எனக்குச் சரித்திரம் வேண்டும்'' என்ற உறுதியைக் கொண்டிருப்பவர், வாசவன். 'இந்த வரலாற்றை அடைந்தே ஆக வேண்டும்' என்பதற்காகவே அவர், எழுதுகோல் பிடித்திருக்கிறார். இப்போதோ அவர் எழுத்து வேந்தராய் - வாழும் வரலாறாய் - இருந்து வருகிறார்.

"எழுத்து என் உயிர்; என் வாழ்க்கை; என் உலகம்" எனச் சொல்லும் இவர், அந்த எழுத்தில் ஒரு தனித்தன்மை இருக்க வேண்டுமென விழைகிறார். "எதை எழுதினாலும் 'இது வாசவன்' என்ற முத்திரை விழவேண்டும்'' என்கிறார். இவர் பெரும் தன்னம்பிக்கையாளர். "என் எழுத்துக்கு மூப்பு இல்லை; நரை இல்லை; மரணம் இல்லை'' என உறுதியோடு சொல்கிறார். "எழுத்தை விட்டு என்னை யாரும் நீக்கிவிட முடியாது" என நெஞ்சு நிமிர்ந்து சொல்கிறார். எழுத்தைவிட அவருக்கு வேறு எதுவும் முக்கியம் அன்று. ''நான் சோற்றுக்குப் பிறந்தவன் அல்லன்; சொல்லப் பிறந்தவன்" எனச் செம்மாந்து சொல்கிறார்.

எழுத்துக் கண்ணகி

'எழுத்தில் ஒழுக்கம் இருக்க வேண்டும்' என வாசவன் கண்டிப்புடன் கூறுகிறார். "இந்த 51 ஆண்டுக் காலமாய் எழுத்தின் கற்பைக் காத்து நிற்கும் கண்ணகி நான்'' எனப் பெருமை

பொங்கக் கூறுகிறார். 'சிரஞ்சீவி இலக்கியங்களைப் படைக்க விரும்புபவர்களுக்கு ஒழுக்கமே எழுதுகோலாயும் ஊன்று கோலாயும் இருக்க வேண்டு'மென அழுத்திச் சொல்கிறார்.

தொடக்க காலத்தில் தாம் எழுதியவை சமுதாயத்திற்கு ஒரு வகையில் வேண்டாதவை என்பதை உணர்கிறார். தம்மைத் தாமே திறனாய்வு செய்துகொள்ளுகின்ற இந்தப் பக்குவம், மாமனிதர்கட்கே உரியது. ஆவேசம் பிடித்த எழுத்தாளனாய், அவசரத்தில் கண்ணை மூடிக்கொண்டு, அன்றைய எழுத்தில் மனிதத் தன்மைகளைக் காட்டாததற்காகப் பெரிதும் வருந்துகிறார். முன்பு எழுதிக் குவித்ததை இலக்கியத் தராசில் எடை போட்டுப் பார்த்தால், குவித்தனவெல்லாம் குப்பையே என்றுணர்ந்து, 'எழுத்தில் எதை விலக்குவது, எதை விளக்குவது?' என்பதை உணர்ந்துகொண்ட புதிய எழுத்தாளராய்ப் பிறப்பெடுக்கிறார். 'மழைக்காலத்தில் தோன்றி உடனே மடியும் ஈசலைப் போல அந்த வேளைக்காக மட்டுமே எழுத்து அமையக்கூடாது; அது என்றும் நிலைத்து நிற்கக்கூடியதாய் இருக்க வேண்டும்' என்பது அவரது கொள்கையாயிற்று. அதனால் தரையில் சாய்ந்து கிடந்த தன் எழுத்துக் கொடிக்கம்பத்தை எடுத்துத் தூக்கி நிறுத்தி, என்றும் சாயாததாய் நிலைக்கச் செய்துகொண்டார்.

இப்போதோ, பயனில்லாது எழுதுகிற எழுத்தாளர்களைப் பொங்கிச் சீறுகிறார்! "எதிலும் ஒளிவு மறைவு இல்லை; சதைகள் கதைகள் ஆகின்றன; கற்பூரக் கடையில் கருவாடுகள் விற்கப் படுகின்றன" எனக் குமைகிறார். "நாளைக்கு இவற்றால் நிற்க முடியுமா என்று சோழி போட்டுப் பார்ப்பதைவிட, இன்றே முளைத்து, இன்றே பலனைத் தருகின்ற படைப்புகளை விவசாயம் செய்வதில் ஆர்வலர்களாயும், இலாப நோக்கினர்களாயும் இருக்கிறார்கள், பெரும்பாலான படைப்பாளர்கள்" என மனம் கலங்கி 'எழுத்துலகம் திருந்த வேண்டும்' என எடுத்துரைக்கிறார்.

விடாமுயற்சியின் வெற்றி

எழுத்தாளர்கள் வாசவனின் விடா முயற்சியைப் பாடமாய்க் கொள்ள வேண்டும். பல்லாயிரக்கணக்கான எழுத்துப் பறவைகள் அமர்ந்து இளைப்பாறி, இனிய கனிகளை உண்டு களிக்கும் செழித்த ஆல மரமாய் இன்று வாசவன் விளங்குகிறார் என்றாலும், அடடா, அந்த ஆலின் 'விதை' முளைப்பதற்குள் பட்ட பாடு சொல்லுந் தரமன்று. ஆனந்த விகடனுக்குத் தொடர்ந்து 51 கதைகள் அனுப்பினார். அவை. போன விரைவிலேயே திரும்பி வந்தன.

52 ஆவது தடவையாய் அனுப்பிய கதை வெளியாயிற்று. கதையின் தலைப்பு, 'அது ஒரு வேளை.' வாசவனின் வளர்ச்சிக்கு அது நல்ல வேளையே! கலைமகளுக்குத் தொடர்ந்து 105 கதைகள் அனுப்பினார்; வெளியிடப்படவில்லை. 106ஆவதாய் அனுப்பிய 'சாவிலே வாழ்வு' என்ற கதை வெளியாயிற்று! ஆம்! 105 கதைகளின் சாவிற்குப் பிறகு 106ஆவது கதை, வாழ்வு பெற்றிருக்கிறது. தோல்வியைக் கண்டு துவளாத எஃகு உள்ளம் கொண்டவர் என்பதற்கு இவை தக்க சான்றுகளாம்!

நூல் நுவல் பொருள்

அணிந்துரை வாசல்களில் சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம், பயண நூல், ஆய்வேடுகள் ஆகியனபற்றி வாசவன் கருத்துகளை அறிந்துகொள்ள முடிகிறது. அணிந்துரைகள் எழுதும் போது, நூலுள் உள்ள செய்திகளைவிட நூலாசிரியரை முதன்மைப் படுத்தி, அவரை உயர்த்துகின்ற தாயுள்ளம் கொண்டவராய் வாசவன் விளங்குகின்றார். 'எழுத்தாளர்கள் வளர வேண்டும்; பெரும்புகழ் ஈட்ட வேண்டும்' என அனைவரையும் கை தூக்கி விடுகின்ற தாராளப் போக்கினை அவர் அணிந்துரைகளில் காணமுடிகிறது.

சிறுகதை

பல்லாயிரக்கணக்கான சிறுகதைகளை எழுதியிருக்கும் வாசவன், சிறுகதைபற்றிச் சொல்லும் கருத்து தனிச் சிறப்புக் கொண்டதன்றோ? "மன்மதக் கலையும் சிறுகதையும் ஒன்று. இரண்டும் சொல்லித் தெரிவதில்லை; சொல்லியும் வருவதில்லை. இரத்த நாளங்களில் சூடேற்றி, உணர்ச்சிகள் ஒவ்வொன்றையும் 'தொம் தொம்' என்று துவம்சம் செய்து, இரவையும் பகலையும் காணாமல் அடித்து, நீயும் நானும் இல்லாமல் போய், விண்ணையும் மண்ணையும் பெயர்த்தெறிந்து, 'இனி என் கர்ஜனையைத் தவிர வேறேதும் இல்லை' என்று பிரளய கர்ஜனையுடன் எது வெடித்து வருகிறதோ, அதுதான் சாகா வரம் பெற்ற சிறுகதை" - சிறுகதைக்கு வாசவன் கொடுக்கும் வரையறை இது.

"கதைக்குக் கால் முளைத்தால் மட்டும் போதாது. இறக்கைகளும் முளைக்க வேண்டும். அந்த இறக்கைகள் : சுருங்கச் சொல்லல், சுருக்கெனச் சொல்லல். சிறுகதை, வடிவத்தில் சிறிதானாலும், வானத்தையும் பூமியையும் அளந்துவிட்டு, அளப்பதற்கு இன்னும் இடங்கேட்கின்ற வாமனனைப் போன்றது.

இராம பாணத்தைப் போன்று குறி தவறாமல் இலக்கை எட்டக் கூடியது. அதனால்தான் வேறெந்தப் படைப்பிலக்கியத்தையும் விடச் சிறுகதை, உலகளாவிக் கோலோச்சுகிறது. நீங்கள் பார்க்கிற, பழகுகிற, உங்களையும் மற்றவர்களையும் பாதிக்கிற ஒவ்வொரு நிகழ்ச்சியுமே சிறுகதைதாம்'' - சிறுகதைபற்றிய வாசவனின் எண்ணம் இங்கே பதிவாகியிருக்கிறது.

"மேட்டுக்குடிகளின் உப்பரிகையிலே உலவிக்கொண்டிருந்த சிறுகதையைத் தாழ்வாரத்திற்கு இறக்கிக் கொண்டுவந்து, எளியவர்களுக்கு அறிமுகப்படுத்தி, அழகு செய்தவர் அறிஞர் அண்ணா" என அண்ணாவின் சிறுகதைகளைப் பாராட்டுவதோடு, 'அதுவரை ஊமையாய் இருந்த சிறுகதை, அறிஞர் அண்ணா அவர்களால்தான் வாய் திறந்து தமிழ் பேசிற்று, என்கிறார்.

கவிதை

கவிஞன் பிறப்பவனல்லன்; பிறப்பிப்பவன்; தன்னைத் தானே பிறப்பித்துக்கொள்பவன் - கவிஞனுக்கு வாசவன் கூறும் இலக்கணம் இது.

தன்மானத்தைவிடக் கவி மானம் பெரிது. சோரக் கவிதைகள் தெருமுனைவரைகூடச் செல்வதில்லை; சாரக் கவிதைகளே சரித்திரம் படைக்கின்றன. இது கவிதைபற்றிய வாசவனின் கணிப்பு.

இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கிக் கவிதையை எடுத்துச் செல்வதற்கு 'மானம்' என்னும் புதிய ஊர்தியைப் பயன்படுத்தாவிட்டால் 18ஆம் நூற்றாண்டுகளில் பிறந்து செத்தொழிந்த பிரபந்தங்களைப் போன்று, மானமற்ற கவிதைகளும் நாளைக்கு மரணித்துப்போகும் - கவிதைப் பயன்பாடு பற்றிய வாசவனின் கருத்துரை இது.

'புதுக்கவிதை' என்னும் பெயரில், வான்கோழிகளெல்லாம் வண்ண மயில்களாய்த் தம்மை நினைத்துக்கொண்டு பொல்லாச் சிறகை விரித்தாடுவதைக் கண்டு வாசவனுக்குக் கோபம் வருகிறது. ஆனால், அவர் கோபம் போலிகள்மீதுதானேயன்றிப் 'புதுக் கவிதைமீது அன்று' என்பதும் புரிகின்றது.

சிறுவர் இலக்கியம்

பல் முளைக்காத சின்னஞ்சிறார்களுக்குக் குழையக் குழைய அமுதூட்டுவதைப் போல் குழந்தைகளின் பிஞ்சு மனத்திலே பதியும்வண்ணம் மென்மையான சொற்களை, மேன்மையான

கருத்துகளைக்கொண்டு குழந்தை இலக்கியம் உருவாக்கப்பட வேண்டும். பாதரசத்தைப் பனிக்கட்டியாக்குகிற இரசவாதம் இது.

மலையைப் பிளப்பது சுலபம். ஆனால், வைரத்தைச் செதுக்குவது கடினம். அதைப் போல், பெரியவர்களுக்கு எழுதுவது எளிது; ஆனால், குழந்தைகளுக்கு எழுதிச் செல்லுவது கடினம். - இவை குழந்தை எழுத்தாளர் ஒவ்வொருவரும் மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டிய பொன் மொழிகள்.

பயண நூல்கள்

பயண நூல்கள் பலவிதம் எனக் கூறும் வாசவன், தமிழ் நாட்டில் புழங்கி வரும் ஒவ்வொருவரின் பயண நூலிலும் ஒரு தனிச் சிறப்புக் காணுகிறார். "ஏ.கே. செட்டியாரின் பயண நூல்களில், ஒரு தமிழனின் தவிப்பும் சாதனையும் இருக்கும்; சோமலெ. அவர்களுடைய நூலில், பயணித்த நாடுகளின் வரலாறும் மக்களின் வாழ்வும் பட்டு இழைகள் போலப் பின்னிப் பின்னி வரும். தேவனின் நூலில், நாடுகளைவிட நல்லவர்கள் அதிகம் வந்து வந்து போவார்கள்..." என இப்படி ஒவ்வொருவர் பயண நூலிலும் உள்ள முக்கியப் பண்பைக் கூறிவருபவர், தம் கருத்தாய், "படிப்பவர் எவரையேனும் அந்நாட்டுக்கு எது அழைத்துச் செல்லுகிறதோ, அதுவே பயனுள்ள பயண நூல்" எனக் கூறுவது, அருமையிலும் அருமையாய் இருக்கிறது.

ஆய்வேடுகள்

ஆய்வேடுகள் இன்று பெருமளவில் அச்சில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆய்வின் அடிப்படைக் கொள்கைகளை நன்குணர்ந்துள்ள வாசவனார், ஆய்வேடுகள் அமைய வேண்டிய முறையை அழகுபட எடுத்துச் சொல்கிறார். ஆய்வுகள் சுளுக்கு எடுக்கப்படுவனவாய் அமைந்திட வேண்டும்; மாறாய், ஒழுங்கான ஒன்றை ஊனப்படுத்திவிடக்கூடாது.

"ஆய்வு நூல்களில் சான்று அடுக்குகள் ஏராளம். சுற்றுச் சுவர்களாய் இருக்க வேண்டிய சான்றுகள், சில சமயங்களில் மாளிகையாய் அமைய வேண்டிய மூல நூலினை மறைத்துவிடும் பரிதாபங்கள் பல நேரங்களில் ஏற்படுகின்றன." - ஆய்வுபற்றிய வாசவனாரின் இந்தக் கருத்துகள் மிகவும் ஆழமானவை. 'ஆய்வாளர்கள் வழிகாட்டுதலாய் எடுத்துக்கொள்ள வேண்டிய நெறிமுறைகள்' எனக் கூறுவது மிகையாகாது.

வாசவனாரின் இந்நூலின் சிறப்பைச் சொல்ல, அவர் சொற்களே - அவர் பிறர் நூல்கள்பற்றிச் சொல்லியுள்ளவையே -

மிகவும் பொருத்தமானவை. ஆகவே, அவற்றைத் தொகுத்தால் - அச்சிறு தொகுப்பு இந்நூலின் அழகை ஓரளவே நமக்குத் தெரிவிப்பதாய் இருக்குமெனக் கூறி அதை இங்கே தருகிறேன். "இந்நூலில் ஒரு சொல்லைச் சோரவிட்டாலும் சுகம் போய்விடும். இங்கே, தமிழ், காலில் சதங்கை கட்டிக்கொண்டு ஆடுகிறது; உருக்கம் பெருக்கமாய் நிறைந்து பாறை மனத்தையும் பனி மலையாக்குகிற அற்புதம் வரிகளாய் வடிவம் எடுத்திருக்கிறது. இந்நூலில், வார்த்தைகளில் அடைசல் இல்லை; புதர் இல்லை; அநாவசியம் ஏதும் இல்லை. பக்கத்துக்குப் பக்கம் பொற் சுரங்கங்கள்; புரட்சியான கருத்துகள்; ஏற்றுக்கொண்டே தீர வேண்டிய, அறிவின் நோய்க்குக் குணமளிக்கும் மாத்திரைகள். குடங்குடமாய் நிரப்பி வைத்த இளநீர். பருகும்போது இனித்து, பருகிய பின்னரும் நினைவில் நின்று இனித்துச் சுவையூட்ட வல்லதாய் இவர் எழுத்து இருக்கிறது.'' இவ்வாறு பிறர் நூல்களுக்கு இவர் தந்துள்ள அணிந்துரைகளை இவருடைய இந்நூலுக்குச் சொல்லலாம் என்றாலும், அது நூலின் முழு அழகையும் சொல்லியதாய் அமையாது என்று உணர்கிறேன்.

தமிழ்ப்பண்பு

வாசவனார், தமிழை முறையாய்ப் பயின்றவர். 'நாள்தோறும் நிகண்டில் இரு பாடல்களேனும் படித்து ஒப்புவித்தால்தான் சோறு' என்கிற வகையில் மிகச்சிறிய வயதிலேயே தமிழ் கற்பிக்கப்பட்டவர். ஆகவேதான், அவர் தமிழ் இன்று நிமிர்ந்து நிற்கிறது. 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' ஆக இருக்க வேண்டுமென்பது நம் ஆசை. ஆனால்,

மணக்கவரும் தென்றலிலே
குளிரா இல்லை? தோப்பில்
நிழலா இல்லை?
தணிப்பரிதாம் துன்பமிது
தமிழகத்தின் தமிழ்த்தெருவில்
தமிழ்தான் இல்லை

எனும் பாவேந்தர் பாடலடிகள் கூறும் நிலைதான் இன்றைய தமிழகத்தின் உண்மைநிலையாய் உள்ளது. வாசவனாரோ, எழுத்து மட்டும் தமிழாய் இருந்தால் போதாது; அந்த எழுத்துக்குள்ளேயுள்ள எண்ணமும் தமிழாய் இருக்கவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்.

"இதயமாகிய தமிழ், இன்று எழுத்தில், ஒரு சூழ்ச்சியான தந்திரத்தோடு நிராகரிக்கப்படும் முயற்சி, திருட்டுத்தனமாய்

நடைபெற்று வருகிறது. இலக்கியத்தைப் பொறுத்தவரையில் தமிழ், தமிழை வெறுக்கிற அல்லது முறையாய்த் தமிழ் பயிலாத சில வேற்றவர்களின் கையில் இருக்கிறது. அவர்கள் தமிழ் இலக்கியத்தில் 'ஹிப்பி' பாணியைப் புகுத்தி, தமிழ்ப்பண்பை மீறி, குட்டையைக் குழப்பி, தமிழ் இலக்கியத்தின் அழகிய முகத்தை விகாரப்படுத்திவிடுகிறார்களே" என வேதனைப்படுகிறார். தமிழ்ப்பெண்மையைத் தரகு விட்டு எழுதி மகிழ்ந்து கொண்டிருக்கும் புன்மை எழுத்தாளர்களை வாசவனாரின் எழுதுகோல் வன்மையாய்க் கண்டிக்கிறது. 'தமிழ்ப்பண்பு இல்லா எழுத்து தமிழே அன்று' என அழுத்தம் திருத்தமாய்ச் சொல்கிறார்.

நயவுரைகள்

நூலின் பக்கத்திற்குப் பக்கம் நயவுரைகள் கொழிக்கின்றன. வாசவன் எதைச் சொன்னாலும், அதிலே ஒரு நயம். அச்சுக் கோப்பவனாய் ஒரு காலத்தில் இருந்த வாசவனார், இன்று நாடு போற்றும் சிறந்த எழுத்தாளராய்த் திகழ்கிறார்! இந்த வளர்ச்சியை அவர் கூறுவதிலே, அவரது எழுத்தின் தனித்த தன்மையைக் காண்கிறோம்! "நான் அச்சுக் கோப்பவன் ஆனேன். மூன்றாண்டுகள் அச்சுக்கரியில் நான் வாசம் செய்தேன். கரிதானே வைரமாகிறது? பிறகு என் வளர்ச்சியில் வைரத்தைக் காண்பதற்கு, அப்பொழுது நான் கரியானேன்." இவர் 'வைர எழுத்தாளர்' என்பதற்கு இப்பகுதியைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

அவர் மனிதர்களைப் பல வகையினராய்ப் பிரித்துக் கூறியிருப்பது எண்ணியெண்ணி அசைபோடக்கூடியது.

புல் மனிதர்	மற்றவர்க்குப் பயன்படுபவர்.
புழு மனிதர்	பிறரைக் குடைந்துகொண்டே இருப்பவர்.
நெல் மனிதர்	சத்து மிகுந்தவர்.
உழவாரப்படை மனிதர்	தொண்டு செய்து கிடப்பவர்.
வேர் மனிதர்	ஆதாரமாய் இருந்து வளர்ப்பவர்.
பேர் மனிதர்	புகழுக்கு வீங்குபவர்.
முகவரி மனிதர்	முகம் இல்லாதவர்க்கும் முகவரியைக் கொடுப்பவர்.

இந்த மனிதர்களுள் எந்த மனிதராய் விளங்குவது? ஓயாது சிந்திக்கச் செய்யும் ஒப்பற்ற மனிதப்பகுப்பு முறை இது.

தொன்மைக் கதைநிகழ்ச்சிகளை இணைத்து இன்றைய நிலையைச் சொல்வது, வாசவனார்க்குக் கைவந்த கலையாய் இருக்கிறது. 'சிலருக்கே வானொலி வாய்ப்பு' என்றிருந்த நிலை மாறி, 'எல்லோருக்கும் அந்த வாய்ப்புக் கிடைத்தது' என்பதை, "நந்தனார்களாய் - தொலைதூரத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட வாயில்லாப் பூச்சிகளாய் இருந்த எழுத்தாளர்களுக்குச் 'சுகி'யாரின் காலத்தில்தான் 'வானொலிப் பிரவேசம்' நிகழ்ந்தது" - இந்த ஒரு தொடர், தன்னுள்ளே பொதிந்து வைத்திருக்கும் கருத்து நயத்தை எடுத்து விளக்கிக்கொண்டே இருக்கலாம்.

வாழ்க்கையில் நாம் அன்றாடம் காணும் நிகழ்ச்சிகளைச் சுட்டி, அருமையான கருத்தை நம் உள்ளத்தே நயமாய்ப் புகுத்தி விடுகிறார். சான்றுக்கு ஒன்று : "தழைகள் மிகுதியாய்க் காணப்படும் செடிகள் பூப்பதில்லை; அதனால் மிகுதியாய் உள்ள தழைகளைக் கழித்துவிடுகின்றார்கள். பிறகு, பூக்காத செடிகள் பூத்துக் குலுங்குகின்றன. கரும்பின் வளர்ச்சிக்கு அதன் தோகையே தடை. அதனால் அதன் தோகையைக் கழிக்கிறார்கள். பின்னர்க் கரும்பு வாளிப்புடன் வளரத் தொடங்குகிறது... அதைப் போல, நம்மிடையே கழிக்கப்பட வேண்டிய இயல்புகளும் பழக்க வழக்கங்களும் ஏராளமாய் இருக்கின்றன."

"வேண்டியவர்கள் வேண்டும் போதெல்லாம் வெறியாட்டம் ஆட ஒரு பெண்ணை விலைபேசி வைத்திருக்கிறார்கள். அந்தப் புறம்போக்குப் புல்லை மேயாத காமக் கடாக்களே இல்லை!" - 'புறம்போக்குப் புல்', 'காமக்கடா' என்ற இரு சொற்களில் புதைந்து கிடக்கும் பொருள்தான் எத்துணை! எத்துணை! இப்படி நறுக்கெனச் சொல்வது புதுக் கவிதையின் பல கூறுகளுள் ஒன்று.

"நான் பயப்படாமல் இருப்பதற்காக முட்கள் குத்தாமல் இருக்குமா?"

"குளத்தில் மீன் பிடிக்கலாம்; கப்பல் விட முடியுமா?" - இப்படிப்பட்ட சுவையான - நயமான கருத்தாழம் கொண்ட தொடர்கள் இந்நூலுள் ஏராளம்! ஏராளம்!

அறிவுரை

கட்டுரைகளின் இடையிடையே அறிவுரைகள் - மனித குலத்தின் நல்வாழ்வு கருதிய பொருளுரைகள் - நிறையப் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. அவற்றைத் தொகுத்தால் அதுவே ஒரு தனி நூலாகும். வாசவனாரின் வாசனை மலர்கள் என அப்படியொரு தொகுப்பு வர வேண்டுமென்பது எனது ஆசை.

முக்கியமான சில பொருளுரைகளை மட்டும் மாதிரிக்காக இங்கே தந்திருக்கிறேன்.

"வாழை மரத்தின் பட்டைகள் ஒன்றன்மேல் ஒன்றாய் ஒழுங்கோடு அமைந்திருக்கின்றன. இது ஏற்பாடு செய்யப்பட்ட ஒழுங்கன்று, இயல்பாகவே அமைந்திட்ட ஒழுங்கு. நாம் இந்த வாழையைப் போல, இயல்பாய் இசைந்த ஒழுங்கைக் கூட்டிக் கொள்ள வேண்டும்" - இது வாசவனாரின் அறிவுரை.

"பாவத்தில் வரும் பணம் வெள்ளத்தைப் போலப் பெருகிக் கரை புரளும். கறை படிந்த அந்தப் பணம், கரையை உடைத்துக் கொண்டு ஓடிப்போகும்... ஆனால், பண்பின் வழியே வரும் பணமோ ஊற்றைப் போன்றது. அது துளித்துளியாய்ப் பெருகிக் கொண்டே போகும்" - எந்த வழியில் நீங்கள் ஈட்டப்போகிறீர்கள்? இது வாசவனாரின் வினா.

"நலங்கள் எங்கேயோ இல்லை; நமக்குள்ளேயே இருக்கின்றன. ஆனால், அந்த நலங்களை நாம் அடைய இயலாத வண்ணம் நம்மை விலக்கி வைத்து வேதனைப்படுத்துவது வேறு யாரோ அல்லர்! நாமேதாம்! நமக்குள் நல்ல குணங்களின் ஆதிக்கத்தைவிடத் தீய குணங்களின் ஆளுகை மிகப்பெரிது. அதனால் களைகள் மிகுந்த கழனியாய் விளங்கும் நம் மனத்தில், அறிவின் துணை கொண்டு, அந்தக் களைகளை எல்லாம் அகற்றி விட்டால், நெல் விளைந்துகொண்டே இருக்கும்" - வள்ளுவனார் குறளுக்கு வாசவனின் விளக்கம் இது.

"மனிதனின் மனம் பாற்கடல் போன்றது. தீய எண்ணங் களால் கடையப்படும் போது மனத்தில் நஞ்சு பொங்கி வரு கின்றது; நல்ல எண்ணங்களால் நிரம்பும் போது, மனத்தில் அமுதம் பெருகி வருகின்றது." அமுதமா, நஞ்சா? எது தேவை? தீர்மானிக்கச் சொல்கிறார், வாசவன்.

வாழ்க்கைத்துணை நலம்

திரு. வாசவனார் இன்றைய பிசிராந்தையார். அன்றைய பிசிராந்தையாரை, "புலவர் பெருந்தகையே! உமக்கு வயது முதிர்ந்தும் இன்னும் நரை தோன்றவில்லையே, ஏன்?" என்று கேட்டனராம். உடனே அவர், "என் மனைவி மாட்சிமைப் பட்டவள்" என்றாராம். "மனைவி மாட்சியளாய் இருப்பதால், என் எல்லா நலன்களையும் கவனித்துக்கொள்கிறாள். எனக்கு எது நேர்ந்தாலும் இடி தாங்கியாய் இருந்து என் இன்னல்களை யெல்லாம் களைகிறாள். ஆதலால் எனக்குக் கவலை இல்லை;

அதனால் நரையில்லை" எனக் கவிஞரின் தொடருக்கு விளக்கம் தருவார்கள்! அத்தகைய மாட்சிமைவாய்ந்த மனைவி அமைந்ததால்தான் வாசவன் இன்றைய வாசவனாய் இருக்கிறார். இன்றேல், அவர் வாழ்க்கை எப்படி ஆகியிருக்குமோ, சொல்ல முடியாது!... மனைவி வெறும் வாழ்க்கைத்துணையாய் மட்டும் இன்றி நலமான துணையாயும் இருக்க வேண்டும் என்னும் கருத்தினால்தான், திருக்குறள் அதிகாரத்திற்கு 'வாழ்க்கைத்துணை நலம்' எனத் தலைப்புத் தரப்பட்டுள்ளது. 'நலம்' என்ற அந்தச் சொல்லுக்கு முழு விளக்கமாய் அமைந்திருப்பவர் வாசவனாரின் துணைவியார் திருமதி இலட்சுமி அவர்களே!

வாசவன் உள்ளம் கசிந்து உருகுகிறார் :

"நம் வீட்டில் சோறு வெந்த நாள்களைவிட, உன் நெஞ்சு வெந்த நாள்களே அதிகம்! இலட்சுமி, நீ அதற்காக முகம் வெந்ததில்லையே! நம் இருட்டு வாழ்க்கையில் நான் உன் முகம் பார்த்து விடிந்தேன். நான் விடிவதற்காக, நீ இருட்டில் இருந்த நாள்கள் எத்தனை! எத்தனை!"

தலைவன் பொருளீட்ட வெளியூர் செல்வதறிந்து தலைவி வருந்துகிறாள். அப்போது அவள், தோழியிடம், "தலைவன் செல்லும் பாலை நில வழியில் வெயில் சுட்டெரிப்பதால் இலைகள் எல்லாம் உதிர்ந்துபோன வற்றல் மரம், நிழல் தாராமையால் வருந்துகின்ற பெண் புறாவுக்கு ஆண் புறா தன் சிறகை விரித்து நிழலாய் நிற்கும். இதைப் பார்க்கும் தலைவன், அன்பின் பெருமையை உணர்ந்து உடனே திரும்பிவிடுவான்" என்று கூறி, ஆறுதல் கொள்கிறாள்.

அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ரால்ஆற்றும் புறவுஎனவும் உரைத்தனரே!

என்பன கலித்தொகைப் பாடலடிகள்! இந்த அன்பின் பெருக்கத்தை வாசவன் தம் மனைவியிடம் கண்டு நெகிழ்ந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து நாத் தழுதழுக்கக் கூறுகிறார் "இலட்சுமி! நீ பெண்ணாய்ப் பிறந்தாலும், 'நீ வாழ முடியாது' என்று விதி பல்லைக் கடித்தபோதும், 'நீ பூ மரமாகி நிழல் தருகின்றாய்! என் மேல் வெயில் விழாமல் காத்தருள்கின்றாய்" என வாழ்க்கைத் துணைநலத்தைப் போற்றி மகிழ்கிறார். இத்தகைய வாழ்க்கைத் துணைநலம் இருப்பதால்தான் வாசவன் இன்று வாசமுள்ளவராய் இருக்கிறார். (வாசம் மணம்; வாழ்க்கை) வாழ்க பல்லாண்டு அப்பெண்குலப் பொன்விளக்கு.

நட்பு நலம்

'நண்பர்கள் இன்றேல் நானில்லை' என்பதை நட்புரை வாசல்களில், தம் உள்ளத்தின் ஆழத்தே ஊற்றெடுக்கும் உணர்ச்சி வெள்ளப் பெருக்கோடு கூறுகிறார். 'நல்லோர் நட்பு மாலை நிழலைப் போன்றது; மேலும் மேலும் வளரும்; தீயோர் நட்பு காலை நிழல் போன்றது. படிப்படியே குறையும்'' என்பார் 'பர்த்ருகரி' எனும் அரசப்புலவர். வாசவனார் 'மாலை நிழலாய்' இருக்கும் மாண்புடையவர்கள் நட்பைப் பெற்றிருக்கிறார். ஆராய்ந்து, தேர்ந்து, அத்தகையவர்களிடம் மட்டுமே அவர் நட்புக் கொள்ளுகிறார்.

நன்றியுணர்ச்சி

'கடவுளின் உறைவிடம் இரண்டு. ஒன்று, வானுலகு; மற்றொன்று, பணிவோடு நன்றி தெரிவிப்பவர் உள்ளம் என்றார் அறிஞர் ஒருவர். (God has two dwellings; one in heaven, and the other in a meek and thankful heart-Izeak walton) வாசவனார் தமக்குத் துணை நின்ற - தாம் பழகிய - சான்றோர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முறையைக் காணும்போது, கடவுள் இவர் உள்ளத்தில் மட்டுமே குடியிருப்பார் என்று சொல்லத் தோன்றுகிறது. 'நன்றி மறவாமை' என்னும் இவ்வுயரிய பண்பு வாசவனாரின் தனிப் பெரும் சொத்தாய் இருப்பதால்தான், அவர் என்றும் மகிழ்வோடும் நிறைவோடும் இருக்க முடிகிறது.

''வாழும் காலத்தில், என்றும் வாழ்கின்ற இலக்கியத்தைப் படைப்பவன், எக்காலத்தும் இறப்பதே இல்லை. என்றும் இறக்காதவனே! என்றும் இருப்பவனே! என் மதிப்பிற்குரிய படைப்பாளியே! இலக்கியத்தை ஆள்வதால் நீயே ஆண்டவன். நீ நல்ல வரவுகளைக் கொடு. இந்த மனித குலம் நேர்மையாயும் சீர்மையாயும் கூர்மையாயும் வாழட்டும்'' வாசவனார் படைப்பாளிக்குச் சொன்ன இதே தொடர்களை அவருக்கே உரிமையாக்கி, "வாசவனாரே! நல்ல வரவுகளை நாள்தோறும் - கணந்தோறும் நல்கிக்கொண்டே இருங்கள்" என நாக்குளிரச் சொல்லி, உள நிறைவோடு வேண்டிக்கொள்கிறோம்!

நூல் ஆக்கம்	கலைமாமணி டாக்டர் வாசவன்
வகைமை	கட்டுரைகள்
வெளியீடு	விக்னேஷ் வெளியீடு, சென்னை.(1996)

19

தமிழில் ஆட்சிச் சொற்கள்

தமிழ், ஆட்சி மொழியாய்ச் செயல்படவேண்டும் எனச் சட்டம் இயற்றப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் முழு வெற்றி கண்டுள்ளோம் என்று சொல்வதற்கில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், முக்கியக் காரணம் நிருவாகத்திலிருப்போர் தமிழ் ஆட்சிச் சொற்களைப் போதிய அளவில் அறிந்து பயன்படுத்த முன்வராமையேயாகும். பன்னெடுங் காலம் ஆங்கிலத்திலேயே எழுதியும் பேசியும் வந்ததால், அவர்களுக்கு ஆங்கிலமே முன் நிற்கிறது; தமிழில் உரிய சொற்களை அறிந்து பயன்படுத்த வேண்டுமெனும் ஆர்வம் இன்னும் பலரிடத்தில் தோன்றவில்லை.

தமிழ்நாடு பல்லவர், மொகலாயர், நாயக்கர், மராத்தியர், ஐரோப்பியர் ஆகியோர் ஆளுகையின்கீழ் இருந்த காலத்தி லெல்லாம் அவர்கள் மொழிச்சொற்கள் ஆட்சி நிருவாகத்தில் புழக்கத்திற்கு வந்துள்ளன. அவை இன்றும் தொடர்ந்து இருந்து வரக் காண்கிறோம். வடமொழி தமிழோடு பன்னெடுங்காலம் தொடர்பு கொண்டிருந்ததால் அதன் செல்வாக்கும் தமிழில் நுழையலாயிற்று. வடசொல், தமிழ்ச்சொல் என வேறுபாடு தெரியாத அளவுக்குப் பெருமளவில் வடசொற்களைக் கலந்து எழுதுகின்ற போக்கும் இருந்து வருகிறது.

இந்நிலையில், தமிழில் ஆட்சி நடைபெறவும், ஆட்சிச் சொற்களை அறியவும், வேண்டுமிடங்களில் புதிய சொற்களைப் படைத்துக்கொள்ளவும் வழிவகை காணும் முறையில் முனைவர் சி.செல்வராஜ், ‘தமிழில் ஆட்சிச் சொற்கள்’ எனும் இந்நூலை வெளிக்கொணர்ந்துள்ளார். இஃது இவர் முனைவர் பட்டத்திற்கு அளிக்கப்பட்ட ஆய்வேட்டின் பதிப்பாகும்.

தொல்காப்பியர் காலத்தில் கிடைக்கும்
ஆட்சிச் சொற்கள் 112

சங்க இலக்கியங்களில் உள்ள
ஆட்சிச் சொற்கள்

சங்கம் மருவிய கால இலக்கியங்களில் உள்ள ஆட்சிச் சொற்கள்	269
பல்லவர்கள் கால ஆட்சிச் சொற்கள்	77
பிற்காலச் சோழர் கல்வெட்டுகள், இலக்கண இலக்கியங்களில் காணப்படும் ஆட்சிச் சொற்கள்	213
பிற்காலப் பாண்டியர் செப்பேடுகள், கல்வெட்டுகளில் காணப்படுகின்ற ஆட்சிச் சொற்கள்	52
அரபு, பாரசீக, இந்துஸ்தானிச் சொற்கள்	427
தெலுங்கு, கன்னட, மராத்திச் சொற்கள்	45
சமஸ்கிருதச் சொற்கள்	674
பிறமொழிக் கூட்டுச் சொற்கள்	39

ஆக, சற்றொப்ப 2150 ஆட்சிச் சொற்களை எடுத்து, அவை எவ்வெப்போது எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வந்தன என விரிவானதோர் ஆய்வினை ஆய்வாளர் இந்நூலில் மேற் கொண்டுள்ளார்.

"பண்டைத் தமிழ்ச்சொற்கள் பல ஆட்சியிலும் அன்றாட வாழ்விலும் இன்றளவும் பொருள் மாறாமல் தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளன; சிலவற்றிற்குப் பொருள் மாறியுள்ளன; வேறு சிலவற்றிற்குப் பொருளில் வேறுபாடுகள், மாறுபாடுகள், உயர்வுப் பொருண்மைகள், இழிவுப் பொருண்மைகள், மாற்றுப் பொருண்மைகள், எதிர்மறைப் பொருண்மைகள் தோன்றி யுள்ளன" எனும் கருத்தை முன்வைத்து, தக்க சான்றுகளுடன் திரு.செல்வராஜ் விளக்கிக் காட்டியிருக்கிறார். ஆசிரியர், ஆவணம், சான்று, பண்பு, புரவலர், மரபு, விருந்து போன்ற சொற்கள் அன்றைய பொருளிலேயே இன்றும் ஆளப்பட்டு வருகின்றன. 'மாண்ட' எனும் சொல் அக்காலத்தில் 'மாட்சிமைப்பட்ட' எனும் பொருளில் வழங்கி வந்து, இன்று இறந்த எனும் பொருளிலும் ஆளப்படுகிறது என, இவ்வாறு தம் கூற்றுக்கு உரிய எடுத்துக் காட்டுகள் தந்து, தம் கூற்றினை நிறுவுகிறார்.

பண்டைய இலக்கியங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் ஆட்சிச் சொற்களை அறிந்து, அவற்றைத் தக்கவாறு பயன்படுத்த வேண்டும் என்னும் கருத்தைத் திரு.செல்வராஜ் வலியுறுத்துகிறார். இதனால், வழக்கிலிருந்துவரும் வடசொற்கள், திசைச்சொற்கள்

ஆகியன அகற்றப்பட்டுத் தூய தமிழ்ச்சொற்கள் நிலைபெறும் நிலை மலரும். பிற மொழிக் கலப்பின்றித் தூய தமிழில் எழுதும் எண்ணம் இப்போது அரசு அலுவலர்களிடம் அரும்பத் தொடங்கி யிருப்பதை வரவேற்கிறார்.

பஞ்சாயத்து என்ற வடசொல் இருக்குமிடம் தெரியாமல் போய் 'ஊராட்சி' என்ற சொல் நிலைபேறடைந்துவிட்டது. 'அபேட்சகர்' என்ற சொல் மாறி, 'வேட்பாளர்' எனும் சொல்லே இன்று எவரும் அறியும் சொல்லாய்த் திகழ்கிறது. பழைய இலக்கியச் சொற்களை ஆண்டும், அச்சொற்களைக்கொண்டே புதிய சொற்களை உருவாக்கியும் தமிழிலேயே ஆட்சிச் சொற்களை அமைக்க முடியும்; அவ்வாறு அமைக்கவேண்டியது நம் கடமை என்பதை நூலாசிரியர் இவ்வாய்வின்வழி பெரிதும் வலியுறுத்து கிறார்.

'சங்க இலக்கியத்திலுள்ள 'எக்கி' என்ற சொல் பீச்சாங் குழலைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட போதிலும், இன்றைய நாளில் அது, 'நீரிறைப்பி', 'நீரேற்றி' என்னும் பொருளடைவு பெற்றுவிட்டது. பம்பு செட் (Pumpset) என்பதனை 'எக்கித் தொகுதி' என்றும், வாட்டர் பம்பு (Water pump) என்பதனை 'நீர் எக்கி' என்றும், பம்பிங் ஸ்டேஷன் (Pumping Station) என்பதனை 'எக்கி நிலையம்' என்றும் வழங்கலாம் என, ஒரு சங்க இலக்கியச் சொல்லைப் பயன்படுத்தி ஒரு சொல்தொகுதியை உருவாக்கிக் கொள்ள முடியும் என்பதை விளக்கிக் காட்டுகிறார்.

இன்று வழக்கில் இருந்துவரும் பிற மொழி ஆட்சிச் சொற்களுக்கு ஏற்ற அழகுச்சொற்கள் தமிழிலக்கியங்களில் உள்ளன. அவற்றை அறிந்து ஆளுகைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். 'பிரசவ விடுதி' என்பதை 'மகப்பேறு நிலையம்' என எழுதுகின்றனர். சங்க இலக்கியத்தில் இது 'ஈனில்' என மிகச்சுருங்கிய, ஆனால், பொருள் வளம் கொண்டதாய் கூறப்பட்டுள்ளது. இத்தகைய சொற்களை நாம் மீட்டெடுத்துத் தரவேண்டும்.

பூங்காக்களில், 'பூக்களைப் பறிக்காதீர்! மீறுவோர் தண்டனைக்குள்ளாவர்' எனச் சொல்லும் பலகை நடப்பட் டிருப்பதைக் காண்கிறோம். அப்பலகையை அது பொருத்தப் பட்டுள்ள காலோடு சேர்த்துச் சொல்லப் பொருத்தமான சொல் எது? 'அறிவிப்புப் பலகை' என்று சொன்னால் அது பலகையை மட்டும் குறிக்கிறதே தவிர, காலையும் உள்ளடக்கியதாய் இல்லை.

எப்படிச் சொல்வது? மயங்குகிறோம். பெருங்கதையில் இது 'கழறுகால்' எனச் சொல்லப்பட்டுள்ளது. கழறுதல் என்றால் சொல்லுதல் என்பது பொருள். ஒன்றைச் சொல்லுகிற கால் கழறுகால். கழறுதல் என்பதற்குத் தண்டித்தல் என்னும் பொருளும் உண்டு. எனவே, கழறுகால் என்பது தண்டனையை அறிவிக்கும் கால் என்னும் பொருளையும் உள்ளடக்கியிருக்கிறது. எனவே, கழறுகால் என்னும் சொல், அறிவிப்பையும் தண்டனையையும் சேர்த்துச் சொல்வதற்கு ஏற்ற சொல்லாகிறது. இத்தகு சொற்களைத் தேடி நாம் ஆளுகைக்குக் கொண்டுவர வேண்டும்.

பிற மொழிச் சொற்களினும் வடமொழிச் சொற்கள் தமிழில் பெருமளவில் கலந்துவிட்டன. சங்க காலத்தில் வடமொழிச் சொற் கலப்பு மிகக் குறைவு. தமிழில் வடசொற்கள் கலந்துள்ள அளவு :

தொல்காப்பியம்	2%
சங்க நூல்கள்	3%
பத்துப்பாட்டு	5%
சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு	6%
தேவார திருவாசகம்	10-15%
நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்	15-25%
மணிப்பிரவாளம்	50%

என ஆய்வாளர் திரு. பு. செல்வராசன் தந்துள்ள புள்ளி விவரத்தை இந்நூலாசிரியர் எடுத்துக்காட்டி, இத்தகைய நிலை தொடராமல் தூய தமிழில் எழுத ஆட்சித்துறையில் இருப்பவர்கள் முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறார்.

முற்காலப் பல்லவ மன்னர்கள் வடநாட்டு மரபுகளை ஏற்றுப்போற்றியதால் வடமொழி தமிழ்நாட்டில் வேரூன்ற வழிவகுத்தனர். பிற்காலச் சோழர்கள் செங்கோல் ஓச்சினர் என்றாலும், தமிழைப் பொறுத்தவரை வேற்றுமொழி நுழைவுக்குக் கதவுகளை அகலத் திறந்துவிட்டனர். கோவில் கருவறையில் வடமொழி ஓசை ஓங்கவும், தமிழ் ஒலி மறையவும் வழக்காறுகள் வகுக்கப்பட்டன. சோழப்பேரரசர் காலத்தில் எவ்வாறு வடமொழிக் கலப்பால் தமிழ்மொழி சிதைவுற்றதோ அதே போல் பிற்காலப் பாண்டியர் ஆட்சி மணிப்பிரவாள நடைக்கு ஏற்றமளித்தது. பின்னர் வந்த ஆட்சிகளால் தெலுங்கு, மராட்டிய, பாரசீக, இந்துஸ்தானி, ஐரோப்பிய மொழிச் சொற்கள் ஆட்சிச் சொற்களாய் அரியணை ஏறிவிட்டன. ஆங்கிலேயர் ஆட்சியில்

ஆங்கிலமே ஆட்சிமொழியாய் அரசோச்சியதால் நிருவாகத்தி லிருப்போர் தமிழையே மறந்தனர். இவ்வாறான வரலாற்றுக் குறிப்புகளைத் தந்து, தமிழில் ஆட்சிச் சொற்கள் வழக்கிழந்து போனதை மிகச் சரியாய்ச் சொல்லி, தமிழ் ஆட்சி மொழியாய் ஆன பிறகும் தமிழில் எழுத முடியாத நிலை இருந்து வருகிறதே, அதற்கு என்ன காரணம் என்பதையும் ஆய்ந்து, சிக்கல்கள் இவை எனவும், அவற்றைத் தீர்க்க எடுக்கப்பட வேண்டிய தீர்வுகள் இவை எனவும் மிகத் தெளிவாய் நூலாசிரியர் தந்திருப்பது பெரிதும் போற்றத் தக்கது.

தமிழ் ஆட்சிமொழியாய் இருக்க வேண்டும் என்பது இன்றைய அரசுச் சட்டம். தமிழ் எழுத்தில் பிறமொழிச் சொற்களை எழுதிவிடுவதாலேயே தமிழ், ஆட்சிக்கு வந்துவிட்டது என்பது பொருளன்று. Hotel என்பதை ஓட்டல் என்று எழுதுவதாலேயே அது தமிழாகிவிடாது.

எதனையும் தூய இனிய எளிய தமிழில் எழுதித் தமிழை நடைமுறைக்குக் கொண்டுவரும்போதுதான் உண்மையில் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேறியதாய்க் கொள்ளமுடியும். அதற்கு நாம் பண்டைய தமிழ்ச்சொற்களை அறிதல் வேண்டும்; வளர்ந்து வரும் புதுத் துறைகளுக்கேற்பப் புதுச் சொற்களை உருவாக்க வேண்டும்; புதிய சொற்களை உருவாக்கும்போது தமிழின் தனித்தன்மை எவ்வகையிலும் அழிந்துவிடக் கூடாது.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு ஆட்சிமொழிச் சொற்கள்பற்றிய ஆய்வைத் திரு.செல்வராஜ் இந்நூலில் திறம்படச் செய்திருக்கிறார். இவர் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் பல்லாண்டுகள் மொழிபெயர்ப்புத்துறையிலும், நிருவாகப் பொறுப்புகளிலுமிருந்து பணியாற்றியிருப்பதால் இவர் பட்டறிவு நூலில் பளிச்சிடுகிறது.

ஆட்சிச்சொல் ஆக்கத்திலுள்ள சிக்கல்களையும் அவற்றிற் கான தீர்வுகளையும் நூலின் இறுதியில் தந்துள்ளார். அவற்றை நிறைவேற்ற அரசும், உரியவர்களும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளியுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்

என்கிறார், பாவேந்தர் பாரதிதாசன். செந்தமிழ் செழுந்தமிழாய்ச் சிறக்கப் புதிது புதிதாய் விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களைக் காண வேண்டுமென்கிறார். அவ்வாறான புதுச் சொற்களைப் படைக்கவும், முன்னரே உள்ள அருந்தமிழ்ச் சொற்களை எடுத்தாளவும் வழிவகைகள் கூறுகின்றது, இவ்வரிய நூல்.

ஆய்வு நெறியோடு ஆட்சிச் சொற்களைப்பற்றிச் சொல்லுகின்ற அருமையான நூல் இது. இது போன்று இன்னும் பல நூல்களைத் திரு. செல்வராஜ் இயற்றி, செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்ய வேண்டும். அவரது இவ்வருந் தொண்டுக்கு உளமார்ந்த பாராட்டுகள்.

நூல் ஆக்கம்	டாக்டர் சி. செல்வராஜ்
வகைமை	ஆய்வேடு
வெளியீடு	அன்பு பதிப்பகம், சென்னை. (1993)

20

ந. சி. கந்தையா பிள்ளை சங்க இலக்கிய வசனங்கள்

ஈழத்துப் பூதந்தேவனார் சங்க காலப் புலவர். இவர் எழுதியுள்ளதாய் அகநானூற்றிலே மூன்று பாடல்களும் (88, 231, 307), குறுந்தொகையில் மூன்று பாடல்களும் (189, 343, 360), நற்றிணையில் ஒரு பாடலும் (366) உள்ளன. இவர்தொட்டு இன்றுவரை ஈழத்துத் தமிழறிஞர்கள் ஏராளமானோர் தமிழின் நலத்திற்கும் வளத்திற்கும் பெருந்தொண்டாற்றியுள்ளனர். இவர்களுள் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிலர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க தமிழ்ப்பணிகளாற்றியுள்ளனர்.

ஆறுமுக நாவலர் (1822–79)

இவர் யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தவர்; தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் வல்லவர்; சைவ நெறியைப் பரப்புவதில் முன் நின்றவர்; ஆயினும், மதவேற்றுமை கருதாது பைபிளைத் தமிழில் பெயர்த்துத் தந்தவர். முதன் முதலாய் 'நாவலர்' எனும் பட்டம் பெற்ற தமிழறிஞர் இவரேயாவார். இப்பட்டத்தைத் தமிழ்நாட்டுத் திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு அளித்து மகிழ்ந்தது; சிதம்பரத்தில், 'சைவப் பிரகாச வித்யா சாலை' என்ற பள்ளியைத் தொடங்கி, சமய நூல்கள் பயில வழிவகுத்தார்; தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிட்டார். எழுத்துப்பிழை, கருத்துப்பிழை, இலக்கணப்பிழை எதுவுமின்றி நூல்களை அச்சிட்டு வெளியிட்ட பெருமை நாவலர்க்கு உண்டு. முற்றுப் புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி முதலிய நிறுத்தக் குறி களைத் தமிழ் நூல்களில் பயன்படுத்தியவர் இவரேயாவர். கோவிலில் வழிபடுதல், அருச்சித்தல் ஆகியன தமிழிலேயே இருக்க வேண்டும் என்பதை நாவலர் பெரிதும் வலியுறுத்தி வந்தார்; இதற்கு எதிர்ப்பாயிருந்தவர்களைக் கடுமையாய்ச் சாடினார்; காமிகாகமத்தில் சைவ சமய உண்மைகளை மக்களுக்குத்

தாய்மொழியிலேயே கற்பித்தல் வேண்டுமெனச் சிவபெருமானால் விதிக்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தினார். தமிழில் என்ன இருக்கிறது எனக் கேட்டு அறியாமையில் ஆழ்ந்து கிடந்த தமிழரைத் தம் பேச்சாற்றலாலும் எழுத்தாற்றலாலும், இது 'எங்கள் தமிழ்; எங்கள் தமிழ்' எனப் பெருமைகொள்ள வைத்தவர், நாவலர் பெருந்தகை.

கு. கதிரைவேற்பிள்ளை (1829–1904)

யாழ்ப்பாணத்தில் உடுப்பிட்டி என்னும் ஊரில் பிறந்த இவர் நீதியரசராய் விளங்கி ஓய்வு பெற்றவர். நீதியரசராய் இருந்தபோது சேர்த்து வைத்த குறிப்புகளைக்கொண்டு ஓய்வுக்குப்பின் சிறந்ததொரு தமிழ்ச்சொல்லகராதியை இவர் உருவாக்கினார். 'நீதிபதித் தொழிலினின்று ஒய்ந்திருக்கும் பின்னிட்ட ஐந்து வருட காலங்களில், நோயனார் கைக்கொண்ட காலம் ஒழித்து, எஞ்சிய காலத்தில் இவ்வகராதி எழுதுவதே நமது தொழிலாயிற்று' என அவரே குறிப்பிட்டுள்ளார். முன்னர் இருந்த அகராதிகளில் இல்லாத புதுச் சொற்களைத் திரட்டி இவ்வகராதியில் சேர்த்துள்ளார்; 344 நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார்; வடசொற்கள், இந்துஸ்தானிச் சொற்கள், தெலுங்குச் சொற்கள் முதலியவற்றை இனம் பிரித்துக் காட்டியுள்ளார். பொருள்களை 1, 2, 3..... என எண் குறியிட்டுள்ளதால் ஒரு சொல்லுக்கு எத்தனை பொருள் உண்டு என்பதைப் பார்த்த அளவிலேயே அறிந்துகொள்ள முடிகிறது. நூலை வெளியிடும் முன்னரே அவர் காலமானார்.

மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவராய் விளங்கிய பாண்டித்துரைத் தேவர் கதிரைவேற்பிள்ளை புதல்வர் பாலசிங்கம் அவர்களிடமிருந்து படிவங்களைப் பெற்று, அவ்வகராதியை மூன்று தொகுதிகளாய் முறையே 1910, 1912, 1923 ஆகிய ஆண்டுகளில் அச்சிட்டு வெளிவரச் செய்தார். தமிழ் அகராதி அமைப்பு முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கிப் பெருமை பெற்றவர், திரு. கு. கதிரைவேற்பிள்ளை.

யாழ்ப்பாணம் மேலைப் புலோலியில் நா.கதிரைவேற் பிள்ளை என ஒருவர் இருந்தார் (1871-1907). இவரும் ஓர் அரிய தமிழகராதியை வெளியிட்டுள்ளார். "சென்னை வெஸ்லி கலாசாலையில் நான் மாணவனாயிருந்தபோது யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளையவர்களது அன்புக்கு உரியவனானேன். ஆங்கிலத்தில் பித்துக்கொண்டு திரிந்த எனக்குத் தமிழில் வேட்கையை எழுப்பியவர் அவரேயாவர்" எனத் தம் வாழ்க்கைக்

குறிப்பில் தமிழ்த்தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனார் மனம் நெகிழ்ந்து கூறியுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட காற்று தமிழ்நாட்டில் ஒரு தென்றலைத் தோற்றுவித்தது.

சி. வை. தாமோதரம் பிள்ளை (1832–1901)

இவர் தமிழ் நூற்பதிப்புத் துறையில் முன்னோடி. பண்டைக் காலத் தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிப்பதைத் தம் வாழ்நாள் பணியாய்க் கொண்டிருந்தார். டாக்டர் உ.வே.சாமிநாதையர் 1888இல் முதன் முதலில் சீவக சிந்தாமணியைப் பதிப்பித்தார். தாமோதரம் பிள்ளை அவர்கள் அதற்கு முன்னரே நீதிநெறி-விளக்கவுரை, வீரசோழியம் ஆகியவற்றை 1881ஆம் ஆண்டிலும், தணிகைப் புராணத்தை 1883ஆம் ஆண்டிலும், தொல்காப்பியப் பொருளதிகாரத்தை 1885ஆம் ஆண்டிலும், கலித்தொகையை 1887 ஆம் ஆண்டிலும் பதிப்பித்துள்ளார்.

கலித்தொகையை முதன்முதலில் பதிப்பித்தவர் இவரே; டாக்டர் உ.வே.சா. போன்றே ஏடுகளைத் தேடிக் கண்டுபிடித்து, ஒப்பு நோக்கி, மிக முயன்று பாட வேறுபாடுகளுடன் நூல்களைப் பதிப்பித்துள்ளார். 'தமிழ்நாடெங்கிலுமுள்ள தொல்காப்பியப் பிரதிகள் மிகச்சிலவே. அவையாவும் நான் தேடிக் கண்டவரை ஈன ஸ்திதி அடைந்திருப்பதால் இன்னும் சில வருடங்களுக்குள் அழிந்துவிடுமென அஞ்சியே, உலோகோபகாரமாய் அச்சிட லானேன்" என இவர், தம் தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையம் உரைப்பதிப்பில் குறிப்பிட்டுள்ளார். இவர் ஈழ நாட்டில் சிறுப்பிட்டி என்னும் ஊரில் பிறந்தவர்; தமிழைப் புறக்கணிப்போரைக் கண்டிக்கும் இயல்பினர்; கல்லூரிகளில் தமிழெடுத்துப் படிப்பவர்க்குப் பரிசுகள் வழங்கி ஊக்குவித்து வந்தார். பதிப்புத்துறைத் தூண்களுள் சிறப்பிடத்தில் நிற்கும் பெருமையுடையவர் சி.வை. தாமோதரம் பிள்ளை எனலாம்.

விபுலானந்த அடிகள் (1892–1947)

அடிகளார், தமிழரின் இசைப்பெருமையை நிலைநாட்டும் 'யாழ்நூல்' எழுதிய அருளாளர். இவர் யாழ்ப்பாணம் மட்டக்களப்புக்கு அருகிலுள்ள காரைத்தீவில் பிறந்தவர். இவர் பதினான்காண்டுகள் அயராது ஆராய்ச்சி செய்து எழுதியுள்ள 'யாழ்நூல்' பழந்தமிழரின் இசை நுணுக்கங்களை ஆராய்ச்சி முறையில் விரித்துரைக்கின்றது. இந்நூல் சிலப்பதிகாரத்து இசை நுணுக்கங்களை அறியப் பெரிதும் துணை செய்கிறது. யாழ் நூல், பண்டைத் தமிழரின் இசைக்கருவிகளாகிய வில்யாழ், பேரியாழ்,

மகர யாழ், செங்கோட்டி யாழ், சகோட யாழ் என்பவற்றுள் முதல் நான்கனைப்பற்றிப் பொதுவாயும் சகோட யாழ்பற்றிச் சிறப்பாயும் கூறுகிறது. சகோட யாழின் வடிவத்தினையும் இயக்கத்தினையும் கணித நுட்ப அடிப்படையில் ஆராய்ந்து முடிவு செய்துள்ளார். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராய் மூன்றாண்டுகள் பணிபுரிந்துள்ளார். நாடக இலக்கண அமைதி கூறும் 'மதங்க சூளாமணி' என்னும் நூலையும் இயற்றியுள்ளார். ஆயிரம் ஆண்டுகளாய் வழக்கற்று மறைந்த இசைத்தமிழின் அருமையைத் தமிழர் உணர்ந்து பெருமை கொள்ளச்செய்தது விபுலானந்தரின் தமிழ்த்தொண்டு.

ந. சி. கந்தையா பிள்ளை (1893–1967)

தமிழ், தமிழர் நாகரிகம் ஆகியவற்றின் தொன்மையையும் முதன்மையையும் வரலாற்று அடிப்படையில் ஆய்வு செய்து வெளிப்படுத்திய பெருமைக்குரியவர், ந.சி. கந்தையா பிள்ளை. இவர் ஈழ நாட்டுக் கந்தரோடையில் பிறந்தவர். படிப்பு முடிந்ததும் ஆசிரியராய்ப் பணியாற்றிய பொழுது தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு ஊன்றிப் பயின்றார். சில காலம் மலேயா நாட்டில் தொடர் வண்டித் துறையில் பணியாற்றும் வாய்ப்புப் பெற்றார். ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

தமிழகம், தமிழர் யார், தமிழ் இந்தியா, வரலாற்றுக்கு முற்பட்ட தமிழர், தமிழாராய்ச்சி, முச்சங்கம், நமது நாடு, நமது மொழி, தமிழர் சமயம் முதலான இவர் நூல்கள் தமிழின் தொன்மையையும், தமிழரின் பண்பாட்டுச் சிறப்புகளையும், நாகரிகக் கோட்பாடுகளையும் தெளிவுற விளக்குகின்றன.

இவர், சிந்துவெள்ளி நாகரிகம் உலக நாகரிகங்களுள் உயரியது; காலத்தால் மிகுந்த பழமை வாய்ந்தது; திராவிட இனத்தாருக்குச் சொந்தமானது என்பதையும், சிந்துவெளியில் வாழ்ந்த மக்களோடு தொடர்புள்ளவர்களே தமிழராவர் என்பதையும் முறையான ஆராய்ச்சிகளின் வாயிலாய் நிறுவுகிறார்.

இராமாயணம் நடந்த கதையா கற்பனைக் கதையா என்பதுபற்றி விரிவான ஆய்வை மேற்கொண்டு, 'இராமாயணம் நடந்த கதையா?' என்னுமொரு நூலை எழுதியுள்ளார்.

'ஆரிய வேதம்', 'இந்து சமய வரலாறு' என்னும் நூல்கள் சமயத்தைப்பற்றிய ஆய்வாய் அமைந்துள்ளன.

'சிவன்' பற்றிய இவரது ஆய்வு மெய்யுணர்வுச் சான்றோர் களால் பெரிதும் பாராட்டப்படுகிறது.

அறிவுரைக் கொத்து, அறிவுரை மாலை, பொருளுரைக் கொத்து எனும் நூல்கள் இவரது நேரிய உள்ளத்திற்குச் சான்றுகளாய் நிற்கின்றன.

அகராதித் துறையிலும் பெரும்பங்கு கொண்டுள்ளார். செந்தமிழ் அகராதி, தமிழ் இலக்கிய அகராதி, தமிழ்ப்புலவர் அகராதி, காலக்குறிப்பு அகராதி, திருக்குறள் அகராதி முதலிய அகராதிகளை இவர் வெளியிட்டுள்ளார்.

ஈழத்தில் வாழ்ந்த தமிழறிஞர்கள்பற்றி உலகோர் அறியும் வண்ணம், 'இலங்கைத் தமிழ்ப்புலவர்கள்' என்றதொரு நூலை எழுதியுள்ளார்.

சங்க காலத் தமிழகத்தின் இயற்கை வளத்தையும், தமிழர் பண்பாட்டையும் அனைவரும் அறிந்து உவகையும் பெருமையும் கொள்ளும் வகையில் பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு ஆகிய சங்க நூல்களை உரைநடையில் எழுதியுள்ளார். இவை ஒன்றாய்த் தொகுக்கப்பட்டு அமிழ்தம் பதிப்பக வெளியீடாய் இப்போது வெளிவருகின்றன.

தாம் இயற்றிய நூல்களை வெளியிடப் போதிய பணம் இல்லாமையால் இவர் தமிழ்நாடு வந்தார். சென்னையில், 'ஒற்றுமை' என்னும் இதழின் ஆசிரியராய்ப் பணிபுரிந்து வந்த தமிழாசிரியர் திரு. மு.ஏ.வீரபாகு பிள்ளை இவர் நூல்கள் சில வெளிவர உதவினார்.

பின்னர், முத்தமிழ் நிலையம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஆகிய பதிப்பகங்களின் வாயிலாயும் இவர் நூல்கள் வெளிவரலாயின.

ஆங்கிலத்தில் புலமை பெற்றிருந்த இவர், தமிழ்நாட்டு அறிஞர்களும் வெளிநாட்டவர்களும் ஆங்கிலத்தில் எழுதியுள்ள ஆராய்ச்சி நூல்களைப் படித்துச் சிந்தித்து, தமிழின் தொன்மை, தமிழரின் தொன்மை ஆகியவற்றைப் பின்னுக்கிழுக்க ஆரியச் சார்புடையவர்கள் செய்யும் நேர்மையற்ற ஆராய்ச்சிகளைச் சுட்டிக் காட்டிக் கண்டிக்கிறார். இவரது ஆங்கிலப்புலமை தமிழுக்குச் செழுமை சேர்க்கத் துணை நின்றுள்ளது.

"மக்கள் தோன்றிய காலத்தே தோன்றி, இன்றுவரையில் உலக வழக்கு நீங்காது ஒளிரும் தமிழரின் பழமையான பெருமையை உணர்த்தி, தமிழைப் பேணிக் காப்பதும், பெருநலம் அடையச் செய்வதும் தமிழரின் உயர்கடமை, உயிர்க்கடமை என்பதே

ந.சி. கந்தையாபிள்ளை தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ள அறிவுரையாகும்."

தமிழுக்கும் தமிழர்க்கும் ந.சி. கந்தையா பிள்ளையின் பங்களிப்பு என்ன என்பதை அவர்பற்றிப் பாவேந்தர் பாடியுள்ள பின்வரும் பாடல் பொருத்தமுறக் கூறுகிறது.

தென்னிலம் இதனின் தொன்மை என்ன?
செந்தமிழ் தோன்றிய காலம் செப்பெனில்,
முந்து நாகரிக முளைகண்ட தெவ்வினம்?
தமிழரின் தோற்றமும் பரவலும் தரையினில்
குமரிக் கண்டநாள் கூறுக என்றால்,
வையா புரியின் கைகளா எழுதும்?

பொய்புரட் டாரியர், கையடை யாகிய
ஆங்கிலர்க் குண்மை பாங்கு தெரியுமோ?
ஓங்கி யேஅவர் உண்மை காணினும்
நீல கண்டங்களின் நீளப் பரம்பரை
காலங் காலமாய்க் கண்வைத் தழிக்கையில்,

மடக்குக் கத்தி விரிவ்து போலும்
எரிமலை யின்வாய் வெடித்தது போலும்
முத்தமிழ் நிலையப் புத்தகப் பண்ணையில்
வித்திய விளைவில் கண்டுமுத லானவன்
ந.சி.கந்தை யாவெனும் நல்லவன், வல்லவன்.

தமிழ் தமிழின வரலா றனைத்தையும்
தொல்பொருள் ஆய்வின் தொகைவகை விரித்தும்
நிலநூல் கடல்நூல் சான்றுகள் நிறைத்தும்
தமிழ்நூற் சான்றுகள் முட்டறுத் தியம்பியும்
இலக்கிய இலக்கணச் சான்றுகள் கொடுத்தும்
பழக்க வழக்க ஒழுக்கம் காட்டியும்
வையம் வியக்க வரலா றெழுதினான்;
பொய்அு கன்று மெய்க்கை உயர்ந்தது.

குமரி நாட்டின் தமிழினப் பெருமை
நிமிரச் செய்தான்; நேற்று வரையிலும்
கரடி விட்டவர் கண்முன் காண்கிலோம்;
வளைகிற மரமெலாம் முறிவ துண்டோ?
நோய்வாய்ப் படுவோரெலாம் சாவது முண்டோ?
முகில்மறைப் பதனால் மலைமுக டழியுமோ?
உண்மை ஒளியின்முன் பொய்யிருள் வாழுமோ?

கந்தை யாவின் சிந்தையும் செயலும்
செந்தமிழ்க்குச் சேர்த்தநூல் ஒன்றா இரண்டா?
ஈட்டிய அறிவெலாம் ஊட்டினான்
காட்டுவோம் அவர்க்கு நன்றிக் கடனையே!

இனி ந.சி. கந்தையா எழுதியுள்ள வசன நூல்களைப்பற்றிச் சிந்திப்போம்.

பதிற்றுப்பத்து

இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று; சேர மன்னர்களைப் பாராட்டுவது : மன்னர் ஒருவர்பற்றி 10 பாடல்கள் வீதம், 10 மன்னர்கள்பற்றி 10 புலவர்கள் பாடியுள்ளனர்; பத்துப் பத்துப் பாக்களால் அமைந்த பத்துப் பகுதிகளைக் கொண்ட நூல் என்பதால் பதிற்றுப்பத்து எனப் பெயர் பெற்றது.

ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் ஒன்று உள்ளது. அந்தப் பத்துக்குரிய அரசன் பெயர், அவன் அருஞ்செயல்கள், அவனைப் பாடிய புலவர் பெற்ற பரிசில், அச்சேர மன்னன் ஆட்சி செய்த ஆண்டுகள் ஆகியவற்றைப் பதிகம் கூறுகிறது. பதிகம் இந்நூலைத் தொகுத்தவரால் பாடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பவற்றைப் புலப்படுத்தும் குறிப்புகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாட்டிலும் பொருளாற்சிறப்புடைய தொடர் அப்பாட்டின் பெயராய்த் தரப்பட்டுள்ளது. (புண்ணுமிழ் குருதி, கயிறுகுறு முகவை, சீர்சால் வெள்ளி என்பன போல.)

இந்நூலின் முதற்பத்தும், பத்தாம் பத்தும் கிடைக்கப் பெறவில்லை; எனினும், இவற்றைச் சார்ந்த பாடற்பகுதிகள் சில தொல்காப்பிய உரைகளாலும், புறத்திரட்டு என்னும் தொகை நூலாலும் தெரிய வருகின்றன. இவ்வாறு தெரிவன 5. இவை முதற் பத்தையோ பத்தாம் பத்தையோ சார்ந்தவையாய் இருக்கலாம்.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது. அவ்வுரை இல்லாதிருந்தால் இதில் உள்ள பாடல்களுக்குப் பொருள் காணுதல் அரிதாம். அவ்வுரையை எழுதியவர் பெயரும் காலமும் தெரியவில்லை.

ஏட்டுச்சுவடிகளை ஆராய்ந்து முதன்முதலில் இந்நூலை டாக்டர் உ.வே.சாமிநாதையர் 1904இல் அச்சில் பதிப்பித்தார். உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்களின் விரிந்து பரந்த உரை 1950இல் வெளிவந்தது. பண்டிதவித்துவான் மி.பொன்.இராமநாதஞ்செட்டியார் அவர்கள் உரை 1964இல் வெளியாயிற்று.

ந.சி. கந்தையா பிள்ளை பதிற்றுப்பத்து வசனத்தை 1937 இல் வெளியிட்டுள்ளார். புலியூர்க் கேசிகன் தெளிவுரை ஒன்றும் உண்டு.

புலியூர்க்கேசிகன் எல்லாச் சங்க நூற்களுக்கும் தெளிவுரை எழுதியுள்ளார்.

பதிற்றுப்பத்தில் வழக்கு வீழ்ந்த பல சொற்கள் காணப் படுதலின் அந்நூலை எளிதில் பொருள் விளங்கிப் பயில்தல் அரிதாகின்றது. ஆதலின், அதனை அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் பதிற்றுப்பத்து வசனத்தை ந.சி.க. எழுதியுள்ளார். "இந்நூல் பரீட்சைக்குப் படிப்போர் செய்யுள்களைப் பயில் வதற்குத் துணையாயிருக்கும்பொருட்டு மூலத்திலுள்ள ஒரு சொல்லேனும் விடுபடாமல் வசனமாய் எழுதப்பெற்றதொன் றாதலின் வசனங்களைக் குறுக்குவது இயலாதாயிற்று" என ந.சி.க. நூலின் முகவுரையில் குறித்துள்ளார்.

1. செய்யுளில் சொல் கிடந்தவாறே ந.சி.க. உரைநடை எழுதுகிறார்.

உண்மின் கள்ளே யடுமின் சோறே
எறிக திற்றி யேற்றுமின் புழுக்கே
வருநர்க்கு வரையாது பொலங்கலந் தெளிர்ப்ப
இருள்வண ரொலிவரும் புரியவி ழைம்பால்
ஏந்துகோட் டல்குல் முகிழ்நகை மடவரல்
கூந்தல் விறலியர் வழங்குக வடுப்பே (பதிற். 18 : 1–6)

இது பாடல்மூலம். இதனை ந.சி.க.

"நீயிர் கள்ளுண்மின்; அதுவேயன்றி உண்டற்குச் சோறு அடுமின்; அதுவேயன்றித் தின்றற்கு இறைச்சியை அறுமின்; அதுவே யன்றித் தின்றற்குப் புழுக்கப்படுமவற்றை அடுப்பில் ஏற்றுமின்; வருவார்க்கு வரையாது பொன் வள்ளங்கள் ஒலிக்கும்படி உண்ண உதவுதற்கு, இருண்டு சுருண்டு தழைத்த புரியவிழ்ந்த ஐம்பாலினையும், ஏந்தி வளைந்த அரையையும், முகிழ்த்த நகையையுமுடைய கூந்தல் விறலியர் அடுக" என 'வசனமாய்' எழுதியுள்ளார்.

மூலத்திலுள்ள சொற்கள் அமைந்துள்ளவாறே பொருள் விடுபடாமல் உரைநடை உள்ளது.

சேரலாதனிடம் பரிசு பெற்றுவந்த பாணன் ஒருவன், தன் வீட்டில் பெண்டிரைப் பார்த்து, 'வருவார்க்கு வழங்கச் சமையல் செய்க' எனக் கூறுவது இது.

கந்தையாவின் உரைநடை பொருளைச் சிறப்புற விளக்குகிறது; எனினும், இன்று இவர் உரைநடையைப் படித்து முழுவதுமாய் அறிந்துகொள்வது சற்றுக் கடினமே!

விறலியர் தோற்றம்பற்றிக் கூறியுள்ள பகுதியைத் தொடர் பிரித்து எழுதியிருப்பின் இன்னும் எளிமையாயிருந்திருக்கும்.

இருண்டு, நுனி சுருண்டு, நெருங்கியுள்ள முடி அவிழ்ந்து ஐவகையாய் முடிக்கப்பட்ட கூந்தலை உடையவர்களே! பக்கங்கள் உயர்ந்த அல்குல் கொண்டவர்களே! புன்னகை அரும்பும் இளமையுள்ளவர்களே! நீங்கள் கள் உண்ணுங்கள்; சோறு சமையுங்கள்; இறைச்சியை அறுங்கள்; புழுக்குதற்குரிய வற்றை அடுப்பில் ஏற்றுங்கள்; வருவோர்க்கு இல்லையென்னாது உணவளிக்கும்பொருட்டு நீவிர் அணிந்துள்ள பொன்னாலாகிய அணிகலன்கள் ஒலிக்குமாறு சமைப்பீர்களாக!" என்ற முறையில் இருந்திருந்தால் இன்றுள்ளவர்கள் எளிதில் புரிந்துகொள்ள இயலும்.

ந.சி.க.வின் உரைநடையில் முதற்பகுதியில் 'அதுவேயன்றி' எனத் திரும்பத் திரும்ப வந்திருக்க வேண்டியதில்லை.

பொலங்கலம் தெளிர்ப்ப இதில், 'கலம்' என்பதற்கு அணிகலன் என்றும், 'உண்கலம்' என்றும் பொருளுண்டு. ந.சி.க. வருவார்க்கு, உண்ணும் பொன்கலம் ஒலிக்கும்படியாய் உணவிட வேண்டும் எனப் பொருள் கொண்டுள்ளார். ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, 'நீவிர் அணிந்துள்ள பொன் அணிகலன்கள் ஒலிக்க' எனப் பொருள் கொண்டுள்ளார். இரண்டும் பொருத்தமானவையே!

வழங்குக வடுப்பே (வழங்குக அடுப்பே :) இதன் பொருள், 'சமையல் செய்வீர்களாக' என்பதாம்.

கந்தையாவின் உரைநடை, அவர் எழுதிய காலத்து மாணவர்க்கு ஏற்றதாய் இருந்திருக்கலாம். ஆனால், இஃது இன்னும் எளிமைப்படுத்தப்பட்டால்தான் அவர் விரும்பிய பலன் கிடைக்கும்.

சிறுசிறு தொடர்களாய் எளிமைப்படுத்தி எழுதும் முறையை அவரே பத்துப்பாட்டு வசனம் மூன்றாம் பதிப்பில் கையாண் டிருக்கிறார்.

பொருள் புரிய, செய்யுளை அன்வயப்படுத்தி எழுத வேண்டும்; அப்படிச் செய்யின் தளை தட்டும் என்ற குறை எழும்.

2. தம் உரைநடையில் உள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் விளக்கம் அடிக்குறிப்பில் தருகிறார்.

காணியாளர் - மேல் குடிமகன்; விந்தை - துர்க்கை.

3. பழைய உரையில் உள்ளதைச் சில இடங்களில் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்.

நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர் (49 : 10)

இதற்கு விளக்கமாய், "பகைவருடைய உடலிற்புக்க ஆயுதங்களைப் பறிக்கும்போது அவருடைய இரத்தத்தை அளைதலால் சிவந்த கையையுடைய வீரர்" எனப் பழைய உரையாசிரியர் கூறுகிறார். ந.சி.க. இதையே ஏற்று, பகைவருடைய வில், வேல் முதலியவற்றைப் பறிக்கின்ற காலத்து அவர் உடலுகும் குருதியை அளைந்து சிவந்த கை என்கிறார்.

4. சில சொற்களுக்கு அல்லது தொடர்களுக்கு நயமான பொருள் தருகிறார்.

ஈத்த திரங்கா னீத்தொறு மகிழான் (61 : 12)
(ஈத்தது இரங்கான் ஈத்தொறும் மகிழான்)

இங்கு, 'ஈத்தல்' என்பதற்கு விருப்பு வெறுப்பின்றிக் கொடுத்தல் என்கிறார் ந.சி.க. தான் ஈந்த பொருள்களைப்பற்றிக் கழிவிரக்கங்கொள்ளான் என்கிறது பழைய உரை.

5. சொல் அமைந்துள்ள இடம் கொண்டு பொருள் தரும் பாங்கினையும் வசனத்தில் காண்கிறோம்.

பெருமலை....
வளைநரலும் பனிப்பௌவத்துக்
குணகுட கடலோடு ஆயிடை.... (51 : 12–15)

இமய மலையும், சங்கு குமுறும் பனிக்கடலும், கிழக்கும் மேற்கும் கடலும் என உரைநடையில் எழுதுமிவர், இது நாட்டு எல்லைகளைக் குறிப்பினவாதலின், 'பனிக்கடல்' என்பதை, 'குமரி முனைக்குத் தெற்கேயுள்ள கடல்' என அடிக்குறிப்பில் பொருள் தந்துள்ளார்.

6. வரலாற்றுக் குறிப்புகளுக்கு விளக்கம் தந்து செல்கிறார்.

44 ஆம் பாடல் 13ஆம் அடியில் மோகூர் மன்னன் என்று வருகிறது. அம்மன்னன் பழையன் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

7. பாடவேறுபாடு சுட்டப்படாவிட்டாலும் இவ்விடத்தில் பாடவேறுபாடு இருந்திருக்க வேண்டும் என முடிவு கொள்கிறார்.

'குடநாட்டார் அரசனாகிய நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன் பத்தினிக் கடவுளுக்குக் கற்கொள்ள வேண்டி ஆரிய அரசரை வீழ்த்தினான்' என, ஐந்தாம் பதிகத்தில் வருகிறது.

வடவர் உட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமா னெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன் (ஐந். பதி. 1 – 3)

ந.சி.க., 'மணக்கிள்ளி என்பது ஆண் ஒருவனுக்குரிய பெயராய்க் காணப்படுகிறது. ஆகவே, இவ்வடி வேறு வகையாய் இருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தில் சேரலாதற்குச் சோழன் மகளீன்ற மைந்தன் செங்குட்டுவன் என்று காணப்படுகிறது. ஆதலின், இங்குப் பாடவேறுபாடு இருத்தல் வேண்டும் என முடிவு செய்கிறார்.

8. அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளை ஆங்காங்கே தந்து செல்கிறார், ந.சி.க. பதிற்றுப்பத்து வசனநூலின் தொடக்கத்தில் ஆராய்ச்சி உரை ஒன்று எழுதியிருக்கிறார். அதில் சேர அரசர்களின் காலம் கணிக்கப்பட்டுள்ளதுபற்றி எழுதுகிறார். செங்குட்டுவன் இலங்கை அரசன் கயவாகு காலத்தவன் என்பது தடையின்றித் துணியப்பட்டுள்ளது. இம்முடிவை டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார் முதலிய ஆராய்ச்சியாளர்கள் கைக்கொண்டனர். ஆனால், பி.டி. சீனிவாச அய்யங்கார் இக்கொள்கையை உதறித்தள்ளி, சிலப்பதிகாரம் கயவாகு காலத்துக்குப் பிற்பட்டதெனச் சாதிக்க முயன்று பொருத்தமற்ற கருத்துகளை எடுத்துக் கூறுகிறார். சீனிவாச அய்யங்காரின் கொள்கையைக் கண்டிக்கும் வகையில், "தமிழ் நூல்களுக்குக் கூடிய வயதைக் கொடுக்கக் கூடாதென்பது சில சரித்திரக்காரர் கோட்பாடு. ஆகவே, அவர்கள் தங்கள் கொள்கைகளுக்கேற்ப நியாயங்களைக் கண்டுபிடிப்பதில் தலையை உடைக்கின்றனர்" என வேதனை யுடன் குறிப்பிடுகிறார், ந.சி.க. ஆரியச் சார்புள்ளவர்கள் தமிழ் வரலாற்றுக்குச் செய்ய நினைக்கும் கேடுகளை ந.சி.க. உரிய ஆராய்ச்சிகளைக்கொண்டு களைந்து, தமிழரின் பெருமையை மெய்ப்பித்து நிலைநாட்டிச் செல்கிறார்.

ந.சி.க. பதிற்றுப்பத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியில் உள்ள துறை, பண், தூக்கு, பெயர் ஆகிய குறிப்புகளைத் தரவில்லை. ஆதலின், ஒவ்வொரு பாடலுக்கும் உள்ள பெயர் இன்னதெனத் தெரிந்துகொள்ள முடியாமற்போகிறது.

பரிபாடல்

இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று; 'ஓங்கு பரிபாடல்' எனப் பாராட்டப்படுவது. பரிபாடல் என்பது பாட்டு வகை களுள் ஒன்று. உறுதிப்பொருள் நான்கனுள் இன்பத்தையே

பொருளாய்க்கொண்டு, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியனபற்றி இப்பாடல் வரும். இஃது இசைப்பா ஆகும்.

சங்கத்தார் தொகுத்த பரிபாடல் 70. அவற்றுள் இப்போது நமக்குக் கிடைப்பன 22. எனினும், பழைய உரைகளிலிருந்தும் புறத்திரட்டு தொகை நூலிலிருந்தும் 2 முழுப் பாடல்களும் சில பாடல்களின் உறுப்புகளும் தெரியவந்துள்ளன.

இப்பாடல்கள் திருமால், முருகன், வையை ஆகியன குறித்துப் பாடப்பட்டுள்ளன. கிடைத்துள்ள 22 பாடல்களுள் 6 திருமாலுக்கும், 8 முருகனுக்கும், 8 வையைக்கும் உரியனவா யுள்ளன.

இந்நூலைத் தொகுத்தார், தொகுப்பித்தார் யார் என அறியக்கூடவில்லை.

இந்நூலுக்குப் பரிமேலழகர் உரையெழுதி உள்ளார்.

எட்டுத்தொகைப் பாடல்களுள் இஃது ஒன்றே இசைநூல். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் துறை, பாடலை இயற்றிய ஆசிரியர் பெயர், அப்பாடலுக்கு இசை வகுத்தவர் பெயர், பாடல் அமைந்துள்ள பண்ணின் பெயர் ஆகியனபற்றிய குறிப்புகள் உள்ளன.

கிடைத்துள்ள 22 பாடல்களுள் முதலில் அமைந்துள்ள 11 பாடல்களின் (2-12) பண், *பாலையாழ்;* அடுத்த ஐந்து பாடல்களின் (13-17) பண், *நோதிறம்;* பின்னருள்ள நான்கு பாடல்களின் (18-21) பண், *காந்தாரம்.* முதற்பாடலுக்கும் இறுதிப் பாடலுக்கும் பண் கொடுக்கப்படவில்லை. பாடல்கள் அமைப்பு முறையை நோக்கும் போது பரிபாடல், 'பண்முறையில்' தொகுக்கப்பட்ட நூல் எனத் தெரிகிறது.

பாடல் எழுதுபவர் ஒருவர், இசை அமைப்பாளர் ஒருவர் என்ற முறை சங்க காலத்தில் இருந்தது என்பதை அறியமுடிகிறது.

பரிபாடலைப் பாடிய புலவர்கள் பதின்மூவர்; அவற்றிற்கு இசை வகுத்தோர் பதின்மர்.

பரிபாடல் முதன் முதலாய் 1918இல் டாக்டர் உ.வே.சாமி நாதையர் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.

ந.சி. கந்தையாவின் 'பரிபாடல் வசனம்' 1938இல் வெளி வந்தது.

1. ந.சி. கந்தையா அவர்கள் எழுதியுள்ள 'வசன நூலில்' பாடலுக்கு நேர்பொருள் தருகிறார்.

மாசில் பனுவற் புலவர் புகழ்புல
நாவிற் புனைந்த நன்கவிதை மாறாமை
மேவிப் பரந்து விரைந்து வினைநந்தத்
தாயிற்றே தண்ணம் புனல் (6 7–10)

எனும் பரிபாடல் அடிகட்கு ந.சி.க.

"புலவர்கள் புனைந்து பாடிய நல்ல பாடல்கள் பொய்யா வண்ணம் உழவுத்தொழில் தழைக்கும்படி வெள்ளம் எவ்விடத்தும் பரந்தது" என எழுதுகிறார். ஒவ்வொரு சொல்லுக்கும் நிரலே பொருள்தரவேண்டும் என்றில்லாமல் பாடற்கருத்தினை மட்டும் இங்குத் தந்திருக்கிறார். மாசில் பனுவல், நாவிற் புனைந்த என்பன போன்ற அடைசொற்களை விடுத்துப் பொருள் எழுதி, உரைநடையைப் படிப்பதற்கு எளிதாக்கியிருக்கிறார்.

2. வசனத்தில் இடம் பெறும் அருஞ்சொற்களுக்கு அடிக் குறிப்பில் பொருள் தரப்பட்டுள்ளது.

தூசிப் படை - முன்னே செல்லும் காலாட்படை.

சூளுற்றது - சத்தியம் செய்தது.

அடியுறை மகளிர் - நின் தொழுபவராகிய மகளிர்.

ஏடா என்பது தோழன் முன்னிலைப் பெயர் (திவாகரம்).

3. சொற்பொருளைத் திருத்தமுற அறிய, மேலும் தேவைப்படும் விளக்கமும் தரப்பட்டுள்ளது.

ஐவளம் பூத்த அணிதிகழ் குன்றின்மேல் (18 : 15)

1. ஐந்து வளம் என்பதற்கு, அரக்கு, கற்பூரம், செந்தேன், மயிலிறகு, நாவி என அடிக்குறிப்பில் தந்துள்ளார், டாக்டர் உ.வே.சா. இந்த அடிக்கான குறிப்புரையில், மலைவளம் ஐந்தாவன : "அரக்கிறலி, செந்தேனளி, மயிலின் பீலி, திருத்தகு நாவியோடைந்து என்பதனாலறிக" என எழுதியுள்ளார். (இறலி என்பதற்கு அகராதிகள் இத்திமரம், கொன்றை, மருதமரம் எனும் பொருள்களைத் தந்துள்ளன. ந.சி.க. அவர்கள் கற்பூரம் எனப் பொருள் கொண்டுள்ளார். நாவி - கத்தூரி, புனுகு).

• 4. நேர்ப் பொருளல்லாது, சொற்களுக்கு விளக்கம் தந்து எழுதப்பட்டுள்ள உரைநடையும் உண்டு.

...... யாஅ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பால்
அருளும் அன்பு மறனு மூன்றும்
உருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே! (5 78–81)

என்னும் பாடலடிகளை ந.சி.க. கீழுள்ளவாறு உரைநடை யாக்குகிறார்.

"வட்டமாகிய பூங்கொத்தாற் றொடுத்த மாலையுடையோய்! நின்னை யாம் இரப்பவை நுகரப்படும் பொருள்களும், அவற்றை உளவாக்கும் பொன்னும், அவ்விரண்டாலும் நுகரும் நுகர்ச்சியு மல்ல. எமக்கு வீடு பயக்கும் நின் அருளும், அதனையுண்டாக்க உன்னிடத்து யாம் செய்யும் அன்பும், அவ்விரண்டாலும் வரும் அறனுமாகிய இம்மூன்றுமே."

இதில் பொருள், பொன், போகம்; அருள், அன்பு, அறன் ஆகியவற்றை ஒன்றோடொன்று இணைக்க அவர் சொற்களைப் படைத்துக்கொண்டுள்ளதைக் காண்கிறோம்.

5. அகப்பொருள் துறைகளுக்கான விளக்கத்தைத் தரும் பாங்கும் ந.சி.க. உரைநடையில் உண்டு.

வாயில் வேண்டி நிற்றல் தலைவன் பரத்தையிற்பிரிந்து வந்தானாகத் தலைவி அவனை உள்ளே விடாது மறுக்க, அவன் பலவாறு இரந்து வேண்டுவான். ஒருவாறு இரங்கிய தலைவி அவனை உள்ளே விடுவாள். (பாடல் 9 - அடிக்குறிப்பு)

6. தொன்மங்களை விளக்குகிறார்; அதே வேளை தம் கருத்தையும் எடுத்துரைக்கிறார்.

பாடல் 19இல் திருமால் மருகன் முருகன் என்பதற்கான கதையைக் கூறி, அது குறித்த அருணகிரிநாதரின் பாடலையும் காட்டுகிறார்.

5ஆம் பாடலில் முருகன் பிறப்புப்பற்றிய கதை நச்சினார்க்கினியர் உரையில் எவ்வாறு உள்ளது, கந்தபுராணத்தில் எவ்வாறு உள்ளது என்பதைக் கூறிய பின்னர் அக்கதைகள்பற்றிய தம் கருத்தையும் பின்வருமாறு கூறியுள்ளார்.

"சிவ வழிபாட்டோடு வேறல்லாத முருக வழிபாடு அக்காலத்து வடதேயத்தில் முதன்மை பெற்றிருந்த இந்திர வழிபாட்டால் எதிர்க்கப்பட்ட வரலாற்றையே இச்செய்திகள் குறிப்பனவாகும். புராணிகர் புனைந்துரையாய்க் கூறும் பொருள் களுக்கு நேரான கருத்தமைத்துக் கூறுதல் கூடாது."

பரிபாடல் உரைச் சிறப்புப்பாயிரம்,

கண்ணுதற் கடவுள் அண்ணலங் குறுமுனி!
முனைவேள் முருகன் எனவிவர் முதலிய
திருந்துமொழிப் புலவர் அருந்தமிழ் ஆய்ந்த

சங்கம் என்னுந் துங்கமலி கடலுள்
அரிதின் எழுந்த பரிபாட் டமுதம்

என்று கூறுகிறது. இதனை ந.சி.க.,

"சிவபெருமான், தலைமையுடைய அகத்தியன், கூரிய வேலுடைய குமரன் முதலிய திருந்திய தமிழ்ப்புலமையை யுடையார், அரிய தமிழ் நூல்களை ஆராய்ந்த சங்கம் என்னும் உயர்ந்த கடலுள் பரிபாட்டாகிய அமுதம் அரிதாய் எழுந்தது" என உரைநடையில் தருகிறார்.

அடிக்குறிப்பில், "சங்கம் ஆரம்பித்த காலத்துப் புலவர்களும் அரசனும் தமது வழிபடு கடவுள்களாகிய முருகவேள், சிவபெருமான் முதலியோரின் திருவுருவங்களைத் தம்மெதிரில் வைத்து, அவர்களைக் கழகத்துக்குத் தலைவர் எனக் கூறினாராதல் வேண்டும். இவ்வுபசார வழக்கே பின்னர் மெய்க்கதைபோல் வழங்குவதாயிற்றுப் போலும்" என எழுதுகிறார். சிவபெருமான், முருகன் ஆகியோர் தமிழ்ச்சங்கத் தலைவர்களாயிருந்தனர் என்று கூறுதல் உண்மையாகாது என்னும் தம் கருத்தை இங்குத் தெளிவாய்ப் பதிவு செய்துள்ளார்.

மொழி, இலக்கணம் ஆகியவைபற்றிய குறிப்புகளையும் ந.சி.க. தம் உரைநடையில் எழுதிச் செல்கிறார்.

இந்நூலில் சங்கு, சமம், சந்தனம்,சமழ்ப்பு, சனம், சரணம், சகடம்,சலம் முதலிய எட்டுச் சகர முதற்சொற்கள் வந்திருக்கின்றன என முகவுரையில் சொல்கிறார்.

பாட்டின் இறுதியில் மூலத்தில் இருக்கும் குறிப்புகளை இவர் தாராமையால் பாட்டின் பண், பாட்டுக்கு இசையமைத்தவர் ஆகிய விவரங்களை அறிந்துகொள்ள இயலாது போயிற்று. முக்கியக் குறிப்புகளாதலால் இவற்றை அவர் தந்திருக்கலாம்.

கலித்தொகை

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகை, 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்னும் சிறப்பைப் பெற்றிருப்பது. பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் ஐந்திணையில் ஒவ்வொரு புலவர் ஒரு திணை குறித்துப் பாடியுள்ள பாடல்களின் தொகுப்பு இந்நூல்; இது கலிப்பாவால் ஆனது. பாலை பாடிய பெருங்கடுங்கோ பாலைக்கலியையும், கபிலர் குறிஞ்சிக்கலியையும், மருதனிளநாகனார் மருதக்கலியையும், சோழன் நல்லுருத்திரன் முல்லைக்கலியையும், நல்லந்துவனார் நெய்தற்கலியையும் பாடியுள்ளனர். இவ்வைந்து புலவர்களுள்

இருவர் அரசராவர். கடவுள் வாழ்த்துடன் மொத்தம் 150 பாடல்கள் உள்ளன. கலித்தொகை நூலைத் தொகுத்தவர் நல்லந்துவனார். இந்நூலுக்கு நச்சினார்க்கினியர் இயற்றிய சிறந்த உரை ஒன்று உள்ளது. கலித்தொகையை ஏட்டுச்சுவடிகளிலிருந்து முதன்முதலாய் அச்சிட்டு, 1887ஆம் ஆண்டு சி.வை. தாமோதரம் பிள்ளை வெளிக்கொண்டு வந்தார். பின்னர் இ.வை. அனந்தராமய்யர் பாடவேறுபாடுகள், மேற்கோள் விளக்கம், அருஞ்சொற்பொருள், அகரவரிசை ஆகியவற்றை இணைத்து, 'கலித்தொகை நச்சினார்க்கினியர் உரை'யினை 1925இல் வெளியிட்டார்; 'கலித்தொகை - நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும்' எனும் தலைப்பில் தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம் 1938இல் வெளியீடு செய்தது. பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் எழுதிய உரையைத் திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1969இல் வெளியிட்டது.

ந.சி.கந்தையா பிள்ளையின் 'கலித்தொகை வசனம்' 1941இல் வெளியாயிற்று. இதில் முகவுரையை அடுத்து நச்சினார்க்கினியர் பற்றிய கட்டுரை ஒன்று உள்ளது.

கடவுள் வாழ்த்துப்பாடலின் அடிக்குறிப்பில், 'சங்ககாலத்தில் கடவுள் வாழ்த்துக் கூறி, நூல் ஆரம்பிக்கும் மரபு இருக்கவில்லை' எனக் கூறுகிறார்.

1. பழைய உரைகளில் சொல் பொருத்தமின்றி இருப்பதாய்க் கருதினால், ந.சி.க. அதற்கு வேறு வகையில் பொருள் கூறுகிறார்.

கடவுள்வாழ்த்துப்பாடலில், 'மணிமிடற்று எண்கையாய்' எனும் தொடருக்கு 'நீலமணி போலும் கழுத்தினையும் எட்டுக் கைகளையும் உடையவருமான கடவுளே' என உரைநடை தருகிறார். ஆயினும், 'சிவபெருமானுக்கு எட்டுக் கரங்கள் என்று குறிப்பிடுவதற்கான காரணம் விளங்கவில்லை. மூலத்திலுள்ள எண்கை என்பதற்கு, எண்ணப்படுகின்ற (புகழப்படுகின்ற) கை எனப் பொருள் கூறினும் ஆம் என்றதொரு வேற்றுப்பொருளையும் எண்ண வைக்கிறார்.

2. எல்லாருக்கும் புரியும்படியான எளிய தமிழில் உரைநடை எழுதுகிறார்.

....அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவும் உரைத்தனரே
(கலி. 11 : 7–9)

எனும் செய்யுளடிக்கு மிக அருமையாய்,

"அக்காட்டிலுள்ள ஆண் யானை, துடி போன்ற அடிகளுடைய யானைக் கன்றுகள் நீர் நிலையில் இறங்கி, தாயும் தந்தையும் உண்ண வேண்டுமென்று கருதாது கலக்கிய சிறிய நீரை, முதலில் பிடிக்கு ஊட்டிப் பின்பே தான் உண்ணும் என்றும் அவர் கூறினார்" என உரைநடைப்படுத்தியுள்ளார்.

ஆமிழி யணிமலை அலர்வேங்கைத் தகைபோலத்
தேஎமூசு நனைகவுள் திசைகாவல் கொளற்கொத்த
வாய்நில்லா வலிமுன்பின் வண்டுது புகர்முகப்
படுமலை யடுக்கத்த மாவிசும் போங்கிய
கடிமரத் துருத்திய கமழ்கடாந் திகழ்தரும்
பொருங்களிற் றினத்தொடு வீங்கெருத் தெறுழ்முன்பின்
இரும்புலி மயக்குற்ற இகன்மலை நன்னாட (கலி. 48 1–7)

இப்பாடலில் பல சொற்கள் புலவர்க்கன்றி மற்றவர்க்குப் புரியாதனவாயுள்ளன. இவ்வடிகளை ந.சி.க., மிக நேர்த்தியாய் உரைநடைப்படுத்துகிறார்.

"மலையிடத்தே கூட்டத்தைக் காக்கும் யானை, பகைத்தவை எதிர்நிற்க மாட்டாத வலியுடையது; அதன் கன்னங்கள் மதநீரால் நனைந்திருக்கும்; அதன் புகரினையுடைய முகம், நீர் வீழ்கின்ற அழகிய மலையிடத்துத் தேனினம் மொய்க்கும் பூக்களையுடைய வேங்கையினது அழகுபோல வண்டுகள் மொய்க்கப்பெற்றது. மழை பெய்யும் பெரிய பக்க மலையிடத்தும், பெரிய மரங்கள் உடைய ஆற்றிடைக் குறையிடத்துமாகிய அக்குஞ்சரம், யானைத் திரள்களோடு பெரிய கழுத்தினையுடைய வலிய புலியை எதிர்த்துப் போர் செய்யும். இவ்வகையான மலை நாடனே" - இது ந.சி.க. உரைநடை.

இப் பாடலடிகளில் (அ) ஆம் - நீர் (ஆ) தேம் - தேனீக்கள் (இ) மூசு - மொய்க்கும் (ஈ) நனைகவுள் - மதநீரால் நனைந்த கன்னம் (உ) வாய் நில்லா - எதிர்நிற்க மாட்டாத (ஊ) புகர்முகம் - யானை (எ) கடிமரம் - மிக்க மரங்கள் (ஏ) துருத்தி - ஆறுகளின் இடையே அமைந்த திட்டுகள் (ஐ) கடாம் - யானை மதநீர் (ஒ) எருத்து - கழுத்து (ஓ) எறுழ்முன்பு - மிக்க வலிமை. இத்தனை அருஞ்சொற்கள் இருக்கின்றன; இன்னுங்கூடச் சொல்லலாம். இவற்றின் பொருளெல்லாம், உள்ளடங்கிய வகையில் அவர் உரைநடைப்படுத்தியுள்ள திறம் போற்றுதற்குரியது.

3. பிறர் உரையினை எடுத்துக்கொள்கின்ற இடங்கள் ந.சி.க. உரைநடையில் உண்டு. "அரசன் உயிர்வாங்கினவன்றேகெடுவன்" என நச்சினார்க்கினியர் உரைப்பர். (பாலைக். 8 அடிக்குறிப்பு).

4. உரையிடையே வரும் சொற்களுக்கு இலக்கணக்குறிப்புத் தருகிறார். 'உள்ளே ஒரோ ஒருபுறத்தில், ஒரோ ஒரு கையாலே தழுவி, ஒன்றன் பகுதியாகிய ஆடையை உடுத்தியிருப்பவராயினும், பிரியாதிருப்பவர்களுடைய வாழ்க்கையே வாழ்க்கை' - பொருள் இல்லாமையால் உள்ளே ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டு வெளியே ஓர் ஆடையை உடுப்பாராயினும் என்பது இன்மையது இழிவு என்பது அவர் தரும் குறிப்பு.

5. ஒவ்வொரு கலியின் தொடக்கத்தினுள், அது கூறும் திணை பற்றிய விவரங்களைத் தந்து, அத்திணைபற்றிய செய்திகளைப் படிப்பவர் அறியுமாறு செய்துள்ளார்.

6. கலித்தொகையில் வரும் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு காலத்தில் செய்யப்பட்டிருக்கலாம் என்றும், பாலைக்கலியில் வரும் பொருள்களை நோக்குமிடத்து இது மற்றைச் சங்க நூல்களிலும் பிற்பட்டதாதல் தெள்ளிதின் தெரிகிறது என்றும் கலித்தொகை தோன்றிய காலம்பற்றிய ஆய்வுக்கருத்தைச் சொல்கிறார்.

அகநானூறு

இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இதற்கு நெடுந்தொகை என்னும் பெயரும் உண்டு; அகவொழுக்கம்பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது; முதல் நூற்றிருபது பாடல்கள் 'களிற்றியானை நிரை' என்றும், அடுத்த நூற்றெண்பது பாடல்கள் 'மணிமிடைபவளம்' என்றும், இறுதி நூறு பாடல்கள் 'நித்திலக்கோவை' என்றும் பெயர் பெற்றுள்ளன.

அகநானூறு தொகுப்பில் ஒரு தனித்த சிறப்பு உண்டு. ஒற்றைப்படை எண்ணில் வருவனவெல்லாம் பாலைத்திணைப் பாடல்களாகவும், இரண்டு எட்டு என்னும் எண்கொண்ட பாடல்கள்யாவும் குறிஞ்சித்திணைப் பாடல்களாகவும், நான்கு என்னும் எண்ணைப் பெற்றனவெல்லாம் முல்லைத்திணைப் பாடல்களாகவும், ஆறு எனும் எண்ணைப் பெற்றனவெல்லாம் மருதத்திணைப் பாடல்களாகவும், பத்து என்னும் எண்ணைப் பெற்றனவெல்லாம் நெய்தல் திணைப் பாடல்களாகவும் இருக்குமாறு வைத்துத் தொகுக்கப்பட்டுள்ளது. இதனால் பாடல் எண்ணைச் சொன்னால் உடனே அஃது இன்ன திணைப் பாடலென்று சொல்லிவிடலாம். அகநானூற்றில் 13 முதல் 37 வரையுள்ள அடிகளையுடைய பாடல்களே உள்ளன. இந்நூலுள் 145 புலவர்கள் பாடிய பாடல்கள் உள்ளன.

இந்நூலைத் தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மனார்; தொகுப்பித்தவர் கானப்பேரெயிலெறிந்த பாண்டியன் உக்கிரப்பெருவழுதி.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உளது. அது, முதல் தொண்ணூறு பாடல்களுக்கு மட்டும் குறிப்புரையாய் இருக்கிறது. இவ்வுரை உள்ளுறை உவமம், இறைச்சி முதலியவற்றை விளக்குகிறது; வேண்டுமிடங்களில் சொல்முடிபு, பொருள் முடிபு ஆகியவற்றைக் காட்டுகிறது; கதை பொதிந்த பாடல்களில் உள்ள கதைக் குறிப்புகளை எடுத்துணர்த்துகிறது. இவ்வுரையை எழுதிய ஆசிரியர் இன்னார் எனத் தெரியவில்லை.

இந்நூலை முதன்முதலாய் அச்சில் பதிப்பித்தவர் மயிலாப்பூர், கம்பர் விலாசம், திரு. இராசகோபாலய்யங்கார் ஆவர். அடுத்து, கரந்தைக் கவியரசு ரா.வேங்கடாசலம் பிள்ளையவர்களும் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும் சேர்ந்து நூல் முழுமைக்குமுரிய உரையை வகுத்தனர். திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இதனை வெளியிட்டது.

ந.சி.கந்தையா பிள்ளை 1938இல் அகநானூறு முழுவதையும் வசனமாய் எழுதியுள்ளார். "பண்டைக்கால நல்லிசைப் புலவர்களின் செய்யுள் நயங்களையும் வருணிக்கும் திறமையையும் பிறவற்றையும் சிறாரும் இனிது கற்றறிந்து தமிழின் சுவையைப் பருகுதல் வேண்டும் என்றும் ஆர்வத்தினாலே இந்நூலை யாம் வசனநடையில் எழுதினோம்" என அவர் கூறுகிறார்.

1. நூலின் தொடக்கத்தில் ஒவ்வொரு திணைக்குமுரிய உரிப்பொருள் விளக்கத்தைத் தந்திருக்கிறார். இது, நூலுள் வரும் உரிப்பொருட்செய்திகளைப் புரிந்துகொள்ளத் துணை செய்கிறது.

2. அருஞ்சொற்களுக்குப் பொருள் தருகிறார்.

துமித்தல் - அறுத்தல்; மாயோள் - கரியாள்

சாத்தர் - வணிகர்; இறும்பு - மலை.

3. பொருள் தருவதோடு அதை முற்றிலுமாய்ப் புரிந்துகொள்ள, உரிய விவரங்களையும் தருகிறார்.

அசுணமா ஒருவகை விலங்கு; கொடிய இசையைக் கேட்டால் இறக்கும். 'பறைபட வாழா அசுணமா'; இஃது இசையில் மிகு விருப்புடையது.

கொல்லிமலை அடுக்கத்துக் கடவுள் தந்த பாவை - இதற்குக் கொல்லிமலைப் பாவை என விளக்கம் தருகிறார்.

கொல்லிப்பாவை "இது கொல்லிமலையில் உள்ள ஒரு பெண் படிமை. கண்டார் உள்ளமும் விழியும் கவர்ந்து, பெருங்காமவேட்கை உறுவித்து, இறுதியில் கொல்லத்தக்கதாய்த் தெய்வத்தானே அமைக்கப்பெற்ற கொல்லிப்பாவை" என விளக்கவுரை அமைந்துள்ளது.

அம்பல் - சிலர் அறிந்த அலர்; அலர் - பழிச்சொல்.

4. வரலாற்றுத் தொடர்பான செய்திகள் வரும்போது, அதற்கான விளக்கம் தரப்பட்டுள்ளது.

உரைநடையில் 'பண்ணி' என்றொரு பெயர் வருகிறது. இதற்கு அடிக்குறிப்பாய்ப் பண்ணி - பாண்டியனது படைத்தலைவன்; இவன் ஊர் கோட்டூர் என எழுதியுள்ளார்.

பழையன் - சோழனது சேனாபதி என அடிக்குறிப்பில் தந்துள்ளார். (இது போன்று இன்னும் பலவற்றிற்கு எழுதியிருக்க வேண்டும்; விரிவஞ்சி விடுத்தார் போலும்.)

5. பாடல்களுக்கு ஒப்புமைப்பகுதி காட்டுகிறார்.

அகநானூறு 22ஆம் பாடலுக்குக் குறுந்தொகை 262ஆம் பாடலை மேற்கோள் காட்டியுள்ளார்.

6. பாடல் உணர்த்துவதை முடித்துச் சுட்டும் தன்மை இவர் உரைநடையில் உண்டு.

24 ஆம் பாடல் காதலி மனையிடத்தே தனித்து உறைய, யாம் பாசறையிடத்தேம் என்றவாறு என முடிவு சுட்டுகிறார்.

7. குறிப்புரைகாரர் (பழைய உரையாசிரியர்)தந்துள்ளவாறே உள்ளுறைப் பொருளை எழுதிச் சென்றுள்ளார்.

எடுத்துக்காட்டு :

பாடல் 30 பெருங்கடலுட் சிக்கிக் கிடக்கின்ற மீனை நுளையர் அதனின்று நீக்கி, உயிர் செகுத்துக் கண்டாரெல்லார்க்கும் கூறுவைத்துப் பரப்பிப் பின்பு உயிர்வருத்தினோமென்னும் இரக்கமின்றி, மணற்குன்றிலே உறங்கியதைப் போல, பெருங்குலத்துப் பிறந்த இவளை நீவிர் நும் வசமாக நீக்கி வருத்தி, வேறுபாட்டா லெல்லாரும் இவளைச் சூழும்படி அலராக்கிய பின்பு, நீர் துயரமின்றி உறங்குகின்றீர் என்றவாறு பகற்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

8. மூலப்பாடலில் உள்ள நயம் குறையாமல் உரைநடை தருகிறார்.

.... நிழல்காண் மண்டிலத்
துள்ளூ தாவியிற் பைப்பய நுணுகி
மதுகை மாய்தல் வேண்டும் (பா. 71 13–15)

இதற்கு ந.சி.க. எழுதியுள்ள உரைநடை

"தெளிந்த கண்ணாடி மண்டிலத்திலே ஊதிய ஆவி, பரந்து, பின்பு சுருக்கினாற்போல, எமது வலி மாயவேண்டியிரா நின்றது. (உருவம் காணும் கண்ணாடியின் அகத்தே ஊதிய ஆவி, முன் பரந்து, பின் சுருங்கினாற்போலச் சிறிது சிறிதாய்க் குறைந்து வந்து எமது வலிமை மாய்தல் வேண்டியதாகிறது - இவ்வாறு சற்று விளக்கி எழுதினால் படிப்போர்க்கு இன்னும் எளிமையாய் இருக்கும்.)

9. அகநானூற்றுப்பாடல் எங்கு மேற்கோளாய் எடுத்தாளப் பட்டிருக்கிறது என்பதையும் சுட்டியுள்ளார்.

72, 82 ஆம் பாடல்கள் இறையனார் அகப்பொருளுரையில் மேற்கோள்களாய்க் காட்டப்பட்டுள்ளன.

10. பொருள் அறிய,

(அ) நீரிடத்தே ஆடுவோம் என முடிக்க. (பா. 312)

(ஆ) தூண்டினாயானால் போனபின்பு ஆவதும் நினைத்தையோ என்று கூட்டுக. (பா. 327)

(இ) வருந்தாதே தோழி! ஆரவாரஞ்செய்து அருஞ்சுரம் பலகடந்து சென்றவர் துன்பமில்லாதவராகுக என்று சேர்த்துக் கொள்க. (பா. 228)

(ஈ) இவள் என்னாகுவள் என்று நினையாதவர் என்னை நினைப்பாரோ? மறந்தனரோ? என்று வினை முடிவு கொள்க (பா. 235) என்பன போன்ற குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

11. தொன்மக் கதைகளை விளக்கமாய்க் கூறுவதோடு அவற்றில் தம் கருத்தையும் இணைத்துச் சொல்லும் பாங்கினை ந.சி. கந்தையாவிடம் காண்கிறோம்.

ஆதி மந்தி பேதுற் றினையச்
சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகும்
அந்தண் காவிரி போல (பா. 76 10–12)

"என் காதலனைக் கண்டீர்களோ என்று ஆதிமந்தி மயக்கமுற்று வருந்த, அவளைக் கைப்பற்றி அணைமிக்கு உராய்ந்து

நேர்கிழக்காக ஓடிக் கடலில் விழும் காவிரிபோல" என்பது மேலுள்ள பாடலடிகளின் பொருள்.

ந.சி.க. இதற்குத் தரும் விளக்கம்

ஆதி மந்தி! இவள் கரிகால் வளவன் மகள். இவள் கணவன் ஆட்டனத்தி. இவள் தன் கணவனோடு கழார்ப் பெருந்துறையில் நடந்த காவிரிப் புதுப்புனலுக்கு வந்திருந்தபோது காவிரி அவன் அழகைக் கண்டு இழுத்துக்கொண்டு போய் ஒளித்து விட்டாள். அவனைக் காணாது வருந்திக் காவிரி சென்ற வழியே சென்று தேட, மருதி என்பவள் அவனை அவளுக்குக் காட்டினாள்.

ஆட்டனத்தி காவிரி நீரில் அகப்பட்டுக் கடலுக்குச் சமீபத்தில் கரையேறிய கதையைப் புலவர்கள் உருவகப்படுத்தி இவ்வாறு கூறியிருத்தல் கூடும். அல்லது பரத்தையரிடம் அகப்பட்டமையிற் காணாதொழிந்த கணவனை ஆதிமந்தி தேடிப் பெற்றவளாதல் வேண்டும்.

ந.சி.கந்தையா பிள்ளையின் 'வசனம்' அகநானூற்றின் அழகை நாம் அறியப் பெருந்துணை செய்துள்ளது.

பத்துப்பாட்டு

சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாம். இவற்றைப் பாட்டும் தொகையும் என்றும் கூறுவதுண்டு. பாட்டு என்பது பத்துப்பாட்டு; தொகை என்பது எட்டுத்தொகை.

ஒவ்வொன்றும் நூறு அடிகட்கு மேற்பட்டுள்ள பத்து நெடும்பாடல்களையுடையது, பத்துப்பாட்டு. அக்காலத்திலிருந்த நெடும் பாடல்களிலிருந்து இப்பாட்டுகள் பத்தினையும் தேர்ந்தெடுத்துத் தொகுத்துள்ளனர். தொகுத்தவர் யார் என்பது தெரியவில்லை.

"இறையனார் அகப்பொருள் உரை கி.பி. 11 அல்லது 12ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டது எனலாம். அக்களவியலுரையில் கடைச்சங்க நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அப்பட்டியலில் பத்துப்பாட்டு இடம் பெறவில்லை. ஆதலின், அக்காலத்தில் பத்துப்பாட்டு தொகுக்கப்படவில்லை எனத் தெரிகிறது.

"தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் கி.பி. 11 அல்லது 12ஆம் நூற்றாண்டினர் எனலாம். அவர் பத்துப்பாட்டில் உள்ள ஒவ்வொரு பாட்டையும் அதனதன் தனிப்பெயர் கொண்டே கூறியுள்ளார்.

"கி.பி. 13 அல்லது 14ஆம் நூற்றாண்டினரான பேராசிரியர் இத்தொகுதியைப் 'பாட்டு' என்றே குறித்துள்ளார். இதனை நோக்க

இப்பாடல்கள் இளம்பூரணருக்குப் பின்பும், பேராசிரியர்க்கு முன்பும் தொகுக்கப்பட்டன எனத் தெரிகிறது. ஆயின், அப்பொழுதும் இத்தொகுதிகளுக்குப் 'பத்துப்பாட்டு' என்னும் பெயர் அமையவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

"நன்னூலுக்கு உரைவகுத்த மயிலைநாதர் (14 அல்லது 15ஆம் நூற்றாண்டு) நன்னூல் உரையில் முதன் முதலாய்ப் 'பத்துப்பாட்டு' என்பதைக் குறித்துள்ளார். பேராசிரியர்க்குப் பின்பே இந்நூலுக்குப் பத்துப்பாட்டு எனும் பெயர் வழங்கலாயிற்று என்று கொள்வதே பொருத்தம்" என்கிறார், டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

பத்துப்பாட்டு மூலமும் உரையும் முதன்முதலில் 1889ஆம் ஆண்டு டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களால் வெளியிடப் பெற்றது.

இதற்கு நச்சினார்க்கினியர் உரை உள்ளது.

சங்க இலக்கியங்களைப் பொதுமக்கள் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் அவ்வப்போது சொற்பொழிவுகள் வாயிலாகவும் கட்டுரைகள்வாயிலாகவும் விளக்கங்கள் தர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

ந.சி. கந்தையா பிள்ளை சங்க நூல்கள் பலவற்றை எளிய உரைநடையில் எழுதி வெளியிட்டுள்ளார். அவரது 'பத்துப்பாட்டு வசனம்' 1935இல் வெளிவந்தது. அதன் மூன்றாம் பதிப்பு 1949இல் வெளியானது. அதில் அவர், "இப்பதிப்பில் கூடியளவு வசனங்களைக் குறுக்கியும் கூடிய சொற்களை நீக்கியும் உள்ளோம்" என்று குறிப்பிடுகிறார். அவரே, தாம் முன்பு எழுதியதை மேலும் எளிமைப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்திற்கு ஆளானார். அவரின் சங்க நூற்பதிப்புகளை ஆண்டுவாரியாகப் பார்க்கும் போது, ஆண்டுக்காண்டு நடையை எளிமைப்படுத்தி வந்திருப் பதை உணர முடிகிறது. தாம் எழுதியவை எளிய நடையின என அவர் கருத, படிப்பவர் அதனைக் கடினம் என உணர, அதனால் அவர் தம் நடையை மேலும் மேலும் எளிமைப்படுத்திக்கொண்டே வந்துள்ளதை அவரின் வசன நூல் பதிப்பு ஆண்டுகளை வைத்துப் பார்க்கும்போது தெரிகிறது. பத்துப்பாட்டின் மூன்றாம் பதிப்பு மிகமிக எளிய நடையினது. இதே போக்கில் முன்னைய நூல்களும் அமைந்திருந்தால் இன்னும் பயனுடையதாய் விளங்கியிருக்கும்.

பத்துப்பாட்டில் பல அரிய செய்திகளைக் குறிப்புகளாய்த் தந்து செல்கிறார், ந.சி.க.

1. திருப்பரங்குன்றம் மதுரைக்கு மேற்கில் இருந்ததாய்த் திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

மாடமலி மறுகின் கூடல் குடவயின் (திருமுரு. 71)

இப்போதுள்ள மதுரைக்குத் தென்மேற்கே திருப்பரங்குன்றம் இருக்கிறது. ஆதலால், முற்கால மதுரை இக்கால மதுரை அன்று எனக் கருதப்படுகிறது என்கிறார், ந.சி.க.

(நகரின் ஒரு திசையில் நகரம் வளர்ந்து மறுதிசையில் குறைந்திருக்கலாம்; அதனால் தென்மேற்காகியிருக்கலாம்.)

2. திரு ஆவினன்குடி - இது பழனி மலையின் அடிவாரத்தில் உள்ளது; திருஏரகம் - இது கும்பகோணத்திற்கு அருகேயுள்ள சுவாமிமலை.

3. பல இடங்களைப் படங்களுடன் விளக்கியுள்ளார். சீறியாழ், செங்கோட்டியாழ் ஆகியவற்றிற்குப் படங்கள் வரையப் பட்டுள்ளன. யாழின் பத்தர், போர்வைத்தோல் ஆகியன எப்படியிருந்திருக்கும் என்பதையும் படங்கள் வாயிலாய்க் காட்டியுள்ளார்.

4. எட்டுத்தொகை நூல்களுள் ஐந்துக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். பதிற்றுப்பத்து, பரிபாடல் முதலிய நூல்கள் முற்றிலும் கிடைக்கப்பெறவில்லை. அவற்றிற்கும் இவர் கடவுள் வாழ்த்துப் பாடினாரா அன்றா என அறிய முடியவில்லை. கலித்தொகையின் கடவுள் வாழ்த்து நல்லந்துவனாரால் செய்யப்பட்டிருக்குமோ என்னும் ஐயம் உண்டு. பத்துப்பாட்டில் கடவுள் வாழ்த்து இல்லை. தொகைநூல்களில் கடவுள் வாழ்த்து இருப்பதைக் கண்ட புலவர் ஒருவர் திருமுருகாற்றுப்படையே கடவுள் வாழ்த்தாய் அமையுமெனக் கொண்டு அதனை முதலாய் வைத்துப் பத்துப்பாட்டைத் தொகுத்திருக்கலாம் என்பது, ந.சி.க. கருத்து.

5. பத்துப்பாட்டின் இறுதியில் ஆராய்ச்சி உரை ஒன்று எழுதியுள்ளார். அதில் அவர் சங்க நூல்கள் எவையெனச் சுட்டிச் சொல்கிறார். "சங்க நூல்கள் என வழங்குவன எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பன. சங்கத்தின் இறுதிக்காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதி என ஆராய்ச்சியாளர் கூறுவர். இக்கால எல்லைக்குள் செய்யப்பட்ட திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியனவும் சங்ககாலத்தனவாகும்" என்று ந.சி.க. எழுதி, சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் சங்க இலக்கியமாக்குகிறார். சங்க நூல்கள்பற்றிய புதிய கருத்து இது.

6. ஆராய்ச்சி என்பது முடிவற்ற ஒன்று; ஒரு கருத்து, மேலும் மேலும் ஆராய்வதற்கு இடம் தருவதாய் இருக்கும்.

திருமுருகாற்றுப்படையில் புராணக் கதைகள் காணப்படுதலின் அது பிற்காலத்திய நூல் என்பர், ஒரு சாரார். பரிபாடலிலும், கலித்தொகையிலும் பல புராணக் கதைகள் உள்ளன. சங்க காலத்திலேயே புராணத் தொடர்பான பழங்கதைகள் தமிழ் நாட்டில் அறியப்பட்டிருந்தன என்பது தெரிகிறது. புராணக் கதைகள் காணப்படுதலின் திருமுருகாற்றுப்படை பிற்காலத்தது எனக் கொள்ளுதல் மேலும் ஆராய்ச்சிக்குரியது என்கிறார், ந.சி.க.

7. அவர் வசன நூல்களுள் மிகமிக எளிமையான நடையினதாய், எல்லோராலும் படித்தறியத்தக்கதாய்ப் பத்துப் பாட்டு திகழ்கிறது. எந்தச் சொல்லும் விடுபட்டுவிடக்கூடாது என்றில்லாமல், பாடற்பகுதியின் கருத்தைப் படிப்பார் அறிந்தால் போதும் என்ற வகையில் இவ்வசனம் எழுதப்பட்டுள்ளது.

சில சான்றுகள்

(அ) சிறுபாணாற்றுப்படையில் 13-30 அடிகளில் விறலியின் தோற்றம் வருணிக்கப்பட்டுள்ளது. அதை, "அவள் கூந்தல் கருமையுடையது; அடிகள், ஓடி இளைத்த நாயின் நாக்குப் போன்றவை; வாழைத்தண்டுபோலப் பருத்து, ஒன்றோடொன்று நெருங்கிய தொடை, யானையின் துதிக்கை போன்றது; கொண்டை, வாழைப்பொத்தி போன்றது; அழகுத் தேமல் படர்ந்த தனங்கள், கோங்கின் முகை போன்றவை; பற்கள் அழகு வாய்ந்தவை" என மிக அருமையாய் ஓரளவே தமிழ் கற்றோரும் அறியும் வகையில் எளிமைப்படுத்தி எழுதியிருக்கிறார்.

(ஆ) சிறையில் பகைவரால் அடைக்கப்பட்டிருந்த கரிகாலன் மீண்டு வந்ததை ஓர் உவமைமூலம் பட்டினப்பாலை கூறுகிறது.

கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர்பிணி யகத்திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு..... (221–24)

இதன் உவமைநயம் குறையாமல் உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் ந.சி.க.வின் உரைநடை அமைந்திருக்கிறது.

ந.சி.க. உரைநடை : "கூரிய நகங்களையுடைய புலி, கூட்டிலே அடைபட்டு நின்று வளர்ந்தாற்போல, கரிகாற்சோழன் பகைவர் சிறையிலிருந்து வளர்ந்தான். சிறையினின்றும் வெளியேற விரும்பிய அவன் குழியிலே அகப்பட்ட யானை, சுவரின் கரைகளைக் கொம்பாற் குத்தித் தூர்த்துப் பிடியிடத்தே சென்றாற்போலக் காவலாய் நின்றோரை வாளாற்றுணித்து அவ்விடத்தினின்றும் அகன்றான்."

(இ) மலைபடுகடாத்தில் கூத்தர் எடுத்துச் சென்ற இசைக்கருவிகளை ந.சி.க. தம் உரைநடையிற் கூறுவது அவ்விசைக் கருவிகள் இசைப்பதைக் கேட்பதினும் இனிமை மேம்பட்டதாய் இருக்கிறது.

"ஆகாயத்தில் முழங்கும் ஓசைபோல் ஒலிக்கும் மத்தளம், வலிந்து இறுக்கிய வார்க்கட்டுடையது. கஞ்சதாளம், வெண்கலத்தை உருக்கித் தகடாய்த் தட்டிச் செய்யப்பட்டது. கொம்பு, மயிலிறகும் தழையும் கட்டப்பெற்றது. நெடுவங்கியம், யானையின் தும்பிக்கை போன்று கணுக்களில் துளைகளுள்ளது. குறிய தூம்பு, இளி என்னும் நரம்பின் ஓசையைத் தன்னிடத்தே தோற்றுவிக்கும் இயல்பினது. இனிய குரல், பாட்டின் சுருதி குன்றாமல் மேற்கொண்டு நிற்கும். கரடிகை, மத்திமமாகிய ஓசையைச் செய்யும். எல்லரி, தாளத்தைக்கொண்டு ஒலிக்கும். ஒருகண் மாக்கிணை, மாத்திரை அறிவிக்கும் தாளத்தையுடையது. இவற்றோடு சிறுபறையும், இன்னும் கூறாதொழிந்த வாத்தியங் களும் இடுதற்குரிய உறைகளிலிட்டுச் சுருக்கிடப்பெற்றுப் பலாக்காய்க் கொத்துகள் போன்ற தோற்றத்தைத் தந்தன. (மலைபடுகடாம் 1 முதல் 11 அடிவரை உள்ள பகுதியின் வசனம்.)

தமிழர்களே, சிந்தியுங்கள். இவ்வளவு கருவிகளை இசைத்து, இவற்றோடு பல பண்களைப் பாடிச் சிறந்திருந்த நிலையை மறந்து, 'தமிழில் இசை இல்லை' என்னும் பொருளற்ற பேச்சைத் தமிழர்களே சொல்லும் நிலையை உண்டாக்கியவர்களை எவ்வகையில் சேர்ப்பது?

ந.சி. கந்தையா பிள்ளையின் சங்க இலக்கிய வசனங்களை மூன்று தொகுதிகளாய் அமிழ்தம் பதிப்பகம் வெளிக்கொணர்கிறது. தமிழ் அமிழ்தம் பதிப்பகம், தமிழ்க் காப்புப் பதிப்பகமாகும். தமிழ், தமிழர், தமிழர் நாகரிகம், பண்பாடு ஆகியன குறித்த நூல்களை வெளியிடுவதை இப்பதிப்பகம் தன் குறிக்கோளாய்க் கொண்டிருக்கிறது. திரு.இனியன், தாய்மண் பதிப்பக உரிமையாளர் திரு. இளவழகனுக்கு மகனாவார். திரு. இளவழகன் தந்தை பெரியார்வழி நிற்கும் பகுத்தறிவாளர்; மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்வழி நிற்கும் தனித்தமிழ்ப் பற்றாளர்; இக்கொள்கை களில் அழுத்தமாய், என்றும் மாறாது நிலைத்து நிற்பவர். ஆகையால்தான், இத்தகைய நூல்களை மட்டுமே வெளியிட்டு வருகிறார். மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் நூல்கள் அனைத்தையும் திரட்டி அச்சிட்டுத் தமிழ் மக்கள் கை களில் தவழ விட்ட பெருமை இளவழகனாரையே சாரும்.

தொல்காப்பியப் பண்டைய உரைகள் அனைத்தையும் கொண்ட தொகுதிகளையும் வெளியிட்டு 'உரைவளம்' கண்டுள்ளார். ஒரு தொழிலைச் செய்வது ஊதிய நோக்கமும் கலந்ததுதான். நண்பர் இளவழகன், தமக்குக் கைப்பிடிப்பே என்றாலும் இத்தகைய நூல்கள் வெளிவந்தேயாக வேண்டும் எனத் தளராது பாடுபடுபவர். பல நேரங்களில் அவர் பட்ட துன்பங்களை நானறிவேன். எளிமையும், அடக்கமும், தமிழ் மேம்பாட்டில் முனைப்பும் கொண்ட தமிழ்மகன் ஒருவரை இளவழகன் உருவிலே காண்கிறேன்.

நூலை அறிஞர்கள் எழுதுவது எவ்வளவு பெரிய தொண்டோ அதற்குச் சற்றும் குறையாதது வெளியிடுவோர் தொண்டு. தாம் எழுதிய நூல்களை வெளியிட முடியாமல், அதற்காகச் சென்னை நோக்கி வந்தவர் ந.சி.க. அவர்கள் என்பதை அறிவோம்.

அமிழ்தம் பதிப்பகம் வெளியிட்டுள்ள இந்நூல்களை வாங்கித் தமிழர்கள் பெரும்பயனடைய வேண்டும் என்பதோடு அமிழ்தனைய அருந்தமிழ் நூல்களை அமிழ்தம் பதிப்பகம் அடுத்தடுத்து வெளியிட்டு வரவேண்டுமென்றும் விழைகிறேன்.

தம் தந்தைவழி நின்று மகன் இனியன் ந.சி.க. நூல்களைத் தமிழர் அனைவரும் அறியத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

நூல் ஆக்கம்	அறிஞர் ந. சி. கந்தையா பிள்ளை
வகைமை	சங்க இலக்கிய உரை
வெளியீடு	அமிழ்தம் பதிப்பகம், சென்னை. (2004)

21

வீரம் செறிந்த இஸ்லாம்

“நானிலத்தைத் தாங்குபவை நான்கு பெரும் பொருளாம். அவை அறிஞர்களின் கல்வி, அறவோரின் நேர்மை, பெரியோரின் நீதி, வீரர்களின் துணிவு” எனும் இப்பொன்மொழி ஸ்பெயினில் இருந்த பல்கலைக் கழகங்களின் முகப்புதோறும் திகழ்ந்ததுவாம். (இந்நூல் பக். 223) உலகைத் தாங்கும் பெரும் பொருள்களுள் ஒன்றான வீரர்களின் துணிவை - வீரத்தை - விளக்கி ஏம்பல் தஜம்முல் முஹம்மது அவர்கள் 'வீரம் செறிந்த இஸ்லாம்' என்னும் இந்த அரிய நூலை உருவாக்கியிருக்கிறார்.

வீரம் என்பதற்கு வல்லமை என்பது பொருளாம். இசுலாமியப் பெருமக்கள் வல்லமை தோன்றப் புரிந்த அருஞ் செயல்களை ஆசிரியர் இந்நூலில் அழகுற விளக்கியுள்ளார். அபூபக்கர், உமர், உதுமான், அலீ மற்றும் நாயகத் தோழர்கள், மார்க்க அறிஞர்கள், தொண்டர்கள் ஆகிய பல்லோர் வாழ்வில் நடந்த வீரம் செறிந்த செயல்கள் நூலுள் பேசப்படுகின்றன. அரேபியா, ஸ்பெயின், சிரியா, ஈராக், ஈரான், மத்திய ஆசியா, இந்தியா ஆகிய நாடுகள் ஆசிரியர் கூறியுள்ள வீரச் செயல் களுக்குக் களங்களாய் உள்ளன.

அஞ்சாமை, தியாகம், கலங்காமை, உள்ளத்திண்மை, கடமை தவறாமை, நடுநிலை நிற்றல், தளராத தன்னம்பிக்கை, துவளாத் தூய தொண்டு, வாக்குறுதி வழுவாமை, வஞ்சகத்தை எதிர்த்தல், உண்மையைத் துணிந்து சொல்லுதல், குருதி கசிந்தாலும் உறுதி கசியாதிருத்தல், இறை நம்பிக்கையில் உறுதியோடிருத்தல், பொது நலத்திற்காகத் தன் இன்பத்தைத் துறத்தல், சொந்த விருப்பு வெறுப்புகட்கு ஆளாகாது நேர்வழி நிற்றல், நேர்மையை நிலைநிறுத்த முனையும் முனைப்பு, இறைவனைத் தவிர எவருக்கும் தலைவணங்காதிருத்தல், பிறந்த மண்ணின் சுதந்தரத்தைப் பேணுதல் போன்று உள்ளத் திண்மைக்கு அடிப்படையாய் அமைவன எவையுமே வீரச் செயல்களாம். அத்தகு வீரச் செயல்களை நம் உள்ளம் உருகவும், உடல் புல்லரிக்கவுமான முறையில் தஜம்முல் முஹம்மது இந்நூலுள் கூறியிருக்கிறார்.

அபூபக்கர் (ரலி)

அபூபக்கர் இசுலாத்தைத் தழுவிய நேரம். மக்காக் குறைஷிகளின் கொடுமைகளிலிருந்து அவருக்குப் பாதுகாப்பளித்து வந்த இப்னு துங்னா என்பார் அக்குறைஷிகளின் தொல்லையால் தாம் இனிப் பாதுகாப்பளிக்க இயலாமையைத் தெரிவித்தபோது அபூபக்கர் அவர்கள், "தாங்கள் அளித்துவந்த பாதுகாப்பை இனி அருள்கூர்ந்து நிறுத்திக்கொள்ளலாம். நான் என் இறைவன் பாதுகாப்பில் முழுமகிழ்ச்சியோடு இருக்கிறேன்" எனக் கலங்காமற் சொன்னார்.

அபூபக்கர் மகனார் அப்துர் ரஹ்மான் ஒரு காலத்தில் இசுலாத்துக்குப் பகைவராயிருந்தவர். இசுலாத்தைத் தழுவிய பிறகு ஒரு நாள் தந்தையிடம், 'பத்ரு போரில் பலமுறை தாங்கள் என் வாளின் எல்லைக்குள் வந்தபோதும் பாசத்தால் உங்களை வெட்டாது விட்டுவிட்டேன்' என்றார். அபூபக்கர் அவர்களோ, 'எனக்கு அப்படி வாய்ப்பு நேரிட்டிருந்தால் கடமையை ஆற்றியிருப்பேனே தவிரப் பாசத்தை முன்நிறுத்தியிருக்க மாட்டேன்' என்றாராம்!

தபூக் போருக்கு நிதி திரட்டப்பட்டபோது, அபூபக்கர் தம் குடும்பத்துக்கென எதையும் வைத்துக்கொள்ளாது தம்மிடமிருந்த அனைத்தையும் பெருமானாரிடம் தந்தார். பெருமானார், "உங்கள் குடும்பத்திற்கென எதுவும் வேண்டாவா?" என்றபோது அபூபக்கரோ, 'அவர்கட்கு இறைவனும் இறைவன் தூதரும் மட்டுமே போதுமான செல்வங்களாகும்' என்று பெருமை பொங்கக் கூறினார்.

பெருமானார் மரணமடைந்தபோது அச்செய்தியை எவரும் ஏற்கவில்லை. உமரு அவர்களோ உருவிய வாளுடன் 'இறைதூதர் இறந்தார் என்று எவனாவது சொன்னால் அவனைத் துண்டாக்குவேன்' என்று கொதித்துக் கூறியபோது, அபூபக்கர் அமைதியாய் - ஆனால், உறுதியாய் 'இறைவனுக்கு இறப்பில்லை. அவன் தூதரேயாயினும் இறப்பு உறுதியானதே' என உண்மையைத் தெளிவுபடுத்தினார்.

பெருமானார் இறந்த நிலையில் இசுலாமியக் குடியரசின் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பெற்ற அபூபக்கர் அவர்கள் தம் உரையை ஆற்றிக்கொண்டிருந்த வேளையில் அந்தித் தொழுகைக்குரிய நேரம் வந்தது. உடனே, உரையை நிறுத்தி, 'எல்லோரும் எழுந்து தொழுகைக்கு வாருங்கள்' என்றார். இறைதூதரின் இறந்த உடல் அருகே இருந்தபோதும் கடமை தவறாது

தொழுகையை நடத்தினார்.

அபூபக்கர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஐம்பெருங் கடமைகளுள் ஒன்றான ஜக்காத் நிறைவேற்றத்தில் சில சலுகைகள் கேட்கப்பட்டபொழுது, "இறை வழியிலிருந்து தவறேன். இறைவழியை நிலை நாட்டப் போராடுவதில் என் உயிரே போனாலும் மகிழ்ச்சியோடு ஏற்பேன்" எனக் கூறி இறை கட்டளையை நிறைவேற்றுவதில் இம்மியளவும் தவறாது செயல்பட்டார்.

இறைவன் காப்பே இணையற்ற காப்பு எனும் நம்பிக்கை, இறைபணியில் பந்த பாசத்திற்கு இடமளிக்காமை, இருப்பது அனைத்தும் இறைபணிக்கே எனும் இறைநேயம், பிறந்தோர் எவருக்கும் இறப்புண்டு என்ற தெளிவு, கலக்கத்திலும் கடமை தவறாமை, எது நேரினும் இறை கட்டளையை மீறாமை எனும் வீரப்பண்புகளை அபூபக்கர் வாயிலாய் ஆசிரியர் வெளிப்படுத்து கின்றார்.

உமர் (ரலி)

முதலில் இசுலாத்திற்குப் பகைவராயிருந்த உமர், பிறகு நாயகத் தோழர் ஆனார். பெருமானாரைப் பின்பற்றி இசுலாமியர் ஆனோர் மக்காவிலிருந்து மதீனா செல்வதை மக்காக் குறைஷிகள் தடுத்து வந்தனர். அந்நிலையில் உமர் அவர்கள், "நான் குடும்பத்தோடு மதீனா செல்கிறேன். எதிர்க்க விரும்புவோர் மக்காவுக்கு வெளியே வந்து நிற்கலாம்" என வீரம் பேசி வெளியே புறப்பட்டார். தடுக்க முடியுமா அவரை?

உமர் ஆட்சிக் காலத்தில் அவர் நண்பரும், சிரியா நாட்டின் சக்திமிக்க அரசருமான ஜபலா என்பார் மக்காவுக்கு ஹஜ் செய்ய வந்தார். ஆலயத்தில் ஏழை அரபி ஒருவன் அவர் ஆடையை அறியாமல் மிதிக்க நேர்ந்தபோது, அரசர் அவனை அறைந்து விட்டார். அரபி உமரிடம் முறையிட, உமர், ஜபலாவை அழைத்து நடந்ததையறிந்து, 'அடிபட்டவன் மன்னித்தாலொழிய நீங்கள் அடிக்கு அடி திரும்பப் பெற வேண்டும்' என்றார். அண்டை நாட்டுப் பகையே நேர்ந்தாலும் ஆண்டவன் முன் அனைவரும் சமம் எனும் நிலையிலிருந்து மாறமுடியாதன்றோ?

உமர் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து ஒரு கைதியை விசாரணை செய்தார். அவனுக்கு மரண தண்டனை உறுதி என்பது அவனுட்பட அனைவரும் அறிவர். அவன் ஒரு குவளை நீர் கேட்டான். தரப்பட்டது. "இதை அருந்துவதற்குள் வெட்டப்படுவேனோ என

அஞ்சுகிறேன்" என்றான், அவன். 'நீ இந்நீரை அருந்துமுன் எவரும் உன்னைத் தொடார்" என்றார், அரசர். அடுத்த கணம் அவன் நீரைத் தரையில் சட்டெனக் கொட்டிவிட்டான். அந்நீரை அருந்துமுன் கொல்ல மாட்டேன் என்ற சொல்லைக் காப்பாற்ற அவனை விடுதலை செய்தார், உமர்.

பொதுப் பொருட்குவையிலிருந்து ஆளுக்கொரு துணி (துண்டு) அளிக்கப்பட்ட அன்று, உமர் இரண்டு துண்டணிந்து தொழுகை உரையை நடத்தத் தொடங்கினார். இளைஞன் ஒருவன் உடனே எழுந்து, கலீபா தம் உரையைத் தொடரக் கூடாது என்றான். ஒவ்வொருவர்க்கும் ஒரு துண்டு என்றபோது அரசர் மட்டும் இரண்டு எடுத்துக்கொள்வது என்ன நியாயமென்றான். உமர் அவர்கள் மகன், தன் பங்குக்கான துண்டினைத் தன் தந்தைக்குக் கொடுத்திருப்பதாய்க் கூறப்பட்டதும், "தவறு எதுவும் நடக்க வில்லை; ஆகவே, உரை தொடரலாம்" என்றான், முன்பு குரல் கொடுத்தவன். மக்களுக்குரிய சலுகை எதுவோ அதுவே கலீபாவுக்கும்!

காலித் என்பார் இணையற்ற பெருவீரர். ஒரு போரில் தளபதியாயிருந்து அவர் பணியாற்றிக்கொண்டிருந்தபோது அவரை மாற்றி வேறொரு தளபதியை நியமித்து ஆணை அனுப்பினார், உமர். ஆணைக்குக் காலித் கீழ்ப்படிந்தார். போர் முடிந்து ஊர் திரும்பியதும், தான் பதவியிலிருந்து நீக்கப்பட்ட தற்குக் காரணம் அறியலாமா எனக் காலித் கேட்டபோது, உமர் அவர்கள், "எல்லாப் போரிலும் நீங்கள் பெருவீரம் காட்டுவதால் வெற்றிக்கு நீங்களே முதலென்றெண்ணி மக்கள் இறைவனின் பேரருளை மறந்துவிடுகின்றனர். அதனாலேயே இம்மாற்றம்" என்றாராம்.

வைகறைத் தொழுகையை கலீபா உமர் நடத்திக்கொண் டிருந்தபோது வெறி கொண்ட ஒருவன் அவரைக் குத்திவிட்டான். தொழுகைக்குத் தடையேற்படாமல் இருக்க உமர் அவர்கள், உடனே தாம் விலகி, அந்த இடத்தில் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் அவர்களை நிறுத்தித் தொழுகையைத் தொடரச் செய்தார். கலீபா அவர்கள் குற்றுயிராய் அருகே கிடக்கும் வேளையிலும் தொழுகை அமைதியாய் நடந்தது.

எந்நிலையிலும் அஞ்சாத தன்மை, நீதியிலிருந்து பிறழாத நேர்மை, சொன்ன சொல் தவறாத வாய்மை, பொதுச்சொத்தைக் கையாளும் சமன்மை, இறை நம்பிக்கை குறைய இடம் தராமை,

தொழுகை தடைப்பட அனுமதியாமை ஆகியவற்றில் உமர் (ரலி) காட்டிய உள்ளத் திண்மையை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

உதுமான் (ரலி)

புரட்சியாளர்கள் உதுமான் இல்லத்தைச் சூழ்ந்திருந்தனர். ஆணையிட்டால் கலகக்காரர்களை அழித்தொழிப்பதாய் மதீன இசுலாமியர் உதுமானிடம் வேண்டினர். அவரோ முசுலிம் களிடையே போர் நடக்க அனுமதிக்க முடியாதென்றார். மதீனாவைவிட்டுப் பாதுகாப்பாய் வெளியேறக் கேட்டபோதும் மறுத்துவிட்டார். இறுதியில், ஒரு நாள் கலகக் கும்பல் உட்புகுந்து அவரைக் கொன்றது. "அளவற்ற அருளாளனான என் அல்லாஹ்வே! என் மரணத்தால் என் மக்களிடையே ஒற்றுமை ஏற்படச் செய்வாயாக" என வேண்டியவாறே அவர் உயிர் பிரிந்தது. ஒற்றுமையைக் காக்கத் தம் ஒப்பற்ற உயிரை ஈந்த நிகழ்ச்சி இது.

அலி (ரலி)

போர்க்களத்தே அலீ போரிட்டபோது எதிரியின் வாள் முரிந்து இரு துண்டானது. எதிரியோ, 'நான் கோழையல்லன், ஓடிவிட! வாளற்ற என்னோடு போரிடுவது உமக்கு வீரமாகாது; எனக்கு ஒரு வாள் தாருங்கள், போரிடுவோம்' என்றான். அலீயார் தம் வாளை அவனிடம் தந்துவிட்டுத் தாம் வாளின்றி நின்றார். 'உம் வாளையே தந்துவிட்டீரே' என அவன் கேட்டபோது, 'என் செய்வது! ஒருவர் ஒன்றை என்னிடம் கேட்டபோது அதைத்தர மறுத்ததில்லையே' என்றார். அலீயின் மறுமொழி அவன் மனத்தை மாற்றியது. வாளை எறிந்துவிட்டு இசுலாமில் இணைந்தான்.

கைபர் போரில் அலீ அவர்கள் தாம் வென்று வீழ்த்திய ஒருவன்மீது ஏறி அவனைக் கொல்ல முயன்றபோது, அவன் அலீயின் முகத்தில் காறி உமிழ்ந்தான். என்ன நேருமோ என அஞ்சிய அவனை அலீ தூக்கி நிறுத்தினார். துப்பியும் தன்னைக் கொல்லாதது ஏன் என்று அவன் கேட்டபோது, 'நான் இசுலாமிய இலட்சிய நிறைவேற்றத்துக்காக மட்டுமே போரிடுபவன்; சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக அன்று. நீ உமிழ்ந்த பிறகு உன்னைக் கொன்றால் அந்த வெறுப்புக்காகக் கொன்றதாகும். அதனால் கொல்லாது விட்டேன்' என்றார்.

அலீயார் காலத்தில் இசுலாமியர்கள் இரு பிரிவாய்ப் பிரிந்து போரிட நேரிட்டது. போர்க்களத்தில் தாகத்தோடிருந்த அலீயார்க்குப் பணியாள் இனிய பானம் தந்தான். அலீயார் அதைப்

பருகாமல், 'படுகளத்தில் தாகமுற்றுக் கிடப்பவர்கள் அருந்த முதலில் நீர் தாருங்கள்' என்றார். 'அவர்கள் நம் பகைவர்க ளாயிற்றே' என்று பணியாளர்கள் சொன்னபோது, "அவர்களும் மனிதர்கள்தாமே" என அலீயாரின் மறுமொழி வெளிப்பட்டது.

''போர்க்களத்தில் ஏன் கோவேறு கழுதைமீது செல்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு அலீ, "நான் புறமுதுகு காட்டி ஓடுவதும் இல்லை; புறமுதுகு காட்டி ஓடுபவர்களைத் துரத்திச் சென்று கொல்வதும் இல்லை. எனவே, வேகமாய் ஓடும் குதிரை வேண்டியதில்லை. மெதுவாய்ச் செல்லும் இந்தக் கோவேறு கழுதையே போதுமானதன்றோ?'' எனப் பொறுமையாய் விடையளித்தார்.

தன்னுயிர்க்கிறுதி நேரினும் கேட்டதை இல்லையென் னாமை, சொந்த விருப்பு வெறுப்புகட்காய்ப் பகை பாராட்டாமை, எதிரியாயினும் உயிரிரக்கம் காட்டும் உயர் உள்ளம், போரில் புறமுதுகிட்டோரைத் துன்புறுத்தாமை ஆகிய பெருவீரச் செயல்களை அலீயாரிடம் ஆசிரியர் காட்டுகிறார்.

ஹஸன்

இவர் அலீயார் திருமகன். கர்பலாக் போர்க்களத்தில் தம் உடன்பிறந்தார் ஹுஸைன் (ரலி) அவர்கட்காகப் போரிட்டு இறந்தார். எதிரிகளுடன் தீவிரமாய்ப் போரிட்டு, அவர்களை வீழ்த்திய அவர் ஹுஸைன் அவர்களிடம் திரும்பி வந்து அவர் முகத்தை மீண்டும் ஒருமுறை பார்த்துவிட்டுச் செல்வதாய்ச் சொல்லிவிட்டு, இளைப்பாறாமல் போர்க்களம் சென்றார். எதிரிகளை வெட்டிக்குவித்து வீர மரணம் எய்தும்போது இவரின் வாய் "அல்லாஹ்வின் பெயரால், அவன் உதவியால், அவனுக்காக உயிர் நீத்தேன்" என்னும் சொற்களையே ஒலித்தது.

பிலால்

அடிமையாயிருந்தவர்களுள் முதன் முதலில் இசுலாத்தைத் தழுவியவர், பிலாலே. அவர் எஜமானன் உமையா பின் கலஃப் அவருக்குப் பல இன்னல்களை விளைவித்து அவரை இசுலாத்தி லிருந்து விலகிவிடுமாறு கூறினான். அவன் அவரை இரும்புத் தடியால் அடித்தபோதும், கொதிக்கும் மணலில் வெற்றுடலோடு கிடத்தியபோதும், நெஞ்சின்மீது பாறாங்கல்லைத் தூக்கி வைத்து வதை செய்தபோதும் அவர் 'அஹதுன், அஹதுன்' (இறைவன் ஒருவனே....) எனக் கூறினாரே தவிர உள்ளம் தளர்ந்தாரிலர்.

சுஹைப் ரூமி

கிரேக்க நாட்டில் பிறந்தவர்களுள் முதன் முதலில் இசுலாத்தைத் தழுவியவர் இவராதலால் பெருமானாரால் 'ரோம் நாட்டின் முதற்கனி' என்று பாராட்டப்பெற்றவர். அடிமையாய் வாங்கப்பெற்ற இவர், பின்னர் விடுதலை பெற்றுப் பெரும் பொருள் ஈட்டினார். அண்ணல் நபி அவர்கள் மதீனா சென்றதும் இவரும் தமது நூறாவது வயதில் அங்குப் புறப்பட்டார். குறைஷிகள் தடுத்தனர். 'ஓட்டாண்டியாய் வந்தவர்தானே நீர்! எங்கள் நாட்டுக்கு வந்துதானே வாழ்வும் வளமும் பெற்றீர்" என்றனர். அவரோ, 'என் செல்வமனைத்தையும் மக்காவில் என் வீட்டிலேயே விட்டு வந்துள்ளேன். நான் ஓட்டாண்டியாகவே செல்கிறேன்' என்றதும் குறைஷிகள் விட்டுவிட்டனர். சுஹைப் அவர்கள் குபாவில் பெருமானாரைச் சந்தித்ததும், 'நீர் நல்ல வாணிபம் செய்து வந்துள்ளீர்' என வரவேற்றார். கொள்கைக்காக ஈட்டிய செல்வமனைத்தையும் இழந்துவிட்ட பெருமனம் கொண்டவர் இவர்.

அம்மார் இப்னு யாஸிர் (ரலி)
அப்பாத் இப்னு பஷர் (ரலி)

நபிகள் நாயகம் போர் முடித்துத் திரும்பும் பொழுது ஓர் இடத்தில் படையினர் உறங்கிக்கொண்டிருந்தனர். அவ் வேளையில் அம்மாரும் அப்பாத்தும் அப்படையினருக்குக் காவலிருந்தனர். ஒருவர் காவல் புரியும் போது இன்னொருவர் உறங்குவது என முடிவு செய்துகொண்டனர். அதன்படி அம்மார் உறங்க அப்பாத் காவல் செய்தார். அப்பாத் தொழுகை விரிப்பின்மீதிருந்து நின்று தொழலானார். அது வேளை எதிரிகளுள் ஒருவன் தொடர்ந்து எய்த மூன்று அம்புகள் அவர் உடம்பில் தைத்தன. அவர் அவற்றைப் பிடுங்கித் தூர எறிந்தார். தொழுது முடித்த பிறகுதான் அவர் தம் தோழரை எழுப்பினார்.

முஆது இப்னு அம்ரு; முஆது இப்னு அப்ரா

பத்ரு போரில் அபூஜஹிலை எப்படியாவது கொல்ல வேண்டுமெனச் சிறுவர் இருவர் துடித்தனர். அவனை அவர்கள் பார்த்ததில்லை. அடையாளம் கேட்டனர். தெரிந்ததும் இருவரும் பாய்ந்தனர். முஆது இப்னு அம்ரு, அபூஜஹிலின் காலை வெட்டினார். அதைக் கண்ட அபூஜஹிலின் மகன் இக்ரிமா முஆது இப்னு அம்ருவின் தோளைத் துணித்தார். வெட்டுண்ட கையை முதுகில் தொங்கவிட்டுக்கொண்டே இப்னு அம்ரு மற்றொரு

கையால் போர் புரிந்தார். தொங்கிய கை தொல்லையாய் இருக்கவே அவ்விளைஞர் அக்கையைத் தாமே வாளால் அறுத்து வீசிவிட்டுத் தொடர்ந்து போர் புரியலானார்.

குபைப்

காட்டரபித் தலைவர் ஒருவர் பெருமானாரைக் கண்டபோது இசுலாத்தைப் போதிக்க அறிஞர் சிலரைத் தம்முடன் அனுப்புமாறு கேட்டார். நாயகமவர்கள் 10 பேர் கொண்ட ஒரு குழுவை அனுப்பினார். காட்டரபிகளின் எல்லைக்குள் அவர்கள் வந்ததும் வஞ்சகர்கள் அப்பத்துப் பேருள் எழுவரைக் கொன்றனர்; மூவரைச் சிறைபிடித்தனர். அவர்களுள் ஒருவர் குபைப். இவர் பத்ருப் போரில் மக்காவாசியான ஹாரித் என்பவனைக் கொன்றார். ஆதலின், அவன் மக்கள் இவரை விலை கொடுத்து வாங்கி, மக்காவுக்கு வெளியே நிறுத்திச் சிரச்சேதம் செய்ய நாள் குறித்து அறிவித்தனர். தண்டனை நிறைவேற்றப்படுமுன் இறுதியாய் இரண்டு ரக்கத் தொழுதுகொள்ள வாய்ப்பளிக்குமாறு குபைப் கேட்டார். அனுமதிக்கப் பட்டது. தொழுது முடிந்தபின் அவர் கூட்டத்தினரிடம், 'நான் நெடுநேரம் தொழுதிருப்பேன். எனினும், நான் இறப்பதற்கஞ்சி இவ்விதம் செய்ததாய் நீங்கள் எண்ணிக் கொள்ளக் கூடாது என்பதாலேயே சுருக்கிக்கொண்டேன்' என்றார். அல்லாஹ்வின் பாதையில் உயிரைத் தியாகம் செய்வதில்தான் எத்துணை வீரம்!

ஸஅத் உல் அஸ்வத் என்னும் இளைஞருக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. திருமண நாளன்று சன்மார்க்கப் போர் அறிவிப்பு வந்தது. திருமணத்தை விட்டார்; போர்க்களம் சென்றார்; இறை நெறிக்கான அப்போரில் வீரத்தோடு போரிட்டு மரணத்தைத் தழுவினார். மணம்முடிக்க வேண்டியவர் மரணத்தை அணைத்துக் கொண்டார்.

ஆமிர் இப்னு புஹைறா

ஆமிர் மக்கள் கூட்டத்தின் தலைவரான அபூபர்ரா ஆமிர் இப்னு மாலிக் அவர்கள் நபிகள் நாயகத்தைச் சந்தித்தபோது தம் இன மக்களுக்கு நல்வழி காட்ட நபித் தோழர்களை அனுப்புமாறு கேட்டபோது, நாயகமவர்கள் முன்திர் இப்னு அம்ர் தலைமையில் 40 பேர்களை அனுப்பி வைத்தார். பீரெ மவுனா என்ற இடத்தில் எல்லா முசுலிம்களையும் கொன்றுவிடுமாறு எதிரிகள் ஆளனுப்பி னார்கள். அங்கிருந்த ஆமிர் இப்னு புஹைறா என்பாரை ஜப்பார் என்பான் ஈட்டியால் துளைத்தபோது ஆமிர் இப்னு புஹைறா,

'அல்லாஹ்வின்மீது ஆணையாய் நான் வெற்றி கொண்டேன்' என்று சொல்லியவண்ணம் வீழ்ந்து இறந்தார். இறப்பவர் 'வெற்றி கொண்டேன்' என்றது ஜப்பாருக்கு வியப்பளித்தது. அவர் குறிப்பிட்டது, 'சுவன வெற்றி' என்றறிந்ததும் பின்னர் ஜப்பாரும் முசுலிம் ஆனார்.

ஹிந்தா

அபூசுப்யான் மனைவி; முஆவியா (ரலி) அவர்களுக்கு அன்னை. உகுதுப் போர்க்களத்தில் ஹம்ஸா (ரலி) அவர்களின் இறந்த உடலைப் பிளந்து, அவர்களின் ஈரலைக் கடித்துத் துப்பியவர். மக்கா வெற்றியின்போது இசுலாத்தைத் தழுவினார். பெருமானார் இவருக்கும் மன்னிப்பளித்தார். யர்மூக் போரில் கலந்துகொண்டு ஹிந்தா, இசுலாமிய வீரர்களுக்கு உற்சாகமூட்டிப் போரிடச் செய்தார்.

இக்ரிமா

இசுலாத்தின் பெரும்பகைவனான அபூஜஹல் மகனார் இக்ரிமா. அவர், நபிகள் நாயகம் மக்காமீது படையெடுத்தபோது அவர் வரவைத் தடுக்க வாளேந்தினார். இரு சாரார்க்கும் இடையே நடந்த மோதலில் இக்ரிமா உயிர் பிழைக்க யமன் நாட்டை நோக்கி ஓடினார். இவர் மனைவி உம்முஹானி இவருக்கு உயிர்ப்பிச்சை அளிக்குமாறு வேண்ட, நாயகமவர்களும் அருளினார்கள். கப்பலில் ஏறிவிட்ட இக்ரிமாவை, உம்முஹானி துணியை அசைத்துக் காட்டித் திரும்ப அழைத்துப் பெருமானார் மன்னித்துவிட்டதைச் சொன்னார். பகைவரை மன்னித்த பெருமானாரின் வீரம் பெருவீரமன்றோ?

உம்மு அபான்

அபூபக்கர் ஆட்சிக்காலத்தில் காலித் (ரலி) தலைமையில் அனுப்பப்பட்ட படை திமிஷ்க் (டமாஸ்கஸ்) கோட்டையை முற்றுகையிட்டது. அப்போரில் தாமஸ் எனும் ரோமானியத் தளபதி எய்த நஞ்சு தோய்க்கப்பட்ட அம்பு பட்டு அபான் இறந்தார். அவருக்கு அண்மையில்தான் திருமணம் நடந்தது. அவர் உடல், அடக்கம் செய்யப்பட்டதும் அவர் மனைவி உம்மு என்பார் தம் கணவனின் ஆயுதங்களை அணிந்துகொண்டு, இசுலாமியத் தளபதி காலிதுக்குத் தெரியாமல் கணவன் போரிட்ட இடத்திற்குச் சென்று, அங்கு ரோமானியப் பேரரசின் கொடியைப் பிடித்துக்கொண் டிருந்தவனின் கையை நோக்கி அம்பொன்றை எய்து கொடியை வீழ்த்தினார். அதனை ஓடி எடுத்து, முசுலிம் வீரர் ஒருவர் கையில்

கொடுக்க, அது கைக்குக் கை மாறி, இறுதியாய் முசுலிம் வீரர் ஷுரஹ்பீலின் கைக்கு வந்தது. தாமஸ் தம் நாட்டுக்கொடி எதிரியிடமிருப்பது கண்டு வீரப் போரிட்டபோது உம்மு, தாமஸ் மீது ஓர் அம்பை விட, அது அவர் கண்ணில் பாய்ந்து காயமேற் படுத்தி அவரைப் பின்வாங்கச் செய்தது. இசுலாமியர் வெற்றி பெற்றனர். கணவன் மறைந்ததும் அவன் கடமையை ஏற்று முடித்த உம்முவின் பெருவீரம் போற்றுதற்குரியது.

கன்ஸா

இவர் சிறந்த பெண் அரபிக் கவிஞர். இயற்பெயர் துமாதிர். ஹிஜ்ரத்துக்குப் பத்து ஆண்டுகட்கு முன்னர் இவர் தமையன் முஆவியா ஒரு போரில் இறந்தார். மூன்று ஆண்டுகள் கழித்து உடன்பிறந்த மற்றொருவர் ஷர்க் என்பவரும் போரில் கொலை யுண்டார். முன்னரே சில கவிதைகள் இயற்றியுள்ள கன்ஸாவின் கவியுள்ளம், ஷர்க் இறப்பால் பொங்கிப் பெருக்கெடுத்தது.

ஹிஜ்ரி 14இல் நடைபெற்ற கதீஸிய்யாப் போர்க்களத்திற்கு கன்ஸா தம் நான்கு மக்களுடன் வந்திருந்து, அவர்கட்கு வீரமொழி பகர்ந்து போர்க்களத்திற்கு அனுப்பி வைத்தார். அவர்கள் நால்வரும் உயிர் விட்டபோது, 'அவர்களுக்கு வீர மரணம் வழங்கிய இறைவனுக்கே எல்லாப் புகழும்' என்று அந்தத் தாய் கூறினார். மக்கள் நால்வரையும் இழந்துங்கூட இறைவனுக்கு உவப்புடன் நன்றி கூற முடிகிறது, இவரால்.

அபூமிஹ்ஜன் என்பார் நாயகத் தோழர்களுள் ஒருவர். போர்க்களத்தில் இருந்தபோது இவர் மது அருந்தியதாய்த் தளபதி ஸஅத் இவரைத் தம் வீட்டில் சிறைவைத்தார். முசுலிமாய் இருந்தும் வீணே வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறோமே எனப் பதைத்தார், அபூமிஹ்ஜன். தளபதி மனைவியிடம், 'என்னை விடுவியுங்கள். போர்க்களம் சென்று திரும்பினால் நானே விலங்கிட்டுக்கொள்கிறேன்!' என வேண்டி, விடுதலை பெற்றுப் போர்க்களம் சென்று வீரப் போரிட்டார். மாலையில் திரும்பிய அவர், தாம் வாக்களித்தபடி தாமே விலங்கிட்டுக்கொண்டார். செய்தியறிந்த தளபதி அவரின் வீரத்தைப் பாராட்டி விடுதலை செய்தார். அபூமிஹ்ஜனும் இனி மதுவைத் தொடுவதில்லை என்று ஆணையிட்டுக் கூறினார். மன உறுதி சிறந்த வீரம் அன்றோ?

அபூஉபைதா ஆமிர் இப்னுல் ஜர்ராஹ் எனும் தளபதி தம் மாபெரும் படையுடன் அம்வாஸ் என்னுமிடத்தில் தங்கியிருந்த பொழுது பிளேக் நோய் ஏற்பட்டுப் படைவீரர்களுள் 20,000 பேர் இறந்தனர். நிலைமையறிந்த கலீபா உமர் அவர்கள், ஒருமுறைக்கு

இருமுறை கடிதம் எழுதியனுப்பித் தளபதியை உடனே திரும்பி வருமாறு கூறினார். ஆனால், உபைதா அவர்களோ நோயுற்றவர்களுக்குப் பணிவிடை செய்வதில் ஈடுபட்டு அந்நோய்க்கே பலியானார். துன்பத்தில் துணிந்து நின்று உதவுவதினும் பெருவீரம் வேறென்ன இருக்கமுடியும்?

அம்ர் இப்னு ஆஸ்

அபூ பக்கர் (ரலி) காலத்தில், இவர் அலெக்ஸாண்டிரியாவின் ஆளுநர் ஆனார். அங்கிருந்த ஏசுவின் சிலையின் மூக்கை எவனோ உடைத்துவிட்டதால் கிறித்தவர்கள் ஒன்றுகூடி, நபியின் சிலை ஒன்றைச் செய்து அதன் மூக்கை உடைக்க வேண்டும் என்றனர். ஆஸ் அவர்களோ அதற்குப் பகரமாய்த் தம் மூக்கை வெட்டியெறியுமாறு கேட்டுக்கொண்டார். அவர் மூக்கைக் கிறித்தவர்கள் வெட்டச் சென்றபோது, குற்றவாளி குற்றத்தை ஒத்துக்கொண்டான். ஆஸின் நேர்மை கண்டு கிறித்தவர்களும் புகழ்ந்தனர். நேர்மையும் வீரந்தானே!

உக்பா பின் நாஃபிஉ

வட ஆப்பிரிக்காவில் இசுலாத்தைப் பரப்பியவர். ஐயாயிரம் மைல் நீளமுள்ள ஸகாராப் பாலைவனத்தைப் பத்தாயிரம் வீரர்களுடன் சென்று ஒரே ஆண்டில் வென்றார். மேற்குக் கடற்கரையை அடைந்த இவர், தம் உத்வேகத்தால் தம் குதிரையைச் சிறிது தொலைவு கடலுள் செலுத்தி, 'இறைவா! நிலப்பரப்பில் நின் மேன்மையைப் பரப்பிவிட்டேன்! எதிரே கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடல்தானே தெரிகிறது. இதுவும் நிலமாய் இருந்தால் நின் புனித மறையை இங்கும் பரப்பி இருப்பேனே' என்று கூறிக் கண்ணீர் விட்டுத் திரும்பினார். இறை நெறியைப் பரப்புவதில் தான் எத்துணை ஆர்வம்!

தாரிக் பின் ஜியாத்

இவர் இசுலாமிய வீரத் தளபதிகளுள் ஒருவர். இவர் அந்துலுஸ் (ஸ்பெயின்) மீது படையெடுத்துச் சென்று ஒரு குன்றின்மீது தங்கினார் (இன்றுள்ள ஜிப்ரால்டர்). ஸ்பெயின் படை பெரும்படை. இவரோ தாம் வந்த கப்பல்கள் அனைத்தையும் எரிக்கச் செய்தார். வீரர்களை நோக்கி, 'நாம் திரும்பிச் செல்லக் கப்பலில்லை. வெற்றி அல்லது வீர மரணம்; இரண்டனுள் ஒன்றே உங்கள் முன் நிற்பது' என வீரமூட்டிப் பகைவரை வெற்றி கண்டார்.

ஹகம்

ஸ்பெயினில் ஹகம் என்ற அரசர் ஒரு நாள் தலைநகருக்கு வெளியே ஓர் அழகிய நிலப்பகுதியைக் கண்டு, அங்கு ஒரு மாளிகை கட்ட விரும்பினார். அந்த நிலத்துக்கு உரிமையுடைய மூதாட்டி நிலத்தைத் தர மறுக்கவே, வன்முறைமூலம் அவளை அங்கிருந்து அகற்றி மாளிகை கட்டினார். மூதாட்டி அரசருக்கு எதிராய் வழக்குத் தொடுத்தாள்! வழக்கை விசாரிக்க இருக்கும் நீதிபதியை (காஜீயை) அரசர் அழைத்துப் புதிய மாளிகையைக் காட்டினார். நீதிபதி அங்கிருந்து சில கோணிகள் நிறைய மண்ணை எடுத்துச் செல்ல விழைவதாய் அரசரிடம் கூறினார். அரசர் வியப்புடன் அனுமதி அளித்தார். கோணிகளில் நிரப்பிய மண்ணைக் கழுதைமேல் ஏற்ற அரசரை உதவும்படி நீதிபதி கேட்டார். அரசரால் ஒரு மூட்டையைக்கூடத் தூக்க முடியவில்லை. அப்போது நீதிபதி அரசரிடம், 'தனிப்பட்ட ஒரு சாக்கு மூட்டை மண்ணையே உங்களால் தூக்க முடியவில்லையே! மூதாட்டியிடம் பறித்த இந்த முழுத் தோட்டத்தையும் எப்படித் தூக்கிச் சுமக்கப் போகிறீர்கள்?' என்றார். அரசர் தம் தவற்றினை உணர்ந்து, நிலத்தையும் மாளிகையையும் கிழவிக்குக் கொடுத்தார். உண்மையை உணர்த்துவதும், உணர்ந்து திருந்துவதும் வீரச் செயல்களேயாம்!

முஆவியா, இசுலாமியக் குடியரசை முடியரசாக்கியவர். அவர் அலீயாரிடம் மாறுபாடு கொண்டவர். தரீமா என்னும் மூதாட்டி அலீயாரை மதிப்பவர். முஆவியா, தரீமாவை ஒருநாள் அழைத்து அவருக்கு என்ன வேண்டுமென்று கேட்டார். மூதாட்டி ஒரு ஒட்டகத்தையும் அதை மேய்க்கப் பையன் ஒருவனையும் கேட்டார். அப்படித் தந்தால் தம்மை அலீக்குச் சமமாய் அவ்வம்மையார் கருதுவாரா எனக் கேட்டார். உறுதியாய் ஒரு போதும் அப்படிக் கருத முடியாது என்றார், தரீமா. பிறகு, முஆவியா நூறு ஒட்டகங்களையும் ஆள்களையும் தருவதாய்ச் சொன்னதுடன், அலியினால் ஓர் ஒட்டகத்தைக்கூடத் தந்திருக்க முடியாது என்றும் கூறினார். தரீமாவோ, 'அலீ ஓர் ஆணிகூடத் தந்திருக்க மாட்டார். பொதுச்சொத்தைத் தவறான முறையில் பயன்படுத்த மாட்டார்?" என்றார். 'பின் ஏன் என்னிடம் பொதுச்சொத்தைக் கேட்டீர்கள்" என்று கேட்ட முஆவியாவுக்குத் தரீமா, 'அலீ எவ்வளவு உயர்ந்தவர், நீங்கள் எவ்வளவு தாழ்ந்தவர் என்பதைக் காட்டுவதற்காகத்தான்' என்று சொல்லியவராய் அரசவையை விட்டு வெளியேறினார்.

அப்துல்லாஹ் பின் ஹன்ளா

இவர் தம் ஆண் மக்கள் அனைவரையும் ஒரு போரில் ஒருவர் பின் ஒருவராய் ஈடுபடச்செய்து, அவர்கள் அடுத்தடுத்து வீரமரணம் எய்துவதைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு, இறுதியில் தாமும் வீர மரணம் எய்தினார்.

அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்

இவர் அபூபக்கர் அவர்கள் மகள் அஸ்மாவுக்குப் புதல்வர். ஹஜ்ஜாஜ் என்பவர் தலைமையில் ஒரு படை இவரை எதிர்த்த போது அஸ்மாவின் உரைகளால் வீர உணர்ச்சி பெற்றுப் போரிட்டு மரணம் அடைந்தார். இறந்த அவரது உடலை ஹஜ்ஜாஜ் தலைகீழாய்க் கட்டித் தொங்கவிட்டார். மூன்று நாள் கழித்து உடலைப் பார்த்த தாய், கலக்கமின்றி, 'இந்த வீரனுக்கு இன்னும் குதிரையை விட்டு இறங்கும் நேரம் வரவில்லையோ' என்றாராம். மேலும் சில நாள்களுக்குப் பிறகு அப்துல்லாஹ்வின் உடல் ஊருக்கு வெளியே எறியப்பட்டது. அஸ்மா அவ்வுடலை எடுத்துவரச் செய்து, அழுகிய உறுப்புகள் பிய்ந்து வரும் நிலையிலும் குளிப்பாட்டி அடக்கம் செய்தார்.

சுலைமான்

ஈராக் ஆளுநர் ஹஜ்ஜாஜ் கொடுமையாளர். இசுலாமிய அறிஞர் யஸீதின் சொத்துகளைப் பறித்தார். கொலைத் தண்டனைக்கு அஞ்சிய யஸீது தப்பியோடி டமாஸ்கஸ் இளவரசர் சுலைமானிடம் அடைக்கலம் புகுந்தார். செய்தியறிந்த ஹஜ்ஜாஜ் உடனே யஸீதை விலங்கிட்டு அனுப்புமாறு சுலைமானுக்கு ஆணையிட்டார். சுலைமான் தன் மகனுக்கும் விலங்கிட்டு, 'யஸீதுக்கு கொலைத் தண்டனை விதிப்பதாயின் முதலில் என் மகனுக்கு அந்தத் தண்டனையை விதித்துப் பிறகு யஸீதுக்கு விதியுங்கள். இறுதியில் என் தலையையும் வாங்குங்கள்' என்று கடிதம் எழுதி அனுப்பினார். இது அரசர் மனத்தை உலுக்கியது. யஸீது விடுதலை பெற்றார்.

ராபியா பஸ்ரி அம்மையார்

இவர் மிகவும் ஏழை. 'எவரேனும் ஒரு நன்மையைச் செய்தால் அவருக்கு அதைப்போல் பத்துப் பங்கு நன்மைகள் உண்டு' எனும் திருமறை வாக்கை எண்ணி இறைஞ்சித் தம் வீட்டுக்கு வந்த விருந்தினர்கள் நோன்பு திறக்க வழி கண்டவர்.

மஸ்னா

அரசி கைஸுரானை ஏழைப்பெண் ஒருத்தி காண வந்தாள். அவள் தன் எதிரிக் குடும்பத்தைச் சார்ந்தவள் என்று தெரிந்த அரசி அவளை ஏசிப் பேசினாள். அப்பெண் மஸ்னாவோ, 'நானும் இப்படி ஒரு காலத்தில் பேசியதுண்டு. அல்லாஹ் என் பெருமையை அழித்துவிட்டான். இன்று எப்படி இருக்கிறேன், பார்த்தீர்களா? ஒரு காலத்தில் நான் செய்த தவற்றை நீங்கள் இப்போது செய்வதால், பின் ஒரு காலத்தில் என் நிலை உங்களுக்கு வரவேண்டாம்' எனச் சொல்லியவளாய் வெளியேற முயன்றாள். அரசியோ மனம் மாறி, மஸ்னாவைப் பரிவோடு அழைத்துப் பேணி ஒரே தட்டில் உண்டு மகிழ்ந்தாள்.

ஹாரூனுர் ரஷீத்

அப்பாஸிய அரசர்களுள் ஒருவரான ஹாரூனுர் ரஷீதுக்கும் ரோமப் பேரரசப் பொறுப்பாளர் நைஸிஃபோரஸுக்கும் நடந்த போரில் நைஸிஃபோரஸ் தோற்றார். வெற்றிக்குப் பின் ஹாரூன், 'நான் உம் பேரரசின் பெரும்பகுதியைக் கைப்பற்றியுள்ளேன். ஆயினும், உமது பேரரசில் உள்ள அறிவியல், இலக்கியம் முதலிய அனைத்துத் துறை நூல்களிலும் ஒவ்வொரு படியை எங்கட்குக் கொடுப்பீராயின் நான் கைப்பற்றிய பகுதியை உமக்கே விட்டுக்கொடுப்பேன்' என்றார். நைஸிஃபோரஸும் ஒத்துக் கொண்டார். போரிட்டுப் பெற்ற நிலப்பகுதியைப் புத்தகங் களுக்காகத் திரும்பக் கொடுத்த புதுமையை உலகம் கண்டது.

இப்னு அஸ் ஸம்மாக்

பேரரசர் ஹாரூனுர் ரஷீதும், இப்னு அஸ்ஸம்மாக் என்ற இசுலாமியப் பேரறிஞரும் ஒருநாள் பேசிக்கொண்டிருந்தனர். அரசருக்கு நீர்வேட்கை ஏற்பட்டதால் நீர் கொண்டுவரப்பட்டது. அஸ்ஸம்மாக் அரசரிடம், 'பெரிய விலை கொடுத்தாலொழிய இந்நீரால் தாகம் தீராது என்றிருந்தால் என்ன விலை தந்திருப்பீர்கள்?' என்றார். அரசர் சிந்தித்து, 'என் பேரரசில் பாதியைக் கொடுத்து வாங்கியிருப்பேன்' என்றார். பேரறிஞர் மீண்டும், 'இதை அருந்துவதால் ஏற்படும் சிறுநீர் வெளியேறச் சிக்கல் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?' என்றார். 'என் பேரரசின் மறு பாதியைத் தருவேன்' என்றார், அரசர். 'ஒரு குவளைத் தண்ணீரைப் பெறவும், அதனால் ஏற்படும் சிறுநீரை வெளியேற்றவும் கூடிய ஒரு சாதாரணப் பொருள்தான் இந்தப் பேரரசு' என்றதும் அரசர், அறிஞரின் அறிவை வியந்தார்.

பாயஸீத்

பிஸ்தாம் என்னும் ஊரில், தாய் ஒருத்தி தூக்கம் கலையாத நிலையில் தன் மகன் பாயஸீதை அழைத்து, ஒரு குவளைத் தண்ணீர் கொண்டுவரச் சொன்னார். வீட்டில் தண்ணீர் இல்லை. ஊர் முழுவதும் தூங்குவது அறிந்து, யாருக்கும் தொந்தரவு தராமல் நீரூற்று இருக்குமிடம் சென்று நீர் கொணர்ந்தார், அவ்விளைஞர். தாய் தூங்கிக்கொண்டிருந்ததால் தண்ணீரை வைத்துக்கொண்டு அருகிலேயே அமர்ந்திருந்தார். வைகறையில் தாய் கண் விழித்தார். தாம் அரைத் தூக்கத்தில் நீர் கேட்டதை ஏற்று, நீர் கொண்டு வந்ததோடு அதைக் கொடுக்க இரவு முழுவதும் விழித்திருந்த தம் மகனின் கடமையுணர்வை நினைந்தபோது அவர் தண்ணீர் குடித்ததைவிடக் குளிர்ந்து போனார்.

இப்ராஹீம் இப்னு அத்ஹம் எனும் அரசர் ஒரு நாள் வேட்டைக்குச் சென்றிருந்தபோது ஏழை அடிமைப்பெண் ஒருத்தி அவர் படுக்கையில் படுத்துத் தூங்கிவிட்டாள். திரும்பிய அரசர் அப்பெண்ணுக்கு ஐம்பது கசையடி கொடுக்கச் சொன்னார். அடி விழுந்தபோது அவள் நைந்தாள். அரசர், 'உன் தவற்றுக்கு இப்போது வருந்துகிறாயா?' என்று கேட்டார். அவளோ, 'இல்லை! நான் உங்களுக்காக வருந்துகிறேன்' என்றாள். அரசர், 'என்ன?' என்றபோது, 'சில நாழிகை அப்படுக்கையில் நான் தூங்கியதற்கே இந்தத் தண்டனை என்றால் எப்போதும் அதில் படுத்துறங்கும் உங்கட்கு அல்லாஹ் எவ்வளவு தண்டனை தருவானோ என்று தான் 'வருந்துகிறேன்' என்றாள்.

ஜலாலுத்தீன் ஷா

இவர் இசுலாம் பெற்ற இணையற்ற வீரர்களுள் ஒருவர். செங்கிஸ்கானை எதிர்த்துச் சிந்து நதிக்கரையில் போர் புரிந்தார். தம் படைவீரர் அனைவரும் இறந்ததும் கவசத்தைக்கூடக் கழற்றாது ஆற்றிலே குதித்து அக்கரைக்கு நீந்திச்சென்றார். அப்போது அவர்மீது அம்பெய்ய முயன்றவர்களை, 'நீந்தும்போது கொல்வது முறையாகாது' எனச் செங்கிஸ்கான் தடுத்தார். ஜலாலுத்தீன் அக்கரை சேர்ந்ததும் தம் முஷ்டியை உயர்த்திக் காட்டி, 'உன்னை ஒரு கை பார்க்கிறேன்' என்று கூறாமற்கூறிச் சென்றார். 'அதோ ஒரு மாவீரன் செல்கிறான். இவன் போன்றன்றோ எனக்கு மகன் ஒருவன் வாய்க்க வேண்டும்' என்றான், செங்கிஸ்கான். வீரம் வீரத்தைப் போற்றியது!

ஹமீதா பானு

பேரரசர்களான தைமூரும் பாயஸீதும் போரிட்டனர். வென்ற தைமூர் எதிரிகளுள் பலரைச் சிறைப்பிடித்துக் கொடுமைப் படுத்தினான். பிடிபட்ட இளம் இராணுவ அதிகாரி ஒருவன் தைமூரிடம் தைரியமாய், 'அரசே! நான் இன்னும் சில கணங்களில் உயிரிழக்கக்கூடும். என்றாவது ஒரு நாள் நீங்களும் நான் செல்லு மிடத்துக்கு வந்துதானாக வேண்டும். அன்று அல்லாஹ்விடம் இக்கொடுமைகளுக்கு என்ன கணக்கைத் தருவீர்கள்' என்று கேட்டபின் அவ்வீரன் தன் தொப்பியை எடுத்ததும், அவன் இளம் பெண் ஒருத்தி என்பதை அறிந்தனர்; அதுவரை ஆண்வேடம் தரித்துப் போர் புரிந்திருக்கிறாள் என்பதும் புரிந்தது. பெண்ணின் பேச்சு அரசரைச் சிந்திக்கச் செய்தது. கைதிகளை விடுதலை செய்தார். அதுமட்டுமன்றி அப்பெண்ணையும் அவள் இசைவு பெற்றுத் திருமணமும் செய்துகொண்டார்.

தாம் வேட்டையாடும் காட்டுப்பகுதியில் தற்செயலாய் நுழைந்திட்ட புனிதர் ஷெய்க் ஜமாலுத்தீனையும் அவர் தோழர்களையும் கை கால்களைக் கட்டிப் பிணைத்து இழுத்து வருமாறு *தைமூர்கான்* கட்டளையிட்டார். கைது செய்யப்பட்ட வர்கள் ஈரானியர் என்பதை உரையாடலின்போது அறிந்த தைமூர் 'ஈரானியர் ஒருவரைவிட ஒரு நாய் மதிப்பு மிக்கது' என்றார். ஷெய்க் அவர்களோ பொறுமையாய் 'நமக்கு மெய்ந்நம்பிக்கை இல்லை என்றால் நாம் நாயைவிடக் கீழாகிவிடுவோம்' என்றார். 'மெய்ந்நம்பிக்கை' என்னும் சொல்லுக்கு ஷெய்க் தந்த விளக்கத்தால் பின்னாளில் தைமூர் முசுலிம் ஆயினார் என்பது வரலாறு.

இசுலாமியத் தளபதி குதைபா இப்னு அபீஸாலிஹ் முஸ்லிம் என்பவர் சீனாவுக்குத் தூதர் ஒருவரை அனுப்பினார். இசுலாத்தின் தூதுவர் அரசருக்கு அறிமுகப்படுத்தப்பட்டதும் அரசருக்குத் தலை தாழ்த்தி வணக்கம் தெரிவிக்குமாறு அறிவிக்கப்பட்டார். தூதரோ இறைவனுக்கன்றி வேறு எவருக்கும் தலை தாழ்த்துவதை இசுலாம் ஏற்பதில்லை என்றார். அரசர் முதலில் கோபம் கொண்டார்; எனினும், தூதரின் துணிச்சலைப் பாராட்டித் தண்டிக்காது விட்டார்.

பாபர்

இராசபுத்திரன் ஒருவன் பாபரைக் கொல்லத் தில்லி வீதியில் அலைந்தான். மதம் பிடித்த யானை ஒன்று வீதியில் வந்தது. மக்கள் அஞ்சி ஓடிய வேகத்தில் ஒரு பிஞ்சுக் குழந்தையைத்

தெருவில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். குழந்தையை யானை நெருங்கிய போது வீர மனிதர் ஒருவர் ஓடிவந்து குழந்தையைக் காப்பாற்றினார். தம்முயிரையும் பொருட்படுத்தாது குழந்தையைக் காத்தவர்தாம் பாபர் என்றறிந்ததும் அவரைக் கொல்ல வந்தவன் அவர் காலில் விழுந்து பணிந்து நண்பனானான்.

ஈஸாகான்

மான்சிங், அக்பர் படைத்தலைவன். அக்பரை எதிர்த்த வங்கத் தலைவர்களுள் முதன்மையானவர் ஈஸாகான். மான்சிங்கும் ஈஸாகானும் களத்தில் கடுமையாய்ப் போரிட்டனர். மான்சிங்கின் வாள் இரு துண்டாயிற்று. ஈஸாகான் எங்கே தன்னைக் கொன்றுவிடுவாரோ என்று மான்சிங் எண்ணியபோது ஈஸாகான் தம் கைவாளை மான்சிங்கிடம் தந்ததோடு, 'என்னிடம் இன்னொரு வாள் இருக்கிறது. வாளில்லாத உங்களிடம் போரிட மாட்டேன்' என்றும் கூறினார். இதுவன்றோ வீரம்!

ஔரங்கசீப்

படையெடுத்துச் செல்லும்போது போர்க்களத்தில் வாளும் அம்பும் பறக்க அவற்றினிடையேயும் தவறாது தொழுகையை நிறைவேற்றுபவர், ஔரங்கசீப். ஒருமுறை அவர் தொழுது கொண்டிருந்தபோது அவர்மீது புலி ஒன்று பாய்ந்தது. அவர் கை, உடைவாளை உருவிப் புலியை இரு துண்டாக்கியது. ஆயினும் பரபரப்போ நடுக்கமோ அடையாது தொழுகை தொடர்ந்து நடந்தது.

தம் முன்னணிப் படைத்தலைவர் கலீம்கானும், மகன் ஆசாத்தும் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்தும் முபாரிஸ்கான் கலங்காது போரிட்டார். 'ஆமையைப்போல் அஞ்சித் தலையை உள்ளுக்குள் இழுத்து உயிர் வாழ்தலின்றிப் போர்க்களத்தில் வீரமரணம் எய்துவதே சுவனப்பேறு ஆகும்' என்று அவர் தொடர்ந்து போரிட்டு இறந்து வீழ்ந்தார்.

முஹம்மத்கான்

இவர் செஞ்சியை ஆண்ட தேசிங்குராசனுக்கு உயிர் நண்பர். ஆர்க்காட்டு நவாப்பிற்குத் தேசிங்கு திறை கொடுக்க மறுக்கவே நவாப் செஞ்சிமீது படையெடுத்தார். மணக்கோலத்திலிருந்த முஹம்மத்கான் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டான். மணம் முடித்துவிட்டுச் செல்லலாம் என எவ்வளவோ தடுத்தும் பயனில்லை. வீரப்போர் புரிந்து போர்க்களத்தே உயிர் துறந்தான், அம்மாவீரன்.

திப்பு சுல்தான்

இவர் ஹைதர் அலி மகன். ஆங்கிலேயரைத் தம் பிறந்த மண்ணிலிருந்து துரத்தியடிக்கும்வரை பஞ்சு மெத்தையில் படுப்பதில்லை எனச் சூளுரைத்து முரட்டுத்துணியில் படுத்துத் தூங்கியவர்.[1] இவர் அலுவலர்களான மீர் சாதிக், மீர் குலாம் அலீ ஆகியோர் இவருக்குத் துரோகமிழைத்தனர். இவர்கள் சதியால் ஆங்கிலப்படை சீரங்கப்பட்டணத்துக்குள் நுழைந்தது. உணவருந்திக்கொண்டிருந்த திப்பு, எதிரிகள் கோட்டைக்குள் நுழைந்ததையறிந்து அக்கணமே போர்க்களம் புகுந்து வீரப்போர் செய்து இறப்பைத் தழுவினார்.

பஹதூர்ஷா

1857இல் நடந்த சுதந்தரப் போரின் ஆணிவேர் இவரே ஆவார். இவர் செங்கோட்டையில் ஆங்கிலேயர்களால் சிறை வைக்கப்பட்டார். பசி தாளாது உணவு கேட்டபோது இவர் முன் மூடப்பட்ட இரு பாத்திரங்கள் கொண்டுவந்து வைக்கப்பட்டன. அவற்றை அவர் திறந்தபொழுது அவர் மக்கள் இருவரின் தலைகளும் அவற்றில் வைக்கப்பெற்றிருந்தன. பின்னர் அவர் பர்மாவுக்கு நாடு கடத்தப்பட்டார். இறக்கும் தறுவாயில், தம் இறப்புக்காக கவலைப்படாது, தம் உடல் அடக்கம் செய்யப்பட ஆறடி நிலங்கூட இந்தியாவில் தமக்குக் கிடைக்காது போயிற்றே என அவர் உள்ளம் குமுறி எழுதிய கவிதை இன்று அவர் கல்லறையின் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

நடை

தித்திக்கும் தீந்தமிழில் முத்து முத்தான கருத்துகளை ஆசிரியர் தந்திருக்கிறார்.

'அனல்பட்ட மத்தாப்பாயிருந்து ஆயிரமாயிரம் நெருப்பு மலர்கள் பூப்பது போல மக்கள் உள்ளங்கள் மலர்ந்தன' (பக். 5) - மலர்ச்சியைக் காட்டும் மத்தாப்பு நடை இது.

அரண்மனைக்கு எதிர்மனை எழுவதை எந்த அரசன்தான் அனுமதிப்பான்? (பக். 11) - சரியான வினா.

உலகில் எந்தச் சிங்கமும் எத்தகைய பகையைக் கண்டும் ஒரு நாயை போலத் தன் வாலைக் கால்களுக்கிடையில் பதுக்கிக் கொண்டு ஓடுவதில்லை (பக். 99) பெருமித வீரத்தைப் புலப்படுத்தும் அரிய உரைநடை ஓவியம்.

'எட்டுத் திசைகளிலும் இருந்து கொட்டவரும் குளவிக் கூட்டங்கள் போல், கடிக்க வரும் கதண்டுகள்போல் உருவத்

தொழும்பர்களின் குதிரைப்படை ஓரிறைக் கொள்கையினராம் முசுலிம் பிரச்சாரகர்களைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு கொட்டிக் கடித்துக் குதறியது' (பக். 155) - படுகொலைக் காட்சியைக் கண் முன்னே நிறுத்தி நம்மைக் கலங்க வைக்கும் துள்ளுநடை.

'நம்மைப் போலவே அன்று அந்த விரிந்த பெருங்கடலும் கூட வியந்து ஒரு கணம் அலைகளை வீசாது நின்றுவிட்டது. பின்னர், ஆற்றல்மிகு தளபதியின் காலடிகளை நோக்கி ஓடிவந்து தன் அலைக்கரங்களால் நுரை மலர்களைச் சமர்ப்பித்து மகிழ்ந்தது (பக். 222)' - வீரத்தைப் பாராட்டும் விம்மித நடை.

வீட்டில் விளக்கேற்ற இயலாத ஓர் இரவில், கொப்பூழுக்குத் தடவத் துளியளவு எண்ணெய்கூட இல்லாத நிலையில் பிறந்த பெண் மகவே ராபியா அம்மையார் அவர்கள் (பக். 242) ஏழ்மையைச் சொல்லுகின்ற உருக்கமான நடை.

'முற்றிலும் நரைத்த தலை; திரைத்த தோல்; நடுங்கும் தளிர்மேனி; எலும்பும் தோலுமாய் இருக்கின்ற உருவம். ஓ! இஃது எவ்வளவு வயதான குழந்தை! இதற்குத்தான் எவ்வளவு பொறுமை! எத்தகைய பக்தி! (பக். 273)' - முதுமையை வயதான குழந்தையாய்ச் சொல்லும் தத்துவ நடை! குழந்தையைச் சொல்வதால் நடையும் இங்குத் தவழ்ந்தும் குறுகுறுவென நடந்தும் செல்கிறது.

'மூட வரும் முகிற்கூட்டங்களை ஓடச் செய்து உதயமாகும் முழுமதிபோல், வரலாற்று இருட்டடிப்பாளர்களைப் புறந்தள்ளிப் புகழ்காணும் செங்கோன்மைமிகு நீதி மன்னர் என்ற உண்மை நவிற்சிக்கு உரியவர் அந்தப் பேரரசர்! (பக். 312)' - முழுமதி ஒளி வீசுவது போலக் கருத்து விளக்கம் செய்கின்ற உவமையழகு நடை.

இவ்வாறு இடத்துக்கேற்பவும் சூழ்நிலைக்கேற்பவும் இனிய எளிய தொடர்களும் தங்குதடையற்ற சொல் ஓட்டமும் கவிதை நயமும் கமழ நூல் எழுதப்பட்டிருப்பது தனிச் சிறப்பாகும்.

உரையாடல் – கவிதை நடை

தம் உரையாகவே மட்டும் எழுதிச் செல்லாமல் இடையிடையே உரையாடல்களையும், கவிதைகளையும் அமைத்து நடைக்கு மெருகு கூட்டுகிறார், ஆசிரியர்.

பெருமானாரின் அரஃபாத் பெருவெளி உரை (பக். 15-16); அபூபக்கர் (ரலி) அவர்கள் குடியரசுப் பொறுப்பை ஏற்றவுடன் ஆற்றிய உரை (பக். 21-23);

ஜெனரல் தாரிக் படைவீரர்கட்கு ஆற்றிய உரை (பக். 230-231);

கலீஃபா உமர் (ரலி) அவர்கட்கும் நஹாவந்தின் கிளர்ச்சிக்கார ஆளுநருக்கும் இடையே நடந்த உரையாடல் (பக். 39-40);

இறைதூதருக்கும் ஹிந்தாவுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் (பக். 164);

முஆவியாவுக்கும் தரீமாவுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் (பக். 238-239)

இவை போன்ற உரையும் உரையாடல்களும் நடைக் கிளர்ச்சியை உண்டாக்கி விறுவிறுப்பை ஊட்டுகின்றன.

கவிதை நடையும் இடையிடையே கையாளப்பட்டுள்ளது. ஜனநாயகத்துக்கான சமர் என்னும் கட்டுரையின் தொடக்கம் (பக். 92-93), ஹிந்தாவின் பாடலடிகள் (பக். 160, 162, 166, 169) - இவை நூலுக்குக் காப்பிய அழகைச் சேர்க்கின்றன.

'கட்டுப்பாட்டில் கர்ப்பம் தரித்த சொற்கள் கண்ணியமாய்ப் பிறப்பெடுத்தன' (பக். 50) - என உமர் (ரலி) அவர்களின் பேச்சு பற்றி தஜம்முல் முஹம்மது கூறியுள்ளது அவர் நடைக்கும் முற்றிலும் பொருத்தமாயிருக்கிறது!

சமயச்சொல் விளக்கம்

நாயகம் அவர்கள்பற்றி ஆசிரியர் எழுதுமிடங்களும், மார்க்கச் சொற்களுக்கு ஆங்காங்கே அவர் தந்து செல்லும் விளக்கங்களும் ஆசிரியரின் சமயப்பற்றையும் புலமையையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

"ஏழடி நீளமும் ஆறடி அகலமும் கொண்டதொரு கூரை வீட்டில் இருந்துகொண்டு பள்ளிவாசலையே தங்களின் ஓலக்கமண்டபமாயும், தலைமைச் செயலகமாயும் ஆக்கிக்கொண்டு, தரையிலமர்ந்து, அருள்மிகு செங்கோல் செலுத்தியவர்கள் அண்ணல் நபியவர்கள்" பக். 237) - அண்ணல் நபியின் அருளில் தோய்ந்து ஈடுபாடு கொண்டவர்களால் மட்டுமே இப்படி எழுதமுடியும்!

நாயகம் அவர்களுடன் மதீனா வந்த இசுலாமியர்களுள் சிலர் தங்க இடம் கிடைக்காமல் பள்ளிவாசல் திண்ணையிலேயே தங்கி வந்தனர். அவர்கள் 'திண்ணைத் தோழர்கள்' என்று வழங்கப்பட்டனர். அவர்களைப்பற்றி ஆசிரியர் தந்துள்ள விளக்கம் அருமையாய் உள்ளது. "வசிப்பதற்கு இடமில்லாமல் பள்ளிவாசல் திண்ணையிலே அண்டி இருக்கும் திண்ணைத் தோழர்கள், புசிப்பதற்கு முழுமையான உணவைப் பெறமுடியாமல் கிடைக்கும்

பேரீச்சம்பழங்களைத் திரும்பத் திரும்பப் புசித்து வருவதால் ஏற்படக்கூடிய வயிற்று நோய்க்கு வாடிக்கையாகிவிட்டவர்கள். ஒற்றையாடையை உடுக்க வேண்டிய நிலையினர். வறுமை வயப்பட்டமையால் இல்லற வாழ்வைப்பற்றி எண்ணிப் பார்க்க இயலாத அவர்களுக்கு இசுலாம் ஒன்றே இனிய பற்றுக்கோடு. விறகு திரட்டுதல், தண்ணீர் சுமத்தல் போன்றவையே அவர்கள் செய்து வந்த வேலைகள்; ஆனாலும், அவர்கள் திருக்குர்ஆன் முழுவதையும் மனப்பாடம் செய்துள்ள 'ஹாபிஸ்கள்'. அந்தத் திருமறையைக் கருத்தைக் கவர்ந்து மனத்தை உருக்கும்வண்ணம் முறைப்படி ஓதவல்ல 'காரி'கள். முன்னணி அறநெறிச் செல்வர்களான இவர்கள், தொழுகை என்னும் தூணைத் தொடர்ந்து நிலைநிறுத்துபவர்கள்." இங்குத் திண்ணைத் தோழர்கள்பற்றிய விளக்கத்தைக் 'கருத்தைக் கவர்ந்து மனத்தை உருக்கும் முறையில்' எழுதியிருப்பதைக் காண்கிறோம் (பக். 149). இசுலாமிய மார்க்கச் சொற்களுள் 'ஈமான்' என்பதொன்று. ஈமானுக்கு 'மெய்ந்நம்பிக்கை' எனும் தமிழ்ச்சொல்லைத் தந்து, அம்மெய்ந்நம்பிக்கை யாது என்பதை ஆசிரியர் விளக்கியுள்ள பாங்கு மிகவும் சிறப்பாய் உள்ளது (பக். 292). இசுலாமியக் கலைச்சொற்களுக்கு விளக்கம் தரும் பணியை ஆசிரியர் செய்வாரேயானால் அஃது எல்லோரும் போற்றத்தக்கதாய் இருக்குமென இவ்விடத்தில் குறிப்பிட விழைகிறேன்.

இலக்கியப் புலமை

தஜம்மல் முகம்மது அவர்கள் தமிழ் இலக்கியங்களில் அஃகி அகன்ற அறிவுடையவராய் இருப்பதை இந்நூல் நன்குணர்த்துகிறது. இவர் படித்த பல்வேறு இலக்கியங்களில் உள்ள சொல்லாட்சிகளும் தொடர்களும் பொருத்தமான இடங்களில் இவர் நடையில் வந்திணைந்து சிறப்பளிக்கின்றன.

'நயத்தக்க நாகரிகங்கள் உடைய அந்த வியத்தகு இளைஞர், (பக். 7)

'அங்கிருந்ததெல்லாம் பல குழுக்கள்; அவற்றிற்கும் பல தலைவர்கள்; அவர்களிடையேயும் பாழ் செய்யும் பல பகைகள்' (பக். 94)

'ஓ மனிதர்களே! நேற்று உங்களுடன் இருந்த ஒருவர் இன்று இல்லை, மறைந்துவிட்டார்' (பக். 86)

ஆசிரியர், திருக்குறள் தொடர்களைப் பொருத்தமுற எடுத்தாண்டுள்ளமைக்கு இவை சான்றுகளாகின்றன.

'இறைதூதரைத் துன்புறுத்த வேண்டுமென்பதிலே அவர்கள் இரக்கம் ஒன்றிலா அரக்கர் ஆயினர்' - இத்தொடர் கம்பராமாயணத்தை நம் நினைவுக்குக் கொண்டுவருகிறது.

"மகாதளபதி காலித் இப்னு வலீத் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அன்னையாரிடம் சென்று, எங்கே தங்கள் மகனார் என்று கேட்டிருந்தால், 'புலி சேர்ந்து போகிய கல்லளை போல ஈன்ற வயிறு இதுவே! தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே' என்றே இசைத்திருப்பார்" என ஓரிடத்தில் இந்நூலாசிரியர் எழுதுகிறார் (பக். 47). காவற்பெண்டின், 'சிற்றில் நற்றூண் பற்றி' எனத் தொடங்கும் புறநானூற்றுப்பாடலின் இறுதி மூன்றடிகள் இங்குப் பொருத்தமுற எடுத்தாளப்பட்டுள்ளன.

பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே....

என்பது பொய்யாமொழிப்புலவர் பாடலடி. இதனை, "கோடையின் கொடுமையோ கொடிகட்டிப் பறந்தது. 'பொன் போலும் கள்ளிப் பொறி பறக்கும் கானலில்' வெளியே புறப்படுவதென்பது விரும்ப முடியாததாய் இருந்தது" (பக். 12) என அருமையாய் எடுத்தாளுகிறார், ஆசிரியர்.

குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்

என்பது அதிவீரராம பாண்டியன் எழுதிய நறுந்தொகைப்பாடல். இப்பாடலின் கருத்துந்துதலால், 'குடை நிழலிலிருந்து மௌலா பக்ஷ் எனும் குஞ்சரம் ஊர்ந்து ஹுக்கா பிடித்தபடி தில்லி மக்களின் அன்பு வெள்ளத்தில் வலம் வந்த பஹதூர்ஷா அவர்கள், சாய்ந்துகொள்ள ஒரு நாற்காலிகூட மறுக்கப்பட்டு நாடு கடத்தப் பட்டார்' என்ற தொடர் திரு.தஜம்முல் முகம்மது அவர்களிடம் உருப்பெற்றுள்ளது (பக். 339).

பாரதியார் தாமே பதிப்பித்த தம் நூல்களில் தொடக்கத்தில்,

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே

என்று குறித்திருக்கக் காண்கிறோம். இவ்வடிகள் ஆசிரியரின் மனத்தில் ஆழப்பதிந்தமையால், நாட்டுக்காக உயிர் நீத்தவர் களைப்பற்றி எழுதும்போது தாமே வந்து விழுகின்றன. ஆசிரியர் எழுதுகிறார் : 'அவர்கள் ஒவ்வொருவரும் உறுதியுடன் போரிட்டு இறுதியில் நால்வரும், பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானவரும் பெருமிதம் கொள்ள அல்லாஹ்வுக்காக உயிர்த்தியாகம் செய்தனர்' (பக். 183).

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனப் பெண்டிர் ஏழு பருவத்தினராய்ப் பேசப்படுவதுண்டு. 5 வயது முதல்7 முடிய பேதை, 8 முதல் 11 முடிய பெதும்பை, 12 முதல் 13 முடிய மங்கை, 14 முதல் 19 முடிய மடந்தை, 20 முதல் 25 முடிய அரிவை, 26 முதல் 31 முடிய தெரிவை, 32 முதல் 40 முடியப் பேரிளம்பெண் என, ஒருவாறாய் இப்பருவங்கட்கு வயது வரையறை செய்வதுண்டு. ஹிந்தா கொடுமைக்காரி. பேரிளம் பெண். பருவம் கடந்த நிலையில் பெருமானாரால் மன்னிக்கப் பட்டுத் திருந்தியவளாய் இசுலாத்தில் சேர்ந்தவள். ஆசிரியர் ஹிந்தாவின் இப்பருவ நிகழ்ச்சிகளை நயத்துடன் சொல்கிறார். "குழந்தை ஹிந்தாவின் கைகளின் கிருபையினால் உயிர்த்தியாகம் செய்த கோழிக்குஞ்சுகளின் எண்ணிக்கை எத்தனை என்று நமக்குத் தெரியாது. பெதும்பை ஹிந்தாவின் விளையாட்டுத் தோழிகளுள் எத்தனை பேர் இடுக்கண்கள் இழைக்கப்பட்டு விழுந்தனர் என்ற விவரத்தை வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்து வைக்கவில்லை. மடந்தை ஹிந்தாவின் புருவங்கள் கடுமையாய் நெரிக்கப்பட்டத னால் எத்தனைத் தண்ணீர் ஜாடிகள் அவள் கணவன் அபூசுஃப்யானின் தலையிலே போடப்பட்டு உடைந்து, அதனால் வழிந்த நீரை அவர் அருந்தினார் என்பதை ஆராய்ச்சி விற்பன்னர்கள் கண்டுபிடிக்கவில்லை. அரிவை ஹிந்தாவின் புருவ நெரிப்போடு கூடிய துணிவான முயற்சியினால் அரபு நாட்டுப் போர்க்களங்கள் எப்படி நடுங்கின என்பதை அரபு நாட்டு வரலாற்றுப் புத்தகங்களின் பல பக்கங்களில் அவள் பிடித்திருக்கிற இடத்தில் இருந்து தெரிய வருகிறது." (நபிகள் நாயகத்திற்கு எதிராய் இருந்த அவள், *பேரிளம்பெண்* பருவத்தைக் கடந்த நிலையில் பெருமானாரின் மன்னிப்பைப் பெற்று இசுலாத்தில் சேர்ந்தாள். எனவே *பேரிளம்பெண்* பருவத்தைக் கடந்த அவள் உகுது போர்க்களத்தில் இசுலாமியர்கட்கு இழைத்த கொடுமைகட்குக் கழுவாயாகத் தன் பழைய தோழியர்களையும், அவர்களைச் சேர்ந்தோரையும் யர்மூக் போரில் இசுலாமியர் அணியில் இருந்து போரிட அழைக்கிறாள் எனப் பருவ வரிசையில் ஹிந்தாவின் செயல்களை அவள் இயல்புகளோடு பொருத்திப் பட்டியலிட்டுக் காட்டும் ஆசிரியரின் திறனைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

தாய்மண் பற்று

இந்தியாவின் முதல் சுதந்தரப் போருக்கு வித்திட்ட பஹதூர்ஷாவை ஆங்கிலேயர்கள் நாடு கடத்திப் பர்மாவில் சிறை

வைத்தனர். பஹதூர்ஷா இறக்கும் தறுவாயில் தம் இறப்பைக் கூடப் பெரிதாய்க் கருதவில்லை. தன் உடல் தம் தாய் மண்ணில் அடக்கம் பெற வாய்ப்பற்றுப்போய்விட்டதே என்பதற்காகவே கலங்குகிறார். நான் 'இறந்தால் அடக்கம் செய்ய இந்தியாவில் ஆறடி நிலங்கூடக் கிடைக்காது போயிற்றே' என்று அவர் வருந்திக் கூறியவை, இன்று அவரது கல்லறையின் முன் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

இந்திய விடுதலைப் போரில் லாலா லஜ்பத்ராயை ஆங்கில அரசாங்கம் பர்மாவில் சிறை வைத்தது. 'என் தாய் மண்ணில் கொண்டுவிட்டு என்னை உடனே கொன்றுவிடுவதாயினும் வருந்தமாட்டேன். வேற்று மண்ணிலன்றோ அடைபட்டுக் கிடக்கிறேன்' என்று அவர் வருந்தியதைப் பாரதியார்,

தொண்டுபட்டு வாடுமென்றன் தூய பெருநாட்டிற்
கொண்டுவிட்டு அங்குஎன்னை உடன்கொன்றாலும் இன்புறுவேன்!
எத்தனை ஜென்மங்கள் இருட்சிறையில் இட்டாலும்
தத்துபுனல் பாஞ்சாலம் தனில்வைத்தால் வாடுகிலேன்

எனப் பாடியுள்ளார். பஹதூர்ஷாவின் தாய்மண் பற்றைப் பாரதியின் பாடற்பாங்கில் இந்நூலாசிரியர் எடுத்துக் கூறியுள்ள முறை நெஞ்சை உருக்குவதாய் உள்ளது.

பெருமானார் மறைவுக்குப் பின்னர், இசுலாம் உலகம் முழுவதும் பரவித் தொடங்கியதான இசுலாமிய இடைக்கால வரலாற்று நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாய் இந்நூல் திகழ்கிறது. உண்மை வரலாற்று நிகழ்ச்சிகள் இலக்கியச் சுவையோடு எழுதப்பட்டுள்ளன.

தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று

என்னும் திருக்குறளுக்கு இலக்கணமாய்த் திகழும் பெருமக்களின் வீரச்செயல்களை இந்நூல் எழுத்து வடிவில் ஏந்தி நிற்கிறது.

கருத்துச் செறிந்த
எழுத்து நடை செறிந்த
பதிப்புத் தரம் செறிந்த
கொள்கை நலம் செறிந்த

இந்நூல் ஊனுருக உளமுருகப் படித்துப் பயன் கொள்ள வேண்டிய இசுலாமியக் களஞ்சியமாய்த் திகழ்கிறது என்பது மெய்யுரை.

எல்லாப் புகழும் இறைவனுக்கே! (அல்ஹம்துலில்லாஹ்)
இன்றைய வெற்றியும் அவனே அளித்தான்! (அல்லாஹு அக்பர்!)

நல்வழி பெற்றோர் தோற்பதே இல்லை!
(சுப்ஹானல்லாஹ்!)

நாடிய திங்கே நடக்கக் கண்டோம்! (மாஷா அல்லாஹ்!)

என்பது ஹிந்தா குழுவினரின் வெற்றிப்பாடல்! தஜம்முல் முஹம்மது அவர்கள் எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பவர். இன்றைய வெற்றியும் அவனே அளித்தான் எனும் மெய்நம்பிக்கை யாளர். நல்வழி பெற்றோர் தோற்பதே இல்லை என்பது அவர் துணிவு. ஆதலாலே, இந்த நூலை எழுதுவதில் வெற்றி பெற்றுள்ளார் என்று திண்ணமாய்க் கூறலாம். நாடியதிங்கே நடக்கக் கண்டோம் என்பது வெற்றிக் களிப்பின் வெளிப்பாடு. நண்பர் தஜம்முல் முகம்மது நாடியதும் நடக்கக் காண்பார் என்பது உறுதி எனக் கூறி அவரை உளமார வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	ஏம்பல் தஜம்முல் முஹம்மது
வகைமை	ஆய்வுக் கட்டுரைகள்
வெளியீடு	நியூ லைப் புக்ஸ் கார்னர், புதுக்கோட்டை. (1989)

வைத்தனர். பஹதூர்ஷா இறக்கும் தறுவாயில் தம் இறப்பைக் கூடப் பெரிதாய்க் கருதவில்லை. தன் உடல் தம் தாய் மண்ணில் அடக்கம் பெற வாய்ப்பற்றுப்போய்விட்டதே என்பதற்காகவே கலங்குகிறார். நான் 'இறந்தால் அடக்கம் செய்ய இந்தியாவில் ஆறடி நிலங்கூடக் கிடைக்காது போயிற்றே' என்று அவர் வருந்திக் கூறியவை, இன்று அவரது கல்லறையின் முன் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

இந்திய விடுதலைப் போரில் லாலா லஜ்பத்ராயை ஆங்கில அரசாங்கம் பர்மாவில் சிறை வைத்தது. 'என் தாய் மண்ணில் கொண்டுவிட்டு என்னை உடனே கொன்றுவிடுவதாயினும் வருந்தமாட்டேன். வேற்று மண்ணிலன்றோ அடைபட்டுக் கிடக்கிறேன்' என்று அவர் வருந்தியதைப் பாரதியார்,

தொண்டுபட்டு வாடுமென்றன் தூய பெருநாட்டிற்
கொண்டுவிட்டு அங்குஎன்னை உடன்கொன்றாலும் இன்புறுவேன்!
எத்தனை ஜென்மங்கள் இருட்சிறையில் இட்டாலும்
தத்துபுனல் பாஞ்சாலம் தனில்வைத்தால் வாடுகிலேன்

எனப் பாடியுள்ளார். பஹதூர்ஷாவின் தாய்மண் பற்றைப் பாரதியின் பாடற்பாங்கில் இந்நூலாசிரியர் எடுத்துக் கூறியுள்ள முறை நெஞ்சை உருக்குவதாய் உள்ளது.

பெருமானார் மறைவுக்குப் பின்னர், இசுலாம் உலகம் முழுவதும் பரவித் தொடங்கியதான இசுலாமிய இடைக்கால வரலாற்று நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாய் இந்நூல் திகழ்கிறது. உண்மை வரலாற்று நிகழ்ச்சிகள் இலக்கியச் சுவையோடு எழுதப்பட்டுள்ளன.

தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று

என்னும் திருக்குறளுக்கு இலக்கணமாய்த் திகழும் பெருமக்களின் வீரச்செயல்களை இந்நூல் எழுத்து வடிவில் ஏந்தி நிற்கிறது.

கருத்துச் செறிந்த
எழுத்து நடை செறிந்த
பதிப்புத் தரம் செறிந்த
கொள்கை நலம் செறிந்த

இந்நூல் ஊனுருக உளமுருகப் படித்துப் பயன் கொள்ள வேண்டிய இசுலாமியக் களஞ்சியமாய்த் திகழ்கிறது என்பது மெய்யுரை.

எல்லாப் புகழும் இறைவனுக்கே! (அல்ஹம்துலில்லாஹ்)
இன்றைய வெற்றியும் அவனே அளித்தான்! (அல்லாஹு அக்பர்!)

நல்வழி பெற்றோர் தோற்பதே இல்லை!
(சுப்ஹானல்லாஹ்!)

நாடிய திங்கே நடக்கக் கண்டோம்! (மாஷா அல்லாஹ்!)

என்பது ஹிந்தா குழுவினரின் வெற்றிப்பாடல்! தஜம்முல் முஹம்மது அவர்கள் எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பவர். இன்றைய வெற்றியும் அவனே அளித்தான் எனும் மெய்நம்பிக்கை யாளர். நல்வழி பெற்றோர் தோற்பதே இல்லை என்பது அவர் துணிவு. ஆதலாலே, இந்த நூலை எழுதுவதில் வெற்றி பெற்றுள்ளார் என்று திண்ணமாய்க் கூறலாம். நாடியதிங்கே நடக்கக் கண்டோம் என்பது வெற்றிக் களிப்பின் வெளிப்பாடு. நண்பர் தஜம்முல் முகம்மது நாடியதும் நடக்கக் காண்பார் என்பது உறுதி எனக் கூறி அவரை உளமார வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	ஏம்பல் தஜம்முல் முஹம்மது
வகைமை	ஆய்வுக் கட்டுரைகள்
வெளியீடு	நியூ லைப் புக்ஸ் கார்னர், புதுக்கோட்டை. (1989)